
சங்க கால சிற்பச் சித்தன் மாமுனி மயன் அருளிய

பிரணவ வேதம்




ஐம்முகப் பிரம்மன்
ஐந்தமிழ் வேதன்

மே →

	கோலம் 4	
சீலம் 3	மூலம் 1	ஞாலம் 5
	காலம் 2	

↑ தெ   வ ↓

← கி



"மெய்யொளி உயிரொலி
சிவணுதல் இயல்பே"

மே →


	சிற்பம் 4	
நடம் 3	இயல் 1	கட்டிடம் 5
	இசை 2	

↑ தெ   வ ↓

← கி

பதிப்பாசிரியர்கள் :
டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி, B.A., F.I.I.A.,
டாக்டர். S.P. சபாரத்தினம், M.A., Ph.D.

வெளியிடுவோர்: தெக்ஷிணா கலை நூற்பதிப்பகம்
எண்: 46, முதல் அவின்யூ, வெட்டுவான்கேணி, ஈஞ்சம்பாக்கம், சென்னை - 41.
தொலைபேசி : 044 - 2449 1384, 2449 2651, மின் அஞ்சல்: vastuved@md3.vsnl.net.in



நாற்புறத்தியல் – அறுபான் நான்கியல்

விண்ணும் எட்டே மண்ணும் எட்டே
உயிர்க்கலை எட்டே உடலொளி எட்டே
செயிரறும் உயிரெலாம் பொருளெலாம் எட்டே

பிரணவ வேதம் - ஓம் மறை



அருளியோன்
மாமுனி மயன்

Published by
Dakshinaa Publishing House
No.46, First Avenue,
Vettuvankeni,
Injambakkam Village, Chennai - 41.
India (Tamilnadu).
Phone : (044) 24491384 ; 24492651
Email : vastuved@md3.vsnl.net.in
visit us at **www.vastuved.com**

Publishers
Vaastu Vedic Research Foundation
established by Dr.V.Ganapati Sthapati.

First Edition : 2005

Price : Rs. 1000/-
Outside India : $ 50/-

Computer Typeset by:
Smt.R.Rajalakshmi
Sri.N.Dhanasekaran
Sri.B.Manigandan
Smt.D.Hemalatha

Printed at
Captain Print Service
Chennai - 41.
Phone: 044-24482250

6-4

பிரணவ வேதம்

ஓம்மறை

6 - 4

பிரணவ வேதம் – ஓம் மறை

வேண்டு கோள்

மணிமேகலை என்ற தமிழ்க் காப்பியத்தில் கண்ட ஓவியச் செந்நூல் என்ற நூல் அறிவியல் சார்ந்த நூலாக இருந்தமையால், புரியா நிலை ஏற்பட்டு வழக்கொழிந்து போயிற்றெனத் தெரிய வருகிறது. இதே போல, தமிழக அரசு 1986ல் மதுரையில் வெளியிட்ட ஐந்திறம் என்ற நூல் எவராலும் உற்று நோக்கப் படாமல் இன்றளவும் கிடக்கின்றது. எனவே, ஐந்திறத்தின் உரை நூல் போல் விளங்கும் பிரணவ வேதம் என்ற ஓம் மறையும் இதே பேரல் ஆகிடாமல் தடுத்து நிறுத்திட, கடந்த 20 ஆண்டுகள் தொடர் ஆய்வு செய்து, 50க்கும் மேற்பட்ட மேடைகளில் விளக்கி, ஓரளவு மேலை நாட்டு அறிஞர்களையும் இந்திய நாட்டு அறிஞர்களையும் கவர்ந்திழுக்க முடிந்தது.

அவற்றை எல்லாம் நான் வைத்திருந்த குறிப்புக்களிலிருந்து எடுத்து, பல தலைப்புகளில் இங்கே உரையெனத் தந்திருக்கிறேன். இந்த நூல்கள் Science and Technology உள்ளிட்ட அறிவியல் தமிழ் நூல்கள். எனவே கூறியது கூறல் என்ற குறை எனக்கு வருவதற்கில்லை. எனினும் மன்னித்தருள்க.

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.

பிரணவ வேதம் – ஓம் மறை

ஒரு முக்கிய அறிவிப்பு

இந்தப் பிரணவ வேதத்தின் சுருக்கமாக ஐந்திறம் என்ற அறிவியல் நூலை தமிழ்நாடு அரசு 1986 ல் வெளியிட்டது. இப்போது கையிலிருக்கும் பிரணவ வேதமானது ஐந்திறத்தின் விளக்க உரை என்பதைக் கண்டறிந்து வெளியிடுகிறேன்.

இந்தப் பிரணவ வேதத்தில் காணும் கணக்கு இக்கால வழக்கிலிருக்கும் வாஸ்து சாஸ்திரக் கணக்குகளுக்கு கிஞ்கிற்றும் வேறு படவில்லை. பத்தாயிரம் ஆண்டைக் கடந்து வந்த பிறகும் இலக்கணமும், இலக்கியமும் இவற்றுக்கு அடிப்படையான காலக்கணக்கும் மாறிடவில்லை என்பதை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

பத்தாயிரம் பாக்களைக் கொண்ட பிரணவ வேதத்தில் ஆயிரம் பாக்களே இப்போது வெளியிடப்படுகின்றன.

டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.

சங்க கால சிற்பச் சித்தன் மாமுனி மயன் அருளிய

பிரணவ வேதம் என்ற ஓம் மறை

அமெரிக்க நாட்டின் ஒரு பகுதியான ஹவாய் தீவில் குவை ஆதீனத்திற்குச் சொந்தமான புனித நிலப்பரப்பில் சன்மார்க இறைவன் கோவில் என்ற பெயருடைய திருக்கோவில் ஒன்று முற்றிலும் கல்லால் நிறுவப்பட்டிருக்கிறது. இக்கோவிலின் கருவறையில் கருவறையின் தலமட்டத்திற்கு மேல் 3 அடி உயரமும் $1^1/_4$ அடி அகலமும் கொண்ட ஸ்படிக லிங்கம் ஒன்று ஸ்தாபிக்க தீர்மானித்துளது. அக்கோவிலின் கருவறைச் சுவற்றில் **கர்பந்நியாசம்** என்ற ஆன்மீக விஞ்ஞானச் சடங்கினை நிகழ்த்திய 21- 07- 2005 நாளில், இந்த பிரணவ வேதம் குருதேவர் போதிநாத வேலன் சுவாமி அவர்கள் திருக்கரங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த திருக்கோவிலை **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்ற திருமந்திர கோட்பாட்டின்படி தனிப்பெரும் கோவிலாக நிர்மாணிக்க வேண்டும் என்பது குவை ஆதீனத்தின் முதலாவது லோக குருவான ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமி அவர்கள் திருஉள்ளமாகும். எனவே, **One God One World** என்ற கோட்பாட்டின்படி சைவ சமயத்தில் தோன்றிய முழுமுதல் கோவில் இஃது என்றால் மிகையல்ல. பரிவாரங்கள் இங்கே ஏதுமில்லை. இதன் மூலம் சைவ சமயத்திற்கு பெரியதொரு ஏற்றம் கிடைத்திருக்கிறது என்று சொல்லலாம். தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! என்று சொல்லி, இந்த அரிய வேத விஞ்ஞான நூலை அறிஞர் பெருமக்களிடம் ஒப்படைக்கிறேன்.


21.07.2005

ஹவாய்,U.S.A

டாக்டர். வை. கணபதி ஸ்தபதி

நிறுவனர் - இயக்குனர்

வாஸ்து வேத ஆய்வு நிறுவனம் சென்னை - 41




ஆடல்வல்லான் [விண்மேனியன்]

DANCE OF THE LIGHT IN MICROBODE

எண்ணுதற் கரிய கோலம் எழுதுதற் கரிய கோலம்
நண்ணுதல் செறிய கோலம் நவையுறும் ஆடல்வல்லான்
புண்ணிய திருக்கோலத்தை பொற்புற அமைத்த லாலே
திண்ணமாம் அருள்பெற்றோங்கும் திருமயன் சிற்ப மென்னே
[மாமுனி மயன்]

பரம்பொருள் எங்கும் உண்டு பெருங்கலை யாண்டும் உண்டு
பரம்பொருள் உணர்வினாலே ஒளிவழி பாடு கண்டேன்
பரம்பொருள் அருளினாலே திருநட ராசன்கண்டேன்
பரம்பொருள் அருளினாலே பெருங்கலை படைத்தேன்காண்பீர்
[மாமுனி மயன்]



சங்ககாலச் சிற்பச்சித்தன் மாமுனி மயன்

“ஆலமா மரத்தின் கீழே அருள்மயன் அமர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அருட்கலை வளர்ந்த தாலே
ஆலமா மரத்தின்கீழே அறிவர்கள் வளர்ந்த தாலே
ஆலயம் ஊரூர் தோறும் அமைந்தன செழிக்க நன்றே!”

வைசம்பாயனப் பாடல் 386

“मौनव्याख्या प्रकटित परब्रह्मतत्त्वं युवानं
वर्षिष्ठान्तेवसदृषिगणै रावृतं ब्रह्मनिष्ठैः ।
आचार्येन्द्रं करकलित छिन्मुद्र मानन्दमूर्तिं
स्वात्मारामं मुदितवदनं दक्षिणामूर्तिमीडे ॥

(சங்கரரின் தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்)

“अचिन्त्य अव्यक्त रूपाय निर्गुणाय गुणात्मने ।
समस्त जगदाधार मूर्तये ब्रह्मणे नमः ॥”

(மயாசுரனின் சூர்ய சித்தாந்தத்தில் பிரம்மஸ்துதி.)

பிரணவ வேதம்

"ஓம்மறை"

உள்ளே புகுமுன் படியுங்கள்....

[தொல்பழங்கால விஞ்ஞான வரலாற்று எச்சங்கள்]

[வாஸ்து-ஆகமம் வழிப்பட்ட விஞ்ஞானக் கலாச்சாரப் பின்னணி]

பாரதநாடும் தொன்மையும்

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" என்று பாரதியார் பாடினார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று மேலும் பாடினார். "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந்நாடே. அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணங் கள் வாழ்ந்து இருந்ததும் இந்நாடே" என்றும் பாடினார். இந்த கவிதைகள் இன்று விலை மதிப்பில்லாத கவிதைகளாகத் தெரிகின்றன. இந்த மூன்று கவிதைகளை ஆராய்ச்சியாளர்கள் உற்றுக் கவனித்திடல் வேண்டும். காரணம், இந்த மூன்று வாக்கியங்களில் நமது பாரத நாட்டின் கலாச்சாரம் மற்றும் தொன்மை பொதிந்து கிடக்கின்றன என்க.

பாரத நாடு பழம் பெரும் நாடு என்று போற்றப்படுகிறது எனில், அதன் பழைமை மற்றும் பண்பாடுதான் காரணம் என்று பல ஆய்வாளர்கள் வழியாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுமார் 30,000 ஆண்டுத் தொன்மையுடையதென இன்றைய ஆய்வர்தம் மதிப்பீடாகும்.

இன்று, பாரத நாடு என்பது, இமயம் முதல் குமரி வரையும் கூர்ஜரம் முதல் வங்காளம் வரையும் விரிந்து விளங்குகிறது. இதற்கு நீண்டதொரு வரலாறும் உண்டு. இந்த வரலாறு இரண்டு காலகட்டங்களைக் கொண்டு விளங்குகிறது. ஒன்றை வரலாற்றுக் காலத்திற்கு முற்காலம் என்றும், பிறிதொன்றை அதற்குப்

பிற்காலம் என்றும் சொல்லலாம். இவற்றின் பிற்கால வரலாற்றைத் தான் உலக ஆய்வாளர்கள் தீவிர ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இதையொட்டி, கல்வெட்டுக்களையும், கோவில்களையும், கோட்டை கொற்றளங்களையும், கற்படிமங்களையும், செப்புப் பட்டயங்களையும் ஆய்வு செய்து வந்தார்கள். அதுமட்டும் அல்ல, நிலத்தை அகழ்ந்து பானைகளையும், பானை ஓடுகளையும், எலும்புகளையும், எலும்புக் கூடுகளையும், பற்பல கருவிகளையும், வீடுகளையும், நகரங்களையும் தோண்டி எடுத்து ஆய்வுகள் பல செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் சுமார் நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுக் கால இடைவெளிக்குட்பட்ட பொருள்களாகவும் செய்திகளாகவும்தான் இருக்கின்றன. இவைகளை விடுத்து தொல்பழங்காலச் செய்திகளைக் காணமுடியவில்லை. இந்த நேரத்தில் மேலை நாட்டு விஞ்ஞானிகள் சாட்டலைட் புகைப்படம் மூலம் பூமியில் புதைந்து போன ஆறுகளையும், நகரங்களையும் வெளிப்படுத்திப் பல வரலாற்றுத் தடயங்களையும், உண்மை களையும், அரிய பல செய்திகளையும் கண்டு தேர்ந்து, நூல்கள் வாயிலாகவும், கருத்தரங்குகள் வாயிலாகவும் வெளிப்படுத்தியும் வருகிறார்கள். [காண்க. பிற்சேர்க்கைப் படம் 1].

தமிழகத் தொல்வரலாற்றுத் தடயங்கள்

இந்த நிலையில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். வரலாற்று ஆசிரியர்கள் தமிழக வரலாற்றை ஒரு பொருட்டாக நினைத்தார்கள் இல்லை. ஒரு சில பெரிய ஆசிரியர்கள் பாரத நாட்டின் வடக்கே தொடங்கி வரும்போது தமிழ்நாட்டை முற்றிலும் ஒதுக்கி விட்டு வரலாற்றை முடித்திருக்கிறார்கள். தமிழ்நாடு என்று ஒரு பழம்பெரும் பகுதி இருந்ததையே விட்டு விட்டார்கள். (Vincent Smith) தமிழர் தொல்பழம் இலக்கியங்களை அறவே ஓரங்கட்டி விட்டனர். இங்கு வளர்ந்த பண்பாட்டையும் மொழியையும் பெரிதுபடுத்தவில்லை. இங்கு தோன்றிய இலக்கியங்கள் குறிப்பிடும் வரலாற்றை வெறும் கதை என்று ஒதுக்கி விட்டார்கள். மொழி இலக்கியங்களைப் பொறுத்தவரையில்

சம்ஸ்கிருத இலக்கியங்களின் கதியும் இதுவே. எனவே, உண்மை வரலாறு ஒதுக்கப்பட்டதாயிற்று.

பாரத நாட்டு தொல் இலக்கியங்கள்

பாரத இலக்கியங்களில் உண்மை வரலாற்றுத் தடயங்கள் நிரம்ப உள என்பதை ஆங்கிலக் கல்வி அறிவு எல்லோருக்கும் கிடைத்தபின், பிறர் வெளிப்படுத்திய உதாசீனத்தை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். நமது அறிஞர்கட்குத் தமிழ் மட்டும் தெரிந்து, சம்ஸ்கிருதமும், ஆங்கிலமும் அக்காலத்தில் தெரியாமல் போனதும், படிக்காமல் போனதும் பெருங்காரணம் எனலாம். வாஸ்து சில்ப சாஸ்திரங்கள் சம்ஸ்கிருதத்தில் இருந்திருந்தாலும் அந்த சாஸ்திரங்களில் கிடந்திட்ட விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் (Science and Technology) தமிழ் மக்களைச் சார்ந்தன என்று எவர்க்கும் தெரியாது போனதாலும், கட்டிடக்கலை சிற்பக்கலை நுட்பம் தெரியாது போனதாலும், கட்டுக் கதைகளே பெருகி விட்டதாலும், இந்தச் சந்தடியில் தென்னக வரலாற்றின் உண்மையும், மேன்மையும், அவ்வழி வந்தோர் சிறப்பும், முற்றிலும் ஒதுக்கப்பட்டு விட்டன என்ற செய்தியை மீள்பார்வை செய்திடல் இன்றியமையாததாகும்.

வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் ஆழ்ந்த விஞ்ஞானங்களை உள்ளடக்கிய ஆன்மவியல் என்பது எவர்க்கும் புரியாமல் போனது பெருங்காரணம் என்று அழுத்திக் கூறலாம். எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பது தமிழர் பண்பாடு. பரம்பொருளை ஆய்ந்துணர இஃதொரு மகா வாக்யம் எனலாம்.

நிகழ்கால மறுமலர்ச்சி

இந்த நிலையில் காஞ்சிப் பெரியவர் காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் பக்தி கலாச்சாரத்தையும், ஹாலந்து மகரிஷி மஹேஷ்யோகி விஞ்ஞான அடிப்படையையும், ஹவாய் சற்குரு சிவாய சுப்ரமுணிய ஸ்வாமிகள் விஞ்ஞான ரீதியான

ஒரே கடவுள் ஒரே உலகம் என்ற சைவ சமயக் கொள்கையையும் உலகெங்கணும் பரப்பி வந்தார்கள். இதன் மூலம் வாஸ்து விற்பன்னர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட தொய்வுகள் விரைப் பெய்தி கொஞ்சம் கொஞ்சமாக நல்லதொரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஹரேகிருஷ்ணா பக்தி இயக்கமும் நல்லதொரு சமுதாய மாற்றத்தை மேலைநாடுகளில் செய்துளது எனலாம்.

மேலும் தமிழக அரசும் ஒரு கல்லூரியை மாமல்லபுரத்தில் 1957ல் நிறுவி தொழில்துறை மேன்மைக்கு அருந் தொண்டாற்றியது. இலக்கிய நயம் வாய்ந்த பல கலைச் சின்னங்களையும், கட்டிடங்களையும் கட்டுவித்து சிற்பியர் சமுதாய தொழில் மேன்மைக்கு அரியதொரு மறுமலர்ச்சியையும் செய்தது. இதற்கெல்லாம் முன்பு, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அரசர்கள் காட்டி வந்த மரபுக்கலைகளின் வளர்ச்சிக்கு முடிசூடா மன்னர்களாம் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் கலைஞர்கள் வாழ்க்கையை நிரந்தரமாக்கி, அவர்தம் ஆற்றலைக் காப்பாற்றி விட்டார்கள். இவர்தம் இறுதிக் காலத்தில்தான் – நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் 1957 முதல் மத்திய அரசும், மாநில அரசுகளும் கலைத் தொழில் மரபு ஓங்கிட நல்ல பல திட்டங்களைப் புகுத்தி – குறிப்பாக – கைவினை ஓங்கச் சிறந்த பணிகளைச் செய்வதாயிற்று. ஆனால் சாஸ்திர ஞானம் – அதாவது வாஸ்து விஞ்ஞானம் மறுமலர்ச்சி பெற்றிட நாளது வரை எந்தவொரு தீவிர முயற்சியும் நிகழவில்லை என்பது உண்மையே. கலை வளர்ச்சிக்கு ஏற்ற – ஒன்று இன்னும் ஏதும் தோன்றிடவில்லை. வரவேண்டும் என்று ஓரிரண்டு ஆத்மாக்கள் முனைப்புடன் இருக்கின்றன.

இன்று நாட்டில் நடைபெற்று வரும் தீவிர பக்தி கலாச்சாரம் மூடநம்பிக்கையின் பெருக்கத்தை செய்து விட்டது. விஞ்ஞானம் என்ற பெயரையே இத்துறையில் ஈடுபட்ட ஆய்வர்களும் மதவாதிகளும் உணர்ந்தார்கள் இல்லை.கடவுள் ஒரு விஞ்ஞானி என்ற நமது வேதக்கருத்தை மறந்து விட்டார்கள். विज्ञानं ब्रह्म [பிரம்மம் ஒரு விஞ்ஞானப் பொருள்] என்று உணரச் செய்திடவும்

சொல்லிடவும் வேண்டுமென்று தீவிர ஆசை கொண்டுள்ளேன். மக்கள் சமுதாயம் ஒருங்கிணைய இவ்வுணர்வு தேவையில்லையா?

வாஸ்து விஞ்ஞானத்தின் மறுமலர்ச்சி

இப்போது வாஸ்து என்ற பெயரில் பற்பல செய்திகள் பற்றி ஆய்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இதற்கு மேலை விஞ்ஞானம் கை கொடுத்து வருகிறது. இந்த நிலையில் எனது **வாஸ்து வேத ஆய்வு நிறுவன வெளியீடுகள்** மகத்தான பணி செய்து வருகின்றன. மேலை விஞ்ஞானிகளையும் வெகுவாகவே ஈர்த்துவிட்டதெனலாம். இதில் German anthropologists, பிரஞ்சு விஞ்ஞானிகள், மகரிஷி மஹேஷ் யோகியின் வேதப் பல்கலைக்கழகமும் முனைப்புடன் செயல் படுகின்றன. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இதையொட்டி ஆய்வுகளும், அனுஷ்டானங்களும் நல்லவண்ணம் நிகழ்கின்றன. வாஸ்து விஞ்ஞானத்திற்கு ஆதரவு நல்கிய இரண்டு பல்கலைக் கழகங்களும் உண்டு. ஒன்று சென்னைப் பல்கலைக் கழகம், பிறிதொன்று ஹாலந்தில் மகரிஷி மஹேஷ் யோகியின் வேதப் பல்கலைக் கழகம் என்று நன்றியோடு பதிவு செய்தல் வேண்டும். விஞ்ஞானப் பார்வையே இம்மறுமலர்ச்சிக்குக் காரணம் என்பது தெளிவாகத் தெரிகிறது. வாஸ்து விஞ்ஞானத்தை physics of love என்று Ronald Quinn என்ற அமெரிக்கர் கண்டு துய்த்து அங்ஙனமே பிரசாரமும் செய்து வருகிறார் . இவர் எட்டிப்பிடித்த நிலைக்கு இன்று எவரும் ஏறவில்லையே! பிறிதொரு அமெரிக்கர் Space therapy என்று உணர்ந்து புதியதொரு அறிவியல் சொல்லை, அதாவது அப்பெயரைப் பதிவும் [ரிஜிஸ்டரும்] செய்துள்ளார்.

எனது ஆய்வின் இறுதித் தேற்றமாக நான் கண்டது இதுவே. அதாவது Vaastu shastra is a science of Energy and Matter, Time and Space, Rhythm and Form. இதனைச் சுருக்கி வாஸ்து விஞ்ஞானத்தை Astro Physics and Astro Dynamics என்று இப்போது கண்டு சொல்லி வருகிறேன். இதைக் கேட்டு ஆச்சரியப் படுபவர்கள் அமெரிக்கர்கள் என்று சொல்லிட விரும்புகிறேன்.

நான் சொல்வது யாதெனில் வாஸ்து வேதமானது Traditional Astro Physics என்றும் Traditional Astro Dynamics என்றும் சொல்லி நிரூபித்து வருகிறேன். அமெரிக்கர் தான் மதிக்கின்றனர்; சுவைக்கின்றனர்; போற்றுகின்றனர்.

இந்த நேரத்தில், நில ஆய்வை விடுத்து கடல் ஆய்வுகளை ஒரு சில மூதறிஞர், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி, துவாரகை என்ற இடத்தை கடலுக்கு அடியில் கண்டு பிடித்து, சிறந்த ஆய்வுகளைச் செய்து அப்பகுதியின் தொன்மையையும், அங்கு நிலவிய நாகரிகத்தையும், அறிந்து ஆச்சரியப்பட்டு வருகிறார்கள். பழங்கதை உண்மையாகி வருவதைப் பார்த்து மகிழுங்கள்.

குமரிக் கண்டம்

இந்த நிலையில், கன்னியாகுமரிக்குத் தெற்கில் மிகப் பெரிய நிலப்பகுதி ஒன்று இருந்ததாகவும், அங்கு தோன்றிய மக்கள் இனம் அதி உன்னத நாகரிகம், மற்றும் பண்பாடு கொண்டு வாழ்ந்திருந்ததாகவும், அங்கு தான் மொழி வளர்த்திட்டத் தமிழ்ச்சங்கங்கள் பல இருந்தன என்றும், அன்றிருந்த நகரங்கள் எல்லாம் கடலில் மூழ்கி கிடக்கின்றன என்றும், இவற்றை ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிஞர்கள் வலியுறுத்திப் பேசி வருகிறார்கள். உச்ச நிலை எய்திய இந்தக் காலக்கட்டம் சுமார் 15ஆயிரம் இருக்குமெனச் சொல்லுகிறார்கள். மேலை நாட்டு அறிஞர்கள் இந்த நேரத்தில் பல முயற்சிகள் செய்து அண்மையில் இராமாயண நிகழ்ச்சி நடந்ததற்கான தடையங்களை சாட்டலைட் படத்தின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இதனை உலக ஆய்வர்கள் வியப்புடன் மேல் ஆய்வு செய்து வருகிறார்கள். சீதையைத் தேடிச் சென்ற அனுமன் குமரிக் கண்டத்தைச் சேர்ந்த மகேந்திர பருவதத்திற்கு எதிரிலே இருந்த பெரியதொரு மலைக்குச் சென்றிட பாலம் அமைத்தத் தடையத்தை சுட்டிக்காட்டி விட்டார்கள். நளன் என்ற கட்டிடக் கலைஞன் இதைக் கட்டினான் என்று கம்பராமாயணம் சொல்கிறது. எனவே

இப்போது பண்டை இலக்கியங்கள் ஆய்வுக்கு உட்பட்டிருக் கின்றன. பண்டைத் தமிழ் இலக்கியங்கள் மீண்டும் வெளியிடப் பட்டு வருகின்றன. ஆனால், வாஸ்து சில்ப சாஸ்திரங்கள் இன்னும் ஒதுங்கியே கிடக்கின்றன. இந்த சாஸ்திரங்களின் விஞ்ஞானம் புரியாத வரை தமிழ்ப் பண்பாடு கானல் நீர்தான் என்று வருத்தமுடன் சொல்லுகிறேன்.

மகேந்திரமும், ஆகம நூல்களும்

இதையொட்டி, திருவாசகத்தில் வரகுண பாண்டியனின் அமைச்சரான மாணிக்கவாசகர் என்ற சமயத்துறை நிபுணர் குமரிக்கண்ட மயேந்திர மாமலையைக் குறிப்பிட்டு, பிரளயத்திற்குப் பின் கிடைத்த பொக்கிஷங்களைப் பெற்றிட்ட அவர்தரும் செய்தியை உற்றுப்பார்த்தல் தகும்.

"மன்னுமாமலை மயேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
கேவேடராகி கெளிரது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மயேந்திரத்து இருந்து
உற்ற வைம்முகங்களாற் பணித்து அருளியும்"
– திருவாசகம் – கீர்த்தித் திருஅகவல்

இதன் சாரம் யாதெனில், மயேந்திர மாமலையிலிருந்து கொண்டு, போதித்த ஆகமத்தையும், மற்ற இலக்கியங்களையும் பெரிய மீன்கள் வாயிலிருந்து கைவரப் பெற்றோம் என்பதாகும். சில்பசாஸ்திரத்தையே ஆகமம் என்றும் சொல்வர். [காமிகாகமம்] இந்தச் செய்தி குமரி நாட்டில் நிகழ்ந்த பிரளயத்தைக் குறிக்கிறதல்லவா? ஆம், உண்மையே. தமிழகக் கவிஞர்கள் பொய் புரட்டுப் பேசுவதில்லை. எதையும் காவிய நயத்தோடு பேசுவது தொன்று தொட்டு வரும் மரபாகும் என்பதையும் உற்று நோக்குக. இப்படிப்பட்ட குமரிக் கண்டம் தொடர்புடைய சங்க நூல்களுக்குள் புகுந்து நமது தேடலைச் செய்தாலன்றி தொல் பழங்கால வரலாறுகள் அனுமானமாகவே நின்று விடும். அத்தகைய நூல்கள் நம் நாட்டிலும், மேலை நாடுகளிலும் மறைந்து கிடக்கின்றன என்பது இப்போதைய எனது ஆராய்ச்சிகள் உணர்த்துகின்றன.

இதையொட்டி கன்னியாகுமரி Dr.பத்மநாபன் (Member, Indian History Congress) அவர்களின் வரலாற்றுக் குறிப்பை உற்றுப் படியுங்கள். மேலும், இந்த உண்மை உறுதிப்படும். வேறு பல செய்திகளும் அவரிடமிருந்து கிடைக்கும். இதற்கொரு இயக்கமே தோன்றிவிட்டதெனலாம். இந்த இயக்கமானது வாஸ்து ஆகமக் கலைகளின் மறுபிறப்பிற்கு ஏற்றதாக அமையும் என்க.

ANCIENT HISTORY

"It is evident that the history of South India particularly Tamil Nadu was not given its due recognition. Frankly speaking, we can assert that South Indian History is almost ignored by the historians of India. In this connection, Vincent Smith aptly remarked : "Hitherto most historians of ancient India have written as if the South did not exist. (The early history of India - Vincent A.Smith, Page 3). But on the other hand, the Lemurian theory which holds the view that there was a large mass of land to the South of Kanyakumari carries the history of South India particularly Tamil Nadu to very ancient times.

It has become a fashion among some of the historians in this country to neglect or underrate the history of the Tamils or to conjure the issues by saying "this is not corroborated elsewhere" "confirmation is wanting" "seems to be mythological",etc and raising doubts and problems instead of attempting to solve them. They forget that a huge mass of literature and legends cannot be brushed aside.

OCEANIC RESEARCH

People have not believed when scholars uttered a simple truth that the great cities like Tyre, Bybols and Troy described in the great epics Iliad and Odyssey once flourished and gradually eclipsed. But the 20th Century Oceanic explorations

brought to light the existence of these cities as a fact. The recent oceanic explorations reveals the fact about the great city of Alexandria and its connection with the Queen Cleopatra. In India also the great cities like Poompuhar in the South and Dwaraka in the North are described in the ancient Indian epics. Many doubted the veracity of the statement where these beautiful cities existed. But today, thanks to the oceanic research the characteristics of the two great cities are known to the world.

NAAVALAM THEEVU (Single Land Mass)

Most of the visitors to Kanyakumari only know of the confluence of the three oceans, the temple of Devi Kanyakumari, Gandhi Sanmark Mandir besides ofcourse, the land mark of Kanyakumari the Vivekananda Rock Memorial. How many would know that beneath the Indian Ocean, there lie the remnants of a vibrant and hoary civilisation of the Tamils going back 25,000 years, which were submerged by periodical cataclysmic landslips during the remote past? It is interesting to know that the topography of ancient India was different from what is today. Peninsular India extended beyond Kanyakumari forming a sprawling continent touching Africa in the West, Australia in the East and Antartica in the South and occupying a large portion of the Indian and Pacific Oceans. Based on Geology and Cosmology, the Geographers made out a **World Atlas depicting the position of the whole world 2,00,000 years ago and in it there is only one single land mass and all the present continents were shown as one unit.** The huge landmass in the old map was known as Naavalam Theevu which means the land surrounded by sea on all the four sides. (Gems from the pre-historic past - Dr.N.Mahalingam page 140). In the old map the present Himalayan range was shown as sea while

South India was shown as a land mass. Only a Geologist can state conclusively that the location of the present Himalayan range was only the site of a shallow sea almost some 20 million years back. (A Text Book on Geology - P.K.Mukherjee, Page 16). The discovery of the thrilling facts that the indogangetic alluvial plains, on which the most prosperous States of the Indian Union are located, are geologically of very recent origin, while the Deccan plateau forms the remnant of the original crust of the earth, is the outcome of modern scientific studies in the field of Geology. The study of fossils alone, in the rocks of the different sectors of the globe could establish the antiquity of the land's end promontory of the present India. In the basis of this fact, the well known Archaeologist Dr.H.D.Sankalia aptly remarked : In the South we have the oldest land mass in India older than the Himalayas. (Prehistory and proto history of India and Pakistan - Dr.H.D.Sankalia, page 42).

Seismic disturbances, cataclysmic landslips, Volcanic upheavals and tidal waves had submerged a vast expanse of landmass to the South of Kanyakumari. The forefathers of the Tamils lived and thrived there. Western scholars and historians refer to the great landmass to the south of Kanyakumari as Lemuria which broke up several thousand years ago. According to Tamil tradition the lost Lemuria was known as Kumari Mandalam, Kumari Nadu and Kumari Kandam (Kumari Continent).

SILAPPATHIKAARAM

From SILAPPATHIKAARAM, one of the twin epics in Tamil literature, we learn that the river Pahruli and the city Kumarikkodu along with a huge ranges of mountains disappeared in a great deluge. (Silapathikaaram - Madurai

Kaandam, Kaadu Kaan Kaathai - (19-20). The Sangham works Kalittokai (Kalittokai 104) and Kurunthokai (Kurunthodai 52) also mention the lost continent of Kumari. The river Pahruli in Kumari Continent is also mentioned in Purananuru. (Purananuru poem 9). The land south of Sri Lanka according to Mahavamsa covered a distance of 700 Kathams or 4900 miles southwards. The great deluge is also mentioned in the Holy Bible.

THOLKAAPPIYAM

Adiyarkkunallar, the commentator of Cilappathikaaram gave a fine description of Kumari Nadu and added that the land was made up of 7 big divisions named Thanganaadu - Kurumpanai Naadu, Madurai Naadu, Munpaalai Naadu, Pinpaalai Naadu, Kuntra naadu and Kunagaarai naadu and they were divided into seven small divisions each. Thus the whole landmass was divided into 49 divisions. According to Irayanar Kalaviyal Urai, the first Tamil Sangham was held at Then Madurai (South Madurai), the capital of Pandyas and after the fall of Then Madurai, Capital was shifted to Kapadapuram where the second Tamil Sangham was held. **As a result of the deluge the literary and poetical works of the first Sangham have not survived except a few fragments of Agathiyam and Aindiram.** A number of works seems to have been produced during the period of the second Sangham, but only Tholkaapiyam has survived. (Madurai Tamil Sangham Golden Jubilee number 1956 - page 90). When Kapaadapuram was also deluged by the sea the capital was shifted to the present Madurai which became the capital of the Pandyas and also the seat of the third Tamil Sangham. The literary works of the third Sangham are the main source of the ancient history of the Tamils. Reference in Tholkaappiyam show that there existed a certain amount of literature in Tamil before

its composition. **The author of Tholkaappiyam has cautiously acknowledged to his previous authorities in 260 places by mentioning they say and the learned say etc. It reveals the glorious literary antiquity of the Tamils.**

POOMPUHAR

The facts culled from these old literary works cannot be brushed aside as mere imagination and exaggeration. The archaeological findings found at Alagankulam near Ramanathapuram and the oceanic explorations held in Poompuhar confirm the detailed description of the places mentioned in ancient literature. The Director of Archaeology in Tamil Nadu Government Natana Kasinathan who participated in the Oceanic explorations conducted in Poompuhar port remarked: the artifacts strangely confirm that the city Poompuhar was swallowed by the sea and a number of structures of the lost city are still under sea. (Aayvukalanchiyam -. a monthly journal of Kanyakumari Historical and Cultural Research Centre, October 1995, page 6). So much so, if any excavation in the land and exploration in the sea are undertaken around Kanyakumari the truth about the lost Lemuria or Kumari continent will come to light.

CONTINENTAL DRIFT THEORY

Alfred Wegner (1880-1930) introduced a theory commonly known as the theory of Continental drift. It was striking and unusual that it attracted world-wide attention. According to him there was but a single landmass which covered about one third of the globe. About 2 crores of years ago the single landmass broke apart North and South. America floated west, Eurasia and Australia drifted east. One of the main

arguments of Wenger was an assertion that the eastern, northern and southern America would fit well into the outlines of Western Africa and Europe. It is evident from the recent researches that South India, Sri Lanka, Africa, Australia and the numerous Islands in the India and Pacific Oceans are only the remnants of the lost continent of Kumari. On the basis of Cosmology, Geology, Meteorology, Anthropology, Biology, Zoology and Bio-Chemistry the Research Scholars brought forth the theory which confirms the literary account of Kumari continent. Geologically speaking the land-mass named Kumari Nadu was shattered to several pieces and as a result of the continental drift India, America, Africa, Australia and Antartica became separate countries and the innumerable Island in the Indian and Pacific oceans were formed.

LEMURIA (KUMARI CONTINENT)

Many Research Scholars have spoken about the existence of a great landmass extending beyond the present Kanyakumari in the Indian Ocean. (Encyclopawdia Britanica, 1965; Volume VI, page 418). An examination of these views confirms the Lemurian theory. Sir Walter Raleigh in the History of the world says: India was the planted and peopled country after the flood. The December,1990 issue of the Science of man says: The locality of the origin of the earliest race from the most recent researches appears to have been on the land now submerged beneath the Indian Ocean. Sir John Evans in his presidential address to the British Association in 1897 mentions Southern India, as the cradle of the human race. The same view is held by Maclean, the author of Manual of the Madras Presidency. Scott Elliot in his treatise held the view that the original abode of man was in the Indian Ocean. (Gems from pre historic past -

Dr.N.Mahalingam, page 23-24). Dr.A.Chandrasekhar, Professor of Linguistics, Delhi University while delivering the presidential address at the 9th All India Conference of Dravidian Linguistics, pointed out: **"the dravidian civilization is not only the oldest in India but the oldest in the world and Dravidians had spread not only to the whole of India but also the world over"**. (The Hindu dated 02.05.1940). These statements confirm the glorious history of Kumari continent in the Indian Ocean situated on either side of the equator."

முன்னொரு காலத்தில், வெறும் கதை என்றும் பெருங்கதை என்றும் ஏளனம் செய்யப்பட்ட பழங்கதைகள் இன்று உண்மை நிகழ்ச்சிகளின் பிற்காலத் தொகுப்பு என தெரிய வருகிறது. இதனை எதற்குச் சொல்லுகிறேன் என்றால், சங்கம் வைத்துத் தமிழ் வளர்ந்த செய்திகளை நம்பாத சில ஆய்வர்கள் இன்று ஏற்கெனவே சொன்ன அனுமன் கடந்து சென்ற அந்தப்பாலம் மிகப்பெரியதொரு வியப்பையும் அதிர்ச்சியையும் கொடுத்திருப்ப தாகப் பேசி வருகின்றார்கள். இதற்கு தொடர்புடைய வேறுபல ஆய்வுகளும் நிகழ்ந்து வருகின்றன. என்றாலும், இந்த நிலப் பகுதியின் பெயர் குமரிக்கண்டம் என்றும் லுமேரியன் காண்டினன்டு என்றும் பேசி வரும் நேரத்தில், கீழ்க்கண்ட செய்தியை அறிஞர் முன்வைத்து, அதற்குப் பல இலக்கியச் சான்றுகளையும் காட்டி ஆய்வையே தனது மூச்சாக கொண்ட அறிஞர்களின் கவனத்தை ஈர்த்திட விரும்புகிறேன். மேலுமொரு பெருஞ்சான்று உளது. இதையும் உற்று நோக்குக.

நமது திருக்கோவில்களில் குறிப்பாக, தென்னகத்தில் பூசகர்கள் ஒரு சங்கல்பம் சொல்லி, தனிப்பட்டோருக்கு இறைவழிபாட்டை நிகழ்த்துவார்கள். இதனை உற்றுக் கவனியுங்கள். காரணம் யாதெனில், இதற்குள் ஒரு வரலாற்றுப் புதையல் காணக் கிடைக்கின்றது.

"अद्य ब्रह्मण: श्वेतवराह कल्पे वैवस्वत मन्वन्तरे, अष्टा विंशति तमे कलियुगे प्रथमो पादे ......
जम्बूद्वीपे भारत वर्षे भरत: कण्ठे मेरो: दक्षिणदिक् भागे ॥"

"நடைமுறையில் இருக்கும் பிரம்மயுகத்தில், ஸ்வேத வராஹ கல்பத்தில், வைவஸ்வத மன்வந்தரத்தில், இருபத்தெட்டாவதான கலியுகத்தில், முதல் பாதத்தில் ... ஜம்பூத்வீபத்தில், பாரதவர்ஷத்தில், பரதக் கண்டத்தில், மேருமலையின் [விந்திய மலை] தெற்குப் பக்கத்தில் ....." இன்னார் என்று பெயர் சொல்லி என்பது பொருள்.

இந்தச் சங்கல்பத்தில் பாரத நாட்டின் வரலாறே பொதிந்து கிடக்கிறது என்று சொல்லி, மேல் ஆய்வினைச் செய்திட அறிஞர் பெருமக்களை வேண்டலாகிறது. இதன் மூலம் இன்றைய பாரதத்துக்கு முன் இந்த நாட்டுக்கு இருந்த தொல்பழம் பெயர் வெளிப்படுவதைக் காணலாம். இந்த நிலப்பகுதிக்கு அப்போது நாவலந்தீவு என்றும் ஜம்பூத்வீபம் என்றும் பெயர் இருந்த செய்தியை உற்று நோக்குக. இதற்கான இலக்கியச் சான்றுகள் தமிழகச் சங்கநூல்களில் கிடைக்கின்றன. இப்பகுதி பலமுறை பிரளயத்திற்குள்ளாகி, அந்த நிலம் சிதறி பல கண்டங்களாகப் பிரிந்து போயின என்பது ஓர் உண்மை வரலாறு. இதனால் உணர்ச்சிப் பெருக்கெடுத்த நிலையில் தமிழகப் பேரறிஞர்களில் ஒருவர் கீழ்கண்ட செய்தியைத் தொகுத்து தந்திருக்கிறார். இந்த அறிஞர் தமிழ் இலக்கியங்களை உள்ளும் புறமும் ஆய்ந்து, சான்றுகள் பல திரட்டி, தனது அபூர்வமான பேச்சாற்றலால் இச்செய்திகளைப் பரப்பி வருகிறார். அவ்வறிஞர் தம் பெயர் டாக்டர்.குமரி அனந்தன் என்பதாகும். இவர் தொல்பழம் பாண்டியர் இன வழித் தோன்றல் என்பது ஒரு முக்கியச் செய்தியாகும். அவர் பேசியதும், எழுதியதும் யாதெனில்,

குமரிக்கண்டம் இன்றைய குமரி முனைக்கும் தெற்கே விரிந்து பரந்திருந்தது. தொன்னெடுங் காலத்திற்கு முன்னால் இந்தியா, ஆஸ்திரேலியா, மடகாஸ்கர், ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவற்றை உள்ளடக்கிய பெருங்கண்டம் இருந்ததை மேனாட்டு அறிஞர்கள் வழி நின்றும், தம் ஆய்வுகளின் மூலமும் அப்பாத்துரையார், தேவநேய பாவாணர், இரா.மதிவாணன், டாக்டர் குமரி பத்மநாபன், கல்யாணராமன், ரவீந்தரநாத், பத்ரி

நாராயணன் போன்ற பல அறிஞர்கள் அழுத்தமாகக் கூறியுள்ளனர். இப்பெரும் நிலப்பரப்பை லெமுரியா கண்டம் என்று சிலரும், கோண்டுவானா கண்டம் என்று சிலரும், குமரிக்கண்டம் என்று சிலரும் அழைக்கின்றனர். ஆதி மனிதத் தொடக்கம் எங்கே என்பதில் அறிஞர்கள் ஆய்வினை மேற் கொண்டுள்ளனர்.

சங்கங்கள் வைத்துத் தமிழ் வளர்த்த நாகரிகத்தைத் தமிழர்கள் கொண்டிருந்தனர்.

பூமித் தட்டுகள் ஒன்றோடொன்று மோதி நிலங்கள் பிரிந்த போது குமரிக் கண்டத்து மக்கள் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். சிந்துவெளி நாகரிகம் இக்குடியேற்ற மக்களால் ஏற்படுத்தப்பட்டது. அங்கே கிடைத்த முத்திரைகளும், சின்னங் களும் தமிழின் தொன்மை வடிவங்களாக இருக்கின்றன. இன்றும் வடமேற்கு ஆப்கானிஸ்தானத்தில் மக்கள் பேசும் பருகி என்ற மொழி தமிழின் அமைப்பு போன்றிருப்பதோடு பல தமிழ்ச் சொற்களையும் கொண்டுள்ளது. மத்திய இந்தியாவில் வாழும் பழங்குடி கோண்ட் இன மக்கள் இன்றும் பால், மயில் என்பதற்குப் பாலு, மயிலு என்றும் மாட்டுச் சாணத்திற்கு சாணி பீ என்றும் குறிப்பிடுகின்றனர்.

கேம்பே வளைகுடாவில் ஆய்ந்தபோதும், துவாரகை அகழ் வாய்வு செய்தபோதும் மறைந்த நதிகள் ஓடிய அடையாளங்கள் தெளிவாகத் தெரிகின்றன.

தென்னகக் கடலை குறிப்பாக இந்து மகா சமுத்திரத்தைக் கடலடி ஆய்வு செய்தால் குமரி ஆறு, பஃறுளி ஆறு, குமரி மலை போன்றவை, தமிழன் அங்கு வாழ்ந்தான் என்பதனை எடுத்துக் காட்டும் வரலாற்றுச் சின்னங்களாக நமக்குக் கிடைக்கும்.

கண்டங்கள் ஒன்றிணைந்து இருந்ததனைத் தயாரித்து வெளியிட்ட ரீடர்ஸ் டைஜஸ்ட் (Readers Digest) சிக்கிம், திபெத்திற்கு இடையே இருக்கும் கணவாய்க்கு சோழா பாஸ் (Chozha Pass) என்று பெயர் குறிப்பிடுகிறது.

எனவே தமிழர் வாழ்விடங்களும் கலாச்சாரமும் வடபுலத்திலும் பரந்திருந்தது என்பதை அறிய முடிகிறது. தாமோதரம் பிள்ளை தமிழர்கள் சிந்துவெளியை மீனாடு என்று அழைத்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

பூம்புகாரில் கடலாய்வு செய்தபோது கடலடியில் நகர அமைப்பின் அடையாளங்கள் தெரிய வந்துள்ளன. மாமல்லபுரத்தை அடுத்துள்ள கடலுக்கடியில் பெருநகரம் மூழ்கிக் கிடக்கிறது என்பது அண்மை ஆய்வுகளின் முடிவாகும். தனுஷ்கோடி நம் கண்முன்னாலே கடலுக்கடியில் போய்விடவில்லையா?

தொல்பொருள் ஆய்வாளர் டாக்டர் எச்.டி.சங்காலியா தெற்கே இந்தியாவின் மிகப் பழமையான இமயத்திற்கும் முந்திய நிலம் இருந்தது என்று ஆய்வில் கூறுகிறார். மனித அறிவியல் என்ற ஏடு (Science of Man, December 1990) அண்மைக்காலத்து ஆராய்ச்சிப்படி மனித இனம் தோன்றிய இடம் இந்தியப் பெருங்கடலுக்கு அடியில் மூழ்கிக் கிடப்பதாகத் தோன்றுகிறது என்று கூறுகிறது.

இரண்டாம் கடல் கோள் ஏற்பட்ட கி.மு.2347 ஆம் ஆண்டுவரை இலங்கை தனியாகப் பிரியவில்லை. குமரிக்கண்டம் பிளந்தபோது கடல் வழியாகவும், தரை வழியாகவும் தமிழர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று குடியேறினார்கள்.

டாக்டர் வ.செ.குழந்தைசாமி கரிகாலன் கட்டிய கல்லனை இடை இணைப்பாகப் பூச்சாந்து எதுவும் இல்லாமல் கடற்கறை இசைவாக அடுக்கி, இணைத்து எழுப்பப்பட்டது. இதே போன்ற தொரு அணை ஆப்பிரிக்காவில் இருப்பதால் தமிழர்கள் அங்கு சென்று குடியேறி அந்நாட்டை வளப்படுத்தியிருக்க வேண்டு மென்றும், மலைச் சரிவுகளில் அங்கே நெல் பயிரிடுவதற்கு இவர்களே வழிகாட்டியிருக்க வேண்டுமென்றும் கூறுகிறார்.

ஆப்பிரிக்காவில் வாழும் மக்களில் சற்றொப்ப 25 பழங்குடி மக்கள் முருங்கு என்ற தெய்வத்தை வழிபடுவது தமிழர்கள் வழிபட்ட முருக வணக்கத்தின் எச்சமே என்பது அறிஞர்கள் கருத்து.

மடகாஸ்கர் என்று இன்று அழைக்கப்படுவது ஒரு காலத்தில் குமரி என்றும், அங்குள்ள மக்கள் குமரி என்றும் அழைக்கப்பட்டனர் என்றும் குமரி பத்மநாபன் கூறுகிறார். கம்போடியாவிலும், இந்தோ சீனாவிலும் குமரி என்ற பெயரில் பெண் தெய்வத்தை வழிபடுவ தாகவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆஸ்திரேலிய பழங்குடியினர் பேச்சில் பல தமிழ்ச் சொற்கள் ஒலிக்கின்றன.

இலங்கையிலுள்ள புகழ்பெற்ற நூலாகிய மகாவம்சம் இலங்கைக்கும் தெற்கே 700 காதம் (4,900 மைல்கள்) நிலப்பரப்பு இருந்ததாகக் கூறுகின்றது. இந்நிலத்தில் ஏழ்தெங்கு நாடு, குறும்பனை நாடு போன்ற நாடுகளும், ஆறுகளும், மலைகளும் இருந்தன.

ஆனால் சு.கி.ஜெயகரன் என்ற ஆய்வாளர் குமரி நில நீட்சி என்ற நூலில் லெமோரியா கண்டம் என்பதும், முதல் மனிதர்கள் அந்தக் குமரிக் கண்டத்தில் தோன்றினார்கள் என்பதும் இந்த மனித இனம் தமிழினம் என்பதும், இது மிகத் தொன்மையானது என்பதும் ஒரு கற்பனை என்று குறிப்பிட்டுள்ளார். தமிழர்கள் வீண் பெருமைக்காக மிகைப்படுத்திப்[1] பேசுகின்றனர் என்றும் குறிப்பிடுகிறார்.

சர்.ஜான் மார்ஷல் தமிழரல்லர். அவர் சிந்துவெளி அகழ்வாய்வு, வேத காலத்திற்கும் முந்திய நாகரிகம் அங்கே இருந்தது என்பதைக் காட்டுகிறது என்று கூறுகிறார்.

டெல்லி - பல்கலைக் கழகத்தின் மூத்த விரிவுரையாளர் எல்.எஸ்.சர்மா பழங்கால இந்தியா என்ற தமது நூலில் சிந்து வெளியில் கிடைத்த மனித உருவ வடிவங்களில் ஆடையைப் பற்றிக் கூறுகிறார். ஆண்கள் மேலே இடது தோளில் துணியொன்று போட்டிருப்பதும், அத்துண்டின் வலக்கை அக்குள்ளிற்குள் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது என்றும் இடுப்பில் உடுத்துள்ள ஆடை இன்றைய வேட்டிபோல் தோற்றமளிக்கிறது என்றும்

கூறுகிறார். இன்றும் தென்பகுதி, கேரளா ஆகிய இடங்களில் வாழும் ஆண்கள் சட்டை அணியாத போது இவ்வாறான உடையிலேயே காட்சியளிக்கின்றனர் என்பதும் அனைவரும் அறிந்ததே. பெண்களின் உருவங்கள் வடிகா தோடிருப்பதும்[1] சிந்துவெளியில் குடியேறியவர்கள் குமரிக்கண்டத்து மக்களே என்பதைத் தெளிவுபடுத்தும்.

ஸ்காட் எல்லியட், ருஷ்ய ஆய்வாளர் அலெக்சாந்தர் கோந்தரதோவ் ஆகியோர் திராவிடர்களான தமிழர்களின் ஆதி இருப்பிடம் குமரிக்கண்டமே என்று நிலவியல் ஆய்வின் அடிப்படையில் கூறுகின்றனர். ஃபாதர் ஹீராஸ் மெடிட்டரேனியன் கலாச்சாரம் உள்ளிட்ட பல தொன்மையான கலாச்சாரங்கள் குமரிக் கண்டத்தில் ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களாலேயே ஏற்பட்டன என்று கூறுகிறார்.

ஐராவதம் மகாதேவன் எகிப்தில் மிகவும் பழமையான தமிழ் பிராமி எழுத்தைக் கண்டதாகவும், அதில் கண்ணன், சாத்தன் என்ற தமிழ்ப் பெயர்கள் கொல்லர்களைக் குறிப்பதாகப் பொறிக்கப்பட்டுள்ளதையும் குறிப்பிடுகிறார்.

செனகல் நாட்டில் தங்கி கள ஆய்வு, நடத்தும் வாய்ப்பைப் பெற்ற அறவாணனும் அவருடைய துணைவியார் தாயம்மாளும் ஆப்பிரிக்க மக்களின் பழக்க வழக்கங்கள், உறவு முறைகள், தமிழர்களை ஒத்திருப்பதைக் கண்டுள்ளனர். உரல், அவல், பாட்டி என்ற சொற்கள் ஆப்பிரிக்கா மொழியில் இருப்பதையும் மாரியம்மன் மோரிமோ என்ற பெண் தெய்வமாக அங்கே வணங்கப் பெறுவதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

பன்னெடுங் காலமாகக் குமரிக் கண்ட ஆய்வில் ஈடுபட்டு, பல மாநாடுகளை நடத்திய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் குமரிக் கண்டத்தில் 49 சிகரங்களைக் கொண்ட மலைத் தொடர்கள் இருந்தனவென்றும், மேருமலை இருந்ததாகவும் கூறுகிறார். அதோடு பொன்னும் மணியும் தோண்டியெடுக்க குமரிக் கண்டத்துப் பாண்டிய மன்னன் சீன நாட்டுத் தொழிலாளர்களைப்

பணிக்கு அமர்த்தினான் என்றும், அவர்கள் ஆழமான சுரங்கங்களுக்குள் வரிசையாகச் செல்லும் போது, மேலிருந்து பார்ப்போருக்கு அவர்கள் பொன் தோண்டும் எறும்புகளாகக் காட்சியளித்தனர். அவ்வாறே பெயரிட்டு அழைக்கப்பட்டனர் என்றும் கூறுகிறார்.

சோமசுந்தர பாரதியார், இராமச்சந்திர தீட்சிதர், பூரணலிங்கம் பிள்ளை, கணபதி ஸ்தபதி ஆகியோர் பன்னெடுங்காலமாகக் குமரிக் கண்டத்தின் பரப்பையும், நிலப்பிளவு ஏற்பட்டபோது அங்கிருந்த மக்கள் பல இடங்களில் குடியேறியதைப் பற்றியும் கூறியது எல்லாமே கற்பனை என்றால் யார் ஏற்றுக் கொள்வர்?

சிந்துவெளி நகர நாகரிகம், தமிழனுடையது என்றால் ஏன் தென்பகுதிகளில் இல்லை என்ற வினாவை ஜெயகரன் எழுப்புகிறார். இதே ஆய்வாளர் தூத்துக்குடி மாவட்டத்தில் சாத்தான் குளத்தில் காண்டாமிருகத்தின் மண்டை ஓட்டை அவரே கண்டெடுத்ததாகக் கூறுகிறார். அதுபோன்ற மண்டை ஓடுகள் ஏன் பிற இடங்களில் இல்லை என்று வினா தொடுப்பதை விட அகழ்வாராய்ச்சி செய்தால் கிடைக்கக்கூடும் என்று நாம் எண்ணுவதே சரியாகும். சிந்து சமவெளி நகர நாகரிகம் பற்றிய வினாவிற்கும் இப்பதில் பொருந்தும் அல்லவா?

ஐதராபாத்தில் இயங்கும் உயிர் மரபியல் ஆராய்ச்சி மையம் அந்தமானில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் பழங்குடி மக்கள் கேரளாவிலும், குஜராத்திலும் வாழும் பழங்குடி மக்களின் வழி வந்தவர்களே தவிர இதுவரை நம்பி வந்ததுபோல் ஆப்பிரிக்கா வம்சத்தின் வம்சா வழி அல்லர் என்று கூறுகிறது. தென் நிலப்பரப்பில் குமரி ஆறு ஓடியபோதும், குமரி மலை உயர்ந்திருந்த போதும், இமயமலை மிக வடக்கே கடலுக்கு அடியில் உறங்கியது. கண்டங்கள் பிளந்து நகர்ந்து ஒன்றோடொன்று மோதியபோது எழுந்தது இமயம். இன்றும் இமயத்தில் பல ஆ யிரம் அடி உயரத்தில் பனிப்பாறைகளுக்கு மத்தியில் மீனின் கற்படிகங்களும், சிப்பிகளும் தென்படுகின்றன.

ஆக, கடல் கோள்களால் தென்பகுதி மூழ்கியபோது இன்றைய கேரளா வரை 200 கிலோ மீட்டருக்கு கடல் உள்ளே வந்தது என்று 2002 ஆம் ஆண்டு அக்டோபர் இதழில் நிலவியல் ஆய்வு அமைப்பின் தலைவர் ராதாகிருஷ்ணன் எழுதியுள்ளார்.

குமரிக் கண்டம் இருந்தது நாகரிகத்தின் தொட்டிலாக திகழ்ந்தது. தமிழ்ச் சங்கங்களை மார்பில் ஏந்தி வளர்த்தது என்ற சிறப்புகளை நிறுவும் வகையில் துவாரகையைக் காண கடலாய்வு செய்தது போல், தென்புலத்தைக் காணவும் கடலாய்வு செய்ய மத்திய அரசு முன்வந்து உலகுக்கு உண்மையை உணர்த்த வேண்டும்.

குமரிக் கண்டம் கற்பனையன்று. உண்மை! நம் முன்னோரின் பிறப்பிடம் குமரிக் கண்டம்! விரிவான முறையில் கடலடி ஆய்வு நடத்தினால் குமரிக் கண்டத்தின் மறைந்துபோன வரலாறு வெளியே வரும் என்பது திண்மை."

– நன்றி, கன்னியாகுமரி வரலாற்றுப் பண்பாட்டு ஆய்வு மைய மாத இதழ்

இதற்கும் மேலாக இரண்டு வரலாற்று உண்மைகள் வெளி வந்திருக்கின்றன. யாதெனில், அலெக்ஸாண்டர் கொண்ட்ர டோவ் என்ற ரஷ்ய நாட்டு முதுபெரும் ஆய்வர் "Riddles of the three oceans" என்ற தலைப்பிட்ட நூலை எழுதியுள்ளர். ஆய்வறிஞர் களுக்கு நன்கு தெரிந்த நூல். Progress publishers, Moscow என்ற பதிப்பகம் வெளியிட்டது. 1974ல் அச்சேறிய நூல். ரஷிய மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்க்கப்பட்டது இந்த நூல். இதில் அந்த Lemunia காலத்தில் ஐந்தாவது வேதம் ஒன்று இருந்த செய்தி பதியப் பெற்றிருக்கிறது [பக்கம் 185 வரி 12].

இதற்கு முன்னர் எழுதிய ரஷ்யப் பதிப்பில் Atlant is civilization ஆனது திராவிட நாகரிகமே என்ற மூலச் செய்தி எழுதியிருப்பதை ஆங்கில மொழி பெயர்ப்பின் போது, யாரோ ஒருவரின் தலையீட்டின் காரணமாக ஆங்கிலப் பதிப்பில் வராது போயிற்றென ஒரு ரஷிய ஆய்வர் கண்டு அப்பகுதியலை எனக்கு

அனுப்புவதாகக் கடிதம் வந்துளது. அதிமுக்யத்வம் வாய்ந்த செய்தி இதுவன்றோ!

இந்த நிலையில் அருட்செல்வர் டாக்டர்.என்.மகாலிங்கம் அவர்கள் குமரிக்கண்ட ஆய்வுகளை உலகப் புகழ் வாய்ந்த ஆராய்ச்சியாளர் உதவியுடனும் இலக்கியச் சான்றுகளைக் கொண்டும் மிகப்பெரிய உண்மைகளை வெளிக்கொணர்ந்து குமரிக் கண்டம் இருந்ததை ருசுப்படுத்தியிருக்கிறார்கள். அண்மைக் காலத்தில் Astronomical dating என்ற விஞ்ஞான ரீதியான வரலாற்றுக் காலங்களை கணித்தறியச் செய்து அதையும் பரப்பி வருகிறார்கள். இப்பணியைச் செய்து வருபவரின் பெயர் திரு.இராமதுரை என்பதாகும். இப்பணிகளை ஒத்த பல ஆய்வு களைச் செய்திட International Association for investigation of ancient civilization என்ற ஓர் ஆய்வகத்தையும் நீண்ட நெடுங்காலம் நடத்தி வருகிறார்கள். [இதன் தலைமையகம் அமெரிக்க நாட்டில் கலிபோர்னியாவில் உள்ளது.] ஒருபாற்கோடா ஆய்வுகளாக அவை போற்றப்படுகின்றன. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகமும் சிறந்த ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறது. எனினும் பொதுமக்கட்கு அச் செய்திகள் வந்து சேரவில்லை. குமரிக் கண்ட ஆய்வர்கள் கருத்துக்களைத் தொகுத்து ஒரு நூல் வெளிவர வேண்டியது இப்போது அவசியமாகிறது. யார் செய்யப் போகிறார்கள்? இதனைத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்யலாமே! காலம் ஓடிக் கொண்டிருக்கிறது.

இதே நோக்கில் இத்தகைய பணியைத் தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை பூம்புகாரில் கடல் ஆய்வுகளைச் செய்தது. இதற்குத் தலைமை வகித்தவர் அன்று அத்துறையின் பொறுப்பு வாய்ந்த தலைவராக – இயக்குநராக இருந்தவர் திரு.நடனகாசிநாதன் என்ற புகழ் பெற்ற ஆய்வாளராவார். அவருடைய கருத்துக் களையும் இங்கே இணைத்து வைக்கிறேன். குமரிக்கண்ட கலாச்சாரம் எங்கெங்கு பரவியிருந்தது என்ற செய்திகளையும் அழகுபட எழுதியிருக்கிறார். ஆய்வர்கள் நோக்குவார்களாக.

"Since the evolution of the first human beings at Lemuria continent is believed to have proved with tangible evidence by the geologists and anthropologists, it is quite possible that all branches of arts also could have originated in this Kumarikkandam.

The language and the script first evolved in Kumarikkandam could have been in inarticulate and pictograph forms respectively. The human population which migrated from this continent due to the successive submersion of land could have carried this inarticulate language and the pictograph script with them to different parts of the world.

The people who remained in the remaining part of the continent after several submersions could have evolved a refined language known as Tamil language. In course of time they should have evolved from pictograph to ideograph and from ideograph to a standard script known as Tamil script.

The earliest available standard Tamil scripts assignable to 8th-7th century B.C. written on potsherds has been unearthed from Anurathapuram in Srilanka. Since Srilanka is believed to have been branched off from Kumarikkandam at the last phase ie. in the 3rd Millenium B.C., it has become possible to get there this well developed script. We get the earliest form of the standard Tamil script in Tamilnadu at Korkai which was also called as Kapadapuram recalling the ancient Kapadapuram where the Second Tamil Sangam had held.

Of the three crowned Kings, Pandyas appear to be the oldest rulers as their dynastic name appear to have been derived from Pandaiyar, old people. It appears that they were the first migrators to the northern border of Kumarikkandam. Hence they had written more number of inscriptions in standard script. Cheras could probably be the next group of migrators who later joined with the earlier group. Hence they appear to have been

called as Sernthar, which might have been shortened as Serar and later as Cherar.

The above facts appear to be the reasons why both Kingdoms have retained some of their ancestral customs which were prevalent in Kumarikkandam.

The most important factor which links Kumarikkandam with Harappan civilization is the religion. The only religion that could be ascertained from the artefacts of Harappan civilization is Hinduism especially Saivism. Harappan saivism could have originated only from Kumarikkandam. This is the obvious reason why Saiva saint Manikkavasakar eulogises Siva as living in the South. That South nadu could be the land beyond the present Kanyakumari. Dakshinamurthy aspect of Siva distinctly attributes Siva as the God worshipped in southern region ie., Kumarikkandam. The figure which is identified as Pasupati on Harappan seals copes with the South Indian style and the animals found around Siva are also delineated in typical South Indian workmanship. Other religious objects such Phalus, Yoni, Bull, the figure that represent Mother Goddess and Sapta Matrika and a figure seated on a branch of the tree relate to Saivism only which was the indigenous religion of Kumarikkandam.

Occurrence of Tamil words such as Togai, Ibam etc., in west Asian languages like Hebru and Greek clearly indicate the facts of the exodus of Kumarikkandam to the Western countries in the first Millennium of the Pre-Christian era.

Mathivanan identified the country of Dilmun as a country of Indian Ocean and the God Iya as Iyavul-Kadavul. Murukan is called as Iyavul in Thirumurugarruppadai. The name of the God Iya prompts me to equate with our Goddess 'aiyai' which means Chief Woman or Kali, probably the Mother Goddess. Because the Tamil literature refers to mother Goddess as Palaiyol and Mudiyol suggesting her existence and worship in ancient period

most probably in Kumarikkandam. Continuity of Mother Goddess worship even in later periods has been attested by the discovery of Mother goddess figure assignable to 7th century B.C from Adicanallur of Tirunelveli District and the existence of number of Bhagavathi temples in Kerala from the beginning of the historical period.

It is well known that the Harappans were the great masters in fine arts such as clay, moulding, casting bronzes, producing stone sculptures, painting on potteries and constructing buildings. Music and dance should also be known to them as a few fascinating dancing figures have been unearthed. Above all they were highly educative in Arithmatics and Literature. How did they get this mastership on all these arts and literature? Did they develop themselves? Or did they learn from somebody? The possible answer to the above questions is that they themselves were great masters and they owed this knowledge to their ancestors who lived in Kumarikkandam. The people of Kumarikkandam seem to have been familiar with Agamas which describe the rules and regulations on all the above arts and should have been in existence during the First or Second Tamil Meet. The Mandira mountain where from Agamas are said to have told by Lord Shiva could be one of several mountains being referred to as "Panmalai" in Kumarikkandam. Someone can argue that the Harappans could have learnt these things from Sumerian civilization. But it could not be possible as the style and workmanship of the sculptures and bronzes are purely different and are close to the style of South Indian.

Thus Kumarikkandam was the place where language, script, art, architecture and religion had originated and spread to the different parts of the world including Harappan region. Hence a considerable number of artefacts that are similar to Harappan objects are being discovered now-a-days in Tamilnadu especially in the Southern most part of it and in Srilanka".

மயன்–மாயன் நாகரிகம்

இதற்கிடையில், ஸ்தபதியாகிய நான் மெக்ஸிகோவுக்குச் சென்று மாயன் கட்டிடக்கலையை ஆய்வு செய்திட்டேன். பதினைந்து நாட்கள் தங்கி பிரமிடுகள், வீடுகள், நாகரிகச் சின்னங்களைக் காட்டும் மியூசியங்கள் பலவற்றைப் பார்த்தேன். இந்தியரின் தொல்பழம் நாகரிகங்கள், அவர்தம் கட்டிடங்களில் எதிரொலிப்பதைக் கண்டேன். இந்திய மாயர்களாகிய விசுவகர்மர்கள் ஒழுகிய கட்டிட இலக்கணங்கள், அமைப்புக்கள் ஒத்துப் போவதைக் கண்டு பல அறிஞர் முன்னிலையில் சொற்பொழிவுகளும் செய்தேன். 'Hinduism Today' என்ற அமெரிக்க மாத இதழிலும் அதன் சாரம் வந்திருக்கின்றது. 'Sthapati's visit to Maayan Land' என்ற monograph ஒன்றும் எழுதி அமெரிக்காவில் வெளிவந்தது. மயன் கலாச்சாரமும் மாயன் கலாச்சாரமும் ஒன்றே என்று நிறுவினேன். இதனை ஆச்சரியத்துடன் வரவேற்றதோடு, மாயன் கலாச்சாரத்தை நீண்ட கால ஆராய்ச்சி செய்த ஓர் அமெரிக்கர் எனக்குப் பாராட்டுச் செய்தியையும் மறைக்காது எழுதி அனுப்பினார். அது பின் வருமாறு: "After perusing the accompanying article one researcher, by name Mr.Lt.Lawrance Frego, USNR (RET), #3, Coral Coisk, 26, Augustine, 82-3204, has appreciated the discoveries of the Sthapati in the following words" : **"Your discoveries are quite incredible! In the 20 years I have been studying South America, you are the first to offer proof of the connection between India and South and Central America."** என்னை மேல்நிலை ஆராய்ச்சி செய்திட அழைப்பும் விடுத்தார். வயது முதிர்ந்த நிலையில் அவரோடு இணைந்து செயல்பட இயலவில்லை.

தமிழ்நாடு அரசின் அரிய வெளியீடு

இந்த நிலையில் 1986-ம் ஆண்டு தமிழக அரசு ஐந்திறம் என்ற ஒரு தொல்பழம் இலக்கண நூலை வெளியிட்டது. மதுரையில் அந்நேரத்தில் உலகத் தமிழறிஞர்கள் குழுமியிருந்தனர்.

ஐந்திறத்தை மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் அங்கே வெளியிட்டு, தமிழர்தம் தொல்மரபையும் பண்பாட்டையும் வளப்படுத்திட வேண்டவும் செய்தார்கள். அதற்குப் பிறகு 17 ஆண்டுகள் சென்றிட்டாலும் அந்த இலக்கண நூலின் கருத்துக்கள் வெளிப்படாமல் அப்படியே கிடக்கின்றன. காரணம் அந்த ஐந்திறம் ஒரு விஞ்ஞான நூலாகவே இருந்ததாகும். [அஃது ஒரு cosmological science ஆகவும் இருக்கிறது.]

மொழி இலக்கணத்திற்கு ஆதார விஞ்ஞானம் ஐந்திறம்

ஐந்திறம் என்ற இலக்கண நூல் தொல்காப்பியத்திற்கு ஆதார நூல் என்பதை தொல்காப்பியப்பாயிரத்தில் கண்டு, நூலுக்குள் நுழைந்த போது வாஸ்து சாஸ்திரத்துக்கும் ஆதார நூல் அதாவது ஆதார விஞ்ஞான நூல் ஐந்திறமே என்று தெரியலானேன். ஒரு சில அறிஞர்கள் சமஸ்கிருத இலக்கணமாகிய அஷ்டாத்யாயிக்கும் இந்த ஐந்திறமே ஆதாரநூல் என்றுச் சொல்லி இருக்கிறார்கள். நீங்களும் ஆய்வு செய்து உண்மையை வெளிக் கொணரலாமே! இதனை நிறுவியர் Dr.A.C.Burnel என்பவர் ஆவர். இவர் தஞ்சையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தஞ்சை நூல் நிலையத்தில் தங்கி அனைத்து இலக்கண நூல்களையும் துருவி ஆராய்ந்து அவற்றை ஒரு நூலாகவே 1986ல் எழுதியது என்னிடம் உளது. நூலைக் கொடுக்க மாட்டேன் நேரில் வந்து பாருங்கள்.

ஐந்திறமும், ஐந்தமிழும்

இன்னும் சொல்லப்போனால், இயல், இசை, நடம், கட்டிடம், சிற்பம் ஆகிய ஐந்தமிழுக்கும் அடிப்படையான விஞ்ஞான நூல் இந்த ஐந்திறம் என்பதைக் காண முடிந்தது. இறுதியாக, இந்த நூல் பிரபஞ்ச மூலத்தின் இயல்பு பற்றிய அபூர்வ விஞ்ஞானமாகத் தொடங்கி அதிலிருந்து வெளிப்படும் மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்ற ஐந்து பிரபஞ்ச மூலங்களின் ஆற்றல்களின் விஞ்ஞானச் செயல்பாடுகளை (dynamics) சூத்திரப்படுத்திய நூல் என்றும் விளக்கமுற்றது. இதனை விரிவாகப் பேசும் ஒரு நூலும்

இப்போது வெளிப்பட்டுளது. இதன் பெயர்தான் பிரணவ வேதம் எனப்படுகிறது. இந்த வேதம் தமிழகச் சிற்பியர் வேதமெனத் தொன்றுதொட்டு சொல்லி வந்த நிலையில், ஸ்ரீமத் பாகவதம் இதன் தொன்மையை கீழ்க்கண்ட சுலோகத்தின் மூலம் உறுதி செய்து விட்டதெனலாம்.

"एक एव पुरा वेदः प्रणवः सर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्यः एको अग्निर्वर्ण एवच ॥"

முன்னொரு காலத்தில் பிரணவ வேதம் என்ற ஒருவேதம் இருந்தது. தேவன் நாராயணன் எப்படி ஒருவனோ, அக்னி உலகெங்கும் எப்படி ஒன்றோ, மனித ஜாதி எங்ஙனம் ஒன்றோ அதுபோல ஒளிமயமான பிரணவம் என்ற வேதமும் ஒன்றே என்பது பொருள். சுருங்கச் சொன்னால் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமூலரின் திருமந்திரம் போல வேதமும் ஒன்றே என்பது பொருள். நான்கு வேதங்களைத் தொகுத்தளித்த வேத வியாசனின் கூற்று அஃதாகும். இந்த இரண்டு வரிகள் சொல்லொணா முக்கியத்துவம் வாய்ந்ததன்றோ?

இந்த வேதமானது ஓம் மறை என்றும் சொல்லப்படுகிறது. பத்தாயிரத்துக்கும்மேற்பட்ட விஞ்ஞானப் பாக்கள் கொண்ட இவ் வேதத்தின் முதல் ஆயிரம் பாக்கள் இப்போது வெளிப்படுகிறது. எஞ்சியவை அடுத்தடுத்து வெளிவரும்.

என்னிடம் சிற்பச்சித்தன் மயனுடைய வரலாறு கூறும் நூல் ஒன்று முளது. அதில் வரலாற்றுச் செய்திகள் நிரம்ப வருகின்றன. கல்வெட்டை விட உறுதியான தடயமாக இதனை ஏற்றால் குமரிக் கண்டச் செய்திகள் - இதுவரை இன்றைய தமிழ்த்துறை ஆய்வறிஞர் சொல்லியதெல்லாம் உண்மையே என்பது தெரிய வருவதோடு, மேலும் பல சான்றுகளும் கிடைத்துவிட்டதைக் காணலாம். இந்த வரலாற்று நூலையும் ஆண்டு 2003ல் வெளியிட்டு உள்ளேன். இதனை மயனுடைய சீடர்கள் வரைந்ததாகப் பரம்பரைச் சிற்பிகள் கூறுவர். கைவசமுள்ள 1213 வரலாற்றுப் பாடல்களில் ஒருசில பின்வருமாறு:

குமரிக்கண்ட அமைப்பு - பாண்டியன் ஆட்சி - சிற்பத்தின் மாட்சி

பற்பல மலைகள் சூழ்ந்து
பற்பல நதிகள் ஓங்கி
பற்பல வனங்களாலே
பேரெழில் விளங்கி நிற்கும்
அற்புதக் குமரி மண்ணில்
அருந்தமிழ் சிற்பமாட்சி
கொற்றவன் வீர வாளான்
பாண்டியன் ஆட்சி யன்றோ பாடல் - 680

குமரிநாடு - கன்னி நாடு பற்றி:

பெருமலை ஒருபுறத்தே
திருமலை மறுபுறத்தே
பெருங்கடல் ஒருபுறத்தே
இருங்கடல் மறுபுறத்தே
திருவுறச் சூழ்ந்த தாலே
செழுவளம் கெழுமிச்சூழ
ஒருபெரும் கன்னி நாடு
குமரிநா டெனஉரைத்தார் பாடல் - 864

கன்னித்தீவு - ஒளிவவர் தேயம்:

ஒருபெரும் கன்னி நாடு
ஒப்பிலாத் தீவு மாகி
ஒருபெரும் கன்னி நாடு
ஒளிவளர் தேயமாகி
ஒருபெரும் கன்னி நாடு
உலப்பில்சீர் பெருமை ஓங்கி
ஒருபெரும் கன்னி நாடு
உயர்வுற வளர்ந்த தன்றே பாடல் - 865

இது போல் நிரம்ப குமரிக்கண்டச் செய்திகள் உள. தனித்து வந்திட்ட வரலாற்று நூலில் அவற்றைக் காணலாம். எதிர்வரும் பத்திகளில் மேலே குறிப்பிட்ட பல செய்திகள் இடத்திற்கேற்ப மீண்டும் மீண்டும் வரும். அவை தேவை என்பதால் கூறியதுகூறல் என்ற குற்றத்திலிருந்து என்னை விடுவித்து விடுங்கள்!

இந்தப் பின்னணி தெரியாதோர் பிரணவ வேதத்தைப் படிக்க நேர்ந்தால் - விஞ்ஞானமாக இருப்பதால் - மயக்கமே ஏற்பட்டு விடும். ஆனால் செய்திகள் அனைத்தும் உண்மையே. நான் இத்துறையில் நீண்ட கால ஆய்வு செய்தவன்.

இந்தியக் கலாச்சார இரட்டை மரபுகள்

இந்தியாவின், குறிப்பாகத் தென்னகத்தின் உண்மை வரலாறு, நாகரிகம் மற்றும் பண்பாடு, சம்ஸ்கிருத இலக்கியங்களில் மிகுவாகவே காணப்படுகின்றன. இஃது இன்றைய ஆய்வறிஞர்தம் கருத்து. [எனது கருத்தும் இதுவே] இதற்குப் பெருஞ் சான்றாக விளங்கும் கலாச்சார மரபுகள் இரண்டு என்பர். ஒன்று வாஸ்து மரபு, பிறிதொன்று ஆகம மரபு ஆகும். இவ்விரண்டு மரபுகளும் மிக மிகப் பழமையானவை. இவற்றின் தொன்மையையும் மேன்மையையும் இன்னும் ஆராய்ச்சி உலகம் ஒரு சிறிதும் புரிந்து கொள்ள முற்படவில்லை. இவ்விரண்டில். தான் இந்திய கலாச்சாரத்தின் மற்றும் உலகக் கலாச்சாரத்தின் வேர்களும், விழுதுகளும், காய்களும், கனிகளும் அடங்கிக் கிடக்கின்றன. இருப்பினும், இக்கருத்தில் குழப்பம் ஒன்று தொன்று தொட்டே இருந்து வருகின்றது. எதுவெனில், இவ்விரண்டும் மொழி சார்ந்த மரபுகள். ஒன்று தமிழ் சார்ந்தது என்றும், பிறிதொன்று சம்ஸ்கிருதம் சார்ந்தது என்றும் சொல்லப்பட்டு வருகிறது. **இரண்டு மொழிகளும் ஒரு மூலத்திலிருந்து கிளர்ந்த ஒரே இடத்தில் பிறந்த – ஒரே மண்ணில் முளைத்த – இரட்டை மொழிகளாகவே ஒருபாற்கோடா ஆய்வுகள் காட்டும்.** ஆனால் தமிழ் மொழியையும் சம்ஸ்கிருத மொழியையும் நம்மவர் பிரித்து வைத்து, வேறுபடுத்திப் பேசி வந்ததும் அதற்குப் பலர் தலை யசைத்து வந்ததுமே பெருங்காரணம் எனத் தெரிய வருகிறது. இந்தப் பிரிவினை வாதத்தில் மொழி இலக்கண ஆசிரியர் தம் பங்களிப்பு நிரம்ப உளது. இரண்டையும் ஒட்டி வைத்துப் பேசியவர்களைக் காணவே முடியவில்லை. எதை வைத்துப் பேசுவது என்பது அவர்களுக்குத் தெரியவில்லையோ? இதனால், இந்திய நாட்டின் தொல் பெரும் வரலாறு தலைகீழாக வரையப் பட்டிருப்பதாக ஒரு தோற்றம் தரும் நிலை ஏற்பட்டு விட்டது. இஃது இன்றும் தொடர்கிறது. மேலாய்வு செய்திடுக.

கலாச்சாரத்தில் குழப்பமும், மயக்கமும்

இதையொட்டிய வாதப்பிரதிவாதங்கள், கருத்து வேற்றுமைகள், சண்டை சச்சரவுகள் நீண்ட காலமாகவே இருந்தும் வருகின்றன. இவையெல்லாம் ஒரு காலத்தில் மறைவதும் மீண்டும் தோன்றுவதுமாக நிகழ்ந்து கொண்டே வந்ததையும் அன்றும் இன்றும் வரலாற்றில் காண்கிறோம். இவற்றுக் கிடையில் மூன்றாவதாக ஒரு மொழியும் [ஆங்கிலம்] அம்மொழி வழிப்பட்ட கலாச்சாரமும் தலையிட்டு மேலோங்கி நமது இரண்டு கலாச்சாரங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வருகிறது. அதுமட்டுமல்ல எல்லோரையும் வெகுவாக ஈர்த்து விட்டதெனவும் சொல்லலாம். என்றாலும், இந்நிலை மாறி வருவதின் காரணம் மொழி மட்டுமல்ல, மொழிக்கு ஆதாரமான விஞ்ஞானம் ஐந்திறம் என்று இப்போது தான் தெரியவருகிறது. விஞ்ஞானம் தெரியா நிலையில் நமது வேத, ஆகம, வாஸ்து மரபுகள் மயங்கியும் மருண்டும், பிரண்டும் நிற்கின்றன. இதனால், ஏமாற்றங்கள்,மன மாற்றங்கள், மத மாற்றங்கள் என்ற பெயரில் ஒரே குழப்ப நிலை நிலவி வருகிறது. அறிவு வளர்ந்திட்ட இக்காலக்கட்டத்தில் இந்த நிலை ஏற்படலாமாவென நல்லெண்ணெம் கொண்ட அறிஞர் பலர் சொல்லி விசனிக்கின்றனர். கண்ணீர் சிந்துகின்றனர். இக்கூட்டத்தில் நானும் ஒருவனே.

கலாச்சார மூலங்களை ஆய்தல்

இப்போது, இம்மூன்று மொழிகளும் அவை வளர்த்து விட்ட கலாச்சார மரபுகளும் தத்தம் மூலங்களை ஆய்வு செய்திட முற்பட்டு வரலாற்றுக் காலத்தையும், அதற்கு முற்பட்ட உலகத் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றிய வரலாற்றையும் ஆராய்ந்து வருகிறார்கள். இத்தகைய ஆய்வுகள் இப்போது விரைப் பெய்தியுள்ளன எனலாம். ஆக, கலாச்சாரக் கூறுகளை ஆயத் தொடங்கி, மொழி ஆராய்சிக்கு வந்தடைந்து, ஆய்வு உணர்வுகள் சூடாகி, அதனால் பிரபஞ்ச மூலத்தையே ஆராயத் தொடங்கி விட்டனர் எனலாம். இதில் மேலை நாட்டினர் துடிப்புடன் இருக்கிறார்கள். இந்த நிலையில்,

மாந்தர் இனம் என்பது ஒன்றுதான், பரம்பொருள் என்பது ஒன்று தான், பல அல்ல என்ற கருத்து ஒன்று இதற்கிடையில் முகிழ்ந்து அது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுமிருக்கிறது. இஃதொரு வரவேற்புக்குரிய குறிப்பே எனலாம். இதற்கு இந்தியத் துணைக்கண்டம் இந்நாளில் ஆய்வுக்களமாக விளங்குகிறது. தொட்ட இடம் நல்ல இடமே, நல்ல காலமே. நல்லது விளைவது நிச்சயமே.

மொழி வழிப்பட்ட வாஸ்து ஆகம மரபுகள்

என்றாலும், இந்த நிலையில் பாரத நாட்டில் மொழிவழிப்பட்ட பண்டை நாகரிகமும், பண்பாடும் கடந்த 300 ஆண்டுகளாகத் தீவிர ஆய்வுக்கு உட்பட்டுப் பல்வேறு கருத்துக்கள் அன்றாடம் வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றன. இதன் விளைவால், பிரபஞ்சத் தோற்றமும், அத்தோற்றத்தின் மூலமும் கடுமையான ஆய்வுக்குட்பட்டுவிட்டது. இந்த ஆய்வுகளுக்குத் தமிழும், சம்ஸ்கிருதமும் தலையாய ஆய்வுப் பொருள்களாக உலகக் கண்களில் பட்டுவிட்டன. இதற்கான மூலநூல்கள், இலக்கண நூல்கள், இலக்கண வயப்பட்ட material substances & form ஆய்வுப் பொருள்களாக விளங்குகின்றன. இந்த நிலையில், இந்தியாவைப் பொருத்தவரை ஆழ்ந்த ஆய்வுக்கு உட்படுத்தப்படாமல் ஒதுங்கியும் பதுங்கியும் ஒதுக்கப்பட்டும் நீண்ட காலம் கிடந்து விட்ட சாஸ்திரங்கள் **வாஸ்து** மற்றும் **ஆகமம்** என்று சொன்னால் மிகையல்ல. இவைதான் இன்றைய ஆய்வுப் பொருள்கள். இஃது உலகளவிலான ஆய்வாக இன்று விளங்குகிறது. இதற்கு இன்று மூலப் பொருளாக எடுத்தாளப்படுவது மொழி வரலாறும் **கட்டிடக் கலை** வரலாறும் எனலாம். காரணம், Architecture is the matrix of civilisation என்றார் பேராசிரியர் Percy Brown. உண்மையே. மொழியைப் பார்த்து விட்டுப் பிறகு கட்டிடக் கலைக்குத் திரும்புவோம்.

தமிழும் சம்ஸ்கிருதமும் ஒரு மூலத்தின் இரு கிளைகள்

இதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மொழிகள் இரண்டெனச் சொன்னேன். ஒன்று தமிழ். பிறிதொன்று சம்ஸ்கிருதம். இரண்டும்

தொல்பழம் மொழிகளே. இந்திய நாட்டின் வடக்கிற்கு சம்ஸ்கிருதமும் தெற்கிற்குத் தமிழும் உரியன என்ற நிலை ஒரு காலத்தில் தோன்றி இன்றளவும் வாதப் பிரதிவாதங்கள் இதற்கிடையே இருந்து வருகின்றன. என்றாலும், இரண்டும் ஒன்றே அல்லது இரண்டும் ஒரு மூலத்தின் – ஒரு முளையின் – இரு கிளைகள் என உறுதி செய்திட முற்பட்ட காலம் நிகழ்காலம் எனலாம். இப்போது இதுவே சரி எனச் சொல்லத் தோன்றுகிறது. காரணம், ஒரு காலத்தில் படித்துப் பட்டம் பெற்றிட்ட ஆய்வர்கள் குறைவே. இப்போது, எல்லோரும் கல்வி மற்றும் அறிவியல் ஞானம் பெற்று ஆய்வு செய்திடும் நிலைக்கு உயர்ந்து விட்டனர். கல்வெட்டுச் சான்றுகள், பிற சின்னங்கள் post historic period ஐச் சார்ந்தே உள்ளன. இவை இந்தியனைச் சிறுத்தே காட்டி வந்தன. பண்டை இலக்கியச் சான்றுகளைப் பெரும்பாலும் ஒதுக்கியே வைத்து விட்டனர். இஃதொரு பெரும் தவறு எனலாம். இதற்குள்ளேதான் உண்மையான இந்தியன் – தமிழன் – வாழ்கிறான் என்பேன். புதிய ஆய்வுத் தடயங்கள் ஏற்பட்டு விட்டன. இந்திய இலக்கியங்களைப் பொருத்தவரையில் இதற்கு அடிப்படையாக வைத்துப் பேசப்படத்தக்க பொருள்களாக இப்போது **ஆகமம்** மற்றும் **வாஸ்து** தலை தூக்கி நிற்கின்றன என்று மீண்டும் சொல்கிறேன். இவை **இரண்டும் மத நூல்கள் அல்ல.** இரண்டும் **விஞ்ஞான நூல்கவே.** அவை ஆத்ம விஞ்ஞான நூல்கள் என்று கண்டு விட்டார்கள். (विज्ञानं ब्रह्म) எனவே, அவை இரண்டும் உயிர்ப்புள்ள மரபுகளாய் இன்றும் விளங்குகின்றன. இவற்றின் சொந்தக்காரர்களும் நேரடியாக அணுகப்படுகிறார்கள். பழம் செய்திகளை முதலில் ஆய்வு செய்கிறார்கள். நாமும் இப்போதுதான் முனைப்புடன் செயல்பட முற்பட்டிருக்கிறோம்.

மொழி மரபும் மூலமும்

மொழிகளை நீக்கி மொழியின் மூலத்திற்கு இப்போது வந்திருக்கிறோம். அதாவது, சப்தப் பிரம்மத்தையே விஞ்ஞான

அடிப்படையில் ஆய்ந்திடத் தலைப்பட்டிருக்கிறோம்[1]. இதனைச் சமயப் பொருள் பற்றிய ஆராய்ச்சித் துறையில் நிகழ்ந்து வரும் புரட்சி என்று கூடச் சொல்லலாம். இஃது உண்மையே. காரணம், **இந்து சமயமானது தனி மனிதனைக் கடவுளாகக் கொள்ளாமல் கண்களுக்குப் புலப்படாத ஒரு நுண் பொருளைக் கடவுளெனக் கொண்டு விஞ்ஞான மூளையால் மனித வடிவங் கொடுத்து, இடம் அமைத்து, வணங்கி, வழிபட்டு வருகிறது.** சிற்பக் கலையின் சிறப்பே[2] இங்கே தான் உளது. சிற்ப விஞ்ஞானம் தான் – உளவியல் அல்லது ஆன்ம விஞ்ஞானமாகும். தனி மனித வழிபாடு இந்து சமயத்தில் இல்லை. ஆனால் அதற்கு மரியாதை உண்டு; கொண்டாட்டம் உண்டு. அவ்வளவுதான்.

இந்து சமயம் ஓர் அதிசய விஞ்ஞான சமயம்

இந்து சமயம் ஒரு விஞ்ஞானச் சமயமா என்ற கேள்வி இன்று மேல்நிலை ஆராய்ச்சிக்கு உட்பட்டு விட்டது. இது நல்லதே. எனவே, கடவுள் எனும் நுண்பொருளானது ஒரு விஞ்ஞானப் பொருள் (scientific substance)[3] என உற்றறியத் தலைப் பட்டிருக்கிறார்கள். இதனால் இந்து சமயமானது விஞ்ஞான சமயம் என உறுதி செய்திடத் தெளிவான சான்றுகளும் கிடைத்து வருகின்றன. எனவே இந்து சமயம் உலகப் பொதுச் சமயமாகக் கொள்ளத் தகுதிகள் பல இயல்பாகவே வாய்க்கப் பெற்றிருக்கின்ற தாகத் துணிந்துக் கூறலாம். இந்திய நாட்டின் – சிறப்பாகத் தென்னகத்தின் தொல் மரபுகளின் சிறப்பே இங்கேதான் அடங்கியும் அமர்ந்தும் கிடக்கிறது. ஆனால், இதற்கிடையில் அறியாமைகள்,

---

1. சப்தப் பிரம்மத்தை அறிந்தோனே பரப் பிரம்மத்தை [அர்த்தப் பிரம்மம்] அறிந்தவனாவன் என்று பேசுகிறது ஒரு உபநிஷதம். द्वे ब्रह्मणी वेदितव्ये शब्द ब्रह्म परं च यत् । शब्द ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधिगच्छति ॥
2. विज्ञानं शिल्पकौशल्यं ॥ जगत् सर्वं शिल्पमेव भवति ॥ ஞாலப் பொருள்கள் அனைத்தும் சிற்பமே. [சில்பவித்யாரகஸ்யோபநிஷத்]. விரிவை ஸ்தபதியின் "கடவுளைப் படைத்தவன் யார்?" என்ற நூலில் காண்க. ஆங்கிலப் பிரதியும் உண்டு.
3. सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव परमेष्टिनः वपुः ॥ [அகஸ்தியசகளாதிகாரம்] பரம புருஷனின் உடம்பானது, சகளம் [உறுப்புக்களுடைய உருவம்] அருவம் [உடல் தரித்த உயிர்] இரண்டு முடையது [மிஸ்ரம்] என இந்த நூல் பகர்கிறது.

சுய நல உணர்வுகள் இதற்குள் புகுந்து பல்கி விட்டன. புதுப்புது மதச்சடங்குகள் தோன்றி கேள்விக் குறிகள் மலிந்து விட்டன. இதனால், ஆன்ம விஞ்ஞானம் (Spiritual Science) மறைவுற்றுப் போயிற்று. இக்கருத்து, கொள்கை புரியாத நிலையில், மூட நம்பிக்கைகள் முன்பை விட இப்போது மிகுந்து விட்டன எனலாம். மதப்பிரச்சாரங்கள் செய்தோர் விஞ்ஞானி களாகவோ, technical people ஆகவோ இதுவரை இல்லை. இதனால் கதைகளின் மற்றும் மதச்சடங்குகளின் ஆரவாரம்[1], பகட்டு, செலவு ஆகியவற்றைக் குறைத்து விஞ்ஞான நெறிமுறைகளை விளக்கி, உளவியலை, உளப்பக்குவத்தைப் பெருக்கிட முயற்சி செய்திட வேண்டும் எனக் கருதுகிறார்கள். இதற்கு ஏற்ற காலம் நிகழ்காலம்தான். உண்மைப் பக்தியுணர்வை - அன்பு நெறியை - வளர்த்திட வேண்டும். மூலப்பொருளான ஆன்மாவோடு நெருக்கம் கொள்வதே அன்புணர்வு/பக்தி[2] எனப்படும். இதனை இந்திய விஞ்ஞானம் சாதித்திட முடியும். ஏற்கனவே சாதித்திருந்தது. இந்த நிலையில் மேலை விஞ்ஞானம் நமது இந்தக் கருத்தை மேலும் இப்போது உறுதி செய்து கொள்ள உதவிடும். பக்தி என்றதொரு போலித்தனமான வெறியுணர்வு இந்து சமயத்தில் ஆதிக்கமே செலுத்தி வந்து விட்டது. இத்தகைய நிலைக்கு மதச் சடங்குகள் நம்மைத்தள்ளி விட்டன என்று ஆய்வர் பேசி வருகின்றனர்.

வாஸ்துவே சமயப் பொருள்

பக்தியுணர்வு தனிப்பட்டோர் சொத்து அல்ல. மாந்தர் இனத்துக்குப் பொதுச் சொத்தாக ஆக்கமுற்ற மரபுகள்தான் வாஸ்துவும் ஆகமமுமாக விளக்கமுற்றிருப்பதை இப்போது படித்தோர் பேசி வருகின்றனர். இந்த நிலையில், வாஸ்துவே ஒரு

---

1. **“Religion without science is lame”** என்றான் பேராசிரியன் ஐன்ஸ்டீன். அதே நேரத்தில் **“Science without religion is blind”** என்றும் திறந்த மனதோடு சொன்னான். இதன் விளைவுதான் $E=mc^2$ என்ற சூத்திரமாக வெளிப்பட்டு இன்று உறுதிபெற்று நிற்கிறது.

2. ‘பதி பக்தியும் தேச பக்தியும்’ இதோடு ஒப்பிடத்தக்கனவாம்.

சமயமாக விளங்குவதையும் சிற்பிகள் சொல்லி வருகின்றனர்[1]. இதற்குப் பழைய பெயர் **வாஸ்து சமயம்** என்பதாகும். **கோயிற் சமயம்** என்ற சிறப்புப் பெயர் ஒன்றும் உண்டு. கோயிலையே வழிபடு பொருளாகக் கொண்டதே கோயிற் சமயம்[2]. இங்கே மனிதனோ பிறிதொரு உருவமோ இல்லை. இஃது அருவ வழிபாடு என்றும், ஆகாஸ வழிபாடு என்றும் சொல்லப்படும். இதுதான் சிதம்பரத்தில் நிகழும் வழிபாடு. இதுவே சிதம்பர இரகசியம் எனப்பட்டது. பெருங்கோவில் என்ற பெயரை முதன் முதலில் பெற்று விட்டது இக்கோவிலே. இக்கோவில் அடக்கம் கொண்டுள்ள வாஸ்து விஞ்ஞானத் தத்துவத்தின் [அருவ வழிபாடு] extended form நீட்சியே – வஸ்துவே வாஸ்துவாக – உருவ வழிபாடாக ஸ்ரீரங்கத்தில் உருப்பெற்றுளது. அதுவும் இதனால் பெருங்கோயில் எனப்படுவதாயிற்று. இதையுணர்ந்து நன்கு நெறிப்படுத்தப்பட்ட மரபுகளிலே கலப்படத்திற்கு இடம் கொடுத்திடலாகாது. உண்மைப் பயன் கருதி அயல் நெறி சாராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் இதைச் சாதிக்கும் துணிவு, ஆற்றல், விஞ்ஞான விசாரணைக்குத்தான் உண்டு. நீங்களும் முயற்சி செய்து பார்க்கலாமே.

வேதங்கள் நான்கு மட்டுமல்ல – வேதங்கள் பல – இவை எங்கே பிறந்தன?

மகாராஷ்டிர மாநில எழுத்துரு ஆராய்ச்சி வல்லுநர் லிபிகார் பத்மஸ்ரீ வாகங்கர் என்ற பேரறிஞர், **நான்கு வேதங்களின் பிறப்பிடத்தைக் கூறுமிடத்து, “நான்கு வேதங்கள் கோதாவரி [மற்றும் காவிரி] நதிக்கரையில் பிறந்தவை”** என்று கூறுவதை விஞ்ஞான ரீதியாக எவரும் ஆராய்ந்து உண்மை காண முயலவில்லையே. இதற்கு வேதகாலத்திற்கு முற்பட்ட

---

1. இதனை உறுதி செய்திட - प्रासादं पुरुषं मत्वा पूजयेत् मन्त्र वित्तमः ॥ திருக்கோயில் கட்டிடமே இறைவனின் வடிவமாக – இறையின் இலக்கண வடிவமாக உளதால் கட்டிடத்தை மந்திரம் சொல்லிப் பூசித்தல் வேண்டும் என்பது இதன் பொருள்.
2. சிவம் என்ற பொருளை மையமாகக் கொண்டது சைவ சமயம் என்பது போல என்க.

ஜம்பூத்வீப [நாவலந்தீவு] கால நிலை தெரிந்திடல் வேண்டும். அங்கு நடந்த prehistoric events பற்றித் தெரிந்திருக்க வேண்டும். இதே போல்தான் துவாரகை, மொகஞ்சதாரோ[1], கபாடபுரம் ஆகியவை எவராலும் அறுதியிட்டு உறுதி செய்திட முடியவில்லை. சரஸ்வதி நதிக்கரை நாகரிகமும் இப்போது தெரிய வந்துளது. மொழி ஆராய்ச்சி வல்லுநர்களாகிய டாக்டர் குமரி அனந்தன், டாக்டர் R.கண்ணன், நாகர்கோயில் டாக்டர் S.பத்மநாபன், டாக்டர் மதிவாணன், டாக்டர் ஐராவதம் மகாதேவன், டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம், டாக்டர் வி.ஐ.சுப்ரமணியம் ஆகியோரின் கண்டுபிடிப்புகளை ஒரு சேரக் கொண்டு வந்து கடுமையான, விஞ்ஞான ரீதியான (scientific investigation) ஆராய்ச்சி செய்திட, தமிழ்நாடு அரசு ஓர் உச்ச ஆய்வுக் கழகத்தை சிறிய அளவில் அல்லது ஒருவாரக் கருத்தரங்கு ஒன்றை நிறுவி உண்மை காண முயல வேண்டும். அவர்தம் ஆராய்ச்சிகள் தனித்தனியே கிடக்கின்றன. Consolidate ஆகவில்லை. அதோடு கிரந்தம், பிராகிருதம், சம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளின் விஞ்ஞான அடிப்படையையும், வாஸ்து ஆகம இலக்கணங்களையும் ஆய்தல் இன்றியமையாததாகும். இதுபற்றி, செய்திகள் தந்திட வாஸ்து ஆகமப் பண்டிதர்களும், தொழில்நுட்ப வல்லுநர்களும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். **தமிழ்மொழியின் தொன்மை பற்றி ஆய்ந்திட "ஐந்திரமும் பிரணவ வேதமும்[2]" எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.** இவையிரண்டும் மொழி மூலங்களாகிற ஒளி, ஒலி பற்றி தெளிவுறப் பேசும் நூல்கள் என்க.

ஓர் இனத்தின் வரலாறு அவ்வினம் வளர்த்திட்ட கட்டிடக் கலையில் மையமிட்டுக் கிடக்கிறது. அதாவது நாகரிகத்தின் கரு, கட்டிடக் கலை என்பது Percy Brown என்ற கலைத் துறைப் பேராசிரியர் கண்ட தெளிவாகும். 'Architecture is matrix of

---

1. மறைந்சதரை என்கிறார் துரிசைக்கிழார். மயன்சதரை என்கிறார் ஒரு கேரள ஆய்வர்.
2. சங்ககால இலக்கண நூல்கள் [முழுக்க முழுக்க விஞ்ஞான இலக்கியங்களே].

civilisation' என்பது அவரது கூற்று. இதையும் உற்றுணர்தல் வேண்டும். இதே போல, **"கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி" "Architectural is the zenithal achievement of mathematics"**என்று சங்ககாலத் தமிழன் ஒருவன் கூறி யிருக்கிறான். இரண்டையும் ஆய்வு செய்திடல் வேண்டும்.

முப்பெரும் அடிப்படைச் சமயங்கள்

இந்து சமயங்கள் ஆறு. அவற்றில் மூன்று அடிப்படை யானவை. அவை சாக்தம், சைவம், வைணவம் எனப்படும். உற்று நோக்கின் வைணவம் சைவத்திலும், சைவமும் வைணவமும் சாக்தத்திலும் இறுதியில் எல்லாம் ஒன்றில் அடங்கும் எனத் தெளிவாகிடும். அந்த ஒன்றென்ன? இஃது இக்கால விஞ்ஞானியின் வேலை. இக்கால விஞ்ஞானிகள் சமயத்துறை [விஞ்ஞான] ஆய்வுக் கூடத்திற்குள் புக வேண்டும். சமயமும் விஞ்ஞானிகளிடம் இன்னும் செல்ல வில்லை என்றே தெரிகிறது. சமயம் தனிப்பட்டோர் கருத்து என முத்திரைப் பெற்று ஒதுக்க முற்றுவிட்டது. இது மாபெரும் துரதிர்ஷ்டமாகும். சமயத்தையும் அதன் மூலத்தையும் விருப்பு வெறுப்பின்றிக் காண முற்பட வேண்டும். இந்து சமயம் உலக மக்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும். இதனை விஞ்ஞானிகள்தான் செய்திட முடியும். இந்து சமயத்தை உற்றுப் பார்த்தால் கொள்கைகள் அனைத்தும் மாந்தர் இனத்துக்கே பொருந்துவனவாகத் தெரியவரும். சமயச் சடங்குகள் [பத்ததிகள்] வேறுபடுத்தி விட்டன எனலாம். ஆகமச் சடங்குகள் தொன்மையானவை. விஞ்ஞான ரீதியானவை. அவையும் தடம் புரள்கின்றன. ஆகம சம்ஸ்கிருதமானது தமிழர் சொத்து. ஆகமத்தமிழனும், வாஸ்துத் தமிழனும் இன்று அனாதைகளாகி விட்டனர். காண்பாரற்று, கேட்பாரற்றுக் கிடக்கின்றனர்.

சிவவிஷ்ணு அபேத நிலையும், சிவவிஷ்ணுக் கோவில்களும்:

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பதுதானே இந்து சமய உச்சக் கொள்கை. "देवो नारायणो नान्य: एकोअग्निर्वर्ण एव च।।" என்ற

ஸ்ரீமத் பாகவத வாக்யம் இதைத்தானே காட்டுகிறது. விண்ணும், மண்ணும் எல்லோருக்கும் பொது. விண்ணே மண்ணாகத் திரிபுற்றது **"Energy has metamorphosed into matter"** என்பது நுட்பம். அவற்றில் அடங்கிய பஞ்சபூதங்களும், பஞ்சபூதங்களின் குணங்களும் செயல் நெறிகளும் எல்லோர்க்கும் பொதுவே. இக்கருத்திற்றான் **"அரியும், சிவனும் ஒண்ணு"** என்று கிராமத்து எளிய மக்கள் இன்றும் சொல்லுவர். **"அறியாதவன் வாயிலே மண்ணு"** என்று முடிவும் சொல்லுவர். இதற்கொரு உபநிஷத வாக்கியமும் உண்டு. "शिवाय विष्णुरूपाय शिवरूपाय विष्णवे । शिवस्य हृदयं विष्णु: विष्णोश्च हृदयं शिव: ॥" "अभेद दर्शनं ज्ञानं" [ஸ்கந்தோபநிஷதம்] அங்கீகரிக்கப்பட்ட 108 உபநிஷதங்களில் இதுவும் ஒன்று. இன்றைய ஆய்வர் காலக் கணக்கில் இது (Conservative estimate) 3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட செய்தியல்லவா? ஆகம, வாஸ்து மரபுகளைப் புறக்கணித்தது போல் உபநிஷதச் சொல்லையும் ஒதுக்கி வைத்து விட்டோமே. நான் technical lineல் இருந்து வருவதால், சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் உருவம் கொடுப்பவனாகையால், சிவ விஷ்ணு ஒருமைப்பாடு எனக்கு நன்கு புரிகிறது. விஞ்ஞான ரீதியாகவும், கணித ரீதியாகவும் தெளிவாகிறது. இந்த அபேத நிலையை சிவவிஷ்ணு ஆலயங்களில் நானே காட்டி, ஆலயங்களை நானே கட்டி, விஞ்ஞான மூளைக்கு அது ஏற்புடையதாகிப், பல ஆண்டுகள் கடந்து விட்டன. சைவனாக, வைணவனாகச் சிதறிக் கிடந்த நம் மக்களை ஒன்றுபடுத்தி விட்டது என்பது இன்று கண்கூடு. சிவன் energy ஆகவும், விஷ்ணு matter ஆகவும் குறிப்பிடும் இருபெரும் கலைப் பெயர்கள்; technical domainஐச் சேர்ந்தவை. வழி பாட்டுக்கு வரும் நிலையில் சமயமாகிறது. Energy க்குள் matter இருப்பதும் matterக்குள் energy இருப்பதும் இந்தக் கூற்றில் அடக்கமுற்றுள என்பது விஞ்ஞானச் செய்தியாகும். Energy = matter, வஸ்து = வாஸ்து, $E=mc^2$ என்றவை சமசூத்திரங்கள் அல்லவா? புரிகிறதா? Energy க்கு மறுபெயர்தான் ஆத்மா என்பது நன்கு தெளிவாகிற தல்லவா? [அது பெரிது - அதுமா - ஆத்மா

ஆயிற்று என்பது சரி தானா?] தைத்ரீய உபநிஷதம் இதனை மேலும் தெளிவாக்குவதைப் பாருங்கள். இது ஆகாஸத்திலிருந்து பூமி வந்த விஞ்ஞான நுட்பத்தை - விண் மண்ணாகத் திரிபுற்ற விஞ்ஞான மாறுபாட்டை - ஒரே வரியில் கூறி முடித்து விட்டது[1]. "आकाशात् वायु: वायोरग्नि: अग्नेराप: अद्भ्य: पृथ्वी ।।". இவையெல்லாம் எந்த மூலத்திலிருந்து கிளர்ந்தவை என்ற வினாவுக்கு உபநிஷத் சொல்லும் விடைதான் ஆத்மா एतस्य आत्मन: संभूत: आकाश: - ஆத்மாவிலிருந்து பிறந்ததே ஆகாஸம் என்பது பொருள். ஆத்மாவுக்கும் மறுபெயர் ஆகாஸம் தானே? இந்த ஆத்மாவின் விஞ்ஞானச் சொல்லே energy அல்லது spirit என்பதாகிறது. Energy யே ஆத்மா எனக் கண்டு கொண்டதை உணர முடிகிறதா? ஆத்மாவும் energyயும் அருவப் பொருள்கள் (amorphous substances) அல்லவா? இந்த ஆத்மப் பொருள்தானே அண்டபிண்டங்களாக மலர்கின்றன. இதிலிருந்து தோன்றிய ஆகாஸத்தின் ஒரு சிற்றணுவே ஜீவாத்மா எனப்படுவதாயிற்று. ஆகாஸம் என்பது முதலாவது பௌதிகப் பொருள் (primal gross substance) ஆகும். ஆகாஸத்தின் subtle quality தான் இங்கே ஆத்மா எனப்படுகிறது. ஆன்மாவைத் தமிழ் இலக்கணத்தில் material levelல் - பௌதிக நிலையில் - உயிர் எனப்படும்[2]. இந்த

---

1. ஆகாஸத்திலிருந்து காற்று, காற்றிலிருந்து தீ, தீயிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் என்பதோடு இவையெல்லாம் ஆத்மா [பரமாத்மா]விலிருந்து வளர்ந்தவை என்பது கருத்து. இதில் மர்மம் ஏதுமில்லை. அதாவது விஞ்ஞானப் பொருளாகிறதல்லவா? இதைச் சுருக்கி विज्ञानं ब्रह्म என்று கூட வேத மரபு சொல்லவில்லையா? ஏன் மறந்தோம்!

   மேலும் சூன்யாம்பரம் என்ற சொல் ஒன்று இருக்கிறதல்லவா? சூன்ய ஆகாசம் என்பது பொருள். அதாவது Zero space என்பது பொருள். Vaccum space என்பது இன்றையப் பெயர். இஃதொரு சர்வவல்லமை கொண்ட அதி நுட்பப் பொருள் [அ] Potential, primal, elemental, singular, substance எனலாம். இது nothing அல்ல. இதுவே everything என்க. இப்படிச் சொல்லத் தெரியாத நிலைக்குத் தான் சூன்யம் என்பது தெளிவாகிறதல்லவா? இது எங்கும் நீக்கமறப் பரவிய நிலையில் அம்பரம் [ஆகாசம்] ஆயிற்று என்க.

2. "உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே" - தொல்காப்பியம்.
   "மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே" - ஐந்திறம்.
   இந்த ஆத்மாவையே பிரம்மன் என்றும் சொல்லுகிறோம். இது சிருஷ்டிக்கும் ஆற்றலுடையது (creative element according to Vaastu Science). இதனைக் காலம் என்று சொல்லி காலமே ஆக்கும் ஆற்றலுடையதென்று (creative element or creative energy) மயனாரின் ஐந்திறம் சொல்லும். இதைத்தான் fourth dimension என்று இக்கால விஞ்ஞானியர் சொல்வர். இந்து சமயம் இதற்கு அப்பாலும் போய்விட்டதென்க. பிரம்மமே creative element [அ] fourth dimension தானே?

ஆத்மாவே லிங்கம் என்று சொல்லப்படுகிறது. இக்கருத்தை மாமுனி மயனுடைய வஸ்து நூல் "सर्वात्मीयं लिङ्गं आकाशमेव" என்ற சொற்றொடரால் உணர்த்துகிறது. ஆத்மா என்பதும் லிங்கம் என்பதும் ஆகாஸமே என்பது பொருள். அதனால், ஆகாஸ லிங்கம் என்ற சொல்லும் சமய இலக்கியத்தில் தோன்றுவதாயிற்று. இதே போல்தான் ஆத்ம லிங்கம் என்ற சொல்லும் தோன்றியுளதென்பதை உற்றறிக. ஆகமத்தையும், வாஸ்துவையும் உட்புகுந்து [மேலோட்டமாக அல்ல] பார்க்கும் விஞ்ஞான மூளைக்கு இவையனைத்தும் தெளிவுபடும் என்று கண்டறிந்துதான் ஆய்வின் பொறுப்பை - ஆய்வின் தலைமையை ஒரு விஞ்ஞானியிடம் ஒப்படைக்கப் பரிந்துரைக்கிறேன்[1]. இன்றைய Material Science இந்த ஆராய்ச்சிக்குக் கைகொடுக்கும் என்றும் கண்டேன். இந்த அடிப்படையில் தொல்பழங் காலத்தில் **"பரம்பொருள் எங்கும் உண்டு. பெருங்கலை யாண்டும் உண்டு"** [முன்னையது subtle சூக்ஷமம், பின்னையது gross ஸ்தூலம்] என்றான் மாமுனி மயன். அவன் சொல்லும் பெருங்கலை என்பது அருவத்தை உருவமாக்கிடும் விந்தைமிகு வாஸ்து சிற்ப விஞ்ஞானம் தான். இதற்கு மேலும் சொல்லிட முனைந்த மயன் **"பரம்பொருள் உணர்வினாலே ஒளி நடராசன் (dance of light) கண்டேன் என்றும், பரம்பொருள் அருவினாலே ஒளி வழிபாடு கண்டேன்"** என்றும் சொல்லி சமய விஞ்ஞானத்துக்கு - சமய வழிபாட்டுக்கு "ஒளி"யை மூலப் பொருளாக்குகிறான். இதை விட வேறு என்ன வேண்டும்? இந்த ஒளி வழிபாடுதான் ஆறுசமயங்களிலும் சிறப்பாக அமைந்துள்ளது. **சிதம்பரம் நடராசர் கோவில் வழிபாடே ஒளிவழிபாடு தான்.** ஆகாஸ வழிபாடு என்பதே அதன் பொருள். சிதம்பர ரகஸியம் என்பதும் இதுவே தான். வழிபாட்டுப் பத்ததியை உற்று நோக்கினால், மிகப் பெரியதொரு தெளிவு கிடைத்திடும். இம்முறையை ஆகமத்தில் சிறப்பாகக் காணலாம். ஆகம

1. ஞாலப் பொருள்கள் அனைத்தும் பொருளே (matter / material energy*யே*). உடல் தரித்த உயிரே.

வழிபாட்டில் எல்லாம் விஞ்ஞான ரீதியாக அமைந்து 2000 ஆண்டுகளாகப் புழக்கத்தில் உள்ளதைக் காப்பாற்ற வேண்டாமா? பிரணவ வேதம் இந்த ஒளியை முன்வைத்து (முழுமுதலாக வைத்து)ப் பேசுவதைப் பார்க்கப் போகிறீர்கள். இந்த நிலையில் பிரணவ வேதமே பிற்காலத்தில் ஆகமம் எனப்பட்டது என்பது ஆய்வு காட்டும் உண்மை[1].

இக்கால அறிஞர்களுக்கு ஆகாஸம் வழிபடு மையப் பொருளாக விருப்பது புரியாமல் போனது ஆச்சரியமாகவிருக்கிறது. எனவேதான் விஞ்ஞானிகள் (Astro physicits) இந்தத் துறையில் ஆய்வுகள் நிகழ்த்த வேண்டும். வரலாற்று ஆய்வுகள் அல்ல; விஞ்ஞான ஆய்வுகளை நிகழ்த்த வேண்டும். இதே போல Geophysistsம் தேவையே இதற்கென தனித்ததொரு ஆய்வுத் துறையே இன்றையத் தேவை. ஒன்றித்து விளங்கும் ஒரு பொருளை பிரித்துக் காட்டுவன - பேசுவன மொழிகளே - சடங்குகளே. இந்த வெளித் தோற்றமும் ஆராயப்பட வேண்டும். மொழிகள் பலவானாலும் ஒரே வழிதான் - ஒரே ஒளிதான் - ஒரே முடிவுதான் உளது. இதனை உறுதி செய்திட விஞ்ஞானத்தால் தான் முடியும். மொழிப் பூசல்களும் கொள்கை வேறுபாடுகளும் பொருளற்றவை. இருந்தாலும், இந்து சமயம் இந்த ஒரு மகத்தான ஒளி விஞ்ஞான அடிப்படையைக் கொண்டுளது என்பதைப் புரியச் செய்ய வேண்டும்.

பிரபஞ்ச சக்திகள் இரண்டு

உலகியல் நடப்பில் சக்திகள் இரண்டென்பர். அவற்றை மண் சக்தி, விண் சக்தி என்று சொல்லலாம் (material energy, spiritual energy). இவ்விரண்டும் மனிதனால் படைக்கப்பட்டதன்று. இவை தானாக அல்லது இயல்பாக இந்த ஞாலத்திலே தோன்றிய,

1. காமிகாகமம் என்ற ஓர் அரிய பெரிய ஆகம நூலையே வாஸ்து சாஸ்திரம் என்பார் பேராசிரியர் S.P.சபாரத்தினம் என்று சொல்லி அந்த நூலிலேயே சான்று உளதை நானும் கண்டு மகிழ்ந்தேன். कामिकागमे वास्तु शास्त्रे என்பதை உற்றறிக. ஆகமம் என்ற சொல்லுக்கு வழி வழி வந்தது heritage என்பதே பொருள். எனவே வாஸ்தும் ஆகமமும் ஒன்றே என்க.

நிலையான - மாறாத ஆற்றல்மய இயற்கைப் பொருள்கள். இவற்றை ஆய்ந்து இறுதிப் பொருளைக் கண்டு தேர்ந்த நிலையைக் கொண்டதே இந்து சமயச் சிறப்பு என்க. இந்த விஞ்ஞானம் பேசும் மொழியே வேறாக உளது. இதனால்தான் புரியாத்தனமும், பிணக்கும் தோன்றியது எனலாம். உள்ளத்தால் உணருவதும், கண்ணால் பார்த்தறிவதும் பொருள் மொழி (figurative language or language of forms) எனலாம். காணும் பொருள்களைக் கொண்டு காணாப் பொருள்களாகக் காட்டிடும் உணர்ச்சி மயமான ஓவியங்களை - அகத்தே கண்டு புறத்தே காட்டிய இரண்டு வகைக் காட்சிகள். அதாவது ஒளி, ஒலிக் காட்சிகள் என்பான் மயன். எனவே, இவ்விரண்டும் காட்டுவன ஒன்றே என்பது அறிதியிடும் விஞ்ஞானம். இக்கருத்துகளை இக்கால விஞ்ஞானியர் ஆய்வு செய்யட்டும். இந்த விஞ்ஞானத்தைத் தான் விண்ஞானம் என்றேன். இதனை விண்ணியல் என்பான் மயன்.

ஐந்தமிழ் - ஐம்மறை என்பன யாவை?

இந்த அகக் காட்சியைக் கண்டு புறத்தே காட்டிய விஞ்ஞான மரபிற்கு படிம விஞ்ஞானம் / பிரதிமா விஞ்ஞானம் / சில்ப சாஸ்திரம் என்றெல்லாம் பிற்காலத்தில் பெயர்கள் ஏற்பட்டுவிட்டன. தொல்மரபில் வந்துள்ள அகவுணர்வுகள் சமயக் காட்சிகளாக - அவற்றைப் புறத்தே கனப்பொருளாக - காட்சிப் பொருள்களாக சமைப்பவர்களே - எழுதுபவர்களே எழுத்தச்சர்கள் மற்றும் பெருந்தச்சர்கள் எனப்பட்டனர். இவர்கள்தான் பிற்காலத்தில் [பி.பி.] சிற்பிகள், ஸ்தபதிகள் எனப்பட்டனர். சிற்பம் என்ற சொல் நுற்பம், நுட்பம் என்ற பொருளில்தான் ஸ்தபதிகளாகிற - விஸ்வகர்மர்களாகிற - நாங்கள் சொல்லி வருகிறோம். அகக்காட்சியின் மறுபதிப்பு - extended form of inner picture or replicated inner vision - என்பது விளக்கம். இந்த inner vision, அகக்காட்சியை சொல் வடிவமாக - **"எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி"** - என்று ஐந்து கூறுகளாகக் கண்டு, அவற்றை ஒருங்கிணைத்து இயற்றும் ஒலிமயக் காட்சியே


சொல்லோவியம் – கவிதை எனப்பட்டது. இதனை ஒருவன் உணர்ந்தான். இந்த உணர்வால் மாபெரும் கவிஞனாகவும், தச்சனாகவும் சங்க காலத்தில் தோன்றிய **மயன்** என்பானை **கவிக் கலைஞன்** என்று மரபில் அழைப்பாராயினர். சொல்லால் உணர்வைச் சித்தரிப்பவன் கவிஞன். கல்லால் உணர்வைச் சித்தரிப்பவன், செதுக்குபவன் கலைஞன். இவ்விருவருக்கும் வாய்த்திட்ட இலக்கணம் ஒன்றே. இந்த நிலையில் இந்த உலகில் கவிஞனும் கலைஞனும் சாகா மனிதர்கள்; சிரஞ்ஜீவிகள் எனலாம். அதாவது நிஜ உலகில் கவிதைகளும், கலைப் பொருள்களுமே நிலைப் பொருள்களாக மிளிர்கின்றன. இவ்விருவர்களே போற்றப்படுகிறவர்கள். பண்டை அரசர்கள் இவர்களைத்தான் தம் மடியிலே – அவையிலே அமர்த்திக் கொண்டனர். இந்தக் கவிதைகளை இவற்றை ஒலி கொண்டு lyrics,poetries, songs இசைக்கும் இசைஞனும் (singer) நடமிடும் நடிகனும் (Dancer) இவ்வரிசையில் வைத்து மதிக்கத்தக்கவர்கள் ஆகி இயல், இசை, நடம் மூன்றும் முத்தமிழ் எனப் பெயர் பெற்றன. இதே பணியைச் செய்திட்ட சிற்பம், கட்டிடம் இரண்டும் சேர மொத்தத்தில் ஐந்தமிழ் ஆயிற்று. எப்படி? மேல் விளக்கத்தை எதிர்வரும் பத்திகளில் காணலாம்.

இக்கருத்தில் பிறிதொரு கன பரிமானம் உளது. உலகியல் காட்சிகளை விடுத்து அகவியல் காட்சிகளைச் – அகவியலையே சித்தரித்த நிலையில் இம்மூன்றும் மேலுமொரு முக்கியத்துவம் [அ] கனபரிமானம் பெறுவதாயிற்று. **“கிளவியாக்கம் மெய்ப் பொருள் குறித்தே”** என்று சொன்னவன் மாமுனி மயன் [ஐந்திறம்]. எனவே காணும் பொருளைப்பாடாமல், காணாப் பொருளை உளத்தே கண்டு, செயலையும் உணர்ந்து செயல் வடிவமாக – குண வடிவமாகப் – பாடியவன் மகாகவி எனப்பட்டான். ஆழ் மனதில் [மூளையில் அல்ல] தோன்றிய காட்சிகள் கவிதைகளாக உருமாறின. நமது சமயக் கவிஞர்கள் இப்படிப் பட்டவர்களே. உலகியலைப் பாடியவர்கள் material poets உலகியல்

கவிஞர்கள் எனலாம். மெய்ப் பொருளைப் பாடியவர்கள் spiritual poets ஆன்மிகக் கவிஞர்கள் எனலாம். இப்படித்தான் இந்திய நாட்டில் கவிஞர்கள் இரண்டு வகையாகத் தோன்றினார்கள் மற்றும் மதிக்கப்பட்டார்கள். இவர்தம் கவிதைகள் தான் காலங் கடந்து இன்றும் நிற்கின்றன. இந்தக் கருத்தோடும், செயலோடும் நாவலந்தீவில் பிறந்து **கவிக் கலைஞன்** என்று பெயர் பெற்ற முதல்வன் – முன்னவன் மயனே. இவனைத்தான் தொல் காப்பியன் **அறிவின் முனைவன்** என்று குறிப்பிட்டானோ? இவன் தோற்றுவித்த **முழுமுதற் பொருளே சிவநடராஜன்** எனப் பெயர் பெற்றது. [இதற்கென்றே தனியொரு நூலை மயன் எழுதியுள்ளான். இஃதொரு தமிழ் நூல். என்னிடம் உளது. இதுவும் வெளிவரும்.] அகத்திலே ஒளிர்ந்த ஒளியை, அதிர்வுற்ற ஒளியை – (pulsated inner light) –அதன் அதிர்வைக் காலமெனக் கண்டு, அகவொளியை **அகத் துடிப்பால்** கணக்கிட்டு அதனைச் சீலப்படுத்தி , உலகியல் நிலையில் **தாளமெனச்** சொல்லி, **தாளவடிவமாக** – காலக் கோலமாக – மனித உடலமைப்பிலே இயற்றிக் கடவுளைக் கண்ணால் காணும் கவிதையாக இயற்றியுள்ளான் கவிக் கலைஞனாம் மயன்.

இந்த நிலை ஒரு புறமிருக்க இன்றைய விஞ்ஞானம் தெரிந்த இந்தியன் கேட்டும் வினாவைக் கேளுங்கள். Does God exist today? மேலை விஞ்ஞானியும் இதே கேள்வியைத்தான் கேட்கிறான்! உங்கள் விடை என்ன? இதுமட்டுமல்ல, what was there before big bang? என்றும் கேட்கிறான். அதாவது ஞாலத்தில் முதன் முதலில் வெளிப்பட்ட பேரிடிக்கு முன் இருந்தது யாது? என்று வினவுகிறான். இதற்கும் மரபு விஞ்ஞானம் எப்போதே பதில் சொல்லிவிட்டது. நானும் சொல்லுவேன். மேலும் இந்தப் பிரபஞ்சத்தைக் கடவுள் ஏன் படைத்தார்? என்றும் கேட்கிறான். இதற்கு வேதமும், இந்து சமயமும் பதில் தரும். நானும் சொல்லுவேன். இப்போதல்ல பிறகு சொல்லுவேன். ஏனெனில் இக்கட்டுரை தடம் புறண்டுவிடும் என்பதாலன்றோ! [காண்க :

ஸ்தபதியின் **"கடவுளைப் படைத்தவன் யார்?"** என்ற ஆய்வு நூல்.]



வாஸ்து புருஷன் கிடக்கை

சிற்பமும்-கட்டிடமும் ஐந்தமிழின் இரண்டு கூறுகளான பெருந்தமிழ் [அ] அருந்தமிழ்:

இதுவரை முத்தமிழ்ச் சிறப்பை, அதன் ஆழத்தைப் பார்த்தோம். இவையெல்லாம் காதால் கேட்டு அகத்தே ரசிக்கும் [உணரும்] கலைக் காட்சிகள். கண்ணாலும் காதாலும் கேட்டு ரசித்திடும் கலையே மூன்றாவதாகிய நடம் அல்லது நாடகமாகும். நடந்து, நடமிட்டு நடிப்பதே நடம் ஆகி இன்று நாடகம் ஆகியது எனலாம். தொல்பெயர் நடம் என்பதே மூன்றாவது தமிழ் எனப்பட்டது. பாடலோடு சேர்ந்து ஆடுதல் நடம் ஆகும். எனவே சிவனுக்கு - இயற்கையின் ஆடலுக்கு, ஆடுபவனுக்கு **ஆடலன்** என்ற திருப்பெயர் ஒன்று சமய மரபில் ஏற்பட்டது. திருநடராசன், சிவநடராசன், ஒளிநடராசன் என்ற பெயர்களெல்லாம் விஞ்ஞானப் பெயர்கள் என்பதை உற்றுணர்க. நுண் நிலையில் - சூக்கும நிலையில் - ஒலி நிலைக்கு முந்திய நிலையில் - இந்த இயற்கை, **ஒளி** எனப்படும். இந்த ஒளி அசைவுறுகிறது. இந்த அசைவில் ஒரு சீலம் (rhythm) உளது. எனவே ஒளிநடம் என்ற பெயரும் தோன்றியது. அண்ட பிண்டங்கள் எல்லாம் அசையும் பொருள்களாகி அவற்றின் ஒட்டுமொத்த - முழுமுதற் பொருளாகி இலங்குபவன் சிவனே ; அவன் ஆடலே. அஃது ஒரு சீலமயக்கூத்து (Rhymic dance). எனவே சிவன் ஆடலன் என்ற பெயரைத்

தாங்கியவனானான். அண்ட பிண்டங்களின் அசைவில் ஒரு தாளப் பிரமானத்தைக் கண்ட மயன் சிவனாரின் அசைவை ஆடல் - நடம் (grammatical movement) என்று சொல்லி, அச்சிவன் ஆடிய ஆடலை பிரபஞ்ச நடனம் எனக் கொண்டு, நடம் என்ற மூன்றாவது கலைத் துறையை தோற்றுவித்து, சமயத்துறை சார்ந்த அனைத்துப் பொருள்களையும் அசைவித்து, ஆடற்கலைப் பாணியிலேயே ஆடவிட்டுவிட்டான். எனவேதான் இறைவனின் வடிவங்களைச் செய்திடும் சிற்பிகள் - சிலைகளை நின்றாலும் நடந்தாலும், கிடந்தாலும் அமர்ந்தாலும், உறங்கினாலும், ஓடினாலும், போராடினுலும், இன்பக் கிளர்ச்சியிலும் ஆடல் அபிநயத்திலேயே இயற்றுவாராயினர். அபிநயம் என்பது அக உணர்வை இலக்கணப் படுத்தித் திருத்தமுற வெளிப்படுத்திய நிலையில் ஆங்கிகாபிநயம் எனப்படுவதாயிற்று. எந்த ஒரு சமயத்திலேயும் கடவுளை ஆட விட்டிருப்பதை எவரும் பார்த்திருக்க முடியாது. இந்து சமயக் கடவுளர்கள் தான் ஆடிக் கொண்டே இருக்கிறார்கள். எனவே, பாரதத்தை ஒன்றாய் இணைத்து நிற்பது இந்த ஆடலே (rhythmic movement of spiritual force we are all dancing with Shiva). உலகியல் பாங்கில் - இயற்கையின் பிரதியாக - copy of Nature - ஆகத் தான் பிற சமய வடிவங்கள் படைக்கப்படுகின்றன ! ஆனால் இந்து சமயத்தில் நடப்பது, நடந்தது வேறு - துடிப்பை - இயற்கையின் அசையும் நிலையை, உள்ளே உணர்ந்து, வெளியே உணர்வுமயக் காட்சிகளாகத் சித்திரிப்பது இந்தியக் கலைகளே. என்றாலும் இக்கலைகளில் **சிற்பக் கலையானது** (visual and eternal) **பெருங்கலை** எனக் கொள்ளப்படுவதாயிற்று. இக்கலையைப் பார்த்து ரசிப்பதற்கும், அதன் மூலம் பயன் பெறுவதற்கும் ஆண்டாண்டு காலம் இருந்து நிகழ்கால, எதிர்காலச் சந்ததியினருக்கும் உதவிடும் eternal art form ஆக அமைந்து விட்டதே மேலுமொரு காரணமாயிற்று. இப்படி இன்று யார் நினைக்கிறார்கள்? எவருக்குப் புரிகிறது? எனவேதான் மனதில் தைப்பதற்காக, **மரபுச் சிற்பங்கள் பொம்மைகள் அல்ல, பொம்மலாட்டம் அல்ல** என்று சொல்லிக் கதறி வருகிறேன்.

உயிரும் உடலும் ஒன்றித்த கடவுட் படிமம் ஒரு கவிதையே, அதே போல கவிதையும் ஒரு சிற்பமே

இந்தத் தாளக் கணக்காகிய காலக் கணக்கு, கவிதைக்கு உடலும் உயிரும் கொடுத்திருப்பதை உற்றுணர்ந்தால், கவிதையும் சிற்பமே எனப்படுவதின் உட்பொருள் நன்கு விளங்கும். தாளமானம் உடலை அசைத்து, உடல் நெளிவு சுழிவுகட்கு வெவ்வேறு அளவுகளைக் கொடுத்து எழிலார்ந்த கவர்ச்சிகரமான தோற்றத்தையும் கொடுக்கும். இப்படிப்பட்ட பொருளையே - கருத்தையே நமது ஆன்ம அசைவுகள் - உணர்வு அலைகள் ஏற்படுத்துவதையும் அதில் காணலாம். இந்தக் கருத்துணர்வைத் தான் **ஒளி**[1] என்று - முதற்பொருளாகக் கொள்கிறோம். இந்தக் கருத்துணர்வு, தானே அசைகிறது. மீண்டும் சொல்வேன், இந்த அசையும் பொருள் தான் **ஒளி** எனப்பட்டது. இது நம் மூளை வழியாகக் கண்களுக்குத் தெரிந்தால் சிற்பம் - காதுகளுக்குக் கேட்குமானால், கவிதை. எனவேதான் **காவியத்தில் ஓவியமும், ஓவியத்தில் காவியமும்** என்றான் மாமுனி மயன். அதுமட்டுமல்ல **எழுத்தெல்லாம் ஓவியமே** என்று அதிநுட்பச் சூத்திரமும் தந்துள்ளான். இவனது சூத்திரங்களை - ஐந்திற சூத்திரங்களை - சிற்பிகளாகிய நாங்கள் **பிரம்ம சூத்திரங் களாகக்** கொண்டுள்ளோம். **பிரம்ம சூத்திரம் என்ற சொல்லே சிற்பியர் கண்ட கலைஞானச் சொல்தான்.** சிற்ப சாஸ்திரங்களில் சரளமாக உள்ள அரிய பெரிய சொல் இஃதாகும். எனவே சிற்பக்கலை மரபினர் கவிதையை உயிர்ப்புள்ள - உடல் தரித்த உயிர்ப் பொருள், அதாவது, ஒலி ஒளிப்பொருள் என்பர்.

1. ஒளி என்ற சொல்லின் ஆக்கம் எப்படியுளது? ஒள், ஒள்ளி, ஒளி என்றாயிற்று. ஒள் என்றால் உணருக என்பது பொருள். ஆங்கிலத்தில் இதனை consciousness, awareness என்று சொல்லி திருப்தி அடைந்து வருகிறோம். உள்ளாய்வோ, மேலாய்வோ இன்னும் நடைபெறவில்லை. எனவேதான் ஞானியரிடமிருந்து சமய இலக்கியங்களை வாங்கி விஞ்ஞானியரிடம் கொடுத்து ஆய்ந்திடச் சொல்லி வருகிறேன். சிருஷ்டிக் கலையின் இலக்கணமும் தெரிந்துக் கொண்டால் சடுதியில் ஆத்ம விஞ்ஞானப் படிமங்களின் தோற்றுவாய் புரியக்கூடும். The genesis or origin of the Cosmos too will cone to light. இன்று கலைப் பொருள்கள் விலைப் பொருள்களாக - Commerical commodition ஆகி விட்டனவே!

சிற்பங்கள் நீள, அகல, கனம் என்ற முப்பெரும் அளவுகளைக் கொண்டே கனப் பொருள்கள் ஆவதால் கண்களுக்குத் தெரிவதாகின்றன. எனவே, சிற்பி தனது உணர்வுறும் கோலங்களைக் கண்களால் கண்டு மகிழ்கிறான். தன்னையே அவற்றில் காண்கிறான்; ரசிக்கிறான். எனவே, **சிற்பியே சிற்பமாகிறான்** என்று அனுபவச் சூத்திரத்தைக் கண்டு மேடைகளிலே – நூல்களிலே பறைசாற்றினேன். இதன் மூலம் அத்வைதத் தத்துவம் எல்லோருக்கும் எளிதில் புரிந்து பாராட்டினர். கவிதையும் ஒரு சிற்பமே என்பது எனக்குப் பளிச்சென்று புரிந்த நிலையில் **கவிஞனே கவிதையாகிறான்** என்றும் சொன்னேன். இதுவும் அத்வைதம்தானே! எனவே இயல், இசை, நடம் என்ற மூன்றும் சிருஷ்டிக் கலை (creative art) எனப்பட்டு முத்தமிழ் என்ற சிறப்புப் பெயரும் தமிழ் மரபில் நிலை பெற்று விளங்குவதாயிற்று. இவைதான் கலைதந்த ஆச்சாரங்கள் – பண்பாடுகள் – என்று சொல்லிப் பெருமைப்பட வேண்டும். இக்கருத்தில்தான் கோவில் சடங்குகளில் முத்தமிழை ஒன்றாக நடப்பில் ஒட்டி வைத்துப் புனிதமாக்கினோம். இச்சம்பிரதாயம் தென்னகக் கோவில்களில் பல்லாண்டு காலம் இருந்து வந்தவையல்லவா? அயன் படைப்பையும் மயன் மீறிவிட்டா னல்லவா? எனவே "அயன் படைப்பு மாறுமே, மாறாதே மயன் படைப்பு" என்று சொல்லி வருகிறேன்.

எனவே, மேலை நாட்டுப் பாணியில் வெறும் fine arts என்பதே சரியில்லை என்பேன். இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் இவ்வைந்தும் விஞ்ஞானக் கலைகள் *(*five fold scientific art - five fold veda*)* என்று சிற்பியர்தம் முன்னோர் பெயரிட்டுச் சென்றனர். எனவே, நாம் இன்று பேசும் fine arts எல்லாம் நுண்கலைகள் subtle arts மட்டுமல்ல. Sacred arts என்ற உயர்ந்த நிலையை எய்திய புனிதக் கலைகள் ஆகும். இப்படிக் கண்டு கொண்டவர், சொன்னவர் மேலைநாட்டுக் கலைத்துறை ஆய்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாம். எனவே, நமது மரபில் பூசனைக்குரிய கலைகள்

ஆயின. எனவே அவற்றை கோவிலுக்குள்ளே வளர்த்தனர் அதற்கே உரித்தாக்கினர் விவரமறிந்த நம்முன்னோர்கள்.

Sacred arts, Sacred Geometry, Sacred Sculpture, Sacred architecture என்ற பெயரெல்லாம் முற்றுணர்ந்த மேலை நாட்டு ஆய்வறிஞர் இன்று வைத்த பெயர்கள். இவையெல்லாம் தோன்றிய இடம்தான் ஜம்பூத்வீபம் என்ற நாவலந்தீவு. காலம் யாதெனில், "**சங்ககாலம்**" என்று இன்றைய ஆய்வுகள் வெளிப்படுத்து கின்றன.

வீடு ஓர் உயிர்ப்பொருள் – வீடு ஓர் இசை வடிவம்

இந்த நிலையில் கட்டிடக் கலை எப்படி – என்ன ஆனது தெரியுமா? இவற்றையெல்லாம் மிஞ்சிக் கட்டிடங்கள் இதே கவிதையாக உருக்கொண்டுவிட்டதை இன்னும் நம்மவரில் எவரும் புரிந்துக் கொள்ளவில்லை. கோபித்துக் கொள்ளாதீர்கள். புறத்தோற்றத்தை ரசிக்கிறார்களே தவிர அகப்பொருளை அது தோன்றிடக் கையாண்டு வரும் காலக் கணக்கைப் புரிந்து எவரும் ரசிக்க முடியவில்லை. ரசிக்கத் தெரியவில்லை. காரணம், வீடும் ஒரு விஞ்ஞான அமைப்பே. உயிர்ப்பொருள் எல்லாம் ஒரு நிலையில் உயிர்ப்புள்ள கட்டிடங்களே. கட்டியது யார்? கட்டுவதற்கு செங்கல், சாந்து எது? மேலும் உடையாமல் நொறுங்காமல் உறுதிப்படுத்தும் பொருள் யாது? இதற்கு நூல் ஆதாரம் உண்டா? உயிரினங்களை நிலைக்கச் செய்வது, நடக்க-நடமிடச் செய்வது எது? உடலில் சூக்ஷ்மமாக இயங்குவது எது, ஸ்தூலமாக இருப்பது எது? (subtle and gross elements யாவை?] சொல்லியிருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன். இஃதே ஐமூலங்களாகிற பஞ்ச பூதங்களில் ஒளிந்திருக்கும் காலப் பொருள் – காலமாக் கடவுள் என்பதே அஃதாகும்.

மயநெறியே ஆன்மிகநெறி:

இவற்றையெல்லாம் இந்தியக் கலாச்சார மரபுக்கு முதன்முதலாக ஆக்கித் தந்தவன்தான், சொந்தமாக்கியவன்தான்

மாமுனி மயன் என்கிறேன். அவனது நூல்களில் – இக்கால சிற்ப சாஸ்திரங்களில் அவற்றை இன்றும் காணலாம். இதனை மறைத்தது சடங்கு வழிப்பட்ட ஆடம்பர பக்தி நெறியே. அப்போது மயன் வயது எவ்வளவு தெரியுமா? முப்பத்திரண்டே. இவன் யாத்த முதல் வேதம் – மூல வேதம் – **பிரணவ வேதம்** தான். இந்த மூல வேதத்தைச் சுருக்கிச் சூத்திரங்களாக வெளிப்பட்டது **ஐந்திறம்** எனப்படுகிறது. ஐந்திறவழி நமக்குக் கிடைத்திட்டதே தொல்காப்பிய மொழி இலக்கணம் அன்றோ? சம்ஸ்கிருத இலக்கணத்திற்கும் அடிப்படை ஐந்திறமே என்று இக்கால விஞ்ஞானியர் சொல்லுகின்றனர். இந்த மொழி வழிதான் தமிழர்தம் ஆன்மிக வாழ்க்கை என்று உறுதிபடச் சொல்லலாம். இத்தகைய தொல்காப்பியத்துக்குள் ஐந்திறத்தை – ஐந்திறக் கலாச்சாரத்தை – இரு பெரிய அறிஞர் தேடுகிறார்கள். நாகர் கோவிலைச் சேர்ந்த டாக்டர் S. பத்மநாபன் என்பார் ஒருவர். திருக்குறள் ஆய்வாளர் பேராசிரியர் திரு. கேசவ சுப்பையா என்பார் பிறிதொருவர். கணினிப் பொறியாளர் திரு.இராமநாராயணன் அவர்களும் இக்கூட்டில் உள்ளார். அவர்தம் ஆய்வுகள் வெற்றி பெறட்டும். மக்களினம் ஆன்மிக வாழ்க்கையைத் துய்க்கட்டும். ஆன்ம ஒருமைப்பாட்டை ரசிக்கட்டும்.

எது சத்து? எது அசத்து? எல்லாம் உயிர்ப் பொருள்களே.

உலகப் பொருள்கள் அனைத்தும் உயிர்ப் பொருள்களே – உயிரற்ற பொருள் என்று யாதொரு பொருளும் இவ்வுலகில் இல்லை என்பது வாஸ்து விஞ்ஞானம். காரணம் அவையெல்லாம் இறைப் பொருளின் தெரி பொருள்கள் – விரி பொருள்கள் – தானியல் வடிவுகள் - manifest forms. எனவே ஜடப் பொருள்கள் அல்ல. ஒவ்வொரு பொருளிலும் ஆத்ம சக்தி (Spiritual energy) உண்டு. இதைத்தான் material energy என்று மேலை விஞ்ஞானம் கொண்டுளது. இக்கருத்து விஞ்ஞானிகளுக்குத்தான் புரியும். அதனால் விஞ்ஞானிகளைச் சமயத்துறையில் இடமளித்து – ஆய்வு செய்திட – வாய்ப்பளித்திடுமாறு பரிந்துரை செய்தேன்.

இதைக் காக்கத்தானே வரலாற்றில் நிகழ்ந்த போராட்டங்கள்? இன்றும் இப்படித்தானே? இனிக் கட்டிடத்திற்குள் நுழைவோம்.

வீடு ஓர் உயிர்ப்பொருள் - living organism & mini universe - சிற்றவை – microcosm – microbode – சின்னப் பிரபஞ்சம்

சில்ப சாஸ்திரமும், வாஸ்து சாஸ்திரமும் ஒரே விஞ்ஞானக் கருத்தை, ஒரே விஞ்ஞான மூலத்தை விளக்கும் ஒப்புயர்வற்ற சாஸ்திரங்களே. சில்பம் என்பது உணர்வு மயமான அகக் காட்சி. வாஸ்து என்பதும் தொடக்கத்தில் உணர்வு மயமான அகக் காட்சியாகத் தோன்றி இறுதியில் வெளியே மிளிரும் பொருட் காட்சியாகிறது – அதாவது வாஸ்துவாகிறது (materialized vision). அதுமட்டுமல்ல, இந்த நிலையில் கட்டடமும் உடல் தரித்த உயிர்ப் பொருளே என்பது வாஸ்து விஞ்ஞானம் காட்டும் ஓர் அதிசயமாகும். முத்தமிழுக்கு வடிவந்தந்த தாளமானமே[1] [காலக்கணக்கு] கட்டடத்திற்கும் தாளமானமாக உளதென்பதின் கருத்தை உற்றுப் பார்க்கவும். கட்டடத்தைப் பார்த்து அதன் புற அழகையே ரசிக்கிறோம். அதன் அக அழகு கண்களுக்குப் புலப்படாது உளது. மனித உடலையும் புறத்தேதான் பார்த்து ரசிக்கிறோம். அகத்தை எவரும் கண்டதுண்டா? ரசித்ததுண்டா? உடனிருந்து பழகினால் – உடன்உறைந்தால் – உளம் உறவுறுமானால் ரசிக்கலாம். ஓர் உள்ளம் பிறிதொரு உள்ளத்துடன் ஒட்டி விடுமானால் நிகழும் அனுபவத்துக்கு ஆன்மக் கலப்பு அல்லது ஆத்மானுபவம் என்று பெயர். ஓர் உயிர் பிறிதொரு உயிருடன் கலந்து விடுமானால் – அந்த நிலையில் இதனை Spiritual resonance - Spiritual union - Spiritual harmony என்று சொல்லிப்புரிய வைக்கலாம். Lover and the loved என்பது போல விரித்தும் சுருக்கியும் சொல்லலாம். இந்த அனுபூதிகளைத் தான் ஞானிகள் என்கிறோம். இத்தகைய நிகழ்ச்சியானது ஒரு கணக்கில் நிகழ்கிறது. இந்தக் கணக்கே

---

1. காலக் கணக்கு – காலமாத்திரை அளவு – துடிப்பின் அளவு – frequency of vibration - rhythm சீலம் [அ] சீலக் காலம் சீலக்கணக்கு என்பது தமிழ்ப் பெயர்.

வாஸ்து ரகஸியம் எனப்படும். இஃதொரு உச்ச விஞ்ஞான நிகழ்வாகும். இத்தகைய அனுபவம் வாஸ்து விதிப்படி கட்டும் space-ல் [கட்டு +இடம் கட்டிடம் enclosed space or built space) கிடைக்கிறது. எப்படியெனில், ரஸித்திடத்தக்கவாறு இக்காலக் கட்டிட உள்ளமைப்பு (Configuration of inner space) இல்லை என்பது technical reasoning. அதேபோலத்தான் வாஸ்துக் கட்டடத்தின் புறத்தையே பார்த்து ரஸிக்கிறோமே தவிர, அகத்தை ரசித்ததில்லை. அதாவது சுவானுபவம் கிடைக்கவில்லை. வாஸ்து வேத நெறியில் எழுப்பப்படும் கோமிற் கட்டிட இயல்பும் சுகானுபவத்தைத் தருவனவாக உளது. இந்த அகத்தில் நிகழ்வதைத் தான் உள்ளுணர்வு-உள்ளொளி என்று தமிழிலும், ஆத்மானுபவம் என்று சமஸ்கிருதத்திலும் சொல்லி வருகிறோம். அகம் என்ற சொல்லும் அகமுடையாள் என்ற சொல்லும் வாஸ்து வழிபட்ட விண்கலைச் சொற்களே. தமிழிலேயே சொல்ல வேண்டுமானால் அது உளம், அகம், உள்ளம், சிற்றவை எனப்படும். Microcosm என்று ஆங்கிலத்தில் சொல்லுவர். இந்த ஆன்மாவின் dynamics செயல்பாடுதான் அகத்துடிப்பெனப்படுகிறது. கால மாத்திரை - தன் மாத்திரை என்பது எளிய, இனிய, அர்த்தபுஷ்டியுள்ள கலைச் சொற்கள். கால விசையினால் விரைந்தோடும் பேரலைகள் - கால + மா + திரை [திரை = அலை]. இதற்கு pulse என்றும் vibration என்றும் இக்காலப் பெயர்கள். அசைவற்ற பேரான்மா துடிப்பதாலன்றோ, உலகப் பொருள்கள், அண்டபிண்டங்கள் பிறழ்கின்றன (metamorphose) என்பது வாஸ்து விஞ்ஞானம். அதாவது, கட்டிடமானது உடல் தரித்த உயிர்ப் பொருளாகிறது. கட்டிடத்துக்குள் அடைபட்டிருப்பது பேரான்மாவின் ஒரு பகுதியாகிற சிற்றான்மா / அதாவது சிற்றாகாஸம், சிதாகாசம்.

மண் சக்தியை ஆய்தலே material science-ன் நோக்கம் என்றும் விண் சக்தியை ஆய்தலே spiritual science-ன் நோக்கம் என்றும் கொண்டு, மீண்டும் இவ்வாய்வுகளை விஞ்ஞானிகள்

செய்வாரேயானால் சமயப் பிணக்குகள் - உயர்வு தாழ்வுகள் - அற்றுப் போகும். இவ்விரு சக்திகளும் இருப்பதை யாவரும் உணர்வர், உணர முடியும். மண் சக்தி [காந்தம்][1] பௌதிகப் பொருள் வழியாகக் கிடைக்கிறது. விண் சக்தி விண்ணிலிருந்து (celestial space) கிடைக்கிறது. மண் சக்தியான காந்த சக்தி மண்ணிலிருந்து கிடைக்கிறது. இவ்விரண்டிலும் உள்முகமாக விருந்து[2] இவ்விரண்டும் ஒரு நிலையில் ஒன்றித்து, மூலசக்தியாக இயங்குவது காலச் சக்தியே எனக் கண்டறிந்தது ஐந்திறம் என்ற மயவிஞ்ஞான சாத்திரமாகும். இந்த விண்ணுக்கு ஆகாயம்[3] என்று பெயர். மண்ணுக்கும் ஆகாயம்[4]/ பூமி என்று பெயர்; அதாவது இரண்டு சக்திகளும் உள்ளிட்டு விளங்குவது மண் என்று சாதாரணமாகச் சொல்லுகிறோம். எனவே மண்ணை ஆராய்ந்தது போல விண்ணையும் ஆராய வேண்டும். இரண்டையும் ஒப்பிட்டுச் சாம்யம் கண்டதும், அனுபவப் பொருளாக்கியதும் வாஸ்து சாஸ்திரம் என்பதை உணரும் நாளே சமயப் பிணக்குகள் தீரும் நாள் என்பேன். ஒரு பாற்கோடா ஆய்வுகளை இன்றைய விஞ்ஞானிகள் நிகழ்த்தி மக்களின் ஐயப்பாடுகளைத் தீர்க்க முன்வர வேண்டும். இந்த விஞ்ஞானத் தேற்றங்களின் sourceஐ[5] மறைத்திடக் கூடாது. மறைத்து வருவதையும் செய்தித்தாள்களில் அன்றாடம்

---

1. மண்ணில் உறைந்துக் கிடக்கும் விண்சக்தியைத்தான் காந்தசக்தி என்கிறோம். இரண்டும் இமைக்கின்றன (Winkel Pulsate) என்ற நுட்பம் வாஸ்து விஞ்ஞானத்திற்குத் தெரிந்த பிறிதொரு உச்ச விஞ்ஞானமாகும்.
2. காலம் creative energy [காலசக்தி Absolute Time) ஆகையால் காலமாக்கடவுள் என்று தமிழிலும், காலப்பிரம்மன் काल ब्रह्मन् என்று சம்ஸ்கிருதத்திலும் சிற்பிகள் சொல்லுவர். இதைத் தெரிந்த ஓர் உபநிடதம் कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति என்று பேசுகிறது.केचित् [எவரோ] என்ற சொல் தமிழரைத் தான் குறிப்பிடுகிறது.
3. ஆகாஸமே சக்தி அல்ல. அதற்குள் பரவி விளங்குவதுதான் - அதை அசைப்பதுதான் - சக்தி என உணர்வாகிறது. Celestial or spiritual space, that is outer space (Macrocosm).
4. Earthly space, that is material space வாஸ்து புருஷ மண்டலம். Our inner space too வாஸ்து புருஷ மண்டலமே. Microcosm என்பதும் அஃதே. நாம் வசிக்கும் வீட்டுக்குள்ளும் இந்த ஆகாசமே நிறைந்துள்ளது, எனவே அதற்கு built space - கட்டுண்ட இடம், கட்டிடம் என்று பெயராயிற்று. இந்தக் கட்டிடமும் vibrate பண்ணுகிறது! நம்மைப் போலவே என்க.
5. வாஸ்து சாஸ்திரம் இதற்கெல்லாம் அடிப்படையாக விளங்கும் மூல நூல் ஆகும்.

காண்கிறேன். இஃதொரு துரோகச் செயல் என்பேன். இதனை விஞ்ஞானிகள் செய்யக் கூடாது என்பதே எனது வேண்டுகோள்; ஆத்திரமும் கூட. மதம் என்ற சொல்லை நீக்கிப் பழைய சொல்லாகிய சமயம் என்ற சொல்லைப் புகுத்தி வேறுபாடுகளைக் களைய வேண்டும். சமயம் என்ற சொல் விஞ்ஞானச் சொல். காலம் என்று பொருள்படும். (absolute Time) **காலமே எவற்றுக்கும் மூலம், காலமே கோலத் தோற்றம். காலமே ஞாலத் தோற்றம். காலமே அணுக்கள் ஆயும். காலமே ஆக்கும், காலமே காக்கும், காலமே துடைக்கும் என்பது பழங்கால மய விஞ்ஞானக்கூற்று.** இங்கே காலம் என்பது physical time அல்ல. இதனை subtle time அல்லது சூக்ஷ்ம சமயம் என்று மரபில் சொல்லுவோம். இதுவே சிருஷ்டி மூலமாகும். எனவே இந்த சக்தியைக் காலமாக் கடவுளாகவும், காலப் பிரம்மனாகவும்[1] கொண்டிருந்த கருத்தும், செயலும் முற்காலத்தில் இருந்ததெனத் தெரிகிறது. இதுதான் சமயத் தத்துவம். **இந்தக் காலம்** தோற்றியவைதான் ஆறுசமயங்கள் – அறுசமயக் கோவில்கள் – எனப்படுகின்றன. என்றாலும், இந்திய உள்ளத்திற்குத் தென்பட்ட இந்த இறுதிப் பொருளே சக்தி (energy) எனப்படுகிறது. இதுவே கால சக்தி, கால வேகம், கால விசை என்றெல்லாம் சொல்லப்படும். எனவே இம்மரபு [அ] மரபின் கொள்கை சாக்தம்[2] எனப்பட்டது. இஃதே ஓம் அல்லது ஓம் சக்தி எனப்படும். ஓம் எனப்பட்ட இஃது, மூலம் என்றும் சொல்லப்படும். ஓமுக்குள் வேறு ஏதும் உண்டோ? பிறகு நிரம்பப் பார்க்கப்

1. कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति - உபநிஷத வாக்யம்.
2. இத்தகைய மூன்று நெறிகளில் சமயக் கோயில்களைச் செய்திடும் உரிமையும், வழக்கமும் விஸ்வகர்மச் சிற்பிகளின் கொள்கையாகவும், செயல்பாடாகவும் உளதைக் காண்க. எனவே, விஸ்வகர்மச் சிற்பிகள் அடிப்படையில் சாக்தர்கள் – வெளிப்படையில் சைவர்கள் – உலகியலில் வைணவர்கள் என்று மூன்றாக உளர். இதனை விளக்கிட எழுந்த வாக்கியமே अन्त: शाक्त: बहि शैव : व्यवहारेतु वैष्णव: ஆகும். இந்த விஞ்ஞான விளக்கத் தத்துவத்தை முற்றும் விளக்கமாவதை காயத்ரீ மந்திரத்திலும், காய்திரி வடிவத்திலும் விஸ்வகர்மன் படிமத்திலும் காணலாம். இவற்றுக்கு தியான ஸ்லோகங்களும் உள.

போகிறோம். இந்த நிலையில் ஓமின் விளக்க உரையாக நாவலந்தீவில் [ஜம்பூத்வீபம்] மயேந்திரமாமலையில் வாழ்ந்து, ஓம் என்ற விஞ்ஞான மூலத்தை ஓர்ந்து, அதனை முதன்முதலில் விளக்கி, அடுத்தடுத்து அதன் விரிவாக்கங்கள் பேசப்படுவதை அடுத்து வரும் மூலசூத்திரங்களை வைத்து உற்றறியலாம். யார் இவற்றைக் கண்டு சொன்னது தெரியுமா? பெயரென்ன? அவன் பெயர்தான் ஏற்கனவே சொல்லிவந்த **மாமுனி மயன்** என்பவனாவன். இவனை மறக்காதீர்கள். இவன்தான் தென்னவன் என்று தமிழிலும், தெக்ஷிணா மூர்த்தி என்று சம்ஸ்கிருதத்திலும் வரலாற்றுக் காலம் தொட்டு சமயத் துறையில் கொண்டாடப் பட்டவன். சிற்ப சாஸ்திரங்களை இயற்றிய முன்னோனும், முதல்வனும் இவனே. முதல் சூரிய சித்தாந்தத்தைத் தந்தவனும் இவனே. உலகம் உருண்டையானது என்பதையும், அது தன்னியல்பால் தன்னைத்தானே சுற்றி வருகிறதையும், சூரியனைச் சுற்றி வருவதையும், நவகோள்களைக் கண்டு அவற்றின் ஓட்டங்களையும் முதன் முதலில் கண்டு சொன்னவன்! இவனே மெக்ஸிகோவில் மாயன் எனப்படுகிறான். இந்திய நாட்டில் உள்ள சிற்பிகளும் மாயர்கள் தான் – மயன் வழி வந்தவர்கள் என்பது பொருள்.

சிற்ப சாஸ்திரம் ஓர் அதிசய விண்கலைநூல்

சிற்ப சாஸ்திரம் என்பது பிரபஞ்ச நுட்பம் பொதிந்த ஓர் அதிசய விஞ்ஞான சாஸ்திரம் என்பது இப்போது உலகளாவிப் பரவி வருகிறது. ஒலியிலிருந்து ஒளிக்கும் ஒளியிலிருந்து ஒலிக்கும் இட்டுச் செல்லும் உச்ச விஞ்ஞானத்தின் விரிவாக்கம் சில்ப சாஸ்திரம். இதற்குச் சிற்பமாச் செந்நூல் என மயன் பெயரிட்டிருக்கிறான். செந்நூல் என்பது செய்நூல் (applied science) என்று பொருள்படும். ஒளியின் அதிர்வுகள் (rhythm) சிருஷ்டி நெறியாகிற நுட்பத்தை – அடிப்படையாகக் கொண்ட கலை நூல் – விண்கலை நூல் – சிற்ப விஞ்ஞானம் என்று மரபில்

சொல்லப்படுவதாயிற்று[1]. विज्ञानं शिल्प कौशल्यं *(விஞ்ஞானம் சில்ப கௌசல்யம்)* [2]जगत् र्सवं शिल्पमेव [ஜெகத் சர்வம் சில்ப மேவ][3] शिल्पात् प्रतिमा : जायन्ते [சில்பாத் பிரதிமாः ஜாயந்தே] – இவற்றை உற்று நோக்குங்கள். சமயக் கொள்கைகளில் தெளிவு பிறக்கும். இந்த நேரத்திலும் இத்துறையில் அசல் மறைந்து போலிகள் தலைப்படுகின்றன. வாஸ்து தத்துவமும் கலப்படமாகி விடுமோ என்ற அச்சமும் தோன்றுகிறது. இந்நிலை விசனத்துக்குரியதே. இதனாலேயே இந்தத் தொடக்கவுரையை விரிவாக்கினேன். மக்கள் புரிந்து கொண்டு நலமெய்துவார்களாக. இப்பின்னணி இல்லையேல் உங்களால் பிரணவ வேதத்தைப் புரிந்திட இயலாது என்பேன்.

ஓமியமும் ஓவியமும்

"ஓம்" பற்றிய – அதிலிருந்து கிளர்ந்தெழுந்த காட்சி பற்றிய – மாமுனி மயனுடைய விஞ்ஞானப் பாக்கள் வருமாறு;

**"ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே"
"நிறையொலி நேரொலி வெளியொலி விண்மொழி
மறையொலி ஓமென வழுத்தற் பாற்றே"
"மறைமுதல் ஒலி ஓம் அறைதல் மரபே"
"மொழிமுதல் ஓமென் றுரைத்தல் வழக்கே"
"அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்"
"வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப"
"குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே"
"ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே"
"எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே"
"ஐந்தியல் மொழியாய் எண்ணிலை யெழுத்தாய்
வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம்"**

---

1. சிற்பத்தின் சிறப்பானது அது விஞ்ஞான இயல்புடையதாய் இருப்பதே.
2. உலகப் பொருள்கள் அனைத்தும் விஞ்ஞானப் பொருள்களே.
3. சிற்பத்திலிருந்து [அகக் காட்சியிலிருந்து] படிமங்கள் தோன்றுகின்றன. அகவுணர்வுகள் புறக்காட்சியாக மிளிர்கின்றன என்பதே சிருஷ்டி நுட்பம்.

இந்தப் பாக்களிலிருந்து வெளிப்படும் ஒலிக்காட்சியின் வளர்நிலை- வளர்ந்து விட்ட நிலை எதுவெனப் [Process of evolution of OM sound (mono syllabic sound) to sound based picture] புரிகிறதா? புரியும் என்று நம்புகிறேன். இது காதால் கேட்கும் காட்சி என்றாகும் (aural form). இதற்குத் தமிழில் ஓமியம் என்று பெயர். இந்த ஒலிக் காட்சியானது **எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி** சேர்ந்த நிலையில் கிடைக்கிறது என்பது தேற்றம்.

இந்த நெறிமுறையிலேயே கண்ணால் பார்த்தறியும் காட்சியும் உருப்பெறும் என்பது ஐந்திற மரபு விஞ்ஞானம். **எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி** என்ற ஐந்தொழிலுக்குப் பதிலாக **புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு** என்ற படிமுறை உளது. இதனால் கண்ணால் பார்த்துணரும் கோட்டுரு ஏற்படுகிறது. [இதற்கும் ஐந்தொழில் என்றே பெயர். இதனைத் தான் பஞ்ச கிருத்யம் என்கிறோம். பொது இலக்கணப் பெயர் [அ] விஞ்ஞானப் பெயர் ஐந்தியல் எனப்படுகிறது.] இங்கே ஓமே ஓங்குற்று அதுவே கோடாகி வரிவடிவம் அல்லது தெரிவடிவம் ஆவதால் அதற்கு ஓவியம் என்று பெயர். இயற்கையின் ஓம் என்ற ஒலியும், ஓம் என்ற ஒளியும் ஓங்கி வளர்ந்து ஒலிப் பொருளாகவும் (sonic form) ஒளிப் பொருளாகவும் (visual form) இரண்டாகப் பிரிவதை உற்றறியுங்கள். இதனை சிருஷ்டி நுட்பம் என்று விஞ்ஞான மொழியில் கூறுகிறோம். இப்படி எந்த சாஸ்திரம் பேசியது? சொல்ல முடியுமா? இலக்கண நூலாகிய ஐந்திறம், அதன் உரைநூல் ஆகிய பிரணவ வேதம் என்பதை மறக்காதீர்கள்; மறைக்காதீர்கள். இவை இரண்டும் தோன்றிய இடம் தான் நாவலந்தீவு [குமரி நன்னாடு]. எக்காலத்தில் எனில், முதற்சங்க காலத்தில் என்பதை ஐந்திறத்தின் கடைசிப் பக்கத்தில் காணலாம்.

'ஓம்' அனைத்து மொழிகளுக்கும் பொதுவான மூல ஒலி

இந்த நிலையில் சம்ஸ்கிருத மரபில் இந்த ஓம் என்ற ஒற்றொலியை பிரம்மம் என்று சொல்வதை யாவரும் அறிவர்.

"ஓமிதி ப்ரஹ்" "*ஓமிதிப் பிரம்மம்*" என்பது அச்சொற்றொடராகும். எல்லாம் ஓமில் அடங்கும்: எல்லாம் ஓமிலிருந்து தோன்றும் என்பது கருத்து. அதாவது, ஓம் என்பது ஒரு மகத்தான பொருள் என்பது பொருள். உற்றுணர்க. இதே துவனியில் "வஸ்த்விதி ப்ரஹ்" "*வஸ்த்விதிப் பிரம்மம்*" என்று சிற்பியர் வஸ்துவை - நிலைப்பொருளாக (eternal substance) - பெரும் பொருளாக (macro form) - நுண் பொருளாக - (micro form) - பிரம்மம் என்றும் கூறுவர். அதாவது, வஸ்துப்பிரம்மம் என்று விஸ்வகர்ம இன வழி வந்த சிற்பியர் கூறுவர்[1].

தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றோடொன்று இணைந்த – ஒட்டிப்பிறந்த – இரட்டை மொழிகள்

சமயத்துறை சார்ந்த தமிழ்க் கவிஞர்களுள், தமது இனிமையான தமிழ்ப் பாடல்களால் மக்களைக் கவர்ந்து, அவ்வழி சென்று, சைவ சமயத்தை இனிமை பெறச் செய்து, சைவத்தைப் பரப்பிய ஒரு தமிழ்க்குடிமகன் அப்பர் ஆவார். திருநாவுக்கரசர் என்ற சிறப்புப் பெயரையும் வகித்தவர். அவர் ஒரு சொற்சித்தர். தமிழின் இனிமையையும் சம்ஸ்கிருதத்தின் இனிமையையும், அவை தோற்றிய ஒலி – ஒளிப் பொருள்களையும் ஒப்பிட்டு அவற்றின் அடிப்படையை ஒருமைப் பாட்டைத் துய்த்து அவர் பாடியது யாதெனில்,

> **"ஆரியம் கண்டாய் தமிழ் கண்டாய்;**
> **ஆரியமும் தமிழும் ஆனாய் கண்டாய்;**
> **ஆரியந் தமிழோடிசையானவன் கண்டாய்"**

என்பதாகும். இது பிற்காலத்திய கூற்று எனினும், இதில் ஆய்வுணர்வும், ஆய்வாற்றலும் தெளிவும் மிளிர்கிறது எனலாம். **ஒளியை** உபயோகிக்காத – போற்றாத சமயமே உலகில் இல்லையெனலாம். எனவே, மதம் வேறு, சமயம் வேறு என்பது

---

1. இந்த வஸ்து பிரம்மமே, விஸ்வப்பிரம்மமாகி, வாஸ்து பிரம்மமாகி இறுதியில் விராட் விஸ்வப் பிரம்மனே நம: என்ற மந்திரமாகவும் சிற்பியர் மரபில் உறுதி பெறுவதாயிற்று. இதனை உருவகித்து ஐந்து தலை கொண்ட விஸ்வ புருஷனின் படிமத்தையும் உருவாக்கியிருக்கிறார்கள். இதுவே சமயத் துறையில் சதாசிவமூர்த்தி ஆயிற்று என்க.

புரிகிறதல்லவா? மதம் என்பது intellectual term என்றும் சமயம் என்பது Scientific or spiritual term என்றும் தொனிப்பதை உற்று நோக்குக. காலத்தின் (Absolute Time) நுட்பத்தை ஏற்கெனவே சொல்லியதையும் கருத்திற் கொண்டிடுக.

முன்னொரு காலத்தில் சம்ஸ்கிருதத்துக்கும் [அ] பிராகிருதத்துக்கும் தமிழுக்கும் உயிரெழுத்து 15ம், மெய்யெழுத்து 35ம் இருந்தன. இந்த நிலை இலக்கணங்கள் வகுக்கப்படுவதற்கு முன் இருந்தது என்று திருமந்திரமணி, துரிசைக்கிழார் என்ற அ.சிதம்பனார் அவர்கள் தாமெழுதிய தமிழ்ச் சங்க வரலாறு என்ற ஆராய்ச்சி நூலில் குறிப்பிடுகிறார். அப்போதுதான் கிரந்தாக்ஷரம் தோன்றியிருக்க வேண்டுமெனப் புலனாகிறது. மரத் தச்சர்கள் எழுத்துக்களை மரத்தில் செதுக்கிக் காட்டிய கால நிலை எனலாம் [மயன் சங்ககால மரத்தச்சன் என்பதை அறிக]. ஓலையில் எழுதிய வட்டெழுத்தும் அப்போதுதான்.

இதற்குப் பிறகு அக்ஷரங்களை எளிமையும் இனிமையும் பெறச் செய்த காலம் முதற்சங்க காலம் என்றும், அதற்கு உதவிய நூலே ஐந்திறம் என்றும் குறிப்பிடுகிறார். இவன் சங்கப் புலவன் இல்லையெனினும் சங்ககால விஞ்ஞானி என்று இப்போது தெரிய வருகிறது. இவனது ஐந்திறத்தில் 12 உயிரெழுத்துக்களும், 18 மெய்யெழுத்துக்களும் மொத்தம் 30 எழுத்துக்களே பேசப்படு கின்றன என்று தெளிவுற விளக்குகிறார் [காண்க அவரது நூலில் பக்கம் 63-64] இக்கருத்து இப்போது வெளிப்பட்ட ஐந்திறத்தில் உளதென்பது மிகப் பெரிய சங்க காலச் செய்தி என்பது நினைவிற் கொள்ளத்தக்கது. உயிர் எழுத்து குறில் 5, நெடில் 5, ஐ-ஔ 2, மொத்தம் 12, மெய்யெழுத்து 18. இதுதான் ஐந்திறக் கணக்கு. இதனைப் பின்பற்றியதே தொல்காப்பியம் என்க.

முதல்மொழி முதுமொழி

மேலுமொரு கருத்தை ஆய்வோம். பேச்சும் எழுத்தும் எந்த மொழிக்கு முதன்முதலில் சொந்தமெனத் தெரிகிறதோ அதுவே **முதல்மொழி, முதுமொழி** என்று கொள்ளுவதே அறிவுக்குப்

பொருந்துவதாகும். அஃதொரு விஞ்ஞான மொழி என்றும் சொல்ல வேண்டும். காரணம், மொழியும் ஒரு விஞ்ஞான அடிப்படை கொண்ட பொருளே. மொழிக்கும் மொழிக்கான இலக்கணமும் தோன்றிய காலத்தைக் கணிப்பதற்கும் விஞ்ஞானம் தேவை எனலாம். இந்த விஞ்ஞானத்திற்கு ஓர் அடிப்படை இருத்தல் வேண்டும். அடிப்படையே ஓர் விஞ்ஞானம்தானே. இந்த அடிப்படையானது கணக்கியல் (mathematics or mathematical science) என்று சொல்லப்படுகிறது. கணக்கியல் அடிப்படையில் தோன்றிய இலக்கணம் நம்நாட்டில் தொல்பழங்காலத்திலேயே வெளிவந்துவிட்டது. அக்காலத்திய கணக்கியலுக்குத் தோற்று வாயும் - மூலகணித நூலும் - மயன் இயற்றிய ஐந்திறமே எனத் தெளிவாகிறது. இன்றைய விஞ்ஞானத்தை ஒட்டியும், அதற்கு அப்பாலும் சென்றுவிட்ட ஒரு கணக்கியலைக் கொண்டு விளங்குகிறது. எனவேதான், அக்கணக்கியல் எவராலும் புரிந்து கொள்ளப்படாமல் மறைந்து கிடப்பதாயிற்று. ஆனால், நடைமுறையில் இக்கணக்கியல் இன்றும் நிலவி வருகிறதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக்கால விஞ்ஞானத் துறையில் இன்று உச்ச விஞ்ஞானமாகக் கருதப்படுவது Frequency of vibration of space and Science of resonance - துடிக்கணக்கு அல்லவா? இதுதான் மூலத்தின் கணக்கு அல்லது மூலக்கணக்கு எனப்படுகிறது. நம் மொழிக்கு இக்கணக்கு கிடைத்து பத்தாயிரம் ஆண்டுகளாகிறது. இக்கணக்கியல் தமிழுக்கும் சமஸ்கிருதத்திற்கு முண்டு. மேற்சொன்ன science of resonance இன்று modern science ஆகப் போற்றப்படுகிறது[1]. இந்த விஞ்ஞானத்தின்

---

1. Scientist cum Architect Dr.Robert Lawlor என்பார் traditional architectural designing சம்பந்தமாக இக்கருத்தை வெளியிடுவதை உற்றுப் பார்த்திடுக.
"The fundamental nature of the material world is knowable only through its underlying patterns of wave forms".
"Both our organs of perception and the phenomenal world. we perceive of form and proportion. Therefore, when many ancient cultures chose to examine reality through the metaphors of geometry and music (music being the study of the proportional laws of sound frequency) **they were already very close to the position of our most contemporary science**".
"The point of view of modern 'force-field' theory and wave mechanics corresponds to the ancient geometric - harmonic visions of universal orders as being an interwoven configuration of patterns".
Robert Lawlor quotes Bertrand Russel in this connection as saying "what we perceive as qualities of matter, are actually differences in periodicity".

வழிப்பட்ட படைப்புகள்தான் இயல், இசை, நடம், கட்டிடம், சிற்பம் எனப்படுகிறது. இவ்வைந்தும் சேர்ந்து ஐந்தமிழ் எனப்பட்டது. இவ்வைந்தும் சிருஷ்டிக் கலைகள் எனப்படும். ஏனெனில், இந்தக் கணக்கில்தான் பரம்பொருளின் சிருஷ்டிப் பணிகள் இன்றும் இந்த ஞாலத்தில் நடக்கின்றன. சிருஷ்டிப் பணியை manifestation [தானியல் வடிவு] என்று சொல்வது மய விஞ்ஞானம்.

தொல்பழங்கால நிகழ்வுகளை ஆய்தல்:

Vedic Astronomical dating என்ற ஓர் ஆய்வு நெறி நடப்பு இருபத்தோராவது நூற்றாண்டில் தலை தூக்கியிருக்கிறது. இஃது ஆய்வறிஞர் களின் இசைவைப் பெற்று வருகிறது, அல்லது பெற்று விட்டதெனக் கூறலாம். இதன் மூலம் வரலாற்று நிகழ்ச்சிகள் துல்லியமாகக் கணித்தறியப்பட்டிருக்கின்றது. இதற்கு உதவிய விஞ்ஞானம் வானவியல் (Astronomy or Astro Physics) எனப்படும். இதனை விண்ணியல் என்று சொல்ல வேண்டும். விண் [அ] விண்வெளி என்பது ஆகாஸமே. இதுவும் மூலக் கணக்கிற்கு அடுத்து வந்த கோள்களின் சுழற்சி பற்றிய விண்ஞானக் கணக்கியலே. இதன் மூலம் ஐந்திறம் தோன்றிய காலம் பத்தாயிரம் என கணக்கிடப்பட்டிருக்கிறது. இதுவே தலைச்சங்க காலம் என கணித்திருக்கிறார்கள்.

விண்ணியல் மண்ணியல் ஆய்வுகள்

இந்த ஆகாஸத்தின் இயல்பை - விண்ணியலை விடுத்து மண்ணியல் ஆய்வைத் தொடக்கத்தில் மேலை விஞ்ஞானம் எடுத்துக் கொண்டு இப்போது விண்ணியலுக்குச் சென்று விட்டது. மண்ணியல் ஆனது காட்சிக்கும் அளவுக்கும் உட்பட்டது. ஆனால், விண்ணியல், சிந்தனைக்கும் அளவிற்கும் அப்பாற்பட்டதாய் உள்ளது. மண்ணை அளந்த கைகள் விண்ணை அளக்க முடியவில்லை. ஆனால், மண்ணையும் விண்ணையும் அளந்து அதன் இயல்புகளையும் உற்றறிந்து, விண்ணே மண்ணென நிறுவிய விஞ்ஞானம் இந்திய விஞ்ஞானமாகும். இந்த இரண்டு விஞ்ஞானங்களை உள்ளடக்கிய நூல்களே வாஸ்துவும்

ஆகமமுமாகும். விண் என்பது energy, மண் என்பது matter. Energy-க்குள் Matter-ம், Matter-க்குள் Energy-யும் இருப்பதைக் கண்டு சொன்ன தொல் பழம் நூல் வாஸ்து விஞ்ஞானம் எனப்படுகிறது. இதனைத் தமிழில் பொருளியல் [அ] பொருள் நூல் என்று துணிந்துக் கூறலாம். விண்ணும் மண்ணும் விஞ்ஞானப் பொருள்களே. தன்னியல்பால்-தானே தோன்றிய - ஆற்றலே மயமான-பரம்பொருள் ஆகும் [அ] பெரும் பொருளாகும். விண் மூலத்தையும், மண் மூலத்தையும் ஒன்றெனக் கண்டுபிடித்த அதிசய விஞ்ஞானம் இஃதாகும். எனவே விண்ணையும் மண்ணையும் வணங்கு கிறோம்!

வாஸ்து விஞ்ஞானத்தில் $E = mc^2$ தத்துவமும் சூத்திரமும்

இந்த நிலைக்கு எய்திய இன்றைய விஞ்ஞானம் $E = mc^2$ என்று நிறுவி விட்டது. இஃதொரு மிகப்பெரிய சாதனை. இதனை நான் பிரம்ம சூத்திரம் [ஒளி நூல்] என்று சொல்லி வருகிறேன். காரணம், இந்தச் சொல் வாஸ்து விஞ்ஞானத்தில் அன்றாடம் சொல்லியும், கையாண்டும் வரும் மரபுக் கலைச் சொல். இதனை உலக நன்மைக்குத் தந்து உதவியவன் பேராசிரியர் ஐன்ஸ்டீன் ஆவன். இந்த ஒளி நூல்தான் பிரபஞ்சத்தைக் கட்டுக் கோப்புடன் வைத்துள்ளது! கட்டி வைத்துளது என்றும் சொல்லாம்.

இந்த நிலையில், நாமும் நமது ஆராய்ச்சிகளுக்கு நிலத்தையே எடுத்துக் கொண்டு, material scienceயே பெரிதெனக் கொண்டு, நிலத்தின் தோற்றத்திற்கு மூலப்பொருளான ஆகாஸத்தை விட்டுவிட்டோம். ஆகாஸத்தில்தான் இத்துடிப்பு அன்று முதல் இன்று வரை நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தத் துடிப்பு நிலத்திற்கும் உண்டு என்று நிறுவி, அதனை மரபில் புகுத்தி வைத்ததும் வாஸ்து விஞ்ஞானமே. ஆனால் யாரோ யாரையோ மூளைச் சலவை செய்து ஆகாஸத்தையும் பூமியையும் பிரித்து வைத்து விட்டார்கள். இதனால் ஆகாஸமில்லாமல் பூமியில்லை என்ற விஞ்ஞானக் கருத்து இன்றைய விஞ்ஞானத்திற்குத் தோன்றவில்லை. அந்த விஞ்ஞான மரபை தொத்திச் சென்ற

நம்மவர்க்கும் தெரியாமல் போய் விட்டது. கொஞ்சம் தெரிந்திட்ட காலத்திலும் ஆய்வுகள் செய்யாமல் மதக் கோட்பாடுகளுக்கு உதவிகரமாகச் செய்திகளைக் கையாண்டு விஞ்ஞானத்தை நழுவ விட்டு, மூட நம்பிக்கை களைப் பெருக்கிக் கொண்டு விட்டோம்.

வேத நெறி ஆய்வுகள் தேவை

வேதங்களை மிகத் தொன்மையெனக் கொண்டு அதற்குள்ளேயே மூழ்கிப் போனோம். பிறருக்குச் சொல்லிக் கொடுக்கவில்லை- காட்டவுமில்லை. பெருமையையே பேசிக் காலத்தைக் கடத்தி விட்டோம். வேத கால முனிவர்கள் மிக நுண்ணிய அறிவுடையவர்களாக இருந்தார்கள் எனக் கொள்கிறோம்; உண்மையே ஆனால், வேத வாக்கியங்களில் ஊடுருவி நிற்கும் நுண்பொருளை சரிவர ஆராய்ந்து, தொகுத்து சீலப்படுத்தி எல்லா மக்கட்கும் புரியத் தந்தோமில்லை. அவற்றைக் குறுகிய வட்டத்துக்குள் அடைத்துப் போட்டு விட்டோம். இதனால், ஆய்வுலகத்தில் ஏற்பட்ட மயக்கம் இன்னும் தீரவில்லை. அப்படியே உளது. இதனால் வளர்ச்சி எனும் நீரோட்டம் தடைப்பட்டு நிற்கிறது. இதே போல்தான் சிற்ப ஞானிகளும் தங்கள் விஞ்ஞானத்தை மறைத்துக் கொண்டு (அ) மறந்துவிட்டு ஒதுங்கி நின்று விட்டார்கள்.

பழைய வேதத்தின் புதிய தோற்றம்

இதற்கிடையில், இந்த நிலையில் ஒரு பழைய வேதம் புதிய வரவாகக் கிடைத்துளது. அதுதான் **பிரணவ வேதம்** என்ற பெயரில் காலம் கடந்து வெளிப்பட்டு இன்று வந்திருக்கிறது. இதனைச் சுருக்கி சூத்திரமாகத் தந்து விட்ட ஐந்திறம் என்ற நுட்ப விஞ்ஞான நூல் புரிந்து கொள்ளப்படாமல் வழக்காற்றிலிருந்து ஒதுங்கிக் கிடக்கிறது. இங்ஙனம் ஒதுங்கிக் கிடந்த ஐந்திறம் [1] இப்போது மக்களுக்குக் கிடைத்திருக்கிறதென்றாலும் இந்நூலின்


1. தமிழ்நாடு அரசு 1986 ல் பதிப்பித்த விஞ்ஞான ஏடு. ஸ்தபதி இதனைத் தன் செலவில் மறுபதிப்பாக அச்சேற்றி விஞ்ஞான விஷயங்களை பொதுமக்கட்கு எளிய தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிடவிருக்கிறார்.

விண்பொருள் மண்பொருளாக ஆதல்
வஸ்து வாஸ்துவாதல்
Energy turning into Matter

GRAPHICAL REPRESENTATION OF

PRANAVA VEDA

MECHANICS OF SUBTLE ENERGY TURNING INTO GROSS ENERGY
(The turn of subtle into gross)



The Primal manifest form of the primordeal Vastu.
It is squarish and of minutest particle of space.
Tridimensionally it is the structure of OM - Light and OM - Sound.

To put it in modern terminology, these energy cubes are building blocks of the universe and infact, those are the material forms of the universe as well.

எட்டில் பிறழ்வே நவமெனவாகி - மயன்

THE SQUARE (8x8) : the arcehtypal manifest wave form of the unmanifest Supreme Being

turns into

THE CIRCLE (9X9) : the gross material form, the area of both remaining the same.

பால் நாட்டம் எவருக்கும் வரவில்லை. இஃதொரு துரதிருஷ்டமே. ஒரு மொழி மற்றொரு மொழி மீது செலுத்தி வந்த ஆதிக்கம் ஒரு பெருங்காரணமெனக் கூறலாம். மொழியை விடுத்து மொழி மூலமாகிய ஒளி – ஒலி பற்றி ஆய்வுகள் நடத்தி உண்மையறிந்திட ஒளி ஒலி விஞ்ஞானிகள் இன்றைய உடனடித் தேவையெனலாம். இதன் பிறகே மொழி விஞ்ஞானத்திற்கு வர வேண்டும் என்று சொல்லத் தோன்றுகிறது. இந்த நிலையில் மொழி பேதங்கள், கலாச்சார வேறுபாடுகள், சமயக் கொள்கைகள் பற்றிய வேறுபாடுகள் மடிந்தொழியும் எனலாம். ஒன்றுபட்ட பாரதத்தை இதன் பிறகே நாம் காணல் இயலும்; இல்லையேல் எட்டாக் கனியே.

இதை ஏற்கும் மன விசாலமும், மன வலிமையும் உடையவர்கள் கீழ்க்கண்ட ஐந்திறம் காட்டும் இரண்டு விஞ்ஞான வரிகளை உன்னிப்பாக மீண்டும் பார்த்திடக் கோருகிறேன்.

"ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே"
"காலக்கூறே கணக்கியலாகி"
"கட்டிடக்கலையே கணக்கியல் உச்சி"

- மாமுனி மயன்

இதனை உற்றுணர்ந்துதான் எனது வாஸ்து மரபின் வேர்களை கண்ணால் கண்டு கொள்ள முடிந்தது; உறுதி செய்திட முடிந்தது. விளக்கத்தை வெவ்வேறு கோணத்தில் – வெவ்வேறு காலகட்டத்தில் எழுதியதும், பேசியதும் இதன் வழிப்பட்டதேயாகும்.

வாஸ்து–ஆகம விஞ்ஞானத்தைப் புறக்கணித்தல் – வரலாற்றில் நடந்து விட்ட மாபெரும் கொடுமை.

வாஸ்து சாஸ்திரமும், ஆகம சாஸ்திரமும் சமஸ்கிருத மொழியில் இருந்தும், சமஸ்கிருத மொழி வல்லுநர்கள், ஆய்வர்கள், வரலாற்று ஆசிரியர்கள் இவற்றை மதநூல்கள் என்று ஒதுக்கி விட்டனர். ஒரு சிலர் meta physical என்று குற்றம் சுமத்தி ஒதுக்குவாராயினர். ஆனால், இவ்விரு சாத்திரங்கள் மட்டும்தான் சமஸ்கிருத மொழிக்கே உரித்தான technical literature ஆகும். அதே சமயத்தில் தமிழ் விஞ்ஞானம் தொழில்நுட்பம் செரிந்த நூலுமாகும். இரு மொழியாளர்களும் இந்த சாத்திரங்களை ஒதுக்கி வைத்து விட்டு ஏதேதோ கற்பனைகளை அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார்கள். கடவுளையே படைத்து பயன் தரச் செய்த கலாச்சார மரபு இதுதான்; மிகையல்ல; முற்றிலும் உண்மை. இந்த நிலையில், Prof.Keith என்பார் தமது History of Sanskrit Literature-ல் வாஸ்து ஆகமம் என்ற சொற்களுக்கே யாதொரு இடமும் அளிக்காது, அவரும் ஒதுக்கி வைத்து விட்டார். இதனால், இந்திய வரலாறும், குறிப்பாகத் தென்னக வரலாறும் மறையுண்டு போயிற்று. தென்னகத்தில் முகிழ்ந்த அரியதொரு விஞ்ஞானமும் மறைந்து போயிற்று. ஆனால், அந்த விஞ்ஞானம் பெற்றுத் தந்த

செயல் வடிவங்கள் - கண்ணால் பார்த்தறியும் விஞ்ஞானக் கட்டிடங்கள், சிற்பங்கள், திருவுருவங்கள், கடவுட் படிமங்கள், சிந்தனையுந்தும் காட்சிப் பொருள்கள் நிலைத்துவிட்டன. இதற்கான மூலவர்களும், மூல நூல்களும் வரலாற்றில் ஏறிடாமல் மறைந்து கிடக்கின்றன. இஃதொரு கொடுமையல்லவா?

வாஸ்து ஆகமம் இரண்டும் விஞ்ஞான நூல்கள் - அவற்றின் நிலை அன்றும் இன்றும்

அடிப்படைக் காரணம் யாதெனில், வாஸ்துவும், ஆகமமும் வாழ்க்கைக் கதை சொல்லும் இலக்கியங்கள் அல்ல (not literary work). அவையிரண்டும், பிரபஞ்ச இரகசியங்களை - சிருஷ்டி நுட்பங்களை மூலமாகக் கொண்ட விண்ஞான நூல்கள் மற்றும் தொழில் நுட்ப நூல்கள் ஆகும். இந்த நூல்களை ஆய்வு செய்தோரும், மொழி பெயர்த்தோரும் இவ்வுலகில் உண்டுதான். ஆனால், அவர்கள் இலக்கிய அறிவு மட்டும் கொண்டிருந்ததாகத் தெரிகிறதேயொழிய மேலே சொன்ன Cosmological secrets & science அதாவது பிரபஞ்ச விஞ்ஞான இரகசியங்களை அறிந்து அதன் வெளிப்பாடான தொழில் நுட்பங்களை அறிந்த வல்லுநர்களாகவும், மண்ணுலகை விண்ணுலகாக மாற்றியமைத்திட்ட வழிமுறை தெரிந்தோராகவும், அவற்றின் மூலம், பாரத நாட்டு வரலாற்றை நிர்மாணிக்கும் ஆற்றலுற்றோராக இருந்திடவில்லை என்பதே காரணமாகத் தெரிகிறது. இப்படிப்பட்டோரை non-technical people என்று சொல்லலாம். பெரும்பான்மை உலக ஆய்வர்களும் இப்படித்தான் இருப்பதாகத் தெரிகிறது. இந்தியத் தொழில் நுட்பங் களை மற்றும் விஞ்ஞான அடிப்படைகளை உற்றறிய எவரும் மேலை நாட்டினருக்கு வழிகாட்டவில்லை. இப்போது நாமும் உற்று நோக்கவில்லை. அதே சமயத்தில் இத்தகைய உணர்வும் ஆற்றலும் பெற்றோர் இந்த உலகில் ஜனித்துமிருந்தார்கள் எனச் சொல்லவும் முடிகிறது. இத்தகையோர் இருவரே எனக் கணித்தறியவும் இப்போது என்னால் முடிகிறது. ஒருவர் 10,000

ஆண்டுகளுக்கு முன்பும், பிறிதொருவர் 100 ஆண்டுகட்கு உள்ளும் தோன்றினர் என்று சொல்லாம். இவர்கள் யார் என்பதைக் கட்டுரை ஓட்டத்தில் நீங்கள் தெரிந்திருக்கலாம். மற்றவரையும் காட்டியுள்ளேன். **முன்னவன் மயன்,** பின்னவர் **பேராசிரியர்** ஐன்ஸ்டீன். இவர்தான் energy-யும் matter-ம் ஒன்றே என நிறுவிய அறிவுலக மேதைகள். இதையே மயன் वस्तुरेव वास्तु வஸ்துவே வாஸ்துவாகிறது என்றான். இருவர்க்கும் இடைவெளி பத்தாயிரம் ஆண்டுகள் என்பது இன்றைய கணிப்பு.

வாஸ்து – ஆகமம் கொண்டுள்ள சமஸ்கிருதத்தை – உள்ளுரையும் விஞ்ஞானத்தை – இப்போதவது உற்றுநோக்குக

மேலும், தமிழறிஞர்கள் சமஸ்கிருதம் படிக்காமல் போனதும், சமஸ்கிருத மொழி கற்றோர் தொல்பழம் தமிழ் நூல்களைப் படித்தறியாமல் போனதும், மூலத் தமிழ் விஞ்ஞான நூல்கள் கிடைக்காமல் போனதும் பெருங்காரணமாகத் தோன்றுகிறது. இரண்டு மொழிகளும் தெரிந்திருந்தாலும் Technical knowledge இருசாராருக்கும் கிடைக்காமல் போனது மிகப்பெரிய காரணமாகத் தோன்றுகிறது. இந்த ஞாலத்தில் இறைவன் செயல்கள் – படைப்புகள் என்று சொல்வதெல்லாம் விஞ்ஞானமயச் செயல் நெறிகளாகும் (scientific functions or phenomena) என உற்றறியத் தவறிவிட்டார்கள். அறிய முற்பட்டவை முற்றுப் பெறவில்லை. அறிந்தவைகளோ அரைகுறையாக உள்ளன. இதனால் மூடப்பழக்க வழக்கங்களே நமது கலாச்சார மரபில் மிகுவதாயின. பிரம்மத்தை விஞ்ஞான மயமானது என்றும் ஞானமயமானது என்றும் சொன்ன மரபில் (विज्ञानं ब्रह्म, ज्ञानमयं ब्रह्म) மேலும், சிற்பக்கலைப் படைப்புக்களில் விஞ்ஞானத்தின் சிறப்பைக் காணலாம்; "विज्ञानं शिल्प कौशल्यम्", "जगत् सर्वं शिल्पमेव भवति" என்று சொன்ன நாட்டில் இதன் நுட்பங்கள் ஆயப்படாமலும், அறியப் படாமலும் ஒதுக்குண்டுவிட்டதும் ஓர் உச்சக் காரணமாகச் சொல்லலாம்.

சங்க காலத்து ஐந்திறமும் தொல்காப்பியமும்

ஜெகத்குரு மயன் என்பான் தொல்பழம் காலத்தில் எழுதி அருளிய அனைத்து நூல்களும் 'அ' முதல் 'ன' வரைத் தொழில் நுட்ப (technological) மற்றும் விஞ்ஞான நூல்களாக இருந்து விட்டதாலும், அந்த நேரத்தில் இந்த உயர் விஞ்ஞானச் செய்திகளை உற்றறிய - ஜீரணிக்க - ஏற்க ஆற்றலும் இருந்திருக்கக் காரணமில்லையாதலாலும், அறிவு முற்றிய இக்காலத்திலும் இதே நிலை இருப்பதாலும், அவனுடைய நூல்கள் தொல்பழங்காலத்திலேயே அதாவது அவன் வாழ்ந்த சங்க காலத்திலேயே வழக்கொழிந்து விட்டதில் வியப்பில்லை என்பேன். இப்படிப்பட்ட செய்திகள் பல உள. குறிப்பாக, ஏற்கெனவே குறிப்பிட்ட **ஐந்திறம்** என்ற **"பிரபஞ்ச விஞ்ஞான மூலநூலை"** "Cosmology" அதன் செயல் நெறிகளைப் பற்றிக் கூறும் ஓர் ஒப்புயர்வற்ற நூல் அன்றும் இன்றும் தெரியாமலே கிடந்து வழக்கொழிந்து போய்க் கொண்டிருக்கிறது என்றேன். **"ஐந்திறம் நிறைந்த தொல்காப்பியம்"** என்ற குறிப்பை எவரும் ஆய்ந்திடவில்லை. அக்கறையே காட்டவில்லை. மேலும் சம்ஸ்கிருத இலக்கணமாகிய பாணினியின் அஷ்டாத்யாயிக்கும் இந்த ஐந்திறமே ஆதாரமாகவிருந்ததை விஞ்ஞானியர்கள் கண்டு சொன்னதை இன்றைய ஆய்வர்கள் குறிப்பிடுகிறார்கள். இதே போல், **"ஓவியச் செந்நூல்"** என்ற அரிய நூலும் புரியாமல் மறைந்து போயிற்று. இதனை யாரும் தேடிப் பார்க்கவில்லை என்றும் தெரிய வருகிறது. இச்செய்தியை மணிமேகலைக் காப்பியம் தெரிவிக்கிறது. மீண்டும் சொல்கிறேன். இவையெல்லாம் technical treatises, not religious documents. **இவற்றை உற்றுநோக்கினால் நமது religion-ஐ விஞ்ஞான மதம் scientific religion என்று துணிந்து சொல்லலாம்.** இக்கருத்தில்தான் தமிழ் ஞானிகள் **சமயம்** என்ற காலத்தைச் சுட்டும் விஞ்ஞானச் சொல்லை வைத்துப் பேசினர், எழுதினர் என்க. இனிமேலாவது விஞ்ஞானச் சமயம் என்று சொல்லுவீர்களா?

கடலில் மூழ்கிய குமரிக் கண்டம்

தொல்பழங்காலத்தில் நாகரிகத்தின் உச்ச நிலையில் இருந்ததெனத் தெரியவரும் தென்னகத்தின் தென் பகுதி கடலுக்குள் அமிழ்ந்து போனதே இதற்கெல்லாம் பெரியதொரு காரணமாகத் தெரிகிறது. அதன் பிறகு இன்றுள்ள பாரதம் தொல்பழங்கால குமரிக் கண்டத்தின் எஞ்சியத் தோற்றம் என்று கொள்ள வேண்டும். இதனால், இன்று தென்னாடும், பாரத நாடும் வேரில்லா ஆலமரம் போல் காட்சியளிக்கின்றது. பல விழுதுகள் பழுதுபட்டும், நீரில்லாது வறண்டு கிடப்பதாகவும் புலப்படுகிறது. இந்த நிலையில் இம்மரபின் செயல் நெறிகள் பாரதம் முழுவதும், பாரதத்துக்கு அப்பாலும் பரவிக் கிடந்த செய்திகள் அன்றாடம் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. எனது ஆய்வு நூல்களிலும் குறிப்பிட்டிருக்கிறேன். நான் ஒழுகி வரும் வாஸ்து மரபில்தான் இந்த மூலம் மையமிட்டுக் கிடக்கிறது என்று கண்டு தேறி அடிக்கடி சொல்லியும் வருகிறேன். வாஸ்துவும், ஆகமமும் வேதத்திலிருந்து தொடர்பற்றுத் தெரிந்தாலும் இந்த இரண்டு சாஸ்திரங்களின் கருத்தை, செயல் நெறிகளை, நெறி வழிப்பட்ட விஞ்ஞான வடிவங்களை புரிந்து கொள்ளாமல் வேதங்கூறும் உயரிய - மறைபொருளாகவிருக்கும் செய்திகள் அறிஞரிட மிருந்து ஒதுங்கி நிற்கிறதெனவும், வேதத்தை விஞ்ஞானிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும் மேடைகளில் வேண்டுகோள் விடுத்து வருகிறேன். எனினும் வேதவிற்பன்னர் அசைந்து கொடுக்கவில்லை.

டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்களின் பேருரை

இந்ந நிலையில் வாஸ்து, ஆகமம் இரண்டிலும் ஆழ்ந்த புலமை வாய்க்கப் பெற்று - தமிழ், சமஸ்கிருதம், அவற்றோடு ஆங்கிலத்திலும் புலமை பெற்று விளங்கும் டாக்டர். எஸ்.பி.சபாரத்தினம் அவர்கள் அண்மையில் நாகபுரியில் (Nagpur) பேசிய பேச்சின் சாரத்தைக் கீழே தருகிறேன். உற்றுக் கவனியுங்கள். உண்மை நிலை புரியக்கூடும். இவர் தற்போது

International Society for investigation of ancient civilization-யில் செயலாளராகப் பணியாற்றுகிறார். இதன் H.Q. கலிபோர்னியாவில் உளது. இதன் கிளை சென்னையில் உளது. இங்கேதான் டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் உள்ளார். இவர் பொறுப்புள்ள ஆராய்ச்சிப் பேறிஞர். Honest ஆய்வாளரும் ஆவர்.

"The unfaithful nonsensical concept about the glorious past of India and its Hindu ethos dished out by Western Historians and their camp followers should be immediately removed from the history text books and the true history of the country rooted in its Hindu ethos must be presented to the younger generation in its correct perspective", opined well known historian Dr.S.P.Sabharathnam.

Delivering the presidential address at the inaugural session of the sixth Akhil Bharatiya Itihas Sankalan Yojana at Reshimbagh. Dr.Sabharathnam charged the Marxist historians of distorting Indian history by blindly following Western Historians and continuing with incorrect interpretation of Vedic literature.

"The Indian history is distorted, defaced and full of immature and inaccurate notions about the past", Dr.Sabharathnam lamented. Lashing out the Leftist historians, who have dubbed the attempt to re-write history books as an attempt of saffronising it, he charged them of interpreting Vedic texts without attempting to understand them through traditional Agama and Shilpa texts and this led to the baseless charge that Rig Veda had justified the caste system, he regretted.

"The inner sanctorum of Indian history depends on correct interpretation of the Vedas and this could be ensured only after mastering the Agama and Shilpagrantha", he opined.

"Much of prevailing distortion in Indian history could be erased by reinterpreting Vedic literature through traditional

Agama and Shilpagranthas", he asserted and urged the 250 historians gathered at the convention to expedite the process.

- Courtesy - 'The Hitavada' - The English Daily of Central India, dated 1, February, 2003.

ஐந்திறமும் ஓவியச் செந்நூலும் புத்துயிர் பெற்று ஓங்கிட வேண்டும்

இதற்கிடையில், 1986 ல் தமிழக அரசால் அச்சிடப்பட்டு வெளியான ஐந்திறம் என்ற தமிழ் விஞ்ஞான நூலைப் படித்துப் பொருள் கொள்ள முடியாதோர் ஒதுக்கி விட்ட நிலையில் டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்களால் எளிய தமிழில் விளக்கமும், ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பும் செய்து எனது Vaastu Vedic Research Foundation மூலம் [அந்த நூல்] வெளியிடப்பட்டது [1997]. இதன் பிறகும், ஆராய்ச்சியுலகத்தில் ஏதொரு மாற்றமும், சலனமும் இதுவரையில் காணவில்லை. **ஓவியச் செந்நூல்** போல இதுவும் வழக்கொழிந்த நிலையில் கிடக்கிறது எனலாம்.

பல இடங்களில், பல நேரங்களில் நானும் டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்களும் செய்திட்ட விளக்கப் பிரச்சாரங்கள், அமெரிக்கப் புலவர்களை (Technical people) ஈர்த்து, அங்கே ஐந்திர நூல் கொண்டுள்ள விஞ்ஞானம் வேரூன்றி பரவி வருவதை இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். இஃது எங்களுக்கு மட்டற்ற ஒரு திருப்தியே, மகிழ்ச்சியே என்றாலும், நம்மவர்க்கு இத்தகைய ஆர்வம் வரவில்லையே என்று வருந்துகிறோம். வந்து விடும் என்று நம்பலாமா? இப்போது technical scholars நிரம்ப வந்து விட்டார்களே! அதனால்தான் சொல்லுகிறேன்.

முதல் வேதமான பிரணவ வேதத்தின் அரங்கேற்றம்

இந்த நிலையில், ஐந்திறத்துக்கு அடுத்ததாகப் **பிரணவ வேதம்** எனப்படும் ஐந்திற சூத்திரங்களின் விளக்கமாகத் தெரிந்திட்ட அந்த நூலின் ஒரு சிறு பகுதியே இப்போது வெளி வந்துளது. இது என்ன ஆகுமோ என்ற அச்சத்தில் இரண்டு பிரதிகளைத் தட்டச்சு செய்து, திருமூர்ந்திமலைவாழ் மாமுனிவர்,

பரஞ்ஜோதியார் அவர்களிடம் வழங்கினேன். அறிவியல் ஞானமும் ஆன்ம ஞானமும் ஒருசேர வாய்க்கப் பெற்ற ஞானியராக அவர் இருந்ததால், பிரணவ வேதத்தை இயல்பாக அவர்களிடம் அடைக்கலம் புகுந்திடச் செய்துள்ளேன். அடிப்படையில் இவர் ஒரு தமிழறிஞர். ஆன்மிகக் கலைநெறிகளை மக்கட்கு புரியச் செய்துவரும் பேரறிஞராக விளங்குபவர். செய்திகளைத் தமிழில் அழகாக, ஆழமாகப் பேசி விளக்குபவர். இவை என்னை ஈர்த்தன. உலக அமைதி நிறுவனம் "Universal Peace Foundation" என்ற நிறுவனத்தின் தலைவராக உள்ளார். பொள்ளாச்சியை அடுத்த உடுமலைப்பேட்டையில் ஒரு ஆசிரமத்தையே நடத்தி வருகிறார். குண்டலினியோக மார்க்கத்தில் அனுபவம் வாய்க்கப் பெற்றவர். நடுத்தர வயதுமுடையவர். கிருஹஸ்தர். பல்லாயிரக்கணக்கான சீடர்களை தென்னகத்திலும், அமெரிக்காவிலும் உடையவர். இவையெல்லாம் எனக்கு நம்பிக்கை தந்து என்னை அவர்பால் ஈர்த்தன.

இந்தப் பிரணவ வேத நூற்செய்திகள், பண்டிதரையும் பாமரரையும் போய்ச் சேரவில்லையானால், தொடர்ந்து வரும் மூட நம்பிக்கையில் நம் மக்கள் மீண்டும் மூழ்கி விடுவர் என்று நினைக்கிறேன். நிகழ்காலத்தில் மூட நம்பிக்கைகள் முன்பை விட பன்மடங்கு மிகுந்து விட்டன. நூல் கூறும் செய்திகள் மீது மரியாதையும், நம்பிக்கையும் ஆய்வோருக்குத் தேவை என்பதையும் சுட்டிக் காட்டி, நூலுக்குள் புகுந்திட வேண்டிக் கொள்கிறேன். இல்லையானால் உண்மையைச் சுற்றி வரலாமே தவிர உண்மையின் நடுவிடத்தைக் காண இயலாது என்பேன். அந்த நடுவிடம் தான் உணர்வில் தோன்றிடும் மூலப் பொருள் என்று சொல்லி முடிக்கின்றேன். நான் வயோதிகன் ஆகிவிட்டதால் அவரிடம் இந்த தொல்பழம் வேதத்தை சமர்ப்பித்து உண்மையான ஆன்மிக மரபை மக்கள் நலனுக்கு வழங்கிட வேண்டிக் கொண்டேன். இக்கால விஞ்ஞான மேதைகள் நன்றாகப் புரிந்துக் கொள்வர் என்று நம்புகிறேன். இக்காலத்தில் point theory, string theory and spin theory என்று சொல்லப்படும் உச்ச விஞ்ஞான

நிகழ்ச்சிகளுக்கு முடிவுரை கூறும் நூல் இந்தப் **பிரணவ வேதம்** என்று புரிந்து, துணிந்து சொல்லுகிறேன்.

அகத்தேயும் புறத்தேயும் ஒளி மயமாகக் கடவுள் இருக்கிறார்

எங்கேயோ எப்படியோ தொடங்கிக் காடுமேடு எல்லாம் கடந்து வந்து இறுதியில் ஒளிதான் கடவுள் என்ற முடிவை இப்போது பிரணவ வேதத்தில் உறுதிபடக் காண்கிறேன். இதுதான் விஞ்ஞானம் காட்டும் **ஒளி** என்றும் கொள்ளலாம். புறத்தே இந்த ஒளியை சூரியனாகவும், சந்திரனாகவும், நட்சத்திரங்களாகவும், கோள்களாகவும் காணலாம். இவற்றைக் கண்கண்ட தெய்வங்கள் என்று போற்றுகிறோம்: வணங்குகிறோம். இது மெத்தச் சரியே. இது எல்லாம் அநித்யமானதல்ல நித்தியமானதே. இவையெல்லாம் எக்காலத்தில் தோன்றியவை என்பதைக் கணக்கிட்டு இக்கால விஞ்ஞானிகள் பல கோடி ஆண்டுகள் இருக்கும் என்று சொல்வதையும் ஏற்றுக் கொள்ளலாம். இக்கால விஞ்ஞானிகள் கூறும் உண்மைகளையும், செய்திட்ட சாதனைகளையும் சாதாரணமானவை என்று கருதிடல் கூடாது. இந்த ஆய்வுகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் அவர்கள் கையாண்ட ஆயுதமே ஒளி (material light) எனப்படும் என்று சொல்வதும் ஓர் உண்மையே.

ஒளி என்று சொல்லும் பொழுது நமது சாஸ்திரங்கள் நேரடியாக பதில் சொல்லி விளக்கிடவில்லை என்று சொல்லலாம்.

ஒளி என்று சொல்லும் பொழுது பல கோடி சூரியப் பிரகாசம் உடையது என்று [சாஸ்திரம்] சொல்லும் போது அது மிகைபடப் பேசுகிறது என்று நமக்குத் தோன்றலாம். ஆனால், பெரியதொரு உபநிடதமானது அந்த ஒளியானது நமது இதயக் குகையில் தோன்றுகிறது என்று சொல்லி அத்தகைய ஒளி கோடிசூரியப் பிரகாசம் என்றும் சொல்லும். ஒரு சூரியனின் பிரகாசத்தைத் தாங்க முடியாத நமது உடல், எப்படி கோடி சூரிய ஒளியைத் தாங்க முடியும் [அ] காண முடியும் என்று எவரும் இன்றும் கேட்கவில்லை.

இந்த நிலையில், அந்த ஒளியைப் பற்றிப் பேசும் முண்டகோபநிஷதம் கீழ்க்கண்ட விளக்கமொன்றைக் கூறுகிறது.

नतत्रसूर्यो भाति नचन्द्रतारकं । नेमे विद्युतो भान्ति कुतोयमग्नि : ॥
तमेव भान्तं अनुभाति सर्वं । तस्य भासा सर्वमिदं विभाति ॥

இதன் சாரம் யாதெனில், அப்பேரொளியில் [உள்ளொளி, ஆன்மஒளி] சூரியன், சந்திரன், நட்சத்திரம், அக்னி ஆகிய அனைத்தும் ஒளி மங்கி, கரைந்து அந்தப் பேரொளியில் மறைந்து விடும் என்று சொல்லுகிறது. அதே சமயத்தில், அந்தப் பேரொளி எனப்படுவது எல்லாவற்றையும் ஒளி பெறச் செய்யும் ஆற்றல் மிகுந்த ஒளி என்றும் சொல்கிறது அந்த உபநிடதம். அப்படியானால், அந்த ஒற்றை ஒளி எது என்ற கேள்வி இன்றும் உள்ளது என்றும் சொல்லலாம். இதனைத் தமிழ் மரபில் தேடிப் பார்த்ததில் அந்த ஒளியை உணர்வு – உள்ளுணர்வு – உள்ளொளி என்று சொல்லத் தூண்டுகிறது. இதையே प्रज्ञानं ब्रह्म என்ற சொற்றொடர் உணர்த்தும் என்க. இந்த உணர்வுதான் எல்லாவற்றையும் அறியச் செய்வதும் மற்றும் புரியச் செய்வதும் மேலும் காணச் செய்வதும், கேட்கச் சொல்வதும் என்று சொல்லலாம். இக்கருத்தைக் கீழ்க்கண்ட மயனின் பாடல் நன்றாகவே காட்டி விடுகிறது எனலாம்.

உள்ளமும், உணர்வும், ஒளியும், காலமும், இடமும்

"உள்ளமே மூல மாகி உணர்வுறும் கோல மாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய வித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்".

"காலமும் இடத்தி னாலே கருத்துணர் வுற்ற போது
மூலமும் சீலம் நோக்கி முழுமையின் ஆய்ந்து ணர்ந்து
ஞாலமே போற்றும் வண்ணம் நன்னெறி முறையில் நின்று
சீலமாம் வாழ்வளிக்கும் உளவியல் நூலே செப்பும்".

இதனில் உலகத் தோற்ற நுட்பம் அடங்கி இருப்பதை உற்றறியலாம். இத்தகைய உணர்வுதான் மூலமாக இருந்து அதுவே காலமாக, சீலமாகக் கோலமாக இறுதியில் ஞாலமாக மலர்ச்சிப் பெற்று விளங்குகிறது என்று மயன் கூறுகிறான். இந்த உணர்வைதான் ஆங்கிலத்தில் consciousness என்று கூறுகிறோம். இந்த ஒளிதான் கடவுள் என்று ஒரு விஞ்ஞான முடிவைச்

சொல்வது, வாஸ்து ஆகம சாஸ்திரங்களின் கொள்கையாகக் கடந்த பத்தாயிரம் ஆண்டுகளாக உள்ளது என்பதை எண்ணி மகிழலாம்.

ஓம் ஒளி – ஒளி ஓம் – ஓம் மறை – மறை ஓம்

இந்த ஒளிதான் ஓம் ஒளி என்றும் ஒளி ஓம் என்றும் இந்த ஒழுக்குள் அனைத்துப் பொருள்களும் மறைந்து கொண்டிருப்ப தால் ஓம் மறை என்றும் மறை ஓம் என்றும் பிரணவ வேதம் தொடங்குகிறது. இதனை வைத்து மயன் சொல்லும் ஒரு பாடலை மனப்பாடம் செய்து கொள்க.

> "பரம் பொருள் எங்கும் உண்டு, பெருங்கலை[1] யாண்டும் உண்டு
> பரம் பொருள் உணர்வினாலே ஒளி நடராசன் கண்டேன்
> பரம் பொருள் அருவினாலே ஒளி வழிபாடு கண்டேன்
> பரம் பொருள் அருவினாலே பெருங்கலை படைத்தேன் காண்பீர்".

அந்த நான்கு வரிகளில் வேத, ஆகம, வாஸ்துக் கொள்கைகள் அடங்கி யிருப்பதை உற்றறிந்தால், இந்த ஞாலத்தின் முச்செயல்களாம் படைத்தல், காத்தல், ஒடுக்கல் ஆகிய மூன்று செயல்களும் தெளிவு பெறும்.

---

1. இந்தப் பாடலில் பெருங்கலை என்பது வாஸ்து சிற்பக்கலை என்பதை மனதில் கொள்க. உலக நாடுகளில், குறிப்பாக அமெரிக்க் நாட்டில், 100 கோவில்களுக்கு மேல் நமது இந்தியர்கள், இலக்கணம் வழுவாமல் கட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற monistic Saivistic temple அமெரிக்காவுக்குச் சொந்தமான ஹவாய்த் தீவில் நிறுவப்பட்டு விட்டது. முற்றிலும் – கருவறையும் விமானமும் ஏன் ஸ்தூபி என்ற கலசமும், மண்டபங்களும், பிரகாரங்களும் முற்றிலும் பாரத நாட்டுக் கற்களால் ஆன முதற் கோவில் இதுவே. பரிவார தேவதைகள் இல்லை. மூன்று அடி உயரமுள்ள ஸ்படிக லிங்கக் கோவில் இதுவே. சிவன் ஸ்படிக லிங்க வடிவில் உள்ளான். இதனை அமெரிக்க சைவ சந்நியாசிகளே கட்டியிருக்கிறார்கள். இதன் தலைவர் லோக குரு சிவாய சுப்ரமுனியர் என்ற அமெரிக்கர் ஆவார். இவருக்கு அடுத்துத் தலைவராக விளங்குபவரும் அமெரிக்கரே. பெயர் போதிநாதர் என்ற வேலன் சுவாமிகள் ஆவார். வேதம், உபநிஷதம், வாஸ்து ஆகிய நூல்களைக் கரைத்துக் குடித்தஇந்த ஆதீனத்தைச் சேர்ந்த அமெரிக்க ஆச்சாரியர்கள் அனைவரும் சுத்தமான யோகிகள், ஒழுக்க சீலர்கள். அன்னார் திருமந்திரத்தை ஞான நூலாகவும், திருக்குறளை வாழ்க்கை நூலாகவும் மேற்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். மந்திரங்களையும், சடங்குகளையும் சம்ஸ்கிருதத்திலேயே நடத்துகிறார்கள். சிவஞானத்தை உலகெங்கும் பரப்பி வருகிறார்கள். இந்தியாவுக்கு அப்பால் சைவம் இவர்களால் பெருமை பெறுகிறதென்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் எழுப்பிய கோவிலின் பெயர் சம்ஸ்கிருதம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று முக்கிய மொழிகள் சார்ந்த பெயராக – சன்மார்க இறைவன் temple என்பதாகும்.

1986-ல் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராயும், மாண்புமிகு அரங்கநாயகம் அவர்கள் கல்வி அமைச்சராயும், மாண்புமிகு ஆர்.எம்.வீரப்பன் அவர்கள் இந்து அறநிலையத் துறை அமைச்சராயும் இருந்த காலத்தில், தொழில் நுட்பக் கல்வி இயக்ககத் தலைவர் திருமிகு.வி.ஸ்ரீனிவாசன் என்ற பொறியாளர் ஆதரவுடனும், பொறியியல் கல்வியாளர் திரு.வி.இராமமூர்த்தி அவர்கள் மேற்பார்வையிலும், மயன் எழுதிய ஐந்திறம் என்ற நூலை அரசு வெளியீடாக அச்சிட்டு, மதுரை மாநகரில் 1986-ம் ஆண்டு நிகழ்ந்த உலகத் தமிழறிஞர் மாநாட்டில் வெளிப்படுத்தி, அங்கு வந்திருந்தோருக்கு அப்பிரதிகளை வழங்கி, நூலை ஆராய்ந்து தமிழை வளர்த்திட முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள்.

பின்னாளில் டாக்டர் கலைஞர் அவர்களிடம் நூற் செய்திகளை விளக்கிக் கூறி, அவர்தம் வாழ்த்துக்களைப் பெற்றேன். தொல்பழம் மயன் வரலாறு தெரிந்திருந்த கலைஞர் அவர்கள் என்னையே ஆழ்ந்து ஆராய்ச்சிகள் செய்யச் சொல்லி ஊக்குவித்தார்கள். அதன் பிறகு அரசின் ஆதரவை நாடிடலாம் நிதி பெறலாம் என்றும் அறிவுறுத்தினார்கள். எனது ஆய்வு நூல்களையும் ஆர்வத்துடன் படித்தறிந்து, **சிற்பியர் இனத்தை இந்திய மாயர்கள்** என்று ஒரு நிலையில் புகழ்ந்தும் மேடையில் முழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியானது சென்னையில் கலைவாணர் அரங்கில் 10,000 விசுவகர்மர் கூடிய அவையில் 30.7.2000 அன்று நிகழ்ந்தது குறிப்பிடத்தகுந்த ஒரு வரலாற்றுச் செய்தியாகும். இந்த இரண்டு முதல்வர்களும் காட்டிய அன்பிற்கும் ஆதரவுக்கும் தமிழ்நாடு விஸ்வகர்ம சேவா சங்கத்தின் மாநிலத் தலைவர் என்ற நிலையிலும் என் சொந்த நிலையிலும், எனது வணக்கம் கலந்த நன்றியை புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த நிலையில் நான் ஒருவரைச் சிறப்பித்துச் சொல்லிட ஆசைப் படுகிறேன். காரணம் எனது தமிழக அரசுக்கும், தமிழக அரசின் அமைச்சர்களுக்கும் மனப்பூர்வமான விசுவாசமுடையவன்

நான். காரணம், மடிந்து போன கலை இலக்கியத்தை மீண்டும் உயிர்ப்பித்தவர்கள். எனவே இந்த ஐந்திர வெளியீட்டு விஷயத்தில் எனக்கு நேரடி உதவிகளை அரசு வழியாகச் செய்திட்டவர் டாக்டர்.சி.அரங்கநாயகம் அவர்கள் என்பதைக் குறிப்பிட்டு நன்றி சொல்ல கடமைப்பட்டவனாகிறேன். கோவையில், முதன் முதலில் ஒரு கருத்தரங்கைக் கூட்டி ஐந்திரத்தைக் காட்டி, புலவர்களை விமர்சிக்கச் சொல்லி மகிழ்ந்தார்கள். உண்மையைச் சொன்னால், தமிழ் எளிதாக இருந்தாலும் அது சொல்லிய விஞ்ஞானம் யாவரையும் திகைக்க வைத்து, மயக்கத்தையும் உண்டாக்கி விட்டது. அன்றிலிருந்து இன்றுவரை அதே நிலைதான். ஓரளவு புரிந்து கொண்ட நான் 1986 முதல் 2003 வரை 17 ஆண்டுகள் எனது ஆங்கிலப் பிராச்சாரத்தின் மூலம் மேலை நாட்டிலும் பரவச் செய்தேன். இன்று வாஸ்து என்ற சொல்லை உலகம் சொல்லி ஆய்ந்திடச் செய்தவனும் நான் தான் - அடுத்து என்னோடு சேர்ந்து டாக்டர்.எஸ்.பி.சபாரத்தினம் அவர்களும் பொறியியல் கல்வியாளர் திரு.வி.இராமமூர்த்தி அவர்களும் இப்பணிகளைச் சிறப்பிக்கச் செய்தோர் ஆவர்.

அந்த அரிய விண்ஞான நூலுக்கு இயற்பெயர் **ஐந்திரம்** என்றேன். ஐந்திரம் என்ற பெயர் அந்த நூலிலிருந்தே கண்டறிந்து தலைப்பிடப்பட்டது குறிப்பிடத்தகுந்தது. இதில் குறிப்பிட்ட செய்திகள் முழுக்க முழுக்க ஓர் அதிசய விஞ்ஞானமாக (Cosmic Science ஆக) இருந்தமையால் எளிய தமிழில் இருந்திட்டாலும் உரையில்லாக் காரணத்தால் எங்கும் எவரிடமும் பரவிட இடற்பாடுகள் ஏற்பட்டுவிட்டன. என்றாலும், இந்த விண்ஞானத்தை அடியாகக் கொண்டு எழுந்ததே இன்று நம்மிடையே யுள்ள வாஸ்து - ஆகம நூல் என்பதை உற்றுநோக்கி வாஸ்து ஆகமப் பேராசிரியர் டாக்டர் எஸ்.பி.சபாரத்தினம் அவர்களிடம் ஐந்திரத்துக்கு உரையெழுதிப் பெற்று, நான் நடத்திய அகில உலக வாஸ்து விஞ்ஞானக் கருத்தரங்கில் [4 நாட்கள், 450 பேர்கள்] திருவனந்தபுரத்தில் 1997 ஆம் ஆண்டு வெளியிட்டதோடு 1993 ஆம் ஆண்டு சென்னையில் இதே போல் International Meet

on Vaastu என்ற பெயருடைய எனது முதல் கருத்தரங்கத்தையும் கூட்டி ஐந்திற நூலை - வாஸ்து விஞ்ஞானத்தை உலகறியச் செய்தோம். இச்செய்திகளையெல்லாம் 1993லேயே புகழ் பெற்ற ஐந்து பல்கலைக்கழகத் துணை வேந்தர்களை அழைத்து வந்து, அமரச் செய்து, மரியாதை செய்து, அவர்தம் காதில் விழச் செய்தேன். இதுவரை பதினேழு விளக்க நூல்களை உரையென வெளியிட்டு இன்று அகில உலகம் மெச்சும் விஞ்ஞான நூலாகக் கருதப்பட வைத்தேன் என்பதை தொடக்கவுரையில் முதற்கண் பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று, தமிழ்நாட்டில் தொன்றுதொட்டுப் பணி செய்து வரும் தமிழகச் சிற்பிகள், ஆகமிகள், பொறியாளர்கள், உள்நாட்டு - வெளிநாட்டு கட்டிடக் கலைஞர்கள் ஆகியோர் இந்த வாஸ்து விஞ்ஞான நுட்பங்களை, நான் நடத்திய சொற்பொழிவுகள் வாயிலாகவும், நூற்றுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகள் மூலமாகவும் கேட்டறிந்து இக்காலக் கட்டிட நிர்மாணக் கலையில் புகுத்தி சமுதாய உயர் நலத்திற்கு அரிய சேவைகள் செய்து வருகிறார்கள். இந்தியாவில் மட்டும் 180 பொறியாளர்கள் மற்றும் நவயுக கட்டிடக் கலைஞர்கள் எனது விளக்கங்களைப் பட்டறை (workshop) வாயிலாகக் கேட்டறிந்தும், எனது நூல்களைப் படித்தறிந்தும் சமுதாயச் சேவையை இன்றும் தொய்வின்றிச் செய்து வருகிறார்கள். இது மட்டுமல்ல மேலை நாடுகளிலும் குறிப்பாக அமெரிக்காவிலும், Global Vaastu, Vaastu International என்ற பெயர்களில் சேவை நிலையங்களை அமெரிக்கர்களே தாமாகத் தோற்றுவித்துக் கொண்டு அந்நாட்டிலேயும் சீனாவிலேயும் கட்டிடப் பணிகள் செய்வதோடு அந்நாட்டுக் கட்டிடக் கலைஞர்களிடையே வாஸ்துக் கட்டிட நெறிமுறைகளையும், செய்முறைகளையும் விளக்கிப் பேசி, வாஸ்து விஞ்ஞானத்தைப் பரப்பியும் வருகிறார்கள். எடுத்துகாட்டாக Colorado என்ற அமெரிக்க மாநிலத்தில் Mr.Ronald N.Quinn என்பவர் எனது பணி நிறுவனத்தில் பல மாதங்கள் தங்கி, படிப்பும், பயிற்சியும் பெற்று வெற்றிகரமாக வாஸ்துக் கட்டிடப் பணிகளைச் செய்து வருகிறார்.

அவரது விளக்க உரையையும் அனுபவத்தையும் நான் நடத்தி வரும் Vaastu Purusha [வாஸ்து புருஷா] என்ற ஆய்வு மலரில் [மார்ச் 2003 இதழில்] வெளியிட்டிருக்கின்றேன். இதே போல், Vaastu International என்ற நிறுவனத் தலைவர் Mr.Michael Bordenம் இந்தியா வந்து பல மாதங்கள் தங்கி வாஸ்து விஞ்ஞானத்தையும், விஞ்ஞானம் சார்ந்த தொழில் நுட்பத்தையும் கற்று வாஸ்து நிர்மாணப் பணிகளை அமெரிக்காவிலும், சீனாவிலும் செய்து வருகிறார். இன்னும் பலர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் எனக்கு ஒருதொரு பெரிய வசதியும் கிடைக்கவில்லை.

எனவே 1986-ல் தொடங்கிய இந்த வாஸ்து விஞ்ஞான இயக்கம் இன்று உலகளாவிய நிலையில் பிரணவவேதம் என்ற பிறிதொரு பெரிய வேத நூலில் 10 ஆயிரத்தில் ஓராயிரம் அருமையான தமிழ்ப் பாக்கள் மட்டும் வெளியிடப்படுகின்றன. இந்த நூல் பண்டைக் காலத்தில் நாவலந்தீவின் நடுவில் மயேந்திர மாமலை என்ற மலையில் தமிழில் **மயனால்** வெளிப்பட்ட மாபெரும் வேத நூலாகும், இவன் யாத்த ஐந்திறத்தையும் பிரணவ வேதத்தையும் துருவி ஆராய்ந்திடில் தென்னகத்தின் தொல்லியல் வரலாறு மற்றும் நாகரிகம் பண்பாடு ஆகியவற்றை அறிந்துக் கொள்ளமுடியும். அறிந்துக் கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். இந்த நூலும் எளிமையான தமிழில் இருந்தாலும் அது உள்ளடக்கிப் பேசிடும் செய்திகள், விஞ்ஞான மயமான செய்திகள் ஆகும். தொன்மை ஒரு பக்கம் இருக்கட்டும், இந்தப் பாக்களின் அறிவியலை, உளவியலை, ஆன்மவியலைப் புரிந்து கொள்வோமானால் இக்காலத்தில் முகிழ்ந்திட்ட பல்வேறு பிணக்குகள் அழிந்து போகும் அல்லது வற்றிப்போகும் என்று ஐயமின்றி கூறிட விரும்புகின்றேன். இந்தப் பிரணவ வேத நூலின் சுருக்கமாக- சூத்திரங்களாக - வெளிவந்த நூலே ஐந்திறம். தயவு செய்து நூலின் அகல, நீள, உயரங்களை - ஆழ்ந்த கருத்துக்களை புறக்கணித்து விடாதீர்கள். எளிய தமிழில் இருந்தாலும் கடினமான செய்திகள். நாவலந்தீவில் பிறந்த இந்த இரு நூல்கள் [பிரணவ வேதம், ஐந்திறம்] இன்று உலக நாகரிகத்துக்கும் இக்கால

விஞ்ஞான ஆய்வுகளுக்கும் ஒத்துப்போவதோடு எட்ட முடியாத உச்சிக்கு – விஞ்ஞானக் கோட்பாடுகளுக்கு – ஆய்வர்களைத் தூக்கிச் செல்லும் ஆற்றலுடையது – உயர்வுடையது என்று இன்று சொல்லிடலாம்.

இனி விண்ணையும், மண்ணையும் ஒன்றாக்கிக் காட்டிய இந்த **ஐந்திறம்** என்ற இலக்கண நூலும், **பிரணவம்** என்ற வேத நூலும் கூறும் செய்திகளை சுருக்கிப் பார்ப்போம். இக்கருத்துகளை யோக முறையில் ஒளி மூலத்தை அனுபவித்திட்ட தமிழக மாமுனிவர் பரஞ்ஜோதியார் திருமுன்பில் படைப்பதே சாலப் பொருந்துமென்று கருதி அவர்தம் முன்னிலையில் 04.05.2003ல் அரங் கேற்றினேன்.

ஐந்திறம் என்ற நூல் பெயர் ஒரு விஞ்ஞானப் பெயராகும். இப்பிரபஞ்சத்தை – ஞாலத்தை – அதன் செயலாற்றலை உற்றறிந்து, அவ்வாற்றல் ஐந்து பிரிவுகளாக – ஐந்து ஆற்றல்களாக தன்னைத் தானே – அறிபொருள்களாக தெரிபொருள்களாக – visual form ஆக – வெளிப்படுத்திக் கொள்கிறது (manifests itself into five fold material forms) என்பது பொருள். இந்த மூலமானது ஆற்றலேமயமானது – திறமானது – என்ற பொருளில் **ஐந்திறம்** எனப்பட்டது. இந்தக் கருத்துக்கு உரியவனாக '**மயன்**' என்பான் என்பதும் இந்த ஐந்திறப் பாக்களினூடே வருகிறது. இறுதியிலும் வருகிறது.

இந்த நூல் முதற் தமிழ்ச் சங்கத்தின் நிலந்தரு திருவில் பாண்டியன் அமர்ந்திருந்த போது அவைக்களத் தமிழறிஞர் திருமுன்பில் அரங்கேறியது என்றும் தெரிய வருகிறது. சான்றுகள் நிரம்ப உண்டு தான். இதற்குப்பின் ஏற்பட்ட பிரளயத்தில் எஃலாம் மறைந்த பின்னும் இவனது நூல்கள் மட்டும் இறையருளால் காக்கப்பட்டு விட்டன என்று சைவப் பெரியார் மாணிக்கவாசகர் தனது திருவாசகத்தில் பதிந்து விட்டார். இப்பதிவு கல்லில் செதுக்கப்பட்ட செய்தியை விட அதிமுக்கியமான செய்தி என்பதை ஆய்வர் ஏற்று மேல் ஆய்வு செய்வர் என்று நம்புகிறேன்.

இந்த ஞாலப் பொருள்கள் அனைத்தும் பஞ்ச பூதங்கள் அடங்கிய அல்லது பஞ்ச பூதங்களின் கூட்டுப் பொருள் என்று சொல்லுகிறோம். இதற்கு யாதொரு விளக்கமும் தேவையில்லை. ஆனால், இந்த ஐந்து வகை மூலப்பொருள் எப்படி ஒன்று சேர்கின்றன? யார் ஒன்று சேர்க்கிறார்கள் என்பது எவருக்கும் தெரியாது என்று அடித்துக் கூறலாம். சாதாரணமாக இதெல்லாம் நம் செயலல்ல, கடவுள் செயல் என்று சொல்லி இதுவரை தப்பித்து வந்திருக்கின்றோம். இந்த விடை சரிதான் என்றாலும் அக்கடவுள் எப்படி இருக்கிறார் என்று இக்கால விஞ்ஞானிகள் கூட சொல்ல முடியவில்லை. ஆனால், பாரத நாட்டுத் தொல்பழம் விஞ்ஞானிகள் பல மேல்நிலை ஆராய்ச்சிகள் செய்து அதற்குள் இருக்கும் மூன்று வகை (subtle element) மூலங்களைக் கண்டிருக்கிறார்கள். அவை முறையே ஒலி (Sound), ஒளி (Light), காலம் (Time) எனப்படுகின்றன. இந்த மூன்றில் காலமே (Absolute Time) எவற்றுக்கும் மூலம் என்று மயன் சொல்லுகின்றான். காலமானது [அ] கால மூலமானது தானே உருமாறி, ஒளியாகி, அந்த ஒளி (Light) துடித்து, ஒலியாக (Sound) பிறழ்கிறது என்ற கருத்தை விரித்துப் பேசுகிறது பிரணவ வேதம். சுருக்கமாகச் சொன்னால் அருவமான செம்பொருள், உருவமாக பிறழ்ந்திடும் நுட்பத்தைப் பேசுவது பிறழ் நவம் [அ] பிரணவமாயிற்று. இந்த விஞ்ஞான நிகழ்ச்சியை மூலமாகக் கொண்டு, இந்த நூல் பிரணவ வேதம் எனப்படுவதாயிற்று. இதே கருத்தைச் சற்றுக் கீழிறங்கி, ஒளி (Light) பிறழ்ந்து, ஒலியாக (Sound) மாறியது என்ற கருத்தும் இப்பிரணவ வேதத்தில் விளக்கப்படுகிறது. இந்த வேதத்தின் தொடக்கமே ஒளி விளக்கமேயாகும். இந்த மூல ஒலிக்கும் (Sound) மூல ஒளிக்கும் (Light), ஓம் ஒலி என்றும், ஓம் ஒளி என்றும் இரண்டு வகையான ஓம்களைச் சொல்லுகிறான். பிரணவ வேதமானது ஓம் ஒலி (Sound)யிலிருந்த சொற்பொருள்களும், ஓம் ஒளி (Light) யிலிருந்து கண்ணால் பார்த்தறியும் பருப்பொருட்களும் வெளிப்படுகின்றன என்றும், இந்தப் பிரணவ வேதம் விளக்கிடும். இந்த இரண்டையும் நாம் பேசும் போது, சொல்லும் பொருளும் என்று சுருக்கிச் சொல்கிறோம்.

இறுதியாக, சொல்லையும் பொருளையும், அதாவது ஒலிப் பொருள், ஒளிப் பொருளைத் தோன்றச் செய்வது எது? என்ற வினாவிற்கு விடை மயன் தருவது காலம். இது கால சக்தி எனப்படும். இதனைக் கால வேகம், கால விசை என்று சொல்லுகின்றான். ஆகவே, மேற்சொன்ன எட்டுப் பொருட்களில் [காலம், ஒளி, ஒலி + பஞ்சபூதங்கள்] காலமே மூலமாவதால் இதனைக் காலமூலம் என்று மயன் சொல்லுவதோடு இத்தகைய காலமூலத்தைக் **காலமாக்கடவுள்** என்றும் சொல்லுகிறான். நமது சமயத்தில் சிவனைக் காலன் என்று சொல்லுகிறோம். **சமயம்** என்ற சொல்லுக்கே காலம் என்று தானே பொருள்? மதம் என்ற சொல் நமக்குத் தேவையில்லை. நமது சமயம் விஞ்ஞானச் சமயம் என்று இப்போது சொல்லலாமா? விஞ்ஞானச் சமயம் என்றே சொல்லுங்கள். குழப்பங்கள் எல்லாம் ஒழிந்துவிடும்.

மேலும், $E=mc^2$ என்ற சூத்திரத்தில் E என்பது Energy என்ற பொருள் ஐன்ஸ்டீனுக்கு மட்டுமல்ல எவர்க்கும் தெரிந்த சொல்லே. ஆனால் mc^2 என்ற சூத்திரத்தின் எதிர்ப்பகுதிதான் எவராலும் புரிந்துக் கொள்ள முடியாத பகுதியாக உள்ளது. இந்த சூத்திர பகுதியில் m என்பது matter or mass எனப்படும். சுருக்கிச் சொன்னால் இது வெறும் மண்தான். ஆனால் அதனருகே c^2 என்ற ஒரு எழுத்தை ஒட்டி வைத்தான். இஃதொரு எண் அளவையாகும் (numerical measure). இதன் பொருள் யாதெனில், C என்ற எண்ணின் தன்பெருக்கமாகும். அதாவது C x C என்பதே பொருள். இதை பீஜ கணிதம் (algebra) என்று சொல்லுவோம். இது C^2 என்பதற்கு geometrical வடிவம் கொடுத்திடுவோமானால் அது அருகிலுள்ள படம் போல் இருக்கும் □. இதுதான் அண்டத்தில் நிகழும் நிகழ்ச்சியாகும். இதன் தன்பெருக்கமானது அடுத்தடுத்துப் பெருகி பிரம்மாண்ட வடிவமாகும். இதனைத்தான் **சில்பவித்யா ரஹஸ்யோபநிஷத்** என்ற அரியதொரு உபநிஷதம், எவரும் தெரிந்துக் கொள்ளவில்லையே என வருத்தப்படுகிறது. இதை எவனொருவன் தெரிந்துக் கொள்கிறானோ, அவனே பிரம்ம

சூத்திரம், உபநிஷதம் தெரிந்தவனாகிறான். இந்த வரியை வேதம் படித்த அனைவரும் புனித சூத்திரமாக திரும்ப திரும்ப சொல்கிறார்கள். "अनोरणीयान् महतो महीयान्" என்பதே அந்த சூக்ஷம சூத்திரமாகும். அணுவில் உள்ளதே அண்டத்தில் உள்ளது, அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உளதென்பதே உண்மை விளக்கம். இதனை geometrical சூத்திரம் என்றும் geometrical form என்றும் சொன்னேன். இன்னும் விளக்கி சொல்ல வேண்டு மானால் இறைவன் ஒவ்வொரு பொருளையும் geometrical formல் தான் படைக்கின்றான். God geometrises என்று சொல்லலாம். இதுதான் உண்மை. நாம் நினைப்பதெல்லாம் படம் – பேசுவதெல்லாம் படம் என்க.

அந்த geometrical form தான் ஒரு சிறிய அணுப் பொருளாக, சதுர வடிவமாக முதன் முதலில் தோன்றியது. இப்பொருள் அருவமாய் இயங்கும் சக்திப் பொருள். உணர்வு தரித்த அல்லது உணர்வு மயமான மூலப் பொருளாகும். இதைக் கடவுள் என்று சொல்லக் கூடாதோ? இந்த சூத்திரத்தை கடந்த 15 ஆண்டுகளாக ஆங்கிலத்தில் **"The Primal manifest form of the unmanifest"** என்று பல பேராசிரியர்கள் முன்னிலையில் சொல்லி வியப்பில் ஆழ்த்தி நானும் மகிழ்ந்திருக்கிறேன். இதுதான் உண்மையின் வடிவம். **வாஸ்து புருஷ மண்டலம்** என்பது சாஸ்திரப் பெயர் ஆகும். இத்தகைய மண்டலங்கள் நீக்கமற நிறைந்த ஒன்றே ஆகாஸம் எனப்படுகிறது. இதுதான் நமது இதயத்தில் அணு மயமாக இருக்கும் சிற்றாகாசம் என்றும் inner space என்றும், அது கனசதுர வடிவமாக இருப்பதை உற்றுணர்ந்து அதனைச் சிற்றம்பலம் என்றும் சிற்றவை என்றும், விஞ்ஞான சமயத்தைச் சேர்ந்த நாம் தொன்றுதொட்டு சொல்லி வருகிறோம். ஆங்கிலத்தில் இதை நான் micro abode என்றும் microbode என்றும் சொல்லி வருகிறேன். எதிர்கால ஆங்கில dictionaryயில் இந்த microbode என்பதை புதுமை விரும்பிகளாகிய மேலை நாட்டு மக்கள் சேர்ப்பர் என்று நம்புகின்றேன். இத்தகைய ஒரு சிறு அணு

வெடித்து சிதறும் இயல்புடைய ஒரு கருத்து வாஸ்து விஞ்ஞான மரபில் உண்டு. இங்ஙனம் ஒன்றே தெரித்துச் சிதறி (explosion, Subtle atom, Big Bang), சிதறிய ஒவ்வொன்றும் மேன்மேலும் சிதறி, அணுக்கள் எனப்பட்டு அந்த அணுக்கள் பரந்துக் கிடக்கும் இடத்தைத்தான் ஆங்கிலத்தில் space என்றும், சமஸ்கிருதத்தில் ஆகாஸம் என்றும், தமிழில் விண் என்றும் சொல்லி வருகின்றோம். ஒவ்வொரு சிறிய அணுவும் பெரிய அணுவைப் போல் ஒரே அளவினதான கனசதுர அணுக்களேயாகும்.

எனவே, ஆகாஸம் எனப்படுவது இத்தகைய சக்திமிகு எண்ணற்ற அணுக்கள் நிரம்பிய இடமே. பஞ்சபூதங்களில் முதலாவது பூதமாகிய ஆகாஸம் எனப்படுவதின் உட்கருத்தாகும். இந்த நிகழ்ச்சியை செய்வது காலம் என்ற விசையே என்று ஏற்கனவே எனது பேச்சுவாக்கில் சொல்லி இருக்கிறேன். இதற்கு தொடர்புடைய கணக்கை பேசும்போது மேலும் விவரித்து கூறுவேன். [காண்க: எனது ஸ்தாபத்ய வேதம் என்ற நூலில்].

இந்நிலையில் கண்களுக்குப் புலப்படாத மிகச் சிறிய அணு அதாவது பரமாணு என்று தொடக்கத்தில் சொல்லிய அவ்வணு நம் கண்களுக்கு புலப்படவில்லை என்று சொன்னால் அது இல்லை என்று சொல்வதற்கில்லை. இது நாம் பார்க்கும் சக்தியை (faculty of vision) பொருத்து visible / invisible என்ற இரண்டு கூறுகளை மூலத்தின் கூறுகளாக நமது விஞ்ஞானத் துறையும், சமயத் துறையும் கொண்டுள்ளது என்று சொல்லி காட்ட வேண்டியவர் களானோம். **எனவே, நிஷ்களம், சகளம் என்ற இரு சொற்கள் வாஸ்து விஞ்ஞானத்தில் முதலிடம் பெறுகின்றன.** இந்த சந்தர்ப்பத்தில் அருவமான பொருள் உருவமாக பிறழ்கின்ற நிகழ்ச்சி நடக்கின்றது. ஆனால் இதற்கிடையில் [இரண்டும் கெட்ட நிலையில்] ஒரு பொருள் உருவாகிறது. அதைத்தான் சகள நிஷ்களம் என்றும், மிஸ்ரம் என்றும் வாஸ்து சாஸ்திரங்கள் சொல்லும். இந்த மிஸ்ரம் என்பதை புரியச் சொல்லிட வேண்டுமானால் விதை (seed) என்றும், கரு

(foetus) என்றும் இந்திய விஞ்ஞான சாஸ்திரம் சொல்லும். எனவே, முதலில் தோன்றிய கன சதுரம் விதை அல்லது கரு ஆகிறதல்லவா? இக்கரு ஓர் உயிர்ப் பொருள் ஆகும் என்பதும் ஒரு விஞ்ஞான நுட்பம்.

இந்த கனசதுர வடிவத்திற்குள் இருப்பது என்ன என்ற கேள்வி இந்நேரத்தில் எழக்கூடும். அதனைப் புரிந்துக் கொள்வதற்கு எவராலும் முடியவில்லை என்றாலும் வாஸ்து விஞ்ஞானம் அதனை ஆற்றல் அல்லது சக்தி என்று சொல்லி நிறுத்திக் கொண்டது. கிட்டத்தட்ட power packed battery என்று சொல்லிடலாம். உள்ளே அடைப்பட்டிருக்கும் அத்தகைய power / சக்தி ஒரு சூட்டுப்பொருள். இது கால விசையால் ஒரு வகை சீலத்தில் (rhythm) வளர்கிறது என்பது பொருள். இந்தத் தெரியா நிலையிலிருந்து சக்தி நிலைக்கு ஒரு கணக்கியல் அடிப்படையில் பிறழ்வதால் இதற்கு பிரணவச் சூடு / மூலச்சூடு என்று பெயர். இங்கே பிரணவச்சூடு என்ற பெயரில் நவ என்ற சொல் ஒன்பதைக் குறிக்கும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கின்றேன். இந்த கனசதுர அணுவானது உருப் பெறுவதற்கு எட்டு அணுக்கள் சேர்ந்து ஒரு இறுதிப் பொருளாய் ஆகும் நிலையில் ஒன்பது அல்லது நவம் எனப்படுகிறது. எனவே, நவம் என்ற சொல்லானது எப்படி உண்டாயிற்று என்பதற்கு மயன் கூறும் சூத்திரம் யாதெனில் – **"எட்டின் பிறழ்வே நவமெனவாகி[1]"** என்று சொல்லுவான்.

எனவே, கண்களுக்குப் புலப்படாத பரமாணு, எட்டு சேரும் பொழுது, அந்நிலையில் ஒரு சூடு உண்டாகிறது என்பது

1. எட்டு ஆழாக்குகள் சேர்ந்த அளவு 1 படி என்று சொல்லும்போது 1 படியானது 9வது அளவாகிறது. இந்த நிலையில் 8=9 ஆகிறதல்லவா? இஃதொரு மூலக்கணக்கு. இப்படித்தான் அணுச் சேர்க்கை யால் Space என்ற physical growth ஏற்படுகிறது. அணு என்பதை அணுக்காலம் என்று சொன்னால் அணுக்காலம் அணு இடம் ஆகிறது என்பது தேற்றமாகிறது. எனவே, Time என்பது Space ஆகிறது என்றும், Time and Space are equal to each other என்றும் சொல்லலாம் அல்லவா? ஆம் காலமும் இடமும் ஒன்று. காலமே இடமாகிறது என்பது விளக்கம். நாமும் நம்மைச் சூழ்ந்துள்ள ஞாலமும் காலத்தின் மறு தோற்றமான வடிவங்கள் அல்லவா? காலம் தோற்றிய வடிவங்கள். 65 ம் பக்கத்தில் படவிளக்கம் காண்க.

தெளிவாகிறது[1]. அந்த எட்டு அடிப்படையில் சூடு உருவாகி ஓர் உருப்படி இறுதியில் கிடைக்கிறது என்று கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம், உருகி உருக்கொண்ட ஒவ்வொரு உயிர் அணுவும் தன்பெருக்கம் அடைந்து ஐந்தாவது நிலையில்[2] கண்ணால் பார்த்தறியும் ஒரு பருப்பொருளாக வளர்கிறது. இவையெல்லாம் கால மெனப்படும் துடிப்பால், துடிப்பின் சீலத்தால் உருப்பெறுகிறது என்று புரிந்துக் கொள்ளல் வேண்டும். இங்ஙனம், தன்பெருக்கம் கொண்டு ஐந்து படிகளை தாண்டி அடைந்த நிலையில் இத்தகைய தெரிபொருள் இயல்பிலே நடப்பதால் இதற்கு ஐந்தியல் என்று பெயர். எல்லா உயிர்ப்பொருள்களும் இந்த ஐந்தியல் நிலை அடைதல் மூலப்பொருளின் இயல்பே. இஃது ஒரு கணக்கியலை ஒட்டி வளர்வதால் இதற்கு ஐந்தியல் நெறியென்றும் ஐங்குடி என்றும் மயன் பெயர் சொல்லுவான். இதுபோல்தான் நமது பஞ்சபூதங்கள் ஐந்தியல் நெறியில் வளர்ந்து ஐந்தாவது பொருளாக அதாவது நிலமாக (matter) உருப்பெறுகிறது என்பது மய விஞ்ஞான தேற்றம். இங்ஙனமே, ஐந்தொழில், ஐம்பொறி, ஐந்தெழுத்து [அ,இ,உ,எ,ஒ], ஐயுலோகம், பஞ்சவர்ணம், என்ற ஐந்தைந்தாக வளர்ந்த பொருள்களை நினைவிற் கொண்டு வந்து ஆய்வு செய்க. இப்படித்தான், ஐந்து தலைகளைக் கொண்ட விசுவகர்மனும் [ஐம்முகன்], ஐங்கரங்கள் கொண்ட விநாயகனும் [ஐங்கரன்] உருப்பெற்றனர். இதைத் தான் தொடக்கத்தில் **விண்ணே மண்ணாகும் விந்தை** என்று சொன்னேன். திருப்பிப் பேசினால் **மண்ணே விண்ணாக மாறுகிறது** என்றும் பொருளாகும். இந்த விஞ்ஞானக் கருத்து எவருடைய உள்ளத்திலும் எளிதாக நுழைந்திடும் எனலாம். இதுவே உலகியலில் - பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு என்ற கொள்கையினை நமக்கு தந்தது என உற்றறியலாம். இந்த மறுபிறப்புக் கொள்கையை $E=mc^2$ என்ற ஐன்ஸ்டீனின் சூத்திரத்தில் காண முடிகிற தல்லவா? அதாவது,

1. "प्राणायामेन विकशित हृद्कमलान्तराकाशे वैश्वानर शिखामध्ये चतुरश्रंहेमाभं बिन्दुनासह".
இதில் சூட்டுப்பொருள் பொன்னிற சதுர வடிவமாக வெளிப்படுவதை உணர்க.

2. கால / இட / தாள வாய்ப்பாட்டில் காண்க. [பக்கம் 89]

$mc^2=E$ என்று சொல்லும் போது இக்கருத்து மிளிர்வதாகிறது. இத்தேற்றத்தைக் கட்டிடக் கலையில் காணலாம். [காண்க: ஸ்தாபத்ய வேதம்]

இப்படித்தான் நம்முடைய எண்ணமும் எண்களாகி, எண்களே எண்ணிய வடிவமாகிறது என்பது மயவிஞ்ஞான தேற்றம். எனவே, **காலக்கூறே கணக்கியலாகி** என்றும் **கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி** என்றும் சுவைபட ஒரு கவிஞனாக நின்று மயன் தனது விஞ்ஞான நிகழ்ச்சியை புகழ்ந்து பேசுபவன் ஆனான்.

இறுதியாக இந்த நிகழ்ச்சியை – கணக்கியலை – மூலக்கணக்காகக் கொண்டு வீடு, மனை, மாளிகை, இறை வடிவங்கள் அனைத்தையும் வாஸ்து விற்பன்னர்கள் குமரி கண்டத்திலிருந்து இன்றுவரை இந்த விஞ்ஞானப் பணிகளை இந்நாட்டு விஸ்வகர்மச் சிற்பிகளாகிய நாங்கள் செய்து வரும் பேறு பெற்றோம். இயற்கையின் ஆற்றல் நிறைந்த – இயற்கையின் வடிவங் கொண்ட அமைப்புகள் அவையெல்லாம். இக்கருத்தை வைத்து "To live in harmony with subtle nature" என்று எனது நூல்களில் அடிக்கடி சொல்லி வந்துள்ளேன். இதே நேரத்தில் Grossயும் Subtleயும் சாம்யப்படுத்தியும் உள்ளேன். காரணம் வஸ்துவே வாஸ்து ஆவதால் என்க. நெறிப்படுத்தப்பட்ட வஸ்து நிறைந்த இடத்தில் வாழ்ந்தால் நேரடியாக இந்த சக்தியை அனுபவிப்பவர்கள் ஆவோம். அதாவது ஆன்ம சக்தியோடுநேரடி தொடர்பு கிடைக்கிறது என்க. [வாய்பாடு அடுத்து வருகிறது].

மேற்கண்ட வாய்ப்பாட்டின் கணக்கியலில் உட்புகுந்து பார்ப்போமானால் ஒன்றும் இல்லாத ஒரு நிலையில் [வெற்றிடத்தில்] எட்டு உயிர் அணுக்கள் சேர்ந்து ஒரு சிறு பொருளாக உருப் பெறுவதைப் பார்க்கலாம். அங்ஙனம் தோன்றிய அந்த உருப்பொருளே முறையாகத் தன்னைத்தானே வளர்த்துக் கொண்டு – பெருக்கிக் கொண்டு – ஒரு கணக்கியல் நெறியில் பெருக்கம் அடைவதையும் காணலாம். இது சாதாரணப் பெருக்கம் அன்று. தன் பெருக்கம் என்று பெயர். தன்னைத்தானே பெருக்கிக்

Angula Samkhya Table
அங்குல வாய்பாடு

THE UNITS OF TIME AND SPACE
காலம் - இடம் பற்றிய பட்டியல்

Table of Time units
காலக் கூறுகள்

8 Ganam கணம்	1 Lavam லவம்
8 Lavam லவம்	1 Kaashtam காஷ்டம்
8 Kaashtam காஷ்டம்	1 Nimisham நிமிஷம்
8 Nimisham நிமிஷம்	1 Tudi துடி
8 Tudi துடி	1 Kuru கரு
2 Tudi துடி	1 Drutam துருதம்
2 Drutam துருதம்	1 Laghu லகு
2 Laghu லகு	1 Kuru குரு
3 Laghu லகு	1 Puvadam பூவடம்
4 Laghu லகு	1 Kaaka padam காக பாதம்

From : Taala Deepikai Vol.II of Prof.K.Ramachandran, Sundaram publication, Chennai.

Table of Space units
இடக் கணக்குகள்

8 Anus அணு	1 Car dust தேர்த்துகள்
8 Car dusts தேர்த்துகள்	1 Immi இம்மி
8 Immis இம்மி	1 Ellu (Sesame seed) எள்ளு
8 Ellu எள்ளு	1 Nel (Unhusked paddy grain) நெல்
8 Nel நெல்	1 Viral (Finger measure) விரல்
6 Viral	1 Taalam தாளம்
12 Viral	1 Vitasti விதஸ்தி
24 Viral	1 Thatchu Muzham (Kishku) தச்சு முழம் (கிஷ்கு)
8 Hastam ஹஸ்தம்	1 Dandam தண்டம்
8 Dandam தண்டம்	1 Rajju ரஜ்ஜு

From : Sthapati's Sirpachennool. Published by the Directorate of Technical Education, Chennai.

Hence Time and Space are equal. காலமும், இடமும் ஒன்றே கொள்வது என்ற நிலை – தன்னைத்தானே வளர்த்துக் கொள்வது என்ற நிலை – இல்லையா? ஒரு நுண்பொருள் தன்னைத்தானே பெருக்கிக் கொள்வதினால் அந்த வடிவத்திற்கு தானியல் வடிவு என்று பெயராகும். தனக்கே உரிய வடிவு என்பது பொருள். ஆங்கிலத்தில் சொன்னால், அதற்கு self manifest form என்று பெயர் ஆகும். **இதிலிருந்து என்ன புலப்படுகிறது என்றால், உலகில் ஒற்றித்த பொருவாய் – அருவமாய் இருக்கும் மூலப் பொருள் – தன்னைத்தானே வளர்த்துக் கொண்டு**

பிறிதொரு பொருளாகத் திரிபுறுகிறது என்று சொல்லலாம். உண்மையும் இஃதே. இப்பேர்ப்பட்ட நிகழ்ச்சிதான் இந்த உலகிலே நிகழ்கிறது. அஃதும் ஒருவிதக் கணக்கியல் படி நிகழ்கிறது. இக்கணக்கியலைச் சொல்லும் பிறிதொரு நூல் எங்கேனும் உண்டா - எனக்குத் தெரியவில்லை. தெரிந்தால் சுட்டிக் காட்டுங்கள். அவ்வாறு அணுவிலிருந்து திரிபுற்ற உருவமே ஒரு நிலையில் - ஒரு காலக் கட்டத்தில் - (in the course of cosmic evolution) அண்ட பிண்டங்கள் என்று சொல்லப்படுவதாயின. ஓர் அணு அண்டமாக உருத்தரித்திட இக்காலத்திய விஞ்ஞானிகள் எத்தனையோ மில்லியன் ஆண்டுகளைச் சொல்லுகிறார்கள். இதிலிருந்து பிண்டமே அண்டம் என்றும், அண்டமே பிண்டம் என்றும் இலக்கியச் சொற்களாக நடப்பில் வருவதாயிற்று. விஞ்ஞானத்தை தொழில்நுட்ப மொழியால் பேசிடுவோமானால் அதில் இலக்கிய நயம் (aesthetics) இருக்கத்தான் செய்யும். இலக்கியம், உணர்வு தடித்த காட்சிப் பொருள் அல்லவா? வாஸ்து வித்யாரகஸ்யோ பநிஷத் என்ற நூல் ஒன்று, சமஸ்கிருதத்தில் "अणोरणीयान् महतो महीयान्" என்று விளக்குகிறது அல்லவா? இதனைப் பொருள் கொள்வோர் அணுவுக்கும் அணுவாகவும், பெரிதுக்கும் பெரிதாகவும் உளது பிரம்மம் என்பர். இது முற்றிலும் சரியல்ல. அணுவுக்கு எக்குணங்கள் உள்ளனவோ அக்குணங்களே மகத்துக்கும் [பெரும் பொருளுக்கும்] உளதென்பது பொருள். "தங்கத் துகளும் தங்கக் கட்டியும், தங்க நகைகளும் ஒரே குணமுடையதாய் இருப்பது போல" என்பர் சிற்ப சாஸ்திரியர். இந்த ஒன்று என்று சொல்லப்படும் மூலப் பொருள்தான் கடவுள் என்றும், இறைவன் என்றும், விண் நிறைந்த பொருளாக இருப்பதால் விண்பொருள் என்றும் சிறுசிறு துகள்களாக இருப்பதால் விண்துகள் என்றும் விண் அணுக்கள் என்றும், இந்த அணுக்கருவிலிருந்து இவ்வுலகம் தோன்றியதால் கருப்பொருள் என்றும், இறுதியில் உருப்பெறுவதால் அந்நிலையில் உருப்பொருள் என்றும் பல சொற்களால் உணர்த்தப்படுவதாயிற்று. இந்த அணு எப்போதும் ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும்

இயல்பினதால் நம் கண்களுக்கு புலப்படா – இன்னதென்று சொல்ல முடியாத ஒளிப் படலமாக – ஒளி வெளியாக இந்த ஒளிமூலம் உளதென்பதை உணருக[1]. இந்தப் பொருள்தான் கண்களுக்குப் புலப்படாத பொருள் என்று சொல்லப்படுவதும் ஆயிற்று. இந்த மூலப் பொருளுக்கு சமஸ்கிருதத்தில் பிரம்மம் என்று பெயரிட்டிருக்கிறார்கள். இதனைத் தமிழ் வழக்கில் கூறிடும் சிற்பியர் அதனைப் பெரும் பொருள் என்றும், பரம்பொருள் என்றும், பெரியது என்றும் கூறுவோராயினர். எனவே கடவுள் என்று சொல்லப்படுவது அல்லது சொல்லப்படுகிறவன் – ஒரு **விஞ்ஞானப் பொருளே** என்பது இப்போது உங்கட்குத் தெளிவாகும் என்று கருதுகிறேன். இத்தகைய கருத்து நமது மக்கட்குத் தெரியுமானால், தெளியுமானால் **"Religion without science is lame"** என்ற சொல் இந்தியர் சமயத்துக்குப் பொருந்தாது எனலாம். நமது சமயத்தை தமிழில் விஞ்ஞானச் சமயம் என்று சொல்வதே சாலும். பிறந்து இறக்கும் மனிதனைக் கடவுளாகக் கொள்வது விஞ்ஞானச் சமயமாகாது; வீரவணக்கம் தான்.

மேலே விவரித்த பிரணவ வேதத்தில் விஞ்ஞானச் செய்திகளையும், ஐந்திற சூத்திரங்களையும் நமக்கு அளித்தவன் மயன் என்ற சிற்பி ஆவான். இவன் மேலும் கீழ்கண்ட கலை நூல்களை இயற்றி இருந்தான். இவற்றிலும் ஒரு சில கிடைத்திருக்கின்றன. அத்தகைய நூல் அனைத்தும் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப நூல்களாகும். இதன் தனிச் சிறப்பு யாதெனில் விஞ்ஞானத்தை முதலில் சொல்லி பிறகு தொழில் நுட்பப் பாணியில் செய்தியை விளக்குகின்றார். தொழில்நுட்ப செய்திகளை விளக்கும் நேரத்திலும் அங்கும் இங்கும் விஞ்ஞானச் செய்திகளைக் காணலாம்.

வாஸ்து சாஸ்திரம் என்பது மயமதம் மற்றும் மானசாரம் என்ற இரு நூல்களுக்குள் அடங்கிக் கிடக்கிறதாக இன்றைய இளைய

1. அண்ட மூலமாய் பிண்ட மூலமாய், கொண்டிலங்கு ஒளிவெளியென.

தலைமுறை எண்ணிக் கொண்டிருப்பதை அவர்தம் நூல்களிலும், மேடைப் பேச்சுக்களிலும் கண்டேன். உண்மை அதுவல்ல.

வாஸ்து சாஸ்திரம் என்பது விஞ்ஞான சாஸ்திரம் மட்டுமல்ல. அஃதொரு விஞ்ஞானக் கடல். Post historic periodல் சமஸ்கிருதத்தில் அவை அனைத்தும் எழுதப்படுவதாயின. இந்த சமஸ்கிருதத்தை சிற்பியர் சமஸ்கிருதம் என்றும் தமிழர் கண்ட சமஸ்கிருதம் என்றும் சொல்வதில் தவறில்லை. பிராகிருதத்தில் எழுதப்பட்ட நூல்களும் உண்டு. அண்மையில் வாஸ்து சாரப் பிரகரணம் என்ற ஒரு பிராகிருத நூலை பூனாவில் ஒரு பொறியாளர் வெளியிட்டிருக்கிறார். தொல்பழங் காலத்தில் இலங்கையில் இருந்த வாஸ்து சாஸ்திரங்கள் பிராகிருத மொழியில் இருந்தனவென்றும், புத்த மதம் பரவிய நேரத்தில் பாலியில் இயற்றப்பட்டதென்றும் பண்டைச் சிற்பியர் கூறி வந்தனர். இப்போது மஞ்சு ஸ்ரீ என்ற ஒரு வாஸ்து நூல் சமஸ்கிருதத்தில் எழுதப் பெற்றதானது ஸ்ரீலங்கா அரசு வெளியீடாக வந்துளது.

சமஸ்கிருதக் கலை நூல்களாக இருந்தமையால் non-technical பேராசிரியர் தம் மொழி பெயர்ப்பில் விஞ்ஞானச் செய்திகளைக் கண்டு கொள்ள முடியா நிலை ஏற்பட்டு literal translation ஆகவே வெளிவருவதாயின. வாஸ்து நூல்களுக்கு உரை நூல்களும் இல்லாது போயிற்று. சிற்பிகள் சாஸ்திரங்களில் உள்ள தொழில் நுட்பங்களை தகப்பன் மகனுக்கு என்ற ரீதியில் கற்பித்து ஒழுகி வந்து விட்டதாலும், மொழியானது technical சமஸ்கிருதமாக இருந்து விட்டதாலும் உரை நூலாசிரியர்கள் என்போர் வாஸ்து மரபுக்குக் கிடைக்கவில்லை. அதற்கு மாற்றாக அந்த வாஸ்து நூல் நெறிமுறை வழியாகப் பெற்றிட்ட கட்டிடங்கள், கோயில்கள், நாடு நகரங்கள், சிற்பங்கள் அனைத்தும் வாஸ்து விதிகளின் visual commentariesகளாக தோன்றியிருப்பதாகச் சிற்பிகள் கூறுவர். காரணம், வாஸ்து வழிப்பட்ட பொருள்கள் அனைத்தும் visual material forms அன்றோ! இப்போதெல்லாம் வாஸ்து சாஸ்திரம் ஒரு விஞ்ஞானம் என்று கண்டு கொண்டபின்

வேதத்தோடு தொடர்புபடுத்திப் பேசிவரும் ஏற்றநிலைமட்டும் தோன்றுவதாயிற்று.

உண்மையில், வாஸ்து சாஸ்திரங்கள் சமஸ்கிருதத்தில் இருப்பினும், இவை ஓரினப்பட்டதென்பதும் (a class by themselves) உணரப்பட்டுவிட்டது. சமஸ்கிருத நடையும், கோட்பாடுகளும் தனித்ததொரு நெறியில் இருந்து விட்டது. தமிழகத்திலேயே நெடுங்காலம் கையாளப்பட்டும் வந்துவிட்டது. ஒரு சில அடிப்படை தொழில் நுட்பம் மட்டிலும் வடக்கு நோக்கிப் பரவி இன்று தேசிய மரபு (national tradition) என்ற பெயரைப் பெறுவதாயிற்று. தெற்கில் நிகழ்ந்த பிரளயத்திற்குப் பிறகு சிற்பிகளும் தமிழ் மக்களும் வட மாநிலங்களில் குடியேறி அங்கேயே தங்கிவிட்டனர். அஜந்தா, எல்லோராவில் தென்னக மரபு அடர்ந்து காணப்படுவதால் அந்த எல்லைவரை வளர்ந்துள்ள மாநிலத்தை Upper Dravida தேசமென வாரனாசி American Institute of Indian Studies, என்ற புகழ் வாய்ந்த நிறுவனம் நூல் வாயிலாக அறிவித்து பல ஆண்டுகள் கழிந்துவிட்டன. இதனால் Indian Cultural monuments புறத்தோற்றத்திலும், தத்துவத்திலும் வேறுபட்டு காணப்படுவதாயின. ஆனால் அடிப்படைக் கருத்தொற்றுமையுண்டு தான். இவற்றையெல்லாம் செய்திட்ட சிற்பியர் இனம் ஒரு தேசிய இனமாக இன்றுமுளதை உற்று நோக்குக. இந்தியா முழுவதும் இந்த இனம் தான் விசுவகர்ம இனம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது. இந்த இனத்தின் பெயரிலேயே வாஸ்து சிற்ப நூல்கள் பல உள. இன்றைய நிலையில் technical Sanskrit என்று சொல்லத் தகுதி வாய்ந்த நூல்களின் பட்டியலைப் பக்கம் 96,95,96,97,98ல் காண்க. இவையெல்லாம் Post historic period-ஐச் சேர்ந்தவை. கிரந்தாக்ஷரத்தில் வட்டெழுத்து முறையில் இன்றும் உள்ளன.

Pre-historic Tamil textகளும் உண்டு. அவற்றில் இரண்டு ஐந்திறம் மற்றும் பிரணவ வேதம். சமஸ்கிருதத்துக்கு வேதமும் உபநிஷதமும் போல என்க. பிற தமிழ் நூல்களும் இவ்வரிசையில்

இடம் பெறுவதையும் காண்க. சமஸ் கிருதத்தின் இத்தகைய தொன்மையையும், தோன்றிய விஞ்ஞான இடத்தையும், உயர்வையும் உற்று நோக்கும் போதும், அஷ்டாத்யாயி என்ற சமஸ்கிருத இலக்கணத்துக்கு ஐந்திறம் அடிப்படை நூலென்று சொல்வதையும் பார்க்கும் போதும் சமஸ்கிருதமே தமிழிலிருந்து பிறந்த மொழியோ என்ற ஐயம் எழாமல் இருப்பதற்கில்லை. அயோத்யா ராமன் மயேந்திர மாமலை வரை வந்து சென்ற செய்தியையும், இராமனும் சீதையும் புஷ்பக விமானத்தில் பறந்து சென்றதையும் பார்க்கும் போது, சமஸ்கிருதம் தோன்றியதே தெற்கே அன்றி வடக்கே அல்ல என்று சொல்வதில் உண்மை இருக்கலாம் என்பது ஒரு அனுமானமே. மேல் ஆய்வு செய்தால் நாவலந்தீவு இருந்த காலத்தில் இந்தியா ஏக நாடாக இருந்தது தெளிவுபெறும். அப்போது எல்லோருமே தமிழ்தான் பேசியிருப்பார்கள் என்றும் சொல்லக்கூடும். சரிதானே. பிராகிருத நிலையில் பேசப்பட்ட மொழியில் சமஸ்கிருதமாக்கி பேசா மொழியாக – மந்திர மொழியாக – வேண்டு மென்றே ஆக்கியிருப்பார்களோ? உற்றுநோக்கி விடை தாருங்கள்.

<u>தமிழகச் சிற்பிகளால் கையாளப்படும் 32 சாஸ்திரங்கள்</u> (Prehistoric works)

*1.	विश्वकर्मीयम्	விஸ்வகர்மீயம்
2.	विश्वम्	விஸ்வம்
3.	विश्वसारम्	விஸ்வசாரம்
4.	प्रबोधम्	ப்ரபோதம்
5.	वृत्तम्	வ்ருத்தம்
*6.	मयमतम्	மயமதம்
7.	त्वष्टातन्त्रम्	த்வஷ்டாதந்த்ரம்
*8.	मनुसारम्	மனுசாரம்
9.	नलम्	நளம்
10.	मानविधि	மானவிதி
11.	मानकल्पम्	மானகல்பம்
*12.	मानसारम्	மானசாரம்
13.	बहुश्रुतम्	பஹுச்ருதம்
14.	सृष्टम्	ச்ருஷ்டம்
15.	मानबोधम्	மானபோதம்

16.	विश्वबोधम्	விஸ்வபோதம்
17.	आदिसारम्	ஆதிசாரம்
18.	विशालाक्षम्	விசாலாக்ஷம்
*19.	विश्वकाश्यपम्	விஸ்வகாஸ்யபம்
20.	वस्तुबोधम्	வஸ்துபோதம்
21.	महातन्त्रम्	மஹாதந்த்ரம்
22.	वास्तुविद्यापति	வாஸ்து வித்யாபதி
23.	पारासरीयकम्	பாராசரீயகம்
24.	कालयूपम्	காலயூபம்
25.	चैत्यम्	சைத்யம்
26.	चित्रम्	சித்ரம்
27.	आवर्यम्	ஆவர்யம்
28.	साधकसार संहिता	சாதகசார சம்ஹிதா
29.	भानुमतम्	பானுமதம்
*30.	ऐन्द्रमतम्	ஐந்திரமதம்
31.	लोकघ्नम्	லோகக்னம்
32.	सौरम्	சௌரம்

__பட்டியலில் இல்லாத மேலும் சில நூல்கள்:__

*1.	वास्तुविद्या	வாஸ்து வித்யா
*2.	मनुष्यालय चन्द्रिका	மனுஷ்யாலய சந்திரிகா
*3.	सारस्वत चित्रकर्म शास्त्रम्	சாரஸ்வதீய சித்ரகர்மசாஸ்திரம்
*4.	ब्राह्मीय चित्रकर्म शास्त्रम्	ப்ராஹ்மீய சித்ரகர்ம சாஸ்திரம்
*5.	सकलाधिकारम्	சகளாதிகாரம்
*6.	शिल्परत्नम्	சில்பரத்னம்
*7.	सनत्कुमार वास्तु शास्त्रम्	சனத்குமார வாஸ்து சாஸ்திரம்
*8.	शिल्परत्नाकरम् (मयवास्तु)	சில்பரத்னாகரம்[தமிழ்]
*9.	सर्वार्थ शिल्पचिन्तामणि	சர்வார்த சில்ப சிந்தாமணி [தமிழ்]
*10.	शिर्पच्चेन्नूल्	சிற்பச்செந்நூல் [தமிழ்] [1977 ம் ஆண்டு அரசு வெளியிட்ட வை.கணபதி ஸ்தபதியின் நூல்]

__32 வாஸ்து சாஸ்திரத்தில் மனுசாரம் என்ற வாஸ்து நூலில் 18 வகையான நூல்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:__

1.	ईशानम्	ஈஸானம்
*2.	चित्रकाश्यपम्	சித்ரகாஸ்யபம்
*3.	प्रयोगमञ्जरी	ப்ரயோக மஞ்சரி
4.	पेरूहितम्	பேரூஹிதம்
5.	बौद्धमतम्	பௌத்தமதம்
6.	गौतमम्	கௌதமம்

7.	कुलालम्	குளாளம்
8.	वाशिष्टम्	வாசிஷ்டம்
9.	मनोकल्पम्	மனோகல்பம்
10.	भार्गवम्	பார்கவம்
11.	मार्कण्डम्	மார்கண்டம்
12.	गोपालम्	கோபாலம்
13.	नारदीयम्	நாரதீயம்
14.	नारायणीयम्	நாராயணீயம்
*15.	काश्यपम्	காஸ்யபம்
16.	चित्रयामलम्	சித்ரயாமலம்
17.	चित्रबाहुल्यम्	சித்ரபாஹுல்யம்
18.	देशिकम्	தேஸிகம்

வட இந்தியர்களால் கையாளப்படும் வாஸ்து நூல்கள்:

*1.	वास्तु राजवल्लभम्	வாஸ்து ராஜவல்லபம்
*2.	समराङ्गण सूत्रधारम्	சமராங்கன சூத்ர தாரம்
*3.	रूपमण्डणम्	ரூபமன்டனம்
*4.	कोदण्ड-मण्डणम्	கோதண்ட மன்டனம்
*5.	शिल्प प्रकाशम्	சில்ப் ப்ரகாஸம்
*6.	अपराजितपृच्छा	அபராஜிதப்ருச்சா
*7.	प्रतिमा मान लक्षणम्	ப்ரதிமா மான லக்ஷணம்
*8.	क्षीरार्णवम्	க்ஷீரார்னவம்
*9.	दीपार्णवम्	தீபார்னவம்
*10.	शिल्प शास्त्रम्	சில்ப சாஸ்திரம்

மயனின் தொழில்நுட்ப நூல்கள் [எல்லாம் தமிழ் நூல்கள்]:

1. ஓவியச் செந்நூல்
*2. சிற்பமாச் செந்நூல்
3. கட்டிடச் செந்நூல்
4. நிலமனைச் செந்நூல்
5. மனைநிலச் செந்நூல்
6. வானியல் செந்நூல்
7. பெருநடச் செந்நூல்
8. மூலிகைச் செந்நூல்
9. கணிதமாச் செந்நூல்
10. மரக்கலச் செந்நூல்
11. விண்கலச் செந்நூல்
12. ஏழிசைச் செந்நூல்

மேற்கண்ட நூல்களில் இன்று நம்மிடையே இருப்பவை நட்சத்திரக்குறி கொண்டு காட்டப்பட்டுள்ளது. இவையெல்லாம்

சமஸ்கிருத மொழியில் இன்று இருக்கின்றன. இவற்றை applied science என்று சொல்லி, அவற்றின் போக்கை விளக்கிடலாம். தமிழில் உள்ள நூல்களையும், சமஸ்கிருதத்தில் உள்ள நூல்களையும் சேர்த்து படித்தாலன்றி, விஞ்ஞானத்தை எவராலும் விளக்கிட முடியாது. இதனால் ஓவியச் செந்நூல் என்ற நூலையும், ஐந்திறம் என்ற விஞ்ஞானச் சூத்திரநூலையும் முற்காலத்தில் இருந்தன என்று இப்போது உறுதி செய்யலாம். இவற்றைத்தான் ஆராய்ச்சியாளர்கள் வழக்கொழிந்து போயின என்று சொல்வார்களாயினர்.

பண்டை நூல்கள் கிடைத்திட்ட புதிய வரலாறு

மேற்குறிப்பிட்ட நூல்கள் மற்றும் குறிப்பிடாத நூல்கள் எல்லாம் சேர்த்து 10 லட்சம் பாக்களை கொண்டவை என ஒருவர் கூறினார். இவர் இந்த 10 லட்சம் பாக்களை தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பாக கண்டெடுத்து அந்த 10 லட்சம் பாடல்களை மனனம் செய்திருந்தார். இப்போது அங்கே பழைய ஏடுகள் ஏதுமில்லை. இருந்தன என்று அவர் பார்த்து மனனம் செய்ததாக அவரே சொல்லி யிருக்கிறார். எது எப்படி இருப்பினும், அவற்றில் கிட்டத்தட்ட 2 லட்சம் பாடல்களை தமிழ்நாடு அரசு கேசட்டில் பதிவு செய்தது. பதிவு செய்த பாடல்களை தட்டச்சு செய்து முதலில் ஐந்திறம் என்ற நூலை 1986ம் ஆண்டு அச்சிட்டு அந்த ஆண்டு மதுரையில் நடந்த உலகத் தமிழ் அறிஞர் மாநாட்டில் அப்போதைய தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ராமசந்திரன் அவர்கள் வெளியிட்டார்கள். உரையில்லா விஞ்ஞான சூத்திரங்களாக இருந்தமையால் இவற்றை எவரும் ஆய்வு செய்திடவில்லை. அதனால் கிட்டத்தட்ட ஐந்திறம் என்ற நூல் வழக்கொழிந்து விட்டது என்று கூடச் சொல்லலாம். இந்த ஐந்திற சூத்திரங்கள் இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐங்கலை நுட்பங்கள் அடங்கிக் கிடப்பதையும் கண்டறிந்த நாங்கள் முதலில் 1993ம் ஆண்டு பொது மக்களுக்கு அறிமுகப்படுத்தியதோடு 1997ல் தமிழிலும்,

ஆங்கிலத்திலும் விளக்கவுரை எழுதி வெளிப்படுத்தினோம். இந்தத் துறையில் ஏற்பட்ட 45 ஆண்டு கால அனுபவம் எனக்குக் கைகொடுத்தது என்று பணிந்துச் சொல்ல விரும்புகிறேன். மேலை நாட்டு technical scholars நன்றாகப் புரிந்து அன்றாடப் பணிகளில் ஐந்திற விதிகளைப் பயன்படுத்தி வருகிறார்கள்!

இந்தப் பாக்களை தனது நினைவில் இருந்து ஒப்பித்து வழங்கிய அப்பெருமகன் இன்னும் நம்மிடையே இருக்கிறார். அவர் 10 லட்சம் பாக்களை மனனம் செய்து **மனனவேந்தன்** என்ற பெயரைப் பெற்றார். இவர் ஒரு கவிஞராகவும் இன்று விளங்குகிறார். சிருங்கேரிச் ஸ்ரீ சங்கராச்சாரியார் [மகாப் பெரியவாள்] மயன் பாடல்களை செவியுற்று சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் **அருட்கவி** என்ற பட்டத்தை இத்திருமகனுக்கு வழங்கி யிருக்கிறார். எனவே, அந்தப் பெருமகனாரின் பெயர் அருட்கவி வீரபத்திரனார் என்றாயிற்று. இவர் சென்னையிலே பிறந்து, இன்றும் சென்னையிலே வாழ்ந்து வருபவர். பரம ஏழை. அவரைப் பார்க்க விரும்புவோர் ஸ்தபதியை அணுகலாம். அவரைப் போற்றி ஆதரியுங்கள். அவரிடமுள்ள பிற பாக்களையும் கேட்டுப்பாருங்கள்! காப்பாற்றுங்கள்.

வாழ்க சமஸ்கிருதமும் தமிழும் ! ஓங்குக மயத்தமிழ்!

குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழர் விஞ்ஞான சமயம் !

ஜனவரி 25ம் தேதி
தைப்பூச நன் நாள்
மயன் பிறந்த திருநாள்

டாக்டர் வை.கணபதி ஸ்தபதி
நிறுவனர் மற்றும்இயக்குநர்:
வாஸ்து வேத ஆய்வு நிறுவனம்,
சென்னை-41.

பிரணவம் மேவிய

சதுரவியல் – வாஸ்து புருஷ மண்டலம் – காலமாத்திரை, காலவியல், காலக்கணக்கு, தாளவியல், கோலவியல்.


மூலத்தின் தன் உணர்வும், தன் பெருக்கமும்,
பெருக்கமுற்று இமிழ்ந்திடும் தானியல் அலைகளும்
அலைகள் தோற்றிய காலக் கோலங்களும்

ஆங்கிலத்தில் perfection is not of this world என்ற ஒரு முக்கிய தத்துவக் கருத்து ஒன்றுண்டு. அதாவது குறைவற்றதும் முழுமையானது என மதிக்கப்படுவது இந்த உலகத்தைச் சார்ந்ததல்ல மற்றும் பார்ப்பதற்கில்லை என்பது அதன் பொருள். எனவே, மனித்த வடிவமாயினும் வேறு எப்பொருளாயினும் யாதொரு குறையும் இல்லாத ஒன்று உளதென்று சொல்ல முடியாத நிலையை இந்த வாக்கியம் நமக்கு உணர்த்துகிறது. அப்படியானால் perfection என்பதை perfect form என்பது அதாவது குறைவற்ற பொருள் யாதெனக் கேட்கத் தோன்றுகிறதல்லவா? அப்பொருளைத் தான் நாம் பரம் பொருள் என்று ஆண்டாண்டு காலமாய் நினைத்தும் சொல்லியும் வருகிறோம். ஆனால் இந்தப் பரம் பொருளை – முழுப்பொருளை – நாம் பார்த்தோம் இல்லை என்பது தான் உண்மை நிலை.

இத்தகைய முழுப்பொருளாகிய பருப்பொருளை அல்லது பரம்பொருளை எங்கே காணலாம்? சுருங்கச் சொன்னால், அதனை நமக்குள்ளும் நமக்கு வெளியேயும் காணலாம் என்பது தான் ஏற்ற விடையும் விளக்கமுமாகும். அதே சமயத்தில் அந்த முழுப்பொருளை காணமுடியும் என்று உறுதிபடச் சொல்ல முடியுமா என்று வினா எழுப்பினால் எவரும் தக்கதொரு விடை சொல்ல வில்லை என்பதே உண்மை.

இந்த காணாத பருப்பொருளை, முழுப்பொருளை கண்டு சொன்னது யாரெனில், மாபெரும் இந்தியக் கட்டிடக் கலை ஞானியும் மயன் என்ற பெயருடைய ஒரு பெருந்தச்சன் என்பது உங்களுக்கு இப்பொழுது தெரிந்தாக வேண்டும். அவன் சொல்லுகிறான், கண்களுக்குப் புலப்படாத அந்த முழுப்பொருள் ஒரு சதுர வடிவமாக

அல்லது கனசதுர வடிவமாக உளதென்று. இந்தக் கனசதுர வடிவத்திற்கு **முச்சதுரம்** என்றும் சமநீளம், சமஅகலத்தோடு கூடிய வடிவத்தை **சச்சதுரம்** என்றும் மரபிலும் அவன் சொல்லும் சொல்லிலும் உளதென்பதை இங்கே குறிப்பிட்டுச் சொல்லுகிறேன். இங்ஙனம் சதுரமாக இயல்பில் தோன்றும் இந்த முழுப்பொருளானது தன்னைத்தானே புலப்படுத்திக் கொள்ளும் நோக்கில் [நேரத்தில்], அது சதுரமாக உளதென்றும் அந்த சதுரத்திற்குள் அளப்பெரிய ஓர் ஆற்றல் உளதென்றும் இந்த ஆற்றலை பிற்கால வாஸ்து நூல்கள் **புருஷன்** என்றும் கீழ்கண்ட பட விளக்கம் போல உளதென்றும் சொல்லுகிறான்.



வாஸ்து புருஷன் கிடக்கை
(enclosed energy as living organism)
(The lie of Cosmic energy pictographically symbolized into a most powerful human form)

சதுரத்திற்குள் அடைப்பட்ட அப்பொருள் மனித வடிவமாகக் காட்டி, அதையும் ஆண்மகனாகக் காட்டி, அதே சமயத்தில் அதனை இராக்சஷன் என்றும் சொல்லி, அதை மேலும் விளக்கி, வஸ்து புருஷன் என்றும் வாஸ்து நாதன் என்றும் வஸ்து பிரம்மம் என்றும் அவனுக்கு பிற்காலத்தில் நாம் நமது கட்டிடக் கலை தெரிந்த அனைவரும் சொல்லி, அந்த சொல்லை **வாஸ்து புருஷன்** என்று சொல்லி வரப்பட்டு அச்சொல் நிலைத்து விட்டது என்க.

ஒரு சதுரம், அந்தச் சதுரத்திற்குள் கை, கால்களை முடக்கி வைத்துக் கொண்டு இராக்சஷ உருவத்தோடு காணப்படுவதை உற்று நோக்குக. எல்லையற்ற அந்த வாஸ்துவை அல்லது வஸ்து பிரம்மத்தையும் பட விளக்கமாக வேறு எப்படித்தான் ஒரு கலைஞன் அல்லது விஞ்ஞானி உருவகித்தட முடியும்? ஒரு கவிஞன் கூட இந்த ஆற்றலைப் புரியும் அளவுக்கு ஒரே சொல்லால் விளக்கிடவும் முடியாதன்றோ! எனவே, நமக்கு அறிவுறுத்தப்பட்ட அத்விதமான இந்த ஆற்றலை அதாவது உயிர்ப் பொருளை ராக்சஷன் என்று தான் சொல்லி உணர்த்திட முடியும். இக்கால ஆங்கிலச் சொல்கூட ஒரு விஞ்ஞானச் சொல் ஒன்றைச் சொல்லி காட்டிட முடியாது என்று

சொல்லுவேன். சுருங்கச் சொல்ல வேண்டுமானால் இந்த சதுரத்திற்குள் அடைபட்டிருக்கும் ஆற்றலை demonic power என்றோ அல்லது power packed energetic cell என்றோ energy field என்றோ தான் சொல்லமுடியும். எனக்குத் தெரிந்த வரையில் இதை இக்கால விஞ்ஞானம் nuclear energy என்றும் nuclear energy field என்றும் தான் சொல்ல முடிந்திருக்கிறது. அதாவது இந்த ஞாலம் முழுவதும் பரவிக்கிடக்கும் ஆற்றலை ஒரு புள்ளியில் ஒன்று சேர்த்து அடக்கி வைக்க முடியுமானால் அதுவே nuclear energy என்று சொல்ல முடியும். இந்த சூத்திர மயமான புள்ளியைத்தான் நாம் பிரம்மம் என்றும் பிரம்மபிந்து என்றும் இன்னும் சுருக்கமாக விந்து என்றும் காலங்காலமாய்ச் சொல்லி வருகிறோம். இந்த விந்து ஒரு சுயம்பு – தானாக தோன்றிய பொருள். இது தானாகத் தோன்றியது மட்டுமல்லாமல், தன்னைத் தானாகவே தன் உணர்வால் ஒரு சதுர வட்டத்திற்குள் அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டும். இதுவே அதன் இயற்கை ஆற்றல் எனக்கொள்ளப்பட்டு இவ்விடத்திற்கு சதுரவியல் என்று மயன் பெயரிட்டிருக்கிறான் இந்த சதுரவியலை சம்ஸ்கிருத வாஸ்து சாஸ்திரம் வாஸ்து புருஷ மண்டலம் என்று சொல்லுகிறது. வஸ்து என்பது இங்கு சதுரத்திற்குள் அடங்கிய ஆற்றலையும் அந்தப் பொருளையே தன் உணர்வால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சதுரவடிவைப் பெற்ற நிலையில் வாஸ்து புருஷன் என்றும், அவ்வடிவத்தை வாஸ்து புருஷ மண்டலம் என்றும் சொல்லுவதாயிற்று. அதாவது வஸ்து உள்ளிட்ட வடிவம் இந்த சதுரவடிவம் என்பதை இங்கு குறிப்பிட்டு, இதுவே பரம் பொருளின் முதல் வெளிப்பாடு first self manifest form என்ற கருத்தில் இதனை இங்ஙனம் வருணித்து இதை ஏற்பதை தவிர வேறு வழி இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். இந்த மூலப்பொருளை இன்றைய விஞ்ஞானம் கண்டு இப்படி சொல்லியிருக்கிறதா என்பது கேள்விக் குறியே!

இத்தகைய சதுர அமைதியுடைய அணுப் பொருளாகிய மூலப் பொருள் அளவிட்டு சொல்ல முடியா ஆற்றல் மிகு பொருள் என்பதோடு மட்டுமல்லாமல் இஃதொரு இயங்கும் பொருள் என்றும் கொள்ளப்பட்டிருப்பதால் இதனைப் பேருயிர் என்றும் சொல்லி இந்தப் பொருள் தானாகவே வெடித்தாலும் அல்லது பிரிதொரு யுத்தியால் வெடிக்கச் செய்தாலும் அப்பொருள் அளப்பெரிய தீ யை வெளிப்படுத்தி உலகத்தையே பொசிக்கிடும் இயல்புடையது என்றும் சொல்லலாம். இதைத்தான்

அணுகுண்டின் அழித்திடும் ஆற்றல் (destricting power) நமக்கு இக்காலத்தில் புரிந்திட வைத்திருக்கிறது என்று சொல்லலாம். மீண்டும் சுருங்கச் சொல்லுகிறேன். சதுரத்தில் அடைப்பட்டுக் கிடக்கும் புருஷன் சதுர வடிவம் கொண்டு விளங்கும் நிலையில் வாஸ்து புருஷன் என்ற ஒரு வித புதிய நிலை – ஒருவித புதிய பெயர் தோன்றி விட்டது எனலாம். இதனை வாஸ்து சாஸ்திரம் वास्तु पुरुषः चतुरश्र संस्थः வாஸ்து புருஷ: சதுரஸ்டரய சம்ஸ்தக: என்று விளக்கம் தருகிறது. இத்தகைய அடக்க முற்றுக் கிடக்கும் சக்தியை அங்ஙனம் சொல்லிக் காட்டிய விஞ்ஞானிதான் மயன் என்றாகிறான். அவன் தோற்றுவித்த சொல்தான் சதுரவியல். இந்த சதுரவியல் பற்றி ஐந்திறம் மிக நன்றாக விரித்து பல இடங்களில் பேசுகிறது. இதுதான் மூலக்கருவும், மூலக்கருத்தும் என்று கொள்க. இந்தக் கரு தான் கருப்பு நிறமாக பிற்காலத்தில் கொள்ளப்பட்டு black hole என்று சொல்லப்பட்டிருக்க வேண்டும் என்று யுகித்து அறியலாம். விஞ்ஞானிகள் மேலாய்வு செய்தல் வேண்டும்.

இத்தகைய அணு ஒன்றல்ல, இரண்டல்ல எண்ணற்றவை இந்தப் பிரபஞ்சத்தில் நிறைந்து நீக்கமற உளதென்ற கருத்தை இப்போது உற்றறிந்து மகிழலாம். இந்த சதுரவடிவங்கள் அடுத்தடுத்துச் சேர்வதினால் இடைவெளி இல்லாத பரப்பிடம் தோன்றுமல்லலவா? இதனைத்தான் வெளி என்றும் வெட்டவெளி என்றும் ஆகாஸம் என்றும் சொல்லி வருகிறோம். இப்பொருள் தானும் ஒளிர்ந்து தன்னைச் சேர்ந்த பொருளையும் ஒளிபெறச் செய்கிறது என்ற கருத்து நம்மிடையே நீண்ட காலம் இருந்து வருகிறது. இந்தக் கருத்தை ஒரு சம்ஸ்கிருத சுலோகம் மிக நன்றாக உணர்த்தி விட்டது என்று சொல்லலாம்.

नतत्रसूर्यो भाति नचन्द्रतारकं ।
नेमे विद्युतो भान्ति कुतोयमग्निः ॥
तमेव भान्तं अनुभाति सर्वं ।
तस्य भासा सर्वमिदं विभाति ॥

இந்த பிரபஞ்சத்தில் இத்தகைய ஒளிக்கதிர்கள் நிறைந்திருப்பதால், அந்த ஒளிக்கதிர்களால் நாமும் நம்மைச் சுற்றியுள்ள உயிரினங்களும் உருப் பெற்றிருப்பதால் இந்த பிரபஞ்சத்தில் காணப்படும் அத்தனைப் பொருள்களும் ஒளிப் பொருள்களே எவ்விடத்திலும் என்று சொல்லப்பட வேண்டும் இந்த ஒளிப் பொருளைத்

தான் நாம் நமது meterial world ல் காண்கிறோம்.


எனவே, இனி விரித்துக் கூறிடில், பிரபஞ்சத்தில் சஞ்சரிக்கும் விண் அணுக்கள் அனைத்தும் உயிரிகள் என்பது ஐந்திறக் கொள்கை. எனவே, ஒரு சிறிய அணு, உயிர்ப்புள்ள நிலையில், சதுரம் சதுரமாக வளர்கிறது என்பது ஐந்திறத்தின் பிறிதொரு அடிப்படைக் கொள்கை ஆயிற்று. அதாவது, அணுக்கள் விரிகிறது என்று கொள்ளும் போது ஒரு முக்கியமான விஞ்ஞான நிகழ்வு உணர்த்தப்படுகிறது. இதனை உற்றறிதல் வேண்டும். அதாவது, ஒருவகை தன் பெருக்க நெறியில் இந்த விரிதல் நிகழுகிறது. அதாவது அலை அலையாக ஓர் அதிசய கணக்கொற்றி விரிகிறது என்பது பொருள். இப்படி நிகழும் போது ஏற்படும் அலைகளை உற்று நோக்கினால் மிகப்பெரிய கணித நுட்பம் (mathematical truth) புலப்படக் கூடும்.


விண்ணே – விண் அணுக்களே – விண் கருக்களே மண் கருக்களாகவும், இறுதியில் மண்ணாகவும் திரிபுறுகின்றன என்பது மய விஞ்ஞானத்தின் உச்சி (apex theory of Mayonic science) த் தேற்றம். சுருங்கச் சொன்னால், விண்ணே மண்ணாகிறது என்பது முடிந்த முடிவு என்க. இதை வைத்து பேராசிரியர் ஐன்ஸ்டீனின் $E=mc^2$ என்ற சூத்திரம் சரியே என்று நிறுவிடலாம்; உறுதி செய்திடலாம். பிறகு மேலும் விளக்குவேன்.

விண் நிலையில் (at cosmic level), விண்வெளியில், விண் அலைகள் தன்னியல்பாகத் தோன்றுகின்றன. உற்று நோக்கி எதுவென துருவித் துருவி நோக்கினால் அதனை இயக்குவது நான் சொல்லி வந்த மூலப் பொருள் என்பதே ஆகும். இந்த மூலப் பொருளை இந்த நிலையில் “இயக்கி” என்று கூறலாம் அல்லவா? இந்த இயக்கி என்ற கருத்தில் “இசக்கி” என்ற பெயரில் ஒரு கிராம தேவதையே உளது. கிராமப் பெண்களுக்கும் இத்தகைய பெயர் வைப்பது உண்டு என்பதை நினைவிற் கொண்டு வாருங்கள்.

இப்பொருளைக் காலம் என்றும் காலமூலம் என்றும், மூலக்கனல் என்றும் ஏன் காலமாக் கடவுள் என்றும் கூறுகிறான் மயன். பத்து [அ] நூற்றி எட்டு உபநிஷதங்களில் அடக்கப் படாத ஒரு சிறிய உபநிஷதம் இந்த காலத்தை காலப்பிரம்மன் என்று கூறுகிறது. कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति என்பது அது தரும் குறிப்பு. இந்த அலைகள் பரமாணு நிலையில் சதுரம் சதுரமாக விரிந்து விரிந்து

அலைகளெனப் பரவி விண்வெளி - ஒளி வெளி - ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் ஒளிமய வெளி ஆயிற்று என்பதைத் தொடக்கத்தில் நான் விளக்கினேன். இதற்கு, இந்தச் சதுர அலைகளின் தன் இச்சையான இயக்க நிலைக்கு மயத் தமிழில் **சதுரவியல்** என்றும், நடைமுறை வாஸ்து சாஸ்திரத்தில் **வாஸ்து புருஷ மண்டலம்** என்றும் பெயர். இந்த மண்டலமும் சதுர வடிவினதே.





வாஸ்து புருஷன் கிடக்கை
(enclosed energy as living organism)
(The lie of Cosmic energy pictographically symbolized into a most powerful human form)

இவற்றை நினைவிற்குக் கொண்டு வந்து இனிவரும் செய்திகளை உற்று நோக்குங்கள். இதுவரை எவரும் கேட்டிராத - பார்த்திராத - அனுமானித்துச் சொல்லிடாத ஓர் விண்ஞானச் செய்தியை - கணித வடிவத்தை விளக்கிடப் போகிறேன். இச்செய்திதான் வாஸ்து சாஸ்திரத்தின் உயிர் நாடி [அ] மூலாதாரம் என்று சொல்ல வேண்டும். இக்கருத்தைத் தான் வாஸ்து நூல்கள், உலகியல் வாழ்க்கையில் மாந்தரினம் உய்வதற்கும் ஆன்ம நலம் பெற்று சுக வாழ்க்கை வாழ்வதற்கும் ஏற்ற கட்டிடங்கள் கட்டுவதற்கு பல* விதிகளைக் கூறுகின்றன. நான் முன்பு கூறிய தேற்றங்களை உள்ளடக்கிப் பேசும் நிலையே - போக்கே - வாஸ்து நூல்களில் கணக்கியலாகப் பெரிதும் காணப்படுகின்றது. சுருங்கச் சொன்னால் வாஸ்து நூலானது பிரபஞ்ச இயக்க நுட்பங்களை கணக்கிட்டு விரிவுரையாக விளங்கிடும் கணித நூல் என்பது துலக்கமாகும் என்க. அவை மட்டும் போதா. அவற்றை விடுத்து ஆசான் [குரு] வழி தெரிந்து கொள்ள வேண்டிய நுட்பங்களும் நிரம்ப உண்டு. எல்லாவற்றுக்கும் மேலாக பிரயோகம் என்ற செய்முறை (practice) ப்படுத்திப் பெற்றிட்ட அனுபவம் நிரம்பத் தேவை என்க. பயிற்சி என்பது உழைப்பை அடிப்படையாகக் கொண்டது. ஒருவர்க்கு எந்த நிலையிலும் உழைப்பில்லாமல் ஏதும்

* "நுண் வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக்கொடுத்த மரபின இவைதாம்"

நிகழ்வதுமில்லை; கிடைப்பதுமில்லை. இதற்கு உருக்கொடுத்து கைப்படவைப்பதே காலம் [அ] காலத்துடிப்பு ஆகும். இக்கணக்கு ஒரு சீர்த்தி, அதாவது ஒருவகை லயக்கணக்கில் (at rhythmical vibrancy) நடப்பதால் காலக்கணக்கென அறிவுறுத்தப்படுகிறது. அதாவது உழைப்பின் வெளிப்பாடு காலக் கோலமெனப் படுகிறது என்க. இந்த வெளிப்பாட்டை தோற்றுவிப்பதும், இயக்குவதும் உணர்வு என்கிறான் மயனது தேற்றமாகியது. எனவே, **உழைப்பே மூலம், உணர்வே காலம்** என்பான் மயன்.


கடவுளும் உழைக்கும் பொருள் என்பது உறுதியான மயக் கருத்தாகும். இக்கால விஞ்ஞானியர்களும் கடவுளை Energy என்றும், அக்கடவுள் இரண்டு நிலைகளைக் கொண்டவர் என்றும், ஒரு நிலையில் அதாவது அனைத்து ஆற்றல்களும் ஒன்றித்து அசையா நிலை கொண்ட அமைதிப் பொருளை Potential energy என்றும், பிறிதொரு நிலையாகிய செயல் நிலையில் Kinetic Energy என்றும் சொல்வதையும் உற்று நோக்குங்கள். இந்த Kinetic Energyயின் வெளிப்பாடுகள்தான் (Primal but physical manifestations) பஞ்சபூதங்கள் எனப்படுகின்றன. பூதம் என்ற சொல்லுக்கு தோற்றம் என்றே பொருள். எனவே ஒன்றாய் உள்ள அந்த தனிப்பொருள் கொண்டுள்ள ஐந்து ஆற்றல்களை [அவற்றின் வெளிப்பாடுகளை (manifestations) தோற்றங்களை] **ஐந்திறம்** என்ற சொல்லால், உணர்த்துகிறான். இவை மேலும் ஐந்தைந்தாக பெருக்கமுறுகின்றன என்பது பிறிதொரு நுட்பம். இஃது எல்லைகளைக் கடந்து இலங்கிடும் நிலை ஆகும்.

தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தில் ஒரு கல்லைச் செங்குத்தாகப் போட்டால் வட்ட வடிவ அலைகள் தோன்றி, அடுக்கடுக்காக விரிந்து செல்வதைக் காணலாம். இப்படிச் செல்வது நம்மால், நம் விருப்பப்படி நிகழ்வதில்லை. இங்ஙனம் நடப்பது ஒரு phenomenon அல்லது அந்த அலைகளின் [திரைகள் என்பது பிறிதொரு சொல்] இயல்பு ஆகும். இதனை நிறுத்தவோ, ஏன் என்று கேட்கவோ, மாற்றி நடை பெறச் செய்யவோ இயலாது என்று தெளிதல் வேண்டும்.


இந்த நிலையில் உள்ள energy எப்படி matter ஆகிறது என்பது அதிசயமன்றோ! அதை விளக்குவது ஐந்திறத்தின் தலையாய நோக்கமாகவுளது. அதாவது விண் எப்படி மணி ஆவது – விண்ணியல் மண்ணியல் ஆவது – எப்படி என்ற விளக்கத்தை படத்தில் காண்க.

விண்ணில் தோன்றும் அலைகள் சதுரங்களாகும்

மண்ணில் தோன்றும் அலைகள் வட்டங்களாகும்



சதுரவியல் – **Cosmic energy waves**



வட்டவியல் – **Earthly (energy) waves**

(**Material waves** ன் அளவியலை உற்றறிந்து, அந்த அளவியலைக் கொண்டு வடிவங்களாக – லயம் மாறாது – லயத்திற்குக் கட்டுப்படுத்தி – ஆன்மவியல் என்று சொல்லப்பட்டு வரும் உளவியலை (Psychical experience) அனுபவிக்கச் செய்திடலை பெரும் நோக்கமாகக் கொண்டது வாஸ்து விஞ்ஞானம் என்க. இதை ருசுப்படுத்தும் நோக்கில் वास्तु पुरुष: चतुरश्र संस्थ: என்பது வாஸ்து சூத்திரமாக உறுதி பெற்று விளங்குகிறது.]

இந்தக் கருத்திலும், இந்தக் கருத்தொத்த படத்திலும் பிறிதொரு தொழில் நுட்பம் உளதென்பதை இங்கே குறிப்பிடுகிறேன்.

முன்பு சொன்ன சதுரவியல் என்பது ஓர் அற்புத மூல வடிவம் ஆகும். நான்கு பக்கங்கள் கொண்ட நிலையில் இச்சதுரம் சாயாமல், சரியாமல், நெளியாமல், நெறியாமல் உருப்பெற்ற நிலையை **சச்சதுரம்** (Perfect square) என்று சொல்வது சிற்பியர் தொழில் வழக்கு. இந்த நிலையை மூலப்பொருளின் இயல்பான – தனக்கே உரிய ஓர் அமைப்பு [அ] அமைதி என்க. இத்தகைய மூல வடிவத்தை ஆங்கிலத்தில் Archetypal (basic/fundamental) form என்று பெயர் சொல்லுவர் அறிஞர்கள். இந்த மூல வடிவமே ஸ்தூல வடிவத்திற்கு கிடைப்படம் (Layout plan) என்பது வாஸ்து விஞ்ஞானக் கருத்துமாகும். கிடைப்படமே ஸ்தூலமெனப்படும் கனபரிமானப் படத்திற்கு [அ] அழகியல் தோற்றத்திற்குக் காரணம் என்பது நடைமுறை கட்டிடக்கலை விதியாகும். இதற்கும் இலக்கணமும் உண்டு தான். இந்த இலக்கணம் சவட கணக்கியல் நெறியுடையதே. கட்டிடத்தின் நீள, அகல, உயரம் ஆகியனவும், அடக்க சுருக்கங்கள் மற்றும் நீட்சிகள் அனைத்தும் கணக்கியல் சார்ந்த இலக்கண

வயப்பட்டதே ஆகும். இந்த அடிப்படை இலக்கணங்களைக் கொண்டே இலக்கிய வடிவங்களைச் [இலக்கியத்திலிருந்து இலக்கணம் அல்ல] சிற்பிகள் தோற்றுவிப்பதால், வருணிக்க இயலா இனிய வடிவங்கள் தோன்றியதோடு ஒரு மயக்கத்தையும் - இயற்கையை மீறிய அழகுடையதாய் மிளிர்வதையும் தோற்றுவிக்கிறது என்பது உண்மையே. இதைப் புரிந்து கொள்ளாத - உலகியல் அழகையே ருசித்து வந்தோர் இலக்கணம் வகுத்து விட்டிருப்பதை மேலை நாட்டினர் தமது உளத்தில் வைத்துக் கொண்டு, இந்தியநாடு வந்து போகிறார்கள்; வியந்து போகிறார்கள். இந்த வியப்புக்குக் காரணம் சொல்வாரில்லாது போனதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கிறார்கள்! இதே இயல்புடையது தான் தமிழ் நாட்டின் இயல், இசை, நடம் என்ற முத்தமிழும் ஆகிறது. நான்காவது ஐந்தாவது தமிழாகிய சிற்பம் கட்டிடமும் இவ்வகையின என்பதைத் தான் நான் மேலே விளக்கினேன். சுருக்கிச் சொன்னால் ஐந்தமிழும் ஒரே இலக்கண [காலக்கணக்கு ஏறிய இலக்கணம்] வயப்பட்டு விளங்குவதை பல மேடைகளிலும்,நூல்களிலும் விளக்கியுள்ளேன்! இதனை நம்மவர்கள் கூட சரிவரப் புரிந்து சொன்னாததிற்குக் காரணம் Fine arts நம் நாட்டு அனைத்தும் science centric என்பதனால் தான். உலகியல் உயிரினங்கள் எல்லாம் science centric தான். கலையால் பெறும் சுவையை scientific aesthetics என்று சொல்லித் தான் புரிய வைக்க முடியும் என்க.

அடுத்து விண்ணியலையும், மண்ணியலையும் தொடர்வோம். இடையிடையே நான் பேசும் ஒரு புதியவிழப்புணர்வை ஏற்படுத்துமென்று நம்பித் தான் பேசி வருகிறேன். நிற்க.

வாஸ்து புருஷ மண்டலம்:

மேற் பத்தியில் நான் குறிப்பிட்ட அந்த மூலச்சதுரமும், அதிலிருந்து விரிந்து செல்லும் பெரிய பெரிய சதுரங்களும் வாஸ்து புருஷ மண்டலம் என்ற பெயரைத் தாங்குகின்றன. இது தான் இயற்கைச் சக்தி செய்யும் - மேற் கொள்ளும் - எளிய geometrical form, ஜியோமிதி வடிவம் எனில் மிகையன்று. மூலமும் சதுரம், விரிந்து செல்லும் அலைகளும் சதுரம். இதேமூலம் உலகியல் நிலையில் (in the material world) வட்டம் வட்டமாகச் செல்வதை முன் சென்ற படங்கள் வாயிலாக இப்போது உணரலாம். சதுர அலைகள் விண்ணிலும், வட்ட வட்ட அலைகள் மண்ணிலும் நிகழ்கின்றன என்பது பொருளும் உண்மையுமாகும். பின்னையதைக் கண் கூடாகக்

காணலாம். முன்னையதை விஞ்ஞானக் கண்களால்தான் காண முடியும். ஆனால் இந்த விஞ்ஞான நெறியை மயமதம் போன்ற கலை நூல்களில் எங்கும் காணலாம். முறையாகப் படித்துத் தெளிவுற்ற சிற்பிகள் நன்கறிவர். ஆனால் விளக்கிச் சொல்வதும் புரிந்து கொள்வதும் கடினமே.

ஒரு புள்ளியாகத் தோன்றிய, ஆனால் கண்ணுக்குத் தெரியாத பரமாணு நிலையில் இந்தச் சதுரவியல் ஆகாஸமெனப்படும் ஒளி வெளியில் நிகழ்கிறது. இதற்குக் காரணம் 'வளி'யின் தாக்கம் என்பது நுட்பம். வளி என்பது இயற்கையின் விசைதான் (spiralling force).

இந்த நுட்பம் வழக்காற்றில் உள்ள வாஸ்து சாஸ்திரங்களிலும் உண்டு தான். எனவே தான் விண் அலையில் சதுரநிலையை உற்றுணர்ந்த சிற்ப விஞ்ஞானிகள் இறைவடிவத்தை சதுர வடிவமான கருவறையில் ஸ்தாபிக்கிறார்கள் என்க. சதுரம் நீண்ட சதுரமாகவும் கொள்ளப்படுவதையும் உற்றுப் பார்த்துத் தெளியலாம். பிறகு மேலும் விவரிப்போம்.

இதிலிருந்து கிடைத்திடும் ஓர் அரிய அறிவியல் நுட்பம் உண்டு. மிகச் சிறிய பரமாணு நிலையில் சதுரமே – சதுரவடிவ பிரம்ம பிந்துவே – ஆற்றலே மயமான சதுரம் என்பதையும், அது பொன்னிறமானது என்றும் முன் பத்தியில் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தேன். சுருங்கச் சொன்னால் பிரம்மம் என்று பல்லாண்டு காலமாக அனுமானமாகச் சொல்லி வரும் அந்த சக்திமயப் பொருள் பொன்னிறச் சதுரமாக உளது என்பது பொருளாகிறது. ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? ஆனால் உண்மையே!!

இந்தச் சதுரம் என்பது அணுவின் [சிற்றவையின்] two dimensional layout plan ஆகும். பிரம்மம் கனப் பொருளாகையால் இதற்கு பிறிதொரு பரிமாணமும் உளது. அதாவது அதன் உயரம் மூன்றாவது அளவாகும். இதனால் வாஸ்து புருஷ மண்டலம் என்பது கிடைப்படம். ஆனால், பருப் பொருளான நிலையில் மூன்று அளவுகள் கொண்ட (tridimensionally a cube) கனசதுரமாகும் என்பது அதிநுட்பப் பொருளாகும். பிறப்பிலேயே பரமாணுக்கள் கனசதுர அணுக்கள் என்பது அறிவியல் நுட்பம். கனபரிமாண அணு "முச்சதுரம்" என்ற சொல்லால் குறிப்பிடுவதைத் திருமந்திரத்தில் காணலாம்.

இதனைப் புரிந்து போற்றிட ஆங்கிலத்தில் The structure of Brahmam exists

in cubical form என்று பல்லாண்டுகளாக மேடைகளில் பேசியும் ஏடுகளில் எழுதியும் வருகிறேன். இக்கருத்தை என்னிடம் பாடமும் பயிற்சியும் பெற்ற அமெரிக்கத் தொழில் நுட்ப வல்லுநர்கள் என்னை வெகுவாகப் பாராட்டுவதைக் கேட்டு மெய்சிலிர்த்துப் போகிறேன். அமெரிக்கர்களும் workshops and seminars நடத்தி இந்த நுட்பங்களை விளக்கி அமெரிக்காவில் அவர்தம் வீடு, வாயில்களை வாஸ்து நெறிப்படி செய்து வருகிறார்கள். பிறருக்கும் சொல்லிக் கொடுத்து, சேவை செய்து நற்பயன்களை E-mail மூலம் எனக்குத் தெரிவித்து மட்டில்லா மகிழ்சியடைகிறார்கள். அவர்கள் மூலம் மயநெறி பரவிடுவதைக் கேட்டுப் பிறவிப் பயன் எனக்குக் கிடைத்துவிட்டதாக எண்ணுகிறேன்.

எனவே, விண்ணில் பரவிக் கிடக்கும் விண் அணுக்கள் அனைத்தும் சிறிய பெரிய கனசதுர ஒளிக்கட்டிகள் நிரம்பிய பேரிடம் என்று சொல்லி வருகிறேன். இன்னும் நுணுகிப் பார்த்தால் அணுவும் கனசதுரம் (cosmos at subtle or smallest micro level) அண்டமும் (cosmos at macro level) கனசதுரமே என்பது கிளைத் தேற்றமாவதை உற்றுணர்க. இப்படியும் சொல்லலாம். நமது ஜீவான்மாவின் வடிவம் micro cube என்றும் பேரான்மாவின் வடிவம் macro cube என்று இறுதிக் கருத்தாகிறது எனலாம். இக்கால விஞ்ஞானிகளின் இறுதித் தேற்றம் ஒன்று வெளிவருமானால், இப்படித்தான் இருக்க முடியும்!

இந்த நிகழ்ச்சிகள், அதாவது It is the phenomenon of micro biological being at meta - physical level, turning or metamorphosing into, macro biological being என்று, உறுதிபடச் சொல்லலாம் என்பது நான் கண்டுணர்ந்த அதிநுட்ப அறிவியல் தேற்றம் என்க.

இதன் Corollary போல, அணுவும் cube மற்றும் அண்டமும் cube என்று சொல்லி வந்தேன். ஒரு சிலருக்கே புரிந்தது. மற்றவர்கள் மௌனமாயினர். சிந்திப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இதை வைத்து, अणोरणीयान् महतो महीयान् என்ற வேதக் கருத்துக்கு ஒரு புதிய விளக்கம் கண்டேன். அறிஞர் முன் பல நேரங்களில் படைத்தேன். அதாவது the structure of OM sound or light is a cube. It does have a well defined form, evident from its orderly dynamism, with all the Sun, Moon, Earth, Stars etc., enclosed by the Cosmic Space or Cosmos.

Big, Bang and Spin theory:

இதனை, இத்தருணத்தில், பிரம்ம ரகசியம் என்பது இதுவே என்று சொல்லத் துணிகிறேன். இந்தக் Cubical micro atom தான் தன் உணர்வாக – தானாக வெடித்து, தான் பெற்ற பிள்ளைகள் போல சிறு சிறு அணுச் சதுரங்களாக (fractals in cublical forms) ச் சிதறி இந்த பிரம்மாண்டமே தோன்றியிருக்கிறது என்று சொல்லி வருபவனானேன். அணுவின் இந்தத் தெரித்தலைத்தான் Big Bang என்று சொல்ல வேண்டும். Big Bang என்பதற்கு மயத்தமிழ்ச் சொல்தான் தெரித்தல் (splitting) என்ற சொல் ஆகும்.

What was there before Big Bang என்ற வினாவுக்கு விடையாக இந்தப் பிரம்மபிந்து (cubical subatom) தான் இருந்தது என்று துணிந்து கூறுவேன். இது தான் கோவில் கருவறை அமைப்பும் ஆகும். விண்கருவின் அமைப்பு [அ] படிமம் என்பது ஒரு விஞ்ஞான விளக்கம்.

How Energy turns into matter or material energy ஆகியது என்ற வினாவுக்கும் விடையை இதன் மூலம் காண முடிந்தது. தக்க விடை அடுத்துவரும் பத்திகளில் விளக்கமுறுகிறது. [காண்க: ஸ்தபதியின் "What is a temple?" என்ற நூல்.]

இந்த பிரம்மம் என்ற மூலப் பொருளானது இயல்பாக தன்னைத் தானே முயக்கி, முடுக்கி இடமிருந்து வலமாக சுற்றிக் கொள்கிறது என்பது அடுத்த வினாவுக்கு விடை எனலாம். இதனை Spin theory என்று கொள்ளலாம். இப்படித்தான் இன்றைய விஞ்ஞானியர் கொள்கிறார்கள்.

<u>$E=mc^2$ இன் – சூத்திர விளக்கம்:</u>


மலை முகட்டிலிருந்து செங்குத்தாக விழும் நீர் [அருவி] தரையில் விழுந்து பள்ளம் உண்டாகி அந்தப் பள்ளத்தில் நீர்ச்சுழி ஏற்படுவதைக் கண்டிருப்பீர்கள். ஒரு புள்ளித் துளியானது தன்னைத் தானே சுழித்துக் கொண்டு அணு அளவினதான அலையைத் தோற்றுவித்துக் கொண்டு, அடுத்தடுத்து நீர் சேரச் சேர பேரலைகளையும் தோற்றிக் கொண்டு, அலைமயத் தடாகமாக விரிவதை நடைமுறையில் – உலகியலில் – காணலாம்.

கடலும் கடல் அலைகளும் இப்படித்தான் தோன்றியிருக்க வேண்டும் என்றும் இஃது எப்போதும் தொய்வின்றி நிகழ்வதால் "அலைகள் ஓய்வதில்லை" என்ற

விஞ்ஞானக் கூற்றும் ஏற்படலாயிற்று என்று இப்போது கூறலாம். இந்த வட்டத்தின் விட்டத்தை அடிப்படையாக வைத்து ஒரு சதுரம் வரையப்படுமானால் அச்சதுரம் material square எனப்பட்டு அதே சமயத்தில் விண்ணிடத்தின் பரப்பளவில் மாறுபடாது விண்ணியலை மண்ணியலில் இறக்கி வைத்ததற்கு சமமாகும் என்பதை – அதன் படவிளக்கத்தை அடுத்துக் காண்க.

MECHANICS OF SUBTLE ENERGY TURNING INTO GROSS ENERGY

(The turn of subtle into gross)



The Primal manifest form of the primordeal Vastu.
It is squarish and of minutest particle of space.
Tridimensionally it is the structure of OM - Light and OM - Sound.

To put it in modern terminology, these energy cubes are building blocks of the universe and infact, those are the material forms of the universe as well.

எட்டின் பிறழ்வே நவமெனவாகி - மயன்

THE SQUARE (8x8) : the arcehtypal manifest wave form of the unmanifest Supreme Being

turns into

THE CIRCLE (9X9) : the gross material form, the area of both remaining the same.

மூலத்திற்கும், மூலத்தின் வழித் தோன்றல்களாகிற பல்வகைக் கோலங்களுக்கும் ஒரே கிடைப்படம் (layout plan) என்றும் அறிவியல் ரீதியாகக் கொள்வாராயினர். இதனை அடியில் வரும் இரண்டு படிமங்களையும் உற்றுப் பாருங்கள். மிகப்பெரிய உண்மை புலப்படும் என்று நம்புகிறேன்.

இதற்குமொரு நுட்ப அறிவியல் உளதென்பதை இப்போது சொல்லிட விழைகிறேன். மூலநிலையில் கனசதுரமாக, தானே உருக்கொண்ட (micro abode/ microbode) நுண்பொருள் மூலநிலையில் கனசதுர ஒளிக் கட்டி தான் என்று சொன்னேனல்லவா? இது உணர்வுற்றுச் சிதறிய அறிவியல் நிகழ்ச்சியைத் தான் Big Bang என்றேன்.

சிதறுண்ட முதல் நிலையில், அந்த ஒற்றித்த (single micro cell) பரமாணு 64 சிற்றணுக்களாக (fractals) ச் சிதறி ஒரு சதுர அடைப்பில் தன்னை அடக்கிக் கொள்கிறது. ஏன் எப்படி என்று கேட்கக் கூடாது. இந்த நிகழ்வு அதற்கு இயல்பானது. Question பண்ணுவதற்கு கிஞ்சிற்றும் நமக்கு அதிகாரம் இல்லை. இதற்கு விடை natural phenomenon அல்லது தானியல் வடிவு என்பது பொருள் என்று மயத்தமிழில் சொல்லலாம்.

பிரணவம் நிறைந்த
அணுவியல், கணக்கியல், அளவியல்
உருவியல், அழகியல்

அணுக்கொள்கை:

நாம் நமது ஊனக்கண்களால் பார்த்தறியக் கூடிய என்னென்ன பொருள்கள் இருக்கின்றனவோ அவை அனைத்தும் அமர்ந்திருக்கும் (seated) அல்லது சூழ்ந்திருக்கும் (enclosed) இடத்திற்கு தமிழில் **ஞாலம்** என்றும் சம்ஸ்கிருதத்தில் **பிரபஞ்சம்** என்றும் சொல்லப்படும். இந்த ஞாலம் என்ற சொல் ஒரு கலைச்சொல். இதேபோல, பிரபஞ்சம் என்ற சொல்லும் ஒரு கலைச்சொல்லே. இதனை மேலும் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனைப் **பேரிடம்** (macro space) **வெட்ட வெளி** (pure space) என்று சொல்லலாம். வெளி, வளி, தீ, நீர், நிலம், ஆகிய ஐம்மூலங்கள் (five elemental substances) சேர்ந்து இலங்குவதால் இதே இடம் பிரபஞ்சம் எனப்படுவதாயிற்று. இதனை **ஒளி வெளி** என்கிறான் சங்க காலத் தமிழ் விஞ்ஞானி மயன். இந்தப் பேரிடத்தைத் தான் சம்ஸ்கிருதத்தில் **மஹத்** (macro space) என்றும், அந்த மஹத் ஆனது தொடக்க நிலையில் ஒரேயொரு நுண் அணுவாக அதாவது சிற்றிடமாக இருந்தமையால் அச்சிற்றிடத்தை **அணு** இடம் (micro space) என்றும், **சிற்றவை** என்றும் சொன்னான் அந்த விஞ்ஞானி.

ஆதியில் இந்தச் சிற்றிடமானது கனசதுர வடிவினதாகவிருந்தது (Energy in cubical form) என்பது ஓர் உச்ச (Supreme) விஞ்ஞானக் கருத்தாகும். இந்தச் சிற்றவைக்கு microbode என்று பெயரிட்டிருக்கிறேன். சிற்றம்பலம் என்றும் பெயருண்டு. மேற்கண்டவாறு கண்டு சொல்லியது முதன் முதலில் தமிழ் விஞ்ஞான மரபு என்று சொன்னால் மிகையாகாது[1]. அதே நேரத்தில் இக்கொள்கையை வேத காலத்திற்குப்பிறகு வந்த ஓர் உபநிஷதமானது [கடோபனிஷத்] "अणोरणीयान् महतो महीयान्" "*அனோரணீயான் மஹதோ மஹீயான்*" என்று சொல்லுகிறது. **இந்தப் பிரபஞ்சம் அணுவுக்கும் அணுவாய் உளது என்பதும் மஹத் என்ற நிலையில்**

1. நுண்வினைக் கம்மியர் காணா மரபின
மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம் - இளங்கோ.

பெரிதுக்கும் பெரிதாய் உளது என்பதும் வெளிப்படைப் பொருள். அதே நேரத்தில், இதன் உண்மைப் பொருள் யாதெனில், **அணுவில் இருப்பதே அண்டத்திலும் உளது; அண்டத்தில் இருப்பதே பிண்டத்திலும் [அணுவிலும் அனைத்து உயிரினங்களிலும்] உளது என்பது அரியதொரு விஞ்ஞான நுட்பம். அதாவது பிறப்பு, வளர்ச்சி மறைதல் ஆகிய மூன்று நிலைகளும் இரண்டுக்கும் ஒன்றே.**

அணுவே அண்டமாக:

இப்படிக் கண்டு சொன்னது எந்த நூல் எனில் "சில்பவித்யா ரகஸ்யோபநிஷத்" என்ற சிற்பியர் வசமுள்ள உபநிஷதமாகும். இது Technical upanishad ஆக இருந்தமையால் ஒதுங்கி நின்று விட்டதெனலாம்.[1] இது தெரியா விட்டால் பிரபஞ்ச ரகசியங்கள் தெரிவதற்கில்லை என்று பொருள்படப் பேசுகிறது.அணுவோங்கி அண்டமாகப் பருத்து, விரிந்து, இன்னும் வளர்ந்து கொண்டே போகிறது, என்பதுமொரு கருத்து. ஒரு காலத்தில் அவையெல்லாம் ஒடுங்கிடும் என்பது மேலுமொரு நுட்பம். இயல்பில், அணுவும் அண்டமும் ஒத்த குணமுடையன (Properties and characteristics) என்பதும் ஒரு விஞ்ஞான நுட்பம். இந்த அணுவுக்குள் இருப்பது சக்தி (energy) அதாவது ஆற்றல் [அ] திறம் எனப்படுகிறது. இத்தகைய அணுக்களுக்கும் அண்டங்களுக்கும் இடமாக (Source or seat) இருப்பது ஒளிமயவெளி [அ] ஆகாஸம் என்பது பெயரும் மேலுமொரு விஞ்ஞான உண்மையும் ஆகும். இந்த வெளியானது ஒளிர்ந்திடும் [அ] ஒளியை உமிழ்ந்து கொண்டிருக்கும் கணக்கற்ற அணுக்கள் நிறைந்த இடம் (luminous space packed with particles of energy) என்று கண்டு கொள்ளப்பட்டிருக்கிறது. இக்கருத்தே **"அண்ட மூலமாய் பிண்ட மூலமாய் கொண்டிலங்கு ஒளி வெளியென"** என்ற தேற்றம் மேற்சொன்ன விஞ்ஞானியின் உச்சக் கண்டுபிடிப்பாக மிளிர்கிறது. சுருங்கச் சொன்னால், ஆகாஸம் என்பது அணுசக்தியின் இருப்பிடம் என்று உறுதியாகிறது. இதனை நமது விஞ்ஞான மரபில் தோன்றிய அடிப்படை அணுக்கொள்கை எனலாம்.

---

[1] இந்த உபநிஷதைத் தந்தவர் மைசூரில், தொல்லியல் துறையில் central archacological survey of India (Southern circle) வில் தொல்லியல் ஆய்வராக இன்றும் இருக்கும் [28.10.2004] Dr.N.N.Swamy என்ற, சிற்பியர் இனத் தோன்றல் ஆகும்.

அணுவின் இயல்பு:

இந்த அணுவானது மகத்தான ஆற்றலே மயமானதால், நமது சமய மரபில் மகாசக்தி என்றும், பராசக்தி என்றும் (most powerful substance) சொல்லப்படுவதாயிற்று. [பிரபஞ்ச சக்திகளை மனித வடிவத்தில் உயிர்ப் பொருளாக – உடம்பெடுத்த உருவமாகக் காட்டுவது நமது தமிழகக் கலை மரபாகும் என்க] இந்த நிலையில், மகாசக்திக்கு இலக்கியப் பெண் வடிவமும் கொடுக்கப் பட்டிருக்கிறது. கவர்ச்சியே மயமானதாகக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அணு சக்தியானது நமது இதயத்தின் உள்ளும், அதற்குப் புறத்தேயும் இருப்பதையுணர்ந்து **கடவுள்** என்ற பொதுப் பெயர் கொடுக்கப்படுவதாயிற்று. இப்பொருள் "கடந்தும் உள்ளும்" இருப்பதால் அப்பெயர் பெறுவதாயிற்று என்க. இச்சொல் கருத்தாழமுள்ள விஞ்ஞானச் சொல்லே. God, ஆத்மா, என்ற சொல்லைவிட எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய – தனித் தமிழ்ச் சொல்லாக விளங்குவதை உற்றுணர்க.

இந்தச் சிறிய அணு அளவினதான இடத்தைத்தான் **பரமாணு** (micro Space) என்று சிற்பியர்தம் வாஸ்து சாஸ்திரம் செப்புகிறது. இத்தகைய அணுக்கள் மண்டியுள்ள இடமே அண்டமெனப்படுவதாயிற்று. இந்தப் பரமாணு (subtle substance) என்ற சிற்றணு கண்களுக்குப் புலப்படாத நிலையில் இருந்தாலும் கண்களுக்குப் புலப்படும் நிலை எய்திய அணுவை எளிமையாக அணு (material atom) என்றே வாஸ்து சிற்பசாஸ்திரம் கொண்டுளது. வியப்பு யாதெனில், இந்தப் பரமாணு இல்லாத இடமே இல்லை. இஃது எங்கும் நீக்கமற நிறைந்த பொருள் (all pervasive) என்றும் எப்போதும் **இருக்கும் பொருள்** (substance of eternal existence) என்றும் **நிலைத்து நிற்கும் பொருள்** (everlasting substance) **என்றும் முழுமுதற் பொருள்** (Primal Potential matter) **என்றெல்லாம் வாஸ்து சாஸ்திரம் படித்த சிற்பியர் கூறுவது மிகப் பொருத்தமல்லவா? மேலும், ஞாலத்தில் எங்கும் நீக்கமற நிறைந்த பொருள் என்று சொல்லும் போது, ஓர் அறிவியல் உண்மை உளதென்பது – தொனிப்பது – தெரியவரும். இக்கருத்தை பிறகு மேலும் பார்ப்போம்.**

வஸ்துவும் வாஸ்துவும்:

சிற்பியர் என்போர் என்றுமுள நிலைத்த இந்தப் பொருளை – உயிர்ப்பொருள் என்று கண்டு – **வஸ்து** என்ற சொல்லால் இக்கருத்தை உணர்ந்த நிலையில்,

பரம்பொருள், பரவஸ்து என்றும் **வஸ்துப் பிரம்மம்** என்றும் சொல்வாராயினர். உடல் தரித்த ஒவ்வொரு பொருளிலும் உள் நின்று விளங்கும் உயிர் என்றும் இதனைக் கண்டார்கள். **"உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"** என்று மொழியியலில் சொல்லப்படுவதை நினைவுபடுத்திக் கொண்டு உற்று நோக்குக. **"மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே"** என்றான் முன்குறிப்பிட்ட சங்ககால விஞ்ஞானி (8,000 B.C.). இதனைத்தான் **ஆன்மா** என்றும் **ஆத்மா** என்றும் சொல்லுகிறோம். இக்கருத்திற்றான் **பரவஸ்துவானது பரமாத்மா பரம் பொருள்** எனப்பட்டது என்க. மேலும், அந்தப் பரவஸ்துவானது தன்னைத்தானே, தன் உணர்வால், தன் திறத்தால், தன் முனைப்பால் - உருமாற்றிக் கொண்ட நிலையில் (meta morphosis or chemical change or extended form of Vastu) அப்பொருளை **வாஸ்து** என்ற சொல்லால் சிற்பியர் உணர்த்தினர். இதனைத் **தானியல் வடிவு [சுயம்பு]** என்பான் முன் சொன்ன தமிழ் விஞ்ஞானி. ஆங்கிலத்தில் self manifest form என்று சொல்லலாம். இந்த நிலையில் மேலும் இக்கருத்தை உற்று நோக்கினால் பல விஞ்ஞான விந்தைகள் - நுட்பங்கள் - நமக்குத் தெரியவரும். பரமாத்மா [அ] பரம்பொருள் எனப்படும் இந்தப் பொருள் ஓர் - உயிர்ப்பொருள் என்றும், இந்தப் பொருள்தான் இந்தப் பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துளது என்றும், நமக்கு உணர்வாகிடும். அதாவது, அண்ட பிண்டங்கள் எனப்படும் அனைத்துப் பொருள்களும் - அதாவது விண்மீன்களும், கோள்களும் - இந்த விண்வெளியில் தொங்கிக் கொண்டிருக்கின்ற உயிர்ப் பொருள்கள் என்று சொன்னால் யாதொரு தவறுமில்லை யல்லவா? அதுமட்டுமல்ல, இந்த ஆன்மா எனப்படும் உயிர்ப் பொருள் தான் அனைத்துப் பொருள்களிலும் உள்ளிருந்து இயக்கும் நுண்பொருளாக (dynamic and creative element) உளதென முன்பு சொன்னேனல்லவா? ஆம் இஃதொரு உண்மையே. எல்லாம் உடல்தரித்த உயிர்ப்பொருளே. இந்த அடிப்படையில் உடம்புக்குள் உயிரும் இந்த உயிரைச் சுற்றி உடம்பும் இருப்பதாகச் சுருக்கிச் சொல்லலாமல்லவா? இதைக்கண்ட திருமூலர் என்ற விஞ்ஞானியும் - கவிஞனும் ஆன மகான் ஒருவர் **"உடம்புக்குள் பரமன் இருக்கின்றான். எனவே, உடம்பை ஓம்புகின்றேன்"** என்று அழகுபடச் சொன்னார்.

கட்டிடம் ஓர் உயிர்ப்பொருள்:

இதற்குள் வீற்றிருக்கும் ஒரு விஞ்ஞானச் செய்தியை ஏற்கனவே உற்றுணர்ந்த சங்ககாலத் தமிழ் மகன் விந்தைமிகு உயிர்ப் பொருள்களை இந்த நிலஉலகில்

படைக்கலானான். ஞாலம் முழுவதும் உயிர் பரவிக் கிடப்பதைக் கண்ட அந்த விஞ்ஞானி அந்த உயிர்ப் பொருளை நான்கு சுவர்களில் அடக்கி வைத்து, கட்டிப்போட்டு, அவ்விடத்தைக் கட்டிடம் என்று சொல்லி, கட்டிடக் கலைக்கு தனியொரு அதிசய மரபையே பாரத மண்ணில் தோற்றுவித்துவிட்டான். இதனால் வீடு ஓர் உயிர்ப்பொருளாயிற்று. உயிர் அடைபட்டுப் கிடப்பதால் கட்டிடம் ஓர் உயிர்ப் பொருளாயிற்று என்க. வாஸ்துவும் ஒரு வஸ்துவே என்று சொல்லப்படுவதுமாயிற்று.

"प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तु संश्रयात् ।
तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधै: ।।" - மயமதம்

"*ப்ராசாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்து சம்ஸ்ரயாத் ।
தான்யேவ வஸ்துரேவேதி கதிதம் வை வஸ்து வித்புதை: ।।*"

மேற்சொன்ன கருத்தின் சுருக்கிய விஞ்ஞானத் தேற்றம் இதுவே என்க. மேலும், இங்ஙனம் இந்த அணுவின் இயல்பைத் தெரிந்து, அவை சேர்ந்திடும் நுண்செயல் (dynamics / Chemical change) அறிந்து, அதன் கணக்கறிந்து, அக்கணக்கைக் கொண்டு, அண்ட பிண்டங்களின் பிறப்பியல்புகளையும் உற்றறிந்திடும் ஆற்றல் பெற்றவர்கள் – அதாவது அத்தகையோரை – இயற்கையின் படைப்பியலறிந்த விஞ்ஞானிகள் (astrophysists or creative genius) ஆவர். இவ்வியல்புகளை அறிந்து பல்வகைப் பயன்படு பொருள்களைச் செய்திட்டோர், மற்றும் செய்திடுவோர் அதாவது – கைவினைஞர்களை – அக்காலத்தில் தொழில்நுட்ப வல்லுநர்களாக பாவித்தார்கள்; இன்றுள்ளோரும் இத்தகைய வல்லுநர்கள்தான். சுருங்கச் சொல்லின், இந்த விஞ்ஞானியர்களை (astrophysists) **ஸ்தபதி** என்று சொல்லிப் போற்றினர். வேதமும் இச்சொல்லைக் கையாளுகிறது. "ஸ்தபதி: ஸ்தாபனார்ஹ: ஸ்யாத் வேதவிச்சாஸ்த்ரபாரக: - *ஸ்தபதி: ஸ்தாபனார்ஹஹ ஸ்யாத் வேதவிச்சாஸ்ரபாரக:* ; இன்னொரு இடத்தில் ஸ்தபதி: ஸர்வஶாஸ்த்ரஜ்ஞ: वेदविद् - *ஸ்தபதி: சர்வசாஸ்த்ரஞ: வேதவித்*" என்று அவரது தகுதி பேசப்படுகிறது. பிற, தொழில்நுட்ப வல்லுநர்களைச் சிற்பிகள் என்றே அழைத்தனர். மேலும், இந்த **ஸ்தபதிக்கே விஸ்வகர்மா** என்று பெயர் உரித்தானது என்று மயமதம் கூறுகிறது. "தேஷாமேவ ஸ்தபத்யாக்ய: விஶ்வகர்மேதி ஸம்ஸ்ம்ருத: - *தேஷாமேவ ஸ்தபத்யாக்ய: விஸ்வகர்மேதி சம்ஸ்ம்ருத:*" - [மயமதம் 5வது அத்யாயம் 23வது ஸ்லோகம்]. இதன் பொருள் யாதெனில், " [சிற்பிகளில்] ஸ்தபதி என்பான் விஸ்வகர்மன் என்று அழைக்கப் படுகிறான்" என்பதாகும். அதாவது resource person என்பதாகும்.

மேலும், கண்களுக்குத் தெரியாத இந்தப் பரமாணுவுக்குள் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன அவற்றின் ஆற்றல்கள் யாவை என்ற நுட்பத்தையும்

கண்டறிந்து, அவற்றை எல்லாம் பகுத்தறிந்து, பகுத்தறிவின் உச்ச நிலையை அடைந்த அவர்கள் **விண்ஞானியர்களாக** முற்காலத்தில் போற்றப்பட்டார்கள் என்க. இந்த விண்ஞானத்தைத்தான் **பிரம்ம ரகஸியம்** என்று சொன்னார்கள். வஸ்து புருஷன், வாஸ்து புருஷன் என்ற இரு விஞ்ஞான உண்மைகள் உள. அவற்றின் நுட்பத்தையும், விரிவையும் பிறகு பார்ப்போம், நிற்க.

மேற்சொன்ன, கண்களுக்குப் புலப்படாத பரமாணுவுக்கு இன்றைய விஞ்ஞானம் கொடுத்த ஆங்கிலப் பெயர் (Sub-atom) என்பதாகும். Dot Cell என்பதும் பிறிதொரு பெயர் ஆகும். இதைத்தான் ஏற்கெனவே பரமாணு என்று சொன்னேன். எனவே, கண்களுக்குப் புலப்படாத அப்பரமாணு விந்தைபல செய்திட்ட – விந்தை பல செய்திடும் – ஒரு நுண் பொருள் [அ] ஆற்றலே மயமான அரிய பொருள் என்க. இந்தப் பரமாணு எப்படிப்பட்டது, என்ன அளவினது, என்பதை யோகிகள் அறிவர் என்று வாஸ்து சாஸ்திரம் கூறும். அப்படியானால் அந்த யோகிகள் என்போர் யாவர்?

परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टि गोचरम् ॥
परमाणु क्रमात् वृद्धं मानाङ्गुलमितिस्मृतम् ॥

"*பரமாணுரிதிப் புரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம்*
பரமாணுக்கிரமாத் விருத்தம் மானாங்குல மிதிஸ்மிருதம்"

– மயமதம்

இத்தகைய பரமாணுக்கள் என்ன செய்கின்றன எப்படி நமது கண்களுக்குத் தெரிவதாயின என்ற விண்ஞானச் செய்திகளை வாஸ்து சாஸ்திரம் கணக்காகச் சொல்லுகிறது. இதற்கு ஒரு படிமுறையாக விளங்கும் – சிற்பிகள் ஒழுகிவரும் ஒரு வாய்பாடை இப்போது சொல்லுவேன். இந்த வாய்பாடை வாஸ்து சாஸ்திரத்தை மொழி பெயர்ப்புச் செய்த மொழி ஆசிரியர்கள் புரிந்து கொள்ளாமல் ஒதுக்கி வைத்து விட்டனர். ஒரு சிலர் எள்ளி நகையாடினர். எள்ளி நகையாடினோர் யார் யார் என்று சொல்லுவேனானால் ஆச்சரியப்படுவீர்கள்: இக்காலப் பண்டிதர்கள் – சம்ஸ்கிருதப் பண்டிதர்களும், தமிழ்ப் பண்டிதர்களும் ஆவர் என்று சொன்னால் கோபித்துக் கொள்ளாதீர்கள். இது தான் உண்மை. ஆங்கிலம் படித்துவிட்டதால் ஆங்கில அறிவியல் நூல்களைப் புரிந்து கொள்ள முடியாதல்லவா? தமிழில் உள்ள மருத்துவ நூல்களைப் படித்து விளக்கம் சொல்ல இன்றும் முடியாதிருக்கிறதே! பண்டிதப் பெருமக்களுக்கு இலக்கியம் தெரிந்து அறிவியல் தெரியாது போனதால் இக்கலையியல் ஒதுக்கப்பட்டு இன்றும் இதே நிலையிலேயே உளது. எனவே, ஐந்து நுண்கலைகளில் (five fine arts) சிற்பக்கலையும், கட்டிடக் கலையும் பிற்படுத்தப் பட்டுவிட்டதின் காரணம் இதுவே. தமிழ் மரபில் **இயல், இசை, நடம், சிற்பம்,**

கட்டிடம் ஆகிய ஐங்கலைகளுக்கு (five fold fine art) அடிப்படையானது ஓர் அதிசய அபூர்வ விஞ்ஞானம் – விஞ்ஞான நிகழ்ச்சி, என்பது மறைந்து போய் – மறந்து போய் – மதச்சார்புடையதாகக் கருதப்பட்டு, பின்னடைந்து போயிற்று. முழுக்க முழுக்க வாஸ்து சாஸ்திரம் அபூர்வ விஞ்ஞானக் கோட்பாடுகள் நிரம்பிய விண்ணியல் மற்றும் மண்ணியல் நூல் என்பது இன்றளவும் தெரியாது கிடக்கிறது. எனவே பண்டிதர்கள் (non technical language pandits) சொல் வளமும் செல்வாக்கும் பெற்ற நிலையில் பண்டிதர் சொல்லுவதையே வரலாற்றுக் கால, மற்றும் அண்மைக்காலப் பொது மக்கள் ஏற்போராக இருந்து விட்டதால் இந்த அரிய விண்ஞானம் மறந்தும், மறைந்தும் போனதோடு, புதைந்தும் போய்விட்டது.

நிலை இப்படி என்றாலும், நமது பண்டைத் தமிழ் மன்னர்கள் நன்றாகவே வாஸ்துத் தொடர்புடைய அறிவியல் தெரிந்திருந்தார்கள் என்ற காரணத்தினால் அம்மன்னர்கள் ஐங்கலைகளைத் துய்த்து வளர்த்துக் காப்பாற்றினார்கள் என்பது மிகையன்று. தமிழ் மன்னர்கள் எத்துணை மேதாவிகள்!!! அதே நேரத்தில், தமிழ் நூல்களும், சமஸ்கிருத நூல்களும், அப்படிப்பட்ட புரியா நிலையிலேயே, அந்த மரபு நூல்கள் கூறும் விண்ஞானச் செய்திகளை ஓரளவு பாதுகாத்து விட்டன என்று இப்போது தெரியவருகிறது. இன்றைய குழப்ப நிலையில் இந்நூல்களில் பல புதையுண்டு உலக நாடுகளின் இருட்டறைகளில் – நூலகங்களில் – கிடக்கின்றன எனலாம். நம் அரசுகள் தேடிக் கொடுக்குமா? மீன்கள் கவ்விக் கொடுத்தவற்றை மனித மீன்கள் விழுங்கி விட்டனவோ? பழைய நூல்களின் பட்டியலை பிற்சேர்க்கையில் காண்க.

எண்ணும், எழுத்தும்:

அய்யன் திருவள்ளுவர் இந்த விஞ்ஞானத்தைத் தெரிந்து வைத்திருந்தார் என்று கூறலாம். இதற்கான ஒரு குறளை மட்டும் இங்கே குறிப்பிடல் தகுமென நினைக்கிறேன். **“எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு”** என்பது அக்குறளாகும். இதற்கு என்ன பொருள்? நினைத்துப் பாருங்கள். இதே கருத்தை தமிழ் மூதாட்டி ஔவையாரும் **“எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்”** என்றார். எண்ணை முதற்சொல்லி, பின்னர் எழுத்தைச் சொல்வானேன்? இந்த ஒரு குறளானது வள்ளுவனை விண்ஞானியாக உயர்த்தி விட்டது என்பேன். இந்த விண்ஞானத்தைப் பிறகே மேலும் சொல்லுவேன்.

அணு வாய்பாடு:

இந்த நிலையில், வாஸ்து சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அரியதொரு – அதிசயமான – அந்த வாய்பாடைக் கீழே தருகிறேன். இந்த வாய்பாடுக்கு நிகரான தொல்பழம் விஞ்ஞானச் செய்தியையும் அதற்குரிய வாய்பாடையும் இங்கே தருகிறேன். தமிழில் சொல்லப்படும் – சூத்திரமாகக் கிடைத்திட்ட – வாய்பாடானது 10,000 ஆண்டுகளுக்கு முன்பே, முதல் சங்க காலத்தில், முன்னர் குறிப்பிட்ட அந்தத் தமிழ் மகனால் சொல்லப்பட்டு விட்டது. இஃது அவன் பெயர் தாங்கிய நிலையில் மயத்தமிழ் எனப்படுவதாயிற்று. முதல் தமிழ்ச்சங்கத்தில் அரங்கேறி விட்டது என்பது வரலாறு; – கட்டுக் கதையன்று. இச்செய்தியைச் சொல்லியதோடு விட்டு விடாமல் அந்த வாய்பாடு எங்கெங்கே எப்படி எப்படி முற்காலத்திலேயே பயன்படுத்தப்பட்டு ஓர் அரிய பெரிய விஞ்ஞானக் கலாச்சாரம் தமிழ் மாநிலத்தில் தோன்றியதோடு மட்டுமல்லாது நமது பாரத நாட்டில் எல்லாவிடங்களிலும் பரவி விட்டது என்பதையும், மேலும் அதற்கு உலகளாவிய நிலையும், அப்போதே கிடைத்துவிட்டது என்பதையும் அடுத்தடுத்துச் சொல்லுவேன்; உற்றுநோக்கிப் பெருமை கொள்ளுங்கள். தமிழ் மொழி ஒரு செம்மொழியானது பழைய கதை என்றால் மிகையாகுமா? நெஞ்சாரப் பேசுங்கள்.

சம்ஸ்கிருதத்தில் இருந்துவரும் வாய்பாடை முதலில் சொல்லி அதற்கு அடுத்து, பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய – செவ்வியல் தமிழில் சொல்லிய, வாய்பாடையும் தருவேன். இரண்டையும் ஒப்பிட்டுப் பாருங்கள் உண்மை அறிவதோடு உவகையும் கொள்வீர்கள்.

இத்தகைய வாய்பாடை இன்றைய விஞ்ஞானக் காலத்தில் வாழும் நீங்கள் எங்கும் காணமுடியாது என்று சொன்னாலும், இன்று கணிப்பொறியில் இந்தக் கணக்கியல் கையாளப்பட்டிருப்பதைக் காண்பீர்கள். நேற்று வந்தது கணிப்பொறி! ஆனால், அதற்குரிய எண்ணியலை [0,1] , [0,8] தமிழ்மரபு கண்டு சொன்னது பத்தாயிரம் ஆண்டுக்கு முன்பு என்று நான் சொல்லும் பொழுது நிச்சயமாக அதிர்ச்சியும் வியப்பும் கொள்வீர்கள். தமிழ்க் கலாச்சாரம் என்றும், பாரதீய கலாச்சாரம் என்றும், சொல்லப்படும் இந்தியக் கலாச்சாரம் மிகத் தொன்மையானது; அளப்பரியது; அதிநுட்பமானது, எங்கும் இல்லாதது, அதிசயமானது, அற்புதமானது என்றெல்லாம் போற்றப்படுவதின் உண்மையை, இதைக் கண்டுணரவல்லவா உலகக் கலைஞர்கள் இந்திய மண்ணில் குவிகிறார்கள். இது தான் நமது hertiage ஆகிறது. இதற்கு

உரியோரைக் கண்டு கொள்ளவே வருகிறார்கள். எவரும் காட்டிடவில்லை. இப்போது நிலைமாறி வருகிறது. இப்போது உணர்வீர்கள் என்று சொல்லலாம். இதற்கு அடிப்படையான கணக்கியல் பூஜ்ஜியத்தில் [0] தொடங்கி [8] எட்டோடு முடிவடைகிறது. இதற்கு இயற்கையின் எட்டியல் என்றும் எண்ணியல் என்றும் முன் சொன்ன விஞ்ஞானி பேசுகிறான். இதை உற்றுணர முடியுமானால் மனித சரீரம் ஒரு கணிப்பொறி போல் (human computer) செயல்படுவது தெரியவரும். இந்த human computerக்குச் சிருஷ்டிக்கும் உணர்வு உண்டு; – ஆற்றல் உண்டு; ஆனால் man made computerக்கு அறிவு மட்டுமேயுண்டு என்று இப்போது புரிந்திடும் அல்லவா?

இந்த Zero–வைக் கண்டு சொன்னதே தமிழ் மரபில்தான், மயத்தமிழ்தான். Zero–வுக்கு சுழி, சுழிப்பு என்று பெயர். ஓம் ஒளியும், ஓம் ஒலியும் ஆகிய இரண்டு வகை ஓம்கள் தொடக்கத்தில் அமைதி நிலையில் இருந்தன. இதற்கு மூலநிலை [அ] மூல ஒளி என்று பெயர். இந்த மூலம் உணர்வுற்று எழுச்சி கொள் நிலையில் – முதல் தோற்ற நிலையில் – நீர்ச் சுழற்சிபோல் சுழித்த பின்னரே ஒளி, ஒலி அலைகள் முகிழ்ந்து இறுதியில் ஒளி ஒலிப் பொருள்களாக வடிவம் கொண்டன என்ற அதிநுட்ப விஞ்ஞானம் இதிலே உளதென்றால் என்ன நினைப்பீர்கள்? இதைப்பற்றிய விரிவை பிறகு சொல்வேன். சம்ஸ்கிருதத்தில் உள்ள வாய்பாடை முதலில் கவனிப்போமாக (let us proceed from known to unknown - ie., from gross to subtle).(तमसोमां ज्योतिगमिय)

परमाणुक्रमात् वृद्धं मानाङ्गुलमितिस्मृतम्
परमाणुरष्टाभिः रथरेणुरुदाहृतः ।।
रथरेणुश्च वालाग्रं लिक्षायूका यवास्तथा ।
क्रमशोऽष्टगुणैः प्रोक्तः यवाष्टगुणितोऽङ्गुलम् ।।
अङ्गुलन्तु भवेन्मात्रं वितस्तिः द्वादशाङ्गुलम् ।
तद्वयं हस्तमुद्दिष्टं तत् किष्किति मतंवरैः ।।

"பரமாணுகிரமாத் வ்ருத்தம் மானாங்குல மிதிஸ்மிருதம் ।
பரமாணுரஷ்டாபி : ரதரேணுருதாஹ்ருத : ।।
ரதரேணுஸ்ச வாலாக்ரம் லிக்ஷாயூகா யவாஸ்ததா ।
கிரமஷோ அஷ்டகுணை : ப்ரோக்த : யவாஷ்டகுணிதோங்குலம் ।।
அங்குலந்து பவேன் மாத்ரம் விதஸ்தி : துவாதசாங்குலம் ।
தத்வயம் ஹஸ்தமுத்திஷ்டம் தத் கிஷ்க்விதி மதம்வரை : ।।"

– மயமதம் ஐந்தாவது அத்தியாயம்

இதன் பொருள் யாதெனில், பரமாணுவின் வளர்ச்சியே அளவிடும் மானாங் குலம் என்ற (fundamental unit measure) ஓர் அலகு ஆயிற்று (visible or measureable unit) என்பதாகும். எப்படியெனில், பரமாணு எட்டுக் கொண்டது [அதாவது கண்களுக்குப் புலப்படா 8 அணுக்கள் சேர்ந்த நிலையில் அப்பொருள்]

தேர்த்துகள் அளவினதாகும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. இதற்குப் பிறகு அளவிடத்தக்க (measurable) ஒரு படிமுறையையும் தருகிறது. தேர்த்துகள், மயிர் நுனி, ஈர், பேன், யவை ஆகிய ஒவ்வொன்றின் எட்டு மடங்காக அதாவது தன் பெருக்கமாக (square or multiples) தானாகவே வளர்ந்து நல்லதொரு தெரிபொருளாகிறது என்பது அர்த்தம். **இதுவே அணுவளர் அறிவியல் நெறியாகும் என்க.** யவை என்பது நெல் அளவை நிகர்த்த ஒரு தானியத்தின் பெயர் ஆகும். இதனை பார்லி அரிசி என்போர் சிற்பியர். ஒரு நெல் என்பது யாவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட யவை [நெல்] எட்டுக் கொண்டது விரல் [அ] அங்குலம் எனப்படும். அங்குல அளவானது, மாத்திரை அளவு என்றும் சொல்லப்படும். மா + திரை என்பது micro wave - நுண்ணிய அலை – நுண்ணிய அளவு கொண்ட விரிபொருள் என்று பொருள்படும். பிரபஞ்சமே நுண் அலைகளின் ஆதிக்கத்திற்றானே உளது! இதுதான் கடவுட் பொருள், கடவுட் சக்தி என்றெல்லாம் பிற்காலத்தில் வழக்காற்றில் வருவதாயிற்று.

மேலும் 12 அங்குலம் கொண்ட நீட்டல் அளவு விதஸ்தி [அரைமுழம்] என்றும் விதஸ்தியின் இருமடங்கு ஹஸ்தம் என்றும் சொல்லப்படும். இந்த ஹஸ்தத்திற்கு [24 அங்குலம்] கிஷ்கு முழம் என்றும் பெயராகும். இஃதொரு பொது அளவாகும் (standard measure). "सर्वेषामपि वास्तूनां किष्कुरेवाथवास्मृत:॥" *"சர்வேஷாமபி வாஸ்தூனாம் கிஷ்குரேவாதவாஸ்மிருத:"*. மேலும் பல முழ [முழு] அலகுகள் (units) உண்டென்றறிக. அதாவது, 25 அங்குலம் கொண்ட முழம் பிராஜாபத்யம் என்று சொல்லப்படும். இதேபோல் நீண்ட பல முழக் கோல்களும் உண்டு. அவை முறையே 25, 26, 27, 28, 29, 30, 31 அங்குலம் அளவினதாகும். இவற்றுக்கு தனுர் முஷ்டி, தனுர் கிரஹம், பிராச்சியம்,வைதேகம், வைபுல்யம், பிரகீர்ணம் என்று மொத்தத்தில் கிஷ்கு முதல் பிரகீர்ணம் வரை [24 முதல் 31 அங்குலம் வரை] 8 வகையான முழக்கோல்கள் உண்டு. இவற்றை எங்கெங்கே எதுஎதற்காக உபயோகித்தல் வேண்டும் என்ற விவரங்கள் வாஸ்து நூல்களிலும், தொழில் மரபிலும் இன்றும் உண்டு.

வாஸ்து சாஸ்திரம் காட்டும் காலத்தால் – கால விசையால்
– நீட்சி பெற்ற (Wave length) பொது வாய்பாடு [மானசார வாஸ்து நூல்]

8 பரமாணு	8^1 – 1	தேர்த்துகள் அளவாகும் [0,1]
8 தேர்த்துகள்	8^2 – 1	மயிர் நுணி அளவாகும்
8 நுனியளவு	8^3 – 1	ஒரு ஈர் அளவாகும்
8 ஈர் அளவு	8^4 – 1	ஒரு பேன் அளவாகும்
8 பேன் அளவு	8^5– 1	ஒரு யவை அளவாகும் [இது யவாங்குலம் எனப்படும்.][0, 8]
8 யவை அளவு	–	ஒரு அங்குலம் எனப்படும் [0, 8^5]

அங்குலீ என்றால் விரல் என்பது பொருள், நடுவயதான ஒரு மனிதனின் நடுவிரல் நடுப் பகுதியின் நீள அளவு அங்குலம் என்று சாஸ்திரம் கூறுகிறது. இப்படிப் பட்ட ஒரு அங்குலம் என்பது $1^{3}/_{8}$ ஆங்கில அங்குலத்திற்கு ஈடாகும் என நடைமுறையில் (at technological level) கொள்ளப் பட்டிருக்கிறது. எனவே முழம் என்பது ஆங்கில அங்குலப்படி 33 அங்குலம் ஆகும். அதாவது 1 முழம் = 2'.9" நீளமாகும். மானசாரமும் இங்ஙனமே அளவு கூறும் அணுவியலைக் கொண்டுளது என்க. மேலும், ½ முழம் (1'.4½") என்றும் ¼ முழம் (8¼") என்றும் நடைமுறைத் தொழில் மரபில் உளது. இந்த ¼ முழம் ஆகிய 6 விரல் நீளத்தைத் தாளம் என்றும் கொண்ட ஒரு முழு மனிதனின் உயரம் 9 தாளம் (9 x 8¼" = 7'.¼") எனப்படுகிறது. இதுதான் இயற்கை கொடுத்தருளிய மனிதனின் உயரம் (normal height) என்று கொண்டிடல் சரியாகும். இதுதான் Universal human measure in terms of height என்று அறிதல் வேண்டும். இந்த அளவில் முற்கால மனிதர் இருந்தனர் என்று இன்றைய ஆய்வர்கள் சொல்லவில்லையா? இன்று கூட ஒரு சிலர் இந்த உயர முள்ளோர் இருக்கிறார்களே!

மேற்சொன்ன பரமாணுவானது இயற்கையில் தானாகவே வளர்ச்சியுறும் அளவுகளைக் குறிப்பிடுவதாகும். நாம், வளர்ச்சியின் பருமனை (growth of space) புரிந்து கொள்ள நூலாசிரியன், தேர்த்துகள், பேன், யவை என்ற கண்களுக்குத் தெரியும் பொருள்களைக் கொண்டு அளவை யூகிக்கச் செய்துள்ளான். அவ்வளவு தான். இதற்கும் நுட்பமான அளவுகளைக் காலக் கணக்கில் சொல்லுவேன்; Tridimensional கன அளவுகளையும் சொல்லுவேன் பிறகு பார்ப்போம்.

பரமாணு என்பது இயற்கையில் உணர்வே மயமான மூலப்பொருள் - உயிர்ப்பொருள் - என்பதை மனதிலிருத்திக் கொள்க. அப்போது தான் இந்தக் கணக்கியல் புரியும் அல்லது நம்ப முடியும் என்று சொல்லிட விரும்புகிறேன். இந்த வாய்பாடை காஷ்மீர் முதல் குமரி வரையும், கூர்ஜரம் முதல் வங்காளம் வரையும் பரந்துள்ள பாரத நாட்டில் வதியும் அனைத்துச் சிற்பிகளும் கையாளும் பொதுக் கணக்கியல் [இதுவே] என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

மீண்டும் பின்னோக்கிச் சென்று பிறகு முன்னோக்கிச் செல்லுவோம். மூலம் என்ற நுண்பொருள் உணர்வுற்ற நிலையில் துடிப்பலைகள் (energetic impulses) வெளிப்படுகின்றன. இந்தத் துடிப்பலைகளுக்குக் கால மாத்திரை [கால + மா + திரை] அதாவது, கால அளவு என்றும், இந்நிகழ்ச்சி ஒரு வகைச் சீலத்தில் இயற்கையாகவே

நிகழ்வதால் இந்தத் துடிக்கணக்கானது சீலக் கணக்கு, சீலக் காலம் என்றும் பெயர் பெறுவதாயிற்று. இதனை ஆங்கிலத்தில் ரிதம் rhythm என்று சொல்லி வருகிறோம். இஃதொரு பிரபஞ்சத்தின் அசைவுறும் நெறி (force or movement of cosmic order) என்க.

திரை என்றால் அலை அல்லவா? இக்காலத்தில் இதனை pulse என்றும் impulse என்றும் vibration என்றும் சொல்லுகிறோம், அவ்வளவுதான். இந்தக் காலக்கணக்கை தமிழ்க் கவிதையிலும் [கவிதை இயற்றுவதிலும்] ஆடலிலும் பாடலிலும் கையாளுகிறோம். இந்தக் காலக் கணக்கு இந்த மூன்று கலைகளுக்கும் ஆதார இயக்கமாக – இலக்கணமாக இருப்பதால் – வடிவமும் வடிவழகும் தருவதால் – முத்தமிழ் என்று கொத்தாகத் தமிழர் கலைமரபு கண்டு சொல்லுவதாயிற்று. முத்தமிழ் என்றால் மூன்று இயல்பான வடிவங்கள் அல்லது இயல்பான தோற்றங்கள் (forms) அல்லது அகக் காட்சிகள் (inner picture, inner vision) என்றுதான் பொருள். இந்த இயல்பை [அ] தூய்மையான பிறப்பை வைத்துத்தான் தமிழைக் கன்னித்தமிழ் என்று சொல்லி வருகிறோம். இந்தக் கன்னித்தமிழ் இதய பூர்வமானது மட்டுமல்ல, வெளியிலிருந்து உள்ளே வந்து அகத்தைத் தொடும் சிறப்பியல்பும் உடையது என்பதும் நமது அனுபவம் தானே! தொடக்கத்தில் இத்தகைய இலக்கணம் [அ] விஞ்ஞான அனுபவம் (Scientific experience) தமிழில் தோன்றி தமிழ் வழி பிறந்திட்ட பிற மொழிகளுக்கும் பரவிடலாயிற்று என்பது கண்கூடு. ஆனால் முத்தமிழ் என்ற சொல் சங்க காலக் கலைச் சொல் என்பதை உற்றுணர்க. சரிதானே? இறுதியில் உள்ளத்திற்கு அனுபவம் ஆவதே அமுது என்றும் இனிமை என்றும் விரிவுரை சொல்லப்படுவதாயிற்று. இந்த அனுபவம்தான் ஆன்மிக அனுபவம் எனப்படுகிறது. இந்த அனுபவம் தான் ஆனந்தம் எனப்படுகிறது. இந்த ஆன்மிக அனுபவம் என்பது இயல், இசை, நடம் என்ற முத்தமிழுக்கும் உண்டு. எனவே மூன்றையும் Trifold spiritual art form என்று சொல்லி வருகிறோம். அசைக்க முடியா உண்மை இஃதென்க. Non technical people இதுவரை சொல்லிவந்த அனுமானக் கூற்றுக்களை சற்றே ஒதுக்கி வையுங்கள்; அப்போது எளிதில் புரிந்திடும்.

இந்த மூன்றையும் அனுபவிக்கக் கொடுத்தவரை பெரிய ஆன்மிகவாதி என்று சொல்வதில் தவறேதுமில்லை, மிகையேதுமில்லை என்பேன். இதில் ஒன்றை அனுபவிக்கத் தெரிந்தாலே போதும் அந்நிலையில் அனுபவமாவதே ஆன்மானுபவம், சுவானுபவம் ஆகிவிடும். இதனைக் கைவழி கொண்டு வருபவனே – வடிவமாக்கிடு வோனே சிற்பி என்பான்; இந்த நிலையே சிற்பியின் கைவண்ணம் எனப்படும். இதனை

சிற்பத்தின் முக மலர்ச்சியில் காணலாம். இதை வைத்து "स्वात्मारामं मुदित वदनं" "ஸ்வாத்மா ராமம் முதித வதனம்" என்று தக்ஷிணாமூர்த்தத்தின் உருவ வர்ணனையில் வைத்துச் சொன்னார் சங்கரர்.

இந்தக் கணக்கியல் இந்த முத்தமிழோடு நின்றுவிடவில்லை. இந்தக் கணக்கியலானது சிற்பம் மற்றும் கட்டிடம் ஆகிய கலைகளிலும் ஆட்சி புரிகின்றது. இஃது ஓர் உச்ச விஞ்ஞானம் என்பதை முன்னரே தொட்டுச் சொன்ன சங்ககாலத் தமிழ் மகன் – தமிழ் விஞ்ஞானி – "கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி" **"Architecture is the supreme achievement of Mathematics"** என்று விதி வகுத்துக் கொடுத்து சிற்பத்தமிழ் என்றும் கட்டிடத் தமிழ் என்றும் மேலும் இரண்டு தமிழைத்தந்து ஒட்டுமொத்தமாக (five fold Tamil) ஐந்தமிழ் என்று அறுதியிட்டுக் கூறுபவனானான். காலமும் இடமும் ஒன்றே – Time and Space are equal – என்ற கருத்து இங்கே செயல்பட்டிருப்பது புரிகிறதா? இல்லையேல், அடுத்துவரும் பக்கங்களில் காண்க.

நம் எல்லோர்க்கும் நன்கு தெரிந்த முத்தமிழை Tri fold aural form என்றும், சிற்பம், கட்டிடம் ஆகிய இரட்டைத் தமிழை Two fold visual form என்றும், இந்த ஐந்தமிழ் தொகுப்பைத்தான் இன்று spiritual arts என்றும் five fold art என்றும், சொல்லி வருகிறோம் என்க. சிற்பியர் மரபிலே இவற்றுக்கு Five fold Veda என்றும் ஒரு பெயர் உளது. இந்த ஐங்கலைகள் – ஐந்து வேதங்கள் – ஒவ்வொன்றும் நமக்குக் கூட்டுவிப்பது ஆன்ம பலமே. எனவே, இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐந்தும், ஐந்து வேதங்களாயின. இக்கருத்து நம் நாட்டுச் சிற்பிகளிடமிருந்தே பரவின என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த ஐந்தமிழ் எங்கே யாரால் பெறப்பட்டது எனில், இந்தப் பிரபஞ்ச மூலப் பொருளிலிருந்து கிளர்ந்தன – பிறந்தன – பெறப்பட்டன – என்று சொல்வதே சாலப் பொருந்தும். இதைத்தான் **தைவிகம்** என்றனர் பிற்காலப் பெரியோர். எனவே, மூலப் பொருளானது தானே உணர்வுற்றுத் துடிப்பதால், அத்துடிப்பு காலம் எனப்பட்டு அந்தக் காலத் துடிப்புகளை அந்த மூலகாலமே [உணர்வே] நெறிப்படுத்தி சீலம் எனச் சொல்லி, அந்தச் சீலமே கோலம் என்ற உருவம் தரித்து, இங்ஙனம் தோன்றிய கோலங்கள் மிளிரும் நிலையில் இந்தப் பிரபஞ்சம் ஞாலம் (Cosmos) எனப்பட்டு ஓர் ஐந்தியல் விஞ்ஞானம் இந்தப் பிரபஞ்சத்தில் நிகழ்வதை உற்றறிதல் வேண்டும். இந்த scientific phenomenonஐ வேறு எந்த ஒரு மரபும் இப்படிச் சொல்லவில்லை

என்றும் அறிதல் வேண்டும். நோபல் பரிசுக்குரிய கண்டுபிடிபன்றோ! எனக்கல்ல; அந்தச் சங்க காலச் சிற்பச்சித்தன் மாமுனி மயனுக்கு! இவன்தான் நாம் இன்று வணங்கும் கடவுளைப் படைத்தவன்! இதைச் சொல்லும் இந்த மயன் மகனுக்கு என்ன கொடுப்பீர்கள்? [இவன் பெயரில் மாமல்லபுரத்தில் ஒரு விஞ்ஞான ஆய்வுக்கூடம் கட்டிவருகிறேன் முடிந்தால் இப்பணிக்கு உதவுங்கள்]

மூலத்துடிப்பை மீண்டும் உணர்வில் ஏற்றி அதன் கணக்கியலை உற்று நோக்குவோம்.

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 பரமாணுத் துடிப்பு	**– 1 தேர்த்துகள் காலம்**
8 தேர்த்துகள் காலம்	**– 1 இம்மிக் காலம்**
8 இம்மிக் காலம்	**– 1 எள்ளுக் காலம்**
8 எள்ளுக் காலம்	**– 1 நெல்லுக் காலம்**
8 நெல்லுக் காலம்	**– 1 விரல் காலம்**

எளிமையான – நமக்குத் தெரிந்த பொருளை வைத்து அரியதொரு விஞ்ஞானக் கணக்கைச் சொல்லிய பண்டை முறையைக் கண்டு துய்க்க. இந்தத் துடியையும் நமக்குப் புலப்படு நிகழ்ச்சியாக நமது தமிழ் மாமுனி கூறுவதைக் காணுங்கள்.

துடிப்பின் பிறப்பு அதன் அளவுயாதென அத்தமிழ் மகன் சொல்லுவதைக் கேளுங்கள். **"கண்ணிமைக் கைந்நொடி கால மாத்திரையே".** வேறு என்னென்ன துடிப்புறுகிறது என்பதைக் கூறுமிடத்து – **விண்ணும், மண்ணும், எண்ணும், பண்ணும், கண்ணும்** – அதாவது இவ்வைந்தும் இமைக்கின்றன – துடிக்கும் இயல்பின என்று கூறுவதையும் உற்றுணர்க. மேலே, எண் என்பது எண்ணம் [நினைப்பு, உள்ளும் இயல்புடைய உள்ளம்] பண் என்பது இசை [ஒலி] – ஆகிய ஐந்தும் துடிக்கும் நுண் உயிரிகள் [அமைப்புகள்] என்றுணர்க.

"கண்ணிமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்துங் காலக் கூறே" – ஐந்திறம்

காலம் என்பதை time என்று சொன்னால் உடனே புரியாது. இது physical time அல்லது relative time அல்ல. இது absolute time என்றால் ஓரளவு புரியும். ஒவ்வொரு உயிர்க்கும் உரிய காலமே absolute time or independent time என்று சொல்லலாம். இதனை Betrand Russel என்ற கணித மேதை 'Periodicity' என்று உணர்த்துகிறார். இது புரிவது கஷ்டமே. திரும்பத்திரும்பச் சிந்தியுங்கள், புரிந்துவிடும். இந்த நிலையில் Periodicity is the interval between two subtle or time units or time beats என்று சொன்னால் எல்லோர்க்கும் புரியுமன்றோ! (growth takes place during the interval).

இந்தக் காலக் கணக்கு இக்காலத்தில் எல்லா இந்திய மரபுக் கலைகளிலும் கையாளப்படினும், இதன் சிறப்பைத் தமிழ் மரபிற்றான் காண முடியும். தமிழ் மரபுக்கே உரித்தானது என்றும் துணிந்துக் கூறலாம். [காண்க: பிற்சேர்க்கையில் கட்டிடக் கலைஞனும் விஞ்ஞானியுமாகிற Robert Lawlor என்பாரின் ஆய்வின் முடிவு].

காலமும், தாளமும்:

இந்தக் காலக் கணக்கை உயர் விஞ்ஞான நிலையில் **காலம்** என்றாலும், இதனை நடைமுறையில் பிறிதொரு சொல்லால் – அதாவது நடைமுறைக் கலைத் துறையில் **தாளம்** என்று சொல்லுவோராயினோம். இதனை நாம் வலிந்து – உழைப்பால் செய்கிறோம். எனவே ஊழிக்காலம் என்பதே absolute time என்றாகிறது. இதனையே தொழில்நுட்பத் துறையில் (at technological level) **லயம்** என்ற சொல்லாலும் உணர்த்துகிறோம். **லயமும் தாளமும்** ஒரு செயலின் இரு பெயர்கள் என்று கொள்ளுதல் மரபு. இதனால்தான் மிருதங்கம் போன்ற கருவிகள் **தாளவாத்யம், லயவாத்யம்** என்று சொல்லப் படுவதாயின என்க. மேற்சொன்ன **இந்தக் கால இடை நேரத்தில்தான் இடமும் (Space) தோன்றி**, இடவளர்ச்சியும் இடத்தாலான உருவளர்ச்சியும் ஏற்படுகிறது என்றால் புரிகிறதா? இந்த வளர்ச்சியை இயலிலும் இசையிலும் நன்கு காணலாம் அல்லவா? இங்கே இதற்கு Speech rhythm என்று பெயர். தமிழில் சந்தம் என்று பெயர். "சந்தம் நிறைந்த தமிழ்" என்று அடிக்கடி சொல்லி நாம் பெருமைப்பட்டு வருவதை உற்றுணர்க. அந்த interval-ல்லிலும் sound pulses அல்லது waves நிகழுகிறதல்லவா? இதுதான் 'Spatial growth of sound form' என்று சொல்லப்படுகிறது. (though the form is aural and invisible, we realize it at heart level என்றறிக.] Prof.Stephen Hawkins சொல்லும் History of Timeஐயும் நான் சொல்லும் History of absolute timeஐயும் ஒப்பு நோக்கி நீதி வழங்குக. எனவேதான் "காலமே எவற்றுக்கும் மூலம்" என்பான் மயத்தமிழன். அந்தக் காலத்தை உணர்வு (consciousness - awareness) என்பான். இதனைச் சூத்திரமாக்கி "உழைப்பே மூலம் உணர்வே காலம்" என்பான் மயன். இந்தக் காலத்தையே இடமாக்கியதும் அந்த மயன் தான்.

காலமும், இடமும்:

அடுத்து இடம் என்ற சொல்லும் அதற்கொருவாய்பாடும் கீழே வருவதை உற்றுநோக்குக. இங்கேதான் பிரம்ம சிருஷ்டி நுட்பம் பொதிந்து கிடக்கிறது என்பேன். இதைப்புரிந்துக் கொண்டால் இயல், இசை, நடம் புரிவோர் பிரம்மன் ஆகிவிடுவர்.

இது புரிந்தாலன்றி "अहं ब्रह्मास्मि, तत्वमसि" "*அஹம் பிரம்மாஸ்மி, தத்வமஸி*" **"நான் பிரம்மமாய் இருக்கிறேன், அதுவாக [பிரம்மமாய்] நீ இருக்கிறாய்"** என்ற மகா வாக்யங்கள் புரியாது என்பேன். என்னுடைய வாக்யங்களையும் உற்றுப் பாருங்கள்: **சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான்.** இதனை நான் சொல்லக் கேட்டிட ஆன்மிகக் கவிஞர் புரிந்து பாராட்டினர். சிற்பி அகத்தே உள்ளான். சிற்பம் படிமமாக புறத்தே உளது. அங்ஙனமே கவிஞனே அகத்தே கவி எனப்பட்டு புறத்தே கவிதை புனைகிறான். இருவரும் ஒரே மாதிரிக் காட்சியையே காண்கிறார்கள். இரண்டும் இதனால் ஒரே இலக்கணம் [ஐந்தியல்] பெறலாயிற்று.

இடவடிவத் தோற்ற நிலை:

கோடுகள் இடவடிவங்களாக (Spatial form) மாறுவதே ஒரு விஞ்ஞான நிகழ்ச்சி எனப் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கும் ஒரு வளர்ச்சி உண்டு. கோடு என்பது தோற்று வாயில் புள்ளி (Point) எனப்படும். இதனை பிந்து – விந்து (foetus) என்று சொல்லுவோம். இந்தப் பிந்து என்பது ஓர் உயிரி. இந்த நிலையில் புள்ளி, புள்ளிகளால் கோடும், கோடுகளால் வரியும், வரிகளால் வடிவும் வடிவின் இறுதியில் உருவும் தோன்றுகிறது என்பது ஒரு விஞ்ஞான நிகழ்ச்சியாகும்.

"புள்ளிக் கோடே வரிவியல் உருவியல்
தெள்ளு தமிழியல் எழுத்தியல் வகுத்து
விள்ளும் சொற்பொருள் கூட்டணி வகையால்
உள்ளும் ஆற்றலை உரைப்பதிந் நூலே"

– ஐந்திறம்

இத்தகைய படிமுறையில் நமது உள்ளம் என்ற இடத்தில் முதலில் ஒளிப்புள்ளி தோன்றி– ஒளிக் கோடுகளாகி இறுதியில் ஒளிமயக்காட்சி (luminous inner picture) தோன்றும். இதையே புறத்தில் கருவி கொண்டு இடவடிவங்களாக அமைத்துக் காட்டுகிறோம். இப்படித்தான் பிந்து என்ற ஒளிப்புள்ளி உருவங்களாக மாறுகிறது என்பது பிரம்ம சிருஷ்டி (manifest form of the point energy) நுட்பமாகும். 'புள்ளி' என்பதும் ஓர் இடவடிவமே!

மூன்றோ, நான்கோ கோடுகளால் அடைபடுவது இடம் எனப்படும். கண்ணால் பார்த்தறியக் கூடிய அத்தனை பொருள்களும் இத்தகைய புள்ளிகளால் – இடங்களால் ஆன இடப்பொருள் (Spatial form) எனலாம். நமது உடம்பில் உள்ள அணுவை Cell என்று சொல்லுகிறோம். எனவே, அணு என்பதும் இடத்தாலான [அ] இடமே – நுண் இடமேயாகும் அல்லவா? இந்த இடத்தைத் தோற்றுவிப்பது காலத்துடிப்பு

(Creative elemental pulsation) எனப்படும். இஃது உங்கட்குத் தெரியும். இத்தகைய அணு இடமானது துடிப்பினால் உருவாகிறது உருப்படுகிறது என்பது விஞ்ஞான நுட்பம். அணு என்பது ஒரே அளவினதான இடம் - அணுவிடம் (micro space) என்று கொள்ளுதல் வேண்டும். இஃதொரு விஞ்ஞான நுட்பம்!

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு சேர்ந்த இடம்	**– 1 தேர்த்துகள் இடம்**(Space equivalent to car dust)
8 தேர்த்துகள்	**– 1 இம்மி இடம்**
8 இம்மி	**– 1 எள்ளு இடம்**
8 எள்ளு	**– 1 நெல்லு இடம்**
8 நெல்லு	**– 1 விரல் இடம்**

அணுவளவு கொண்ட சிறு இடம் ஒன்று (space) அந்த அணுவின் துடிப்பினால் வெடித்து (big bang) சிதறி மேலும் சிறு சிறு அணுக்களாக ஒரே (fractals) அளவினதாகப் பிரிந்து அவற்றின் இணைப்பால் பிறிதொரு பொருளாக உருக் கொள்கிறது என்பது உச்ச விஞ்ஞானமாகும். இத்தகைய துடிப்பானது இயல்பில் துடித்துச் சிதறி மீண்டும் மீண்டும் இஃது இடைவிடாது நிகழ்வதால் பௌதிக வளர்ச்சி - உருப்படுதல் (Physical growth or spatial growth) நிகழ்வதால் - இதனை இடவளர்ச்சி (growth of space) என்கிறோம். இங்ஙனம் வளர்ச்சியுற்ற இடத்தை இடம் [அ] space என்றே சுருக்கிச் சொல்லுகிறோம். அதாவது ஒவ்வொரு அணுக்காலமும் ஒவ்வொரு அணு இடத்தை உண்டாக்குகிறது என்பது பொருள். எனவே **காலமும் இடமும் சமமே - ஒன்றே -** என ஆகிறது. (Time and Space are mathematically equal. They are directly proportional to each other. This is the history of Time, not so interpreted by contemporary western science. In other words, Time is absolute and absolute time creates life or life forms.) இப்படித்தான் இயற்கையில் ஒரு கணக்கியல் தோன்றுவதாயிற்று. எனவே, காலத் துடிப்பினால் இடம் தோன்றி வளர்கிறது என்பது நுட்பமாகிறது. இப்படித்தான் தாயின் வயிற்றுக்குள் நுழைந்த சக்தி அணுவுக்கு (energy atom) அதாவது பரமாணுவானது அதற்கு இயல்பான துடிப்பினால் சதைப்பற்று (spatial growth) ஏற்படுகிறது என்பது விஞ்ஞானத் தத்துவம் என்க. இந்தக் காலத் துடிப்பினால் ஏற்பட்ட அளவும், அதனால் உருப்பெற்ற இடத்தின் அளவும் ஒன்றெனத் தெரிகிறதல்லவா? ஆம். இதைத் தான் இடவாய்பாடு காட்டுகிறது. இவ்விரண்டு தத்துவங்களுக்கு மூலமாய் இருப்பது காலம் என்று தெரிவதால் **"காலமே எவற்றுக்கும் மூலம்; காலமே கோலத் தோற்றம்; காலமே ஞாலத் தோற்றம்"** என்ற விதி ஏற்பட்டதோடு **"காலமே விந்தை செய்யும்" "காலமே அணுக்கள் ஆயும்"** என்றும் இந்தத் தமிழர் விஞ்ஞானம்

மேலும் இரண்டு தேற்றங்களைக் கொண்டுள்ளது. மீண்டும் வாய்பாடுகளைப் பார்ப்போம்.

காலவாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணுக் காலம்	– 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	– 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	– 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	– 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	– 1 விரல் காலம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள் இடம்
8 தேர்த்துகள்	– 1 இம்மி இடம்
8 இம்மி	– 1 எள்ளு இடம்
8 எள்ளு	– 1 நெல்லு இடம்
8 நெல்லு	– 1 விரல் இடம்

அடுத்து வருவது ஐந்திறம் கூறும் இடக்கணக்கு: இது தான் சங்க காலக் கணக்கு எனத் தெரியவந்துளது. இதனை இது நாள் வரை எவரும் கண்டு கொள்ளவே இல்லை.

''எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி''
''எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டுத் தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'' – ஐந்திறம்

[சிலப்பதிகார உரையாசிரியர் இதே வாய்பாடைக் கொடுத்திருப்பதை இப்போதாவது புரட்டிப் பாருங்கள்.]

இந்த வாய்பாடு எதைக் காட்டுகிறது என்பதை மேலும் ஒருமுறை உற்றுப் பார்ப்போம்.

ஏற்கெனவே பேசும் பொழுது, பரமாணு என்பது கண்களுக்குப் புலப்படாத சிற்றணு என்று சொன்னேன். அப்படியானால் கண்களுக்குப் புலப்படும் அணு, என்று ஏதாவது உளதோ என்று இப்பொழுதும் கேட்கத் தோன்றும். ஆம்! என்பதே விடை. கண்களுக்குப் புலப்படாத அணுவும் இருக்கிறது, கண்களுக்குப் புலப்படும் அணுவும் உளது என்பதைத் தான் ஒரு விஞ்ஞான அதிசயம் என்றேன். கண்களுக்குப் புலப்படாத

அணுக்கள் ஒரு கணக்கில் ஒன்று சேர்ந்த நிலையில் அவை கண்களுக்குப் புலப்படு அணுவாக உருமாற்றம் கொண்டு அது செய்திட்ட ஒரு விந்தையை இங்கே சொல்ல இருக்கிறேன். கண்களுக்குப் புலப்படாத அணு என்று சொல்லும் பொழுது, நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் யாதெனில், நமது கண்கள் ஒரு எல்லை வரை தான், ஒரு எல்லைக்கு உட்பட்ட பொருளைத் தான் - காணமுடியும். அந்த எல்லைக்கு அப்பால் இருக்கக் கூடிய பொருளை (fractals) சாதாரணக் கண் கொண்டு பார்த்திடல் இயலாது என்றும் சொல்லலாம். ஆனால், கண்களுக்குப் புலப்படாத அப்பொருளை [அ] அணுவை **என்றுமுள மூலப் பொருள் - என்றுமுள நிலைப்பொருள்** (ever existing substance) என்பதே உண்மை. இக்கால விஞ்ஞானம் தெரிந்த நம்மவர்கள் அந்த நுட்பத்தை அறிவினாலும், அறிவுக்கு அப்பார்ப்பட்ட உணர்வினாலும் அறிந்திட முடியும் என்று சொல்லலாம். இத்தகைய அறிவும், உணர்வும் பெற்ற சிந்தனையாளர்களைத் தான் **யோகிகள்** என்று சொல்லுகிறோம். **'யோகம்'** என்றால் இணைப்பு, சந்திப்பு (resonance, union) என்று பொருள். அதாவது நீண்ட சிந்தனைக்குப் பிறகு அந்த சிந்தனையாளர் உண்மைப் பொருளோடு ஒன்றி அல்லது இணைகிறார்கள் என்பது அதன் பொருள். அதாவது அறிவுப் பொருள் ஆனது உண்மைப் பொருளோடு சேரும் - மெய்ப் பொருளானது உயிர்ப் பொருளோடு சேரும் - நிலையில் எழுச்சி கொள்ளும் உணர்வு நிலைக்குத்தான் யோகம் என்று பெயர். பச்சையாகச் சொன்னால் இந்த இரண்டு நிலைகளும் அதாவது அறிவு நிலையும் உணர்வு நிலையும் ஒன்றித்த நிலை ஒன்று உளதென்று கண்டறிந்து, அந்த நிலையைத் தான் **யோக நிலை** என்று கலைவழி நோக்கிய நமது முன்னோர்கள் அறுதியிட்டுச் சொன்னார்கள். நமக்கும் இந்த நிலை கிடைக்காமல் போவதற்கில்லை. சிந்தனையை உணர்வில் ஆழப்பதியவைப்போர் இதனைக் கண்டறிந்தோர் ஆவர். எனவே, கண்களுக்குப் புலப்படாத பரமாணு யோகிகளுக்குப் புலப்படும் என்று தமிழர் கண்ட சம்ஸ்கிருத மரபும் அறுதியிட்டுக் கூறுகிறது.

"परमाणुरिति प्रोक्तं योगिनां दृष्टि गोचरम् ॥" - மயமதம்

"பரமாணுரிதி ப்ரோக்தம் யோகினாம் திருஷ்டி கோசரம் ॥"

தமிழ் மரபில் உதித்த முன் சொன்ன தமிழ் மகன், **"உளவுறும் நுட்பம் உண்மை கண்டே, கண்டுறும் அளவை கருத்திலிறுத்தி, விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே"** என்று சொல்லுகிறான். முன்சொன்னதையும் பின் சொன்னதையும் வெவ்வேறு இரண்டு பேர் தனித்தனியாகச் சொன்னதாகப் பொருள்

இல்லை. சம்ஸ்கிருதத்தில் சொல்லியவனும், தமிழில் சொல்லியவனும் ஒரே மகன் தான் என்று சொன்னால் இதைப்படிக்கும் உங்களுக்கு என்ன உணர்வாகும் சொல்லுங்கள் பார்ப்போம்.


இப்படிப்பட்ட ஓர் உணர்வும், உணர்வால் வெளிப்பட்ட பொருளே – மீண்டும் சொல்லுகிறேன் – முதல் சங்க காலத்தில் தோன்றிய ஒரு தமிழ் மகனின் கணக்கியல் என்று அறிதல் வேண்டும். அவன் யார், அவன் வரலாறு யாது என்பதைப் பிறகு சொல்லுவேன். [காண்க: வைசம்பாயனம்] முன்சொல்லிய வாய்பாடுகளை மீண்டும் மீண்டும் உற்று நோக்குங்கள்.

இந்த நிலையில், தமிழும் சம்ஸ்கிருதமும் ஒன்றே – ஒரு குடலில் ஜனித்த இரண்டு சிசுக்களே என்பதை நீங்கள் உணர்வீர்கள், நன்றாகவே அறிவீர்கள் என்று நம்புகிறேன். பொறுத்திருங்கள், பிறகு பார்க்கலாம். சொல்லியவனைக் காட்டிலும் சொல்லிய பொருள் மகத்தானது என்பதால் இந்த ஓர் ஏக்கத்தை மட்டும் உங்கள் உள்ளத்தில் விதைத்திருக்கிறேன். இந்த விதையைத்தான் இந்த உலகத்தை விரியச் செய்த பரமாணு என்று தொடக்கத்தில் சொன்னேன். அணுக்களெல்லாம் விண்ணிலும் மண்ணிலும் கொட்டிய உயிர்த்துடிப்புள்ள விதைகளே (Seeds of energy) என்றால் மிகையன்று!வாஸ்து சாஸ்திரம் படியுங்கள். மண்ணியல் அப்போது நன்கு புரியும். ஆகவே வாஸ்து சாஸ்திரம் மதநூல் அல்ல என்றும் அறிவியல் நூல் என்றும் உலகம் பூரா சொல்லி வருகிறேன்.

சாதாரணமாக விதை என்று சொன்னால் அஃகுதொரு காணும் பொருள் என்பது எல்லோருக்கும் புரியும். அதே நேரத்தில், சொல் வழி, காதால் கேட்கும் விதை நிலைப் பொருளைக் [ஒலி அணுக்களால் ஆன சொற்கள்] கண்ணால் காணும் பொருளாக உருமாறிடுவதையும் நாம் அறிவோம். காணாப் பொருளாகிய பரமாணு வானது காணும் பொருளாக மாறும் பொழுது, சாதாரணமாக, அணு என்று சொல்லப்படும். இப்பேர்ப்பட்ட காணும் அணுக்கள் ஒன்று சேறும் நிலையில், தமிழ் மரபில் கணு என்று சொல்லப்படும். இதெல்லாம் விதைகள் (Seeds of energy) தான். அணுவின் அமைப்பியலை – கணக்கியலை – கணுவியலை – வளர்நிலையை – மூங்கில் கணுக்களில், கரும்பின் கணுக்களில், மரத்தின் உடலில் – ஏற்பட்டிருக்கும் வரைகளிலே – அடுக்குகளிலே வெளிப்படையாகக் காணலாம். இவையெல்லாம் காலத்தின் கோலங்கள் என்போம். இந்தக் கருத்தையும், தேற்றத்தையும் வாஸ்து

சாஸ்திரத்தில் தான் காணலாம். இஃதொரு விஞ்ஞான நிகழ்ச்சியன்றோ!

இது வரை நான் சொல்லி வந்த செய்திகளை உற்றுப்பார்க்கின் ஒரு சில செய்திகள் ஆழ்ந்தும் ஒரு சில செய்திகள் மேலெழுந்த வாரியாகவும் இருக்கும் என்று எனக்கே புரிகிறது. காரணம் யாதெனில், மேலெழுந்த வாரியாகப் பேசும் பேச்சுக்கள் எல்லாம் பேச வேண்டிய பொருள் பற்றி ஒரு தூரத்தோற்றம் (aerial view) காட்டுவது என்பதே ஆகும். புரிய முடியாத – முன் பின் கேட்டறியாத – ஒரு விஞ்ஞானத்தை எளிய சொற்களைக் கொண்டு புரியவைத்தல் மிகக் கடினமாகும் என்பதை நான் சொல்லாமலேயே உங்களுக்குத் தெரியக் கூடும். எனவே, அடுத்தடுத்து ஏற்கெனவே கூரியதை திரும்பத்திரும்பக் கூறி நான் செல்லும் பாதையில் அயராது ஒதுங்காது உங்களை அழைத்துச் செல்லுவேன். உங்களை எங்கே அழைத்துச் செல்வேன் தெரியுமா? சுருங்கக் கூரின், உங்களை உலக படைப்பாளியாகிய விஸ்வகர்ம பரப்பிரம்மத்தின் அருகில் உங்களை நிறுத்தி அவனை உற்றுப்பார்த்து மகிழ்ச்சி கொள்ளச் செய்வதே என்க.



விஸ்வகர்மன்

முந்தைய பத்திகளில் காலம் பற்றியும், இடம் பற்றியும் இடங்காலம் பற்றியும், காலம் இடமுறுதல் பற்றியும் இடத்தால் ஆன வடிவங்கள் பற்றியும் என்னால் முடிந்த வரை விளக்கினேன். விஞ்ஞானம் உயர்ந்து ஓங்கி வளர்ந்த காலத்தில் வாழக் கூடிய உங்களுக்கு நான் சொல்லும் செய்திகள் புரியாமல் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்று நினைக்கிறேன். எனவே, கூறியது கூறல் என்ற ஒரு பழி என் மீது விழாது என்றே நம்புகிறேன். அப்படி விழுந்தாலும் அதை தவிர்க்க முடியாது என்று நான் அறிவேன். நீங்களும் அறிவீர்கள். என் நோக்கம் எத்தகையது எனில் நான் நினைத்ததை மற்றும்

அனுபவித்ததை உங்களிடம் பகிர்ந்துக் கொள்ள மேற்கொண்ட முயற்சியேயாகும். இதற்கு ஐந்திற சூத்திரங்களையும், வாஸ்து விஞ்ஞானத்தையும் துணைக்கு வைத்துக் கொள்கிறேன். அவ்வளவுதான். ஆகவே, மேலும் அத்திசை நோக்கி அடியெடுத்து வைக்க விரும்புகிறேன். உணர்வுகளை அடைவிடம் நோக்கி அழைத்துச் செல்வதில் பெருமகிழ்ச்சியும், பெருமையும் கொள்கிறேன். என்னுடன் வாருங்கள்.

இந்த நிலையில் மரபு தழுவிய விஞ்ஞானத்திற்கு யாதொரு இழுக்கும் வராமல் பார்த்துக் கொள்வேன் என்பதை இப்போதே உறுதி செய்து விடுகிறேன். காரணம், மேலை விஞ்ஞானம் இந்த முடிவை எட்டிவிட்டு அது மக்கட்கு நன்மை செய்வதை விடுத்து அதிகமான தீமை செய்து வருவதை எல்லோரும் அறிவோம். இத்தகைய அறிவியல் செல்வத்தை (Wealth of Scientific Knowledge) உலக மக்கள் அனைவர்க்கும் பொதுச் சொத்தாக ஆக்குவதோடு – இந்த விஞ்ஞான அனுபவம் அதனால் விளையும் ஆன்ம சுகம் எல்லோர்க்கும் கிடைத்திடச் செய்வதே தமிழ் கலாச்சாரத்தில் காலூன்றிய பாரதீயக் கலாச்சாரத்தின் நோக்கம் என்பதை இப்போது இடையிலும் சொல்லிக் கொண்டே சென்று பிறகு இறுதியிலும் சொல்வேன்.

இப்பொழுது விஷயத்திற்கு வருவோம். நான் மேலே சொன்ன கால வாய்பாடு, இட வாய்பாடு இரண்டும் சாதாரண வாய்பாடு அல்ல. பிரபஞ்ச மூலமாகிய பரம்பொருள் எப்படித் தன்னைத் தானாகவே புலப்படுத்திக் கொள்ளத் துடிக்கிறது, புலப்படுத்திக் கொள்கிறது (manifest itself into various substances and ultimately into gross live forms) இதைத்தான் தொடக்கத்தில் பிரம்ம சிருஷ்டி தத்துவம் என்று சொல்லிக் காட்டினேன்.

இப்பொழுது மேற்சொன்ன இரண்டு வாய்பாடுகளை உற்று நோக்குவோம். பரமாணு 8 கொண்டது ஒரு தேர்த்துகள் என்று சொன்னேன். இஃது இடவாய்பாட்டில் முதல் நிலையாகும். எடுத்த எடுப்பில் 8 பரமாணு என்று சொல்லும் பொழுது அந்த பரமாணு நமது கண்களுக்குப் புலப்படாது என்றும், அவை சேர்ந்த பின்னரே அணு அளவினதான ஒரு பொருளாகத் தோன்றுகிறது என்றும் சொல்லி அதற்குக் காரணமும் சொன்னேன். 8 பரமாணு என்று சொல்லும் பொழுது முதல் பரமாணு முதலில் ஒன்று தோன்றி அதற்குப் பின்னால் அடுத்தடுத்து 7 அணுக்கள் பின் தொடர அவை எட்டாகி ஒரு சிறு பொருள் தோன்றுகின்றது என்பது இதன் பொருளாகும். இந்த நிலையில் எட்டு என்பது ஓர் இறுதி நிலையென தெரிய வருகிறது அல்லவா? ஆம் இஃது ஓர்

உச்ச விஞ்ஞான உண்மை. இக்கணக்கு பிரபஞ்சத்தில் ஆகாய வெளியின் துடிப்பென அறிதல் வேண்டும். இதற்கு மேல் உள்ள 9, 10 என்ற எண்கள் இங்கே வரவில்லை என்பதை உற்றறிய வேண்டும். அதாவது எட்டு என்பது ஓர் முடிவான எண்ணாகிறது என்க. தமிழ் மரபில் எட்டு என்பதும், எண் என்பதும் ஒரே பொருளுடைய இரு சொற்கள் (Synonyms) என்க. இதற்கு மேல் வரக்கூடிய 9, 10 எண்களுக்குப் பதிலாக எட்டு ஒன்று, எட்டு இரண்டு, எட்டு மூன்று என்று தான் முற்காலத்தில் சொல்லப்பட்டது. ஒன்பது பத்து என்ற எண்களுக்கு உரிய சொற்களெல்லாம் பிற்காலத்தில்தான் தோன்றின என்பது ஒரு வரலாற்று உண்மை. நம்முடைய பழைய மரபில் எட்டு என்ற எண்ணை மூல அலகு (unit) என்று கொண்டு அதன் விருத்தியை வெவ்வேறு பெயரிட்டுச் சொல்லிவந்த ஒரு வழிமுறையை ஏற்கனவே எழுதிய எனது பத்திகளில் காணலாம். இஃது இந்தக் கணக்கியலின் தொன்மையை மட்டும் கூறிவிட்டதாகப் பொருளில்லை. இதுதான் உண்மையிலும் உண்மை மற்றும் தொன்மையிலும் தொன்மை என்பது ஒரு முடிவு. இதனை Law of Nature or dynamics of time energy என்று சொல்லலாம். நிற்க.

இந்த பரமாணுக்கள் என்று சொல்லப்படும் அருவமான அணுக்கள் சேருகின்றன என்பதை அடுத்துவரும் விஞ்ஞான நுட்பமாகும் என்று சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லப் போவதெல்லாம் நம் உடம்பையும், நம் உடம்புக்குள் இருந்து உணர்வுமயமாக இயங்கும் ஆத்ம சக்தியையும் ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால் நமது அறிவுக்குத் தெளிவு கிடைத்து விடும்.

நமது உடம்பில் ஒரு வகையான சூடு பரவி இலங்குவதை நாம் எல்லோரும் அறிவோம். இந்தச் சூடு எந்தெந்த அங்கங்களில் இல்லாமல் போகிறதோ அந்தந்தப் பகுதிகள் உணர்ச்சி இழந்த நிலையினை நாம் உணர முடியும். அதாவது, அந்தந்த உறுப்புகள் உணர்ச்சியை விடுத்து குளிர்ச்சி பெற்று விடுகின்றன, அதாவது செத்து விடுகின்றன என்பது அந்த நுட்பமாகும். ஆகையால், ஒரு பொருள் [அ] உறுப்பு உணர்ச்சி மயமாக இருக்கிறது என்றால் அப்பொருள் ஒரு சூட்டுப் பொருளாக இருப்பதே காரணம் என்று உணரலாம். இன்னும் சொல்லப் போனால், இந்தச் சூட்டுப் பொருளுக்கு நாம் வைத்த பெயர் உணர்வு, உணர்ச்சி என்று சொல்லப்படுகிறது. எனவே எல்லாவற்றிற்கும் அடிப்படையிலே சூடு என்ற ஒன்று இருக்கிறது என்பது ஒரு விஞ்ஞான செய்தியாகும். இவையெல்லாம் நம்முடன் பிறந்த ஒரு

பொருளாகியதால் இதை நாம் பெரிது படுத்திப் பேசுவதில்லை. இந்த பேச்சுக்கள் இக்காலத்தில் தலைதூக்கி நிற்பதை வாழ்க்கையில் அன்றாடம் காண்கிறோம். சூடு இல்லாமல் நமது கணினி வேலை செய்ய முடியுமா? இத்தகைய சூடு ஆனது **மூலம்** என்ற முழுமுதற் பொருளில் அடங்கிக் கிடக்கிறது. நீர் பூத்த நெருப்புப் போல் இந்தச் சூடு கிடக்கிறது எனலாம். யாதொரு செயலும் செய்யாமல் அமைதி நிலையில் இந்தச் சூட்டுப் பொருளும், சூடு நிரம்பிய பருப்பொருளும் [உடம்பு] அமைதி நிலையை எய்துகிறது என்று அறிவுறுத்துகிறோம். இதனை சாத்விக நிலை என்றும், சாந்த நிலை என்றும், வேதாந்த நிலை என்றும், மேலான நிலை என்றும் புலவர் பெருமக்கள் சொல்லிக் காட்டுவார்கள். இந்தப் பிரபஞ்சத்தை வெளிப்படுத்திய பிரபஞ்ச மூலம் அடிப்படையில் இப்படித்தான் இருக்கிறது. இந்த நிலையில் உள்ள பொருளைத்தான் சிவன் என்று ஓர் உருவம் கொடுத்துச் சொல்லி வருகிறோம். இந்தச் சிவம் என்ற உருப்பொருள் தாங்கி நிற்கும் உணர்ச்சி நிலையை [அ] குண நிலையை **அன்பு** என்று சொல்லுகிறோம். **அன்பே சிவம்** என்றும் **சிவமே அன்பு** என்றும் இரண்டையும் ஒன்றாக்கிப் பேசி வருகிறோம். இதன் பயன் யாது என்று வினவினால் சுகம் என்பது விளங்கும். இந்தச் சுகத்தை அனுபவிப்பது யார் என்று கேட்டால் சிவன் என்று சொல்லுவோம் – இந்த உணர்ச்சிப் பொருள் தன்னைத்தானே சுவைக்கிறது, இன்புறுகிறது என்று சொல்லி முடிப்போம். அதுதான் இறுதிப் பொருள் என்றும் இறுதி நிலை என்றும் "रसो वै स: सो वै रसिक:" அவனே ரசிக்கிறான், அவனே ரசம் என்று இதன் பொருளாகும். அதாவது அந்த மூலப்பொருள் தன்னைத்தானே ரசிக்கிறது என்பது ஓர் உட்பொருள் என்க. இதனை விஞ்ஞான ரீதியாக உணரலாம். இதனை வேதமானது மிகச் சுருக்கமாக **"அவன் ரசிகனாகவும் அவனே ரசமாகவும் இருக்கிறான்"** என்று சொல்லி முடித்துக் கொள்கிறது. இந்தப் பிரபஞ்ச மூலம் இந்தப் பிரபஞ்சத்தை எதற்காக படைத்தது, why this universe என்று இன்று கேட்போர்க்கு இதுதான் இறுதியான விடை என்க. இதுதான் பாரதீயக கலாச்சாரத்தின் முடிவான பொருள் என்று உறுதிபடச் சொல்லலாம். மேற்சொன்ன ரச, ரசிகக் கருத்தில் நம்மை நாமே உற்றுப் பார்த்தால் தெரியாமலோ, புரியாமலோ போவதற்கு இல்லை. இதைத்தான் நமக்கு முன்பிறந்த இந்திய ஞானிகளும், நான் முன்புச் சொன்ன தமிழ் ஞானியும் சொன்னான் என்பதை இங்கே நினைப்பூட்டுகிறேன். இந்த உண்மையைச் சொல்லிய **பரம குருவாக** அந்தச் சங்ககாலத் தமிழ்ச் சிற்பி சொன்னான் என்பதை இங்கே இந்த நேரத்தில் மீண்டும் குறிப்பிடல் தகும் என்று நினைக்கிறேன். என்னிலே

சிற்பம் உண்டு, சிற்பத்தில் நானும் உண்டு என்றான். எனக்கு ஏற்பட்ட அனுபவமும் இஃதே என்பேன். இதை வைத்துத்தான் மாமுனி சங்கரன் **அஹம் பிரம்மாஸ்மி** என்றும் **தத்வமசி** என்றும் நமக்குச் சொல்லிக் கொடுத்தான் என்க. சிற்பியர் மரபில் இப்படிச் சொன்னவன் – நான் அடிக்கடி சொல்லி வரும் சங்ககாலச் சிற்பி என்று சிற்பியர்களால் பேசப்பட்டு வந்தது. இஃது ஒரு பேருண்மை. ஆதலால், சொந்தச் சொல்லால் சொல்ல முடியாத நிலை ஏற்பட்டு, தனது கலை மரபைச் சார்ந்த வலது கை முத்திரையால் **பேசாமல் பேசினான்** ஒருவன் என்று சொன்னதை நம் முன்னோர்கள் உருவகித்து நம்மிடம் வைத்துவிட்டுச் சென்றுள்ளனர். அவனைத்தான் **ஆலமர் செல்வன்** என்றும் **தென்னவன்** என்றும் **தெக்ஷிணாமூர்த்தி** என்றும் சொல்லி வருகிறோம். இவன்தான் மயன் என்றும் மயாசுரன் என்றும் சொல்லப் படுபவன். இந்த மயாசுரன் என்ற சொல் அவன் எழுதிய முதல் சூரியசித்தாந்தத்தில் வருகிறது. அதாவது "मयोनाम महातेजो मायावी वानरर्क्षभ" *"மயோநாம மஹாதேஜா மாயாவி வானரர்ரிஷப"*.

சூரிய சித்தாந்தம் பாடல்

மறுபடியும் நமது விஞ்ஞானப் பத்திக்குச் செல்வோம். மேற்சொன்ன மூலச்சூடு இருக்கிறதே அதனை ஆங்கிலத்தில் cosmic energy என்றும், cosmic fire என்றும் தமிழில் மூலச்சூடு என்றும், சம்ஸ்கிருதத்தில் வைஸ்வானர அக்னி என்றும் சொல்லி வருகிறோம். இதைப் பிரணவச்சூடு என்று ஓர் அரிய சொல்லை விஞ்ஞானச் சொல்லாகக் கலை மரபில் சொல்லி வருகிறோம். ஆகையால் இச்சொல் உணர்த்தும் பொருள் தெரியாத நிலையில், மறந்தும் மறைந்தும் போய், இப்போது தலை தூக்கிய நிலை பெற்றிருக்கிறது என்பதை இங்கே சொல்லிட விரும்புகிறேன். இந்தச் சொல்லை வைத்து ஒரு வேதமே பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்டு, **பிரணவ வேதம்** என்ற பெயரைப் பெறுவதாயிற்று. இந்த பிரணவ வேதம் இருந்த செய்தியை வேத வியாசன் தனது பாகவதத்தில் சுட்டிக் காட்டுகிறான். இந்த வேதத்தை சிற்பக் கலை மரபின் சொத்தாக நீண்ட நெடுங்காலம் சிற்பிகள் சொல்லி வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நிலையில் அனைவரும் அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதால் சொல்லி வைக்கின்றேன். இந்த வேதம் தமிழ் வேதம் எனத் தெரிந்துவிட்டது.தமிழில் பத்தாயிரம் பாக்கள் கொண்டதாக இன்று தெரியவந்துளது.

இந்த வேதமானது முதல் வேதமாக தோன்றியது என்ற செய்தியையும் அதே வேதவியாசன் சொல்லியிருக்கிறான். அதைச் சுட்டிக்காட்டும் சம்ஸ்கிருதப் பாடலை கீழே தருகிறேன்.

"एक एव पुरा वेदः प्रणवः सर्ववाङ्मयः ।
देवो नारायणो नान्यः एकोऽग्निर्वर्ण एव च ॥"

"ஏக ஏவ புரா வேத: ப்ரணவ: ஸர்வவாங்மய:।
தேவோ நாராயணோ நான்ய: ஏகோக்னிர்வர்ண ஏவ ॥"

இதற்குப் பிறகு வேத வியாசன் சொல்லி வைத்த வேதச் செய்தியையும் கண்டு கொள்க.

"ऋग्यजुः सामाथर्वाख्यान् वेदान् पूर्वादिभिर्मुखैः ।
शास्त्रमिज्यां स्तुतिस्तोमं व्यधात्क्रमात् ।
आयुर्वेदं धनुर्वेदं वेदमात्मनः ।
स्थापत्यं चासृजद् वेदं क्रमात्पूर्वादिभिर्मुखैः ॥
इतिहास पुराणानि पञ्चमं वेदमीश्वरः ।
सर्वेभ्य एव वक्त्रेभ्यः ससृजे सर्वदर्शनः ॥"

"ருக்யஜுஃ சாமாதர்வாக்யான் வேதான் பூர்வாதிபிர் முகை:।
சாஸ்ர மிஜ்யாம் ஸ்துதிஸ்தோமம் வ்யதாத்க்ரமாத் ॥
ஆயுர்வேதம் தனுர்வேதம் வேதமாத்மன:।
ஸ்தாபத்யம் சாஸ்ருஜத் வேதம் க்ரமாத்பூர்வாதிபிர்முகை: ॥
இதிஹாஸ புராணானி பஞ்சமம் வேதமீஷ்வர:।
சர்வேப்ய ஏவ வக்த்ரேப்ய: சஸ்ருஜே சர்வ தர்ஷன: ॥"

இஃதொரு வரலாற்று எச்சம் என்று கொள்ளத்தகுந்ததாகும். இதற்குப் பின்னால் இருப்பதே தமிழ் மண்ணின் உண்மை வரலாறு. இதனைக் குறிப்பிட்டுப் பேசியவர்தான் மாணிக்கவாசகப் பெருமான். இவர் காட்டிக் கொடுத்த வேதம்தான் ஆகமம் (heritage) என்ற சொல்லில் பொதிந்துளது எனக. இதோ அவரது மணிவாசகம்.


"மன்னுமாமலை மயேந்திரம் அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும்
கேவேடராகி கெளிரது படுத்து
மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தன்னில் மயேந்திரம் அதனில்
உற்ற வைம்முகங்களாற் பணித்து அருளியும்"

– திருவாசகம் கீர்த்தித் திருஅகவல்

இதைத்தான் வேதவியாசன் தொகுத்துக் கொடுத்தான். வேதத்தை வேத வியாசன் செய்யவில்லை; கண்டு சொன்னான் என்பதை "ऋषयः कवयः मन्त्रद्रष्टारः नतुकर्तारः" *"ருஷய: கவய மன்த்ரத்ரஷ்டார: நதுகர்தார:"* என்று பிற்காலத்தில் ஆய்வர்கள் சொல்வாராயினர்.

இலக்கியத் தமிழோடு மயத்தமிழும் (technical Tamil) சேர்ந்துசெம்மொழி ஆகியுளது. எப்போது? முதல் சங்க காலத்தில். முதற் சங்ககாலத்தில் நிலந்தரு திருவில் பாண்டியன் நிறுவிய தமிழ்க் கழகத்தில் வெளிப்பட்டுவிட்டது. இப்போது இரண்டாவது முறையாக உருவாகியது மகிழ்ச்சியே. எனினும் பிறக்கும் போதே செம்மொழியாகவே பிறந்த மொழி தமிழ் மொழி எனலாம். இதனை உறுதிப்படுத்துவதுதான் ஐந்திறம் தரும் தலையாய செய்தி எனத் தெரியவருகிறது. ஐந்திறம் இதைச் சொல்லியதால் ஐந்திறத்தின் எடை மிகுவதாயிற்று என்க.

பிராளயத்துக்கு முன்



Pre historic lumerian continent

பிராளயத்துக்குப் பின்



Today's Indian Sub Continent

மாயன் நாடாகிய மெக்ஸிகோ நான் சென்றிருந்த போது கிடைத்திட்ட அந்த நாட்டு மியூசித்திலிருந்து பெற்று வந்தேன்.

இப்படி எல்லாம் பேசுவதற்கு உங்களிடம் என்ன மேல்நிலை ஆதாரம் இருக்கிறது என்பதை நீங்கள் கேட்க இருப்பதை என்னால் யூகிக்க முடிகிறது. என்னைப் பற்றி, எனக்கு இந்தக் கலை வாழ்கையில் ஏற்பட்ட தகுதிகள் பற்றித் தொடக்கத்தில் கூறினேன். அவையெல்லாம் உண்மையாயினும், பிறிதொரு ஆதாரம், என்னைப் பொருத்தவரையில், என் மரபைப் பொருத்தவரையில், எனக்கு உண்டு என்பது பல பேருக்குத் தெரியாது. காரணம், அன்றும் இன்றும் இந்தக் கலை மரபில் தோன்றிய நாங்கள் சிறுபான்மையினராகவே இருந்து விட்டதாகும். இந்த

நிலையில், ஒரு வரலாற்று உண்மையை உங்களுக்குச் சொல்ல வேண்டும் என்பது எனது விருப்பம். எனினும், இச்செய்தியை பல மேடைகளில் பேசியும் இருக்கிறேன். இதில் ஆச்சரியம் யாதெனில், எவரும் மறுத்துக் கூற முன்வர வில்லை. எனக்குத் தெரிந்த வரையில் என் கலை மரபு காட்டிய முறையில் இந்த வரலாற்றை உங்கள் திருமுன்பில் மேல் ஆய்வுக்காக வைக்கிறேன்.

முன்னோரு காலத்தில் கன்னியாகுமரிக்குத் தெற்கில் அகண்டதொரு நிலப்பரப்பு இருந்தது என்பதை இக்காலத்தில் யாவரும் அறிவர். இக்காலத்து மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களும், ரஷ்ய நாட்டு கடல் ஆராய்ச்சி(oceanic exploration) ஆய்வர்களும் பல நூல்கள் வாயிலாக இந்த நிலையை வெளிப் படுத்தியிருக்கிறார்கள். அதாவது, 30,000 ஆண்டுகளுக்கு முன்பாக [இன்னும் அதிகமாகச் சொல்வதும் உண்டு] இந்த நிலப்பரபின் மீது பனிக்கட்டி மூடியிருந்ததாகவும், இந்தப் பனிக்கட்டிமூடமாக இருந்த காலக்கட்டத்தில் உருகி, எட்டுத் திசைகளிலும் பரவி, கடலாக மாற்றம் கொண்டு, பிறகு அந்தக் கடல் நீர் சிறிது சிறதாக வற்றி, முதன் முதல் நிலப்பகுதியொன்று இந்த இடத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும் என்று விஞ்ஞான ரீதியாக பேசுகிறார்கள். இந்த முதல் நிலப்பகுதிக்குத்தான் மேலை நாட்டினர் லுமேரியன் காண்டினட் (lumarian continent) என்றும், தென்னாட்டுத் தமிழ்ப் பெருமக்கள் குமரிக் கண்டம் என்றும், குமரி மாநிலம் என்றும் சொல்லி வந்தனர். இதற்கு முன், ஒரு காலக்கட்டத்தில் நாவலந்தீவு என்றும் சொன்னார்கள். இந்த நிலத்தில் தான் மாந்தர் இனமே முதலில் தோன்றியிருக்கக் கூடும் என்று சொல்லுவோரும் உண்டு. அந்த மாநிலம் குமரிக் கண்டத்திற்கு முன்பாக பரதக் கண்டம் என்று சொல்லப்பட்டதாக நமது நாட்டு ஆகம வழிபாட்டு நெறி வழியாகத் தெரிவதாயிற்று. இந்த மாநிலத்தில் தான் தமிழ் பிறந்தது என்றும், தமிழ் மக்கள் தோன்றினார்கள் என்றும், எனவே அவர்கள் மூத்த குடியினர் என்றும் பேசி, இதனைச் சுருக்கி கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்த குடி தமிழர் என்று சொல்லப்படுவதாயிற்று. அதுமட்டுமல்ல இங்ஙனம் சொல்லும் போது வாளொடு தோன்றிய மூத்தகுடி என்று சேர்த்துச் சொல்வோரும் உண்டு. இஃது உண்மையானால் [நான் உண்மை என நம்புகிறேன்] அந்த வாளைச் செய்தவன் ஒரு பெரும் கம்மியன் அல்லது ஒரு கருமானாக - சிற்பியாக - இருத்தல் வேண்டும் என்று இன்றும் பேசுபவர் உண்டு. இதில் என்ன

தொனிக்கிறது? தமிழகச் சிற்பக்கலை மரபினர் என்றாலும், குமரிக்கண்டத்தில் தோன்றிய தொல் இனம் தமிழினம் என்றாலும் சிற்பியரும் உடன் தோன்றியோர் ஆவர் என்பது பளிச்சிடுகிறது. இந்த மண்ணிலே தான் நாகரிக வாழ்க்கையும் தோன்றியிருக்க வேண்டும் என்பதும் நமக்கு ஓர் உபரித் தேற்றமாக கிடைக்கிறது. இந்த நிலையில் தொல்பழங்குடியினர் யார் என்பதை கீழ்கண்ட சம்ஸ்கிருத சுலோகம் அதாவது கோயில் பூசைக்கு முன் சொல்லிவரும் சங்கல்பம் நமக்கு தெரிவிக்கிறது எனில் மிகையல்ல. அந்தக் காலத்து ஆகமப் பிரவீனர் முதல், இன்று திருக்கோயில்களில் பணியாற்றும் சிவாச்சாரியர்கள் வரை, அடுத்துச் சொல்லிய சங்கல்பம் அல்லது உறுதி மொழி அஃது ஆகும். இந்த உறுதி மொழியில் தான் பரதக் கண்டம் என்ற சொல் கையாளப்பட்டு இன்றும் நமது தொல்மரபை, நமது தொல் வரலாற்றை காப்பாற்றி விட்டார்கள் என்று சொன்னால் அம்மக்களை முதலில் வணங்கிய பிறகே கோயிலில் குடியிருக்கும் இறைவனை தொழுதல் வேண்டும் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது. பரதவர் வாழ்ந்த இடமாதலால் பரதக் கண்டம் எனப் பெயராயிற்று. இதற்கு முன் நாவல்மரக் காடுகள் அங்கிருந்த செய்தியும் அதற்கு நாவலந்தீவு என்ற பெயரும் [இதற்கு ஜம்பூத்வீபம் என்ற சம்ஸ்கிருதப் பெயரும் உண்டு] இந்தச் செய்தியில் வெளிப்படுகிறது. அந்த சங்கல்பம் பின்வருமாறு.

"अद्य ब्रह्मण: श्वेतवराह कल्पे वैवस्वत मन्वन्तरे, अष्टा विंशति तमे कलियुगे प्रथमो पादे ......
जम्बूद्वीपे भारत वर्षे भरत: कण्ठे मेरो: दक्षिणदिक् भागे ।।" - சங்கல்பம்.

''அத்ய ப்ரம்மனஹ ஸ்வேத வராஹ கல்பே வைவஸ்வத மன்வந்தரே,
அஷ்டா விம்ஸதி தமே கலியுகே ப்ரதமோ பாதே..... ஜம்பூத்வீபே பாரத
வர்ஷே பரதஹ் கண்டே மேரோஹோ தக்ஷினதிக்பாகே''

"இயற்கையிலிருந்து சுயமாகத் தோன்றிய பிரம்மத்தினின்று, வெள்ளை
நிறப்பன்றிகள் வசித்து வந்த கல்பத்தில், வைவஸ்வத மனு என்பவர் வாழ்ந்த
காலத்தில், 28வது கால ஓட்டத்தில், கலியுகத்தின் முதற்பகுதியில் .....
ஜம்பூத்வீபம் என்ற தீவில், பாரதவர்ஷம், பரதக் கண்டம் என்ற நிலப்பகுதியில்
மேருமலைக்குத் தென் திசையில், தென் பகுதியில்" - சங்கல்பம்

இந்தப் பரதவர் என்ற இனமானது ஒரு காலக்கட்டத்தில் அங்கே தோன்றிய மக்கள் இனத்தை குறிப்பிடுகிறது. பரதவர் என்போர் இன்று நாம் சொல்லிவரும் மீனவர் என்போர் ஆவர். இவர்கள் வாழ்ந்த கண்டம் தான் பரதக் கண்டம் என்று சொல்லப்படுகிறது. இந்த பரதவர் தான் ஆதிக்காலத்தில் இந்த மாநிலத்தை ஆண்டவர்கள் என்பது இப்பொழுது எல்லோருக்கும் புலனாகி விட்டது. இந்த

மீனவர்கள் தான் பிற்காலத்தில் பாண்டியர்கள் எனப்பட்டனர். இந்த பாண்டியர் குலத்தை நினைப்பூட்டும் சின்னமாக தமது குலக் கொடியினை மீன் கொடியாக கொண்டனர் என்பதை வரலாறு நமக்கு காட்டுகிறது. ஆகையினால் தான் தமிழ் குடிமக்கள் என்போர் ஆதியில் மீனவர்களாக இருந்தனர் என்பது துலக்கமாகிறது அல்லவா?

உயிரினத்தில் முதலில் நமது கண்களுக்கு புலப்பட்டது மீன் வழிதான் எனவும், மீன் வடிவினதான இந்த உயிரினம் பிறகு மனித வடிவமாக உறுமாற்றம் கொண்டு விட்டது என்று இக்கால ஆய்வர்கள் கூறத் தொடங்கி விட்டனர். இதனை வலியுறுத்தி முன்னரே நமது வைணவ சமயிகள் பேசிவிட்டார்கள். இறைக் கொள்கையின் வளர்ச்சிப் படியினை சொல்லும் போது நீர் வாழும் மீனை முதல் அவதாரமாகச் சொல்லுவர் ஆயினர். இதற்கு மச்சாவதாரம்[மச்சம் = மீன்] என்பர். இதில் எவ்வளவு வரலாற்று உண்மை இருக்கிறது என்பதை நமது தசாவதாரக் கொள்கை குறிக்கிறது என்பதை வைணவ நூலிலே எழுதியும், மேடையில் பேசியும் வந்திருக்கிறார்கள். இதனை இத்தோடு நிறுத்தி விட்டு, குமரிக்கண்டம் என்று சொல்லக் கூடிய நேரத்தில் பரதக் கண்டம் என்ற சொல்லை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். இதன் மூலம் பிரபஞ்ச தோற்றமும், உயிர்களின் முதல் தோற்றமும் நமக்கு உறுதிபடுமல்லவா? இந்த மீனை தனது தலைமுடியில் ஒரு சின்னமாக, மெக்ஸிகோவில் பண்டைக் காலத்தில் வாழ்ந்த மாயர் என்போர் சூடினர் என்பதை இங்கே குறிப்பிடலாம்.



இதை உற்று நோக்கும் போது இன்று ஏசு நாதரின் பிறப்பை எல்லையாக வைத்து அவர் பிறக்கு முன்புள்ள காலத்தை கி.மு [கிருஸ்துவுக்கு முன்] என்றும், அவர் இறந்த பின் அக்காலத்தை கி.பி [கிறிஸ்துவுக்குப் பின்] என்றும் கூறும் ஒரு புதிய மரபு நம்மிடையே இன்றும் இருந்து வருகிறது. இது ஆங்கிலேயர் நம்மை ஆண்ட காலத்திலிருந்து இன்று வரை இருந்து வரும் கால எல்லைகளை காட்டும் காலக் கணக்காகும் என்க.

நான் முன் சொல்லிய நமது காலக்கணக்கை நாம் மாற்றிக் கொள்ள முற்படுவோமானால், நான் ஏற்கனவே சொல்லி வந்த முற்காலத்தை க.மு. [கடல் கோளுக்கு முன்] என்றும், அதன் பிறகு தோன்றிய குமரிக்கண்டக் காலத்தை [க.பி.] என்றும் சொல்வதே நமது நாட்டு வரலாற்றுக்கு ஒத்துப் போகும் என்பதை இங்கே கவனத்தில் கொள்ளுவோமாக. இத்தகைய கடல் கோள் (deluge) என்ற பிரளயங்கள் பெரும்பாலும் தென்னாட்டில் தான் அல்லது தென் ஆசிய கண்டத்தில்தான் நிகழ்ந்திருக்கிறது என்பதை இன்றும் ஆய்வர்கள் சொல்லிவருகிறார்கள். இந்தக் குமரிக்கண்டமானது நான் சொல்லி வந்த பிரளய காலத்தில் பல துண்டங்களாக வெடித்துச் சிதறி இன்று நாம் காணும் கண்டங் களாக மாறிவிட்டன அல்லது பிறழ்ந்து விட்டன என்று சொல்லுவார்கள். இதற்காக நீரியல் ஆய்வும், மண்ணியல் ஆய்வும் உலகப் பேரறிஞர்கள் இன்றும் செய்துவருகிறார்கள். நிற்க.

இந்த நேரத்தில் தான் தமிழ் மொழியும் சம்ஸ்கிருத மொழியும் தோன்றியிருக்க கூடும் என்று என் அறிவுக்கு எட்டிய வரையில் சொல்லிட விரும்புகிறேன். வாளோடு முன்தோன்றிய மூத்த குடியைச் சேர்ந்தவன் என்ற நினைப்பு என் மரபணுவில் நின்று விட்டது என்று சொல்ல விரும்புகிறேன். இத்தகைய தொல்மரபைச் சேர்ந்தவன் என்று நினைக்கும் போதெல்லாம் எனது மெய் சிலிர்க்கிறது. இதற்கு மேலுமொரு ருசுவும் உண்டு.

எனவே, என்னைப் பொறுத்தவரையில், என்மரபைப் பொறுத்தவரையில் நான் இந்த நாட்டு தொல் குடிமகன் என்ற நினைப்பு என்க்கு தோன்றித் தோன்றி அமிழ்கிறது. அவை அப்படி இருக்க, இந்த நேரத்தில் பிறிதொரு உண்மைச் செய்தியை துணிந்து சொல்லிட ஆசைப்படுகிறேன். தமிழ் மொழியும் சம்ஸ்கிருத மொழியும் உண்மையில் தொல் மொழிகள் என்று சொல்வது, அதற்காகபாடு பட்டது இக்காலத்தில் எனினும், இந்த இரண்டு மொழிகளும் செம்மொழி என்ற அந்தஸ்து

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்றுவிட்டது எனச் சொல்லிட ஆதாரம் உளது. இதனை மிகையென சொல்லிடவே தோன்றும். ஆனால் சம்ஸ்கிருதம் என்ற சொல்லை தமிழாக்கம் செய்திட்டால் (if literally translated), அது நான் முன்பு சொன்னது போல, செம்மொழி என்று பொருள்படும். இந்தச் சொல் தமிழுக்கும் பொருந்தும் என்று சொல்லும் பொழுது இந்தச் செம்மொழி என்ற சொல்லானது பண்டைக் காலத்திலேயே தமிழுக்கு வந்துவிட்டது என்று நான் காட்டி வரும் இந்த ஐந்திறம் செப்புகிறது.

''உள்ளும் புறமும் ஒருவழி நின்றே (அகவியல்/புறவியல்- Spiritual/material)
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே''

எனவே இரண்டு மொழிகளும் செம்மொழிகள் தான் என்று, நான் சொல்லி வரும் பிரளய காலத்திற்கு முன்பே ஆகிவிட்டன என்று சொல்ல விரும்புகிறேன். இப்படிச் சொல்வதே நானாகியத் தமிழ்க் குடிமகன் என்பதை ஏற்றருள்க. எனவேதான் குமரிக்கண்ட ஆய்வை UNESCO யூனஸ்கோ போன்ற உலக முக்கியதுவம் வாய்ந்த் நிறுவனம் மேற்கொண்டு விட்டால், உலக மாந்தர் அனைவரும் ஓரினத்தவர் என்றும், இதனைத்தான் திருமூலர் போன்ற பெரியோர்களும், வேத வியாசன் போன்ற அறிஞர்களும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற சொற்றொடரை அவர்தம் நூல்கள் வாயிலாக, நமக்கு அறியச் செய்திருக்கிறார்கள். நான் இதுவரை சொல்லி வந்த அத்தனையும் அனுமானப் பிரமாணம் என்று கொண்டால் அறியாமை என்ற பழிக்கு ஆளாவோம். நான் சொல்வதெல்லாம் உண்மைப் பிரமாணம் என்று தெரியுமானால் தேவையற்ற மொழிக் பிணக்குகள், இனப்பிணக்குகள் மாண்டொழியும் எனலாம். இத்தகைய கண்ணோட்டம் ஒவ்வொருவருக்கும் தேவை அன்றோ? இந்தக் கண்ணோடத்தில் இந்த ஐந்திறத்தையும், ஐந்திறத் தேற்றங்கள் நிறைந்த கலாச்சாரத்தையும் உற்று நோக்கின் ஒரு வரலாறு புதிதாகவே தோன்றிவிடும். இதைத்தான் திருமந்திரமணி துடிசைகிழார் சிதம்பரனார் அவர்கள் தமது மாணவப் பருவத்திலிருந்து சங்ககால வரலாற்றை உற்று நோக்கி உறுதிபட எழுதியதாக சொல்லியிருக்கிறார். நானும் எனது பள்ளிப் பருவத்திலிருந்து என் தந்தை யாரிடமும், எனது கல்லூரிப் பேராசிரியரிடமும் கேட்டுக் கேட்டு

தந்தையாரிடம் ஒருவகையான தெளிவும், எனது ஆசிரியப் பெருமக்களிடம் ஏமாற்றமும் அடைந்தேன். நான் பி.ஏ. படித்துக் கொண்டிருந்த காலத்தில் எனது சம்ஸ்கிருத ஆசிரியர் histroy of sanskrit literature என்ற தலைப்பில் பத்து வகுப்புகள் எடுத்துக் கொண்டார். இந்த வரலாற்றுக்கு ஆதாரமாக கீத் டுஹுடிஞுட எழுதிய நூலைவைத்துக் கொண்டிருந்ததால் கடைசி வகுப்பில் என் இருக்கையை விட்டு எழுந்து எனது சம்ஸ்கிருத ஆசிரியரை நோக்கி ஒரே யொரு கேள்வி கேட்டேன். அது யாதெனில், என்னுடைய வாஸ்து சாஸ்திரங்கள் எல்லாம் சம்ஸ்கிருதத்தில் இருக்கின்றன. அவையெல்லாம் technical treatises. இந்த நிலையில் என்னுடைய வாஸ்து சாஸ்திரமோ, வாஸ்து விஞ்ஞானமோ, ஆகமமோ, ஆகம நெறிமுறைகளோ ஏதும் இந்த சம்ஸ்கிருத வரலாற்றுப் பாடத்தில் வரவில்லையே, ஏன், என்று கேட்டேன். என்மீது பரிவு கொண்ட இந்த ஆசிரியர் விரைவில் வந்து விடும் என்று சொன்னார். அன்று இருக்கை விட்டு எழுந்த நான் இந்த கேள்விகளுக்கு விடையை தேடிக் கொண்டே இருக்கிறேன். திருப்தியான பதிலை எவரும் சொல்லவில்லை. எனது சம்ஸ்கிருத ஆசிரியர் இன்று [1-10-2004 நாளில் 85 வயதுள்ளவர்.} அண்ணாநகரில் ஆரோக்கியமுடன் மனைவி மக்கள் பேரன், பேத்திகளோடு வாழ்ந்து வருகிறார். இதைக் கேள்விப்பட்ட நான் ஒரு நாள் என் மனைவி யோடு புத்தாடைகள் வாங்கிக் கொண்டு சென்று அவர் காலில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து 1949 -ல் கேட்ட கேள்வியை [எனக்கு இப்பொழுது 1-10-2004 நாளில், வயது 78ல் அடியெடுத்து வைத்தநாள்] - அதே கேள்வியைக் கேட்டேன். இன்னும் வரலாற்றில் ஏறவில்லை என்று அவரே சொல்லக் கேட்டு விசனித்தேன். இனியாயிலும் வருமா என்று கேட்ட நேரத்தில், எனது மரபையும் எனது மரபின் சாதனைகளையும் மீள்பார்வை செய்த நேரத்தில் ஒரு பேருண்மையைப் புரிந்து கொண்டவன் ஆனேன். இதுதான் எனது முடிந்த முடிவு என்பேன். எனக்கு இரண்டு சம்ஸ்கிருதங்களும் தெரியும், புரியும்.

அதுயாதெனில், சம்ஸ்கிருத மொழியானது இலக்கிய சம்ஸ்கிருதம் (literary sanskrit) என்றும், அறிவியல் சம்ஸ்கிருதம் (technical sanskrit) என்றும் இரண்டாகப் பிரிந்து நிற்பதைக் கண்டேன். என்னிடம் உள்ள technical sanskrit யாரிடமும் இல்லை என்று அடித்துச் சொல்வதோடு, அதேபோல தமிழ் மரபில் technical Tamil என்னிடம் இருப்பதை உற்று நோக்கி literary Tamil, technical Tamil என்று பிறிதொரு அமைப்பு இருப்புதையும் கண்டு கொண்டேன். எனவே எனது முடிவு யாதெனில், இன்று வாழும் நமது மக்களிடம் இருந்து ஒதுங்கிய நிலையில் இந்த technical Sanskritம் technical

Tamil ம் இருப்பதைக் கண்டு கொண்டேன். இதனால் இலக்கியத்துறையில் மக்களுக்கு ஏற்பட்ட நாட்டம் அல்லது ஆய்வுணர்வு கலைத்துறையில் ஏற்படாமல் போயிற்று என்பதை தெளிவுற, அய்யமற மேலும் கண்டேன். இது தான் பாரதீய கலாச்சாரத்திற்கு ஏற்பட்டுவிட்ட அவல நிலைக்குக் காரணம் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகிறேன். அப்படி எனில் technical sanskrit, technical tamil ஆகியவை ஓர் அதிசிய – அறிவியலை உள்ளடக்கி வைத்துக் கொண்டிருக்கிறது என்ற ஆய்வு செய்யும் பொழுது தமிழக வாஸ்து நூல்கள் சொல்லும் விண்ணியல் மண்ணியல் என்ற cosmological science தெரிய வில்லை என்பதை முன் பக்கங்களில் தொடர்ந்து உறுதிபடுத்தி வந்தேன். அந்த நிலையில் ஐந்திறத்திற்கு உள்ளே என்ன இருக்கிறது என்ற கேள்வியை நானே கேட்டுக் கொண்டு பல உண்மைச் செய்திகளை உங்களுக்கு, எனது 78 வது வயதில் எழுதிவரும் புதியதொரு நூலில் மேலும் தொடர்ந்து சமர்ப்பிக்கிறேன்.

இதுவரை ஒளி,ஒலி ஆகியவற்றின் தோற்றம் பற்றியும், இத்தோற்றத்திற்கு காரணப் பொருளாகிய காலம் பற்றியும், இந்தக் காலமானது தோற்றிய மூலம் பற்றியும், இந்த மூலமானது காலத்துடிப்பை எங்ஙனம் தன் உணர்வால் சீலப்படுத்துகிறது என்பதைப்பற்றியும், அங்ஙனம் சீலப்படுத்திய ஒளியும் ஒலியும் – ஒளிப்பொருளாக வும்,ஒலிப்பொருளாகவும் மலர்ந்து, இயல்பில் ஐந்து வகைப்பட்டு விளங்குவதையும், அங்ஙனம் ஐந்து நிலைப்பட்ட (five fold stages of evolution) அரிய பொருள்கள் *யாவை என்பது பற்றியும், நமது உலகில் நாம் காணும் உயிர்ப்பொருள்கள் அனைத்தும் அத்தகைய ஐம்பொருள்களாக எப்படி உருவாகின்றன என்பதைப் பற்றியும், சுருக்கமாகச் சொன்னேன். மேலும், உலகத்தில் காணும் அத்தனைப் பொருள்களும் மூலத்தில் விண்பொருளாக(energy) இருந்து இறுதியில் மண்பொருளாக (matter) மாறிய பின்னர் திகழ்ந்திடும் விண்ணும், மண்ணும் அளவிட முடியா பெரும் பொருளாக (Cosmic form with immense dimensions) பிரம்மமாக எப்படித் திகழ்கிறது என்றும், அவற்றுக்கான கணக்கியலையும் ஓரளவு மேலெழுந்த வாரியாகச் சொன்னேன். விண் பிரம்மத்தை வஸ்துப் பிரம்மம் என்றும் மண் பிரம்மத்தை வாஸ்துப் பிரம்மம் என்றும், இன்றைய வழக்காற்றில் ஞானமுள்ள –

*ஐம்பெரும் பொருள்கள்: பஞ்சபூதங்கள், பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன்கள், ஐந்து ஒலிகள், ஐந்து வண்ணங்கள், முதலியன.

செயல் திறம் கொண்ட – ஸ்தபதிகள் சொல்லி வருவாராயினர்.

அடுத்து, ஒலியானது எங்ஙனம் ஐவகை ஒலி மூலங்களின் அதாவது அ, இ, உ, எ, ஒ ஆகியவற்றின் சேர்க்கையால் ஒலிப்பொருள்களும் மற்றும் புள்ளி, கோடு, வரி, வடிவு, உருவு என்ற ஒளி மூலங்களின் சேர்க்கையால் ஒளிப்பொருள்களும், இறுதியில் ஒளி ஒலி மூலங்களின் சேர்க்கையால் ஓங்குறும் எழுத்தாகவும், சொல்லாகவும், சொல் உணர்த்தும் பொருளாகவும் அவை அனைத்தும் ஒரு வகை கணக்கியலில் கட்டுண்டு இறுதியில் ஒவ்வொருவரின் சுவை உணர்வுக்கு (aesthetical experience) ஏற்ப ஒரு முழுவடிவம் பிறக்கிறது என்பதையும் தொட்டுக் காட்டியிருக்கிறேன். இதைச் சொல்லிக் காதால் கேட்கும் ஒலிப்பொருளின் இலக்கணத்தையும் அமைப்பியலாகிய எழுத்து, சொல்,பொருள், யாப்பு, அணி பற்றியும் உங்களுக்கு அறிவுறுத்தினேன். இப்போது அவற்றுக்கான ஐந்திறப் பாக்களை உற்று நோக்குங்கள்! புரிகிறதா என்று மனம் திறந்து சொல்லுங்கள். இப்போது நிச்சயமாகப் புரியும் என்பேன்.

"உயிரொலி தோன்றுமுன் மெய்யியல் தோன்றும்" – [ஐந்திறம் – 315]

"மெய்யியல் முயலல் இயல்நிலை கூட்டும்" – [ஐந்திறம் – 316]

"உயிரொலி எழுத்துரு வோங்கி நிற்றல்
உயிரொளித் திறனே உண்மை விளக்கும்" – [ஐந்திறம் – 317]

"உயிரொலியோசை உள்ளகத் தெழுங்கால்
செயிற்று முயற்சி மெய்யியலொலியே" – [ஐந்திறம் – 318]

"ஒலியுறும் திறனும் ஒளியுறும் உருவமும்
கலையுறக் காட்டல் எழுத்தியல் ஆக்கம்" – [ஐந்திறம் – 302]

"ஒலியுறும் ஓசை ஒளியுறும் மெய்நிலை
தெளிவுறக் காட்டும் சீர்பொரு ளாகி
அண்டமும் பிண்டமும் இயல்பெற நிறுத்தி
கண்டதோ ருண்மை கலைபெறக் காட்டி
தெற்றுற விளக்கும் சிற்பத் திறனே" – [ஐந்திறம் – 303]

"அகத்துறு முணர்வே அகத்துறு மொளியாய்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும்" – [ஐந்திறம் – 306]

"ஒலியில் உருவம் ஒலியில் ஓசை
தெளிநிலை யாற்றல் களிகலை நுட்பம்" – [ஐந்திறம் – 307]

"ஒலியின் மூலம் ஒளிநெறித் திறனாய்
ஒளிநிலை யாற்றல் ஒளிக்கலை யியலல்
உயிர்மொழித் திறனாய் மெய்ம்மொழி யேற்றல்
உயிர்மெய் யாக்கம் உய்த்துணர் நெறியே" – [ஐந்திறம் – 314]

"அகவின் ணொளியே அறிகலை மூலம்" – [ஐந்திறம் – 194]

"அகமறி யாதார் புறமறி யாரே" – [ஐந்திறம் – 195]

முதலில், எழுத்துத் தோன்றுவதற்கு ஒலி அணுக்களின் சேர்க்கை காரணம் என்று ஏற்கனவே சொல்லியதை நினைப்பூட்டி, அந்த அணுக்களின் சேர்க்கையினால் குறில், நெடில் எழுத்துக்கள் தோன்றுவதையும் ஐந்திறத்தில் காணலாம்.

காதுவழி நுழைந்த ஒலி, காதுக்குள் சென்றவுடன் உணர்வைத் தொட்டு ஒளிமயப் பொருளாக தெரிநிலை அடைகிறது என்பதை நமது தமிழ் இலக்கணமும் சொல்லுவதை இடையிடையே சொன்னால் உங்களுக்கு தெளிவு ஏற்படும் என்று அதையும் சொன்னேன். மேலும், மெய் எழுத்து, உயிர் எழுத்து என்ற பாகுபாடுகளை வைத்திருக்கும் நிலையில், அவை இரண்டும் சேர்வதினால் எழுத்தே ஓவியம் எனப்படுவதையும், அதாவது **எழுத்தெல்லாம் ஓவியமே** என்ற தேற்றத்தால் முற்காலத்தில் மயத்தமிழ் எனப்பட்ட இன்றைய தமிழ் **"அறிவியல் தமிழ்"** எனப்படுவதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். **உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே** என்ற தேற்றத்தில்* உயிர் எழுத்தும், மெய் எழுத்தும் ஒன்று சேர்வதால் கண்ணால் பார்த்தறியக் கூடிய எழுத்து உருவாவதைச் சொன்னேன். இக்கூற்றினால் ஓவியம் மற்றும் சிற்பங்கள் தோன்றும் இயல்பையும் காட்டினேன். இங்கே உடம்பு என்ற சொல்லால் மெய்ப் பொருளையும், உயிர் என்ற சொல்லால் ஒலிப் பொருளையும் கருத்தில் கொண்டால், மெய்யொளியும் உயிரொலியும் ஒன்று சேர்வதால் உயிர்மெய் எழுத்தாகும் நிலை ஏற்பட்டு கண்களுக்குத் தெரிந்திடும் எழுத்துருவமாக, அதுவும் ஒரு வகையில் சிற்பமாக மாறும் ஒரு புதுப் பொருளை, ஏற்கனவே சொல்லியதை இங்கே மீண்டும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

★ "மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே" – [ஐந்திறம் – 166]

இவையெல்லாம் ஓம் என்ற மூல ஒலியிருந்து பெறப்படும் மூல எழுத்துக்கள் அ, இ, உ, எ, ஒ என்றும் சொன்னேன். இவையே பஞ்சாக்ஷரங்கள் என்றும் சொல்லப்படும். இவற்றின் நெடில்களாகிய ஆ,ஈ,ஊ,ஏ,ஓ என்ற மேலும் வரும் ஐந்தோடு ஐ, ஔ சேர மொத்தம் உயிர் எழுத்துக்கள் 12 என்பது தமிழுலகம் நன்கறிந்ததே. இவற்றோடு மெய்எழுத்துக்கள் 18ஐயும் சேர்த்து 30 என்றும், ஆய்த எழுத்தாகிய ஃ சேரின் 31 எழுத்து என முடிவு செய்த நிலையில் [ஐந்திறம்] ஐந்திறமானது முதற்சங்ககாலத்தில் இத்தகைய மாற்றத்தைக் கொண்டு வந்தது என்று திருமந்திரமணி என்ற துரிசைக்கிளார் தமது சங்ககால வரலாறு என்ற ஒப்பற்ற ஆய்வு நூலில் குறிப்பிடுகிறார். இதற்கு முன்பு 51 அக்ஷரங்கள் தமிழக்கு இருந்தன என்றும் இவற்றைக் குறைத்து செந்தமிழ் மொழியாகக் கொண்டுவந்த சிறப்பு இந்திரனைச் சாரும் என்று சொல்லுகிறார். சிற்பியராகிய நாங்கள் இந்திரனை ஐந்திறன் என்று கண்டு இவனே மயன் எனப்பட்டவன் என்று பன்னெடுங்காலத்திற்கு முன்னரே உறுதி செய்திருந்தோம் என்க. வடலூர் ராமலிங்கனார் ஐந்திரம் என்பதை வல்லினம் சேர்த்து ஐந்திறம் என்றும், மயனை மயன் என்றும் உண்மை அறிந்து, தமது அருட்பெருஞ் ஜோதி அகவலில் குறிப்பிடுகிறார். ஐந்திறத்தையும் அவர் கைவசம் வைத்திருந்தார் என்பது அவர் திருவருட்பா மூலம் வெளிப்பட்டுவிட்டது. இதிலிருந்து தமிழும், சம்ஸ்கிருதமும் [பழைய யெர் கிரந்தம், பிராகிருதம் எனப்படும்] ஒரே காலத்தில் தோன்றிய இரட்டை மொழிகள் எனப்படுவதாயின. இரண்டு மொழிகளும் சங்ககால மொழிகள் என்பது உறுதிப்படுகின்றன.

இந்த ஓம் ஒலி, ஓம் ஒளி என்ற இரட்டை ஓம்களைப்பற்றி இன்னும் கொஞ்சம் விரித்துச் சொன்னால் கண்ணால் இன்று நாம் பார்த்துவரும் ஐங்கரத்தனாகிய கணபதியின் திருவுருவும் மற்றும் அர்த்த நாரீஸ்வரர் திருவுருவும் உங்கள் உள்ளத்தில் நிழலாடும் என்று நம்புகிறேன். ஐந்து செயல்களை ஐங்கரங்கள் வழியாகவும், அர்த்த நாரீஸ்வரர் உருவத்தை - ஆண் பெண் தத்துவத்தை சமச்சீராக்கி- சொல்லும் பொருளுமாகக் கொண்டு - அதாவது உயிர்ப்புள்ள தெரிவடிவமாகச் சொல்லப் பட்டிருப்பதையும் கொள்ளலாம். [இவ்விரு உருவங்களையும் எழுத்துக்கள் என்று இப்போது சொல்லலாமா? சிற்பியாகிய நான் இப்படித்தான் உணருகிறேன். வாசகர் சிந்தியுங்கள்.] விளக்கத்தை பிறிதொரு இடத்தில் காட்டுவேன். [காண்க: ஸ்தபதியின் சிற்பச் செந்நூல்] இக்கருத்தில், இத்தகைய உருவங்கள், சிற்பக்கலையில் தமிழ் மரபில் இயற்றப்படுகின்றன என்பதையும் இவை இயற்கையே பெற்றெடுத்த

தெய்வீகவடிவங்கள் என்று சொல்லி உண்மையில் விஞ்ஞானமய உருவத்தைத்தான் கடவுள் உருவமென நாம் போற்றி வருகிறோம் என்பதையும் நிறுவினேன். இதனைப் போற்றுவதோடு போற்றுதலின் வெளிப்பாடாக பூசைகளையும் செய்து வருகிறோம் என்றேன். எளிய, ஆனால் அறிவியல் சார்ந்த பூசை நெறிகளை ஆகமம் வெளியிட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டேன். இந்த உண்மை தெரிந்தால் மனக் குழப்பங்களுக்கும், இனவேறு பாடுகளுக்கும், பிறகு இவை சார்ந்த பிணக்குகளுக்கும் இடமே இராது என்றும் வலியுறுத்தினேன். நிற்க.

மேலும், ஒவ்வொரு எழுத்துக்களின் சேர்க்கையால் எழுச்சி கொண்ட சொல் வடிவங்களை நாம் தெய்வங்களாக கொண்டுள்ளோம் என்றால் நமது கலை வரலாறு கொண்டுள்ள ஏற்றத்தை நன்கு உணர்வீர்கள் என்று நம்புகிறேன். இதைத்தான் சுருக்கமாக, நமது நாட்டுக் கலையை ஆன்மிகம் சார்ந்த நுண்கலை (spiritual art or spirit centric art) என்று சொல்லி வருகிறோம். இதனை விண்கலை என்று சொல்வதே பொருத்தமுடையது என்பது எனக்கு அனுபவம் ஆயிற்று. இந்த விண்ணானது நமது அகத்துக்குள் இருப்பதால், ஒரு கலைஞனின் உள்ளத்தில் அதாவது அகவிண்ணில் தோன்றிய காட்சியே கடவுள் என்ற பெயரை பெறுவதாயிற்று என்று சொன்னேன். அகக்காட்சியே புறக்காட்சியாகக் கொண்ட நுட்பத்தையும் விளக்கினேன்.* அவற்றைப் படிமங்கள் (replicated form) என்றேன். அதற்கான சாத்திரக் கோட்பாடுகளையும் தெரிவிதேன் शिल्पात् प्रतिमा: जायन्ते என்றும் சொன்னேன். இதற்கு அடிப்படையான துடிப்புக் கணக்கையும் தொட்டுக் காட்டினேன்.

ஏற்கனவே, கண்ணால் பார்த்தறியும் ஓர் உருவமானது திடீரென்று வெளிப்படாமல் அகத்திலேயும் புறத்திலேயும் ஒரு புள்ளியில் பிறந்து அப்புள்ளிகள் கோடுகளைத் தோற்றுவித்து, அவை வரி எனப்பட்டு, இவையெல்லாம் மூலத்திலிருந்து வடிந்ததால் வடிவெனப்பட்டு, இவை நான்கும் சேர்ந்து ஐந்தாவது பொருளாகிய உருவு தோற்றம் கொள்கிறது என்பதையும் சொன்னேன். இங்ஙனம் கண்ணால் பார்த்தறியும் தோற்றம் நீடு நிலைத்திருக்கும் தோற்றம் என்றும் இதுவே பிரம்மத்தின் சொரூபம் அல்லது பேரான்மஸ்வரூபம் என்றும் சொன்னேன்.

---

* அகத்துறு முணர்வே அகத்துறு மொளியால்
புறத்துறும் உருவம் நிலைபெறக் கூட்டும் – ஐந்திறம் 306

இதனைத்தான் கோவில் கருவறையில் மூலவடிவமாகக் (presiding deity) கொண்டிருக்கும் மரபுசார் விதியைச் சுட்டிக் காட்டினேன்.

இத்தகைய பிரம்ம சொரூபத்திற்கு மயத்தமிழ் கொடுக்கும் சொல் **தானியல்** வடிவு என்று சொன்னேன். இதை ஆங்கிலத்தில் self manifest form என்று சொல்லிக் காட்டினேன். மேடைகளில் மேலும் விளக்கி வருகிறேன். இந்தத் தோற்றத்தின் படிமுறையை ஒட்டி எழுத்து, சொல், பொருள், கட்டு, [யாப்பு] அணி என்ற ஐந்து ஒலி நிலைகள் ஓர் சொல்மய உருவத்தைக் கட்டுவதற்கு அடிப்படையான ஐங்கூறுகள் என்று கண்டு தேர்ந்து இங்ஙனம் ஐங்கூறுகளை கொண்ட சொல்லால் ஆன உருவத்தை சொல்லோவியம் என்று சொன்னேன். **எழுத்தெல்லாம் ஓவியமே** என்ற மயக் கூற்றுக்கு ஏற்ப இப்பொழுது மேற்சொன்ன ஐந்து கூறுகளும் சேர்ந்து ரசிக்கத் தகுந்த சூத்திரமாக, ஒரு ஓவியமாக, ஒரு சொற் சிற்பமாக மிளிர்வதை உற்று நோக்கி ரசியுங்கள். ரசனையே இறுதிப்பொருள் என்றும் அதுவே மூலப்பொருளின் குணம் என்றும் மேலுமொரு விளக்கம் சொன்னேன். சுவையும், அவனே, சுவைஞனும் அவனே என்ற கருத்தை முன்வைத்தேன். கீழ்கண்ட மயத்தமிழ் பாடலை இப்பொழுது உற்று நோக்குங்கள். இதுவே ஆதாரச்சுருதி என்க.

அணுத்திரள் ஒலியே எழுத்தொலிச் சிறப்பாம்
வானியல் ஒலியே ஓசை மொழியாய்த்
தானியல் வடிவுறுங் குறியெழுத் தென்ப
குறிகுறி யீடே வரைவென வாகி
அறிநிலை எழுதலின் எழுத்தெனப் படுமே
ஒலியியல் வரிவியல் வடிவியல் உருவியல்
ஒளியியல் ஐந்தாய் உரைக்கப் படுமே
எழுத்தே சொல்லே பொருள்கட் டணியென
வழுத்து மைந்தியல் முறைநெறி வழக்கே
ஐந்தியல் மொழியாய் எண்ணிலை யெழுத்தாய்
வந்ததொல் மரபே முந்துசெந் தமிழாம் – ஐந்திறம் [5–10]

தமிழகச் சிற்பகலை மரபில் சிற்பியர் செய்து கொடுக்கும் சிற்பங்களை தெய்வ வடிவங்களாக ஏற்று வழிபடும் மரபு இன்னும் 30.10.2004 வரை[முதல் சங்க காலத்திலிருந்து இன்று வரை] சிற்பிகளிடமே இருந்து வருவதை உற்றறிந்து உண்மை தெரிந்திடல் வேண்டுகிறேன். இதைச் சொல்லும் பொழுது கல்லால் ஆன உருவம் மட்டுமல்லாமல் சொல்லால் ஆன உருவங்களும் அதாவது மரபுக் கவிதைகளும் வழிபடு பொருள்களே ஆகும் என்பது தெளிவுறும் என்று நம்புகிறேன்.

இத்தகைய நிலையில் சொல்லாக்கம் எப்படி இருக்க வேண்டும் என்பதை **"கிளவியாக்கம் மெய்ப் பொருள் குறித்தே"** என்ற மயத்தேற்றத்தை இங்கே தருகிறேன். [மெய்பொருள் – material மற்றும் spiritual substance என்று கொள்க].

உலகில் பிறந்து, இறைப் படைப்புகளில் காணப்படும் பல்வேறு குணச்சித்திரங்களைத் கண்டு ரசித்து, சுவையெல்லாம் காலக்கணக்கிற்கு ஒத்தும் மேம்பட்டும் நிற்கும் மரபின் இயல்புகளாகக் கண்டு தேர்ந்து, தன்னைத் தானே ரசித்திடும் உணர்வு பெற்ற நிலையில் அழகியல் தோன்றுவதை உற்றுணர்ந்தவனே மயன் மரபினன் என்று இளங்கோ போன்ற கவிஞர்கள் சொல்லிய விளக்கங்களையும் ஒட்டிவைத்து வள்ளுவனும் ஔவையும் கூறிய பொய்யா மொழிகளையும் ஆய்வுக்குட் படுத்தித் தேர்ந்த நிலை தமிழக சிற்பக்கலை மரபில் மிளிர்வதை வழி வழி வந்த சிற்பியர் பணிகளில் கண்டு துய்த்ததை கீழ்வரும் கவிஞர் கூற்றுக்களில் காண்க. ஐந்திறம் தோன்றிய தொல்பழங்காலத்திலேயே தமிழ் மொழியானது செவ்வியல் செம்மொழி எனப் பேசிட மூலத்தின் எண் கணக்கே அடிப்படை என்பதையும் உற்றுணர்க.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு – ஐயன் திருவள்ளுவர்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் – ஔவையார்

செம்மொழி என்பதைப் போல் சிற்பக் கலையை செம்மைக்கலை என்றும் அருட்கலை என்றும் கூறலாமல்லவா. இதைத்தான் செவ்வியல் என்றும் ஐந்தியல் என்றும் மயன் கூறுகிறான். இவை அகத்திலும் புறத்திலும் ஒன்றாகச் செல்வதை **"உள்ளும் புறமும் ஒருவழி நின்றே தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்"** என்ற கருத்து சொல்லோ வியத்துக்கு மட்டுமில்லாமல் கல்லோவியத்துக்கும் பொருந்தும் என்றேன். அவனே காவியத்தில் ஓவியமும், ஓவியத்தில் காவியமும் என்று கூறி ஓவியக்காவியம் என்றும் காவியஓவியம் என்றும் சொல்லி இரண்டையும் ஒருங்கிணைத்து சொல்லோவியத்தில் கல்லோவியத்தையும் கல்லோவியத்தில் சொல்லோவியத்தையும் ஒன்றித்து இதனை மயன் விதித்துக் கொடுத்தான் என்பதை சிலப்பதிகாரத்தில் **"நுண்வினைக் கம்மியர் காணா மரபின மயன் விதித்துக் கொடுத்த மரபின இவை தாம்"** என்றான்.

மூலமே சுவையாகவும் சுவைப் பொருளாகவும் இருப்பதை **"என்னுவே சிற்பம் உண்டு, சிற்பமுள் நானும் உண்டு"** என்று மயன் உயர்த்திக் காட்டிய நுட்பத்தையும் உற்றுணர்ந்து, இவையே வாஸ்து சிற்ப சாஸ்திரக் கோட்பாடு என்றும் அணியியல் என்றும் உற்றறியலாம்.

இந்த மயன் தந்த மயமதம், மானசாரச் செய்திகளை என்னிடம் பாடம் கேட்டு அனுபவித்த ஓர் அமெரிக்கக் கட்டிடக் கலைஞர் வாஸ்து விஞ்ஞானத்தை **"Physics of love"** என்று சொன்ன செய்தி என்னை மெய்சிலிர்க்கச் செய்தது என்று இங்கே பதிவு செய்து வைக்கிறேன். ஐங்கலை – ஐந்தமிழ் – ஆர்வலர்கள் மேல் ஆய்வு செய்ய வேண்டுகிறேன்.

இந்த நிலையில் சிற்பியர்களை **"கவிக் கலைஞர்"**என்றான் மயன். தன்னையும் அங்ஙனமே பெருமையோடு அழைத்து கொண்டான். ஒரு குறை யாதெனில், காலம் காலமாய் கல்லோவியம் நிலைத்து நின்றுவிடுகிறது. ஆனால் சொல் ஆனது வெளிப்பட்ட நிலையில் மறைந்து விடுகிறது. எனினும் காவியங்கள் எழுத்துரு பெற்று நிலைக்காமல் இல்லை என்றாலும், மொழி தெரியாதவர்க்கும் கல்லோவியம் சுவை ஊட்டி விடுகிறதைச் சொல்லாமல், போற்றாமல் இருக்க முடியாது அல்லவா? இதனால் **"அயன் படைப்பு மாறும்"** என்றும் ஆனால் **"மாறாதே மயன் படைப்பு"** என்றும் சொல்லிவைத்தான். இக்கருத்து aesthetics in sculpture என்ற ஆய்வுத் தலைப்புக்கு ஒத்துப்போகும். இதனை மரபுக் கலையின் செவ்வியல் மற்றும் செம்மொழித் தன்மை என்று உறுதிபடச் சொல்லிட வேண்டும்.

ஐந்திறம் என்ற இந்த நூல் ஒரு பெருங்கடல். உங்களைத் தொட்டு கை பிடித்து அழைத்து வந்து, இக்கடலைக் காட்டினேன். இக்கடலில் மூழ்கி முத்தெடுக்கும் பொறுப்பு உங்களுடையதே. இவை போதாதா, **ஐந்திற நூல் காட்டும் விண் – மண் ஞானத்தைத்** தெரிந்து போற்றிட? இதைப் புரிந்து கொண்ட பேராசிரியர் ஏசி.பர்னல் என்ற பிரஞ்சு மொழி ஆய்வாளர் ஐந்திற வியாகரணமே அனைத்து மொழிகளுக்கும் மூலமாய் வாய்த்திட்ட இலக்கணம் என்று அறுதியிட்டு உறுதிபடக் கூறினார். இவர் ஆராய்ச்சி செய்த இடமே **தஞ்சை சரஸ்வதி மகால் நூல் நிலையமே** என்று அந்தப் பேராசிரியரே [1986] சொல்லும் போது, எத்தகைய உண்மைகள் மறைந்தும் மறந்தும் போயின! **ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்** என்று பரம்பாரனார் சுட்டிக் காட்டிய பாயிர வாக்கியமும் இப்போது மெய்யாகிறது. [காண்க : தனி ஆய்வு நூல்]

வடலூர் இராமலிங்க வள்ளல் பெருமான் ஐந்திரம் என்றல்ல ஐந்திறம் என்றும், மயன் என்றும் இந்தத் தோற்றுவாயை அந்தத் தனி நூலில் அவர் கைப்பட எழுதிய சொற்களும் [ஐந்திறம், மயன்] வருவதையும் பார்த்திடுக. சம்ஸ்கிருதமும் தமிழும் ஆங்கிலமும் எனக்குத் தெரிந்திருக்கும் நிலையில், தமிழ்க் கலை நூல்களும் (technical Tamil treatises) சம்ஸ்கிருதக் கலை நூல்களும் (technical Sanskrit treatises) களும் 10 பத்தாயிரம் ஆண்டுகளாக ஒதுங்கி, ஒடுங்கி விட்டன என்று சொல்லத் தோன்றுகிறது. Literary Tamil, Literary Sanskrit மட்டுமே உலகளாவிப் பரந்து விட்டன; ஆனால், இந்த Scientific treatisesகளில் உள்ள விஞ்ஞானச் செய்திகள் புரியாமல் ஒதுக்குண்டு போயின என்பேன். இந்தக் கதி தான் மணிமேகலை கூறும் ஓவியச் செந்நூலுக்கும் ஏற்பட்டு விட்டதை உற்றுணர்க. உன்னதத் தமிழ் மரபுக்கு இஃதொரு பேரிழப்பல்லவா? வேதமானது technical sanskrit ஆக இருந்தும், அவை புரியாத நிலையில் வேதாந்தமெனப்படும் உபநிஷதங்கள் தோன்றியிருக்க வேண்டும் மென்று, - உறுதியான- தெளிவான செய்திகளைத் தரவில்லை யாதலாலும், இந்த ஐந்திறம் என்ற மூலநூல் மற்றும் வாஸ்து நூல் - விண்ஞான / மண்ஞானங்கள் (Science of energy and science of matter) (material energy) புரிந்து கொள்ள முடியா ஒடுக்க நிலை எய்திக்கிடக்கலாயின என்று முடிவாகச் சொல்லுகிறேன். இதனை ஆதாரமாக வைத்துத் தமிழ் மொழியை செவ்வியல் செம்மொழி என்று உறுதி செய்திட முடியும் என்றும் இத்தகைய நிலை தமிழுக்கு 10 ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே கிடைத்து விட்டது என்பதை அடுத்துக் கூறிய பாக்கள் மூலம் அறிக. கூறியது கூறல் என்ற பழியை என்மீது சுமத்தமாட்டீர்கள் என்று நம்பியே மீண்டும் அந்தப் பொன்னான கூற்றுக்களைச் சமர்ப்பிக்கிறேன்.

உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே

– ஐந்திறம் 207

இதுமட்டுமல்ல மயனைப் பற்றி அவர்தம் சீடர்கள் வைசம்பாயணம் என்ற அவனது சாதனைகள் கூறும் வரலாற்று நூலில் இந்த ஐந்திறச் செய்திகள் பல காலம்

மறைந்து கிடந்து மீண்டும் ஒரு காலத்தில் வெளிப்படும் என்று சொல்லி, அத்தகைய நேரத்தை பொற்காலம் என்றும் கூறுகிறது. இந்த விடியல் 21வது நூற்றாண்டில் பாரத அரசால் உறுதிபெற்றுவிட்டது என்று உவகை பொங்கச் சொல்லி முடிக்கிறேன். இதற்குக் காரணங்களாக – பலதியாகங்கள் செய்த தமிழறிஞர்களுக்கு எனது போற்றுதலையும், வணக்கத்தையும், நன்றியையும் புலப்படுத்திக் கொள்கிறேன்.

அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத் திறன்விளங்கும்
பொற்புதம் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே

வைசம்பாயணம் – [1212]

"ஆரியம் கண்டாய் தமிழ் கண்டாய்
ஆரியமும் தமிழும் ஆனாய் கண்டாய்
ஆரியம் தமிழோடிசையானவன் கண்டாய்"

என்ற நாவுக்கரசரின் உணர்ச்சிபூர்வமான – உண்மைச் செய்தியைப் படித்து தமிழர்தம் விரிந்த உளப்பாங்கை கேட்டறியும் போது நமக்கெல்லாம் மெய்சிலிர்க்க வைக்கிறதல்லவா?

இந்த நிலையில் சங்ககாலப் பூங்குன்றனார் முழங்கிய "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இறுதிப் பெரியவாக்கியம் இன்று தமிழர்தம் உளப்பாங்கினை பறை சாற்றுகின்றன!

இதையும் படியுங்கள்

பிரணவம் காட்டிய கணக்கியல்

"காலமும் இடமும் ஒன்றே"

**"மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம்
என்ற ஐந்து இயல்புடையது பரம் பொருள்"**

இதுவரை பிரணவ வேதம் பற்றிய வரலாற்றுச் செய்திகளையும் இதுவரை கேட்டிராத அபூர்வமான அறிவியல் செய்திகளையும், தொல் வரலாற்று எச்சங்களையும் ஒரு பின்னணிச் செய்தியாகச் சொல்லி வைத்தேன். இனி, இந்தப் பிரணவ வேதத்திற்குள் அடங்கிக் கிடக்கும் விஞ்ஞானச் செய்திகளையும் பரம்பொருளே விஞ்ஞானமாய் இருப்பதையும் சுருக்கமாகச் சொல்ல முனைகிறேன். இந்த விஞ்ஞானமானது இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐந்து கலைத்துறைகளில் ஏதாவது ஒன்றில் மேதையாய் விளங்கு வோர்க்குப் புரிந்திடும். காரணம், பரம்பொருள் கலைஞனாகவும் கவிஞனாகவும் இருக்கிறான். இவனைக் கலைக் கவிஞன் என்று பிரணவம் கொண்டுளது.

சுவையும் இவனே, சுவைஞனும் இவனே என்று இதனை சுருக்கிச் சொல்வது நமது மரபு. விண்பொருளே மண்பொருளாகத் திரிபுறும் விஞ்ஞான நிகழ்வைச் சித்தரிக்கும் உரை நூலாக விளங்குவது இந்தப் பிரணவ வேதமே. எனவே, ஐந்திறமும் பிரணவ வேதமும் ஒன்றே. முன்னையது சூத்திரம், பின்னையது விளக்கவுரை எனலாம். பத்தாயிரம் விஞ்ஞானப் பாடல்களை கொண்டது பிரணவம். இதில் உள்ள அறிவியல் பாக்களை எந்த ஒரு மொழியிலும் காணக்கிடைக்கவில்லை.

மீண்டும் சொல்ல ஆசைப்படுவது யாதெனில், ஐந்திறம் என்ற மயன் யாத்த சூத்திர நூலைப் பற்றியும் அதில் வரும்

விண்ணியல், மண்ணியல் செய்திகளைப் பற்றியும் அதாவது, அவை தொடர்பு கொண்ட சதுரவியல் [வாஸ்து புருஷ மண்டலம்] – கால மாத்திரை, காலவியல், காலக்கணக்கியல், தாளவியல், கோலவியல் போன்ற செய்திகளை ஒரு சிறிது விளக்க இருக்கிறேன்.

எதிர்வரும் செய்திகள் மிகமிக முக்கியமானவை; மிக மிக நுட்பமானவையும் கூட. இக்கால விஞ்ஞான உலகமே கண்டிராத, கேட்டிராத உச்சக்கட்ட விஞ்ஞானச் செய்திகள் அவையாகும் என்றால் மிகையல்ல. இந்தச் செய்திகளை என்னிடம் படிக்க வந்த மேலை நாட்டு அறிஞர் பெருமக்களிடம் பேசியிருக்கிறேன்; நெறிமுறைகளை விளக்கிச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். பயிற்சியும் கொடுத்துள்ளேன். அவ்வப்போது அவர்களுடைய வியப்புக் கலந்த உணர்வினை அவர்களுடைய முகமலர்ச்சியில் கண்டேன். அத்தகைய மகிழ்ச்சியை உங்களிடமும் பெற்று விடுவேன் என்று நம்புகிறேன். அத்தகைய முக்கியமான செய்திகளே இதில் எதிர்வரும் செய்திகளாகும்.

நம்முளே அடங்கிக் கிடக்கும் "ஆன்மா"[1] என்ற அகவியற் பொருள் செய்திடும் விந்தைகளைச் சொல்லால் வர்ணித்திட முடியாது. அந்த உளத்தின் ஆற்றலைத் தான் கடந்தும் உள்ளும் இருக்கக் கூடிய "கடவுள்" என்று சொல்லுகின்றோம். ஆன்மாவிற்கு இஃதொரு அரிய பெரிய விளக்கச் சொல் என்க. இத்தகைய சொல்லுக்கு நிகரான ஒரு சொல் யாதொரு மொழியிலும் இல்லை எனலாம். அத்தகைய கடவுள் இந்த ஞாலம் மற்றும் இந்த ஞாலத்திலுள்ள பல பிராணிகளான ஊர்வன, பறப்பன உயர்ந்து வளர்வன, நடப்பன மற்றும் மலைகள், நதிகள் பிற நீர்நிலைகள் காடுகள் ஆகியவற்றைச் செய்திருக்கிறான் அல்லது

---

[1] அது+மா=அதுமா=அதுபெரியது என்று பொருள். எனவே ஆத்மா என்பது தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்கும் பொதுச் சொல் என்க. [உ-ம்: பிரதி+மா = பிரதிமா என்பது போலக் கொள்க.

படைத்திருக்கின்றான். அவற்றின் உள்ளிலும் இருக்கிறான் என்று சொன்னால் எவர்க்கும் ஆச்சரியம் மேலேழுவது இயற்கையே. எல்லாம் உயிர்ப்பொருள்களே.

இந்தக் கடவுள் உருவாக்கிய எந்த ஒரு மூலப் பொருளையும் அன்றும், இன்றும் மனித இனம் ஆக்கிடவில்லை. ஒரு பிடி மண் கூட மனிதனால் உண்டாக்கப் படவில்லை. ஏன் நாமே அருவமாக ஆகாசத்தில் மிதந்தே, அருவுருவமாக (seed of energy) தாய் மடிநுழைந்து, சிசுவாய் அங்கிருந்து வெளிப் பட்டதற்கு நாம் காரணமல்ல. எல்லாம் இயற்கையின் விந்தை மிகு செயல்களே, உணர்வு மய விளையாட்டுக்களே. இதனையே Astro Physics என்றும் Astro dynamics என்றும் சொல்ல வேண்டும். பாரதீய கலாச்சாரத்தின் சாரம் இதுவே. இதுவே பிரணவ வேதத்தின் சாரமும் ஆகும்.

இத்தகைய விந்தை மிகு செயல்களைச் செய்த கடவுள் எந்தக் கல்லூரியிலும் படித்துத் தேரியவர் அல்ல. இப்பொருள், படிக்காத மேதை என்றால் மிகையல்ல. இவருக்கு யாரும் முனைவர் பட்டம் தரவில்லை. இவரைப் படித்து ஓரளவு உணர்வு பெற்றோரே முனைவர் பட்டம் மற்றும் பதவிகள் பெறுகின்றனர்! இப்படி இப்பொருள் பற்றி ஆழமாக சிந்திப்போமானால் அந்தப் பொருளே உணர்வாக (consciousness) இருந்து, எல்லா வற்றுக்கும் இடமாகவும் (Accomodative Space) இருந்து, அந்த உள்ளம் என்ற இடமே மூலமாக ஆகி, மூலஸ்தானமாகி, அதில் உணர்வுறும் கோலமாக (form) அதுவே ஆகி, பல கோலங்கள் நிறைந்ததாக கூடிக் கலந்து, இறுதியாக நாம் வாழ்வதற்கு ஏற்ற ஓர் இன்பமயச் சூழ்நிலையை (energy field of love or sweetness - பிரபஞ்சத்தை) ஏற்படுத்தித் தந்திருக்கிறான் என்று சொல்லும் போது, அந்தப் பிரணவ வேதமானது, அந்தக் கடவுள் எதையும் படைக்கவில்லை என்றும் அந்த உணர்வு மயமான பரம் பொருளே [கடவுளே] தன்னை மேற் சொன்ன எல்லாப் பொருள்களுமாக

பிறழ்கின்றது – புதிய [நவ] பொருள்களாகப் பிறழ்கின்றது – திரிபுறுகின்றது – புரளுகிறது – என்று சொல்கின்றது. இதனால் பிறழ்நவம் என்ற நிகழ்ச்சியே – காட்சியே (phenomenon) பிரணவம் ஆயிற்று என்பதை இந்த நூல் விளக்குகிறது. இதற்கொரு கணக்கும் உண்டெனச் சொல்கிறது[1]. எல்லாப் பொருள்களும் ஒரு மூலத்திலிருந்து பிறழ்ந்தவை தான்; மூலம் பிரசவித்த [பிரணவித்த] பொருள்கள் தான். இந்த மூலம் என்பது காலம்[2] என்பது பிரணவ வேதத்தின் அடிப்படைக் கருத்து. இதனை மேலும் காலமாக் கடவுள் என்றும் பெயர் சூட்டியுளது.[மயன்].

இந்தப் பிறழ்வு நிலை ஒரு கட்டுக் கோப்பில் [சச்சதுர மண்டல நிலையில் ஆகாசத்தில் இருந்து கொண்டு] ஒரு வகைக் கணக்கில் அதுவே தன்னைத் தானே முடுக்கிக் கொண்டு வட்டவடிவ அணுவாகவும் பேரண்டமாகவும் மாற்றம் கொள்கிறது என்று சொல்கின்றது இந்த பிரணவ வேதம். இந்த நிகழ்ச்சியைத் தான் Metamorphosis என்று பல இடங்களில் சொல்லி வருகின்றேன். இந்த உருமாற்றத்தை chemical change என்று சொல்லாம். இந்த உருக்கள் தோன்றுவதற்கு ஒரு கணக்கியல் இயற்கையில் தானாகவே செயல்பட்டு அதாவது துடிப்பாய் (pulsation) துடிக்கணக்காய் வெளிவருகிறது. இதைத்தான் Astro physics என்றும் உருமாற்றம் நிகழும் செயல்பாட்டை Astro dynamics என்றும் நான் ஏற்கனவே அறிமுகப்படுத்தியுள்ளேன். இப்போதும் சொல்கிறேன்.

"உள்ளமே மூலமாகி உணர்வுறும் கோலமாகி
உள்ளமே ஊக்க மாகி உள்ளமே உணர்வு மாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய ளித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்"

– மயன் [ஐந்திறம்]

---

[1] எட்டின் பிறழ்வே நவமெனவாகி– ஐந்திறம்.

[2] காலமே எவற்றுக்கும் மூலம்; காலமே கோலத் தோற்றம்; காலமே ஞாலத் தோற்றம்; காலமே அணுக்கள் ஆயும்; காலமே விந்தை செய்யும். – மயன்.

இப்போது இந்த Astro dynamics எந்தக் கணக்கில் நிகழ்கின்றது என்பதை சுருக்கமாகச் சொல்கிறேன்.

இந்த ஞாலத்தில் காணப்படும் அத்தனை பருப்பொருள்களும் ஒரு கருப்பொருளிலிருந்து (foetus) வெடித்து (Split/explotion) உடல் தரித்த உருப்பொருளாக மாறுகின்றது என்பது விஞ்ஞானம். அதாவது, அருவமே உருவம் தாங்குகின்றது என்பது பொருள். இத்தகைய உருமாற்ற நிலையில் கருவுக்குள்ளே உள்ள ஆற்றல் தனது துடிப்பினால் உருவம் பெருகின்றது என்பதை வாஸ்து சாஸ்திரமும், ஆகம சாஸ்திரமும், ஐந்திறமும், பிரணவ வேதமும் ஒரே மாதிரி சொல்வதனால் இதனை நீங்கள் புரிந்து கொள்ள, மேலும் ஒரு நுட்பத்தை எளிமையாகச் சொல்ல இங்கே முயற்சிக்கின்றேன்.

நமது உளத் துடிப்பும், அதன் துடிக் கணக்கும் இங்கே (vide foot note) பேசப்படுகிறது. இத்தகைய துடிக்கும் ஒரு மூலப் பொருளைத் தான் காலம் என்றும், ஒளி என்றும், ஒலி என்றும் கொண்டு இதற்கெல்லாம் காலமே மூலம் என்றும் அறுதி யிடுகிறது. இந்தக் காலத் துடிப்பே ஒளி அலைகளையும் ஒலி அலைகளையும்[1] விளைவிக்கிறது என்பது இந்த நூலின் இரகசிய விண்ணியலாகிறது. இதுதான் Astro dynamics என்று சொல்லப்பட வேண்டும்!

---

1. 'எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி'
'எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'
'எட்டெட் டியலாய் நெறிமுறை யோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எண்ணியல் வழக்காய்
அணுவுள் ளணுவா யெட்டுறும் நிலைநெறி
அணுவுள் ளணுமுதல் கைவிர லளவை
ஈறா மியம்பும் ஐயள வியளே
நேர்முறை யாக்கம் இம்மியும் எள்ளும்
நிலைபெறுந் திறனே கைவிரல் நோக்கம்
எட்டின் இயலா யையள லியன்றே
நுட்பந் தெரிந்தே நுவலுவ கணக்கே'

ஒளி அணு 1 = □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	- 1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	- 1 இம்மி
8 இம்மி	- 1 எள்ளு
8 எள்ளு	- 1 நெல்லு
8 நெல்லு	- 1 விரல்

ஒரு கருவானது கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய நிலையில் பரமாணு என்று சொல்லப்படுகின்றது. காரணம், அந்தப் பரமாணுவை நமது ஊனக் கண்களால் பார்க்க முடியாது. அந்தப் பரமாணு என்பது இருக்கும் பொருள்(ever existing substance), என்றும் நிலைத்த பொருள் (existence itself) என்றும் சொல்லப்படும். அப்பொருள் இயல்பில் **சதுரமான வடிவத்தில்** விண்ணில் உளது என்பது இதுவரை எந்த விஞ்ஞானிக்கும் தெரியாத உச்ச விஞ்ஞானக் கண்டுபிடிப்பாகும். மண்அணு வட்டவடிவமாகப் பிறழ்ந்த ஒன்றாகும். இதைக் கொண்டே விண்ணையும் மண்ணையும் பிரணவ வேதம் அளந்து விட்டது என உறுதிபடக் கூறலாம். இஃதொரு அதிசயமே. எவர்க்கும் இதுவரை தெரியாத, – அந்தச் சதுர அணுவானது தன் உணர்வால், தன் துடிப்பால், தன் சுழிப்பால், வட்ட வடிவ அணுவாக இறுதியில் மாறி விடுகிறது. அந்த அணுக்களே பிறகு இந்த Physical universe ல் எட்டெட்டு அணுக்களாக ஒன்று சேர்ந்து, உருகி விடுகிறது. நுண்ணிய நிலையிலுள்ள அப்பொருள் கண்ணால் பார்த்திடும் தேர்த்துகள் நிலையை அடையும் பொழுது அந்த எட்டுப் பொருள் சேர்ந்த கூட்டுப் பொருள், ஒன்பதாவது நிலையில் தான் தேர்த்துகளாக[1] இறுதி நிலை அடைகின்றது. எட்டும் சேர்ந்த பண்டமே பிண்டமாகிறது. அத்தகைய இறுதிப் பொருள் மீண்டும் எட்டெட்டாக ஒன்று சேர்ந்து இரண்டாவதாக ஒன்பதாவது நிலையை அடைகின்றது. இதே போல மூன்றாவது, நான்காவது பொருளும் படிப்படியாக உருமாறி வளர்ச்சியுற்று இறுதியாக ஐந்தாவது நிலையில் கண்களால் பார்க்கக் கூடிய,கையால்

---

1. ''ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே''

ஒலி அணு

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணு	- 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	- 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	- 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	- 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	- 1 விரல் காலம்

கால வாய்பாடு

[பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும் பேராசிரியர் கே.ராமச்சந்திரன் தானதீபிகை - 2 (1980)

8 கணம்	- 1 லவம்
8 லவம்	- 1 காஷ்டம்
8 காஷ்டம்	- 1 நிமேஷம்
8 நிமேஷம்	- 1 துடி
8 துடி	- 1 குரு

[2 துடி-1 துருதம்; 2 துருதம்-1 லகு; 2 லகு-1 குரு]

தொட்டு உணரக் கூடியபொருளாக இறுதி வடிவம் பெறுகின்றது. இதுவே படைப்பியல் [பிரம்ம சிருஷ்டி] எனப்படும். இதற்கு மூலத்தின் **ஐந்தியல்** என்றும் பெயர். காலமூலத்தின் [அ] மூலக்காலத்தின் ஐந்தியல் என்றும் கூறலாம்.

இந்த நுண்பொருளானது [பரமாணுவானது] துடிப்புற்று படிப்படியாக வளர்ச்சியுற்று, அதனால் ஏற்ப்பட்ட நிலமே-இடமே (field / space) இடம் (spatial form) என்று சொல்லப்படும். இந்த வளர்ச்சியை (Spatial growth) என்றும் சொல்லலாம். அதுவே அணு நிலையிலும் இடப்பொருள் (spatial form), பருத்த நிலையிலும் இடப்பொருளாக (spatial form) இருப்பதாகிறது. இந்த இடம்தான் முறையே விண் என்றும் ஆகாஸம் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி இருப்பது இயற்கையல்லவா? இதுதான் காலம் இடமாகும் விஞ்ஞானம் ஆகும். Time metamarphoses into space என்று ஆங்கிலத்திலும் சொல்லிப் புரிய வைத்துள்ளேன். கேட்டவர்கள் மயங்குவார்கள்!

இந்த இடம் எப்படி இருக்கிறது என்பதை இக்கால விஞ்ஞானம் ஆய்ந்தும் இன்னும் தெளிவுபடாமல் இருக்கிறது என்றால் மிகையாகாது. அந்த இடக்கணக்கு பற்றி விரிவான செய்திகளைத் தான் இங்கே சொல்லிட முயற்சிக்கிறேன்.

ஒளி அணு 1 = □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	- 1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	- 1 இம்மி
8 இம்மி	- 1 எள்ளு
8 எள்ளு	- 1 நெல்லு
8 நெல்லு	- 1 விரல்

இத்தகைய கருத்து முதல் சங்க காலத்திலிருந்து இன்றைய 21வது நூற்றாண்டு வரை சிற்பியர் வழக்கத்திலிருந்து வருகிறது. இதற்குரிய வாய்பாடு தான் மேலே குறிப்பிட்டிருப்பதாகும். இந்த வாய்பாடை உள்ளடக்கிய விஞ்ஞான நிகழ்வின் கருத்தை அறிந்தவர்கள் இன்னும் தென்படவில்லை. சாதராண பெருக்கல் வாய்பாடைப் போல் எண்ணிக் கொண்டிருப்பவர் தாம் இந்தியர்

அல்லாதோர் மட்டுமல்ல, சிற்பியரும் தான் என்றால் மிகையல்ல. நல்லதொரு ஞானகுரு அமையாததே காரணம் எனத்தெரிகிறது. முதல் சங்க காலத்தில் ஐந்திறம் என்ற நூல் இந்தத் துடிப்பும் துடிக்கணக்கும் அறிவியல் செயலாக இருப்பதை ஐந்திறம் என்ற நூலைப் படித்தோர் அறிவர். நமது தமிழக கலாச்சாரத்தின் துரதிருஷ்ட காலமோ என்னவோ இதுவரை ஐந்திறம் என்ற நூல் 1986 –ல் வெளிவந்தும் எவராலும் உட்கருத்தை கண்டுக் கொள்ள முடியவில்லை.

காலக் கூறே கணக்கியல் ஆகி என்று ஐந்திறம் பேசுகிறது. இந்த வாக்கியத்தை ஆங்கிலத்தில் ஒரு ஜெர்மானியப் பெண் 1996ல் நான் நடத்திய மாநாட்டில் சொன்ன நேரத்தில், என்னை உற்றுப் பார்த்த நேரத்தில், அன்று நான் அடைந்த உவகையை வர்ணித்துச் சொல்லிட வார்த்தைகள் இல்லை. திரும்பச் சொன்னால், எல்லையற்ற பெருமை அடைவீர்கள். அவளது பெயர் Hilde kamala link என்பதாகும். இவ்வம்மையார் Munich University யில் Professor of Anthropology யாக இருக்கிறார். இந்த வாக்கியத்தை சொல்லிய சங்க கால சிற்பச் சித்தன் மாமுனி மயனை உச்சிமீது வைத்து ஆனந்தக் கூத்தாடினேன். நீங்களும் இப்போது ஆடுவீர்கள் என நம்புகிறேன். நம்மை ஆட்டுவிப்பது காலம் என்று சொன்னால் கடவுளை **காலமாக் கடவுள்** என்று சொல்லலாமா? இப்படித்தான் மயன் சொல்லுகிறான். இவன் தான் [காலமாக் கடவுள்] **ஆடல் வல்லானாக** நமது தமிழ்க் கலை மரபில் இன்றும் போற்றப்படுகிறான். இதனால் மூலச் சிற்பம் ஆடல்வல்லான் சிற்பமே என்று, கண்ட இடங்களிலெல்லாம், பேச்சு மேடைகளிலெல்லாம் சொல்லிச் சொல்லி உவகை கொள்கிறேன். இதோ அந்த வாய்பாடு இது. இட வாய்பாடு எனப்படும். Table of Space - Time unit என்று ஆங்கிலத்தில் சொல்லிப் புரிய வைத்திட்டேன். இதனை அந்த மயன், **காலமே இடமுறுகிறது** என்பான். அதாவது **காலமே இடமாக** உருமாறுகிறது என்பது இதன் பொருளாகும்.

ஓர் ஒளி அணு = ஒரு □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	– 1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	– 1 இம்மி
8 இம்மி	– 1 எள்ளு
8 எள்ளு	– 1 நெல்லு
8 நெல்லு	– 1 விரல்

இந்த பிரணவ வேதம் சொல்லும் மாபெரும் செய்திகளை இரண்டே வரிகளில் ஐந்திறம் என்ற நூல் சுருக்கிச் சொல்கிறது.

"ஒளி முதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே"

இதன் கருத்து யாதெனில், முதன் முதலில் இந்த ஞாலம் என்ற வெட்ட வெளியில் தோன்றியது ஒளி தான். இந்த ஒளியானது அசைந்து அசையாகி ஓசையாகிறது. இந்த ஓசை அடுத்த நிலையில் ஒலி எனப்படுகிறது. இந்த ஒலியை விண் ஒலி **ஓம்ஒலி** என்கிறான் மயன். இந்த ஒலியானது யாரால் பேசப்படுகிறது அல்லது ஒலிக்கப்படுகிறது? இந்த நிலையில் விண் தானே ஒளிக்கிறது மற்றும் ஒலிக்கிறது. இதை தான் விண் மொழி என்பான் மயன். இந்த ஒலியானது ஒற்றித்த ஒலியாக இருப்பதால் இதனை ஓம் ஒலி என்றும் ஓம் ஒளி என்றும் விளம்புகிறான். இது தான் ஒலியின் பிறப்பியலாகும். இந்த மாதிரி ஒவ்வொரு மய சூத்திரத்தையும் உற்றுப் படித்தால் தமிழ் அறிஞர்களுக்கும் புரியுமெனப் பணிந்து சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பேர்ப்பட்ட செய்திகளின் உரை நூல் தான் பிரணவ நூல் என விளங்குகிறது. நமக்கெல்லாம் புரிவதற்கு **ஓம் மறை** என்ற மறுபெயரை மூல நூலின் உள்ளேயே சொல்லியிருக்கிறான் மயன்.

இந்த நூலை ஓம்மறை என்று சொல்லும் போது இந்த ஓமுக்குள் அனைத்துச் சொற்களும், (aural forms or uttered words) அனைத்துப் பொருள்களும் (Visual forms) மறைந்து கிடைக்கின்றது என்பது அர்த்தமாகும். எனவே, பிரணவம் என்ற சொல், ஓம் என்ற சொல்லும் ஓ என்ற பொருளும் குறித்திடும் இரு சொற்கள் ஒன்றித்த ஒரு மாப்பொருள் எனலாம். இந்த இரண்டு

சொற்களும் விண்ஞானச் சொற்கள். எனவே, எல்லோருக்கும் எடுத்த எடுப்பில் புரிவது கடினமே.

இத்தகைய ஓம் என்ற ஒற்றை ஒளிக்குள் /ஒன்றை ஒலிக்குள் இந்த ஞாலமே மறைந்து, உறங்கிக் கிடக்கின்றது என்று சொல்வதை ஓமிதிப்பிரம்மம் **ओमिति ब्रह्म** / ஓம் இதிப் பிரம்மம் **ॐ इति ब्रह्म** என்று பிற்கால வேதம் சொல்கிறது. எனவே பிரம்மம் என்ற சொல்லும் ஓம் என்ற சொல்லும் பிரணவம் என்ற சொல்லும் ஒரேயொரு பெரிய பொருளைத் தருவனவாகும்.

அடுத்து ஒலிவழிப் பிறந்த அல்லது பிறழ்ந்த சொற்களுக்கு வருவோம். ஒளிக்கு உள்ள வாய்பாடே ஒலிக்கும் உரித்தாயிற்று. இந்த ஒளிஒலி வாய்பாடை துடி வாய்பாடாகக் கீழே காணலாம்.

கால வாய்பாடு
[பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும்
பேராசிரியர் கே.ராமச்சந்திரன் தாளதீபிகை – 2 [1980]

8 கணம்	– 1 லவம்
8 லவம்	– 1 காஷ்டம்
8 காஷ்டம்	– 1நிமேஷம்
8 நிமேஷம்	– 1 துடி
8 துடி	– 1 குரு

[2 துடி – 1 துருதம்; 2 துருதம் – 1 லகு; 2 லகு – 1 குரு]

மேற்சொன்ன வாய்பாடை, உற்று நோக்கினால் இப்பொழுது உங்களுக்கு, காலம் தான் ஒளியைத் தோற்றுவிக்கின்றது என்றும், அந்த ஒளியின் துடிப்பினால் ஒலி பிறக்கிறது என்றும் புலானகிடும் என்று நம்புகிறேன். ஆகையினால் காலம் தோற்றுவித்த ஒளி, ஒலி இரண்டும் சேர்ந்திடுமானால் காலத்தாலான ஒரு பெரும் பொருள் பிறக்கிறது என்று சொல்ல வேண்டும்[1]. ஆகையினால் காலத்தால் பொருள் தோன்றுகிறது என்பதும் அதனை ஒளிப்பொருள் என்றும் அதே போல ஒலியாய் அதே பொருள் ஓசை நயமாய் ஒலிப் பொருளாய் விளங்குகிறது என்பதும் புலப்படும். இந்தச் செய்தி தமிழ் மொழிக்குக் கிடைத்திட்ட உச்சப் பெருமையும், தமிழ் செய்திட்ட உச்சச் சாதனையும் ஆகும் என்று ஒரு பார்க்கோடாமல் துணிந்து கூறுகிறேன்.

[1] மெய்யொளி உமிரொலி சிவனுதல் இயல்பே
ஒளியொலிப் பொருளாய் ஓங்கும் எழுத்தே – மயன்
ஒலி அம்மை ; ஒளி அப்பன். எனவே நடராசன் அம்மையப்பன் ஆகிறான்.

மேற்சொன்ன துடிக்கணக்கையும் துடிக்கணக்கால் ஏற்படும் இடக்கணக்கையும் நன்றாகப் புரிந்து கொள்வதற்கு இசைத் துறையில் நாம் கையாண்டு வரும் வீணையின் துடிப்பையும் அத்துடிப்பால் விளையும் நாத வெளியையும் (sound space) கருத்தில் கொண்டு பார்த்தால் புலப்படும். இஃது ஒரு எளிய முறை. வீணையை மீட்டத்தொடங்கினால் ஒரு வித துடிப்பின் எண்ணிக்கையினால் சட்ஜமம் என்ற நாதம் எழுகிறது. இந்த துடிப்பளவை உயர்த்தினால் அடுத்த சுரம் ஆகிய ரிஷபம் வெளிப்படும். மீண்டும் இந்தத் துடிப்பளவை உயர்த்தினால் அதற்கு மேலே எழும் காந்தாரம் வெளிப்படும். அதாவது காந்தாரத்தால் விளையும் நாத வெளி அல்லது sound space உருவாகிடும் என்பது பொருள். இப்படி அடுத்தடுத்து மேல் நோக்கியதாக சுரங்களை தோற்றுவித்திட துடிப்பளவை உயர்த்திக் கொண்டே போகலாம். இங்ஙனம் உயர்த்திக் கொண்டே போகும் போது நி என்ற சுரம் வரும். அதோடு நிருத்திக் கொள்ளாமல் மேலும் சென்றால், கீழ் சட்ஜமத்திற்கு உண்டான துடிக்கணக்கின் இருமடங்கு அங்கே தேவைப்படும். அதை, இரட்டைத் துடிப்பலையாக கண்டறியலாம். இரண்டு வீணைகள் ஒத்தொலிப்பது போல் கனத்த ஒலியாக இருக்கும். ஒலி அலைகளின் அடர்த்தி இங்கே உணரப்படும். ஆகவே, ச முதல் நி வரை ஏற்பட்ட சுரங்கள் இனிமையான சுரங்கள் என்று கொண்டு, சப்தசுரங்கள் என்று சொல்லி வருகிறோம். ஆகவே அளவிட முடியாத ஓசையை அதாவது ஒலியை நாம் அளந்து விட்டோம் என்பது பொருள். மீண்டும் மேலே மேலே துடிப்பளவை ஏற்றிச் செல்லுவோமானால் மறுபடியும் ச ரி க ம ப த நி என்ற சப்த சுரங்கள் தோன்றுவதைக் காணலாம். இதன் மூலம் நாம் கணித்தது யாதெனில், ஒலிமய பரம்பொருள் (ओमिति ब्रह्म) ஒரு அளவில் கட்டுப்படுகிறது என்று சொல்லலாம். இதற்குத்தான் musical scale என்று பெயர் வைத்து உள்ளோம். இது ஒரு விஞ்ஞான நிகழ்ச்சியே என்றாலும் இந்த சப்த சுரத்தை காதால்

கேட்கும் பொழுது அந்த சுரங்கள் காதுக்கு இனிமை தருவதும் உளத்திற்கு சுகம் தருவதுமாகும். ஆகையால் சப்த சுரங்கள் ஏழு என்று சொல்லுகிறோம் இதற்கு ஏழிசை என்று பெயர். கீழ் சட்ஜமத்தையும் மேல் சட்ஜமத்தையும் ஒரு அளவுகோலாக öPõs k C uø Ú musical octave என்றும் வழக்கத்தில் சொல்லப்படுகிறதல்லவா? அதனை சுருக்கிச் சொன்னால் சப்த மயமாக இருக்கும் சப்தப் பிரம்மத்தை அளந்து விட்டோம் என்று பொருள். இதனை அளந்தது நமது மூளை அல்ல நமது அகமே.

ஒவ்வொரு சுரமும் தோன்று விக்கும் இசைக்கு நாம் கண்ட ஒலி இடத்தைத் தான் இதுவரை sound space என்று சொல்லி வந்தேன். அதாவது கண்ணுக்கு தெரியாவிட்டாலும் sound ஒரு வகையான space ஐ தோன்றுவிக்கிறது என்பது பொருள். இது நமது ஞாலம் முழுவதும் பொருந்தும் கருத்தென்க. இதற்குத்தான் சப்த பிரம்மம் என்று பெயர். நாம் வேண்டுமானால் ஒலிமயக் கடவுள் என்று சொல்லிப் புரிந்து கொள்ளலாம்.

இந்த சப்த சுரங்களை விரித்துக் கொண்டும், கூட்டியும் குறைத்துக் கொண்டும் நாம் நமது எண்ணங்களுக்கு ஏற்ற வணணங்களை ஒலிப்பொருள்களை - சொல் ஓவியங்களை - தோற்று விக்கிறோம். இந்த வண்ணங்களுக்குத் தான் ராகம் என்று பெயர் சூட்டியிருக்கிறோம். ராகம் என்ற சொல்லுக்கு நேர் பொருள் வண்ணம் என்பதே. இங்ஙனம் நாம் இனிமையான பல ராகங்களைத் தோற்றுவிக்கிறோம் அல்லவா? இங்ஙனம் தோற்றுவிப்பதற்கு ஏழு சுரங்களில் ஒரு சில சுரங்களை கைவிட்டு புதிய புதிய scale களை அதாவது அளவுகோல்களை உண்டாக்கு கிறோம். ஏறுவரிசை, இறங்கு வரிசை என்றும் வைத்துக் கொண்டுள்ளோம். அதாவது ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு வகையான scale கிடைக்கிறது என்பது பொருள். இத்தகைய scale களை வைத்துக் கொண்டு நாம் ஒலிமய ஞாலத்தையே படைத்து விடுகிறோம். இதை ஒலிமய ஞாலத்தை உணருவது நமது மூளை

அல்ல நமது உள்ளமாகிய ஆன்மாவே என்று சொன்னால் பிழை இல்லை. இந்த சுரங்கள் ஆன்மா பெற்றெடுத்த சுரங்களை, சுரக்கோவையை ராகங்கள் என்று சொல்லுவதைத்தான் "எண்ணங்கள் வண்ணங்களாகிறது" என்று மயன் சொல்லுகிறான். இந்த ஏழு சுரங்களை நாம் சுருக்கிச் சொன்னால் பஞ்ச சுரங்கள் [ச,ரி,க,ப,த] அடிப்படையாக இருப்பதைக் காணலாம். இது மோகனராகம் எனப்படும். இன்னும் சுருக்கிச் சொன்னால் இறுதியில் ஒலி ஓமில் அடங்குவதைக் காணலாம். எனவே, மூலம் ஓம் ஒலியாக தோன்றி மூல சுரங்களாகிய பஞ்ச சுரங்களை தோற்று வித்துவிட்டது என்று உறுதியாகச் சொல்லலாம்.

பஞ்ச சுரங்கள் போல கண்ணால் பார்த்திடும் சுரங்களை கற்சிலைகளை – சிற்பிகள் கையாண்டு வெளிப்படுத்திய உயிர்ப்புள்ள வடிவமாகிய பஞ்ச முக பிரம்மனாக உருப்பெற்றுள்ளான் என்று உறுதியாக சொல்லலாம். பிறவியில் உச்ச பிறவி மனிதப் பிறவியாக இருப்பதினால் மனித உருவத்திலேயே பஞ்ச பிரம்மத்தை வழிபடு பொருளாக வாஸ்து சாஸ்திரமும் ஆகம சாஸ்திரமும் கொண்டுள்ளன. கீழே இருக்கும் சுலோகங்களை உற்றுப் பாருங்கள். உருவம் கொடுத்திட்ட பாங்கினை அல்லது மேன்மையினை உணர்ந்து நமது இசைத்துறையை மேலை நாட்டினரும் வியப்போடு ஏற்கவும் பார்க்கவும் பாரத நாடு வருகிறார்கள்.

द्वे ब्रह्मणी वेदितव्ये शब्द ब्रह्म परं चयत् ।
शब्द ब्रह्मणि निष्णात: परं ब्रह्माधिगच्छति ॥

இங்ஙனம் சட்ஜமத்தை ஓம்ஒலி என்று நாம் சொன்னால் தவரல்ல. அந்த சட்ஜமத்திலிருந்து பிற சுரங்கள் மேலும் கீழும் சென்று ஒலிக்கின்றன. இது ஒரு அறிவியல் உண்மை.

இந்த சப்த சுரங்களைச் சுருக்கி பஞ்ச சுரங்களாக மாற்றி சொல்லிய நிலையில் இந்த சுரங்களுக்கு இடைவெளிகள் இருப்பதை நம்மால் யூகிக்க முடியும். ச க்கும் ரி க்கும் இடையே வரும் சுரம் கண்டு இதை அனு சுரம் என்று சொல்லுவோம். ரிக்கும் க வுக்கும் இடையே பிரிதொரு சுரம் இருப்பதையும் அனுசுரம் என்றும் சொல்லுகிறோம். இப்படி ஐந்து அனு சுரங்கள் உண்டாகின்றன. இதை உற்று நோக்கும் பொழுது ஏழு சுரங்களாக இருந்த ஐந்து சுரங்கள் பனிரெண்டு சுரங்களாக ஆவதை உற்றறியலாம். இந்த சுரங்கள் எல்லாம் ஒலி அணுக்களாக விண்ணில் பறந்து ஒரு சுரமய இடமாக (sound filled space) வெளிப்படுகிறது. இந்த சுரஸ்தானங்கள் (sound spaces or forms) காது வழி சென்று உள்ளத்தில் இன்பமூட்டுவதை இன்றைய இசை வல்லுனர்கள் நன்கு அறிவர்.

இங்ஙனம் மேலும் சிந்திப்போம் ஆனால், இந்த எண்ணங்கள் வண்ணங்களாவதோடு, இறுதியில் கண்ணால் பார்க்கும் வடிவங்களாக மாறக் கூடும் என்று நினைக்கத் தோன்றும். இந்த வடிவங்கள் தான் அ, இ, உ, எ, ஒ, என்ற பஞ்ச எழுத்துக்களாகவும் பிறகு ஐ ஔ சேர்ந்து ஏழு எழுத்துக்களாகவும் இந்த ஐந்து உயிரெழுத்துக்களின் நெடிலையும் சேர்த்தால், பனிரெண்டு உயிர் எழுத்துக்களாக ஆவதை உணரலாம். இந்த ஐந்து எழுத்துக்களும் தமிழ் மரபில் உள்ள எழுதுக்கள் என்று மயன் சொல்வதை நினைவிற்குக் கொண்டு வந்து ஒரு இசை மரபையே தோற்றுவித்த மரபு தமிழ் மரபு என்று சொல்லலாம். ஆக பனிரெண்டு சுரங்கள் பனிரெண்டு எழுத்துக்களுக்கு ஒத்துப்போவதை இப்போது உணரலாம். எனவே தான் அத்தகைய பரம் பொருளை சப்த பிரம்மம் என்று சொல்லி சப்தப்பிரம்மமத்தை நன்கு உணர்ந்தவன் அர்த்தப் பிரம்மத்தை புரிந்து கொள்ள முடியும் என்று ஒரு உபநிஷதம் நமக்கு சொல்லுகிறது. கீழ் கண்ட சுலோகம் இதனை தெளிவுபடுத்துவதைக் காண்க.

द्वे ब्रह्मणी वेदितव्ये शब्द ब्रह्म परं चयत् ।

शब्द ब्रह्मणि निष्णात: परं ब्रह्माधिगच्छति ॥

இந்த செய்திகளை வைத்து தமிழ் ஒலிகளை உற்று நோக்கினால், தமிழே இசை வடிவங்களாக இருப்பதை அறிந்து மகிழலாம். அதாவது தமிழுக்கு மறுபெயர் இசை என்று கொள்ளுதல் பொருந்து மன்றோ! இவற்றை எல்லாம் தோன்றுவிப்பது தமிழ் இசையாய் உயர்வுற்று, தமிழ் இசையாய் வெளிப்பட்டு சுகம் தரும் ஒலிமய ஞாலத்தை நமக்கு தந்துள்ளது என்பதை அறிந்து பெருமைப்படலாம். இத்தகைய ஒலி மூலத்தை விரித்துப்பேசி அதனை இலக்கணமாக்கி நமக்கு தந்தவன் தான் சங்க காலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் ஆவான். அவன் தந்த இலக்கணத்தைத் தான் நாம் இலக்கிய மாக்குகிறோம்.

இதன் பிறகு இந்த எழுத்துக்களை அல்லது எழுத்து ஒலிகளை பிடித்து வைத்துக் கொண்டு, பொருள் செரிந்த வார்த்தைகளைப் புனைந்து ஒரு அளவியலுக்குள் கட்டுப்படுத்தி [யாப்பு] சொல்மயமான சொற்கட்டுகளை (Speech Rhythm) தோன்றுவித்து சொல்லால் ஆன ஓவியத்தை மயன் கண்டு அவற்றை சொல்லோவியம் என்று சொல்லியதோடு எண்ணற்ற சொல்லோவியங்களையும் உண்டாக்குவதற்கு ஒரு அளவுகோலையும் படைத்துத் தந்திருக்கிறான். அதாவது எழுத்து, சொல், பொருள், கட்டு, அணி என்ற ஒரு தொகுப்பை வழங்கியிருக்கிறான். இதனால் விளைவது ஒரு கட்டுப்கோப்பான ஒளிவடிவம் என்றாகும். இதனைத்தான் கவிதை என்று சொல்லுகிறோம். இங்ஙனம் கவிதைகள் நிறைந்த ஒரு ஞாலத்தை சப்த பிரபஞ்சம் என்று சொல்லுகிறோம். இதனையே மயன் ஒலி ஞாலம் என்று சொல்லுகிறான். இங்கே தமிழும், சம்ஸ்கிருதமும் ஒன்றித்து நிற்பதையும் கைகோர்த்து நடப்பதையும் தயவு செய்து உற்று நோக்கி, இதில் உள்ள ஒருமைப்பாட்டை சுவையுங்கள். இந்த மரபுக்கவிதையின் சிறப்பு யாதெனில், இந்த கவிதை

மனதிலே நிலைத்திருக்கும் ஒளிவடிவமாக இருந்து நினைக்கும் போதெல்லாம் ஒளி – ஒலிக்காட்சி சிதறாமல் நமக்கு இன்பம் தருவதாக ஆகிறதல்லவா? இது தான் ஆன்மபலத்திற்கு காரணமாகிறது.

இதுபோலத் தான் கண்ணால் பார்க்கும் சிற்ப வடிவங்கள் ஒளியால் ஆன ஒளி வடிவங்கள் என்று மயனும் சொல்லுகிறான். மயன் வழிவந்த சிற்பிகளும் சொல்லுகிறார்கள். மீண்டும் பழைய பாட்டை இங்கே சொல்லி இங்கே எனது உரையினை முடித்து அடுத்து சிற்பங்களைப் பற்றியும் கட்டிடங்கள் பற்றியும் [கட்டிடச் சிற்பம்] ஒரு சில சொல்லி உங்களை பிரணவ வேதத்திற்குள் அழைத்து செல்ல இருக்கிறேன்.

இந்த ஒலி ஒளி நிறைந்த ஆகாசத்திற்குள் பஞ்ச பூதங்கள் அடங்கியுளதை நீங்கள் அறிவீர்கள். தடையின்றி விரிந்துள்ள இந்த இடமே பஞ்ச பூதத்தால் ஆன இந்த ஞாலத்தின் உடம்பு.

सकल निष्कल मिश्र विभागतः त्रिविधमेव वपुः परमेष्ठिनः ।
विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम् ।।

– அகஸ்திய சகளாதிகாரத்தின் முதல் சுலோகம்

ஆகாஸத்தின் உச்ச இடத்தில் கிடக்கும் அணுவின் அமைப்பே சதுரமாகும். இஃது பிரம்மத்தின் இயல்பு. இது சதுரவியல் எனப்படுகிறது. இதுவே கனசதுரமாகவும் இருப்பதினால் சிற்றவை என்றும் பேரின்ப வீடு என்றும் சொல்லப்படும். இந்த சதுர வீடையே archetypal forms என்று Architectural science ல் கொண்டுள்ளோம். இந்த வீட்டின் அமைப்பையும் அதுதரும் நன்மை தீமைகளையும் எனது ஸ்தாபத்ய வேத நூலில் காண்க. விரிவஞ்சி இத்துடன் எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

இறுதியாக,

மறக்கக் கூடாத, மறுக்க முடியாத உண்மை யாதெனில், இதுவரை சொல்லிவந்த இடம், காலம், துடிப்பு, துடிப்பளவால் ஆன உருவகக் கணக்கானது எல்லாக் கலையிலும் ஒன்றே என்பது உறுதியாகிறது. உள்ளுணர்வினால் பல உருவ பேதங்கள் ஏற்படுகின்றன. எதுபோல எனில், இசையில் ஆரோஹண அவரோஹண அளவு கோலால் நாம் ஏற்படுத்திக் கொண்ட கணக்கில் ஏற்பட்ட இசைவடிவம் கொள்ளும் பேதம் போல் என்க.

இதனால், இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகியவை ஒட்டு மொத்தமாக ஐந்தமிழ் என்றும், ஐம்மறை என்றும் தமிழ்மரபில் தோன்றி, சிற்பிகளுக்கே அறிமுகமான உண்மையென்பது மறைந்து போய் இப்போது உற்றறிந்து உவகை கொள்கிறேன். இப்போது நீங்கள் எல்லோரும் அறிந்து இன்புறுக.

ஐந்தமிழ் வாழ்க! ஐம்மறை ஓங்குக!

"உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்தியத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திரம் விளக்கும் ஐந்திற நூலே" – ஐந்திறம் 207

டாக்டர். வை.கணபதி ஸ்தபதி

தமிழ் கூறு நல்லுலகிற்கோர் இனிய செய்தி

ஒரு வெற்றிச் செய்தியை உங்கள் முன் சமர்ப்பிப்பதற்கு பெருமகிழ்ச்சி அடைகிறேன். யாதெனில், 1986ம் ஆண்டு மாண்புமிகு டாக்டர்.எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழக முதல்வராக இருக்கும் போது, **"ஐந்திறம்"** என்ற அறிவியல் நூல் ஒன்று மதுரையில் தமிழ்ப் பேராசியர்கள் முன்னிலையில் அறிமுகமானது. இஃதொரு அறிவியல் நூலாக இருந்தமையால் அந்த நூலில் கையாளப் பெற்ற சொற்களும், செய்திகளும், நாளது வரை விளக்கப் படாமலேயே கிடந்து விட்டது.

காரணம், இலக்கியத் தமிழிலிருந்து அறிவியல் தமிழ் தனிப்பட்டு நின்று புரியாமல் இருந்து விட்டது என்க. இது போல, மணிமேகலை என்ற தமிழ்க் காப்பியத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தொல்பழம் அறிவியல் நூல் ஒன்று இருந்தது. அதன் பெயர் ஓவியச் செந்நூல் என்பதாகும். இதை எவராலும் புரிந்து கொள்ள முடியாத அறிவியல் தமிழ் நூலாக இருந்தமையால் வழக்காற்றிலிருந்து ஒதுங்கி, மடிந்தும் போய் விட்டது. இது போல ஐந்திறமும் ஆகி விட கூடாது என்ற வேட்கையில் கடந்த 20 ஆண்டுகளாக துருவித் துருவி ஆராய்ந்து, எனது வாஸ்து விஞ்ஞானத்தை அதில் கண்டு வியப்புற்று நல்ல பல அறிவியல் செய்திகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி, நம் நாட்டு அறிஞர்களிடையே மட்டுமல்லாமல், மேலை நாட்டு விஞ்ஞானத்திற்கும் ஒத்துப்போகுமாறு, பல தொழில் நுட்ப நூல்களை படங்களுடன் எழுதி என் சொந்தச் செலவிலேயே வெளியிட்டும், கருந்தரங்குகள் மற்றும் பட்டறைகள் மூலம் சொல்லிக் கொடுத்தும், பயிற்சி அளித்தும் ஒரு மவுனப்புரட்சியைச் செய்து நான் வெற்றிப் பாதையை நோக்கி நடை போடுகிறேன். இதன் விளைவாய் மேலை நாடுகளில் பல வாஸ்து விஞ்ஞானப் பயிற்சி நிலையங்களும் உண்டாகி, மயன் அறிவியல் செய்திகள் நடைமுறைக்கு வந்து விட்டன.

இதற்கிடையில் **சங்க கால சிற்பச் சித்தன் மாமுனி மயன்** என்ற தமிழ்ப் பெருமகன் இயற்றிய **ஐந்திறத்திற்கு** உரை நூலாக அமைந்திருந்த **பிரணவ வேதம்** என்ற ஒரு நூல் எனக்குக் கிடைத்தது. எனவே, எனது ஆர்வத்தில் அதனை இப்பொழுது அச்சேற்றி வெளியிட்டிருக்கிறேன். என்றாலும், இந்த நூலும் செயலற்றுப் போகாமல் இருப்பதைத் தடுப்பதற்கு பிரணவ வேதத்திற்குள் என்ன தான் இருக்கிறது என்பதை தமிழ் கூறு நல்லுலகிற்கு அறிவித்திட, நீண்டதோர் அறிமுகவுரையை எழுதினேன். அதனை படிப்பதற்கு இன்றைய அவசர உலகத்தில் நேரமிராது என்று அனுமானித்து அதனைச் சுருக்கி, இப்போது ஒரு சிறிய உரையாக - இங்கே இணைத்துள்ளேன். பிரணவ வேத பாக்கள் தனி நூலாக வெளிவந்து விட்டது. முதல் 1000 பாக்கள் வெளி வந்துள்ளன.

உள்ளே சென்றால் பெரியப் புதையலை எடுத்த மகிழ்ச்சிக்கும் மேலான ஆனந்த்ததைப் பெறுவீர்கள் என்று நம்பி இந்தச் சிறிய அறிமுகவுரையை இப்போது சமர்ப்பிக்கிறேன்.

''உள்ளும் புறமும் ஒருவழி நின்றே
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே'' – ஐந்திறம்

அற்புதம்	விளங்குமிந்நூல்	அருட்கலைத்	திறன்விளங்கும்
பொற்புதம்	காலம் எல்லாம்	பொன்னொளி	திகழ்ந்திருக்கும்
பற்பல	காலம் தோன்றாப்	பொற்புடன்	மறைந்திருந்து
பொற்புறும்	காலம் நேரும்	பொழுதினில்	விளங்கு மன்றே

வைசம்பாயணம் – (1212)

வாஸ்து வியாசன் வை.கணபதி ஸ்தபதி.

Pranava Vedam, the Fifth Vedam.

"एक एव पुरा वेद: प्रणव: सर्ववाङ्मय: ।
देवो नारायणो नान्य: एकोऽग्निर्वर्ण एव च ।।" भागवते

இதைப் படிக்கத் தவறாதீர்கள்

Message of Pranava Vedam, a mathematical Cosmic phenomenon -
$E=mc^2$ (Energy=Matter)

वस्तुरेव वास्तु

Energy metamorphoses into matter.

விண் பொருளே மண்பொருளாகத் திரிபுறுகிறது

ஒரு பருந்துப் பார்வை

விண்வெளி கருவுற்று பிரசவித்திட்ட பிறழ்நவப் பொருளின்
ஆக்கத்தை விளக்குவதே பிரணவ வேதம்

எட்டின் பிறழ்வே நவமெனவாகி - மயன்

இதுவே பிரம்ம சிருஷ்டி தத்துவம், மற்றும் சிருஷ்டிக்குரிய கணக்கியல்

"வெட்டவெளியான சூன்யாம்பரத்தில் முதலில் முகிழ்ந்தது ஒளி,
பிறகே ஒளி துடித்து வெளிப்பட்டது ஒலி எனப்படுகிறது"

ஒம்கள் இரண்டு - ஓம் ஒளி ஓம் ஒலி.

"ஒலி வழி கேட்பது - சொல்; ஒளி வழி கிடைப்பது - பொருள்"

"ஒளித்துடிப்பே காலக்கணக்கு"

"கண்ணிமை விண்ணிமை மண்ணிமை எண்ணிமை
பண்ணிமை ஐந்துங் காலக் கூறே"

"காலக்கூறே கணக்கியலாகி" - ஐந்திறம்

"காலமே எவற்றுக்கும் மூலம்;
காலமே கோலத் தோற்றம்;
காலமே ஞாலத் தோற்றம்" - *மயன்*

"உழைப்பே மூலம் உணர்வே காலம்"

"மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே"

"உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே"

"ஒளியொலிப் பொருளாய் ஓங்கும் எழுத்தே"

"எழுத்தெல்லாம் ஓவியமே; ஒலியால் உணரப்
படும் வடிவமெல்லாம் ஓமியமே"

"கிளவியாக்கம் மெய்ப்பொருள் குறித்தே"

சொல்லும் பொருளும் ஒன்றே.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" - *குறள்*

கடவுளே மனிதஉருவாகப் பிறழ்ந்திட்ட நெறிமுறை காட்டும் கணக்கியல்.

பரமாணு, மனித உடம்பாகி, சதையால் உருப்பெற்ற ஒரு கட்டிடம்.

"கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி" - மயன்

"ஞாலமே ஒரு கன சதுரக் கட்டிடம்".

"अणोरणीयान् महतो महीयान्" - சிற்பியர் உபநிஷத்

"Architecture is Forzen Music"

"Architecture is zenithal achievement of mathematics"

"Architecture is the matrix of Civilisation"

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" - பூங்குன்றனார்

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" - திருமந்திரம்

ஐந்தமிழ் - ஐம்மறை, இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம்

அகண்டு விரிந்து விளங்கும் ஆகாசமாகிற விண்வெளியில் முதன் முதல் கருப்பொருளாய்த் தோன்றிய (Primordeal substance) ஆன்மப் பொருள் (spirit) எதுவெனில், அஃது ஒளி எனப்படும். இத்தகைய ஒளி இன்றைய நிலையில் ஞாலம் தழுவிய ஒரு பெரும் பொருளாக - மஹத் எனப்படும் அறிவியல் பொருளாக விளங்குகிறது. "विज्ञानं ब्रह्म" *"விஞ்ஞானம் பிரம்ம"*, "ज्ञानमयं ब्रह्म" *"ஞானமயம் பிரம்ம"*, "प्रज्ञानं ब्रह्म" *"பிரக்ஞானம் பிரம்ம"*, "विज्ञानं शिल्प कुशलम्" *"விஞ்ஞானம் சில்ப குசலம்"*, "जगत् सर्वं शिल्पमेव" *"ஜகத் சர்வம் சில்பமேவ"*, "सर्वं खल्विदं ब्रह्म" *"சர்வம் கல்விதம் பிரம்ம"*. இவையெல்லாம் சம்ஸ்கிருத மொழியில் உளதெனினும், எல்லாம் தமிழ் விஞ்ஞான மரபை ஒட்டிப் பிறந்தவை தான். அவற்றின் பொருள் யாதெனில், பிரம்மம் என்பது ஞான மயமானது; உணர்வு மயமானது, விஞ்ஞானம் என்பது சில்பச் சிறப்பே, ஜெகத் என்ற ஞாலத்தில் அடங்கிய அத்தனையும் சில்பமே, எல்லாம் பிரம்மமே, பிரம்மம் ஓர் அகவியல் மற்றும் விஞ்ஞானப் பொருளே என்பன விளக்கமாகும்.

இப்பொருள் தமிழில் பரம் பொருள் என்றே சொல்லப்படுகிறது. பரம் பொருள் என்ற சொல்லுக்கு மேலான, மகத்தான, அளவிடமுடியாத, சிந்தனையால் எட்டிப் பிடிக்க முடியாத அரும்பெரும் நுண்பொருள் மற்றும் திண்பொருள் என்பது பொருள்[1]. இஃது எப்படித் தோன்றியது, எப்போது தோன்றியது, தோற்று நிலையில் அஃது எப்படி இருந்தது, விரிந்த நிலையில் எப்படி இருக்கிறது என்ற கேள்விகளை இன்றைய விஞ்ஞான ஆய்வுக் கூடங்களிலும் நமது நிபுணர்களும் ஆய்வுப் பொருள்களாக எடுத்துக் கொண்டு ஆயத்தொடங்கி, மொத்தத்தில் பல ஆயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன என்றால் மிகையல்ல. ஆனால் உண்மை மறைபொருளாகவே இருந்து விட்டது. வேதம் மறையெனப் பட்டது இதனாலன்றோ!

இந்த மகத்தான பெரும் பொருளானது மூல நிலையில் அதாவது கரு நிலையில் ஒரு புள்ளியாக இருந்தது என்பது தமிழக விஞ்ஞானக் கருத்தாகும். அந்தக் கரு, கருப்பா சிவப்பா என்று சொன்னால் அது பொன்நிறமானது என்பது நமது வாஸ்து ஆகமம் வழிப்பட்ட ஓர் உச்ச விஞ்ஞானத் தேற்றமாகும். நாராயண சூக்தம் கருப்பும் சிவப்பும் பாதிபாதியாக பிரிக்கவொண்ணா திலகமாகச் சொல்லுகிறது. வாஸ்து வேதம்

---

1. "अणोरणीयान् महतो महीयान्" *"அணோரணியான் மஹதோ மஹீயான்"* - சில்பவித்யாரஹஸ்யோபநிஷத்
நுண் பொருளே திண்பொருளாகிறது. நுட்பமே திட்பம். வஸ்துவே வாஸ்து.Energy=Matter.

சொல்வதும், நாராயண சூக்தம் சொல்வதும், ஒன்றே என்பது எனது கருத்து. எப்படியெனில் விண்ணே மண்ணாகியது என்பது தானே மயத்தமிழ் மறையின் வெளிப்பாடு! சொல் பொருளாகவும், பொருள் சொல்லாகவும் வெளிப்படவில்லையா? பிரிக்க முடியுமா? உமையொருபாகன் என்ற அர்த்தநாரீஸ்வரப் படிமத்தின் கருத்தோவியம் இதற்குச் சான்றாக முற்காலச் சிற்பக்கலைச் சான்றோர் படைத்துத் தந்து விட்டார்களே! வைணவர்கள் நெற்றியில் இட்டுக் கொள்ளும் திருமண்ணில் இதை "कृष्णपिङ्गलम्" *"கிருஷ்ண பிங்கலம்"* என்று கூறுவர். கருப்பும், சிவப்பும் பாதி பாதி உள்ள பொட்டு [திலகம்] என்பது பொருள்.

இந்த விசயங்களை நமது வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் அடிப்படையாக வைத்துக் கொண்டிருந்தாலும், இந்த இரண்டு சாஸ்திரங்களைக் கற்றோர் நமது சமுதாயத்தில் இன்று ஒடுக்கப்பட்ட நிலையில் இருப்பதால் இதுவரை வெளிவர வேண்டிய மூலச்செய்தி நின்று விட்டது, ஒதுங்கியும் ஒடுங்கியும் கிடக்கிறது.

மேற்சொன்ன புள்ளி[1] என்பது ஒளிப் புள்ளி என்று தமிழிலும், சம்ஸ்கிருதத்தில் பிரம்ம பிந்து என்றும், ஹேம பிந்து என்றும், நாதவிந்து [ஒலிப்புள்ளி] என்றும் சொல்லப்படுவது, மேல் விளக்கம் பெறாமல் இருந்து விட்டது என்றால் இதுவும் மிகையல்ல. நம்மைச் சூழ்ந்தும் நமக்குக் கீழும் மேலும், எல்லாப் பக்கங்களிலும் நீக்கமற வியாபித்திருக்கும் இந்த ஒளிப் பொருள் நம் எல்லோருக்கும் உயிர்ப் பொருள் என்றால் வியப்பைத் தருகிறதல்லவா? ஆம், இதுதான் உண்மை. அந்தப் பொருளைத் தான் நாம் சுவாசிக்கிறோம். உள்ளிழுத்து வெளிவிடுகிறோம். நாம் உள்ளிழுத்து வெளிவிடுவது வெறும் வாயு அல்ல; ஒரு நிலையில் அதனைப் பிராண வாயு என்று சொல்லுகிறோம் என்றாலும், பிராணன் என்றால் உயிர் என்பது தானே பொருள்? எனவே, உயிரை உள்ளிழுத்து வெளிவிட்டு உயிர்ப்புடன் நாம் இருக்கிறோம். எனவே, நாம் அந்த உயிரை நமது இதயத்தின் உள்ளே, அதன் நடுவிலே வைத்திருக்கிறோம்; அந்த உயிர்ப் பொருளால் பற்பல செயல்களைப் புரிகிறோம், அந்த உயிர்ப் பொருள்களை நாம் படைக்கும் கலைப் பொருள்களில் உள்ளடக்கி வைத்து நல்ல பல உயிர்வளர் நுண் கலைகளை – ஐங்கலைகளை – படைத்து வைத்துக்

1. புள்ளி என்ற சொல் ஒரு சமுதாயத்தில் பிறந்திட்ட ஓர் உயிர்ப்பொருளைக் குறிப்பிடும். செட்டிநாட்டில் இச்சொல் சாதாரணமாக வழக்கில் உளதாகும். பெரியவர்களைப் பெரும் புள்ளி என்று சொல்வதின் மூலம் இக்கருத்து தெளிவுறும்.

கொண்டிருக்கிறோம், இத்தகைய சிறப்பான ஒரு கலாச்சார வாழ்க்கையினை ஆண்டாண்டு காலம் காத்தும் வருகிறோம் என்று சொன்னால் இவையெல்லாம் கட்டுக்கதையல்ல, இஃது ஒரு விஞ்ஞான நுட்பமாகும். இக்கருத்தில் பிரம்ம பிந்துவை நடுவில் வைத்துக் கட்டிய இடங்களைத்தான் திருக்கோயில்கள்; ஆன்ம நிலையங்கள் என்கிறோம். அவையெல்லாம் கலைந்து நிம்மதியற்ற நமது உளப் போக்கினை நெறிப்படுத்தி, பேரின்பம் துய்த்திடச் செய்திட்ட, ஆன்ம வளம் எய்திட உடல் தரித்த உயிர்ப்புள்ள உன்னத வடிவமைப்புகள் ஆகும். உள்ளமும் அதன் துடிப்பும், விளைவும் இப்படித் தான் உளது.

"உள்ளமே[1] மூலமாகி உணர்வுறும் கோலமாகி
உள்ளமே ஊக்கமாகி உள்ளமே உணர்வுமாகி
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய வித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்" - மயன்

இந்த நிலையில் முதன் முதலில் தோன்றியது எது, எப்படி அது விரிந்த பொருளாக – ஆகாசமாக – ஆயிற்று அந்த வியாபித்த பொருளுக்கு என்ன பொருள் என்பதெல்லாம் இக்கால விஞ்ஞானியர் கவனத்தை ஈர்த்து ஆய்வுக்கு உள்ளாகி யிருக்கிறது. ஆனால் நமது தமிழ் நாட்டில், இன்றல்ல, இப்படியல்ல.

இத்தகைய ஆய்வை சங்க காலத்துக்கும் முற்பட்ட புலவர்களும் பெரியோர் களும் முன்னிலைப்படுத்தி ஆய்ந்து, தெளிவுற்ற நற்செய்திகள், அசைக்க முடியாச் செய்திகள் இப்பொழுது வெளியாகிக் கொண்டிருக்கின்றன. சிற்பிகளாகிற எங்கட்கு ஏற்கனவே தெரிந்த செய்தியாயினும் நாங்கள் மீண்டும் ஆய்வு செய்கிறோம். காலம், சிற்பிகளை நோக்கி இப்போது தான் தனது பார்வையைத் திருப்பியுளது என்பேன். காரணம் சிற்ப நூல், கலைநூல் மட்டுமல்ல, அஃது ஒரு கால நூலும் ஆகும். காலக்கணக்கை அடியாகக் கொண்ட காலக் கணித நூலாகும். காலமே எவற்றுக்கும் மூலமல்லவா! இதன் விளக்கத்தை எதிர்வரும் பத்திகளில் மீண்டும் சந்திப்போம்; சிந்திப்போம்.

முதன் முதலில் இருந்தது வெறும் வெட்ட வெளிதான் (empty space). உள்ளே அசைவுற்றும் வெளியிலே அசைவற்றும் இருந்த ஒரு ஒளிப் படலமாகத் தான்

1. உள் என்றால் இடம் (Space) என்பது பொருள். அகவெளி என்றும், புறவெளி என்றும் இரண்டாகச் சொல்லப்படும். அகம் நம்முள் உள்ள சிற்றாகாசம்; புறம் என்பது பேராகாசம். புறவெளி அல்லது பரவெளி என்று பொருள்படும். இந்த இடம் பஞ்சபூதங்களின் இருப்பிடமாகும். மூலம் என்றும் சொல்லப்படும். மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம் என்று ஐந்து நிலைகளை இதுவே தோற்றுவிக்கிறது.

இருந்தது. அதற்குத்தான் வெற்றிடம் (vacuum) என்ற சொல்லை சொல்லி வந்திருக்கிறோம். இதைத் தான் நான் வெட்டவெளி என்று சொல்லுகிறேன். இதனை ஒளிவெளி என்கிறான் மயன். இரண்டுக்கும் நிகர்த்த ஒரு சொல்லை சம்ஸ்கிருதத்தில் சொல்லும் போது அது சூன்யாம்பரம் என்று சொல்லப்படும். சூன்யாம்பரம் என்ற சொல் எதை சுட்டுகிறது என்பது கம்ப்யூட்டர் காலத்தில் வாழும் உங்களுக்குத் தெரியும். Zero space அல்லது Vacuum என்பது அதுவே. (It is not a space of nothing ness; it is a space containing everything that we see around us and yet to see in future.) அடுத்து வரும் பாக்களை மீண்டும் உற்று நோக்குங்கள் உங்களுக்கு இந்தச் செய்திகள் மேலும் தெளிவு பெறும், உறுதிபெறும் என்று நம்புகிறேன்.

"விண்வெளித் தோன்றா முன்னர் மண்கரு வமையா முன்னர்
விண்ணிலை அமையா முன்னர் பண்ணியல் தோன்றா முன்னர்
எண்ணியல் இலங்கா முன்னர் ஏழிசைத் தோன்றா முன்னர்
திண்ணிய ஓசை யாலே ஓம் ஒளி ஒலித்த தன்றே" – மூலத்தூண் என்ற தமிழ் நூல்

"ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே" – மயவிஞ்ஞானம் ஆகிய ஐந்திறம்

"ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும் (inner light)
ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும் (Vibrancy of inner light)
ஒளியொளிர் உருவந்தானே ஆடலன் ஆடலன்றோ (Dance of inner space)**"** - **மயன்**

"உள்ளமே மூலமாகி உணர்வுறும் கோலமாகி (inner space and inner vision)
உள்ளமே ஊக்கமாகி உள்ளமே உணர்வுமாகி (effort, urge) (inner awareness)
உள்ளமே வழியுங் காட்டி உள்ளமே ஒளிய வித்து
உள்ளமே வெற்றி நல்கும் உளவியல் முறையைக் காண்பீர்" - **மயன்**

மேற்குறிப்பிட்ட பாக்கள் எதை குறிப்பிடுகிறது என்று விளக்கிட ஓர் ஆங்கிலச் சொற்றொடரை அல்லது வினாவை முன்வைத்தால் இவையெல்லாம் அருமையான விண்ணியல் பாக்கள் ஆகும் என்று சொல்லிடத் தோன்றும். இது நிஜமே. அதாவது **மண் தோன்றுவதற்கு முன்னும், விண்தோன்றுவதற்கு முன்னும், பஞ்ச பூதங்கள் தோன்றுவதற்கு முன்னும்** முதன் முதலில் தோன்றியது ஒளி என்பது உங்களுக்கு இப்போது தெளிவுறும். அந்த ஒளியின் அசைவினால் ஒலி பிறக்கிறது என்பது இப்பொழுது உங்களுக்குப் புலனாகிடும். **What was there before Big Bang?** (Newyork Times, dated May 22, 2001, Mr.Dennis Overbye, USA) என்ற வினாவிற்கு இது தான் விடை. இதைத்தான் இந்த மூன்று பாக்கள் உணர்த்தும் என்று உறுதியாகச் சொல்லுகிறேன். வேறு ஏதும் இருப்பதற்கில்லை.

இதைப்பற்றிப் பேசும்முன் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தோன்றிய – இதற்கெல்லாம் அடிப்படையான – நூலைத்தான் ஐந்திறம் என்றும் **பிரணவ வேதம்**[1] என்றும் இதுவரை சொல்லி வந்தேன். இவையிரண்டும் என்னிடம் உள்ளன. வெளியீடும் ஆகி விட்டன. ஐந்திறம் அரசுப் பதிப்பாகும். பிரணவ வேதம் எனது **"வாஸ்து வேத ஆய்வு நிறுவனப்"** பதிப்பாகும்.

எனவே, சூன்யாம்பரமாக இருந்த காலத்தில் முதன் முதலில் தோன்றியதைத் தான் பிரம்ம பிந்து என்றும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்ட ஒளிப்புள்ளி என்றும், ஒளி அணு என்றும், பரமாணு என்றும், கரு என்றும், கருவறை என்றும், கெர்ப்பம் என்றும், கெர்ப்பக்கிருஹம் என்றும், வாஸ்து சாஸ்திரங்களிலும், ஆகம சாஸ்திரங் களிலும் சொல்லப்பட்டது. இதன் மூலம் கோயில் என்பது ஒரு miniature universe enlarged into visual reality என்று புலனாகிறதல்லவா? ஆம்! இதுதான் உண்மை.

இந்தக் கருவை பிந்துவை, ஒளிப்புள்ளி, Nuclear energy point என்று இக்கால விஞ்ஞான மொழியில் சொல்லலாம். நம்மைப் பொருத்த வரையில், இந்தச் சொல் பராசக்தி (supra power) என்ற சொல்லுக்கு நிகர்த்ததாகும். இந்தப் பராசக்தியை ஆய்வு செய்தவர்கள் தான் முற்காலத்தில் சாக்தர் என்ற பெயரைக் கொண்டிருந்தார்கள். சிற்பியர்களும் சாக்தர்களே. முதல் சமயமே சாக்தம் தான்! சக்தி வெளிப்பட்ட விரிந்து பரந்த நிலையில் அஃது ஒளிமய ஆகாச மாயிற்று (luminous space). இதுவே ஒளிமயம், சிவமயம், சிவம், சிவ சமயம் ஆமிற்று. இதை வைத்து சக்தி பெரிதா? சிவன் பெரிதா? என்ற அறியாமை பார்ப்பட்ட சர்ச்சைக்கு நாமே இப்போது விடை கொடுத்திடலாம். வீண் சர்ச்சை தான். சக்திக்குத் தான் முதலிடம் உரியது. இந்த energy தான் [இந்தப் பராசக்தி] முதல் நிலையில் அதாவது அசைவுறும் நிலையிலும் அசைவுறா நிலையிலும் சூன்யாம் பரத்தில் அடங்கிக் கிடப்பது. இந்த நிலையில் இதனை Absolute Energy என்றும் Potential energy என்றும் அதனை எளிமையாக Energy in vibrant stilless என்றும் சொல்லி வருகிறோம். இந்த நிலையில் ஆகாசத்தை Kinetic energy என்றும், விஷ்ணுவை earthly energy என்றும் சமய மரபு கொண்டுளது. **"सर्वात्मियंलिङ्ग आकाशमेव"** *"ஸர்வாத்மீயம் லிங்கம் ஆகாஷமேவ" – மயன்.*

1. பிரணவ வேதத்தைப் பற்றிப் பேசுவது ஸ்ரீமத் பாகவதமும், ஸ்காந்த புராணமும் ஆகும்.

இதன் பொருள் யாதெனில், ஆத்மாக்கள் என்பதும், லிங்கம் என்பதும் (luminous shaft of consciousness, zero central axis, pillar of light supporting the cosmos) ஆகாசமே என்பது பொருள். இப்படித்தான் சிற்பிகளாகிற விசுவகர்மர்கள் தொன்று தொட்டுச் சொல்லி வருகிறார்கள். இவையெல்லாம் காலத்தின் கோலங்கள் என்றும் சொல்லி வருகிறோம். **"काल: सृजति भूतानि, काल: संहरति प्रजा:, सर्वे कालस्य वशगा:"** *"காலஹ ஸ்ருஜதி பூதானி, காலஹ சம்ஹரதி ப்ரஜாஹா, ஸர்வே காலஸ்ய வஷகாஹா"* என்ற ஸ்காந்த புராண ஸ்லோகம் உறுதி செய்கிறது. காலமே பஞ்ச பூதங்களையும் பிற தோற்றங்களையும் சிருஷ்டிக்கிறது. அங்ஙனம் தோற்றிய பொருள்களை எல்லாம் காலமே அழித்து விடுகிறது. எல்லாம் காலத்தில் கையிலே உளது என்பது பொருள். இந்தக் காலத்தை உருவகித்து, சிற்பிகளாகிய நாங்கள் காளி என்று பெயர் சூட்டியுள்ளோம். **"कालि त्वं कालस्वरूपि"** *"காளித்வம் காலஸ்வரூபி"* என்பது நாமாவளியில் வரும் சொற்றொடர் ஆயிற்று. அதாவது, "காளி நீ காலத்தின் உருவமாக விளங்குகிறாய்" என்பது அதன் பொருள். சூன்யாம்பரத்தை Space of nothingness என்பர். இது சரியல்ல. This is a Space of everything என்பதே சரியான அறிவியல் விளக்கமாகும். இந்தச் செய்தியை விளக்கிடும் வேறு ஒரு சொல் நமக்குக் கிடைக்கவில்லை. ஏன் என்று சொல்ல முடியவில்லை. எப்படியெனில், படவிளக்கத்தோடு பிறகு பார்க்கப் போகிறோம்.

அப்பேர்ப்பட்ட சூன்யாம்பரத்தில் முதன் முதலில் எது வெளிப்பட்டது? அதன் செயல்பாடுகள் (dynamism) யாவை? என்பது தான் இப்பொழுது நான் எடுத்துக் கொண்ட பொருளாகும். முதலில் வெளிப்பட்டது ஒளிப்புள்ளி என்று சொல்லும் பொழுது கண்களுக்குப் புலப்படாத நிலையில், ஆனால் நமது உள்ளத்திற்கு புலப்படும் நிலையில் மட்டுமே இஃது உளது. இஃது இப்படி இருப்பதை உளவியல் வல்லுனர்கள் நன்கு அறியக் கூடும். அவர்களைத் தான் ஞானியர்கள் என்று சொல்லுகிறோம். வாஸ்து சாஸ்திரமும், இப்படித்தான் யோகி என்ற சொல்லால் சொல்லுகிறது. இந்த ஒளிப்புள்ளியை வாஸ்து மரபு ஒளியணு என்றும், பரமாணு என்றும் கொண்டுள்ளது. இதனை உறுதிசெய்வது ஆகம சாஸ்திரமுமாகும்[1].

"परमाणुरितिप्रोक्तं योगिणां दृष्टिगोचरम् ।"

"பரமாணுரிதிப்ரோக்தம் யோகினாம் த்ருஷ்டிகோசரம்"

மயமதம் என்ற வஸ்து சாஸ்திரம்

---

1. இந்திய நாட்டின் விஞ்ஞான – கலாச்சார அடிப்படை நூல்கள் வேதம், ஆகமம், வாஸ்து ஆகிய மூன்றுமே ஆகும் என்க. காப்பாற்ற வேண்டாமா? வாஸ்து சாஸ்திரம் சூக்குமத்தை ஸ்தூலமாகக் காட்டும் அறிவியல் நூல். ஆகமம் அந்த ஸ்தூலத்தை வழிபடச் செய்து உளநலம் பெறச் செய்யும் நூல். இவ்வளவு தான். வேறு என்ன தான் வேண்டும்? இரண்டுமே Super scientific treatises தாம்.

அணுவை எங்கே எப்படிப் பார்க்க முடியும்? வீட்டுக் கூரையின் ஓட்டை வழியாகப் பாய்ந்து வரும் ஒளிக்கீற்றில் மிதக்கும் தூசியிலிருந்து அறிய முடியும். இது கண்களுக்குப் புலப்படக்கூடியது. இந்த நிலையில் material atom என்றும், இதுவே கண்களுக்கு புலப்படா நிலையில் sub atom (அ) பரமாணு என்றும் சொல்லப் படுகிறது. இப்படித்தான் வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் உணர்த்துகின்றன.

இந்த யோகிகளைத்தான் நான் விண்ஞானிகள்(space scientists) என்று சொல்லி வருகிறேன். காரணம், இந்த விண்ணும் energy தான் மண்ணும் (matterம்) energy தான் என்ற அறிவியல் நுட்பத்தை தமிழர் விஞ்ஞான மரபு உறுதி செய்து விட்டது. இந்த நிகழ்ச்சி முதற்சங்க காலத்தில் நிகழ்ந்து விட்ட தெனில் இன்றுளோருக்கு வியப்பேற்படுவது நியாயமே. இந்த விண் தொடர்புடைய அத்தகைய பொருளுக்கு உயிர்ப் பொருள் என்றும் சொல்லுகிறது தமிழ் மரபு. எடுத்துக்காட்டாக, "உடம்புடன் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே[1]" என்ற இலக்கணக் கூற்று மெய்ப்பிக்கிறது. உயிரும் உடலும் ஒன்றித் தோன்றுவது இயல்பே என்பது கருத்து. இது விஞ்ஞானக் கூற்றல்லவா? உயிர் விண்ஞானத்தையும் (science of spirit centric energy) உடல் விண்மண்ஞானத்தையும்(science of matter centric energy) தமிழர்கருச் சொந்தமான விஞ்ஞானம் என்று சொன்னால் மிகையல்ல.

இத்தகைய ஒளிவெளியில், மூலமானது (Root) முதலில் ஒரு புள்ளியாகத் தோன்றி, அதுவே தன்னை தன் உணர்வால் ஒரு கணக்கியலில் (self imposed discipline) தானே பெருக்கிக் கொண்டு, நாம் இன்று பார்க்கும் ஒளிவெளியாகவும் வெளி மொழியாகவும் ஆனது என்று சுருக்கிச் சொல்லலாம். எனவே தான் கீழ்கண்ட ஐந்திற முதல் பாவை மீண்டும் தருகிறேன்.

"ஓளிமுதற் கண்ட விண்ணொலி ஓசை
வெளிமொழி ஓமென விளம்பற் பாற்றே" - ஐந்திறம்.

"नभूमिं नजलंचैव नतेजो नच वायवः ।
नच ब्रह्मा नचविष्णुश्च नचरुद्रो नचतारकाः ।
सर्वशून्य निरालम्बो स्वयंभूः विश्वकर्मणः ।।"

"நபூமிம் நசலம்சைவ நதேஜோ நசவாயவஹ
நசப்ரம்மா நசவிஷ்ணுஸ்ச நசருத்ரோ நசதாரகாஹா
ஸர்வஷூன்ய நிராலம்போ ஸ்வம்பூ விஷ்வகர்மனஹ"

– சிற்பியர் வசமுள்ள மூலஸ்தம்பம் என்ற நூலிலிருந்து

---

1. மெய்யொளி உயிரொலி சிவணுதல் இயல்பே - ஐந்திறம்.

[விஸ்வகர்மன் என்ற சொல் சிற்பியர்குல தெய்வமாகக் கொள்ளப் பட்டிருப்பினும் இச்சொல் five fold elemental substance ஆன வெளி, வளி, தீ, நீர், நிலம், என்ற ஐந்து gross elements இன் உருவகம் என்பது பொருத்தமாக இருப்பதை காண்க. இதுவே வரலாற்றுக் காலத்தில் ஐம்முகத்தனான விஸ்வகர்ம சிவன் என்ற திருநாமம் பெருவது மாயிற்று. மேல் நிலை ஆய்வில் மேலுமொரு தகவல் யாதெனில், வேதங்கள் நான்கல்ல, ஐந்து என்ற விஞ்ஞானக் கருத்தை அடிப்படையாக வைத்து ஐந்து வேதங்களையும் ஐந்து முகங்கள் குறிப்பிடும் இக் கருத்தை விளக்கிட எழுந்த உருவே – கல்லோவியமே – ஐமுகப்பிரம்மன் என்றும் மற்றும் விசுவகர்மன் என்று வேத நூலும் சதாசிவன் என்று ஆகம நூலும் சொல்வதாயிற்று.]



விசுவகர்மன்
ஐமுகப்பிரம்மன்

இப்பேர்ப்பட்ட ஒளிப்புள்ளியானது முழுமை பெற்ற நிலையில் – ஆன்மாவாகப் பரவிய நிலையில் – ஒளிமயமே ஆன்மாவாகப் பரவிற்று எனில் தவறு ஏதும் இல்லை என்பதை இங்கே குறிப்பிடுகிறேன். ஆன்மா பரவி நிற்காத பொருளே இப்பிரபஞ்சத்தில் இல்லை என்க. "ஆகாச சரீரம் பிரம்மம்" என்றும் "ஆகாசம் சப்தைவ குணகம்" என்றும் நமது வேத நூல்கள் கூறும். இதே கருத்தை அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்ப நூல் பரமேஸ்வரனின் திருமேனி பற்றி விளக்கும் போது, உருவமாக, அருவமாக, அருவுருவாக மூன்று நிலையில் பரமேஸ்வரன் திருமேனி கொண்டுள்ளான் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.

"सकल निष्कल मिश्र विभागत: त्रिविधमेव वपु: परमेष्ठिन: ।
विधिमिमं सकलस्य यथोदितं शशिधरेण तथा कथयाम्यहम् ।।"

"சகல நிஷ்கல மிஷ்ர விபாகதஹ த்ரிவிதமேவ வபுஹ॰ பரமேஷ்டினஹ
விதிமிமம் சகலஸ்ய யதோதிதம் ஷஷிதரேண ததா கதயாம்யஹம்"

– அகஸ்திய சகளாதிகாரம் என்ற சிற்ப நூல்

என்ற பாடலை நூலின் முதல் பாடலாகக் கொண்டு அருவத்திலிருந்து உருவங்கள் எப்படித் தோன்றுகின்றன என்ற விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பச் செய்திகளை சிற்பிகளுக்குச் சொல்லி கொடுத்தது இதுவே என்றால் மிகையல்ல. இப்படி ஆகாஸ தத்துவத்தை விளக்கிடலாம். இத்தத்துவத்தை பாரத நாட்டுக் கவிஞர்களும், ஞானியர்களும் வெவ்வேறு கோணங்களிலிருந்து நோக்கி விளக்கியிருக்கிறார்கள் என்றாலும், இனி எதிர்வரும் செய்திகளை வைத்து வாஸ்து, ஆகம சாஸ்திரங்களை விஞ்ஞான சாஸ்திரங்களே என்று கருதிடல் வேண்டும். இதனை மேலும் உணர்வீர்கள், உறுதி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

இதெல்லாம் இப்படி இருக்க, இந்த சூன்யாம்பரத்தில் முதல் முதலில் தோன்றிய ஒளிப்புள்ளி எந்த வடிவமாகத் தோன்றியது என்பதை முன் சொன்ன கட்டுரைகள் வழியாக அறிந்திருக்கலாம். என்றாலும் அது தான் என்ன, என்று மீண்டும் சுருக்கிச் சொன்னால் அதுதான் இயல்பிலே சதுர வடிவமாகும் □ என்க. இது தானாக தன் இயல்பாகத் தோன்றிய தானியல் வடிவாகும். இதனைத்தான் சதுரவியல் என்று ஐந்திறமும், சச்சதுரம் என்று சிற்பியர்களும் சொல்லுகின்றனர். இதனை archetypal form என்று நவீனகால கட்டிடக் கலைஞர் சொல்லுவர். இதைத்தான் First manifest form of the unmanifest என்று சொல்லிவருகிறேன். இந்த ஒளிப்புள்ளி தான் பிரம்ம பிந்து என்றும், இந்த இரண்டும் ஒரு கருத்துடைய இருசொற்களாக விளங்குவதால் இதற்கான மேற்கோள்களை எனது கட்டுரையில் காட்டியிருக்கிறேன். இந்த சதுரவியல் பற்றி முதன் முதலில் சொல்லியது ஐந்திறம் என்ற நூல் என்று நான் சொல்லுவதால், இந்த பிரபஞ்ச மூலத்தையும் பிரபஞ்சத்தையும்(cosmos) சதுர வடிவம் எனக்காட்டி நமக்கு விளக்கமுறச் சொல்லியது ஐந்திறம் தான்! இதைத் தான் महत् என்ற சொல் உணர்த்தும் என்க. அதன் பிறகு, நம்நாட்டு அனைத்து சிற்ப ஆகம சாஸ்திரங்களிலும், பிற ஞானசாஸ்திரங்களிலும் இச் செய்தி (message) சொல்லப்படுவதும் ஆயிற்று. இத்தகைய சதுர ஒளி அணுவானது தன் உணர்வால் ஒரு கணக்கியலில் சதுரவடிவம்[1] எனப்படுகிறது. அஃது உணர்வுற்ற நிலையில் 8 x 8=64 சதுரங்கள் கொண்டு விளங்கு நிலையில் அது energy grid என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுகிறது. தமிழ் சமஸ்கிருத மொழிகளில் வாஸ்து புருஷ மண்டலம் என்று

---

1. இதுதான் வஸ்துபுருஷ மண்டலம் என்றும், வாஸ்து புருஷ மண்டலம் என்றும் சிற்பக் கலை நூல்களில் பெரிதாகப்பேசி, இதன் அடிப்படையில்தான் அனைத்து செய்முறைகளும் தோன்றின என்க.

பெயாராயிற்று. அதுவே கனசதுரமாகவும் மிளிர்வதாயிற்று. தமிழ் மரபில் இந்த three dimensional particle of energy-க்கு முச்சதுரம் என்பது பெயர். எல்லாப் பக்கங்களிலும் சதுரம், மேலும் கீழும் சதுரம். ஆக ஆறு பக்கங்களும் ஒளிமயச் சதுரங்களாகும், என்பது பிறிதொரு விளக்கம். சுருக்கிச் சொன்னால் இது Luminous cube என்று பொருள்படும். தமிழில் சிற்றம்பலம் என்றும் சிற்றவை என்றும் சொல்லப்படும். இப்படித்தான் விண் முழுவதும் முச்சதுர அணுக்கள் மற்றும் சிற்றவைகள் மண்டிக் கிடக்கின்றன. இந்தச் சிற்றவையை Microbode என்று சொல்லி வருகிறேன். இதனை ஸ்திரப் படுத்தியது சிதம்பரத்தின் சிற்றம்பலம் தான்!


எனவே, ஆகாசத்தில் தோன்றிய அலைகள், சதுரத்தை அடிப்படையாகக் கொண்டு சதுரம் சதுரமாக விரிகிறது என்று பொருள். இந்த விரிதலை கால மாத்திரை என்கிறோம். காலம் தோற்றிய "**மா அலைகள்**","**மா திரைகள்**"என்பது பொருள். இதைப் பரமாணு என்று சொல்லும் பொழுது, இதனை விண்ணியல் கருத்து என்று கொள்கிறோம். இந்தச் சொல்தான் இறுதியில் மண் என்ற சொல்லாக உருமாறுகிறது என்ற ஐந்திற கோட்பாட்டை வைத்து, இதுவும் இக்கால விஞ்ஞானத்தை ஒட்டிச் செல்லுகிறது என்றும் அறியலாம். இன்னும் சுருக்கிச் சொன்னால் $E=mc^2$ என்ற பேராசிரியர் ஐன்ஸ்டீனின் கருத்து மெய்யாகிறது எனலாம். இதனைப் புரிந்து கொள்வதற்காக energy-ல் matter-ம் matter-ல் energy-ம் இருப்பதாக சொல்ல[1], ஒருசமன்பாட்டையே பேராசிரியர் ஐன்ஸ்டின் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சொல்லிவிட்டார். $E=mc^2$ என்றும் $mc^2=E$ என்றும் இந்தச் சமன்பாடுகளை புரட்டிக் காட்டிச் சொல்லிவிட்டார்.

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நமது பண்டை வாஸ்து விஞ்ஞானிகள் சொல்லிய கருத்தும் இக்கருத்தும் ஒத்துப்போவதை உணர்வது நமது ஞானிகளின் [ஞாலத்தைப் பற்றிய] உச்ச ஞானத்தை (Supreme wisdom/vision) நீங்களும் அறிந்து கொள்ளலாம்.

விண் அணு சதுர அலைகளைத் தோற்றுவிக்கும் என்று சொல்லும் பொழுது, மண் அணு வட்டம் வட்டமான அலைகளைத் தோற்றுவிக்கின்றன என்று வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் பேசுவது இன்றைய விஞ்ஞான நெறிக்கும் ஒத்துப் போகிறதல்லவா?

---

1. "प्रासादादीनि वास्तूनि वस्तुत्वात् वस्तु संश्रयात् । तान्येव वस्तुरेवेति कथितं वै वस्तुविद्बुधैः ।।"
"ப்ராசாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்து சம்ச்ரயாத் । தான்யேவ வஸ்து ரேவேதி கதிதம் வை வஸ்து வித்புதைஹி ।।" – மயமதம் / மானசாரம்



சதுர அலைகள்


இக்கருத்தை மேற்கண்ட படம் நன்கு விளக்கிடும் என்று நினைக்கிறேன். அலைகள் தம் விரிவிலே 2(a),2a,4a,6a,8a,10a என்று ஒரு சீலமிகு நெறி உளதல்லவா? இதே போல 3(a),3a,5a,7a,9a,11a என்ற ஒற்றித்த நெறியும் உண்டு[1]. இஃது ஓர் உச்ச விண்ணியல் காட்சியாகும் (Spatial phenomenon). இந்தக் கருத்தை வைத்துத் தான் இந்த அலைகள் ஐந்து மற்றும் ஏழாக விளங்குவதை நமது திருக்கோயில்களில் பிரகாரங்களாகக் காட்டுகிறோம். இதை பஞ்சப் பிரகாரம் என்றும் சப்தப்பிராகாரம் என்றும் சொல்லி வரும் நுட்பத்தையும் அதன் பயன் பாட்டையும் இக்கால அறிஞர்கள் அறிதல் வேண்டும். இது பாரதீய கலாச்சாரத்தின் அடிப்படை என்று சொல்லும் நேரத்தில் சதுர அலைகள் பற்றிய விண்ணியல் கருத்து பிராகார வடிவத்தில் தமிழ் நாட்டிலே தான் இருக்கிறது என்று சொன்னால் இந்தப் பிரணவ வேதம் தமிழர்களுக்குத் தான் சொந்தமானது என்று சொன்னால் மிகையல்ல. ஒரு தெளிந்த நீர் நிறைந்த தடாகத்தில் ஒரு கல்லைப் போட்டால் வட்ட வட்ட அலைகள் தோன்றுகின்றன அல்லவா? இதுபோல விண்ணில் முகிழ்ந்த கனசதுர விண்கருவினால் சதுரம் சதுரமான அலைகள் தோன்றுகின்றன என்பது விண்ணியல் தத்துவம் ஆகும். விண்ணியல் மண்ணியலாக உருமாற்றம் கொள்கிறது என்று கூறும் போது ஒளிமயப் பரப்பளவில் வேறுபாடு ஏற்படவில்லை என்பதை இங்கே நினைவுப் படுத்திக் கொள்க. [கட்டுரை பக்கம் 12ஐ பார்க்க] ?

---


1. a என்பது கரு -கருவறையின் அகலம். ஒன்று இரண்டாக மூலத்திலேயே பிரிந்து விடுவதால் மூலத்தை 2a என்றும் 4a என்றும் சொல்லிருக்கிறேன். இது கணக்கியிலின் அடிப்படை நுட்பமாகும். நேரில் கேட்டு அறிந்து கொள்க. - ஸ்தபதி.

(Sequence of energetic belts / called prakaras) (celestial wave patterns)

(Multiple wave patterns) with circular belts)



சதுர அலைகள்
[பஞ்சப் பிராகாரங்கள்]



வட்ட அலைகள்
[பூமியில் விளையும் காலத் திரைகள்]

SPACE TIME UNITS

இடங் காலக் கணக்கு

நமது தமிழ் நாட்டில் 35000 கோவில்கள் இருப்பினும் அவற்றில் ஒரு சில ஐந்து பிரகாரங்களைக் கொண்டதாகவும், ஒன்றே ஒன்று ஏழு பிரகாரங்களைக் கொண்ட தாகவும் உளதென்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அவற்றிலே பஞ்ச பிரகாரங்கள் கொண்ட பெரிய திருக்கோயில் திருவண்ணாமலை என்பதை எல்லோரும் நன்கு அறிவர். ஏழு பிரகாரங்களைக் கொண்டு பெருங்கோயில் என்ற பெயருடைய ஒரே கோவில் ஸ்ரீரங்கம் அரங்கநாதப் பெருமாளின் திருக்கோவில் ஆகும். பெருங்கோவில் என்ற பெருமை பிறிதொரு கோவிலுக்கும் உண்டு. இது சிதம்பரம் தில்லை நடராஜர் கோவிலாகும். ஸ்ரீரங்கம் மண்ணியல் தத்துவத்தையும், சிதம்பரம் விண்ணியல் தத்துவத்தையும் உருவகித்து விளங்குகின்றன.

[பஞ்சப் பிரகாரங்களைக் கொண்ட பிறிதொரு பெருங்கோவில் அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஹவாய் தீவில் கட்டப்பட்டு வருகிறது. இந்த ஹவாய்க் கோவில் **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** என்ற திருமந்திரக் கோட்பாட்டை நம் கண் முன் நிறுத்தி உறுதி செய்திடவும், பாரதீயக் கலாச்சாரத்தின் சிறப்பை உணர்த்திக் காத்திடவும், எல்லோரும் பார்க்கவும், ஆன்ம சுகம் பெற்றிடவும் இயற்றப்படுகிறது. மதநல்லிணக்கச் சின்னமாகவும் பிரபஞ்ச விஞ்ஞான நுட்பத்தை நாம் கண்ணால் கண்டுகளிப்பதற் காகவும், அதன் மூலம் Heaven on Earth என்ற பெயரும் புகழும்


அடையப்போகிறது. அமெரிக்காவில் கட்டப்படுவது சன்மார்க இறைவன் கோவில் என்று சொல்லப்படும். இன வேறுபாடின்றி வழிபடும் வசதி கொண்டது. 24 மணி நேரமும் வழிபாடு உண்டு. கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும்.

இந்த ஹவாய்க் கோவிலில் ஸ்படிக லிங்கம் மட்டிலும் மூலஸ்தானத்தில் பிரம்ம பிந்து இருக்கும் இடத்தில் நிறுவப்படுகிறது. 1¼ அடி அகலமும் 3 அடி உயரமும் கொண்ட ஸ்படிக லிங்கம் இஃதாகும். இக்கோவில் முற்றிலும் கல்லால் கட்டப்பட்டு எழுந்தருளுகிறது. இதனை எழில் மாடமாக நிறுவிட நோக்கம் கொண்டவர் அமெரிக்கப் பெரியார் லோககுரு சிவாய சுப்பிரமுனிய சுவாமி என்பவர் ஆவார். முற்றிலும் கல்லால் ஆன இத்திருக் கோவில் இத்தகைய தத்துவத்தை ஒரு முகப்படுத்தி எடுத்துக்காட்டாக நிற்கப்போவதால் உலகத்திலேயே உச்சமானதொரு விஞ்ஞான அடிப்படை கொண்டு விளங்கும் ஓர் ஆன்ம நிலையம் எனில் மிகையில்லை. அங்கே பரிவாரங்களே இல்லை. அங்கு விரைவில் குடமுழுக்கு நிகழப் போகிறது. இதனை வடிவமைத்துக் கட்டிக் கொடுக்கும் பேறு எனக்குக் கிடைத்திருப்பதை நமது தமிழக விஞ்ஞான மரபுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்பேன்.


இதேபோல, கடவுள் உருவமே இல்லா தூய விண்ணியல் நெறி தழுவிய சிதம்பரம் கோவில் போல பிறிதொரு கோவிலும் அமெரிக் காவில் எழ இருக்கிறது. இதற் கெல்லாம் அடிப்படையாக விளங்கும் நூல்கள் தான் **வாஸ்து, ஆகம சாஸ்திரங் களும்** அதோடு இப்போது **ஐந்திறமும், பிரணவ வேதமும்** ஆகும் என்று உவகை பொங்கச் சொல்லி வைக்கிறேன். விண்ணியல் பற்றியும், மண்ணியல் பற்றியும் பேசிடும் நூல் கருத்துக்கள் இங்கே இடம் பெற்று வருகின்றன.]

இந்தப் பிராகார அமைப்பில் பெரியதொரு தத்துவம் இருப்பதை முன்கண்ட பத்திகளில் மேற்போக்காகச் சொல்லி வந்தேன். இத்தகைய அமைப்பில் என்னதான் இருக்கிறது? அஃது எப்படி இருக்கிறது என்பதை எதிர்வரும் - அக்கருத்தொத்த படங்களைப் பார்த்துப் புரிந்து கொள்வீர்கள். கோவில் அமைப்புகள் சதுரம் சதுரமாக இருந்திடல் அதிமுக்கியமானது என்ற போதிலும் ஆகம வழிபாட்டு நெறிமுறையினையும், சடங்குகளையும் முன்னிலைப்படுத்தியும், நீண்ட சதுர வடிவங்களும் வந்து விட்டன. முன் சொன்னது போல இந்த நிலை பெரும்பாலும்

ஆகம பூசை நெறிமுறைகளுக்குத் தேவைகள் எனவாகின்றன. இதிலும் யாதொரு தவறும் இல்லை என்பேன். இந்தச் சதுர வடிவ திருக்கோவில்கள் மக்கள் வசதிக்காக முன்புறத்தில் நீட்டப்பட்டாலும் 1,2,4,6,8, என்ற எண்ணியல் (rhythmic Space Time units) தத்துவத்தை அடிப்படையாக கொண்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இது ஐந்தோடு நின்றுவிடாமல் 1,2,3,4,5,6,7----32 எண்ணிக்கை வரை விரிவடைகிறது என்பது பரமரகசியமான விண்ணியல் நுட்பமாகும். இவற்றில் இரட்டைப்படை, ஒற்றைப்படை எண்களுக்குக் குணங்களும், பயன்களும் உண்டு என்பது பிறிதொரு ரகசியம். இவற்றில் 8,9 என்ற எண்கள் விண்ணியல், மண்ணியல் தத்துவத்தை விளக்கிடும் முக்கிய எண்களாகும். இங்கே தான் $E=mc^2$ என்ற தத்துவம் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.



இரட்டித்த எண்கள்



ஒற்றித்த எண்கள்

பஞ்சப்பிராகரப் படங்கள்

'எட்டே எட்டியல் எட்டெட் டியலே
எட்டின் நெறியே அளவை மாநெறி'
'எட்டணு தேர்த்துகள் நெறியென் றாகி
எட்டு தேர்த்துகள் இம்மி நிலையாய்
எட்டுறும் இம்மி எள்ளென் றாகி
எட்டெள் ளொருநெல் அளவை குறித்தே
எட்டுறும் நெல்கை விரலெனக் கண்டே
அளவை ஆக்கம் அறிதல் கலையாய்
உளவுறும் நுட்பம் உண்மை கண்டே
கண்டுறும் அளவை கருத்தி லிருத்தி
விண்டுறும் நெறிமுறை விளம்பற் பாற்றே'
'எட்டெட் டியலாய் நெறிமுறை யோர்ந்தே
எட்டுறுங் கலைநிலை எண்ணியல் வழக்காய்
அணுவுள் ளணுவா யெட்டுறும் நிலைநெறி
அணுவுள் ளணுமுதல் கைவிர லளவை
ஈறா யியம்பும் ஐயள வியலே
நேர்முறை யாக்கம் இம்மியும் எள்ளும்
நிலைபெறுந் திறனே கைவிரல் நோக்கம்
எட்டின் இயலா யையள லியன்றே
நுட்பந் தெரிந்தே நுவலுவ கணக்கே[1]'

ஒளி அணு 1 = □ சதுரம்

இடவாய்பாடு [இடக் கணக்கு]

8 அணு	-	1 தேர்த்துகள்
8 தேர்த்துகள்	-	1 இம்மி
8 இம்மி	-	1 எள்ளு
8 எள்ளு	-	1 நெல்லு
8 நெல்லு	-	1 விரல்

1. இசைக் கணக்கினால் இனிய இன்பம் கிடைக்கிறது. அதே கணக்கைக் கொண்டு இடக் கணக்காக்கி இடத்தால் ஆன நிரந்தர இன்பம் கிடைக்கிறது. இதனால் வீட்டமைப்பையும் கோவில் அமைப்பையும் frozen music என்று உயர்த்திப் பேசிடலாம். உதாரணம்: தஞ்சைப் பெருவுடையார் கோவில்.

1. ''ஏழிசை நுட்பம் ஐந்திசைக் கூறே''

ஒலி அணு

கால வாய்பாடு [துடிக் கணக்கு]

8 அணுக்காலம்	- 1 தேர்த்துகள் காலம்
8 தேர்த்துகள் காலம்	- 1 இம்மிக் காலம்
8 இம்மிக் காலம்	- 1 எள்ளுக் காலம்
8 எள்ளுக் காலம்	- 1 நெல்லுக் காலம்
8 நெல்லுக் காலம்	- 1 விரல் காலம்

கால வாய்பாடு

[பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி மற்றும் பேராசிரியர் கே.ராமச்சந்திரன் தாளதீபிகை]

[1980]

8 கணம்	- 1 லவம்
8 லவம்	- 1 காஷ்டம்
8 காஷ்டம்	- 1 நிமேஷம்
8 நிமேஷம்	- 1 துடி
8 துடி	- 1 குரு

[2 துடி-1 துருதம்; 2 துருதம்-1 லகு; 2 லகு-1 குரு]

இந்தப் படங்களில் தத்துவ விளக்கத்தைச் சொல்லுவதற்கு நம்மிடையே இருக்கும் வாஸ்து சாஸ்திரங்களும், ஆகம சாஸ்திரங்களும் சான்றாக விளங்குவதோடு, இஃதொரு பிரபஞ்ச விஞ்ஞான அடிப்படை கொண்டதாகும் என்பதை மேற்கண்ட வாய்ப்பாடை திரும்ப நினைப்பூட்டி மேல் விளக்கங்களையும் சொல்ல இருக்கிறேன். அந்த மேல் விளக்கத்தை சுருக்கிச் சொல்ல வேண்டுமானால் பிரபஞ்ச துடிப்பலைகள் நாம் இன்று வைத்திருக்கும் கம்ப்பியூட்டரில் வெளிப்படும் துடிப்பலைகளுக்கு ஒத்துப் போவதை தனியொரு நூலில் சொல்ல இருக்கிறேன். வாஸ்து, ஆகம சாஸ்திரங்கள் அபூர்வ விஞ்ஞான அடிப்படை கொண்டது என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லி வந்ததை இப்போது நான் மேலும் சுருக்கிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது Vaastu Shastra is a Science of Energy and Matter, Time and Space, Rhythm and Form என்பது தான் இதன் சுருக்கம். அத்தகைய கருத்து எப்படி Computer Science க்கு ஒத்துப்போகிறது எனவும் சொல்லுவேன். [தனி நூல்]

வாஸ்து, ஆகம சாஸ்திரங்களில் அணுவியல் தொடர்பான இடக்கணக்கு, காலக் கணக்கு, துடிக்கணக்கு, உருவியல் தேற்றம் ஆகியவை உளதென்பதை எவரும் கண்டு கொள்ளாமல் இருந்தாலும் நடைமுறைப் பழக்கத்தில் சிதைவுறாமல் வந்து விட்டது. இதனை நாமும் நமது முன்னோர்களும் ஸ்தபதியர்களும் செய்த பாக்கியமே என்று சொல்ல வேண்டும். அவற்றைச் சுருக்கமாக இனிப் பார்ப்போம். இது புரியாவிட்டால் நாம் கோவிலுக்குப் போய் வருவதும், வாஸ்து விஞ்ஞான நெறி தழுவிய வீடுகளைக் கட்டிக் கொள்வதும், மாற்றி அமைப்பதும் பொருளற்றுப் போகும். உண்டியலில் பணத்தைக் கொட்டிவிட்டு வரும் ஆன்மிகச் செயல் மூட நம்பிக்கை என்ற முத்திரை குத்தப்பட்டதோடு எதிர்வரும் காலத்திலும் இந்த அவச்சொல் நின்று நிலைத்துவிடும்.

இவற்றையெல்லாம் நோக்கும் போது காலம் எனப்படும் ஒரு சக்தி (Force /

Speed of spiritual energy) ஒன்று மூலப்பொருளாக இருப்பது நன்கு இப்போது புலனாகும் நேரத்தில், இந்த காலம் புகாத இடமே இல்லை என்று சொல்ல நம்மை தூண்டிடும். எனவே உபநிஷதம் கூட காலத்தை பிரம்மம் என்று ஒரு சிலர் சொல்லுவார்கள் என்று சந்தேகத்தோடு சொல்வதை இங்கே நினைப்பூட்டுவதோடு இந்த முடிவே சரி என்பதையும் உங்களுக்குச் சொல்லி வைக்கிறேன். **"कालोहि ब्रह्ममिति केचित् वदन्ति"** *"காலோஹி பிரம்மமிதி கேசித் வதந்தி"*, என்ற ஓர் உபநிஷதம் சொல்லுமேயானால் இந்தக் காலம் என்ற பிரம்மத்தை காலப் பிரம்மம் என்று சிற்பியர்களும் சொல்லுவர். இந்த காலத்தை பிரம்மமாகக் கொண்டு அதனை காளி என்ற வடிவம் கொடுத்து அதனை உபாசித்த விஸ்வகர்மர்கள் தான் நான் ஏற்கனவே சொல்லியபடி சாக்தர்களாக இன்றும் இருக்கிறார்கள். எனவே, இந்த சக்தியை நம் எல்லோரும் மூலம் என நிச்சயமாக உணர்வோம். இந்த சக்தி எவ்வாறு உணரப்படுகிறது என்று கேட்டால், சக்தியின் துடிப்பாலும், அதனால் விளைந்திடும் வினைகளாலும், நம் வாழ்க்கையின் நடவடிக்கையிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். இந்தக் காலப்பிரம்மத்தைத் தான் மயத்தமிழில் **காலமாக் கடவுள்** என்ற செய்தியை முன்னால் எழுதிய கட்டுரைகள் வழியாக உங்களுக்கு அறியச் செய்தேன்.

இந்தப் புள்ளி இருக்கிறதே அஃது எப்படி வளர்கிறது என்ற செய்தியைச் சொல்ல வேண்டுமானால் மயன் சொல்லுவான், புள்ளிகளே கோடாகி, கோடுகளே வரியாகி, வரிகளே கோட்டுருவாகி இறுதியில் கோட்டுருவே உடல் தரித்த [மெய்] உயிர்ப் பொருளாக பிறழ்கின்றன என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த பிறழ்கிறது என்ற நிகழ்வு அதிமுக்கியமான ஒரு விஞ்ஞான நிகழ்வு(Scientific Phenomenon - Chemical change:) என்று சொல்லப்படும். இந்தப் புள்ளியே மேற்காட்டிய ஐந்து நிலைகளில் வளர்ச்சியுறுவதை கண்ணுற்ற மயன், ஓவியம் தோன்றுவதையும் எழுத்துரு தோன்றுவதையும் பாடல் இயற்றுவதையும், இசைப்பதையும் நடிப்பதையும் மூலத்தோடு, மூலத்தின் ஆற்றலோடு ஒட்டிவைத்து, இந்த மூலமானது இயல், இசை, நடம் என்ற முத்தமிழைத் தந்தது என்க. 10,000 ஆண்டுகளுக்கு முன்பு முதல் சங்ககாலத்தில் மயனால் சொல்லப்பட்ட சொல் இந்த

முத்தமிழ் என்பது இப்போது தெளிவு பெறும் என்று நம்புகிறேன். இதுவும், தமிழின் இச்சிறப்பை நாம் கூறும் போது **சந்தம்**[1] **நிறைந்த தமிழ்** என்று சொல்லி மகிழ்கிறோம். இந்தச் சந்தம் கூட ஒருவகையில் துடிப்பதால் பல எழுத்துக்கள் [ஓவியம்] சேர்ந்த கூட்டணி [அ] கோர்வைக்கும் சந்தம் என்று பெயர். அணு துடிப்பது போல இந்த சந்தம் என்ற எழுத்தொலிகளாலான கோவையும்/துடிக்கிறது என்பது பொருள். இதனை Rhythm என்றும், Speech Rhythm என்றும், சொற்கட்டு மற்றும் யாப்பு என்றும் சொல்லி வருகிறோம். இந்த Speech Rhythmகளைக் கொண்ட ஒலி அமைப்பைத்தான் பா என்றும், பாடல் என்றும், கவிதை என்றும் சொல்லுகிறோம். எனவே சந்தம் என்ற சொல் தமிழுக்கே உரித்தானது தான் என்றாலும் பிற மொழிகளில், குறிப்பாக சம்ஸ்கிருத மொழிக்கும் இந்த சந்த இலக்கணமும் உரியது ஆகும். சந்தம் நிறைந்த தமிழ் என்று சொல்லும் பொழுது சந்தம் நிறைந்த சம்ஸ்கிருதம் என்றும் சொன்னால் தவறில்லை. எத்தனை சந்தங்கள் உண்டு என்பதை சம்ஸ்கிருதம் வாயிலாக 32 என்று சொல்லப்படுவதை நினைப்பூட்டிக் கொள்ளவும். இது தமிழுக்கும் பொருந்தும். 32 எழுத்து ஒலிகளை எண்ணிக்கையாக [64 மாத்திரை] வைத்தும் ஒரு சந்தம் இருக்கிறது. அதற்கு **मात्रासमक** என்பது பெயராகும்[2]. அது யாதெனில், தமிழக்கு இதுபோல சந்தம் என்பது 32 எண்ணிகையாக இருப்பதை புலவர்கள் கூறுகிறார்கள். இதைத் தான் யாப்பிலக்கணம் (Prosody) என்று சொல்லி வருகிறோம். சிற்பங்களிலும், சிற்பக் கட்டிடங்களிலும் இத்தகைய ஒளி வழிப்பட்ட சந்தம் உண்டு தான். ஆச்சரியமாக இல்லையா!

மேற்காட்டிய இடக்கணக்கையும், அலைகள் பாயும் மற்றும் விரியும் நெறிமுறையையும் இப்போது தெரிந்து கொண்டிருப்பீர்கள். இங்ஙனம் அலைகள் விரிந்து செல்வதிலே ஒரு சீர் அல்லது சீலம் (Orderly expansion) ஒன்று நிகழ்வதை உற்றுக் கவனியுங்கள். இங்கே தான் விண்ணியல் தொடர்பான அணு இயக்கக் கணக்கு (dynamics of energy particle with intrinsic order) வெளிப்பட்டு இருப்பதை நம் நாட்டு விஞ்ஞானிகளோடு அயல் நாட்டு விஞ்ஞானிகளுக்கும் பணிவுடனும்

1. சந்தம் என்பது எழுத்துக்கள் அல்லது எழுத்தொலிகள் சேர்ந்த சொற்கட்டாகும். இதனை Speech Rhythm என்று சொல்க. Prosodyஎன்றும் சொல்வதுண்டு.

2. நான்கு பாதங்களைக் கொண்டு, பாதம் என்றுக்கு 8 அலகெனக் கொண்ட 32 சந்தம் (Rhythm) என்றும் 64 மாத்திரைகள் கொண்டதென்றும் சம்ஸ்கிருத மரபில் சொல்வர்.

பெருமிதத்தோடும் சொல்லுகிறேன். இதனால் பாரதீய கலாச்சாரம் உலகக் கலாச்சாரங்களில் தலையாயது என்பதை நான் மட்டுமல்ல அயல் நாட்டு விஞ்ஞானிகளும் இப்போது புரிந்து கொண்டு வருகிறார்கள். இவற்றையெல்லாம் அமெரிக்கர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் சொல்லி ஏற்கச் செய்துள்ளேன். இந்திய மொழிகளுக்குக் கிடைத்த ஒரு கொடுப்பினை எனலாம்.

இந்தப் பிரம்ம பிந்துவாகிய ஒளி அணு, அதுபோல ஒலி அணு ஒரே சீராக விரிந்து செல்வது இயற்கையின் இயல்பு! இதனை ஏன் என்று எவரும் தட்டிக் கேட்க முடியாது. நாம் அல்ப ஜந்துக்கள் தானே! இந்த அலைகளுக்குள் தான் இறுதியில் நாமும் விண்ணில், விண் என்ற ஒளி மாக்கடலில் கலந்து விடுகிறோம். மனிதன் காலமாகிடும் [மரணம்] நிகழ்வை இது நினைப்பூட்டுகிறது அல்லவா? இப்போது காலமே மூலம் என்பது நன்கு புரிந்திடும் என்று சொல்லிட விரும்புகிறேன்.

"காலமே எவைக்கும் மூலம், காலமே மூல ஆற்றல்
காலமே கோலத் தோற்றம், காலமே ஞாலத் தோற்றம்
காலமே விந்தை செய்யும், காலமே நுணுக்க மாயும்
காலமே அணுக்கள் ஆயும், காலத்தின் ஆற்றல் என்னே!" – மயன்

இதனைச் சுருக்கிச் சொன்னால், இந்தப் பிரபஞ்சத்தின் வளர்ச்சிப் படிமுறை, **மூலம், காலம், சீலம், கோலம், ஞாலம்** என்று பொருள்படும். மேலும் காலமே ஆக்கும் காலமே காக்கும் காலமே துடைக்கும் என்ற மயக் கூற்றும் தெளிவுபடும் என்க.

II

மனித உடம்பில் தலை, மார்பு, வயிறு, தொடை, கால், கை ஆகிய உறுப்புகள் பெரிய உறுப்புகள் ஆகும். அவை சடாங்கம் என்று சொல்லப்படும். இந்த அங்கங்களின் ஒவ்வொரு அணு அளவினதான இடத்திலும், எண்ணற்ற பரமாணுக்கள் அடங்கிக் கிடக்கின்றன. இந்த அணுக்கள் உயிர்ப்புள்ள அணுக்கள் என்று வாஸ்து சாஸ்திரத்தின் மூலம் தெரியவருகிறது. மேலே, முன்பக்கங்களிலே சொல்லிய காலவாய்பாடு, காலத்தால் விளைந்த இடவாய்பாடு, ஆகியவை பரம ரகசியமான வாய்பாடு என்று, சிற்பக்கலை மரபிலே கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் மொழி பெயர்ப்பாளர்கள் இதனை இந்நாள் வரை உற்று நோக்கவில்லை. கலை

நூலில், சொல் நயத்தையும், இலக்கணப் பிழைகளையும் மட்டுமே கண்டறிந்து ஒதுக்கி விட்டனர். இலக்கிய மொழி மட்டும் தெரிந்தோருக்கு கலைமொழி (mathematical language) தெரியாமல் போனதே காரணம் என்க. கலைத்துறை சார்ந்தோரை – கலை மொழி தெரிந்தோரை அறிஞர்கள் அணுகவுமில்லை[1].

இந்த அணுவின் செய்கையினால், ஆற்றல் விசையால், நமது உடல் இயங்கும் தன்மையை இயல்பிலேயே பெற்றிருக்கிறது என்பதை எவரும் உற்றுப் பார்த்தால் அறியக்கூடும். இந்தப் பரமாணுவை கண்ணால் பார்க்க முடியாத அணு என்றாலும், அந்தப் பரமாணுவை உணர்ச்சி பூர்வமாக நாம் அறிந்து கொள்ளலாம். அந்த அணுவும் உணர்ச்சிமயமானதுதான்.

இப்படிப்பட்ட பரமாணு நம் உடலில் எந்த இடத்தில் மையம் கொண்டிருக்கிறது என்று ஆய்வோமானால், அவ்விடம் நமது இதயம் என்று கூறிவிடலாம். இந்த இதயமானது சிற்றாகாஸம் என்றும், விண் என்றும், ஜீவான்மா என்றும், பல சொற்களால் சொல்லப்பட்டு வருகிறது. விண் என்ற சொல்லுக்கே துடித்தல், தெரித்தல், விரிதல், என்ற பொருள்களை – பொருள் நயத்தை – நடைமுறையில் உணரலாம். இன்னும் சொல்லப் போனால், நமது உடலை இயக்கும் பேராற்றல் வாய்ந்தது இந்த இதயம் என்று அறுதியிட்டுக் கூறலாம். அந்த இதய நடுவில் ஓர் ஆகாஸம் உளது. அஃது இடம் (Space) எனப்படும். இந்த ஆகாஸமானது எந்த ஒரு நிகழ்ச்சியையும், அதாவது காட்சியைப் பார்ப்பதும் உணர்வதும் ருசிப்பதும் இந்த நுண் இடத்திலே தான். இந்த நுண் இடத்தின் துடிப்பைத்தான் நாடித் துடிப்பு என்றும், காலத்துடிப்பு என்றும், மூலத்துடிப்பு என்றும், இடத்துடிப்பு என்றும் இதுவரை மேலெழுந்த வாரியாகச் சொல்லி வந்தேன். கண்களுக்குப் புலப்படாத இந்தப் பரமாணு, உணர்ச்சியே மயமான ஒரு நுண்பொருள் என்று மயன் கண்டறிந்து சொல்லி விட்டதோடு, இந்த நுண் பொருள் தான் பரமாணுவாக, பரம புருஷனாக, பரமபதமாக இருக்கிறது என்ற நுட்பத்தை பரம்பொருள் என்ற சொல்லால் நாம் சொல்லி வருகிறோம். நமது உள்ளத்திலும் வெளியிலும் இருப்பது பரம்பொருள்தான். கடந்தும்

1. Madam Alice Boner, an eminent scholar, equal almost to Madam Stella Krimrich has revealed boldly the truth behind the weakness of scholars not comprehending the technical work pertaining to Vaastu Shilpa tradition, which lies at the root of Bharateeya Culture.
"The understanding of the language of form, left inoperative in a society dominated by purely literary education and almost exclusive dependence on verbal and written communication, has nowadays almost vanished."

உள்ளும் இலங்குவதால் கடவுள் என்று அழகுபட -பொருள் படச் சொல்லி வருகிறோம். இந்தப் பரம்பொருள் அனைத்து உயிரினங்களிலும் உள்ள பொருள் ஆகிறது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" - திருக்குறள்
"என் உடம்பினுள் பரமன் உள்ளான்.
எனவே, உடம்பை நான் ஓம்புகின்றேன்" - திருமந்திரம்
"सर्वात्मीयं लिङ्गं आकाशमेव" - மயமதம்

பரம்பொருள் என்று சொல்லும் பொழுது, அந்த ஆற்றல்மயப்பொருள் அல்லது உணர்ச்சிமயப் பொருள், ஏற்கனவே காட்டிய ஒரு கணக்கிற்குக் கட்டுப்பட்டு கிடப்பதையும், இயங்கு வதையும் நாம் உற்று நோக்கினால் அறியக் கூடும். இந்த நுண் இடத்தில் தான் அனைத்துக் காட்சிகளும் ஒடுங்குகின்றன என்றும், இங்கிருந்துதான் அனைத்துக் காட்சிகளும் வெளிப்படுகின்றன என்றும், இதனைத் தான் லிங்கம் என்றும் சொல்லுகிறோம். "सर्वात्मीयं लिङ्गं आकाशमेव" என்பான் மயன். "लयं गच्छन्ति भूतानि संहारे निखिले तथा । सृष्टिकाले पुनः सृष्टिः तस्मात् लिङ्गमित्यभिधीयते"- சிவாகமம். "अन्तर्बहिश्चतत् सर्वं व्याप्यनारायण: स्थित:" - நாராயண சூக்தம். எந்த ஒலிமயப் படமானாலும், அப்படம் ஒளிமயக் காட்சியாக மாறித் தான் உருவம் தோன்றும் அல்லது புலனாகும் என்பது பொருள். இன்னும் விளக்கிச் சொல்ல வேண்டுமானால், ஒளியும் ஒலியும் ஒன்றன் மீது ஒன்று நமது இதயத்தில் அமர்ந்து ஒரேயொரு பொருளாக மையமிட்டுக் கிடக்கிறது என்று சொல்லலாம். இவை இணைந்தே கிடக்கும் ஒரு பொருள் ஆகும் என்பதே உண்மை. இந்த இரு பொருள்களின் ஒட்டுமொத்தத்தைத் தான் சம்ஸ்கிருத்தில் பரப்பிரம்மன் என்றும் தமிழில் பரம்பொருள் என்றும், மேலும் நுண்பொருள் என்றும், சமயத் துறையில் பார்வதி பரமேஸ்வரன் என்றும் நாம் சொல்லி வருகிறோம். இவற்றுக்கெல்லாம் உடல் தரித்த உருவங்களும் கொடுத்து இறைப்படிமங்கள் என்று சொல்லி, கோவிலில் வைத்து வழிபடுகிறோம். அதாவது பிரம்மம் என்ற அந்த ஒரு பொருள் இயற்கையில் ஒன்றாக இருப்பதோடு, செயல்படு நிலையில் இரண்டாக வெளிப்படுகிறது என்பது அறிவியல் நுட்பம் ஆகும். இந்த இடத்திலே தான் நாம் நினைத்த காட்சிகளையும் பார்க்கிறோம், பிறர் சொல்லிய காட்சிகளையும் கேட்கிறோம் என்று சொல்ல வேண்டும். அதுபோல நம்மால் அனுபவிக்கப்படும் அகக்காட்சிகளையும் ஒளி, ஒலி வடிவமாக மாற்றியே வெளியில் தோற்றுவிக்கிறோம். இதனால் மொழியும் எழுத்தும் நம்மிலிருந்து பிறந்து விடுகின்றன. நம் ஒளி அலைகளால் விளைவது யாதெனில், கண்ணால் பார்த்திடும்

ஒளிக் காட்சி அல்லது ஒளிப்பொருள் என்று சொல்ல வேண்டும். அதேபோல, நம் அகத்திலே கண்ட ஒளிக் காட்சிகளை ஒலிக் காட்சியாக, அதாவது சொல்லோவியமாக (uttered word form) பேசிக் காட்டுகிறோம். இதனால் பேசுவதும் பார்ப்பதும் ஒன்றே என்ற கருத்து நம்மிடையே தோன்றி **சொல்லும் பொருளும் ஒன்றே**[1] என்ற ஒரு அறிவியல் தேற்றம் ஏற்பட்டு இன்று வரை இருந்து வருகிறது.

இத்தகைய ஒரு பரமாணு எப்படித்தான் இருக்கிறது, அதற்குள் கண்களுக்குத் தெரியாத எத்தனை பரமாணுக்கள் அடங்கியிருக்கின்றன என்பதை கணக்கிட்டு சொல்ல முடியும். ஆனால் அதனை உறுதி செய்வதற்கு இக்காலத்தில் அறிவியல் மேதைகளால் கண்டுபிடிக்கப்பட்ட கணக்கியல், உதவி செய்திருக்கிறது என்று மறைக்காமல் சொல்ல வேண்டும். அதே சமயம், அந்தக் கணக்கை நாம் திண் பொருள் (Visible and tangible state of existence) நிலைக்குக் கொண்டு வந்து நிரூபித் திருக்கிறோம். மூலத்தில் இரண்டு கணக்குகளும் ஒன்றித்துப் போகின்றதை ஏற்கனவே காட்டிய வாய்பாடில் காணலாம். இது தான் சான்று. இத்தகைய நுட்பத்தை இக்கால விஞ்ஞானம் (Computer Science) சொல்வது போல விளக்கமாக வாஸ்து சாஸ்திரங்கள் சொல்லிக் காட்ட முடியாவிட்டாலும், நமது திருக்கோவில் களின் அமைப்பில் (layout with enclosure walls)ல் உள்ளடக்கி இந்தப் பரம் பொருளை அனுபவப் பொருளாக மற்றும் காட்சிப் பொருளாகவும் நமது முன்னோர்களாகிய சிற்பக் கலை மேதைகள் செய்து வைத்துவிட்டு, அவர்களும் இந்த பரமாணுவாகிய பரம்பொருளில் அடங்கி விட்டார்கள். இதனைக் கண்டு உறுதி செய்திட இக்கால computer science நமக்கு உதவியுளது என்று சொன்னால் great men think alike என்ற கூற்றுத் தான் நினைவுக்கு வருகிறது.

முற்காலத்தில், சில்பகுரு மூலமாகவே சீடர்களாகிய சிற்பிகள் இதனைத் தெரிந்து கொள்ள முடிந்திருக்கிறது. ஆதலால், இந்த இடத்தில் குருவை அற்புத ஆற்றல் வாய்ந்த ஒரு பரம்பொருள் என்று தான் அந்தச் சீடர்கள் கருதுவாராயினர். குருவழி வந்திடும், சொற்களுக்கு அத்தகைய வலிமை வாய்ந்த அல்லது ஆற்றல் வாய்ந்த பொருளைக் கண்டறிந்தவர்களை **"விஸ்வகர்மர்கள்"** என்று பிரளய காலத்திற்குப் பிறகுத் தோன்றிய ஞானசாஸ்திரங்கள் சொல்லி வந்ததை,

1. இதனை உருவகித்திருப்பது அர்த்த நாரீஸ்வரர் உருவமாகும். சொல்லும் பொருளும் பிரிக்க முடியாதது என்ற கருத்தை கண்ணால் பார்த்திடச் சிற்பிகள் செய்தளித்த அற்புதப் படைப்பு.

விஸ்வகர்மாவாகிய பரப்பிரம்மம் இந்த பிரபஞ்சத்தை – உணர்ச்சியே மயமான பிரபஞ்சமாகவே மாற்றி, அதனை மூலமாக வைத்து, மூலத்தூண் என்ற ஒரு தமிழ் நூலிலும், மூலஸ்தம்பம் என்ற சம்ஸ்கிருத நூலிலும், ஸ்காந்த புராணத்திலும்[1] ஸ்ரீமத் பாகவதத்திலும் இவ்வறிவியல் நுட்பம் இடம் பெறலாயின என்பதை கீழே வரும் பாக்களில் காண்க.

விண்வெளித் தோன்றா முன்னர் மண்கரு வமையா முன்னர்
விண்ணிலை அமையா முன்னர் பண்ணியல் தோன்றா முன்னர்
எண்ணியல் இலங்கா முன்னர் ஏழிசைத் தோன்றா முன்னர்
திண்ணிய ஓசை யாலே ஓம் ஒளி ஒலித்த தன்றே – மூலத்தூண்

नभूमिं नजलंचैव नतेजो नच वायव: ।
नच ब्रह्मा नचविष्णुश्च नचरुद्रश्च तारका: ।
सर्वशून्य निरालम्बो स्वयंभू: विश्वकर्मण: ।।

- மூலஸ்தம்பம்

"एक एव पुरा वेद: प्रणव: सर्ववाङ्मय: ।
देवो नारायणो नान्य: एकोऽग्निर्वर्ण एव च ।।"

- பாகவதம்

"शिल्पिनां प्रणवं चैव गायत्रयं च समाचरेत् ।।"

- ஸ்காந்தம்

என்ற வரிகள் நமக்கு இதனை வலியுறுத்திக் காட்டுகின்றன.

ஏன், இத்தகைய செய்திகளையும் பாரம்பரியத்தையும் வேதவியாசன் தொகுத்திட்ட ஸ்காந்த புராணத்தின் நாகரபடலத்தில் இந்த பிரபஞ்ச உற்பத்தியை இத்தகைய கோணத்தில் அக்காலத்தில் வழக்கத்திலிருந்த சொற்களைக் கொண்டு தான் வேதவியாசன் சொல்லியிருக்கிறான் என்றால், இக்காலத்தைச் சேர்ந்த – அதற்குத் தொடர்புடைய கலைச் செய்தியை – ஏற்றுக் கொள்ளலாம் தானே? இந்த வேதவியாசன் யார் என்பதை பிறகு பார்ப்போம். அதுபோல இந்த விஸ்வகர்மர் யார் என்பதையும் பிறகு பார்ப்போம். வேதவியாசன் ஸ்காந்தத்தில் கூறும் சொற்களைப்

1. ஸ்காந்த புராணத்தில் நாகரகாண்டம் என்ற அத்தியாயத்தில் விசுவகர்மர்களிடம் தொல்பழங்காலத்தில் [குமரிக்கண்ட காலத்திலும் இன்று நம் காலத்திலும் இச்செய்திகள் வெளிப்பட்டிருக்கின்றன] ஐந்து வேதங்கள் இருந்த செய்தியையும், அதிலும் பிரணவம் சிற்பிகளுக்குரியது என்றும் தெரிய வருகிறது. ஸ்லோகம் பின்வருமாறு: "ऋग्वेदश्च मनूनांच मयानां याजुषं तथा । त्वष्टूणां सामवेदश्च दैवज्ञानां त्वधर्वक: । शिल्पिनां प्रणवं चैव गायत्रयं च समाचरेत् ।।" - வேதவியாசரின் ஸ்காந்த புராணம், வெளியிட்டவர் மகா மஹோபாத்யாயர் பேடப்பட்டி S.நாகேஸ்வரராவ், ஹைதராபாத். நன்றி. அலெக்ஸாண்டர் கோன்டிரடோவ் என்பவர் ஐந்தாவது வேதத்தை தமிழர் வேதம் என்றே கூறுகிறார். (Riddles of the three oceans, Page 187). வாஸ்து சிற்ப விஞ்ஞானம் பற்றியும், விசுவகர்மர்களுக்கே உரித்தான ஆசார அனுஷ்டானங்களைக் கூறும் அற்புதப் படலம் இஃதென்க. விசுவகர்மர்கள் மனு, மய, துவஷ்டா, சில்பி, விஸ்வக்ஞர் என்று ஐந்து வகை நுண் வினைஞர் ஆவர்.

பாருங்கள். வேதமூலம் தெளிவுறும். 'முன் தோன்றிய' மூத்த குடியும் தெரியவரும்.

மேலான ஒரு விஞ்ஞானக் கருத்தை சொல்லிக் காட்டுவதற்கு இக்கால மொழியானது நன்கு ஓங்கிப் பெருகி விட்டது. 15000, 20000 ஆண்டுகளுக்கு முன்பாக சொற்பஞ்சம் இருந்திருந்ததாலும், உணர்ச்சிக்குப் பஞ்சம் இல்லை என்று சொல்லி திருப்தி அடையலாம். உணர்ச்சிகள் சொல் வடிவம் பெருமுன் தெரி வடிவங்கள் ஆகியுள்ளன எனலாம். மின்னலுக்குப் பிறகுதானே இடிமுழக்கம்? எனவே, அக்காலத்திலும், பிற்காலத்திலும் பல சொல்லோவியங்களையும், கல்லோவியங் களையும் படைத்துக் காட்ட முடிந்திருக்கிறது என்று இப்போது துணிந்து சொல்லலாம். இந்த அறிவியல் நுட்பத்திற்கு தமிழும் சம்ஸ்கிருதமும் ஒத்துப் போனாலும், தமிழில் இப்போது வெளிவந்திருக்கும் **"பிரணவ வேதம்"** என்ற ஐந்தாவது வேதம் அடிப்படையானது – தலையாயது – என்று சொன்னால் இதனை மொழிவெறி என்றோ, இனவெறி என்றோ அல்லது வேறுவிதமாகவோ சொல்லித் தமிழனின் உயர்வை இங்கே மட்டம் தட்டி விடாதீர்கள் என்று சொல்லிட விரும்புகிறேன். மேலாய்வு செய்து நிரூபியுங்கள். தமிழ் ஒளியும், தமிழ் ஒலியும் மூல நிலையில் ஓம்ஒளி, ஓம்ஒலி என்று பரம்பொருளை இரண்டாக பிரித்துப் பார்கிறது என்று சொன்னால் இந்தச் சான்று போதாதா? இத்தகைய இரண்டு சொற்கள் [ஒளி, ஒலி] இந்த பிரபஞ்சத்தின் நுட்பத்தை கண்டறிந்து சொன்ன மூலப் பொருளாக இருந்தன என்று சொல்லி நாம் பெருமை அடையலாம். அதனைச் சுருக்கமாக, மயன் என்ற சங்க கால விஞ்ஞானி மிக அழகாகவும், உச்சத் தேற்றமாகவும் எழுதி வைத்ததை மீண்டும் சொல்லி வைக்கிறேன். **"கட்டிடக் கலையே கணக்கியல் உச்சி[1]"** என்பதே அத்தேற்றம். பரம் பொருளாகிய கடவுள், அனைத்துப் பொருள்களுக்கும் அமைதியும் இன்பமும் கொடுக்கக் கூடிய நோக்கமுடையவ ராதலால் இதனைப் இப்பிரபஞ்சத்தின் உச்சப் பொருளை, அதாவது பரம்பொருள் நிலையை இந்த உலகமே ஏற்றுக் கொண்டுள்ளது. இல்லை என்று எவரும் சொல்லவில்லை. இந்தப் பரம்பொருள் [ஆத்மா பரமாத்மா] என்ற ஒரு பொருள் இரண்டு பொருளாக வெளிப்பட்ட நிலையில் **பரப்பிரம்மம் என்றும், சப்தப்பிரம்மம்** என்றும் சொல்லியிருப்பதையும் கீழே தருகிறேன்[2]. இந்த விளக்கம் உங்கள் அறிவுக்கு

---

1. "Architecture is the zenithal achievement of Mathematics" என்பது பொருள்.
   "Architecture is the matrix of civilization" - Prof.Percy Brown.
2. द्वे ब्रह्मणी वेदितव्ये शब्द ब्रह्म परं चयत् ।
   शब्द ब्रह्मणि निष्णातः परं ब्रह्माधिगच्छति ॥ - பிரம்மோபநிஷத்.
   பிரம்மம் இரண்டாகவுளது. சப்தப் பிரம்மம் என்றும், பரப் பிரம்மம் என்றும் சொல்லப்படும். சப்தப் பிரம்மத்தை

போகும் என்பதையும், சுலபமாகப் புரிந்து கொள்ள முடிகிறது என்பதையும் நீங்களே சொல்லிடலாம். முதலில் பிற்கால உபநிஷத வாக்கியத்தைச் சொல்லி, அடுத்து முற்கால தமிழ் விளக்கத்தை சொன்னால் இதுவரை நான் சொல்லி வந்த கருத்துக்கள் உங்களுக்கு பளிச்சிடுவது இந்த ஒளிப்புள்ளியில் தான் என்று சொல்லிவைக்கிறேன். சொல்லோவியத்தையும், கல்லோவியத்தையும் புரிந்து வெளிப்படுத்தும் மூலம் இந்த ஒளியும், ஒலியும் சேர்ந்த மூல ஒளி தான் என்று மேலும் உங்களுக்கு புரியும் என்று நம்புகிறேன்.

இந்தச் செயலைத் தூண்டிவிடுவது காலம் (Absolute Time) தான் என்பதை மீண்டும் இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. காலம் ஒரு அசையும் பொருள் (Speed of Time energy, Velocity of Spiritual light). எனவே, இந்த அசைவுக்கு, துடி என்றும், ஆங்கிலத்தில் Vibration என்றும் நாம் பெயர் வைத்துக் கொண்டிருக்கிறோம்; pulse என்றும் சொல்லி வருகிறோம். இந்த துடிப்பாகிய மூலத்தைத்தான் விண்பொருளாகிய நடராஜன் தனது வலது கரத்தில் பிடித்திருக்கும் உடுக்கையின் அலையத்தின் மூலம் உணர்த்துகிறான். துடிப்பாகிய காலம், காலமாக் கடவுளாகிய நடராஜன் இரு கூறாக - இரு பொருள்களாக - விளங்குவதை - உணர்த்துவதை உற்று நோக்குங்கள். அதன் விளைவால் ஒளி தோன்றுவதை இடது மேற்கரத்தில் பிடித்திருக்கும் சுடர் காட்டும். ஒளி முதலில் தோன்றுவதை முன்னோக்கி இடக்கை நகர்ந்திருப்பதின் நுட்பத்தைக் காண்க. இதனை புலப்படுத்தும் ஆகாஸ துடிப்புத்தான் மூலம் [காலம் தான் மூலம்] என்பதை சிவனுடைய அங்கங்களின் அபிநயத்தின் மூலம் காட்டப்பட்டிருப்பதையும் உற்று நோக்குங்கள். காலமே[1] எவற்றுக்கும் மூலம் என்றும், காலமே ஞாலத் தோற்றம் என்றும் சொல்லுவான் சங்க காலச் சிற்பச் சித்தன் மயன்.

இப்பொழுது மூலப்பொருளையும், மூலப்பொருளின் ஒளி, ஒலிப் பொருள் களையும், அதாவது பரம்பொருளையே கண்டு விட்டோம் என்று சொன்னால் மிகையாகாது அல்லவா? நாம் இன்புறக்கூடிய ஓர் உச்ச நிலை அல்லது ஆனந்த நிலை என்று இதனைச் சொல்லலாம். இந்தக் கருத்தை பிரபஞ்சத்தில் நிகழும் ஒட்டுமொத்த அறிவியல் கருத்தை, இடமிருந்து வலமாக தன்னைத்தானே சுற்றிக் கொள்ளும் நடராஜப் பெருமானின் வடிவத்தை கண்முன் நிறுத்தி உவகை

1. काल: सृजति भूतानि, काल: संहरति प्रजा: । सर्वे कालस्य वशगा:, कालो तस्य वशे स्थित: ॥

கொள்ளுங்கள். இதுவே மேலை நாட்டினர் தேடிக் கொண்டிருக்கும் Spin theory என்க. எதைச் சுற்றி எனில், **ஒளி நூல்** எனப்படும் **பிரம்ம சூத்திரத்தைத்** தான் பற்றிக் கொண்டு சுற்றுகிறது. இந்த சூத்திரமே பருநிலையில், மூலத்தூண் எனப்படுகிறது. ஏன், லிங்கமே மூலத்தூணாகத் தானே கற்பிக்கப்பட்டு உளது! தெரிய வேண்டிய அரிய செய்தி இஃதாகுமன்றோ! கேட்டகாமலும், சொல்லாமலும் மறைந்து போயிற்றென்க!

இத்தகைய மூலத்தில் ஒன்றித்த பரம்பொருள் பல நுண் அணுக்களால் ஆன பிண்டம் (miniature cosmic form) என்பதை இனிக்காணப்போகிறோம். இந்த நுட்பத்தை நமது திருக்கோவில் களில் அமைத்து வைத்து, (Temple layouts & Prakara archetypes) உலகம் உய்வதற்கு, - செய்து காட்டிய - பண்டையச் சிற்பியாகிய மயனை நாம் கடவுளாகப் பார்க்க வேண்டுமல்லவா? எனவே, எல்லா வழிபாட்டு இடங்களிலும் தெக்ஷிணாமூர்த்தியாக - தென்னவனாக மயன் விளங்குகிறான்.

நாம் ஏன் பிறந்தோம், எப்படிப் பிறந்தோம் என்று விளக்கி சொல்ல முடியவில்லை. அவனே பல்வேறு சொற்களால் சொல்லி வந்த நிலையில், அவனை லோக குரு என்றும், ஜகத்குரு என்றும், அந்தக் குருவே பிரம்மா, விஷ்ணு மகேஷ்வரன் என்றும் சொல்லுவதோடு[1], அவனுடைய மொத்த வடிவமே லோக்குரு [பிரபஞ்சாத்மா] என்று சொல்லி முடித்துக் கொண்டு, இவனை சக்தி, சிவ, விஷ்ணு ஆலயங்களில் பிற்காலங்களில் தென்னவனாக, தென்முகத்தனாக, தெக்ஷிணா மூர்த்தியாக வியாழ பகவானாக, - பரம குருவாகப் போற்றி வருகிறோம். இவனை சில்பகுரு எனச் சிற்பியர் கூறுவர். இவன் தன்னைத்தானே படைத்துக் கொண்ட அறிவியல் உருவமே - பஞ்சமுகப் பிரம்மன், ஐந்தமிழ் மறையோன், விஸ்வகர்மன் என்று போற்றப்படுபவன் ஆனான். இவனைச் சிற்பிகள் மறந்திடல் கூடாது.

இத்தகைய கருத்தை உட்கொண்ட வரலாற்றுக் கால மகா சிற்பிகள், கன்னியாகுமரிக்கு அருகில் சுசீந்திரம் தாணுமாலயன் [தாணு-மால்-அயன்] என்ற கோவிலில் முதன் முதலில் மயன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறான் என்று நாகர்கோவில் Dr.S.பத்மநாபன் அவர்கள் சொல்லுவதை வரவேற்கிறேன். அவ்வுருவம் சுவரில் அல்ல தனிக் கோயில் தனி நாயகனாக, அங்கே எழுந்தருளியுள்ளான் என்பது அன்னாருடைய அற்புதக் கண்டுபிடிப்பு. இவனை வணங்கிய பின்னரே கோவிலில் உள்ள பிற கடவுளர்களை வணங்க முடியும். அத்துணை முக்கியத்துவம்

1. गुरुर्ब्रह्मा गुरुर्विष्णुः गुरुर्देवो महेश्वरः । गुरुर्साक्षात् परब्रह्मा तस्मैश्री गुरवे नमः ॥


கொடுக்கப்பட்ட இடம் சுசீந்திரம், தாணுமாலயன் கோவிலே. பிரளயத்திற்குப் பிறகு அவன் கரையேறி அமர்ந்த இடம் சுசீந்திரம் என்பேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் மயன் பறம்பு என்ற இடத்தையும் தொட்டுக் காட்டியவர் டாக்டர்.S.பத்மநாபன் அவர்களே!

அங்கே தெற்குப் பார்த்த தென்னவனாக தனித்ததொரு கருவறையில், கோபுர வாயிலை ஒட்டி முதற்கோவிலாகக் கட்டப்பட்டிருக்கிறது. அவனை தென்னவன் என்றும், வடவன் என்றும், இரண்டு விதமாகப் புராணங்கள் சொல்வதில் ஓர் உண்மையைக் கண்டேன். 15000, 20000 ஆண்டுகளுக்கு முன்பாக மலையில் வாழ்ந்தவர்கள் விந்திய மலைத் தொடரை நமது பாரத நாட்டு வட எல்லைக் கோடாகக் கருதி இருக்க வேண்டும். அந்த நேரத்தில் விந்தியத்திற்கு அப்பால் கடல் தான் இருந்தது என்று ஆராய்ச்சியாளர் நிறுவுகிறார்கள். அப்போது தான் விந்தியமலை நமது வட எல்லை, அதன் பிறகு தான் வேங்கடம் வட எல்லை ஆயிற்று என்பது தெரியவருகிறது. எனவே, விந்தியம் முதல் குமரிக் கண்டத்தின் தென் எல்லைவரை உள்ள இடத்தைத்தான் பாரத வர்ஷம் என்றும், பரதக்கண்டம் என்றும் நாம் சொல்லி வருகிறோம். பூமியை மூடியிருந்த பனிப்படலம் உருகி, முதன் முதலில் தோன்றியதே இந்தக் குமரிக்கண்டம் தான். இது லுமேரியன் கான்டினட் என்றும் சொல்லப்படும், அதாவது இரண்டும் ஒன்றென இப்போது விளங்கக்கூடும். நாவலந்தீவு என்ற பெயரும் இதற்கே உரியதாகும். நீரிலிருந்து வெளிவந்தது மலை என்றாலும், கல் என்றாலும், கண்ணால் பார்த்து பிற்காலத்தில் உணவாகவும் ஆன முதன் முதல் உயிர்ப் பொருள் மீன் என்று சொல்லும் நிலையில், மீனை உண்டு வாழ்ந்த அந்த பூர்வீகக் குடிகளை பரதவர் என்று சொல்வார்கள். இதனால், பரதவர் வாழ்ந்த நாடு பாரத நாடு என்று பிற்காலத்தில் சொல்லப்படுவதாயிற்று. அந்தப் பரதவர் குலத்தோன்றலே வேதவியாசனாகிறான். முதல் மனிதனே தமிழன் என்று மார் தட்டிச் சொல்லும் நிலைக்கேற்ப **கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே [வாளோடு] முன்தோன்றிய மூத்தகுடி தமிழ்க்குடி** என்று சொல்லுவது இப்பொழுது அனைவருக்கும் உண்மையெனப்படும் என்க; ஐயமின்றிஏற்றுக் கொள்ளலாம். இதற்கு மேல் சொல்லுவதற்கு ஏதும் இல்லை என்றும் சொல்லலாம். Atlantis Civilization-ஐ ஆய்ந்தோரும் இந்தச் செய்திக்கு வந்து விட்டார்கள் என்க. இந்தப் பரதவர்கள் தான் - பண்டு வாழ்ந்தோர் தான் - பாண்டியர்கள் என்று சொல்லப் படுவாராயினர். எனவே, வடநாடு தென்னாடு என்று சொல்லக் கூடிய இவ்விடங்கள்

விந்திய பிரதேசத்தையும், தென் கோடியில் உள்ள குமரி மாநிலத்தையும் குறிப்பிடும் என்ற கருத்தை[1] நல்ல வண்ணம் மனதில் நிறுத்திக் கொண்டு, உலக வரலாறு படித்தால் அன்றி உலக மக்கள் அனைவரும் ஓரினப்பட்டவர்கள் என்ற திருமந்திர கருத்தும், ஸ்ரீமத் பாகவதம் கூறும் ஓரினக் கொள்கையும் அர்த்த மற்றதாகப் போய்விடும். நமது முன்னோர்கள் பொய் சொல்லிப் பிழைத்தவர்கள் அல்ல. உண்மையை மனதில் பதிய வைப்பதற்காக உணர்ச்சி மயமாக காவிய நயத்தோடு சொல்லுவது பழக்கமாயிற்று. இப்படித்தான் உணர்ச்சிப் பொருளாகிய பரம்பொருள் சொல்லும் பொருளுமாக விளக்க முற்றது என்பதை இங்கே சொல்லி முடிக்கிறேன். அடுத்து,

சொல்லின் மூலத்தை நன்கு அறிந்தவர் தான் பொருளின் மூலத்தை அறிந்தவராவர் என்ற உபநிஷதக் கருத்து இப்பொழுதுதெளிவுபடும் என்றும், இதையும் இதன் பயன்பாட்டையும் முதல் முதலில் சொல்லியவன் முதற் சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் என்பதையும் மறவாதீர்கள். இறைவன் தனது செயல்பாட்டை (dynamism) அவனே ஒரு கணக்கியலில் அடக்கியிருக்கிறான் அல்லது இந்த பிரபஞ்சமாக உருமாறியிருக்கிறான் என்று நான் சொல்லிவருகிறேன். இந்தக் கருத்தை **சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதை ஆகிறான்** என்ற உண்மை விளக்கத்தை [கவிதையாக] நான் அடிக்கடி நம்மக்களுக்கு உணர்த்தி வருகிறேன். ஒருவனே இரண்டையும் சொல்லுகிறான் - இரண்டையும் செய்கிறான் - அல்லது ஒருவனே இரண்டாக ஆகிறான் என்ற கருத்தைக் காட்டும் படத்தைக் கீழே காண்க. இவையிரண்டும் ஜியோமிதி [கோட்டுரு] (archetypal form) உருவங்கள்.

விண்ணியலும் மண்ணியலும்



1	2	3	4
அணு ஏக பதம் கடவுளின் முதல் தோற்றம் விண் அணு நிலை	அதிர்வுற்ற விண் அணுக்கள் 64 பதங்கள் [புனித மாநெறி] வஸ்து புருஷன்	திரிபுற்ற மண் அணுக்கள் 81 பதங்கள் [மனிதமாநெறி] வாஸ்து புருஷன்	திரிபுற்ற வட்ட வடிவ பௌதிக நிலையில் 64 பதங்களே மண் அணு நிலை


வஸ்துவே வாஸ்துவாகிறது; விண்ணே மண்ணாகிறது


---

1. हिमाद्रि कन्यकोर्अन्तर्गतं देशमिति उदाहृतम् - காஸ்யப வாஸ்து நூல்
இமயம் முதல் குமரி வரை அடக்கமுற்ற நாடு நமது தேசமாகும் என்று ஒரு பிற்கால Technical சாஸ்திரம் கூறுவதையும் உற்று நோக்குக. இப்போது இதுதான் சரி - ஸ்தபதி.

இப்படித் தான் முதன் முதலில் கடவுள் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறான் என்பது அதிநுட்ப அறிவியல் உண்மையாகும். God is a supreme sensitive substance என்றும், God geometrises himself into life form என்றும் சொல்லலாம். இதனால் Cosmos itself is a living organism என்க. अणोरणीयान् महतो महीयान् அணுவாகவும் அண்ட மாகவும் உள்ளான் என்பது பொருள். இஃதொரு மகத்தான அறிவியல் தேற்றம் என்க.

இங்கே $E=mc^2$ ஆவதையும் விண்ணே மண்ணாவதையும் கவனிக்க. ஒன்றை **பூனிதமா நெறி** என்றும், பிறிதொன்றை **மனிதமா நெறி** என்றும் மயன் தனது மயத் தமிழில் சொல்லிய ஒளிமய மூல இடங்களை பதம் [சிறுசதுரங்கள்] என்ற சொல்லால் பிற்காலத் தமிழ் விஞ்ஞானியர்கள் சொல்லிய போது அவற்றை **மண்டூக பதம்** [தவளை மாநெறி] என்றும், **பரமசாயிக பதம்** [மனிதமாநெறி] என்றும் சொல்லி வந்ததை இன்று நம்மிடம் இருக்கும் வாஸ்து சிற்ப ஆகம சாஸ்திரங்களில் காணலாம். இவற்றுக்கெல்லாம் நாம் வைத்த பொதுப் பெயர் தான் **வாஸ்து புருஷ மண்டலம்** என்று சொல்லப் படுவதாயிற்று.





வாஸ்து புருஷன் கிடக்கை
(enclosed energy as living organism)
(The lie of Cosmic energy pictographically symbolized into a most powerful human form)

இது தொடர்புடைய கணக்கியலுக்கு, கணக்கே படமாவதை அதாவது கணக்குரு ஆவதை இங்கே சொல்லப் போகிறேன். இதுவே சிருஷ்டி நுட்பம். இந்தக் கணக்கு – உருவை mathematical linear form அல்லது Spatial form என்று சொல்ல வேண்டும்!

இவ்வளவுகளைக் கொண்டு இயற்றிய தமிழக பஞ்ச பூத ஸ்தலங்களை உங்கள் நினைவிற்கு கொண்டு வாருங்கள். அதனைப் பஞ்சலிங்கக் கருத்தாகவும் சமயத்துறையில் சொல்லியதையும் நினைவு கொள்ளுங்கள். எனவே, நமது

திருக்கோவில்கள் இத்தகைய உயர் விஞ்ஞானப் படிமங்கள் (replicas) என்று சொன்னால் மிகையல்ல.

இப்படி இதுவரை எவரும் சொல்லவில்லையே என்பது உண்மை தான்! அரசன் மடியில் வீற்றிருந்த கலைஞர்களை, சமுதாயத்தின் காலடியிலே – தள்ளி விட்டதே நவயுக உலகம்! நிற்க. மேலும், கல்லும் மண்ணும் விஞ்ஞானப் பொருள் ஆதலால், இந்த விஞ்ஞானக் கருத்தை நிலை நிறுத்திய அந்த மகா சிற்பியை [மயனை] கடவுள் என்று நினைத்து வணங்க வேண்டும். அதற்குச் சொந்தக் காரணாகிய – மூலவனாகிய அந்த – அறிவின் முதல்வனை [மயனை] – மறந்து விடக்கூடாது. இதனைத் தெரிந்த நேரத்தில் நமது காலச் சிற்ப மேதைகளையும் மறந்திடக் கூடாது. மூலஸ்தானத்தைக் கட்டியதோடு பஞ்சப் பிராகாரங்களையும், சப்தப் பிராகாரங்களையும் கட்டிக் கொடுத்த விண்ஞான மேதைகள் இவர்களன்றோ! விவரத்தை அடுத்துப் பார்ப்போம்.

முன்னொரு காலத்தில் manual type writer ரைக் கொண்டு நாம் தட்டச்சு செய்து வந்த காலகட்டத்தில் அதனுடைய key board ல் எந்த இடத்தில் அழுத்தினாலும் ஒரு மையத்தை நோக்கியே சென்று, அடித்து, நாம் நினைத்ததை தட்டச்சு செய்து கொடுத்ததை இப்போழுது நினைத்துப் பார்த்தால் ஒரு பெரிய உண்மை தெரியவரும். அதேபோல key boardல் உள்ள computer எழுத்துக்களைத் தொட்டு (soft touch) தட்டச்சு செய்யும் பொழுது அதுவும் ஒரே இடத்தில் அந்த எழுத்தை பதிவு செய்வதைக் காணலாம். இரண்டு Type writerகளும் ஒரே மையப்புள்ளியை நோக்கிப் பாய்வதில் ஒரு ஆன்மீகச் செயல்பாடு (Spiritual phenomenon) நிகழ்வதைக் காணலாம். நாமும் நமது அகத்தில் உள்ள ஆகாசம் என்ற நுண் இடத்தில் [பிரம்மபிந்து] நாம் பார்த்தவைகளை எல்லாம், மற்றும் கேட்டவைகளை எல்லாம் ஒரே புள்ளியில் தான் பெற்றும் வெளிப்படுத்தியும் வருகிறோம். எந்தக் காட்சியும்[ஒளி,ஒலி காட்சிகள்] இதயத்தின் நடுவே இருக்கும் புள்ளியைத் தைக்காமல் எழுத்தோ, படமோ வருவதற்கு இல்லை; வராவிட்டால் புரியவில்லை என்று பொருள்!

எனவே, நமது இதயமானது computer போலவும், அதேசமயத்தில் computer ஆனது நமது இதயம் போலவும், செயல்படுவது நமக்குத் தெரிந்த ஒன்றாகும். ஆனால், computer அறிவுமயமானது, நமது இதயமோ அகவியல் மயமானது – உணர்ச்சி மயமானது – என்பதை ஒரு சிறப்புச் செய்தியாக இங்கே சொல்லிட

விரும்புகிறேன். அதாவது human computer புதியன படைக்கும் ஆற்றல் உடையது. இது தானாக இயங்குவது. ஆனால் man made computer சிருஷ்டிக்கும் ஆற்றல் உடையது அல்ல. நாம் ஒரு program என்ற எல்லைக்குள் இருந்து computer வழியாக சாதிக்க முடிகிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால், ஆன்மப் புள்ளியோ எதையும் சிருஷ்டிக்கும் ஆற்றல் உடையது ஆகும். அது தான் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு ஆகும் என்றாலும், இரண்டிற்கும் வாய்த்த ஒரு செயல் நிலை (dynamism) ஒரே மாதிரியாக உளதென்று கண்டு பிடித்து அதன் கணக்கியலை பட்டியல் இட்டுக் கூறிட முடியும். [தனி நூல் வெளிவரவிருக்கிறது].

III

பிரணவ வேதத்தையும் அதன் தோற்றுவாயையும் சொல்லி வரும் பொழுது, நமது பாரத நாட்டின் வரலாற்றையே உற்றுப் பார்த்து, தொல்பழம் காலத்தையும் மொழி இலக்கண நூல்களையும், அவை கூறும் செய்திகளையும், அதே சமயத்தில் பிற நாட்டு தலைசிறந்த ஆய்வாளர்கள் கண்டுபிடிப்புகளையும், அவர்தம் முடிவுகளையும் மேலெழுந்த வாரியாகச் சொல்லி வந்தேன். இந்த நூல்களையும் நூலாசிரியர்களையும் மீண்டும் ஒரு முறை இங்கே சுருக்கமாக தொகுத்துக் கூறுவது இன்றியமையாததாக எனக்குத் தோன்றுதோடு அவற்றை முன்னிலைப்படுத்தி, எனது ஆய்வையும் ஆய்வின் முடிவுகளையும் ஓரளவு சொல்லிட விரும்புகிறேன். அவையாவன 1] வேத வியாசன் பெயரில் வெளிப்பட்ட ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பிரணவ வேதக் குறிப்பு, 2]வேதவியாசனின் பெயரிலேயே வெளிவந்த ஸ்காந்த புராணம் [நாகரகாண்டம்] இங்கேயும் வரும் பிரணவ வேதம் அதற்கு அடுத்துக் கிடைத்த 3]மாணிக்கவாசகரின் திருவாசகம், 4]திருமூலரின் திருமந்திரம், 5]அய்யன் திருவள்ளுவரின் திருக்குறள், 6]வடலூர் இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா, 7]தமிழக அரசின் வெளியீட்டாகிய ஐந்திறம் என்ற இயற்கையின் ஐந்தியல் இலக்கண நூல், 8]இப்போது கையில் உள்ள மயனின் பிரணவ வேதம்; இஃது அதிமுக்யமானதும், ஆதாரபூர்வ மானதுமாகும். ஏன், நான் மேற்சொன்ன அனைத்து நூல்களுக்கும் மூல நூல். ஐந்திறமே, பிரணவ வேதமே, சான்று பகரும்; அவற்றின் வழி நூல்கள் தாம் வாஸ்து சிற்ப ஆகம நூல்களாம் என்பதை ஐயமறதத் தெளிந்தே. மேலும்,

9]அத்துடன் தஞ்சை சரஸ்வதி மஹாலில் இருந்திட்ட மயநூல்களில் ஐந்திறத்தை கண்டெடுத்து, அதில், ஐந்திற நூலே அறிவியல் ரீதியாக[1] – ஐந்திறத்தின் தொன்மையைக் கண்டறிந்து, அவர் காலத்தில் வழக்கிலிருந்த ஒன்பது இலக்கண நூல்களை ஆராய்ச்சி செய்து, ஐந்திறமே **கிழக்கு ஆசிய நாடுகளில் கிடைத்த அனைத்து இலக்கணங்களுக்கெல்லாம் மூலமாக விளங்குவது ஐந்திறம் என்ற இலக்கண நூலே என்று** 1875 –ல் தனது ஆய்வின் முடிவை எழுதிய பிரஞ்சுக் காரர் டாக்டர்.ஏசி.பர்னல் அவர்களின் ஆய்வேடும் [10] காலவரையறையுடன் தமிழ்ச் சங்கங்களின் வரலாறு என திருமந்திரமணி துடிசைகிழார் அ.சித்பரனாரின் நீண்ட கால ஆராய்ச்சியின் முடிவுகளை செய்து இராமலிங்கர் நற்பணி மன்றம் வெளியிட்ட ஆராய்ச்சி நூலும், [11] அதே போல 'Riddles of the three oceans' என்ற ரஷ்ய நாட்டு ஆய்வறிஞர் எழுதிய குமரிக்கண்ட வரலாறு காட்டும் நூலும், [12] அண்மையில் வெப்சைட்டின் மூலம் கிடைத்திட்ட Atlantis Civilisation என்ற ஆராய்ச்சித் தொகுப்புரையும், [13] எல்லாவற்றுக்கும் மேலாக, வரலாற்றுக் காலத்து ஆய்வர் பேராசிரியர் Keith என்பவரின் History of Sanskrit literature என்ற ஆய்வு நூலும், [14] பாரத நாடு முழுவதும் பாரதீயக் கலாச்சாரத்தின் தொன்மையை முன்வைத்தே பல அறிஞர்கள் செய்திட்ட ஆய்வுக் குறிப்புகளின், சாரமும் தமது கண்டுபிடிப்புகளையும் அடக்கி வைத்து ரஷியப் பேறிஞர் Alexander Knodrotov எழுதிய ஆனால் மொழி பெயர்பிலிருந்து விடுபட்ட வரலாற்று எச்சங்களும், [15] அதே போல மிக அண்மையில் சாட்டலைட் படத்தின் மூலம் வெளிப்படுத்திய அனுமான் கட்டியதாகச் சொல்லப்பட்ட குமரிக்கண்டம் சார்ந்த கடல் ஆய்வுகளுக்கு உதவிடும் பாலத்தின் படமும், அந்தப் பாலத்தை கட்டியவன் **நளன்** என்ற சிற்பி என்பதை கம்பன் காட்டியிருப்பதும், [16] website மூலம் கிடைத்திட்ட Atlantis civilization பற்றிய விளக்கக் குறிப்புகளும் அவற்றோடு பத்தாயிரம் ஆண்டுகளாக பாரத நாட்டில் குறிப்பாக தென்நாட்டில் பிறந்து எண்ணற்ற கலைப்படைப்புகள் செய்து வந்த விசுவகர்ம சமுதாயத்துக்குச் சொந்தமான வாஸ்து சாஸ்திரங்களும், [17] தமிழ் நாட்டு சிவாச்சாரியர் ஒழுகிவரும் ஆகம சாஸ்திரங்களும், இந்த பிரணவ வேதத்தின்

1. "On the Aindra school of Sanskrit Grammarians" நூல் தலைப்பு. Printed at Kalimagal Press, 64 Broad way, Madras 106. Reprint in 1986. (Pioneer Book Services, 63, 1 st Main Road, West C.I.T.Nagar Madras - 600 035. பெரும்புகழ் கொண்ட அருளாளர் இராமலிங்கரை இவர் சந்திக்கவில்லை. காரணம், ஐந்திரம் என்பதை ஐந்திறம் என்று வல்லின ற போட்டு, மயனையும் தெரிவித்தவர் அவரே. இராமலிங்கனாரிடம் ரகசியப் பெட்டியில் ஐந்திறம் இருக்கலாம் என்க.

உட்கிடையை அறிந்து புரிந்து கொள்ள உதவின என்பதை மிகப் பெருமையுடன் இங்கே பதிவு செய்திட விரும்புகிறேன். அத்தகைய ஆராய்ச்சிகளின் முடிவை இப்பொழுது மிகச் சுருக்கமாக சொல்லி வருகிறேன். கடந்த 1976 ஆம் ஆண்டிலிருந்து நான் செய்திட்ட தொடர் ஆராய்ச்சிகளின் (marathon research) முடிவாக முதலில் தலையாய கருப்பொருளைச் சொல்லி அதன் பிறகு ஒரு சில இனிய முடிவுகளை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கும், ஆராய்ச்சி உலகத்திற்கும் பயன்படும் என்ற நோக்கத்தில், இந்தச் செய்திகளை இங்கே இணைத்து வைக்கிறேன். மேலாய்வு செய்திட தடை ஏதும் இல்லை. உண்மை அறிவது கடவுளைப் பார்ப்பதற்கொப்பாகும் என்பேன்.

முதலில் சொல்ல நினைத்திட்ட செய்தி யாதெனில், “இந்த உலகத்தில் பல்துறை ஆராயச்சி நிபுணர்களின் கருத்துப்படி, இன்று இவ்வுலகில் ஆராயிரம் மொழிகள் இருக்கின்றன என்பதும், அவற்றில் ஆறு மொழிகள், அதாவது எபிரேயம், கிரேக்கம், லத்தீன், சம்ஸ்கிருதம், சீனம், தமிழ் ஆகியவை தொல்பழங்காலத்து மூல மொழிகள் என்றும், இந்த ஆறு மொழிகளில் ஏசுனாதர் பேசிய எபிரேய மொழியும், சாக்ரடீஸ் பேசிய கிரேக்க மொழியும், சீசர் பேசிய லதீன் (latin) மொழியும், வால்மீகி பேசிய சம்ஸ்கிருத மொழியும், நம்முடைய் பேச்சு வழக்கில் இல்லை[1]. இந்த மொழிகள் சார்ந்த பல சொற்கள் மற்றும் செய்திகள் பிறமொழிகளுக்கு ஆக்கம் தந்து விட்டதாக சொல்லப்படுகிறதே ஒழிய இன்றைய நிலையில் கன்பூசியஸ் பேசிய சீன மொழியும், திருவள்ளுவர் பேசிய தமிழ் மொழியும் எப்பொழுது தோன்றியதோ அன்று முதல் இன்று வரை சிறப்போடு இருந்து வருகின்றன என்று மொழி ஆராய்ச்சி வல்லுநர்கள் சொல்லி வருவதை ஒரு பார்கோடா ஆராய்ச்சிப் பெருமக்கள் அறிவார்கள் மற்றும் ஏற்பார்கள் என நம்புகிறேன். [18] மேலும், மகாரஷ்டிரா லிபிகார், பத்ம ஸ்ரீ வாகெங்கர் சொல்வதும் இங்கே குறிப்பிடத்தக்கதாகும். “வேதங்கள் நான்கும் கோதாவரி, காவிரி நதிக்கரையில் பிறந்தனவாகும்” என்பது அன்னராது கண்டுபிடிப்பு.

[19] பன்மொழிப் புலவராக நமது காலத்தில் விளங்கிய அமரகவி பாரதியார் தமிழின் தொன்மையைப் பற்றிக் கூறும் இடத்தில் **“இவள் என்று பிறந்தனளோ”** என்று ஒரு வினாவின் மூலமும் மனோன்மணீயம் சுந்தரனார் **“சீரிளமைத் தீறம்”** வாய்க்கப்பெற்ற மொழி தமிழ் மொழி என்று [திருநெல்வேலி பல்கலைக் கழகத்தின்

1. அருட்செல்லவர் நா.மகாலிங்கம் அவர்கள் இராமலிங்கம் பணி மன்றத்தின் வெளியீடான சங்ககால வரலாறு மற்றும் Integrated History of India என்ற வெளியீடும் இங்கே நினைவூட்டப்படுகின்றன.

பெயர் தாங்கிய] இவர்தம் கூற்றுக்கள் நான் சொல்லப் போகும் கருத்துகளுக்கு அரணாக விளங்கப் போவதைக் காணலாம்.

இத்தனை பேர் நல்ல பல கருத்துக்களை, நூல்கள் வாயிலாகவும், சொற் பொழிவுகள் வாயிலாகவும், அறிவித்த நிலையில், தமிழ் மொழியின் தொன்மை பற்றிய முடிவு கேள்விக் குறியாகவே இருக்கிறது என்பது நமது துரதிர்ஷ்டமே என்றால் மிகையல்ல. நமது தமிழ் மொழி பேச்சு, எழுத்து, இலக்கியம் [காவியம்] ஆகிய மூன்றையும் பெற்று கன்னித்தமிழாக[1] இருந்து வருவதை நம் தமிழகப் பெருமக்கள் எல்லோரும் அறிவார்கள். இருந்தாலும், தமிழின் தொன்மை பற்றியும் செம்மொழி என்ற சிறப்பைப் பற்றியும் எழுந்த கேள்விக் குறிகள் இன்றும் துடைக்கப்படாமல் இருப்பதைக் காணுகிறோம். இது ஏன் என்ற வினாவை நானே இயல்பாக எழுப்பிக் கொண்டு, முடிவில்லா நிலையைக் கண்டு மனமுறுகி, இரவு பகல் என்ற வேறுபாடின்றி, என் புத்திக்கு எட்டிய வரை, என் கலை மரபுக்கு ஒத்தொலிக்கும் ஓர் உண்மையை கண்டறிந்தேன். இந்த உண்மையை ஆராய்ச்சியாளர்கள், மேல் நிலை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தால் உலக மொழிகளில் **தமிழ் மொழியே முந்து மொழி, முதல் மொழி** என்று சொல்லிட வேண்டும் என்ற முடிவுக்கு வருவர் என்பது திண்ணம். இப்படி எதை வைத்துச் சொல்லுகிறேன் என்றால், தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திருக்கும் இயல்பாய் வந்தடைந்த சிறப்புகள், மொழி வரலாற்றுப்படி, இரண்டு துறைகளாக இருக்கின்றன. ஒன்று இலக்கிய மொழி என்றும், பிறிதொன்று கலைமொழி என்றும் இரண்டு பிரிவுகள் இன்றும் உள. Literary Sanskrit, Technical Sanskrit என்பன அப்பிரிவுகளாகும். இலக்கிய மொழி, பலர் படித்துத் துய்த்த மொழியாகி விட்டதை வரலாறு காட்டும். ஆனால் கலை மொழியாகிய Technical Sanskrit என்பது ஒரு சாராருக்கே தெரிந்ததாகவும், உரித்தான தாகவும் பல ஆயிரம் ஆண்டுகள் இருந்து வந்ததையும் வரலாறு காட்டும். இதேபோல தமிழ் மொழிக்கும் இரண்டு கூறுகள் இருந்து வருகின்றன.

---

1. *''உள்ளும் புறமும் ஒருவழி நின்றே (அகவியல்/புறவியல்- Spiritual/material)*
தெள்ளும் உணர்வால் செம்மொழிச் செவ்வியல்
ஒளிமுதற்கண்ட ஆய்வுணர் வோங்கி
தெளிகலை செப்பல் ஐந்திய லாகி
ஐந்திறத் துண்மை செஞ்சொல் செந்தமிழ்
தந்திறம் விளக்கும் ஐந்திற நூலே''

– ஐந்திறத்தில் மயன்.

சம்ஸ்கிருத்திற்கு சொல்லியது போல, இலக்கியத் தமிழ் என்றும், கலைத்தமிழ் என்றும் (Literary Tamil and Technical Tamil) இரண்டு பிரிவுகளாக இன்றளவும் இருந்து வருகின்றன. இலக்கியத் தமிழைத்தான் நாம் எல்லோரும் படித்து இன்புற்றுப் போற்றி வருகிறோம். ஆனால் கலைத்தமிழை எவரும் கண்டு கொள்ள வில்லை. இப்படி ஒன்று இருப்பதாகவே எவர்கட்கும் தெரியாது. இந்த கலைத்தமிழ், கலைஞர்களாகிய சிற்பிகளால் தோற்றுவிக்கப்பட்டு, அவர்தம் உடமையாகவும், உரிமையாகவும் இன்றுவரை இருந்து விட்டது. எனவே, கலைத்தமிழும், கலை சம்ஸ்கிருதமும் தெரிந்தால் அன்றி இன்றைய தமிழின் தொன்மைக்கும் சிறப்புக்கும் உரித்தான அந்தஸ்தை அடைந்திடல் முடியாது என்று துணிந்து சொல்லுகிறேன். இந்த இரண்டு மொழிகளில் கலைத்துறை மொழியினை ஓரளவு அறிந்து கொண்டு விட்டதால், அந்த இறுதிச் சொல்லுக்கு உரியவனாகிறேன். அத்துடன் சர்வதேச மொழியாக இன்று இயங்கிவரும் ஆங்கிலமும், ஆங்கிலம் வழி பெறப்பட்ட அறிவியல் ஞானமும், கணிதப் படிப்பும் இறைவன்[1] எனக்கு கிடைக்கச் செய்து விட்டதால், எனது இறுதி கூற்றுக்கு உரியவன் என்ற பெயர் பெற்ற வனாகிறேன். எனவே, **தமிழ் மொழிதான் அனைத்து மொழிகளுக்கும் முதல் மொழி என்றும், பேச்சு, எழுத்து, இலக்கியம் ஆகியவை தொய்வில்லா உயிர்ப்புள்ள மொழி என்றும்**, இலக்கியச் செழிப்பு வாய்ந்த மொழி என்றும், **இங்கே பெருமையுடன் பதிவு செய்கிறேன்.** இக்கருத்துக்களை மேல் ஆய்வு செய்திடுமாறு அறிஞர் பெருமக்களை வேண்டிக் கொள்கிறேன். இக்கருத்துரையினை எவரும் மாற்றிட முடியாது என்பதே என் துணிவு, முடிவு.

இப்படி ஒட்டுமொத்தமாக பார்க்கும் காலத்தில், தமிழர் நாகரீகம், பண்பாடு; உலக நாகரீகம், உலகப் பண்பாடு என பிறிந்து விட்ட நிலையில் – ஓரிடத்தில் பிறந்து, ஒரு காலத்தில் இருந்து, இயற்கை சீற்றத்தால் கடல் கோள்களால் பல கண்டங்களாகச் சிதறிச் சென்று விட்ட இந்த நாகரீகம் மற்றும் பண்பாடு உலகளாவிய ஓர் நிலைதனைப் பெற்று இருந்ததால், இப்படி இன்றைய ஆய்வுக் குறிப்புகள் என்னைச் சொல்லத் தூண்டுகின்றன; மமதை அல்ல.

இதுவரை சொல்லிய நூல்களின் சாரத்தையும், பத்தாயிரம் ஆண்டு பாரம்பரியம் கொண்ட சமுதாயத்தில் பிறந்து விட்ட வரலாற்று நிகழ்ச்சியும், அன்னியர்கள்

1. "யாம் பெற்ற கல்வியும், செல்வமும் எம் அறிவும் வேலவன் தந்த தாலே!" என்று சொல்லலாமா?

கொண்டு வந்து திணித்த நாகரீகம் பண்பாடு இவற்றின் பலஹீனமும், அதன் நிலையற்ற தன்மையும் தெரியுமானால் எனது இறுதிக் கூற்று மேலும் உறுதி பெற்றிடும் என்றும் நம்புகிறேன். இப்பொழுது காண்பதற்குத் தேவையான அடிப்படைத் தகுதி யாதெனில், ஒரு பார்க்கோடான தூரப்பார்வையின் அடித்தளமான செய்திகள், சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தமிழக அரசு வெளியிட்ட ஐந்திறம் என்ற அறிவியல் மற்றும் இலக்கணத் தமிழ் நூல் மிகப் பெரிய சான்றாக அமைந்து விட்டது. இந்த நூல் பத்தாயிரம், பதினைந்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று துடிசைகிழார் மட்டுமல்ல அலெக்சான்டர் என்ற ரஷிய நாட்டு ஆராய்ச்சிச் செம்மலும் கை கொடுக்கிறார்கள். ஆகவே கலைத்தமிழ், கலை சம்ஸ்கிருதமும் அறியாதோர் வழிவந்த ஒரு பார்கோடான செய்திகளால் இத்தகைய ஆராய்ச்சி தொடர்புடைய பெரியோர்கள் மயக்கமுற நேர்ந்தது என்று சொன்னால் பழியும் பாவமும் அல்ல. இதற்கு இயற்கை தான் பொறுப்பு என்று சொல்ல விரும்புகிறேன். இத்தகைய அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டுதான் மேலை நாட்டினர் ஆண்டு தோரும் இந்திய நாட்டை பார்வையிட வருகிறார்கள். தமிழகத்தின் கலைச் செல்வங்களைக் கண்டு வியக்கிறார்கள். எழுத்தெல்லாம் ஓவியமே என்று மயன் தந்த விளக்கத்திற்கொப்ப தமிழகச் சிற்பங்களெல்லாம் visual commentaries of Vaastu Shilpa textual substances - visual poems - visual music என்று நான் உணர்ந்து சொல்லி வருகிறேன். இதை வைத்தே சிற்பியே சிற்பமாகிறான்; கவிஞனே கவிதையாகிறான் என்று சொல்லந்துணிந்தேன். எனவே, இந்தச் செய்தியை முதன் முதலில், முதற் சங்கத்தில் மயன் என்ற பெருந்தச்சன் நிலந்தரு திருவில் பாண்டியன் காலத்தில் அரங்கேற்றிய ஐந்திறம் என்ற இயற்கையின் ஐந்தியல் இலக்கண நூல்வழி தான் காண முடிகிறது. இந்த ஐந்திறம் என்ற நூல் இந்திரனால் எழுதப்பட்ட தென்ற, அறியாமையை இராமலிங்க அடிகளார் கைப்பட எழுதிய திருவருட்பாவில் மயன் பெயரும் ஐந்திறம் [வல்லின ற போட்டு எழுதிய honest presentation மூலமும்] என்ற பெயரும் மெய்யெனக் காட்டுவதைப் பார்த்தால் உண்மை வெளிப்பட்டு விட்டது என்க. இராமலிங்க அடிகளார் வாழ்க! பாரதி காட்ட முடியாத ஓர் உண்மையை அடிகளார் காட்டி விட்டார் எனலாம். இயல், இசை, நடம், சிற்பம், கட்டிடம் ஆகிய ஐங்கலைகளைக் கற்றுத் தேரிட அன்னியர் துடிக்கிறார்கள். இந்த வியப்புக்கும் துடிப்புக்கும் அடிப்படைக் காரணம் யாது என்பதை சொல்லிக் காட்டுபவர் இன்னும் பிறக்கவில்லை என்று சொன்னால் இதுவும் பிழையில்லை, பழியுமில்லை என்பேன்.

வாஸ்து, ஆகம நூல்களில் திருக்கோவில் நிர்மாணம் பற்றிப் பேசும் இடத்தில் பிராகார இலக்கணத்தைக் கூறும் மயமதம், மானசாரம் என்ற நூல்கள் இக்கால அறிவியல் செய்தி ஒன்றை குறிப்பிடுகின்றன. அதனை திருமிகு.இராமநாராயணன் என்ற பி.இ எலக்ட்ரானிக்ஸ் படித்த எனது நண்பரிடம் எடுத்துச் சொல்லி நல்லதொரு விளக்கத்தைப் பெற்றேன். அதுமட்டுமல்ல, அந்த விளக்கத்தை ஒரு கட்டுரையாக எழுதி எனது முன்னிலையில் பாரதக் குடியரசுத் தலைவரும், பாரத ரத்னாவும், விண்ணியல் ஆய்வாளருமான ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களிடம் 29.11.2003 தேதியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் சமர்ப்பித்தார். அக்கால விஞ்ஞானம் இக்கால விஞ்ஞானத்திற்கு எப்படி ஒத்துப் போகிறது என்பதை வாய் மூலம் விளக்கி, கை மூலம் எழுதிய கட்டுரையைக் கொடுத்து, எனது ஆய்வின் பெருமையை சுட்டிக் காட்டினார். குடியரசுத் தலைவர் இக்கட்டுரையைப் படித்துப் பார்த்து அகமகிழ்ந்து என்னைப் பற்றி அன்று அதிகமாகவே தெரிந்து கொண்டார்கள். இதனை வாஸ்துக் கலை மரபுக்குக் கிடைத்த ஒரு பெரும் பேறாகக் கருதினேன். அந்தக் கட்டுரை பின்வருமாறு.

PHILOSOPHY AND TECHNOLOGY OF VAASTU SCIENCE

Submitted to H.E.President of India, Dr.A.P.J.Abdul Kalam on 29th Nov 2003 by Mr. S.Ramanarayanan

A brief note about Mr.S.Ramanarayanan by Dr.V.Ganapati Sthapati

Mr.S.Ramanarayanan is a graduate in Electronics Engineering. He is a great expert with a thorough knowledge of the dynamics of the computer science. He has worked in many establishments in India and abroad as Technical expert. His expertise in the particular field and my discussion with him about the human computer gave him a bundle of information about the modern and ancient engineering science, the latter having been called Vaastu science. It must be known to the readers that Vastu is energy and Vaastu is matter and Vastu=Vaastu which conforms to the concept of $E = mc^2$ of Prof. Einstein.

While I was discussing the absolute energy and absolute matter and one changing into the other, I may mention of the wave pattern that emanates from celestial energies and terrestial energies. In a rhythmic pattern, which we call Brahma Pada, Deivika Pada, Manusha Pada and Paisachika Pada. This rhythmic pattern gave him an impression of the electron wave patterns. When I said that this pattern is traditionally followed in the design of Pancha Prakara concept, it struck him that the wave patterns conformed to the electronic wave pattern. This was written down in a beautiful letter and submitted to H.E. Dr. A.P.J.Abdul Kalam when we met him in Rashtrapathy Bhawan in New Delhi on 29.11.2003.

On knowing the unique science involved in the ancient Vaastu Science, the Honourable President not only appreciated, but also advised me to change the name of 'Vaastu' with some other name,

since the media and society have polluted the term 'Vaastu'. He nodded his head when I observed and said that it would be harmful to the society if it is misused like this. I said that instead of changing the ancient name Vaastu I would change the wrong spellers to understand and apply correctively.
Here under we furnish the letter submitted to H.E.Dr.A.P.J.Abdul Kalam on 29.11.2003.

Since the inception of philosophy up to the modern Techonological era, there has been always a point of conflict between the philosophical thinkers and materialistic thinkers for ages.

A few, classical examples of this conflict are the finding of the Atomic power and the Bioengineering development of cloning.

By this conflict, philosophical thinkers have largely differed from technological thinkers and their contributions to the civilisation of the mankind. Philosophers consider the materialistic growth is impeding the attainment of self-realisation.

In India, many technological contributions had been made even during prehistoric period. But our great philosophical thinkers, who were by and large influencing the mass/ society, had shadowed these contributions.

A recent discussion with Dr.V.Ganapati Sthapati, founder of Vastu Vedic Research Foundation has triggered this view. Coming to the subject matter we see that our early technical thinkers have contributed a lot of technical finding, which are known only to a few.

The nature of the Atom modelled by Rutherford in 1911 and the subsequent model suggested by Bhor in 1913 to overcome the inability of the classical theory, to explain the presence of definite electron energy levels in the atom, etc., had been thought about and even modelled by our ancient thinkers.

An unbiased listening to what Sthapati says reveals the fact that early finding of the Atomic energy levels & various energy states of the atoms have been achieved by our ancient technical thinkers.

Dr. V. Ganapati Sthapati has the proof for all the claims about the superiority of our traditional knowledge on technology in the areas of study of Atom, subatomic particles and also it's modelling to explain to common man.

All these had been given by our great technical thinker **MAYAN,** whose period is way back 10,000 BC, who lived in the island of **Jambudvipam (Naavalantheevu).**

Even the Quantum theory of the energy emitted (radiated) and absorbed in the form of multiples of units is traced in the MAYAN's findings. Since these findings are too technical and also due to the knowledge gap created by the great continental deluges had made these knowledge to stay with very few.

Philosophy based reformations had unfortunately masked these technical findings for their own advantage. But one interesting point to be noted here is that the modelling of this atomic and sub-atomic nature had been borrowed or rather used to construct the common worship places, temples. The scientific findings behind the modelling had been ignored and shadowed by more of the philosophical views.

Some comparison between a few of our early findings related to the aspects mentioned for a temple & the modern Atomic study are listed below:

Modern Atomic Structure	Found in our Traditional texts
1. Atom, Sub atomic particles.	1. Anu, Paramanu.
2. Electron spins & rotates nucleus. The position and momentum cannot be determined simultaneously.	2. Energy turns into Matter due to spin. Energy is in pockets and cubical in shape.
3. There are definite energy states for the subatomic particles in the atom.	3. Bindu is the centre, which has the maximum energy & various levels of energy circles around it.
4. Sub atomic particles radiate, absorb photons, while shifting from its energy levels.	4. Light is produced from the centre of the Bindu. Also it has sound energy.
5. Electrons revolving in the energy bands have definite radius as rb, 2^2rb, 3^2rb,......	5. The model, which is suggested by our tradition has the outer passages in a dimension proportional to a,2a,3a,....
6. Electrons' position is determined by a probability curve. Electron in wave theory is like wave pockets.	6. The shape of the curve is shown in the models. Under the wave pockets in the model the energy pockets are mentioned.
7. Each shell, which has different energy states contains a fixed number.	7. Each passage has a definite energy level and they are symbolised through the power with respect to the Bindu.

இத்தகைய ஒரு அறிமுகத்தை நல்ல நேரத்தில் தக்கோரிடம் நல்லபடியாகச் செய்து வைத்த திருவாளர் இராமநாராயணனை மனமாற வாழ்த்துகிறேன்.

வேதங்கள் மிகத் தொன்மையானது என்பது உண்மைதான். தெய்வம் தந்த நேரிடைக் கொடைதான். ஆனால் இந்த வேதங்கள் நான்கு என்று தான் சொல்லி வருகிறோம். ஆனால் வேதங்கள் ஐந்து என்று சிற்பிகளாகிற நாங்கள் சொல்லி வருகிறோம்; பாகவதமும் இப்படித் தான் கூறுகிறது. பாகவதம் கூறும் ரிக்வேதம், யஜூர் வேதம், சாமவேதம், அதர்வணவேதம் ஆகிய நான்கு வேதங்களுக்கு முன்பு மிக தொல்பழங்காலத்தில் பிரணவ வேதம் என்ற வேதம் இருந்த செய்தியை சொல்ல முடிந்ததே தவிர, அது எந்த மொழியைச் சார்ந்தது என்று எவராலும் சொல்ல முடியவில்லை. வியாசனே சொல்லவில்லையே! ஆனால் மயன் யாத்த பிரணவேதம் இப்பொழுது வெளி வந்திருக்கிறது. கி.பி., கி.மு. சார்ந்த வரலாற்று செய்திகள் யாவும், இன்று கலைத் தமிழிலேயே யாத்திட்ட அறிவியல் தமிழ் மொழி என்று, இன்று சொன்னால் வியப்படையாதோர் எவரும் இருக்க முடியாது. இக்கருத்தை

பிரணவேதத்தில், பிரணவத்தை பார்த்தோர் மட்டுமின்றி இதற்கு முன் இருந்த தமிழக அரசுப் பதிப்பாகிய ஐந்திறத்தைப் பார்த்தோர் தனது தவறான கருத்திலிருந்து வேறுபட முடியும் என்பதைப் பணிவுடன் சேர்த்துச் சொல்லுகிறேன். பிற மொழி கலப்பற்ற தூய தமிழ் அறிவியல் மொழித் திறம் பிரணவ வேதத்தில் படர்ந்து வருவதையும், அடர்ந்து வருவதையும் காணலாம். இப்படித்தான் ஐந்திறமும் இருக்கிறது, இப்படித்தான் மணிமேகலை குறிப்பிடும் ஓவியச் செந்நூல் அறிவியல் மொழியில் இருந்து எவர்க்கும் புரியா நிலை எய்தி தானாகவே மறைந்திருக்க வேண்டும் என்று கண்டு கொண்டேன்.

அடுத்து டாக்டர்.A.C.பர்னல் என்ற பிரஞ்சு ஆய்வாளர் மொழி இலக்கணங்களுக் கெல்லாம் முதல் இலக்கணம் ஐந்திர இலக்கணமே என்று அறுதியிட்டு உறுதியுடன் கூறுவதை இங்கே அடுத்து வைக்கிறேன். ஐந்திறம் என்ற வல்லின 'ற' போட்டு தன் கையால் இராமலிங்க அடிகளார் எழுதிய கையெழுத்துப் பிரதியையும் இராமலிங்க நற்பணி மன்றம் அப்படியே வெளியிட்டு இருக்கிறது. ஐந்திறம் என்ற வல்லின 'ற' போட்ட சொல் சம்ஸ்கிருத மொழியாக வந்த சொல் இல்லை என்பது சம்ஸ்கிருத்தில் வல்லின 'ற' இல்லை என்ற காரணம் கொண்டு ஐந்திறம் என்ற சொல் தமிழ் மொழி சார்ந்த தூய தமிழ்ச் சொல் என்று உறுதி செய்திடலாம். ஐந்திரம் என்பது தவறு. கட்டுக் கதையே! அறியாமையே!

பிரணவ வேதத்தை நான்கு வேதங்களுக்கு முற்பட்ட முதல் வேதம் என்று பாகவதம் சொல்வதும் சரியே. இங்ஙனம் பிரணவம் ஐந்தாவது வேதம் ஆகும் என்ற நற்செய்தியை ரஷ்ய ஆய்வர் தனது Riddles of three oceans என்ற ஆய்வு நூலில் இந்த ஐந்தாவது வேதம் திராவிடருக்கே உரியது என்று சொல்லியிருப்பது இக்கருத்துக்கு மேலும் வலுவூட்டுகிறது எனலாம். எல்லாவற்றுக்கும் மேலான, ஐந்திறம் சார்ந்தது பிரணவ வேதம், பிரணவ வேதம் சார்ந்தது வாஸ்து சிற்ப சாஸ்திரங்கள், தமிழில் தான் முதலில் தோன்றியன, இடைக் காலத்தில் சம்ஸ்கிருத மொழி வாயிலாக வெளிப்பட நேர்ந்து விட்டது என்பதை விருப்பு வெருப்பின்றி பார்த்திட்டால் தெரியவரும். இப்படி ஐந்திறத்திற்கும், பிரணவ வேதத்திற்கும் முன்னவனாக முதல்வனாக குமரிகண்டம் பெற்றெடுத்த மயநேத்திர மலையில் வாழ்ந்த திருமகன் தான் மயன் என்பான் ஆவன்[1]. அவனை சங்ககாலச் சிற்பச் சித்தன்

---

1. "ஆலமா மரத்தின் கீழே அருள்மயன் அமர்ந்த தாலே
ஆலமா மரத்தின் கீழே அருட்கலை வளர்ந்த தாலே
ஆலமா மரத்தின் கீழே அறிவர்கள் வளர்ந்த தாலே
ஆலயம் ஊரூர் தோறும் அமைந்தன செழிக்க நன்றே!"

(வை:386)

மாமுனி மயன் என்று சொல்லி வருகிறேன். இச்சொல்லும் அவன் பெயரும் இப்பொழுது வழக்காற்றில் வந்து நின்று நிலைத்து விட்டது. இவன் பெயரில் **"சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் விஞ்ஞானக் கலை கூடம்"** என்ற ஒரு அறிவியல் ஆலயத்தை நான் கட்டிக் கொண்டும் வருகிறேன். அவ்வாய்வுக் கூடத்தை எனது காலத்திலேயே கட்டி முடிப்பேன். ஆனால் அவ்வாய்வுக் கூடத்தை தமிழ் நாட்டுக்கு மட்டுமன்றி, பாரத நாட்டுக்கு மட்டுமின்றி, உலக மக்களுக்கு உரிமையாக்குவேன் என்று சொல்லி முடிக்கிறேன். காலமாக் கடவுளின் திருவுளத்தை நான் நன்கு அறிவேன்; விரைவில் கூட்டி வைப்பான் என்பது எனது உறுதிப்பாடு.

அற்புதம் விளங்குமிந்நூல் அருட்கலைத் திறன்விளங்கும்
பொற்புதம் காலம் எல்லாம் பொன்னொளி திகழ்ந்திருக்கும்
பற்பல காலம் தோன்றாப் பொற்புடன் மறைந்திருந்து
பொற்புறும் காலம் நேரும் பொழுதினில் விளங்கு மன்றே

வைசம்பாயணம் – [1212]

காலமாக் கடவுள், சொல்லையும், பொருளையும் தனித்தனியாக விளங்கச் செய்து விட்டதால் இந்த பிரணவ வேதம் காட்டும் ஓம் என்று ஒளியை, இரண்டாக்கி ஓம் ஒளி, ஓம்ஒலி என்று பிரித்துப் பேசும் துணிவை பெற்றிருக்கிறது ஐந்திறம் என்று சொல்ல விரும்புகிறேன். இவ்விரண்டும் ஒன்றன் மீது ஒன்றாக இருந்தாலும், வெளிப்படும் நிலையில் இரண்டென எனது கட்டுரைகள் நன்கு விளக்கும். இந்த இயற்கை நிகழ்வு வணக்கத்திற்கும் பெருமைக்கும் உரிய நிகழ்வாகக் கருதி, இக்கருத்துகளை யெல்லாம் உட்கொண்டு உளத்திலே ரசித்து, புறத்தே கண்ணால் பார்த்து ரசித்திடச் செய்ய தகுதி பெற்ற கலையே[1] ரசிக்க வைத்த கலையே சிற்பக் கலை மற்றும் கட்டிடக்கலை ஆகும் என்பதை சொல்லி, இதனால் முத்தமிழ் என்பது ஐந்தமிழ் ஆமிற்று என்ற தொல் பழம் சிற்பியர் கருத்து என்பதை மீண்டும் ஒரு முறை சொல்லக் கடமைப்பட்டவனாகிறேன். இறுதியாக தமிழ்ப் பாடலையும் சம்ஸ்கிருதப் பாடலையும் திருப்பிச் சொல்லி இவற்றை அனைவர் உள்ளத்திலும் இடம் பெறச் செய்ய எல்லாம் வல்ல காலமாக் கடவுளை இறைஞ்சுகின்றேன். இதனால் உலக சமுதாயம் ஒன்று பட ஏதுவாகும் என்பதால் சொல்லு கிறேன். இதைத்தானே பாகவதம் கீழ்கண்ட இரண்டு வரிகளை அவர் நூலில் [பாகவதத்தில்[2]] இருக்கைக் கொள்ளச்

---

1. உமையொரு பாகன் என்ற அர்த்த நாரீஸ்வரர் படிமம் இதனைக் காட்டுமன்றோ! காளிதாசனின் वागर्थाविव संपृक्तौ वागर्थ प्रतिपत्तये । जगत: पितरौ वन्दे पार्वती परमेश्वरौ ॥ என்று சொல்லோவியமாகத் தீட்டியுள்ளதை உற்று நோக்குக.
2. एक एव पुरा वेद: प्रणव: सर्ववाङ्मय: । देवो नारायणो नान्य: एकोऽग्निर्वर्ण एव च ॥

செய்திருக்கிறது. இக்கருத்துகளை வைத்துத்தான் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பூங்குன்றனார் சொல்லும், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற திருமந்திரச் சொல்லும் நீடு நிலைத்திருப்பதோடு, உலக சமுதாயத்தை ஒன்றுபடுத்தும் செயல்படுமறை ஆகின்றது.

பிற்சேர்க்கை

வாஸ்து சாஸ்திரங்கள் பின்வருமாறு. நடப்பில் உளதை நட்சத்திரக் குறியிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. [பிரளய காலத்திற்குப் பிறகு வெளிவந்த நூல்கள்]

*1.	विश्वकर्मीयम्	விஸ்வகர்மீயம்
2.	विश्वम्	விஸ்வம்
3.	विश्वसारम्	விஸ்வசாரம்
4.	प्रबोधम्	ப்ரபோதம்
5.	वृत्तम्	வ்ருத்தம்
*6.	मयमतम्	மயமதம்
7.	त्वष्टातन्त्रम्	த்வஷ்டாதந்த்ரம்
*8.	मनुसारम्	மனுசாரம்
9.	नलम्	நளம்
10.	मानविधि	மானவிதி
11.	मानकल्पम्	மானகல்பம்
*12.	मानसारम्	மானசாரம்
13.	बहुश्रुतम्	பஹுச்ருதம்
14.	शृष्टम्	ச்ருஷ்டம்
15.	मानबोधम्	மானபோதம்
16.	विश्वबोधम्	விஸ்வபோதம்
17.	आदिसारम्	ஆதிசாரம்
18.	विशालाक्षम्	விசாலாக்ஷம்
*19.	विश्वकाश्यपम्	விஸ்வகாஸ்யபம்
20.	वस्तुबोधम्	வஸ்துபோதம்
21.	महातन्त्रम्	மஹாதந்த்ரம்
22.	वास्तुविद्यापति	வாஸ்து வித்யாபதி
23.	पारासरीयकम्	பாராசரீயகம்
24.	कालयूपम्	காலயூபம்
25.	चैत्यम्	சைத்யம்
26.	चित्रम्	சித்ரம்
27.	आवर्यम्	ஆவர்யம்
28.	साधकसार संहिता	சாதகசார சம்ஹிதா
29.	भानुमतम्	பானுமதம்
*30.	ऐन्द्रमतम्	ஐந்திரமதம்
31.	लोकघ्नम्	லோகக்னம்
32.	सौरम्	சௌரம்

<u>பட்டியலில் இல்லாத மேலும் சில நூல்கள்:</u>

*1.	वास्तुविद्या	வாஸ்து வித்யா
*2.	मनुष्यालय चन्द्रिका	மனுஷ்யாலய சந்திரிகா
*3.	सारस्वत चित्रकर्म शास्त्रम्	சாரஸ்வதீய சித்ரகர்ம சாஸ்திரம்
*4.	ब्राह्मीय चित्रकर्म शास्त्रम्	ப்ராஹ்மீய சித்ரகர்ம சாஸ்திரம்
*5.	सकलाधिकारम्	சகளாதிகாரம்
*6.	शिल्परत्नम्	சில்பரத்னம்
*7.	सनत्कुमार वास्तु शास्त्रम्	சனத்குமார வாஸ்து சாஸ்திரம்
*8.	शिल्परत्नाकरम् (मयवास्तु)	சில்பரத்னாகரம் (தமிழ்)
*9.	सर्वार्थ शिल्पचिन्तामणि	சர்வார்த சில்ப சிந்தாமணி (தமிழ்)
*10.	शिर्पच्चेन्नूल्	சிற்பச்செந்நூல் (தமிழ்) (1977 ம் ஆண்டு அரசு வெளியிட்ட வை.கணபதி ஸ்தபதியின் நூல்)

<u>32 வாஸ்து சாஸ்திரத்தில் மனுசாரம் என்ற வாஸ்து நூலில் 18 வகையான நூல்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:</u>

1.	ईशानम्	ஈஸானம்
*2.	चित्रकाश्यपम्	சித்ரகாஸ்யபம்
*3.	प्रयोगमञ्जरी	ப்ரயோக மஞ்சரி
4.	पेरूहितम्	பேருஹிதம்
5.	बौद्धमतम्	பௌத்தமதம்
6.	गौतमम्	கௌதமம்
7.	कुलालम्	குளாளம்
8.	वाशिष्टम्	வாசிஷ்டம்
9.	मनोकल्पम्	மனோகல்பம்
10.	भार्गवम्	பார்கவம்
11.	मार्कण्डम्	மார்கண்டம்
12.	गोपालम्	கோபாலம்
13.	नारदीयम्	நாரதீயம்
14.	नारायणीयम्	நாராயணீயம்
*15.	काश्यपम्	காஸ்யபம்
16.	चित्रयामलम्	சித்ரயாமலம்
17.	चित्रबाहुल्यम्	சித்ரபாஹுல்யம்
18.	देशिकम्	தேஸிகம்

<u>வட இந்தியர்களால் கையாளப்படும் வாஸ்து நூல்கள்:</u>

*1.	वास्तु राजवल्लभम्	வாஸ்து ராஜவல்லபம்
*2.	समराङ्गण सूत्रधारम्	சமராங்கன சூத்ர தாரம்
*3.	रूपमण्डणम्	ரூபமன்டனம்
*4.	कोदण्ड-मण्डणम्	கோதண்ட மன்டனம்
*5.	शिल्प प्रकाशम्	சில்ப ப்ரகாஸம்

*6.	अपराजितपृच्छा	அபராஜிதப்ருச்சா
*7.	प्रतिमा मान लक्षणम्	ப்ரதிமா மான லக்ஷணம்
*8.	क्षीरार्णवम्	க்ஷீரார்னவம்
*9.	दीपार्णवम्	தீபார்னவம்
*10.	शिल्प शास्त्रम्	சில்ப சாஸ்திரம்

மேற்குறிப்பிட்ட நூல்களை கையாண்டோர்தான் விசுவகர்மர் எனப் பெயர் பெறுவாராயினர்.

பிரளய காலத்திற்கு முன் வந்த [10 ஆயிரம் ஆண்டளவில் முதல் சங்க காலத்தில் எழுதிய] மூலத் தமிழ் நூல்கள் பின்வருமாறு:

மயனின் தொழில்நுட்ப நூல்கள் (எல்லாம் தமிழ் நூல்கள்):

1.	ஓவியச் செந்நூல்
*2.	சிற்பமாச் செந்நூல்
3.	கட்டிடச் செந்நூல்
4.	நிலமனைச் செந்நூல்
5.	மனைநிலச் செந்நூல்
6.	வானியல் செந்நூல்
7.	பெருநடச் செந்நூல்
8.	மூலிகைச் செந்நூல்
9.	கணிதமாச் செந்நூல்
10.	மரக்கலச் செந்நூல்
11.	விண்கலச் செந்நூல்
12.	ஏழிசைச் செந்நூல்

குமரிக் கண்டத்தில் தோன்றிய பிரணவ வேதம் காட்டும் ஒருமைப்பாடு

விண்பொருளின் திரிபுற்ற படிமமே மண்பொருள்

விண்ணும் மண்ணும் ஒன்றே,

அரியும் சிவனும் ஒருவனே

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

அறிவியல் உண்மை, இஃதே.

நான் ஒரு ஸ்தபதி. பல நூற்றாண்டுகளாக வாஸ்து–சிற்பக் கலைத்துறையில் இடைவிடாமல் சேவை செய்து வந்த சிற்பியர் குடும்பத்தைச் சேர்ந்தவன். என்னுடைய மூதாதையர்களில் ஒருவர் தான், தஞ்சைப் பெருவுடையார் கோவிலின் விமானத்தை 226 அடி உயரம் கொண்டதாய், முற்றிலும் கல்லால் ஆனதாய், வானுயர்ந்த பிரமிடாகத் தோற்றம் கொடுத்தவர். இவர் பெயர் குஞ்சரமல்லன் இராஜராஜப் பெருந்தச்சன் என்பது

கல்வெட்டுச் செய்தி. சுமார் 1018 ஆண்டுகளாக அசைவற்று நிமிர்ந்து சிங்கமாகவும் சிங்காரமாகவும், கம்பீரமாகவும் நிற்கிற அதிசயத் தோற்றத்தைக் கொண்டது இந்த விமானம். இந்த விமானத்தைக் கோபுரம் என்று தவறாகச் சொல்லி வருகிறார்கள். ஆலயத்தின் தலைவாயிலில் வானுயர்ந்து நிற்கக் கூடிய கட்டிடத்திற்கே கோபுரம் என்று பெயர். கருவறைக்கு மேல் வரும் கட்டிடத்தைத் தான் விமானம் என்று நடைமுறையில் சொல்லி வருகிறோம். உண்மையில் நிலமட்டமிருந்து கலசம் ஈறாக உள்ள பிரமிடு போன்ற கட்டிடத்தை வாஸ்து ஆகம சாஸ்திரங்கள் விமானம் என்று வரையறுத்துள்ளன என்க.

இந்தப் பெருவுடையார் விமானத்தின் நீடித்து நிலைத்த தன்மையையும், அதற்கான கட்டுமான நுட்பத்தையும், ஆராய்ச்சி செய்தல் வேண்டுமென்று, சென்னையில் அரசுப் பொருட்காட்சியகத்துக்கு [19-06-03] வருகை புரிந்த இந்தியக் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர். A.P.J.அப்துல்கலாம் அவர்கள், ஓர் அறிவுரையைச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். இதற்கு முன், இத்தகைய அறிவுரையை எவரும் சொல்லிச் சென்றதாகவோ, அவர் எதிர்பார்த்த ரகசியத்தை எவரேனும் கட்டுரையாக எழுதிக் காட்டியதாகவோ, யாதொரு வரலாற்றுக் குறிப்பும் இல்லை. இந்த நிலை ஆச்சரியம் தரவில்லையா? கலை மரபில் இந்தக் கட்டிடத்தை ஒரு விஞ்ஞான அதிசயம் என்பர் வழிவழி வந்த ஸ்தபதிகள். இஃதோர் அபூர்வக் கலைப் படைப்பன்றோ!

இதனை, நான் மாமல்லபுரத்தில் கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலைக் கல்லூரி முதல்வராக இருந்த காலத்தில், எனது மாணவர்களுக்கு அந்தக் கோவிலை அளந்து காட்டி, கட்டுமான நெறிமுறைகளைப் படம் வரைந்து விளக்கி, அவற்றில் அடங்கிய விஞ்ஞான நுட்பங்களைச் சொல்லிக் கொடுத்திருக்கிறேன். இந்தக் கட்டிடம் நிலையாக நிற்பதற்கு இயற்கையின் அதிநுட்பக் கணக்கியல் ஒன்று அதில் அடங்கி இருப்பதை வாஸ்து விஞ்ஞானம் படித்தோர் ஓரளவு கண்டு சொல்வர். எனினும், நம் நாட்டு ஆய்வர்கள் மற்றும் மேலை நாட்டு அறிஞர்கள் இதுவரை மௌனமாகவே இருந்து விட்டார்கள். காரணம், இஃது ஓர் உச்ச விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்திட்டக் கட்டிடமாகும். இதற்குரிய விஞ்ஞானத் தத்துவமானது இக்கால மேலை நாட்டு விஞ்ஞானத்தைக் காட்டிலும் பல படிகள் உயர்ந்து நிற்பதை எவரும் கண்டு கொள்ளவில்லை. கண்டுகொள்ள முயலவும் இல்லை. இன்றளவும் இஃதொரு புதிராகவே உளது. சுருங்கச் சொன்னால், இக்கட்டிடத்தை ஒரு

விண்ஞானக் கட்டிடம் (Temple of Space Science) என்று கூறலாம். அதன்கண் புகுந்துள்ள விண்ஞான நுட்பத்தை அறிந்து கொண்டோர் இக்கட்டிடத்தை 'embodiment of cosmological science' என்றோ embodiment of astrophysics என்றோ தான் கூறிப் பெருமைப்படுவர். இந்த விண்ஞானம் சங்காலத்தில் முதற்சங்கத்தில் படைக்கப்பெற்ற அறிவியல் உச்சம் என்று ஆய்வு மூலம் தெரியவருகிறது.

என்னைப் பொருத்தவரையில், Space Scientist டாக்டர். A.P.J.அப்துல்கலாம் அவர்கள் விட்ட கோரிக்கையை – அதாவது சவாலை – சிரமேற்கொண்டு சிறியதொரு ஆய்வு நூல் எழுதியதோடல்லாமல் அவர்களையும் டெல்லியில் நேரில் சந்தித்து அந்த நூலைக் கொடுத்திருக்கிறேன். அந்த நூலில் இந்த விண்ஞானக் கட்டிடத்தின் தொழில்நுட்பச் சிறப்பைப்பற்றி விரிவாகப் படவிளக்கத்துடன் சொல்லியிருக்கிறேன்.

இந்தக் கட்டிடத்திற்கு நிழல் சாயாத கோபுரம் என்ற சொல்வழக்கு அல்லது தனிச் சிறப்பு ஒன்றுள்ளது. நிரம்பப் படித்தவர்களும் நிழல் சாயாத எனும் சொற் கோவையைப் பெரிதுபடுத்திச் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். ஆனால் உண்மை வேறு. கட்டுமானப் பணிகள் நடக்கும் போது, இத்தகைய கட்டிடங்களைச் சுற்றி சாரம் அமைத்து பணி நிறைவான பிறகே சாரத்தைப் பிரித்திடுவது செய்முறை நெறியாகும். இந்த நிலையில், தஞ்சை விமானத்திற்கு பிரத்தியேகமாக மண்ணால் சூழ்ந்த சாரம் அமைத்து வேலைகள் கடைசிவரை நடைபெற்றதால் உள்ளிருக்கும் விமானத்தை வெளியிலிருந்து எவரும் பார்த்திட வாய்ப்பில்லை. எல்லாப் பணிகளும் முடிந்த பின்னர் சாரத்தை நீக்கினான் தலைமைச் சிற்பியான பெருந்தச்சன். மக்களும், மன்னனும் அகண்டு விரிந்த அடிப்பாகத்தையும், மேலே படிப்படியாகவும் குறுகியும் சரிந்தும் சென்று இறுதியில் 25'.0"x 25'.0" அளவிலான 16 பட்டங்களை யுடைய சிகரம் கொண்டதாய் அமைந்திருந்த உச்சியைக் கண்ணுற்று வியப்படைந்து ''இது நிற்குமா? சாய்ந்து விடுமா'' என்று ஸ்தபதியிடம் கேட்டபோது ''இக்கட்டிடத்தின் நிழல் கூடச் சாயாது'' என்று துணிச்சலாகச் சொன்னான் பெருந்தச்சன். அது முதல் நிழல் சாயாத கோபுரம் [விமானம்] என்ற அடைமொழி நின்று நிலைத்து விட்டது. இது தான் உண்மை வரலாறு. ஆனால், இதற்கு நேர் மாறான கற்பனைக் கதைகள் பல இந்த விமானத்தைச் சுற்றிப் பின்னப்பட்டிருப்பதை இன்னும் கேட்டுவருகிறோம்! நம்புகிறோம்!

இந்த நிலையில், நாம் ஒன்றைத் தெரிந்து கொள்ள வேண்டும். உலகத்தில் நாம் கண்ணால் காணும், மற்றும் காதால் கேட்டறியும் அத்துணை பொருள்களும் விண்ஞானப் பொருள்கள் என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆன்மா என்று சொல்லக் கூடிய நுண்பொருள் ஒன்று தனது மூல நிலையில் அணுப் பொருளாகத் தோன்றி, அந்த அணுவிற்குள் இருக்கும் தனது ஆற்றலினால் அஃதே உணர்வுற்று, சினைத்து துடிப்புற்று பல உயிர்ப்பொருள்களாக உருமாறும் என்ற விண்ணியல் அறிந்த சிற்பி, அதே துடிப்புக் கணக்கைக் கொண்டு – ஒரு கட்டிடமாக – தஞ்சைப் பெருவுடையார் விமானமாக – அழகிய கலை அம்சங்கள் (with aesthetical features) கொண்டதாய் கட்டி, இத்தகைய பிரமிடு போன்ற கட்டிடமாக உருப்பெற்றிருக்கிறது என்பதே அந்த விண்ஞானத் தேற்றமாகும். இதுபோல, ஞாலத்தில் காணும் அத்துணை பொருட்களும் விண்ஞானப்பொருள்கள் என்று சொல்லும் பொழுது, கடவுளும் அத்தகைய ஒரு விண்ஞானப் பொருளேதான் என்பது வாஸ்து விஞ்ஞான அடிப்படைத் தேற்றமாகும். “ विज्ञानं ब्रह्म, विज्ञानं शिल्प कौशल्यम्” இதனைச் செயல்படுத்தியதாலன்றோ அக்கட்டிடத்தை நிர்மாணித்த குஞ்சரமல்லன் ராஜ ராஜப் பெருந்தச்சன் பெயர் மட்டும் அரசன் பெயருக்கு அருகில் சுவரிலே செதுக்கப்பட்டு இன்றுமுளது.

[“விஞ்ஞானம் பிரம்ம” என்ற உண்மை, சிற்பியருக்கும் அக்கால அரசர்க்கும் புரிந்திருந்த ஒரு வேதமாக்கலை நுட்பம் அன்றோ! அதுமட்டுமல்ல, கோயிற் கட்டிடத்தை இறைவடிவமாக எண்ணி அதையே பூசை செய்திடுக என்ற ஒரு உபநிடத வாக்கியமும் உளதாயிற்று. “பிராசாதம் புருஷம் மத்வா பூஜயேத் மந்த்ர வித்தம:” என்பது மேலுமொரு விண்ஞானக் கூற்றாகியதென்க.]

இறைவனாகிய கடவுள், எவற்றையும் படைக்கவில்லை. தன்னைத் தானே, தன்னியல்பால், தன்முயற்சியால் வெவ்வேறு வடிவங்களாக உருமாற்றம் கொள்கிறான் என்பது வாஸ்து விஞ்ஞான நுட்பமாகும். இத்தகைய நுண் பொருளானது தொடக்கத்தில் ஆகாசம் எனப்படும் வெட்டவெளியாகும். அவ்வாகாசம் விண்கருக்கள் [அ] விண் அணுக்கள் மல்கிய பேரிடமுமாகும். அவைகளே பிறகு தமது துடிப்பலைகளால் காற்றாக, தீயாக, நீராக இறுதியில் நிலமாக உருமாற்றம் கொள்கிறது என்பது மேலும் ஒரு விந்தையாகும். இதனைச் சுருக்கிச் சொன்னால், விண் கருவானது தன் உணர்வால் மண்கருவாக உருமாற்றம் கொள்கிறது என்பது

பொருள். இந்த நிலையில் விண் சக்தியானது (subtle energy), மண் சக்தியாக (gross energy) உருமாற்றம் கொள்கிறது என்று விளக்கிச் சொல்லலாம். இஃது எவர்க்கும் புரியுமல்லவா? ஆனால், இத்தகைய பிரபஞ்ச விண்ஞான நிகழ்ச்சிக்குள் எவரும் ஊடுருவிப் பார்க்கவில்லை. இதனை dynamics of space energy என்று சொல்லி மேலும் விளக்கலாம் என்க.

இந்த நிலையில், விண் பொருளை நடராசன் என்றும், மண் பொருளை ரெங்கநாதன் என்றும் சொல்வது சிற்பியர் வசம் உள்ள வாஸ்து சாஸ்திரக் கருத்தும் மரபுமாகும். இன்னும் சொல்லப் போனால், இந்தப் பிரபஞ்சத்தில் விண்பொருள் என்பது மண்பொருளாக உருமாற்றம் கொள்கிறது என்று மீண்டும் சொல்லாம். இது அத்தகைய முக்கிய விஞ்ஞானச் செய்தி ஆகும். அதாவது, unmanifest pure energy turns into manifest material energetic forms என்று பொருளாகும். இரண்டுக்கும் துடிப்புறும் (pulsating tendency) ஆற்றல் உண்டு என்பது ஒரு மூலக் கருத்து. இதுவே உயிர்ப்பெனப்படுகிறது. இதனால் அணுக்கள் மட்டுமல்லாது அண்டங்களும் – சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஏன் நமது பூமியும் உயிர்ப் பொருள் எனப்படுவ தாயிற்று. இன்னும் சொல்ல வேண்டுமானால் எறும்பு முதல் யானை வரை அனைத்துப் பொருள்களும் உயிர்ப் பொருள்களே – ஆன்ம சக்தி கொண்ட உயிர்ப் பொருள்களே என்க.

இந்த விண் பொருளின் துடிப்பாற்றலை (rhythm bound vibrational measures) அறிந்து உருக்கி வார்த்து வடிவம் கொடுத்து நடராசனை மனிதவடிவத்தில் (rhythm bound human form ஆக) சிற்பியர் ஆகிய நாங்கள் அமைத்துள்ளோம். இதே போல, மண் சக்தியை ரெங்கநாதனாக மண்ணால் அமைத் துள்ளோம். நடராசன் மற்றும் ரெங்கநாதன் ஆகியோர் பிற்காலத்தில் சமயத்துறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, மூலப்பொருளின் உயிர்ப்புள்ள பருப்பொருளாகக் கொண்டு வழிபடு படிமங்களாக விளங்குவதாயின. சிற்பியர் கையாளும் அளவுகளால் உயிர்ப்புண்டாகிறதென்பது சிற்ப விஞ்ஞானக் கொள்கை[1].

நிலைத்த பொருள்களாய் இவ்விரு படிமங்களும் கடல் கொண்ட நாவலந்தீவிலிருந்து [சங்க காலம்] இன்றுவரை போற்றுதலுக்கும் வழிபாட்டுக்கும்

---

1. मानेन निर्मितं बिम्बे स्वयं आभाति दैवतम् ।- மகுடோத்தராகமம். சிற்ப மானங்களைக் கொண்டு நிருமாணிக்கப்பட்ட பிம்பம் உயிர்ப்புடையதாகிறது என்பது பொருள். [கணக்கிலே கட்டுப்பட்டு நிற்கிறான் கடவுள்] எனவே கணபதி என்பது முதற்கடவுளாக ஆனான் என்க.

உரியனவாக வழிவழியாக வந்திருக்கின்றன. இவையிரண்டும் தென்னாட்டில் தான் இன்றும் போற்றப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தகுந்த உண்மையாகும். இதனை எவரும் மறுத்தல் இயலாது.

சிவநடராசனுக்கு நான்கு கைகளைக் கொடுத்து இடது கையில் தீயும், வலது கையில் உடுக்கையும் தந்து ஆடல் அரசனாகக் காட்டப்பட்டிருக்கிறது. இஃது எல்லோர்க்கும் தெரிந்ததே. விண்ணில் ஒளியும் ஒலியும் நிறைந்துளது என்பது விஞ்ஞானச் செய்தி . ஒளி துடித்து ஒலி பிறக்கிறது என்பது விஞ்ஞான நிகழ்வு. துடி, ஒளி, ஒலி ஆகிய மூன்றும் ஒடுங்கிய நிலையில் விண் என்றும், விண்வெளி என்றும் ஆகாசம் என்றும் பெயர் பெறுவதாயிற்று என்பது மேல் நிலை விண்ஞான நுட்பம். விண் என்ற சொல்லுக்குத் 'தெரித்தல்' 'துடித்தல்' explotion or vibration என்ற விஞ்ஞானப் பொருள் ஒன்றுண்டு என்பது இக்கால விஞ்ஞானியர் பலருக்குத் தெரிந்திருக்கக் கூடும் என்று நம்புகிறேன். இங்ஙனம் துடிப்புறுவதால் ஆகாசத்தில் விராவிக் கிடக்கும் ஒளியும் ஒலியும் அசைவுறு பொருளாயின. அந்த மூலத் துடிப்பைக் காலம் என்றும் சொல்லி சிவனைக் காலன் என்று மூதறிஞராம் சிற்பிகள் சொல்வாராயினர். இந்த மூலப் பொருளின் சிருஷ்டிக்கும் இயல்புகளை [அ] ஆற்றலை உணர்ந்து சிவனை முதற் பொருளாகச் சைவ சமயத்தில் கொள்ளப் படுவதாயிற்று . இதே போல இரண்டு கைகளைக் கொண்டு மண் பொருளாக (material substance) ரெங்கநாதர் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். கருத்தொற்றுமை கருதி நான்கு கைகளைக் கொண்ட நிலையில் விஷ்ணு என்று பெயர் பெற்றார். எனவே, சங்ககாலத்திலேயே, நுட்பப் பொருள்கள் (Divine substances) மானுட உருவம் தாங்கிய பொருள்களாக, சிற்பியர்கள் தம் உளத்தே கண்டு தேர்ந்து உருவகித்திருக்கிறார்கள். இதன் பிறகே, சைவமும், வைணவமும் மூலத்தின் இரண்டு அடிப்படை இயல்புகளைப் பிரதிபலிக்கும் சமயத் திருவுருவங்களாக முறையே நடராசனையும், ரெங்கநாதனையும் ஏற்றுப் போற்றி வழிபட்டு வருவதாயின. சமயம் என்றால் காலம் என்பது தானே பொருள்? சைவமும், வைணவமும் மதங்கள் அல்ல. மதம் என்பது தனிப்பட்டோரது சொந்தக் கொள்கை (intellectual speculation) ஆகும். சமயம் என்பது உலகத்தோர் அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஞ்ஞான உண்மையாகும் (Universally and scientifically accepted truth).

எனவே, இரண்டு மூலப் பொருள்களான மண் பொருள் மற்றும் விண்பொருள் களின் குணச் சிறப்பைக் கண்டறிந்த சிற்பியர்கள் தொடக்ககாலத்தில்

ரெங்கநாதருக்கு மேடை அளித்து அரங்கம், என்று சொல்லி அவனுக்கு அரங்கநாதன் என்ற பெயரைக் கொடுத்தார்கள். இந்த நிலையில் மாமல்லபுரத்தில் ஸ்தலசயனப் பெருமாள் என்ற திருக்கோலத்தில் ஒரு மேடை மீது இன்றும் காணலாம். இதேபோல கடற்கரைக் கோவிலின் மேற்குப் பக்கத்திலும் தரைமட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். நடராசன் இருக்கைக்கு சிற்றவை என்றும் சிற்றம்பலம் என்றும் பெயர் கொடுத்திருக்கிறார்கள். சிற்றம்பலம் என்பது ஆகாசம் எனப்படும். நான் சிற்றவையை Microbode என்று பெயரிட்டிருக்கிறேன். ஏனெனில் ஒவ்வொரு விண் அணுவும் ஒரு கனசதுரக் கூடமாக வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. தற்கால விஞ்ஞானத்திற்கும் இக்கருத்து உண்டுதான்.

இந்த விஞ்ஞானச் செய்தியை உற்று நோக்கும் போது விண் பொருளே மண் பொருளாக விஞ்ஞான ரீதியாக உருமாற்றம் கொள்கிறது என்று புலப்படுகிறதல்லவா?

இத்தகைய கருத்தில் பிரிதொரு படிமக் கருத்து இருப்பதை இப்போது நோக்குவோம். நடராசனுக்குக் கொடுத்துள்ள நான்கு கைகளில், மேல் இடது கையில் 'ஒளி'யையும் [ஒளிரும் fire], மேல் வலது கையில் 'ஒலி'யையும் [துடிப்புறும் உடுக்கை drum], சிற்பியர் கொடுத்துள்ளார்கள். வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி ஆடும் தோற்றத்திலும் காணலாம். இந்த வடிவத்தைக் கண்ணாடி முன் நிறுத்திப் பார்த்தால் மாறுகால் தாண்டவத் தோற்றம் தெரிய வரும். அதாவது, ஒளியும், ஒலியும் முறையே வலது மேற்கரத்தில் ஒளிரும் சக்கரமாகவும், மற்றும் இடது மேற்கரத்தில் ஒலிக்கும் சங்காகவும் தோன்றுவதைக் காணலாம். இந்த நிலையில் ஒரு மாறுபட்ட - சிவ தத்துவம் கொண்ட - பிம்பமாக அப்படிமம் காணப்படும். இதனை Mirror image என்று சொல்லுகிறோம். இந்த மாறுகால் தாண்டவத்தை dance of destruction சம்ஹாரத் தாண்டவம் என்று சொல்வது தவறெனத் தெரிகிறதல்லவா? இப்படியும் ஒரு கோணத்தில் இப்படிமம் பொருள் படுவதை உணரலாம் அல்லவா?

அதாவது, நடராசனின் கண்ணாடிப் பிம்பமாக அல்லது பிரதி பிம்பமாக ரெங்கராசன் உள்ளான் என்ற பொருளை உணர்த்தும். அவ்வளவு தான். இதனாலன்றோ அரியும், சிவனும் ஒண்ணு அறியாதவன் வாயிலே மண்ணு என்ற கிராமீயக் கூற்று ஒன்று ஏற்பட்டதென்க. எவ்வளவு உண்மை? எவ்வளவு எளிமை?

மேலும், சிவன் வேறு, விஷ்ணு வேறு அல்ல என்ற அறிவியல் உண்மையை நமது உபநிஷதம் [ஸ்கந்தோபநிஷதம்] ஒன்று வலியுறுத்தியிருக்கிறது. இரண்டிற்கும்

யாதொரு பேதமும் இல்லை என்பதை கூற்றின் முடிவாகக் காணலாம். இப்போ்ப்பட்ட பார்வையே உண்மையான ஞானம் என்று அந்த உபநிஷதம் கூறுகிறது. இதை யாரும் சொல்லவில்லையே என்று கேட்கலாம். புரியவில்லை என்பது தான் இதற்கு விடை.

சிவாய விஷ்ணு ரூபாய சிவரூபாய விஷ்ணவே
சிவஸ்ய ஹ்ருதயம் விஷ்ணு: விஷ்ணோஸ்ச ஹ்ருதயம் சிவ:

அபேத தெர்ஸனம் ஞானம் என்பது ஸ்கந்தோபநிஷதத்தின் முடிவான விஞ்ஞானச் செய்தி.

இக்கூற்றில் உள்ள விஞ்ஞான நுட்பத்தை மேலும் நோக்குவோம். சிவன், விஷ்ணு ஆகிய சொற்கள் விஞ்ஞானச் சொற்கள் என்பது அடிப்படை அறிவியல் செய்தியாகும். சிவன் என்ற சொல் எங்கும் பரவி விளங்கும் energyயையும் விஷ்ணு என்ற சொல் எதிலும் நிறைந்த matter யும் குறிக்கும். இந்த நிலையில் energyயில் **matter**ம், **matter**ல் energyயும் இருப்பது இக்கால விஞ்ஞானம் படித்தவருக்குப் புரியும். இதைத்தான் உபநிஷதின் இரண்டாவது வரி உணர்த்துகிறது.

இதனைத்தான் சிவனுக்குள் விஷ்ணுவும், விஷ்ணுவுக்குள் சிவனும் உளர் என்று இலக்கிய நயத்தோடு மேற்கண்ட உபநிஷதம் கூறுவதாயிற்று.

இந்தக் கூற்றுக்கு ஒத்த தேற்றம் ஒன்றை நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் $E=mc^2$ என்று சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்புதான் கண்டு சொன்னார் என்பதை உற்று நோக்குக. அவர்தம் சாம்யத்தில் E என்பது energy என்றும் mc^2 என்பது matter என்றும் தெரிகிறதல்லவா? இஃது உண்மையே. இதனை நமது பண்டைய வாஸ்து விஞ்ஞானமானது பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் வஸ்துவே வாஸ்துவாகிறது என்று சொல்லி விட்டது. இங்கே வஸ்து (eternal substance) என்பது energyயையும் வாஸ்து (extended form of the same substance) என்பது matterயையும் குறிக்கும் சொற்களாகும். இவற்றைத் தான் நான் முதலில் விண்பொருள் என்றும் மண்பொருள் என்றும் குறிப்பிட்டேன்.

இவ்விரு சாம்யப் பொருள்களின் குணுகுணங்களை – குணச்சித்திரங்களைக் கண்டறிந்து சிவனுக்குப் பல்வேறு கோலங்களையும், விஷ்ணுவுக்குப் பல்வேறு கோலங்களையும் சிற்பியர்களும், ஞானியர்களும் கொடுப்பாராயினர். இவை யெல்லாம் அவற்றின் விரிவுரைகள் (interpretative forms or illustrative forms) என்று மரபில் சொல்லப்படும்.

இந்த நிலையில், திருப்பதி வெங்கடேசப் பெருமாளை விஷ்ணு என்றும் நடராசனை சிவன் என்றும் இவ்விரண்டில் முழுமுதற் பொருளாகிய சிவனைத் "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றனர் நம் சைவ சமயாச்சாரியர்கள். இந்த விரிவுரைகள் வாஸ்து சாஸ்திரங்களிலும், ஆகம சாஸ்திரங்களிலும், சம்ஹிதைகளிலும் இருக்கின்றன.

இந்தக் கோணத்திலிருந்து பார்த்தால், திருமலையான் மண் பொருள் அதாவது வாஸ்து புருஷன் என்பது புலப்படும். இஃதேபோல் சிவன் வஸ்து புருஷன் எனப்படுவான். நிற்க.

எனக்குக் கிடைத்த ஓர் அரிய சந்தர்ப்பம் பின்வருமாறு: நானும் முன்னாள் திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் திரு.Cஅண்ணாராவ் அவர்களும் ஒருமுறை சர்க்கார் தெரிசனம் என்று சொல்லக்கூடிய இடைநேரத்தில், திருமலையான் கருவறைக்குள்ளே சென்றோம். 1½ மணி நேரம் அத்திருமேனியைக் கண் கொட்டாமல் அமர்ந்து பார்த்துப் பரவசமடைந்தோம். ஆபரணங்கள் அனைத்தும் நீக்கப்பெற்ற நிலையிலுள்ள அந்த வடிவத்திற்கு அபிஷேகம் செய்தார் பூசகர். அதை வைத்து இப்போது சொல்லவருவது யாதெனில், அந்த வடிவம் நூற்றுக்கு நூறு விஷ்ணுவாக – விஷ்ணுவின் படிம இலக்கணம் கிஞ்சிற்றும் மாறாமல் இருப்பதைக் கண்டோம். வைகானச தியான முக்தாவளி என்ற பழையதொரு நூலில் இதற்கான இலக்கண வர்ணனை இன்றுமுளது. திருமலையில் அந்த வடிவத்தை மனதில் பதித்துக் கொண்டு மோடி ரப்பர் கம்பெனியாருக்கு அதே உருவத்தைக் கல்லிலே செய்து, அனைத்து அணிகளையும் ஆயுதங்களையும் அவ்வடிவத்திலே வைத்துச் செய்து கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு ஏற்ப செய்து கொடுத்தேன். ஆனால், திருமலையில் உள்ள திருமலையான் வடிவத்திற்கு பண்டைய சிற்பி கொடுத்த உயரத்திற்கு 2 அங்குலம் குறைத்தே செய்தேன். காரணம் யாதெனில், திருமலையான் உருவம் எப்போதும் பெரியதாகவே இருக்க வேண்டும் என்ற லட்சியம்தான்.

இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்னவென்றால், மேற்கரங்களில் இடது கையில் சங்கைப் பிடித்து சக்கரத்தை வலது கையில் தாங்கி, தனது வலது கையில் வரதம் காட்டி, இடது கையை தொடைமீது நீட்டி வைத்து, சமபாத ஸ்தானக நிலையில் நின்றகோலத் திருமேனியாக திருமலையான் திருக்கோலம் கொண்டிருக்கும் இந்த மூர்த்தத்திற்கு, கலைப்பெயர் (technical name) யோக ஸ்தானக விஷ்ணுமூர்த்தி என்பதாகும்.

இந்த நிலையில் சைவமும், வைணவமும் மூலத்தின் [பிரம்மத்தின்] இருகூறுகள் (aspects) என்பது புரியாமல் சச்சரவுக்குள்ளாவது சரிதானா? தேவையில்லை தானே! யோசியுங்கள்.

ஐந்திறமா? ஐந்திரமா?


வினாவும் விடையும்

தமிழ் நாடு அரசு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் ஐந்திறம் என்ற ஒப்பற்ற ஒரு கலை நூல் [1986] வெளியாகியது. அதே ஆண்டில் அதனை மனமாற வரவேற்று அழகிய அணிந்துரை தந்தவர் மதுரை காமராஜர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர்.வ.சுப.மாணிக்கம் அவர்கள் ஆவார்கள். ஒரு பார்க்கோடா ஒரு ஆய்வுரையாகச் செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்தது. அந்த நூலில், தமது சிறப்புரையை தொகுத்துக் கூறிவிட்டு அதற்குப் பிறகு யாதொன்றும் சொல்ல முடியாமல் இருக்கிறேன் என்று சொல்லியதோடு இந்த நூல் அறிவியல் சார்ந்த விஞ்ஞானிகளை வைத்துப் புரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவுரை செய்துள்ளார். என்னே அவரது honest scholarship?

கிட்டதட்ட 19 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஒரு வரும் இந்த நூலுக்கு உரை எழுத வில்லை. அதற்குமாறாக, ஐந்திறம் என்று வல்லின 'ற' போட்டு தலைப்பு இருப்பதால், இது சந்தேகத்தை ஊக்குவிக்கிறது என்று சொல்லி விட்டார்கள். தொல்காப்பியத்தில் பரம்பாரனார் அமைத்த பாயிரத்தைப் பார்க்கும் பொழுது பரம்பாரனார் ஐந்திறம் என்று சொல்லாமல் ஐந்திரம் என்ற 'ர' போட்டு சொல்லி விட்டதால் இந்த நூல் வடவர் சார்ந்த நூல் என்றும் அடித்துப் பேசி, ஐந்திறத்தை வழக்காற்றுக்கு வரவிடாமல் செய்து விட்டார்கள்.

இந்த நிலையில் வடலூர் இராமலிங்க அடிகளார் அவர்கள் அருட் பெருஞ்ஜோதி என்ற அகவலில் தன் கைப்பட எழுதிய செய்தி கீழே காட்டப்பட்டிருக்கிறது. இதில் ஐந்திறம் என்ற வல்லின 'ற' போட்டு எழுதியிருக்கிறார். இவரது திருவருட்பாவை படித்தவர்கள் இராமலிங்க அடிகளார் அவர்கள், மயன் எழுதிய ஐந்திறத்தை கசடற

கற்று, தேர்ந்து அந்த தமிழ்ப் பாவை இயற்றியிருக்கிறார் என்க. மயன் என்ற பெயரையும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் ஐந்திறம் என்பது சரியேதவிர இந்திரனால் கொடுக்கப்பட்ட நூல் என்று ஒரு சிலர் இது நாள் வரை கூறி வந்த கருத்து இன்றோடு அடிபட்டுவிடுகிறது. வாழ்க இராமலிங்க அடிகளார் அவர்கள்!



மண்ணினி லைம்பூ வகுத்ததி லைந்திறம்
அண்ணுற வமைத்த வருட்பெருஞ் ஜோதி

மேலும், ஐந்திற நூலாசிரியர் மயன் பற்றிய செய்திகள் இந்த அகவலில் இடம் பெறுகிறது. இதனால், தமிழக அரசு கொடுத்த ஐந்திறம் 10,000 ஆண்டுகளுக்கு முன்பாக முதற் சங்ககாலத்தில் இயற்றிய செய்தியை ருசுப்படுத்திடச் செய்த இராமலிங்க அடிகளார் அவர்களை மீண்டும் ஒரு முறை வாழ்த்துவோமாக! தமிழர் மானம் காத்த பெருமகனன்றோ!

ஐந்திறம் என்பது இயற்கையின் நிலைப்பாட்டை, முன்னும் பின்னும் நடந்து வரும் செயல்பாட்டை, அதிலிருந்து இயல், இசை, நடம் என்ற முத்தமிழோடு சிற்பக்கலை, கட்டிடக் கலை சேர்ந்து ஐந்தமிழுக்கு அடிப்படையான ஒரு பொது இலக்கண நூல் – ஒரு பொது அறிவியல் நூல் – பொது விண்ணியல் மண்ணியல் நூல் என்பது ருசுவாகிறது. இந்த நற்செய்திக்கு உரித்தான தமிழக முதல்வர் அவர்களையும் தமிழக அரசையும் அறிஞர்கள் போற்றுவார்களாக.

முதன் முதலில், 1986 ல் இந்தத் தமிழ் ஐந்திறத்தை அரசு மூலம் பதிப்பித்துக் கொடுத்தருளியோர் மூவர்.

1.முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர். எம்.ஜி.ஆர். அவர்கள்.

2.தமிழக முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர்.அரங்கநாயகம் அவர்கள்.

3.முன்னாள் தமிழக இந்து அறநிலையத்துறை அமைச்சர் மேதகு
ஆர்.எம்.வீரப்பன் அவர்கள்.

4.இந்த ஐந்திறச் செய்திகளை அவ்வப்போது தமிழினத் தலைவர் டாக்டர்.கருணாநிதி அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவந்து, வாய்ப்புகள்

கிடைக்கும் ஆரம்ப நேரத்தில், ரசிக்கச் செய்திட்ட என்னை ஊக்கு வித்தவர்களும், அய்யன் திருவள்ளுவர் சிலையினை எடுப்பிக்கச் செய்ததைப் பாராட்டி - அத்திருவுளத்தை போற்றுவதற்கு ஐம்பதாயிரம் விஸ்வகர்மாக்கள் சென்னையில் ஒன்று கூடி வாழ்த்திய போது, மயனை நன்றாகத் தெரிந்து கொண்ட அவர்கள் தமிழக முதல்வராக இருந்த நேரத்தில், சிற்பியர் இனமக்களை விஸ்வகர்மர்கள் என்று அழைக்காமல் இந்திய மாயர்களே! என்று அடைமொழிந்து எங்கள் உளத்தை மகிழ்வித்த டாக்டர். கலைஞர் அவர்கள். இந்த நால்வருக்கும் எனது நன்றியினை புலப்படுத்திக் கொண்டு,

இறுதியாக, ஐந்திறத்தையும் சிற்பச் சித்தன் மயனாருடைய பிற நூல்களையும் அரசு ஆணையை மேற்கொண்டு அரசுக்குச் சேர்ப்பித்த மனனவேந்தன் ஆன்மிகப் புலவர் அருட்கவி வீரபத்தினார் அவர்களுக்கும் என்னுடைய சிற்பியர் சமுதாயச் சார்பில் நன்றி கூறி எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

வாஸ்து வியாசன் டாக்டர்.வை.கணபதி ஸ்தபதி.

பிரணவ வேதம்

ஓம்ஓம் ஓமியல் ஓமுறும்
ஒளிகலை ஒளிநிலை உறுசுடரே
ஓம்ஓம் வெளிநிலை வெளியுறும்
ஒளிகலை வியனுறும் விரிசுடரே
ஓம்ஓம் முருகொளி அறுசுடர்
ஐந்நிலை ஐம்மறை முதல்மறையே
ஓம்ஓம் கலையொளி நிலையுறும்
ஐவகை நெறியுறும் குறிப்பொருளே 1

ஓம்ஓம் ஒளியொளிர் உறுநிலை
உறுசுடர் இயல்விரி கலையொளியே
ஓம்ஓம் திருவெளி பெருவெளி
எண்ணிலை எண்கலை நிலையியலே
ஓம்ஓம் ஒலியசை ஒலிஒலி
பேரொளிப் பேரொளிப் பேரியலே
ஓம்ஓம் ஒளியிய லுறுமொலி
நிலையசை கலைவிரிப் பெருஞ்சுடரே 2

ஓம்ஓம் இயல்விரி ஒளிநிறை
நிலையியல் கலைபெறு மியல்விரிவே
ஓம்ஓம் மூலப் பொருள்நெறி
நாற்புறத் தியல்நிலை கலைச்சுடரே
ஓம்ஓம் எண்ணிலை அறுபான்
நான்கியல் கணக்கியல் சிற்றவையே
ஓம்ஓம் சுடரொளி மூலக்
கனல்நிலை ஓங்குறும் பெருந்திறனே 3

ஓம்ஓம் மறையொலி மூலப்
பொருளாள் முதல்மறை யொலியசையே
ஓம்ஓம் ஐம்மறை யியல்தரு
செம்மறை மெய்ம்மறை ஒலியிசையே
ஓம்ஓம் கலையொளி வெளியியல்
வளியியல் தீநீர் காற்றியலே
ஓம்ஓம் நிலம்புனல் அனல்வளி
விண்வெளி யியல்கலை விரிவெளியே 4

ஓம்ஓம் செவ்வான் உருநிலைக்
கலையொளிச் செந்திப் பழம்பொளியே
ஓம்ஓம் செங்கதிர் தன்கதிர்
ஒளியியல் விரிசுடர் மறையொலியே
ஓம்ஓம் மதியுறும் மண்டலத்
தொளிநிலை யியற்கதிர் பேரசையே
ஓம்ஓம் ஒளிமதி யியற்கலை
அறுநிலைத் தையியல் பெருங்கலையே 5

ஓம்ஓம் அசையலை இசைநிலை
மூலத் தியல்நிலை பேரலையே
ஓம்ஓம் ஒளிக்கலை வெளிக்கலை
ஒலிநிலை யசைக்கலை இயல்வெளியே
ஓம்ஓம் அறுசுடர் முச்சுடர்
முக்கலை முந்நெறி மெய்ப்பொருளே
ஓம்ஓம் ஐயியல் அறுவகை
யியல்நெறி செந்நெறிச் செம்பொருளே 6

ஓம்ஓம் சுடரொளி உயிரொளி
உயிரொலி விண்ணொளி ஒளிர்ஒளியே
ஓம்ஓம் படரொளி பாரொளி
சீரொளி இயலொளி ஒளிநெறியே
ஓம்ஓம் சுடரொளி ஒளியியல்
ஒளிக்கலை வெளிநிலைக் கலையெழிலே
ஓம்ஓம் பெருஞ்சுடர் அறுசுடர்
முச்சுடர் இருசுடர் சுடரொளியே 7

ஓம்ஓம் மெய்ப்பொருள் மெய்யியல்
உயிரொலி உயிரொலி யியல்சுடரே
ஓம்ஓம் மெய்க்கலை மூலப்
பொருள்நிலைக் கலையுறும் ஒளிக்கூரே
ஓம்ஓம் செந்நெறி மெய்ந்நெறிக்
கலைப்பொருள் ஓமொளி ஓமொலியே
ஓம்ஓம் கலைநிலை கலைமறை
கலைநெறி கலையியல் சீரொளியே 8

ஓம்ஓம் ஒளிக்கூ ரெண்கலை
எண்ணியல் எண்ணெறி ஒலியியலே
ஓம்ஓம் மூல மறையொலி
ஒளிநெறிச் செங்கதிர் தன்மதியே
ஓம்ஓம் கலைமதி யொளிதிகழ்
ஐம்மறை மெய்க்கலை எண்கதிரே
ஓம்ஓம் செழுமறை விழுப்பொருள்
செம்பொருள் பெரும்பொருள் முதல்மறையே 9

மறையொளி நுட்பம் மதியொளி
திட்பம் ஒளிமதிச் சீரொலியே
மறைதரும் செழும்பொருள் பருப்பொருள்
கருப்பொருள் விழுப்பொருள் தேர்நிலையே
மறைகலை மாக்கலை முக்கலைச்
செந்நெறி ஐங்கலைச் செம்மறையே
மறைநிலை நெறியியல் ஐந்தியல்
செந்நெறி செம்பொருள் சீர்ப்பொருடே 10

கலையொளி கலைக்கதிர் கலைமதி
முழுமதி செம்மறை யியல்கலையே
நிலையொளி நெறியொளி எழுகதிர்
ஒளியியல் செழுமறைச் சீர்க்கலையே
நிலையொளி கதிரொளி யியல்நெறி
விண்ணொளி வானியல் நெறிச்சீரே
கலையொளி யலையசை யியலுறும்
நெறிச்சீர் ஒளிக்கலை யியற்சீரே 11

மறைமுதல் பொருளாய் கலையியல்
ஒலியாய் மதியுறு நிலைகலையே
மறைமுதல் நெறியாய் மாக்கலை
மூலத் தெழுபரஞ் சுடரொளியே
மறைமுதல் குறியாய் மெய்ப்பொரு
ளாயியல் மெய்யொளி படரொளியே
மறைமுதல் ஆகமக் குறியுறும்
ஆதிலம் நெறிகலைப் பேரொளியே 12

ஓம்ஓம் வான்வளி யனல்புனல்
பார்நிலை நிலைகூர்ந்தே
ஓம்ஓம் இயலறி கலைதெரி
நுண்ணியல் ஒளிநெறியே
ஓம்ஓம் நுண்மதி எண்மதி
நெறிக்கலை நிலையுறவே
ஓம்ஓம் முதல்மறை நெறிக்கலை
நிலையொளி மெய்ம்மறையே 13

கலைநுண் பொருளியல் எண்கலை
எண்ணுணர் எண்ணுறுமே
நிலைகலை நெறிகலை குறிமுறை
யியல்நிலை வெளியுறுமே
கலைநெறி முதல்மறை ஐம்மறை
மூலத் தியல்நிலையே
கலையியல் செம்மறை முதல்மறை
மூலப் பொருள்நிலையே 14

மூலத் தியலெழு முழுசுடர்
மெய்ச்சுடர் கலைநெறியே
காலத் தியலெழுங் கலைநெறி
அறுசுடர் பேரொளியே
சீலத் தெண்ணிலை சீர்நிலை
சீர்க்கலை நேர்நெறியே
கோலத் தியலுறும் கலைநிலை
யாற்றல் குறியுறுமே 15

<u>வேறு</u>

ஓம்மறை மூலம் ஓர்ந்தே
ஒருபொருள் நுட்பங் கண்டோர்
ஆமெனும் இயலு மாய்வர்
அருமறைப் பொருளுந் தேர்வர்
தாமெனும் தன்மை கூர்ந்தே
தனிநிலை யுண்மை யாய்ந்தே
ஓமெனும் பொருளை யாய்வார்
ஐம்மறை தேர்வர் நன்றே 16

விண்ணெழும் மறையா யாகி
வானுறும் ஒலியே யாகி
பண்ணுறும் கலையி னாகி
பார்முத லைந்தும் காட்டும்
எண்ணெழுத் தியலுங் கூட்டும்
இசையல்ல யசையு மாகி
நுண்ணென ஒலியொ லிக்கும்
ஒலியறுத் திரளோ மன்றோ 17

ஒமெனும் ஒலியி னாலே
வெளிநிலைக் கலையைத் தேர்ந்தே
ஒமெனும் ஒளியி னாலே
உட்பொரு ளுணர்வுங் கொண்டே
ஒமெனும் பொருளி னாலே
பற்பல கலையு ணர்ந்தே
ஒமெனும் நுட்ப மாய்ந்தே
மெய்ப்பொருள் நிலையுங் காண்பீர் 18

நீர்நெருப் பியலின் தன்மை
நெடிதுணர் உணர்வி னாலே
பார்நிலை நீரும் அங்கு
காற்றுறும் வானின் மூலம்
ஏர்நிலை வானம் காற்று
நெருப்பியல் நீரின் தன்மை
சீர்நிலை நிலமுங் கூடும்
ஐம்பொருள் இயலே யன்றோ 19

மன்னுயிர் வாழ்வ தற்கே
மறைபொருள் வழியே கூட்டும்
மன்னுயிர் வாழ்நெ றிக்கே
வளர்கலை யியலும் ஆக்கும்
தென்றமிழ் ஒளியி னாலே
சீர்மறை யெழுத்தே யாகி
முன்னிலை மூல மாகி
மொழிமறை யியலு மாமே 20

அகப்பொருள் முலங் கூட்டி
அறிபொருள் காலங் காட்டி
முகிழ்ப்புறும் தன்மை யாலே
முன்னிலை யியலும் நோக்கி
மிகுபொருள் உண்மை யாய்ந்தே
மெய்ப்பொருள் இயலும் மாய்ந்தே
வகுத்துறுந் திறமை யாற்றல்
வளர்மறைக் கலையே காட்டும் 21

ஐம்பொருள் முல மாய்ந்தே
அகப்பொருள் வண்மை யாய்ந்தே
செம்பொருள் திறத்தி னோர்ந்தே
அறுநிலைத் தன்மை கூர்ந்தே
செம்மறை முலங் கண்டே
சீர்நெறி இயலே நோக்கி
ஐம்மறை யாக்கம் ஆய்ந்தே
சிற்றவை யியலே கூர்மின் 22

மெய்ம்மறைப் பொருளின் முலம்
மறைமுத லைந்துங் காட்டும்
செய்நிலைக் கலையுங் கூட்டும்
சீர்மதி நுட்பந் தேக்கும்
மெய்யியல் நிலைச்சீர் நோக்கி
மெய்ப்பொருள் உண்மை நோக்கும்
மெய்ப்பொருள் நுண்மை எண்மை
விளக்குறும் ஓம்ம றைச்சீர் 23

ஒம்மறைச் சிரு ணர்ந்தே
ஓம்ஒளி நுட்பந் தேர்ந்தே
ஓம்கலை இயலும் நோக்கி
ஒருபொருள் திட்பம் நோக்கி
ஓம்நெறித் திறத்தி னாலே
உட்பொருள் ஆக்கங் கூர்ந்தே
ஓமியல் நிலையுங் கூர்ந்தே
நெறிநிலைக் கலையுங் கூறும் 24

விண்ணொளிக் கலையுங் கூட்டி
விழுப்பொருள் நிலையும் நாட்டும்
பண்ணொலி யியலி னாலே
பெருங்கலை நுட்பம் தேர்ந்தே
எண்ணொளி மூல நுட்பம்
இயல்பட விரித்துக் கண்டே
தண்ணொளிக் கலையி னாலே
காரியல் ஆக்கங் கண்டே 25

கண்முதற் பொருளு மைந்தும்
கவினுறக் கருத்தால் நோக்கி
விண்முதல் இயலி னாக்கம்
விழித்துறக் கண்ணுற் றாங்கே
எண்முதல் கலையா லாய்ந்தே
சிற்றவை நுட்பந் தேர்ந்தே
பண்முதல் நுட்ப மாய்ந்தே
உள்நடத் திசையைக் காண்பாய் 26

முப்பொருள் மூலம் நோக்கி
முழுமுதற் பொருளின் நுட்பம்
ஒப்பிலா பொருள்தி றத்தால்
சீர்பெற வியந்து கண்டே
ஒப்பிலா மூல மூன்றின்
ஒருபொருள் நுட்ப மாய்ந்தே
மெய்ப்பொருள் நிலையே நோக்கி
ஐம்புலன் இயல்பே காண்பீர் 27

காலமா நுட்பந் தேர்ந்தே
கலையியல் உயிரின் நுட்பம்
மூலமா திட்பத் தாலே
முயன்றினி தாய்ந்து நோக்கி
ஞாலமாப் பொருள்நி லைக்கே
நண்ணுறும் கோலங் கண்டே
சீலமும் கதிரொ ளிக்காய்
செய்முறை யறிந்து நோக்கிர் 28

செய்முறை திறமு மாய்ந்தே
செய்வினை நுட்பந் தேர்ந்தே
உய்முறைக் கருத்தி னாலே
ஒருபொருள் தன்மை கூர்ந்தே
மெய்முறைப் பொருளி னாக்கம்
மருநிலை இயலா லாய்ந்தே
உய்முறைத் திறமே கூறும்
மறைநெறிப் பொருளே ஓர்வாய் 29

மறைநெறி யாக்கம் மொன்றே
மெய்நெறி நோக்க மாகி
மறைநெறி யியலா லாய்ந்து
ஓம்மறை நுட்பத் தாலே
மறைக்கலை யுணர்வி னாற்றல்
மாநெறித் தன்மை கூட்டும்
மறைக்கலை இயலின் நுட்பம்
உள்ளத்தி லுணர்வே சேர்க்கும் 30

எண்கலை மாநெ றிக்கே
திருநிலை நெறியும் ஆக்கும்
எண்கலை மூலத் தன்மை
இயலல்மா நெறியின் தன்மை
எண்கலை மூலங் காலம்
இடைநிலை ஆற்றல் ஓர்ந்தே
எண்கலை ஒளியின் தன்மை
ஒலிஒளி நிலையி யக்கும் 31

ஒளிஒளி மூல நுட்பம்
உணர்முறைக் கலையால் னோக்கி
வெளிவொளி யியலி னாலே
அகவெளித் திட்ப மாய்ந்தே
ஒளியுரு ஒமெ முத்தை
ஒளியிசை முறையா லாய்ந்து
ஒளிக்கலைத் தன்மை நுண்மை
மெய்க்கலை மூலம் கூட்டும் 32

மூலமே யியலி னாற்றல்
முதிர்நிலை அறுபான் நான்கின்
காலமே அசைவி னாக்கம்
விசையுறும் சுழலின் தன்மை
கோலமே குறிக்கும் நுட்பம்
குறிப்புறத் தெரிந்து காண்டல்
சீலமே யியலுந் தன்மை
செப்புதல் முறைமைத் தானே 33

மூலமா மறையே யாகி
முழுப்பொருள் ஓமெ மூத்தாய்
கோலமா வடிவங் காட்டி
குறியொளிக் கலையுங் காட்டி
மூலமாப் பொருளி னாற்றல்
மெய்ப்பொருள் நனிவி ளங்க
கோலமுங் குறியுங் கூட்டும்
குறிப்பொருள் நிலையே யன்றோ 34

எண்ணிலை நெறியுந் தேர்ந்து
எண்கலை யியலு மாய்ந்தே
நுண்கலை நுட்ப மூலம்
நுனிப்பொருள் ஆக்க மாய்ந்தே
எண்ணியல் விரிவுங் கூறும்
இயல்நெறித் திறத்தி னாலே
நண்ணிய பயனுங் கூடும்
நெறிமுறை நவிலு மன்றோ 35

இடமுறும் பொருளைத் தேர்ந்தே
எண்ணிலை முறையு மாய்ந்தே
திடமுறும் திறத்தி னாலே
சீர்ப்பொருள் மூலங் கண்டே
நடமுறும் ஆட லானின்
நவையறும் உருவ மூலம்
இடமுறும் காலங் கோல
மெண்ணுதல் முறையுங் கூடும் 36

மறைமொழி யியலா யாகி
மாபெருந் திறமுங் கூடி
நிறைமொழி நுட்ப திட்பம்
நெகிழ்நிலை யோசை நோக்கி
அறைநிலை யோசை யாற்றல்
அணிபெரும் கலையே கூட்டும்
நிறைமொழி நுட்ப மன்றோ
தன்கலை தன்மை கூடும் 37

ஓதரும் மூல மாகி
ஓம்மறைப் பொருளே யாகி
ஓதலால் உணர்வே மிக்கு
மெய்ப்பொரு ளுணர்ந்து நாளும்
போதரும் பொருளும் நோக்கும்
பொருந்துநற் பயனும் பண்பும்
தீதற வுணர்வோ ருக்கே
ஓம்மறை நுட்பங் கூடும் 38

ஓம்மறை மூல மாகி
ஒருபொருள் நுட்ப மாகி
ஓம்முதல் முறையே யாகி
செம்பொருள் சீர்மை நோக்கி
ஓம்பொருள் இயலே கூட்டும்
ஒருபொருள் தன்மை கூட்டும்
ஓம்கலை மூலத் தாலே
ஒருநிலை நுட்ப மாய்வாய் 39

ஒளியொளி ஒளியிற் கண்டே
ஒலிஒலி ஒளியி னாய்ந்தே
வெளிவொளி யியலி னாலே
மெய்ப்பொரு ளோர்ந்து ணர்ந்து
ஒளிக்கலை நெறியின் மூலம்
உள்ளொளி உணர்வால் நோக்கி
ஒளித்திற மதியி னாலே
மதியொளி யியலுஞ் சேரும் 40

ஐம்புலன் நெறியை நோக்கிப்
புலனெறித் தன்மை மூலம்
செம்பொருள் திறமு மாய்ந்து
சீர்மூலத் தன்மை கண்டே
செம்மைசேர் நெறியி னாலே
அறுசுட ரொளியு மாய்ந்தே
ஐம்மறை மூலங் கூறும்
முதல்மறைப் பொருளே யன்றோ 41

முதல்மறை நெறியி னாலே
மெய்யுணர் கலைகள் கூடும்
முதல்மறை குறியி னாலே
அறிகுறி யியலு மாய்ந்து
முதல்மறைப் பொருளின் நோக்கால்
முந்நெறி மூலம் காலம்
முதல்மறை கூட்டும் சீர்த்தி
மெய்ந்நெறி யியலே யன்றோ 42

உடலுறுப் பியலு மாய்ந்தே
உளத்தொளி நெறியு மாய்ந்து
அடலுறுப் புலன்வி ரத்தால்
ஐம்புலன் நிலைநி றுத்தி
சுடரொளி அறுவ கைத்தாய்
அறுநிலத் தன்மை யுண்மை
படரொளி யாற்ற லாலே
பாங்குறும் நோக்கே மூலம் 43

உறுநெறி மூலத் துண்மை
ஒங்குறும் அறுநி லத்தும்
பெறுநெறி சுடரின் மூலம்
சுடரொளி விண்ணில் நோக்கி
அறுவகை யியலு மாய்ந்தே
ஐந்நெறி மூலத் தாலே
உறுவகை ஐம்ம றைக்கே
ஒம்மறை மூல மாமே 44

ஓம்மறை மூல மாகி
ஐம்மறை யியலா யாகி
ஓம்கலை யியலி னாலே
ஒளிக்கலை நுட்ப மாய்ந்தே
ஓம்மறை முதலா யுற்ற
ஒருபெரும் மூலங் கண்டே
ஓம்மறை நுட்பத் தாலே
ஐம்மறை யியலு மாய்வாய் 45

முதன்மறை மூலத் தன்மை
முகிழ்பொருள் விண்ணின் மெய்க்கை
முதன்மறை முப்பொ ருள்தான்
முந்நெறி ஐந்நெ றிக்கே
முதன்மறை நுட்பந் தேர்ந்தே
ஐம்மறை யியலுங் கூர்ந்தே
முதன்மறை யாக்கங் கூறும்
முப்பொருள் நெறித்தி றத்தே 46

கண்முதற் பொருளி னாலே
கலைபல யாய்ந்து ணர்ந்து
விண்முதல் பொருளு மைந்தின்
மெய்ந்நிலை குறியாற் கண்டே
பண்முத லோசை யைந்தும்
பாங்குறத் தெரித்த வாற்றல்
எண்முத லைந்துங் கண்டே
எண்ணிலை யியலுங் கூறும் 47

எண்ணிலை நாற்பு றத்தாய்
இயலுமைந் தைந்தின் ஆக்கம்
விண்ணிலை அகப்பு றத்தும்
மெய்ப்பொருள் நிலையா லாய்ந்தே
எண்ணிலை நிலையும் நோக்கி
இயல்புறும் மறையின் ஆற்றல்
எண்ணிலைக் கருத்தி னோக்கி
எழில்முறை தன்மை யன்றோ 48

ஒளியொளி யுருவத் தாலே
ஒளியொளி ஓமெ மூத்தும்
வெளிநிலைக் கலையா லாய்ந்து
விண்ணொளி மேவக் கண்டே
ஒளியொளி நுட்ப மூலம்
ஓமுறும் பொருளை யாய்ந்தே
ஒளியியற் றிறத்தி னாக்கம்
மெய்க்கலை யியலே கூறும் 49

மூலமா யியலு மைந்தும்
ஐந்தியல் மெய்யு மாகி
மூலமுங் கால மூலம்
காலமுங் கால மூலம்
காலமாப் பொருளின் தன்மை
களிப்புறக் களித்துக் கண்டே
காலத்தை யளந்து காண்டல்
கணிநிலை மூல மன்றோ 50

முதல்மறை அண்ட மூலம்
மூலமுங் காலந் தேர்ந்தே
முதல்மறை அண்ட பிண்டம்
மொழியியல் முற்று மோர்ந்தே
முதல்மறை மூல மோர்ந்து
முப்பொருள் நெறியா லாய்ந்தே
முதல்மறை யியல் னாலே
மெய்ப்பொருள் காண்டல் கூடும் 51

ஐங்குறில் ஐந்தெ மூத்தாய்
ஐந்நிலை யாக்க மோர்ந்தே
ஈங்குறி னியலு மாற்றல்
ஊங்குறி னொளிருந் தன்மை
ஆங்குறின் மாற்றங் கூட்டும்
அறுநிலத் திறமுஞ் சேரும்
.ஊங்குறும் நுட்ப மன்றோ
அகவெளி ஒளியுங் கூட்டும் 52

ஓம்முதற் பொருள் னாலே
ஞாலமா விண்ணும் நோக்கி
ஆமுதற் கலையி னாலே
அறுநிலத் தன்மை யோர்ந்து
ஓமெழுத் துன்னி யுள்ளி
ஒருபொருள் நிலையி னாலே
ஓமுதற் கலையுங் கண்டே
மெய்ப்பொருள் நிலையுங் கூடும் 53

மெய்ப்பொரு ளுச்சி மூலம்
செம்பொரு விடையே காலம்
மெய்ப்பொருள் நுண்மை கோலம்
விழுப்பொருள் அடியே சீலம்
மெய்ப்பொருள் எண்மை யாலே
ஞாலமா விண்ணு மாய்ந்து
மெய்ப்பொருள் திறத்தி னுட்பம்
ஒட்பமும் விளக்கு மன்றோ 54

அகமுதற் பொருளி னாலே
அகப்புறத் தன்மை நோக்கி
அகவகத் திறத்தை எண்ணி
புறவகத் தன்மை கூர்ந்து
அகத்துள்ளே எழும்பு மாற்றல்
புறத்துறும் திண்மை நோக்கி
அகத்தியல் நுட்ப மாய்ந்தே
உடலுறுப் பியலுங் காணிர் 55

உடலுறுப் பியலே கோலம்
உள்ளொளிர் பெருத்த மூலம்
அடலுறுங் காற்றே காலம்
அறுநிலம் ஞால சீலம்
இடம்பொருள் காலம் நோக்கி
எண்ணிலை உடலு மாய்ந்தே
கடத்துறும் ஒளியை யாய்ந்தே
கண்டுணர் உணர்வே ஆற்றல் 56

உள்ளொளிர் ஒலியை யாய்ந்தே
ஓமெனும் உருவங் கண்டே
உள்ளுணர் வாற்ற லாலே
ஓம்ஒளி ஒலியை யாய்ந்து
தெள்ளிய லறிவி னாலே
திருநெறிக் கோலங் கண்டே
ஒள்ளிய அண்ட பிண்டம்
உணர்வினா லறிகு விரே 57

அண்டமும் பிண்டமு மாய்ந்தே
ஆருயிர்த் தன்மை நோக்கி
விண்டதோர் மெய்மை காண்டல்
முதல்முறை மூலத் தன்மை
கண்டமாக் கலையி னாலே
காணரும் பொருளைக் கண்டே
எண்ணிலை கலையா லாயல்
ஆடலான் நெறியே யன்றோ 58

நுண்பொருள் நுணுக்க மாகி
நுவலரும் பொருளே யாகி
எண்பொரு ளாற்ற லாலே
ஐந்தியல் நெறியு மாகி
விண்பொருள் மூலத் தாலே
விளங்குறு மாற்ற லாகி
திண்பொருள் செழுமை செப்பும்
சீர்முதல் மறையே யன்றோ 59

முதன்மறை நுட்ப மாய்ந்தே
மொழிப்பொருள் நிலையுங் கூர்ந்தே
முதற்பொரு ளியலு மாய்ந்தே
மெய்ப்பொருள் வளமே கேட்கும்
முதலியல் நுட்பத் தாலே
மூலமாம் பொருளு மாய்ந்தே
முதற்றிறத் தியலி னாலே
மெய்ம்மையை நாடு விரே 60

தலைமுறை ஓமெ மூத்தாய்
தனிமறை யிருக்கை யாகி
நிலைமறை மூன்றே யாகி
நான்மறை யிசையே யாகி
கலைமறை ஐந்தே யாகி
ஐம்மறைச் சிறப்பி னாக்கம்
இலைமறை வொளிர்த லாகி
மறைப்பொருள் சிறக்கு மன்றே 61

தலைமறைப் பொருளின் நுட்பம்
இருக்கையின் மூல நுட்பம்
தலைமறை யாற்றல் நுட்பம்
நிலைமறை மூல நுட்பம்
தலைமறை ஒலியின் நுட்பம்
நான்மறை யிசையின் திட்பம்
தலைமறை ஒளிரும் சீர்த்தி
கலைமறை ஐந்தே யன்றோ 62

ஐம்மறைப் பொருளும் நோக்கி
நான்மறைப் பொருளும் நோக்கி
ஐம்மறை யியலு மாய்ந்து
மும்மறைப் பொருளுங் கண்டே
செம்மறை மூன்று மாய்ந்தே
திகழ்மறை நான்கி னாலே
அம்மறை ஓமெ மூத்தாய்
ஐம்மறை யியலு மன்றே 63

மூலமாப் பொருளே யாகி
மூலமா யியல்வ தாகி
மூலமுங் காலமும் நோக்கி
முழுமுதற் றன்மை யாய்ந்தே
மூலத்தின் மூல நுட்பம்
மூலகா லத்தி னாற்றல்
காலமும் கால மூலம்
கணித்துறக் காண்டல் நன்றே 64

ஒளிக்கலை யியலே யாகி
ஓமெழுத் தொளிரு மாற்றல்
வெளிவொளித் தன்மை நோக்கி
வியன்கலைத் திறத்தி னாலே
ஒளிவொலி ஓமெ ழுத்தின்
ஒளிருறு மியல்பும் நோக்கி
ஒளியியல் ஓசை யாற்றல்
உருநிலை யாக்க மன்றோ 65

தலைமறைக் கலையி னாலே
தணிமுதற் பொருளே கூடும்
தலைமுறை மூலத் தாலே
தன்னிலை யியலு மாய்ந்தே
தலைமறை யாற்றல் கூர்ந்து
கனிப்பொருள் நுண்மை நோக்கி
நிலைமறை நுட்பங் கூட்டும்
நெறிப்பொருள் குறியே யன்றோ 66

விண்ணொளி யியலை நோக்கி
கோளொளி நிலையுங் கூர்ந்து
கண்ணொளித் தன்மை கூட்டும்
கலைநிலை நோக்க முற்றே
எண்ணொளி யியக்கங் கண்டே
எழுநிலை மூலம் தேர்ந்தே
பண்ணொலி ஓசை மூலம்
பார்நிலை யியலே யாக்கம் 67

மறைமுதற் பொருளே மூலம்
மாக்கலை யியலே யாகி
அறைகலை ஓசை யாக்கம்
அம்முதற் றண்மை நோக்கி
மறையியல் மூலத் தாலே
நிறைமொழி யொளியு மோங்கி
மறைமுதற் றன்மை கூட்டும்
மெய்ப்பொருள் கலையே யன்றோ 68

எண்முதல் கலைத்தி றத்தா
 வியற்றிறன் நோக்கி யாங்கே
விண்முதல் ஐந்தி றத்தால்
 மெய்க்கலை முலங் கண்டே
மண்முதற் பொருளு மாகி
 மெய்மொழி வொளியு மாகி
கண்முதற் கலைத்தி றத்தால்
 கவினுறச் சிறக்கு மன்றோ 69

உறுபொருள் செம்மை யாகி
 உயிர்ப்பொருள் முல மாகி
உறுநிலை யியற்றி றத்தால்
 ஓங்குறும் மாக்க லைத்தான்
சிறுபொருள் விழுப்பொ ருந்தான்
 செம்பொரு ளியலி னோங்கி
உறுகலை முலத் தாலே
 ஓங்குறு மாற்ற லன்றோ 70

செம்மறை முல மாகி
 செழுமறை கால மாகி
ஐம்மறை முல நுட்பம்
 பிரணவத் தன்மை யாகி
மெய்ம்மறை ஒமெ ழுத்தால்
 ஒரெழுத் தொளியாய் நின்று
அம்மறை யியலா யன்றோ
 அரும்பொருள் மறையே கூறும் 71

எரிதழ லொளியி னோங்கி
 இயல்நிலை வானும் சாற்றும்
எரியுருச் செந்தீ யாக்கம்
 இயலொளி நுட்பம் நோக்கி
விரிதரை வானங் காற்றே
 நீரொடு நெருப்பு மாகி
எரியியல் ஒளியி னாற்றல்
 இயல்கலைத் திறமே யன்றோ 72

ஒப்பிலாப் பொருளு மைந்தாய்
ஒண்புல னைந்தே யாகி
செப்பரும் பொருள்தி றத்தால்
செம்மறை மூலத் திட்பம்
மெய்ப்பொருள் கலையு மீர்ப்பாய்
மெய்யுண ரொங்கும் வண்மை
மெய்யியல் மூல மாய்ந்து
நிலைமறை யாயல் தேற்றம் 73

உடலுறுப் பியலின் வண்ணம்
ஞாலமும் அண்டம் நோக்கி
அடலுறும் மூலத் தாலே
ஆர்த்தெழும் நுண்மை நோக்கம்
இடம்பொருள் தன்மை யாலே
எண்ணிலை யியலின் தன்மை
நடமுறு மாட லானின்
நன்னிலைக் கலையின் ஏற்றம் 74

மூலமா மறையின் செம்மை
முழுமுதற் றிறத்தின் நோக்கி
காலமு மியலி னாலே
அறுசுடர் ஒளியி னாற்றல்
சீலமும் தெரியக் கண்டே
செம்மைமா மறையுங் கூறும்
கோலமும் குறித்த லன்றோ
குறிப்பொருள் நெறியின் கூரே 75

குறியியல் முற்று நோக்கி
குறிப்பொருள் கடந்த வண்ணம்
நெறியியல் நிலையா லாய்ந்தே
நீர்நிலம் நெருப்பும் நோக்கி
அறிநிலை காற்றும் விண்ணும்
அமைவுறு வமையுந் தன்மை
குறியுற நோக்கிக் கண்டே
ஐம்பொரு ளியலே காண்பீர் 76

ஐம்பொரு ளியலி னாலே
அரும்பொருள் மெய்ம்மை யாய்ந்தே
செம்பொருள் நுட்பத தாலே
செறிபொருள் ஆக்கம் நோக்கி
தம்பொருள் முதலிற் றாய
தனிநிலைக் கலையி னாற்றல்
அம்முதல் மறையின் கூறாய்
அரும்பொருள் துலங்கு மன்றே 77

முதலிடை முடிவுங் காண
மெய்ப்பொரு ளியலே யாகி
முதலுறும் முதலே கூறும்
முதற்கலை ஒளியே யாகி
முதலுறும் ஒசை ஒமென்
றுருபொரு ளுணர்ந்து கண்டே
முதலிய லொளியே யன்றோ
விண்மொழிக் கலையி னாற்றல் 78

ஒமுதற் பொருளே யாகி
ஒருகலைத் திறமுங் கூறும்
மாமுதற் றிறத்தி னாக்கம்
மெய்க்கலை நுண்மை நோக்கம்
ஒம்நெறி ஒமி யற்றான்
மெய்ப்பொரு ளியலே யாகி
ஒம்மறை வொளியே நோக்கி
அண்டமாக் கலையி னாய்மின் 79

வேறு

அண்ட மாக்கலை அண்ட மாயியல்
அண்ட மாநெறி யாற்றலால்
கண்டு றும்மொலி கலைநி லைத்திறன்
கருது மாயியல் தேற்றமாய்
விண்டு றுங்கலை ஒமெ னத்திறன்
விளம்பு மாக்கலை யியலதாய்
கொண்ட மாமறை கூறும் முதல்மறை
குறித்தெ ழுந்தகலை யாற்றலே 80

உயிர்நி றைந்தமொழி உயிர்நி லைக்கலை
உயிர்நெ றிக்கலை யாற்றலாய்
உயிர்ப்பு றுங்கலை உயிர்த்தெ ழுங்கலை
உயிர்ப்ப டைக்கலை மறையென
உயிர்ப்பு றுந்திறன் நிறைமொ ழித்திறன்
மறைமொ ழிக்கலை நுண்மையாய்
செயிர்ப்ப றுங்கலை சீர்மை மாயியல்
தெரிக்கு மாமறை நுட்பமே 81

வருமி யற்கலை ஒளிவொ லித்திறன்
வகையி னாக்கமும் நுட்பமும்
அருங்க லைத்திறன் ஐந்து றுந்திறன்
அருளொ லித்திறன் திட்பமும்
கருவி யற்றிறன் கருத்தி யல்நிலை
கலைநி லைத்திறன் ஒட்பமும்
அருளி யற்கலை ஒளிநெ றிக்கலை
மூல மாமறை நுண்மையே 82

செங்க திர்க்கனல் தண்ம தித்திறன்
மீனி யற்றிறன் மூலமும்
அங்கு றும்வொளி நெறிமு றைக்கலை
குறிநி லைக்கலை நோக்கியே
தங்கு றும்புனல் அனலி யற்கலை
தூநெ றித்திற னாற்றலால்
பொங்கு மாக்கலை மூல மாயியல்
நெறிம றைத்திறன் சாற்றுமே 83

வான நுட்பமும் விண்ணின் திட்பமும்
அண்ட வொட்பமு மெண்ணுறும்
வான மாயியல் ஒசையலை யலைவொளி
வெளிவெ ளித்திறன் கலையெனா
வான முவியல் விண்ணி னையியல்
வகுத்து ரைக்கலை மெய்மையும்
வான வான்கலை வாணி யற்கலை
ஒம்ம றைக்கலை மூலமே 84

மூல மேகலை மூல மேயியல்
மூல மாநெறி நுட்பமும்
மூல நுண்மையும் எண்மை யுங்கலை
விண்மை யுந்திற னாக்கியே
கால மாத்தொழில் கால மாயிறை
கால நுண்மையுங் காட்டுறும்
கோல மாநெறி குறிப்பு றுங்கலை
கலைநெ றித்திறன் கூறுமே 85

வேறு

மாமறைப் பொருளி னுண்மை
மலரியற் றிறமே யாகி
தூமறை நுட்பத் தாலே
தூநெறி தன்மை யோர்ந்தே
ஓமறைப் பொருளின் திட்பம்
ஒருங்குணர் கலையின் நுட்பம்
ஓமெனு மியலி னாலே
ஒளிர்நிலை யியலே யன்றோ 86

மண்ணியற் கலையி னுட்பம்
விண்ணியற் கலையின் திட்பம்
பண்ணிய லோசை நுட்பம்
பரந்தெழுங் கலையே நோக்கி
எண்ணுறுங் காலத் தாலே
இயல்நிலை நொடியு மோர்ந்து
நண்ணுறும் உயிர்ப்பு மாய்தல்
மறைநெறி நுட்ப மன்றோ 87

காலமுங் கணக்கு மாய்ந்து
கருத்துறும் தன்மை தேர்ந்து
கோலமா நெறியி னாலே
குறிகுறித் திண்மை நோக்கி
சிலமா மறையி னாற்றல்
தெள்ளெனத் தெளிந்து ணர்ந்தே
ஞாலமும் அண்டம் நோக்கி
நற்கலை இயலு மன்றே 88

மறைமொழி யியலே யாகி
    மொழிமுதற் றிறமே கூறும்
மறைமொழி மூல மாகி
    கலைமுதற் றிறமே வைகும்
மறைமொழி வோசை யாகி
    பண்ணிசை யியல்சு ரக்கும்
மறைமொழி ஓமெ ழுத்தால்
    ஓம்கலை விளங்கு மன்றே 89

விண்மொழி நிலையென் றுண்ணி
    மெய்ப்பொரு ளுணர்ந்து கண்டே
விண்ணிலை அகவிண் ணாற்றல்
    மாமறை யியலும் தேர்ந்தே
எண்ணிலை கலையி னாற்றல்
    இயல்புறுந் திறத்தி னாலே
பண்மொழி மூல நுட்பமும்
    பகர்தறும் பரப்பே யன்றோ 90

கடுங்கனல் ஒளியும் கூறும்
    கலைநிலைக் கூற்றின் கூறும்
அடும்புன லியலின் கூறும்
    வருநிலை நெறியின் கூறும்
இடுநிலைப் புள்ளி யாங்கே
    இயல்புறும் தன்மை கூர்ந்து
நடுநிலை நாற்பு றத்து
    நன்னிலை விளக்கு மன்றோ 91

நாற்புறத் தியலின் நுட்பம்
    நற்கலை இயலின் நுட்பம்
நாற்புறத் துள்ளும் கண்டே
    நிலைநெறி முறையின் கூர்ந்து
தேற்றமும் நீர்மை யாய்ந்தே
    சீர்மையும் குறித்தி லங்கி
ஆற்றலு முணர்த்திக் கூறும்
    அருமறை மூலத் தாற்றல் 92

மனிதமா நெறியே யோங்கி
மாநெறி யியல்பிற் றாகி
புனிதமா நெறித ழைத்தே
பொற்புறும் பொருளுங் கூர்ந்து
தனிநெறி மறையின் மூலம்
தன்னிலை யுணர்த்திக் காண்டல்
கனிந்துறும் உணர்வே யன்றோ
கருதருங் கருத்தே கூறும் 93

வேறு

உணர்வேநிலை உணர்வேகலை
உணர்வேமறை யொலியாய்
உணருங்கலை உணர்த்தும்நெறி
உணர்த்தும் ஒளி யியலாய்
உணர்மாநெறி ஓங்குறுங்கலை
ஒளியேயொலி திறனாய்
உணர்வோங்குத லியலாமறை
ஓமென்மொழி திறனே 94

விண்ணின்றழி வொலியாநிலை
வெளியின்நிறை பொருளாய்
மண்ணின்திற முணர்மாநெறி
மறையேநெறி தெருளாய்
எண்ணுங்கலை எழுத்தும்நிலை
பண்ணும்ஒலி மறையாய்
விண்ணுமுணர் மண்ணுந்தெரி
வியல்மாலை மறையே 95

மறையேகலை மறையேமொழி
மறையேயிசை மொழியாய்
நிறையோதரும் நெறியாய்நிலை
குறியாய்நிலை அலையாய்
அறையும்ஒலி அறியும்ஒலி
ஐந்தேபொரு ளாற்றல்
நிறைமாமொழி மறைமாமொழி
நெறியாமொழி நிலையே 96

வேறு

உயிர்ப்புறும் கலையி னாற்றல்
உயிர்நெறித் திறமே யாகி
உயிரெலாம் படைக்கும் காக்கும்
ஒருபொருள் நிலையென் றுன்னி
உயிர்மறை ஓமெ ழுத்தால்
ஒளிநெறி நிலையுங் கூர்ந்தே
உயிர்த்தெழுங் கலையை யாயல்
மெய்ம்மறை விதியே யன்றோ 97

மதியொளி மூலத் தாலே
மாமறை யியலுந் தேர்ந்தே
மதிநிறை மொழியா லாய்ந்தே
மறைமொழி மெய்மை தேர்ந்தே
மதியியல் முற்று மோர்ந்தே
மாக்கலை நெறியு மாய்தல்
மதிமறை மொழியே யன்றோ
கலைநிலை நுட்பங் கூட்டும் 98

எண்ணுறும் கலைவி ரித்தே
எண்ணொளிக் கலைப ரப்பி
விண்ணுறும் மூல மாய்ந்தே
வியனிலை நுட்பந் தேர்ந்தே
மண்ணுறும் உயிரி னாற்றல்
மாயியல் முழுது மோங்க
விண்ணுறும் ஓசை கூட்டும்
ஓம்மொழி விளம்ப லாமே 99

வேறு

அறுமாநிலம் அறுமாச்சுடர்
ஒளியேகலை யியலாய்
உறுமாயியல் உறுமாநெறி
உணர்வோங்குநல் லியலாய்
பெறுமாநெறி ஓங்குங்கலை
ஓங்குந்திற னாய்ந்தே
அறுமாநிலம் ஐந்தேபொருள்
நுட்பமாயியல் நுவல்வாம் 100

பிரணவ வேதம்

நுவலுங்கலை மொழிமாமறை
உரைமாக்கலை ஏற்றே
நுவலுந்திறன் நுவலாற்றலால்
நுவன்றேநெறி நெறியால்
நுவல்மாமறை ஒமெண்ணியல்
ஒமென்றிறம் ஆர்ந்தே
நுவலோங்கிய நுண்ணுண்கலை
ஒலியாலியற் கலையே 101

கலையேஒலி கலையேஒளி
காண்டற்றிறல் கண்டே
நிலையாமற ஒளிமாக்கலை
ஒளிமாநெறி யியலாய்
அலையோசையும் ஒலியாவியல்
செழமாநிலை கூர்ந்தே
நிலைமாநெறி நெறிகூரியல்
கூர்மாநெறி நோக்கே 102

நோக்கேமறை நோக்குங்கலை
நோக்குஉரை அகவின்
நோக்குந்தெதி புறவிண்ணிலை
வாணின்கலை ஒலியும்
நோக்காலறி புலனும்புகல்
நுவல்மாமறை நுவன்றே
நோக்கேதெதி விழியாலறி
மெய்ம்மாக்கலை யியலே 103

புலமாயியல் புலமாநெநறி
பொருளாயியல் தெருளும்
கலமுங்கலை கலமாயியல்
காண்டல்நெறி யாக்கம்
வலமாயிடம் இடமாவலம்
இடையுங்கலை நோக்கி
வலமேதரு நிலையாங்கலை
நெறியாலுறும் மறையே 104

எண்ணாலுயர் நெறியாலுறும்
எழுமாகலை யியலின்
விண்ணாலறி நெறியோங்கியல்
வெளிமாத்திறன் ஆக்கம்
ஒண்மாநெறி யோடுங்கலை
ஒளிருங்கதிர் ஓங்கி
பண்ணாலுறும் ஒலியாலியல்
பகர்மாநெறி மறையே 105

வேறு

விண்முதற் பொருளே கூட்டும்
வியனொளி ஓசை யாகி
எண்முத லியலி னாற்றல்
நெறிமுதற் பயன் நல்கும்
பண்முத லோசை யாகி
ஒலியசை யியலுங் கூறே
விண்ணொளி ஒளியுங் கூறும்
விணக்கமும் நல்கு மன்றே 106

மூலமா வொலியி னாற்றல்
முன்னுணர் கலையின் தேற்றம்
மூலமும் மூல மாறும்
ஐந்துறும் நிலையே யாகி
கோலமாக் குடித்தி றத்தால்
குடிலயு மாய்ந்து ணர்ந்தே
சீலமும் நோக்கித் தேர்ந்தே
திருநெறி யுணர்ந்து மன்றே 107

ஒருங்குறும் எண்ணெண் நோக்கின்
உணர்வுறும் ஆற்ற லாலே
மருங்குறும் நாற்பு றத்தின்
இயல்நிலை மல்கி யோர்ந்தே
பெருக்குறும் நிலையும் நோக்கிப்
பரப்புறும் தன்மை கூடி
நெருக்குறும் ஐந்தி றத்தால்
நிலையுயய் நெறிகி ணர்த்தும் 108

உண்மைமா நெறிகி ணர்த்தும்
ஓமெனும் பொருளு ணர்த்தும்
வண்மைமா நெறியின் கூர்மை
வகுத்துறும் சீர்மை யாற்றல்
எண்ணிலை ஐம்ம றைத்தாய்
இயலுமா மூல மோங்க
தெண்ணிலைக் கலையின் கூறே
சீர்முகத் தியலும் செப்பும் 109

தெற்றென உணர்வா ளுண்ணி
உள்ளியும் மூலம் நோக்கி
உற்றுறு மறிவா லாய்ந்து
பெருங்கலைக் கூறு மாய்ந்து
ஏற்றுறு மியலு மாற்றல்
கூறுறு மியலே நோக்கி
முற்றுறும் மாநெ றிக்கே
மறைமுதற் பொருளே யன்றோ 110

மறைமுதற் பொருளு மாகி
மெய்க்கலை யுண்மை யாகி
அறைகலைத் திறத்தி னாலே
அருலொளி நிலையு மோர்ந்தே
மறைமுறை நெறியின் வண்ணம்
மாக்கலை மூலங் கண்டே
அறைமுதல் மறையே யாகி
ஐம்பொரு ளுணர்ந்து மாற்றல் 111

காலமும் காலம் நோக்கும்
கருதரும் கால மூலம்
மூலமும் மூலத் தாலே
முதிர்ந்துறும் வண்மை தேர்ந்து
ஞானமு மியலும் வண்ணம்
நற்கலை நண்ணு மாற்றல்
கோலமும் குறிப்பி னாலே
குறிநிலை யுணர்ந்து மன்றே 112

வானிய லாற்ற லொன்றே
　　வழிநெறி வகுத்துக் காட்டி
தானியல் நெறியே யாகிக்
　　காலமு மியல்வ தாகி
கோனியல் குறிப்பு ணர்த்திக்
　　குறிநிலைக் குறியி டாகி
வானியல் பண்ணு மோசை
　　ஒலியெனத் திகழு மன்றே　113

ஓமுறு முருவே ராற்றல்
　　ஓமுறு மொலியே தேற்றம்
ஓமுறும் நுட்பம் தேற்றம்
　　ஓமுறும் திட்பங் கண்டே
ஓமுறு மியலி னாலே
　　ஒருபொரு ளாற்ற லோர்ந்து
ஓமுறும் மறைத்தி·றத்தால்
　　மெய்க்கலை யியலு மன்றே　114

செப்பரும் பொருளே மூலம்
　　செயல்புரிப் பொருளும் மூலம்
ஒப்பிலா நிலையி னாலே
　　அசையசை நிலையுங் காண்டல்
எய்ப்புற வசைவி லாது
　　நிற்றலும் மூல மாகி
ஒப்பற வியன்று கூட்டும்
　　ஒருபொருள் நிலையே யன்றோ　115

ஐம்பொருள் மூலங் கண்டே
　　ஐந்திறத் தியலு மாய்ந்து
செம்பொருள் செழுமை நோக்கிச்
　　சீர்பொருட் சிறப்பே எய்தி
ஐம்மறை யியலும் கூறும்
　　அகப்புற நிலையு மாய்ந்து
ஐம்மறை அகவின் னாய்வும்
　　புறவெளி யியலும் மூலம்　116

ஓமுறும் மூலங் கண்டே
மூலமாய் பொருளின் தேற்றம்
ஓமுறும் ஒளிவெ ளித்தான்
ஒலிநிலை யசைவுங் கண்டே
ஓமுறும் கலைம றைத்தான்
மெய்ப்பொருள் நெறியே யாகி
ஓமுறும் ஆட லானின்
ஒருமறைத் திருவு ரைக்கும் 117

பெருவெளி நுட்பம் நோக்கிப்
பிறங்குறு மாற்ற லோர்ந்து
கருவெளி யியலி னாய்ந்து
கலையொளித் திட்ப நுட்பம்
உருவெளி யாட லானின்
ஓங்கிய திருவுங் கண்டே
அருவுரு வெளியி னாற்றல்
அமைந்துறும் உண்மை யாற்றல் 118

அருவுரு நுட்பம் நோக்கி
உருவருத் திட்பம் கண்டே
உருநிலை யியலுங் கண்டே
ஓம்மறை நுட்ப மாய்ந்தே
உருவொளி யாகக் கண்டே
எண்மையும் நுண்மை நோக்கி
பெருவெளி மூலங் காண்டல்
பெட்புறும் நுணுக்கத் தன்மை 119

நுணுக்கமும் பொருளு மைந்தும்
நுவலுமாத் திறமு மோர்ந்து
அணுக்கமும் இயலு மாய்ந்து
ஐம்பொருள் நெறிக்க னோக்கி
துணுக்குறம் இயலா லாய்ந்து
தூநெறிப் பரப்பு மாய்ந்தே
கணக்குறுங் கணக்கி னாற்றல்
கலைநிலை மறையே யன்றோ 120

செம்பொருள் திறத்தி னாலே
செய்முறை நெறியி னுற்றே
செம்பொருள் முலம் நோக்கி
மறைமொழி யோசை யாகி
செம்பொருள் திறம் விளங்க
நிறைமொழி வோசை கூறும்
செம்பொருள் தன்மை யன்றோ
திருநெறி ஓமெ முத்தே 121

ஒரெழுத் துற்ற தாலே
ஒருமறை யியலே யாகி
நேரெழுத் துற்ற தாலே
நிலைகலை யாற்ற லோங்கி
சீரெழுத் துற்ற தாலே
செம்பொருள் எண்க விந்தே
ஒரெழுத் தேமெ முத்தாய்
ஒருமறை விளங்கற் பாற்றே 122

எம்மறை யியல்பா லோங்கி
இயல்நிலைப் பொருளு ணர்த்தி
செம்மறைத் திட்பம் ஒச்சி
நுட்பமும் செழிக்கக் கண்டே
மும்மறைப் பெருக்கங் காண்டே
முதறி யியலா லாய்ந்தே
ஐம்மறை சிறக்க வந்த
அரும்பெரும் முல மன்றோ 123

பார்முதற் பொருளு மைந்தும்
பகரருள் கலையின் நுட்பம்
தேர்க்கலை யியலி னாலே
செப்புதற் கர்தா மென்று
தேர்க்கலை நுட்பம் ஆய்ந்து
தேர்த்துகட் பொழுது மாய்ந்து
தேர்க்கொடி கால நுட்பம்
செப்புமா யியலே யன்றே 124

பொழுதறிந் தியலு மாற்றல்
பொழுதுணர் கலையி னாற்றல்
பொழுதுறுங் காலத் திட்பம்
காலமா ஆழி கண்டே
பொழுதறி யறிவி னாலே
ஊழ்நிலை அறிந்து உணர்ந்து
விழுமிய பொருள றிந்தே
செம்பொருள் நுகர லாமே 125

செம்பொரு ளியலா னோக்கி
சீர்நெறி நுணுக்கத் தாலே
செம்மையும் தன்மை கூர்ந்து
விளைபொருள் நுட்பம் தேர்ந்தே
செம்மைமா நெறியி னின்று
தெரிகலை யாற்ற லாலே
அம்முதற் பொருளே கூறும்
அருமறை முதலே யன்றோ 126

அருமறை யாக்கம் நோக்கி
மனிதமா நெறியின் கூர்மை
பெருமறை மூல நுட்பம்
பிறங்குறுங் காலத் திட்பம்
ஒருமறை யியலி னாலே
உண்மையு மாய்ந்து ணர்ந்தே
திருமறை யியலுங் காண்டல்
செழுமைசால் திண்மை யன்றோ 127

கலைமுதற் பொருளி னாற்றல்
காலமா நெறியுங் கூட்டும்
நிலைமுதற் பொருளி னாலே
நினைப்புறும் இயக்கந் தேர்ந்தே
தலைமுதற் தன்மை யாக்கம்
தினப்பொருள் சாரப் பண்மை
நிலைநெறி மூல மன்றோ
நேர்மறை யியலே கூறும் 128

கூறுகூ றாகி நின்றே
குறிப்பொருள் நோக்க முற்றே
வேறுவே றாகி யாங்கன்
விளையுமா றியலுங் கண்டே
ஆறுமா றாகி யாங்கண்
ஐம்பொருள் நெறிக்கண் ஆர்ந்தே
கூறுகூ றியலி நுட்பம்
குறித்திடும் பொருளே யன்றோ 129

மறைமுதற் றிறத்தி னாலே
மாக்கலை யியலு நுட்பம்
மறைமுதல் ஓமெ மூத்தே
ஒளிக்கலை யியலா லாய்ந்தே
மறைமுதல் நிலையி னாக்கம்
மெய்நெறிப் பொழுது ணர்ந்தே
அறைகலை யியலி னோக்கம்
அருமறை முதலே கூறும் 130

ஒருபொருள் மூலத் தன்மை
உன்னியே கருத்தி னாங்கண்
வருபொரு ளியலு மாக்கம்
வளர்கலை மூலத் திட்பம்
அரும்பொரு ளியலே யாய்ந்து
மெய்ப்பொருள் தெரித்தி லங்கும்
பருப்பொருள் முழுது மாய்ந்தே
பகர்நிலை மூலங் காண்பாய் 131

எண்கலை யியலல் கூற்றாய்
இருநிலை கோலத் தாலே
விண்கலை முழுமை தேற்றி
விரிநிலைக் கலையின் நுட்பம்
எண்கலை நிலையின் கூறாய்
இயல்நெறித் தன்மை யாலே
நுண்கலை நுணுக்கங் காட்டும்
நுவலுமா நெறியே யாற்றல் 132

நுட்பமா மதியி னாலே
நுவல்பொரு ளாக்கல் கண்டே
திட்பமாத் திறத்தி னாலே
செம்பொருள் உண்மை தேர்ந்து
ஒட்பமும் இயலே யாகி
ஒருபொரு ளாக்கத் தாலே
எட்டியல் கலைநெ றிக்கே
ஓமுறும் திண்மை யன்றோ 133

கற்பனை கற்று ணர்ந்து
கருத்துறு மாற்ற லாலே
நிற்பன நெறியா லாய்ந்து
நினைப்புறும் முனைத்தி றத்தால்
விற்பனத் தாலே நாளும்
மறைநெறி யாற்ற லோர்ந்து
சொற்றிறம் முணர்ந்து நாவால்
சொல்நெறி மறையே யன்றோ 134

மூலமாப் பொருளை யாய்ந்து
அறுநிலத் துண்மை யோர்ந்து
காலமாக் கலையே யோர்ந்து
கணித்துறும் உழைப்பும் நோக்கி
ஞாலமா விண்ணும் கூட்டும்
நன்னிலை நெறியி னாக்கம்
சீலமாத் திறத்தி னாலே
செய்யியல் உணர்ந்து காண்பீர் 135

அகவெளி யுறுந்தி றத்தால்
அருமறை யியலு மாய்ந்து
மிகுமொளி யுணர்வி னாலே
ஆகமத் தன்மை நோக்கி
புகுமொளி யியலி னாலே
புனிதமா நெறியு ணர்ந்து
தகுமொளிச் சீர்மை காட்டும்
தன்னிலை யியலு மாய்மின் 136

இளங்கதிர் எழுச்சி காலம்
　　உயிர்க்குலத் துயிர்ப்பின் காலம்
வளங்கெழும் அறிவின் உச்சி
　　வன்மையை முயலுங் காலம்
களத்துறும் அறிஞர் கண்டு
　　கலையெலா முணருங் காலம்
உணத்துணர் உன்னி உன்னி
　　உண்மையை வகுக்குங் காலம் 137

காலமாப் பொழுது ணர்ந்து
　　கதிரொளிச் சீர்த்தி நோக்கி
மூலமாத் தன்மை யாய்ந்து
　　மழுப்பொரு ளாய்ந்து ணர்ந்து
சீலமாத் தன்மை யாலே
　　செறிநிலை நோன்பி யற்றி
கோலமாக் குறிப்பின் வண்ணம்
　　அருள்நிலை ஆய லன்றோ 138

செயல்புரி ஆற்ற லன்றோ
　　திருநெறி கூட்டி நாளும்
மயலறத் தவிர்த்துக் காட்டும்
　　உள்ளமு முணர்வுங் கூட்டும்
அயர்விலா துழைக்கு மாற்றல்
　　ஆண்மையு மறிவும் நோக்கும்
செயிர்ப்புறத் திருவுங் கூட்டும்
　　உருவெழில் உயிர்ப்புங் கூட்டும் 139

உயிர்க்குலம் மூல மாகி
　　உயிர்நெறித் தன்மை யோங்கி
உயிர்த்திற னாக்க மன்றோ
　　உறுபொருள் விளக்கும் என்று
அயிர்ப்பிலா உளத்தி னாலே
　　ஆக்கமுந் திறமும் நல்கும்
உயிர்க்குலத் தறமுங் காட்டும்
　　உண்மையை நாடு விரே 140

பிறப்பினால் பயனு மெய்தி
பெருங்கலை நாட்ட முள்ளார்
அறப்பெருஞ் செயலி யற்றி
அன்பினா லுண்மை யாய்வாம்
சிறப்புறும் தன்மை நோக்கிக்
கதிரொளி வண்ணங் கண்டே
அறச்செயல் நாளும் மேனி
ஐவினை யியற்றி நிற்பார் 141

ஐவினை யியற்றி நாளும்
அறச்செயல் ஓங்கக் கண்டே
செய்வினைத் திறமு மோங்கி
செழும்பொரு ளுண்மை நோக்கி
மெய்வினை யாக்கங் கண்டே
ஞாலமாய் பொழுது ணர்ந்து
உய்வினை வகுத்து ரைப்பார்
ஓமெனும் மறையி னாலே 142

ஓமெனும் மறையே மூலம்
ஓமெனும் ஒலியே காலம்
ஓமெனும் ஒளியே கோலம்
ஓமியல் சீல மாகி
ஓம்பொருள் ஞால மாகி
மெய்ம்மையாம் கலையு ணர்ந்து
ஓம்கலை நுட்ப மாய்ந்து
ஓதுதல் ஒளியே கூட்டும் 143

ஒலியினால் உயிர்ப்பே யோங்கி
ஒளியினால் உயிருங் கூடி
ஒலிமுறை யசைவின் காலம்
காலமாத் திரையி னாற்றல்
கலைநிலை மூலத் தாலே
கனிநிலை நீக்கிக் கண்டே
நிலைநெறி யாவு மாற்றல்
நெறிமுறை மறையே யன்றோ 144

உயிர்க்குல மோங்கி வாழ
உணர்வெலாம் செழிப்ப தற்கும்
உயிர்நெறி உண்மை யாலே
ஞாலமா நெறிசி றக்க
உயிருணர் உற்றே நோக்கி
உள்ளுணர் வோங்கிக் கண்டே
அயர்விலா துழைத்த வொன்றே
அருமறை நெறியே யன்றோ 145

காலமாக் கடவுள் நாளும்
காலமாக் கணக்கி லாய்ந்து
காலமும் வகுத்துக் கட்டிக்
கணித்துறும் வினையி யற்றி
மூலமா நிலையி னாலே
முன்னிலை யுணர்ந்து வித்து
சீலமாச் செயலி யற்றும்
திருநிலை அறித லாற்றல் 146

பிண்டத்துள் அண்டம் நோக்கிப்
பெருங்கலை மூல நுட்பம்
அண்டத்துள் பிண்ட மாயல்
அருமறை யியலும் நோக்கி
அண்டபே ரண்ட மாக்கும்
அருளொளி மூல மொன்றே
அண்டமும் பிண்டம் சேர்க்கும்
திருமறை நெறியே யன்றோ 147

உணர்வினா லுண்ணி நோக்கி
உளத்தினில் உள்ளி உள்ளி
உணர்கலை மூல மாய்ந்தே
மெய்ப்பொரு ளறிந்து ணர்ந்து
உணர்வறி வுற்றுக் கண்டே
உள்ளுறு மண்டம் நோக்கி
உணர்முறை நெறிவ குத்து
மெய்நெறி யாக்கங் காண்பாய் 148

செங்கதிர் வரவு கண்டே
        செழுமறை ஒளியா லாய்ந்தும்
துங்கமா மதியொ ளித்தால்
        தூயமா நெறியில் நோக்கி
அங்குறும் ஒளியி னாலே
        அகன்றபே ரொளியு ணர்ந்து
பொங்கொளி புகுந்த தன்மை
        பொருந்துமா றுணர லாமே 149

எண்ணமே எழுச்சி யாகிச்
        செயல்புரி ஆற்ற லுற்றே
எண்ணிலை எண்ணே யாகி
        இயலுமா நோக்கே கூர்ந்து
திண்ணமும் செழிப்புங் கூடிச்
        சீர்நிலை நெறியே கூட்டி
உண்மையும் வண்மை யாக்கும்
        ஒருநெறித் தன்மை யன்றோ 150

செம்மறை யியற்றி றத்தால்
        சீர்மைமா நெறியுங் கூர்ந்தே
ஐம்மறை முலத் தாலே
        அருமறைப் பிரண வத்தை
அம்மறை யியலே காலம்
        காலமாம் பொழுது மாகி
மெய்ம்மறை ஒன்றின் தோற்றம்
        தேற்றமாய்ச் செழித்த தன்றே 151

எண்முறை யியலு மாய்ந்து
        எண்ணிலை நூலு மாய்ந்தே
எண்கலை உண்மை நோக்கி
        எண்ணுணர் எண்ணத் தாலே
எண்ணிலை நோக்கத் தாலே
        மெய்நிலை உணர்ந்து ணர்ந்து
நண்ணிய பொருளுங் காண்பர்
        நவையிலா ஒமெ முத்தால் 152

நினைப்புறு மாற்ற லாலே
நெறிபல முன்னி நின்றே
களைப்புறும் விரத் தாலே
உள்ளமா வேறி நாளும்
நினைப்புறும் செயலி யற்றிக்
காலத்தை வெல்லு மாற்றல்
தனையுணர் மதியா லன்றோ
தன்னிலை யியன்றல் கூடும் 153

பேரொளிச் சுடரி னாலே
சீரொளிச் சுடர்வ ளர்ந்து
நேரொளிச் சுடருங் கூட்டும்
நிலைச்சுடர் நெறியுங் கூட்டும்
ஒரொளி அண்ட மோங்கி
உயரொளி விளங்க லாலே
ஏரொளி யியலுந் தன்மை
எண்ணிலைக் கலையே யன்றோ 154

நுட்பமா மதியி னாலே
இருநிலைக் கலையு ணர்ந்து
திட்பமா திறத்தி னாலே
முச்சுடர்க் கலைதெ ரித்தே
ஒட்பமா யியலு மாற்றல்
ஒளிநெறி மூல மோர்ந்தே
பெட்புறும் கூர்மை நோக்கி
பெறுநிலை யுற்ற லாமே 155

கலைவடி வாய தன்மை
எழுத்துரு வாய தொன்மை
நிலைநெறி யாய்த லாலே
நெறிமுறை மாறா வண்ணம்
தலைநெறி மூலத் தாலே
மூலமா மறையே கண்டு
கலைநெறி விளக்க வந்த
பிரணவ மறையே யன்றோ 156

மண்ணுயிர்க் குலம்வி ளங்க
மாநெறி யாற்ற லோங்க
தொன்மையால் தன்மை யோங்கி
தூநெறி கண்ட தாலே
தொன்னெறி மூலத் தாலே
பெருநெறி யியலு மோங்கி
மண்ணெறிக் காலங் கூட்டும்
மறைநெறிப் பிரண வத்தே 157

பிரணவ நெறியி னாலே
பெருங்கலை யியலுஞ் சேரும்
பிரணவக் கலையி னாலே
பெருவருள் நிலையுங் கூடும்
பிரணவ முணரு மாற்றல்
பேரறி வாற்ற லாகி
பிரணவக் கலைத்தி றத்தால்
பெருவெளி நிலையு ணர்த்தும் 158

பிரணவப் பொருளே மூலம்
பிரணவப் பொருளே ஆற்றல்
பிரணவம் ஆட லானின்
பெருந்திரு வடிவ மாகும்
பிரணவம் மூலத் தாலே
பெருங்கலை யியலும் நல்கும்
பிரணவத் தாற்ற லாலே
பெருஞ்செயல் புரிய லாமே 159

பிரணவப் பொருளே மூலம்
பிரணவப் பொருளே ஆற்றல்
பிரணவப் பொருளே அண்டத்
தசைநிலை மூல மாகி
பிரணவ மறையே யாகி
பன்முறை வகுத்துக் கூட்டும்
பிரணவத் தன்மை யன்றோ
பேரியல் நெறியுஞ் சேர்க்கும் 160

ஒருபொருள் மூலத் தொன்மை
    ஓங்குறும் காலத் தன்மை
வருபொரு ளியலுந் தன்மை
    வகுத்துறும் சீலத் தொன்மை
அரும்பொருள் ஞாலத் தன்மை
    ஆக்குறும் நெறியின் கூற்றாய்
கருப்பொருள் வானே யாகி
    கலையொளி நிலையுங் கூட்டும் 161

ஒளிக்கலை மூலத் தாலே
    ஓமெழுத் துண்மை தேர்ந்து
வெளிக்கலை யியலி னாலே
    ஒளிவளி முற்று மோர்ந்து
ஒளிச்சுடர் கதிர றிந்தே
    உள்நிலை நோக்கி யாங்கு
வெளிச்சுட ராற்றல் கண்டே
    எண்ணிலை உடலு மாய்வாய் 162

எண்ணிலை உடலின் தன்மை
    எண்ணென வாகி யன்று
விண்ணிலை மூலங் காட்டும்
    வியனிலைக் கலையுங் கூட்டும்
தெண்ணிலை நெறிய ளிக்கும்
    சீர்நெறி மரபிற் றாகி
எண்கணக் குறுமு லத்தால்
    பிரணவ நெறியே ஏற்கும் 163

ஏற்றமாய் பிரண வத்தால்
    இயற்கலைத் திறநுட் பங்கள்
ஆற்றலும் தேற்றங் கூட்டி
    தோற்றமு மியலும் நல்கும்
மாற்றமில் லாத வண்ணம்
    மாநெறி அமைக்குஞ் சீர்த்தி
காற்றுறும் வானத் தன்மை
    கவினுறக் காட்டு மன்றே 164

ஏரிதழல் உண்மை கண்டே
　　விரிவெளி விண்வா ணத்தை
விரிவுறக் கண்டு ணர்ந்து
　　விண்ணொளி யியலுந் தேர்ந்தே
விரிதரை முதலா யைந்தும்
　　விளக்கமயன் கண்டு தேர்ந்தே
விரிநிலைப் பிரண வத்தின்
　　மெய்ம்மையை யுணர லாமே 165

ஓம்பொருள் மறையின் மூலம்
　　ஓம்பொருள் மறையின் நுட்பம்
ஓம்கலை கலையின் மூலம்
　　ஓம்ஒலி யிசையின் மூலம்
ஓம்நெறி மறையின் ஆற்றல்
　　ஓமியல் ஓவி யக்கூர்
ஓம்உரு சிற்ப மாகி
　　ஒளிஒலி ஒளிரு மன்றே 166

மெய்ம்மறை பிரண வத்தால்
　　மூலமா மறையென் றாகி
மெய்ப்பொரு ளுணர்த்தல் கால
　　மாநெறி யாற்றல் கோறும்
உய்வதற் கருளு மாற்றல்
　　ஒருகலை நெறியே யாகி
செய்முறை நிலைய றிந்து
　　திருநெறி நாடல் வேண்டும் 167

திருநெறி யாற்ற லொன்றே
　　செம்பொரு ளுணர்த்துந் தன்மை
ஒருநெறி தேற்றத் தாலே
　　ஓம்பிரண வத்தைக் கண்டே
பெருநெறி ஒளியா லாய்ந்தே
　　ஐம்புலத் தன்மை கூர்ந்து
கருநெறி நீக்கி நாளும்
　　ஊழினை வெல்ல லாமே 168

ஊழினை வெல்லு தற்கே
　　ஓம்நெறி வழியே காட்டும்
வாழ்வினை அளிப்ப தற்கும்
　　வருங்கலை வளமே கூட்டி
ஆழ்மதி அறிவி யக்கம்
　　அருளியல் நெறியுங் கூட்டும்
வாழ்கலை மூல நுட்பம்
　　வளர்மதி வகுக்கு மன்றே 169

தளர்விலா நெஞ்சம் நல்கும்
　　தனிமுதற் பொருளுங் கூட்டும்
உளத்துணர் வளித்துக் கூட்டி
　　உள்ளூறும் உள்ளம் சேர்க்கும்
களத்துணர் கலையும் சேர்க்கும்
　　கலைத்தொழில் பொருளு ணர்த்தி
வளமதி தன்மை யாக்கும்
　　முதல்மறைக் கலையே யன்றோ 170

நிலைமறை முதலா யென்றே
　　நெறிமறை வகுத்துக் காட்டி
கலைமறை மூலத் தாலே
　　பெரும்பொரு ளாய்ந்து ணர்ந்து
தலைமறை ஓமெ மூத்தால்
　　தனிநிலைக் கலையா மென்றே
நிலைமறைப் பிரண வத்தால்
　　நெறிமறை யுணர்ந்து மன்றே 171

எண்பொரு ளியலே யாகி
　　நுண்பொரு ளாற்ற லாகி
விண்பொருள் மூல மாகி
　　வெளிப்பொருள் தேற்ற மாகி
மண்முத லைந்து மாய்ந்தே
　　மாக்கலை நெறியி யற்றும்
கண்முத லைந்தி னாலே
　　கலைநிலை யறிய லாமே 172

மூலத்தா லறிந்து ணர்ந்தே
முக்கலைத் திறமும் உன்னி
காலத்தால் செயல்பு ரிந்து
கடும்உழைப் புணர்வு மோங்கி
சீலத்தா லாக்க மாய்ந்தே
செறித்துணர் தன்மை யார்ந்தே
கோலத்தால் குறிப்பு ணர்த்தும்
குறிநெறி யியலு மன்றே 173

ஓமெனும் பொருளு ணர்ந்தே
ஓமெனக் கலையின் நுட்பம்
ஓமெனும் திறமு ணர்ந்தே
பெருநெறி யியலின் திட்பம்
ஓமெனும் ஒளியி னாலே
வான்வழி யியலும் தேர்ந்தே
ஓமெனும் மூலங் காக்கும்
ஒருமறைப் பொருளே யன்றே 174

செம்மறை மூலத் தாலே
சீர்நிலை பொழுது ணர்ந்து
ஐம்மறைக் காலத் திட்பம்
அருளியற் கலையு மாய்ந்து
மெய்ம்மறைக் கோலத் தாலே
அரும்பொரு ளுணர்ந்து கண்டே
அம்மறை ஓமெ மூத்தின்
அரும்பொரு ளாய லாமே 175

காலமாம் ஊழி யாலே
கதிர்த்தெழு மாற்ற லோர்ந்து
மூலமா எரியி னாலே
முன்னிய நிலையும் கூர்ந்து
கோலமும் வகுத்துக் காட்டும்
ஐங்குடி நிலையும் தேர்ந்து
சீலமா நெறியு மாயல்
ஞாலமாத் தன்மை யன்றோ 176

பெரும்பொரு ளுண்மை தேர்ந்தே
பெருங்கலை நுட்ப மாய்ந்தே
அரும்பொருள் வண்மை யாய்ந்தே
ஆகமத் துள்ளும் நோக்கி
வரும்பொரு ளியலி னாலே
வளர்கலைத் தன்மை யாற்றல்
கருப்பொருள் முல நுட்பம்
அண்டமா ஒளியே யன்றோ 177

சிற்றவை முலத் தன்மை
ஐந்துறும் ஐயைந் தாய்ந்தே
உற்றமா முலத் தன்மை
ஒருபொருள் பிரண வத்தால்
தெற்றுறும் ஓமெ முத்தே
சீர்க்கலை மறையா யாகி
உற்றுறும் உணர்வி னாலே
ஒளிகலை அறிவென் றோர்விர் 178

அண்டமும் பிண்டமுங் காட்டி
அறிவொளி யியலும் கூட்டி
விண்டமா மறையுங் காட்டி
மெய்ப்பொருள் நிலையுங் கூட்டும்
பண்டுறும் அருங்க லைச்சீர்
பகரருந் தேற்றம் நோக்கி
கண்டுறு மொளியி னாலே
கலைநிலை ஓமே முத்தே 179

ஓமெழுத் தாக்கம் ஒர்ந்தே
ஒருபொருள் உற்றுத் தேர்ந்தே
ஓமெழுத் துணர்வி னாலே
பெருமறை யியலுங் கூர்ந்தே
ஓம்கலைப் பொருளு ணர்ந்தே
ஓம்ஒளி யுருவுங் கண்டே
ஓம்ஒலி கேட்டு ணர்ந்தே
செம்பொருள் சிறக்கக் காண்பீர் 180

மூலமா மறையே யாகி
முழுப்பொருள் முன்னி யாய்ந்து
கோலமா யியலுங் கூர்ந்தே
குறிப்பொருள் குறியே யாய்ந்து
சீலமா மறையின் ஆற்றல்
செறிப்பொருள் நெறியுந் தேர்ந்து
ஞாலமா விண்ணு மோர்ந்தே
நன்மறை யியலும் தேர்மின் 181

மனிதமாப் பிறவி யொன்றே
மாக்கலை நாஞ் மாயும்
மனிதமாப் பிறவி யொன்றே
புனிதமா நெறியு மாயும்
மனிதமாப் பிறவி யன்றோ
ஒளிநிலை யாய்ந்து ணர்ந்து
புனிதநல் ஒளித்தி றத்தைப்
பொற்புறப் புகலு மன்றோ 182

மன்முதல் ஐந்து ணர்ந்தே
மாக்கலை நெறியுந் தேர்ந்து
விண்முதற் கலையும் நோக்கி
விள்ளரும் பொருளைத் தேர்ந்து
கண்முதல் பொறியும் காணாக்
கோலமும் கண்டு ணர்ந்து
எண்முத லெழுத்துங் காட்டும்
ஓமெழுத் தியலே யன்றோ 183

உளத்தியல் நெறியா லுன்னி
உள்ளூறும் கலைவிண் ணோக்கி
களத்தியல் தன்மை யாய்ந்தே
ஓமெழுத் தொளியுங் கண்டே
வளமதி யாற்றல் எண்மை
வகையுற வகுத்து நோக்கி
தெளிமறை ஓமெ ழுத்தால்
சீர்நெறிக் கலையே யாய்விர் 184

உயிர்க்கலை மூல மாகி
உயிர்நெறிக் கலையே யாகி
உயிரொளி யுணர்வே யாகி
உயிரொளி வோசை யாகி
உயிர்முதல் பொருளென் றோர்ந்தே
உயிர்மறைத் தன்மை யாகி
உயிரியல் ஓங்கி நிற்கும்
ஓம்நெறி மறையே யன்றோ 185

விண்முதற் பொருளு ணர்த்தி
விண்ணொளி யியலு ணர்த்தி
மண்முதற் கலையு ணர்த்தி
மாக்கலை நுட்பங் காட்டும்
எண்முதற் கருத்த ளித்தே
எழுத்திய லுயிர்ப்புங் கூட்டும்
கண்முத லைந்தி னாலே
கருத்துறு முணர்வே யன்றோ 186

உணர்கலை மூல மாகி
உணர்த்துதற் பொருளே யாகி
உணர்நெறி மூலத் திட்பம்
உரைகலை காலத் திட்பம்
உணரியல் கால நுட்பம்
ஓதரும் பொருளி னாலே
உணர்முறை யுணர்த்து விக்கும்
ஓமியல் முறையே யன்றோ 187

எண்ணரும் உயிரின் மூலம்
எண்ணருங் கலையின் மூலம்
எண்ணரும் மொழியின் மூலம்
எண்பொரு ளாற்றல் மூலம்
விண்ணொளிப் பொருளின் மூலம்
விண்ணொளிப் பொருளின் காலம்
கண்ணொளி கலையின் நுட்பம்
காட்டுமா மறையே யன்றோ 188

மாமறை ஒமெ மூத்தே
மறைமொழி மூலத் தன்மை
மாமறை ஒமெ மூத்தே
நிறைமொழி காலத் தாற்றல்
மாமறை ஒமெ மூத்தால்
மாக்கலைத் திட்ப மாய்ந்தே
மாமறை நுட்பச் சிலம்
காலமு முணர லாமே 189

காலமா நொடியுங் காட்டும்
கண்ணிமைப் பொழுதுங் கூட்டும்
மூலமா ஒளியி னாலே
ஒலிநிலை யசைவு மோர்ந்தே
காலமா நுட்ப மொன்றே
கருவினை நுட்பங் கூட்டும்
காலமா நுட்பத் தாலே
எண்ணியல் நெறியுங் கூட்டும் 190

எண்ணியல் நெறியைந் தைந்தாய்
இயலுமோர் நுட்பத் தாலே
எண்ணியல் நாற்பு றத்தின்
இயலுமாப் புள்ளி மையம்
எண்ணியல் மையச் சூழல்
விளைவுறும் காலச் சூழல்
எண்ணியல் வலப்பு றத்தால்
இடைநிலை யாய லாமே 191

இடவல மாய்ந்து ணர்ந்து
எண்ணிலை ஐந்துங் கூர்ந்து
இடமுறும் நிலையும் நோக்கி
வலப்புறத் தியலா லெண்ணி
நடக்கலை யியற்கூ ராக்கம்
எண்ணுறும் எண்ணெய் ணைந்தே
கடத்துறும் கலையென் ணெண்ணாய்
கருத்துறக் காண்மின் ஆய்ந்தே 192

மூலமா லெண்மு றைச்சார்
 முன்னிய கதிரி னாற்றல்
கோலமா யியல மைப்பே
 குறிப்புறுங் குறியே கூர்ந்தே
ஞாலமா விண்தி றத்தும்
 நன்னிலை நெறிமா விண்ணின்
மூலமு மறிந்தி யற்றி
 முழுமுதற் கலையு மாய்மின் 193

முழுமுதற் கலையின் நாட்டம்
 முன்னிய நெறியின் தேட்டம்
வழுவிலா வழியுந் தோன்றும்
 வளநிலை ஒலியுங் கூடும்
எழுமதி யாற்ற லாலே
 அறுசுடர் ஒளியுங் கூர்ந்து
எழுத்தியல் எண்ணெண் ணாற்றல்
 எண்ணெறிப் பொருளே யன்றோ 194

எண்ணெறி நுணுக்க வாக்கம்
 எட்டியல் கலையே யாகி
நுண்ணெறி மூலத் திட்பம்
 கணுக்கமு மணுக்கங் கண்டே
எண்ணியல் குணுக்கல் கூர்ந்தே
 இயற்றிற வளியி னாலே
விண்ணியல் ஒளிஒ ளிக்கூர்
 வியனிலைக் கலையே யன்றோ 195

மாநெறி யாற்ற லொன்றே
 வகுத்துறும் தன்மை கூட்டும்
மாநெறித் திறத்தா லன்றோ
 வையமும் விண்ணுங் காட்டும்
மாநெறி நுட்ப மன்றோ
 பெருநெறித் திண்மை யாக்கி
தூநெறி திட்பத் தாலே
 திருநிலை யியலுஞ் சேர்க்கும் 196

திருநெறி யியலாற் கூடி
சீர்நிலைக் குறியு மாய்ந்தே
வருநெறி யாக்கம் நோக்கி
வளர்நிலைத் தன்மை கூர்ந்தே
ஒருநெறித் திறத்தி னாலே
ஆடலான் கலையே கூர்ந்து
பெருநெறி யியலா யாக்கும்
பெருவெளிக் கலையே கூட்டும் 197

ஒருநிலைக் கலைத்தி றத்தால்
ஓமுறும் பொருள்ளி ளக்கி
பெருநிலைக் கலையின் ஆற்றல்
பெருவெளித் திறத்தி னாலே
அருநிலைத் தன்மை யாலே
மறைநிலைப் பொருளின் தேற்றம்
வருநிலைக் கலையி னாலே
இயல்பொரு ளியங்கு மன்றோ 198

செம்பொருள் முல மாய்ந்து
சீர்பொரு ளுண்மை தேர்ந்து
செம்பொரு ளியலி னாலே
முப்பொருள் முடிவுங் கூர்ந்து
ஐம்பொருள் நுதலி யாக்கம்
ஆடலான் கலைத்தி றத்தால்
செம்பொருள் நெறியாற் கண்டே
திருநெறி விளக்கங் காட்டும் 199

மறைமுதற் பொருளே மூலம்
காலமு மிடமு மாய்ந்து
மறைமுதற் கலையா யோங்கும்
ஓமுதற் றன்மை கூர்ந்து
மறைமுத லியலி னாலே
மெய்க்கலைப் பொருளு ணர்ந்து
மறைமுத லாற்ற லூற்றே
வண்மையாம் உண்மை காண்பின் 200

ஐங்கலை தேற்றம் நோக்கே
ஐம்பொரு ளியலும் நோக்கே
அங்குறு மொளியும் நோக்கே
இங்குறும் வெளியும் நோக்கே
தங்குறும் காற்றின் ஆற்றல்
தனிநிலைத் தன்மை யோர்ந்து
எங்குறும் பொருளுங் காண்டல்
எழிலொளி யாற்ற லன்றோ 201

முதற்பொரு ளுண்மை நுட்பம்
மூலமாப் பொருளின் நுட்பம்
முதற்கலை எண்மை யுண்மை
இயற்றிறன் நோக்கங் கூட்டும்
முதற்றிறன் ஐந்தி றத்தால்
நெறிவலி கூட்டிக் கண்டே
முதற்பொரு ளியலி னாலே
மெய்மையா மொளியுங் கூட்டும் 202

எண்கலை நுட்ப மன்றோ
எண்ணுறும் எண்ணெண் ணாகி
நுண்கலை ஐந்தி றத்தால்
நுட்பமாத் திறனு மோர்ந்து
விண்கலை ஒளியி னாற்றல்
சிற்றவை விளக்குந் தேற்றம்
ஒண்கலை யியலின் கூற்றே
ஒளிமதி யாற்ற லன்றோ 203

ஒளிமதி யுணர்வி னாலே
ஓமெழுத் தியலு மாய்ந்து
வெளிமதித் திறத்தி னாலே
ஓமொலி நுட்பங் கூர்ந்தே
களிமதித் திறத்தி னாலே
ஓமொலி யிசையுங் கண்டே
அளிமதி யியலி னாலே
ஓம்கலை மறையுங் கண்பின் 204

காலமா வண்மை யாற்றல்
காலமா நுட்பந் தேற்றம்
காலமு முழைப்பே யாகி
உணர்வுறு மாற்றல் தன்மை
காலமுஞ் சிலமும் மூலம்
கோலமுங் குறிப்பி னாய்ந்தே
ஞாலமா யியலின் தன்மை
நவையற நவிலு வாயே 205

நவில்கலை எண்க லைச்சீர்
நாட்டமும் நெறியுங் கூர்ந்தே
நவின்கலை பிரண வத்தால்
நவின்மொழி யியலே யாகி
நவிலுறும் தன்மை நோக்கி
ஓமெழுத் தியலே யாகி
நவில்முறை ஆட லானின்
நற்கலைக் கூற்றி னாற்றல் 206

எண்முறைக் கலையின் நுட்பம்
எண்ணியற் றன்மை கூர்ந்தே
எண்ணிலை யறுபான் நான்கின்
நாற்புறத் தியலு மாய்ந்தே
விண்ணெறி வொளியி னாலே
வியனிலைத் தேற்ற மோர்ந்து
நுண்மதி வொளியின் கிற்றால்
நவிலருந் தன்மைத் தன்றோ 207

புலனெறித் திட்பம் நோக்கி
ஐம்பொரு ளியலு மாற்றல்
புலமுறும் மெய்த்தி றத்தால்
செம்பொருள் மூலத் திண்மை
புலத்தியல் கலையின் நோக்கம்
பொருந்துறுந் தன்மை யாலே
புலமொளி ராற்றல் கூட்டும்
செழும்பொரு ளுண்மை யன்றோ 208

செழும்பொரு ளெண்மை யுண்மை
விண்மையுங் கருத்து ணர்ந்தே
எழுப்பொரு ளாற்ற லாலே
எண்ணிலைத் திட்பம் நோக்கி
விழும்பொருள் தேற்றங் கண்டே
விண்ணெறி யொளியுங் கூர்ந்தே
செழும்பொருள் மூல நுட்பம்
தெளிநிலைக் கலையு மாய்மின் 209

ஒருங்குறு முளத்தி னாலே
ஒளிநெறித் தன்மை யாய்ந்தே
மருங்குறுங் காலம் மூலம்
இடைநிலை வெளியுந் தேர்ந்தே
அருகுறும் ஞாலம் விண்ணே
அணிநிலை யாக்கங் காட்டும்
முருகுறும் சுடரொ ளிக்கே
மூலமுத் முதலே யன்றோ 210

ஒளிச்சுடர் கதிரி யக்கம்
ஒளிக்கலை நெறியி யக்கம்
வெளிப்பொருள் மூலத் தாலே
விண்ணொளி ஒலியுங் கூர்ந்தே
களிப்பொருள் நோக்கத் தாலே
கலைநிலை அறுபான் நான்கின்
அளிப்பொரு ளியலை யாவும்
அறுசுடர் ஒமெ முத்தே 211

அறுசுட ரியலு மாய்ந்தே
ஐம்பொருள் மூலம் நோக்கி
ஊறுசுட ரியலின் தன்மை
ஐந்தியல் நாற்பு றத்தே
பெறுநிலைக் கலையின் மூலம்
பெட்புறும் பிரண வத்தே
குறுநிலை யியலும் நீக்கி
பெருஞ்சுடர் நிலையுங் காண்பின் 212

எழுநிலை யியலுங் காலம்
எண்ணிலை யியற்றுங் காலம்
செழுமதி திகழுங் காலம்
சீர்நெறி எண்ணெண் ணாற்றல்
செழும்பொருள் மூலக் காலம்
சிலமும் ஞாலமுந் தேர்ந்தே
எழும்பொருள் கோல மன்றோ
எண்ணிலை யியலி னாற்றல் 213

ஆற்றலால் கால நுட்பம்
திட்பமு மறிந்து ணர்ந்து
தேற்றமே செழுமை நல்கும்
சீர்நெறி நுட்பங் கூர்ந்து
ஏற்றமே எண்ணெ ழுத்தா
லியலிநிலைக் கலையின் சீர்த்தி
காற்றுறும் கலையின் மூலம்
கணிநிலை யியலுங் காண்பாய் 214

ஐந்தெழுத் தியலும் நோக்கி
அரும்பொருள் தன்மை கூர்ந்தே
முந்திய அஇ உஎ
ஒநிலை முகிழ்க்கக் கண்டே
வந்துறும் நாற்பு றத்தே
ஐந்தியல் நெறியா னோக்கி
செந்தமிழ்க் கலையே மூலம்
பிரணவ மறையே சீலம் 215

ஓம்மறை மூல மாகி
ஒளிர்கலைக் கால மாகி
ஒமெழுத் தியலே கூறும்
ஒளிருருஞ் சீலம் நோக்கி
ஓம்நெறி யுணர்வி னாலே
ஒருங்குறும் எண்மை கூர்ந்து
ஓம்குறி யியலின் கூறும்
ஒளிர்நிலை யியலே யாக்கம் 216

அருளியற் கலையி னாற்றல்
மூலமா மறையே யாகி
தெருளியற் கலையின் நுட்பம்
சீர்நெறி வகுத்துக் காட்டும்
பொருளியற் கலையின் தேற்றம்
பெருநெறித் தன்மை யாற்றல்
திருநெறி மூலங் காட்டும்
செழுநிலை யொளியே யன்றோ 217

ஒளிவழி பாடி யற்றி
ஓமெனு மொளியே நோக்கி
வெளிவழி பாட றிந்து
விண்ணொலி நுட்பங் கண்டே
ஒளிநெறித் தமிழ யக்கம்
ஒளித்தமிழ் ஓமெ ழுத்தாய்
ஒளியொளிர் கலையி னாலே
ஓம்மறை யாக்கங் காண்பின் 218

ஓமெழுத் துணர்ந்து நோக்கின்
ஒருபொருட் கலையுங் கூடும்
ஓமெழுத் தியலைக் காணின்
பெருமறை யியலுங் கூடும்
ஓமெழுத் தொலியை நோக்கின்
உள்வெளி விண்ணுங் கூடும்
ஓமெழுத் தொளியே கேட்பின்
ஞாலமா விசையுங் கூடும் 219

மூலமா மறையே யாகி
முப்பொருள் நெறியுங் கண்டே
காலமாத் திறமும் எண்ணி
எண்ணிலை யியற்ற ரத்தால்
காலமுங் கால நுட்பம்
கலையியல் ஒளியா னோக்கி
காலமாக் கணக்கி னெண்ணே
எண்ணுறும் எண்ணெண் ணாற்றல் 220

எண்ணுறு மெண்ணெண் நுட்பம்
இயலுறும் மூவர் தேர்ந்து
விண்ணுறும் ஒளிக்கூர் நோக்கி
ஒளியியல் ஒசை யாய்ந்தே
கண்ணுறு மொளியே கூட்டும்
கலைநிலை வானத் தாற்றல்
மண்ணொளி யியலு மாய்ந்தே
ஐம்பொருள் நிலையில் காண்பின் 221

ஞாலமே விண்ணே மூலம்
நற்கலைக் காலம் எண்ணே
கோலமே குறிப்பே யாகி
குறிநிலை யொளியுங் கூட்டும்
சீலமே செறிவுங் காட்டும்
செந்நெறி முறையுங் கூட்டும்
காலமே கலையின் வண்மை
உழைப்பியல் ஒளியே கூட்டும் 222

ஒப்பிலாப் பிரண வத்தை
ஒருபொருள் மறையின் மூலம்
செப்பறும் மூலத் தாலே
சீரொளிச் சுடரும் நோக்கி
முப்பொருள் மூல மைந்தின்
மெய்ப்பொரு ளுண்மை கண்டே
அப்பொருள் மூலத் தாலே
ஐந்தியல் நிலையு மாய்வின் 223

முருகுறும் ஓமெ மூத்தே
முருகொளி ஓமெ மூத்தே
முருகியல் ஓமெ மூத்தே
முறுகுறு மாற்றல் கூட்டும்
முருகியற் கலையி னாலே
அறுசுடர் ஒளியின் தோற்றம்
முருகியல் மறையே யாகி
முகிழ்த்துறும் ஓமெ மூத்தே 224

மெய்ப்பொரு ளியல்வ குத்தே
செழும்பொரு ளுண்மை தேர்ந்தே
மெய்யியற் கலையி னாய்ந்தே
ஒண்பொருள் உள்ளி உள்ளி
ஐயியற் கலைத்தி றத்தால்
ஐம்பொருள் நுட்பம் நோக்கி
வையமும் விண்ணு மாய்ந்தே
வகைநெறி விளம்பு மன்றோ 225

நெறிக்கலை நிலையா னோக்கி
நீள்மதி நெடிதி னோக்கி
குறிக்கலை யாக்கந் தேர்ந்தே
கொள்மதி புலனெ றிக்கே
அறிகலை யியலா லாய்ந்தே
ஐவகை நுணுக்கத் தாலே
குறிநெறி யணுக்கங் கூட்டும்
உருவருத் தன்மை யன்றோ 226

உருவருத் தன்மை யோர்ந்து
அருவுரு நிலைய றிந்தே
அருளியற் கலையுங் கூட்டும்
மெய்மறை நிலையே யென்று
தெருளியல் மதியி னாலே
சீர்நெறி உவந்து கண்டே
இருளரி யுளத்தி னாலே
அகவெளி நோக்கல் நன்றே 227

அகவெளி நோக்கு மாற்றல்
ஐம்புல நெறியி னாற்றல்
மிகுமொளி யுற்று ணர்ந்து
மெய்யுண ரறிவின் தன்மை
புகுமொளி யாக்கக் கூரால்
பேரொளிச் சார்பி லங்கி
தகுமியல் தன்மை யோர்ந்து
தன்னிலை யியலு மாய்வாய் 228

இயற்கலை நுட்ப மோர்ந்து
எண்ணியல் நெறியுந் தேக்கி
மயனெறி யுணர்த்து மாற்றல்
மாக்கலைக் கணுக்கல் கண்டே
இயலுறும் நுணுக்கத் தாலே
ஏழ்நிலை யைந்து மோங்கும்
உயவறும் தன்மை நோக்கி
உறுபயன் மூல மன்றோ. 229

மூலமுங் காலம் முன்னி
முப்பொருள் திறமு மோர்ந்து
சீலமும் கோலங் கண்டே
திருநெறி யாக்க மாய்ந்து
ஞாலமும் விண்ணும் நோக்கி
நன்னிலை யியலுங் கண்டே
கோலமுங் குறிப்புங் காண்பாய்
குறிநெறி முறையுங் காண்பாய் 230

எண்ணிலைக் கலையு மாய்ந்தே
எண்முறை யியலுங் கூர்ந்தே
விண்ணிலைக் கூற்று மாய்ந்தே
எரிபுனல் காற்றுள் ஆக்கம்
தெண்ணிலை யியலுங் கூர்ந்தே
திருநிலை மூன்றுங் கண்டே
உண்ணிலை யொளியாற் கண்டே
உயிரியல் நிலையுங் கூறும் 231

மூலமாத் தன்மை யோர்ந்து
முன்னிலை யாறுங் கூர்ந்து
காலமா யியலி னாலே
ஐயைந்தின் நெறியு மாய்ந்து
சீலமுந் தெளிவுண் ணாக்கம்
செய்நிலைக் குறியுங் கூறாய்
கோலமுங் குறியுங் கண்டே
ஆடலான் நெறியுள் நேரும் 232

ஆடலான் ஆட லொன்றே
அண்டமும் பிண்டமுங் கூட்டும்
ஆடலான் ஆட லாலே
ஐம்புல நெறியுங் கூட்டும்
ஆடலான் ஆட லாலே
மெய்ம்மொழிப் பொழுது ணர்ந்து
ஆடலான் அறுபான் நான்கின்
மெய்ப்பொருள் மறையா யாய்வாய் 233

மறைமுதற் பொருளே யாகி
ஒமெழுத் தியலு மாய்ந்தே
மறைமுத லியலுங் கூர்ந்து
மாமறைச் செறிவி னாகி
அறைகலைத் திறத்தி னாலே
அம்மறை யியலுங் கண்டே
மறைப்பொருள் ஒளியாய் கண்டே
மாமுதற் றியலுங் கூறும் 234

எண்ணியற் றிறத்தி னாலே
எட்டெட்டு நிலையு மாய்ந்தே
விண்ணியல் முல நோக்கால்
வெளிவொளித் தன்மை யாய்ந்து
எண்ணுறும் எண்ணெண் ணாற்றல்
எண்முறை யினிதி னாய்ந்தே
எண்கலை மூலங் கண்டே
ஐம்பொருள் செறிவி னாய்வாய் 235

ஐம்பொருள் நுட்ப திட்பம்
அரும்பொரு ளாக்க முற்றே
செம்பொரு ளுணர்வுங் கூர்ந்தே
செழும்பொருள் பிரிவுங் கூர்ந்து
மும்மையுங் கால நோக்கின்
முப்பொருள் கூறுங் கண்டே
செம்மைசால் முந்நெ றிக்கே
ஐந்நெறி யியலுங் கூடும் 236

ஐந்நெறி யியலும் நுட்பம்
முந்நெறி மூலத் திட்பம்
செந்நெறிப் பொருளுங் கூட்டும்
சீர்மறை யியலி னாக்கம்
முந்துறு முணர்வி னாலே
முறைநெறி மூலத் தாற்றல்
வந்துறும் உயிர்ப்பின் திட்பம்
நுட்பமும் மறையென் றோரே 237

காலமுங் கணித்துக் கண்டே
காற்றுறும் காலத் திண்மை
மூலமும் முப்பொ ருட்கே
முழுமுதற் றன்மை யாக்கம்
சீலமும் வெளியா லாய்ந்தே
திருநெறிக் கலையுங் கூர்ந்து
கோலமுங் குறிப்பி னாலே
குறிமுதற் பொருளுங் கூறும் 238

குறிமுதற் பொருளும் நோக்கி
கூர்மதி யியலி னாலே
நெறியியற் றிறமுங் கூட்டும்
நிலையியல் கலையு மாய்ந்தே
அறிகலை மூல நுட்பம்
அறிபொருந் திட்பச் செம்மை
குறிகலை அருளல் கண்டே
குறிமுதற் பொருளுங் கூறும் 239

எண்முதற் பொருளு மாய்ந்தே
எண்ணுறும் எண்ணெண் ணாய்ந்தே
விண்முதற் ஐந்துங் கூர்ந்து
விண்ணொளி ஒலியுந் திட்பம்
மண்முதல் உயிரும் நோக்கி
மாக்கலைத் திட்ப மாய்ந்தே
பண்முதற் ஒளியு மோசை
பகர்நிலைப் பெருநெ றிக்கே 240

கலையியல் ஐந்தி னாக்கம்
கணிப்பிய லுடலும் உள்ளம்
நிலையியல் உயிர்ப்பின் நுட்பம்
ஒளியியல் ஒளியுங் கூட்டும்
தலையியல் ஒளிவொ லிக்கே
தன்னிலை கால மோர்ந்து
நிலைநெறிக் குறிப்பு ணர்ந்து
இயல்முறை யாக்கல் கூட்டும் 241

உள்ளொளி யியலாற் கண்டே
ஒளியுயிர் உள்ளி உள்ளி
தெள்ளொளிக் கலைத்தி றத்தால்
சீர்நெறி கோல நுட்பம்
எள்முதல் அளவை யாலே
இயலள வுற்றுக் கண்டே
ஒள்ளிய நுணுக்கம் உன்னி
உறுநிலைக் கால மாய்வாய் 242

காலமே எவையுங் கூட்டிக்
கருதரும் செயல்வி ளைத்து
காலமே மூல மாகி
காலமு லத்தி னாக்கம்
மூலகா லத்தி னாலே
முந்நெறிப் பொருளு ணர்ந்தே
சிலமு மியற்றி றத்தால்
ஆடலான் நெறியி யக்கும் 243

ஆடலான் நெறியி யக்கும்
அருளிய லெண்மை நோக்கி
ஆடலான் குறியி யக்கும்
அறிவியல் நுண்மை யாக்கம்
ஆடலா லெண்ணெய் ணாற்றல்
அசைவுறு முயிர்ப்பே யாகி
ஆடலா னளவை யாற்றல்
காலமாத் துடிப்பே யன்றோ 244

காலமாத் துடிப்பே யாகிக்
　　கருத்துறும் கணிநெ றிக்கே
காலமாக் கால மாயும்
　　கனிநிலை யியலி னாலே
மூலமாப் பொருளி னாக்கம்
　　முந்நெறி முயன்றே நோக்கி
சீலமும் செறியுக் கூறும்
　　திருநிலை யாக்கங் கூட்டும் 245

எண்முறை யெண்ணி லைக்கே
　　இருநெறித் திட்பம் நோக்கி
எண்ணெறி யெண்ணி லைக்கே
　　நாற்புறத் தியலி னாலே
எண்குறித் தியலி னோர்ந்து
　　எண்குறி மாறா வண்ணம்
விண்குறி யொளியி னாலே
　　உள்ளியல் உள்ளு மாறே 246

உள்ளியல் உள்ளி உள்ளி
　　ஓமெழுத் துருவங் கண்டே
தெள்ளியற் கலையி னாலே
　　திருநெறிக் கலையு மோர்ந்தே
உள்ளுறும் ஆறும் நோக்கி
　　ஐம்முதற் பொருளு மாய்ந்தே
தெள்ளுறும் அஇ உஎ
　　ஒநிலைக் கருத்தி னாய்வாய் 247

உயிர்நெறிக் கலையே யாகி
　　உயிர்ப்புறும் மூல மாகி
உயிர்குறி யியலு மாகி
　　உயிரொளித் தன்மை யாற்றல்
செயிரறும் சீர்மை யாலே
　　திருநெறிப் பெருங்க லைக்கே
உயிர்ப்புறு மொளிமா ஆற்றல்
　　ஒளிநிலை யோசை கூட்டும் 248

ஓசையு மொளியு மாகி
ஒளிமுதற் கலைத்தி றத்தால்
ஓசையும் வானில் ஓங்கி
காற்றியல் மூலங் கொண்டே
ஓசையும் முறைய றிந்தே
ஒளிமுதற் பொருளின் திட்பம்
ஆசிலா உயிர்ப்பி னாக்கம்
அருநிலைக் கலையே கூறும் 249

நல்லுயிர் முறையி னாலே
நெறிமுதற் பொருளி னாய்ந்து
தொல்லுயிர் மூலத் தன்மை
தூநெறி கண்ட ரங்கி
தொல்பரம் பொருளி னாற்றல்
செந்நெறி யியலுங் கண்டே
சொல்லுறும் பொருளு மாகித்
திருநெறி யியக்கு மன்றே 250

முழுமுதற் பொருளு மாகி
முன்னிய கால மாகி
வழுவிலாத் திறத்தி னாலே
வளமதி யொளியே யாகி
செழுங்கலை மூல நுட்பம்
சீரறி வுற்றுக் கண்டே
எழுங்கலை யொளியி னாலே
இயல்மறை யாக்கங் கூறும் 251

அருங்கலை நுட்பத் தாலே
அறிவியல் திட்ப மாய்ந்து
பெருங்கலை நுட்பத் தாலே
அருளியற் கலையு மோர்ந்து
வருங்கலை நுட்பத் தாலே
காலமு மிமமு மாய்ந்து
அரும்பொருள் மூலங் கண்டே
திருமறை யியலு மாய்வாய் 252

உயிர்க்கலை நெறிவ குத்தே
 உயிர்க்கலைத் தன்மை தேர்ந்து
உயிர்க்கலை முறையுங் கூர்ந்தே
 உயிர்படைப் பியலுங் கூர்ந்து
உயிர்நெறி யியல்வ குத்து
 ஒண்ணிலை நுட்பந் தேர்ந்து
உயிர்குறி மூலக் காலம்
 சிலமும் ஞாலம் செப்பும் 253

செப்புமா நெறியி னாலே
 சீர்நெறி யியலு மாய்ந்தே
ஒப்பில்மா நெறியின் கூற்றாய்
 ஓமெனும் பொருளு ணர்ந்தே
எப்பொருள் நோக்கிற் றாலும்
 இயல்பொரு ளுண்மை கூட்டும்
மெய்ப்பொருள் கலையி னாற்றல்
 விளம்பலாந் தன்மை யாமே 254

மெய்ப்பொருள் மெய்நெ றிக்கே
 மெய்க்கலை மெய்யுங் கூடும்
மெய்ப்பொரு ளுணர்வி னாலே
 ஐம்பொருள் செழுமை சார்ந்தே
மெய்யியல் கலையின் நுட்பம்
 ஒருங்குறு மொளியின் திட்பம்
மெய்க்கலைக் கருத்து ணர்ந்தே
 ஒள்ளியல் நெறியே நாட்டம் 255

எண்கலை மூலங் கண்டும்
 எண்ணியல் காலங் கண்டும்
விண்கலை ஒளிமு லத்தால்
 வியனிலைச் செறிவுங் கண்டே
நுண்கலை நுணுக்கம் நோக்கி
 நுவல்கலைத் தன்மை யாய்ந்தே
எண்கலை யியல்வி ரிக்கும்
 நெறிமுறைக் கலையே யன்றோ 256

நுட்பமாத் திறன றிந்தே
காலமா நுட்பங் கண்டே
நுட்பமா யியலி னாக்கம்
மெய்மையு முணர்ந்து நோக்கி
திட்பமும் காலச் சீர்மை
சீர்நெறி யறிந்து ணர்ந்து
நுட்பமா முலங் கண்டே
நுவலுதல் நெறியே யாமே 257

உள்ளுணர் வுறுத்த லாலே
ஒளிநிலை யியல்தெ ரித்தே
தெள்ளுணர் நெறிமு றைக்கே
அறுசுடர் ஒலியு மாய்ந்தே
விள்ளுணர் வுற்ற தாங்கள்
வியனிலை யியலுங் கூர்ந்தே
தெள்ளுணர் வுற்றே காண்டல்
திருநெறிச் சீர்மை யன்றோ 258

ஒளிக்கலை மூலத் திட்பம்
ஒலியியல் மூல நுட்பம்
வெளிக்கலை விண்ணின் சாரல்
வியனெறி வானின் ஒசை
களிக்கலை நுட்பங் கண்டே
கலையியல் கூர்ந்து நோக்கி
அளிக்கலை ஓம்நெ றிக்கே
அறிவியல் காலக் கூற்றே 259

காலமா நுட்பந் தேர்ந்து
கணிப்பியல் முறையாய்க் கண்டே
சிலமைந் தைந்தி னாற்றின்
செறிப்படி முருபொ ளிக்கே
கோலமா முருகி னாற்றல்
குறிப்புறும் அறுசு டர்க்கே
ஞாலமும் விண்ணு மாங்கண்
நன்னிலை ஓம்க லைக்கே 260

ஓம்கலை மூலத் தோற்றம்
ஓம்நெறி காலத் தேற்றம்
ஓமியல் மாக்க லைக்கே
ஓவியம் பெருநெ றிக்கே
ஓமுணர் வுற்றுக் காண்டல்
உள்ளுணர் அகவெ ளிக்கே
ஓம்திறத் துணர்வுங் கண்டே
ஐம்புல நெறிநிற் கும்மே 261

புலத்தியல் நெறியி னாற்றல்
பொருந்துமா நெறியின் கூற்றே
புலனெறி யோர்ந்து ணர்ந்தே
புலனியல் வலியுங் கூர்ந்தே
நலமுறும் ஒளியா லோர்ந்து
அறுநிலத் தன்மை யாக்கம்
புலமுறு மியல்வெ ளிக்கே
பொருந்துறும் கலைக்கூர் தன்மை 262

சுடரொளி மேவக் கண்டே
சீரொளி படர்ந்து கூடும்
அடரொளி யியலி னாலே
அறுசுட ராற்ற லாகிப்
படரொளித் தன்மை நோக்கிப்
பார்முத லைந்துங் காண்டல்
இடமுறும் பொருளுங் காலம்
இயக்குறு மாற்றல் கூற்றே 263

ஐங்குடி மூலத் தன்மை
அறுசுட ராற்ற லோங்கும்
பெங்குடி காலத் தன்மை
விரைவியல் காலங் கூட்டும்
செங்குடி சீலத் தன்மை
சீரியல் ஒளியுங் கூட்டும்
அங்குறு மாற்ற லன்றோ
அகநெறி ஆடிக் காட்டும் 264

அகவெளி முறையா லாய்ந்தே
புறவெளி யியலைக் கண்டே
மிகுமொளி நுட்பக் கூற்றே
மெய்யொளி ஓமெ மூத்தே
புகுமொளி யியல்நெ றிக்கே
பெருங்கலை நெறியா யாகி
தகுமொளி மாநெ றிக்கே
தன்னிலை நெறிய ளிக்கும் 265

அறுசுடர் வண்மை யாக்கம்
ஐங்குடி யுண்மை தேக்கம்
உறுசுடர் மூலத் தன்மை
ஒளிப்பெற வோர்ந்து ணர்ந்தே
பெறுசுட ரியலின் திட்பம்
காலமா நெறியி யக்கும்
அறுசுடர் மூலத் தாலே
ஐம்புல நெறியு மோங்கும் 266

ஐம்புல நெறியி னாற்றல்
செம்பொருள் வண்மை கூட்டும்
ஐம்புல நெறியி னின்றே
செழும்பொரு ளியலைக் கண்டே
செம்மறை யியலு ணர்ந்தே
செழுநிலைக் கலையு ணர்த்தும்
அம்மறை ஓமெ மூத்தே
ஓமொளிர் மூலங் கூட்டும் 267

ஓம்ஒலி யியலி னாலே
ஒருபொருள் மூலங் கண்டே
ஓம்ஒலி நெறியி னாலே
வருமுறைக் கால மோர்ந்தே
ஓம்உருத் திறத்தி னாலே
ஆடலான் நெறியு ணர்ந்து
ஓம்கலை யியலி னாலே
பெருமறைத் தன்மை யாய்வாய் 268

காலமா நெறியி னாற்றல்
கலைப்பிரண வத்தின் தேற்றம்
மூலமா நெறியி னாற்றல்
ஓம்ஒளி யியலின் தோற்றம்
கோலமாக் குறிப்பு ணர்ந்தே
அகவொளி யியலி னாற்றல்
சீலமாத் தன்மை யாலே
சீர்நெறிச் சிறப்பு ணர்த்தும் 269

அகமுறும் விண்ணி னாற்றல்
புறமுறும் விண்ணின் தோற்றம்
அகத்தொளி மிகுந்தே கூட்டும்
பேரொளி யியலின் எண்மை
வகுத்துறும் நுட்ப மன்றோ
காலமா யியல்வ குத்து
முகிழ்த்துறும் அறுகு டர்க்கே
பேரொளி யியலு மன்றோ 270

உண்மையாம் ஒளியி னாற்றல்
உறுபொருள் உயிர்ப்புங் கூட்டும்
வண்மையா மியலி னாலே
வளரொளி நெறித்தி றத்தால்
நுண்மையாம் நோக்குங் கூற்றே
நுவலருந் திறத்த தாகி
எண்மையாம் எண்க லைக்கே
மாநெறிப் பொருளு ணர்த்தும் 271

ஓம்கூறு மொளியி னாற்றல்
உயிர்ப்புறுந் திறத்த தாகி
முச்கூறுங் காற்றின் ஏற்றம்
மெய்ந்நிலைக் கலையுந் தோற்றம்
ஓம்கூறும் ஒளித்தேற் றத்தால்
ஒள்ளொளி ரொளிரும் சீர்த்தி
ஓம்கூறும் இயல்நி லைக்கே
உயிர்ப்புறும் நெறியே கூட்டும் 272

நெறிமுதற் பொருளுங் கூர்ந்தே
நிலைமுதற் கலையு மாய்ந்தே
குறிமுதற் கருத்த றிந்தே
கூர்நிலை யியலுந் தேர்ந்து
அறிவுணர் வுற்றுத் தேர்ந்தே
அறிவுறும் முயற்சி யாலே
நெறிநிலைக் கலையா லாங்கண்
நிலைக்கலை யாயல் கூறும் 273

உயிர்ப்பிறப் பியலா யாங்கண்
ணெண்ணிசை மூலத் தேற்றம்
செயிரறுந் தென்றி சைக்கே
சீர்நிலைக் கலையுங் கூட்டும்
உயிர்ப்புறு மாற்றல் தோன்றும்
ஒளிநிலைத் தென்றி சைக்கே
உயிர்க்கலை உணர்வி னாலே
ஒள்ளொளி யியலு மாய்வாய் 274

நிலம்நெருப் பியலு மாய்ந்தே
நீர்நிலைத் தன்மை நோக்கி
புலமுறு மாற்ற லாலே
பொருந்துவ பொருந்தக் கண்டே
நலமுறும் விண்ணும் மண்ணும்
நன்னிலை யறிந்து ணர்ந்தே
புலமுறும் அகத்தி னாற்றல்
பேரறி வுற்றுக் காண்பாய் 275

செய்முறை வின்னக ளெல்லாம்
சீரொளிச் செயலே என்றும்
உய்முறைக் கலைக ளெல்லாம்
ஒமுறு மாற்ற லென்றும்
ஐவினை யியற்றல் மேலாம்
புலனெறி யாற்ற லென்றும்
ஐவினைத் திறத்தி னாற்றல்
ஒளிநிலை யியலே யன்றோ 276

எண்ணிலை எண்ணெண் ணாற்றல்
எண்கலை ஐயைந் தாற்றல்
எண்முறை நெறியின் மூலம்
எண்ணுருத் திறமுங் கூட்டும்
எண்ணொளி யியலி னாலே
எண்டிசை யாக்க மோர்ந்து
எண்மூலத் திறத்தி னாலே
தென்றிசை நுட்பங் காண்டல் 277

தென்றிசை மூல மாகி
உயிர்ப்புறும் தன்மை கூட்டும்
நன்றுறும் எண்டி சைக்கே
நன்னிலை மூலங் கண்டே
பொன்றிய விண்மண் ணாக்கம்
பொலிவுறத் தெரிந்து ணர்ந்து
அன்றுறும் காலத் தாற்றல்
நெறிமுறை யறிதல் தேற்றம் 278

நீரியல் நெகிழ்மை நுட்பம்
நிலத்தியல் தன்மைத் திட்பம்
சீரியல் நெருப்பின் தன்மை
நீரியல் வெம்மை நுட்பம்
தேரியல் கால நுட்பம்
தேர்த்துகள் தன்மை கூர்ந்து
காரியல் விண்ணின் ஆர்வம்
கலைநிலை ஞால மன்றோ 279

மறைமுத லியலா லாக்கம்
மண்ணிலை காலத் தேற்றம்
அறைநிலை யணுக்கே ளாக்கம்
அணுமுதற் கூர ணுக்கோர்
நிறைநிலை மொழிமு தற்றே
தேரியல் தன்மை யோங்கி
கரையிலாக் கலையை நோக்கி
அகவொளி நோக்க லன்றே 280

ஐம்பொரு ளியலா லாய்ந்தே
அம்முறைக் கலையுங் கூர்ந்தே
செம்பொருள் நுணுக்கத் தாலே
திருநெறி யியலுங் காண்டல்
அம்முதற் கலையி னாலே
ஐம்முதற் றியலும் நோக்கிச்
செம்மைசா லியலின் கூற்றே
மாநெறித் திறத்தி னாக்கம் 281

மாநெறி மூலங் கண்டே
சிற்றவைப் பொருளு ணர்ந்து
தூநெறிக் கலையா னோக்கிச்
செழும்பொரு ளாய்வு கண்டே
மூநெறிக் கலைசார் வண்மை
ஐங்கலை நிலைவி ளக்கம்
பாநெறி யியலைங் கூற்றின்
பணிநிலைத் தன்மை கூறும் 282

மெய்நெறி அஇ உஎ
ஒநிலை உள்ளுள் ளோங்க
செய்நெறி யாக்கத் தன்மை
சீர்நிலை நாற்பு றத்தும்
வைநெறி பிறழா வண்ணம்
விண்ணெறி நோக்கி யாங்கண்
ஐநெறி ஐங்க லைக்கே
மறைநெறி மூல மாமே 283

எண்கலை ஐந்நெ றித்தாய்
இயல்புறும் உண்மை கூர்ந்து
நுண்கலை நுணுக்கே நோக்கும்
நுவலுறுந் தன்மை நோக்கும்
விண்கலை நெறியிற் றாய
விளக்கமுங் கண்டு ணர்ந்தே
பண்கலைத் துணுக்கம் தாளம்
அளவிசைக் காலம் கூடும் 284

காலமும் தாளங் கண்டே
　　கணிநிலை யோசை யாய்ந்து
மூலமும் முறையிற் றாய
　　முந்நெறி முக்க லைக்கே
சீலமும் சிறக்கும் வண்ணம்
　　செந்நெறி மறையே கூறும்
ஞாலமும் விண்ணும் நோக்கும்
　　நற்கலை ஒமெ மூத்தே 285

ஒமெழுத் துணர்ந்துள் ளூறி
　　உள்நிலை உவந்து ணர்ந்தே
ஒமெழுத் தியலா லாங்கண்
　　அறுநிலை ஆத ரத்தும்
ஒமெழுத் தொளியே உச்சி
　　முகடுறு மியக்கங் கண்டே
ஒமெழுத் துக்கி தாறும்
　　அடிமுடி யிலக்காய்க் கூறும் 286

ஓம்நெறி மூலத் தோற்றம்
　　ஓம்ஒளி மூலத் தேற்றம்
ஓம்கலை மூல நோக்கம்
　　ஓமியல் மூலத் தன்மை
ஓம்உருத் தோற்றத் தேற்றம்
　　ஓம்ஒளி யியற்கூற் றாக்கம்
ஓம்நிலைக் கலையு ணர்த்தும்
　　திருமறை ஒளியே கூட்டும் 287

எண்ணிலை மூல மாகி
　　எண்ணுறு மியலே கூடும்
எண்முறை எண்ணெண் ணாற்றல்
　　இலங்குநாற் புறத்தின் தோற்றம்
எண்கலை யியலும் மூலம்
　　எண்ணிலைக் காலச் சலம்
எண்ணெறி வகுக்கு மாற்றால்
　　நாற்புறத் தியலே கூடும் 288

நாற்புற வடிவ மாகி
நான்குநான் குறுஞ்சி ரோங்கி
ஆற்றலால் நடுவன் ஒங்கும்
மையமும் மூலப் புள்ளி
தேற்றமே நிலையு ணர்த்தும்
சீரியல் உண்மை கூட்டும்
ஏற்றுமாய் உண்மை காட்டும்
அறுபான்நான் கியலே யன்றோ 289

அறுசுட ரியலைந் தாகி
ஐயைந்தின் நெறியே யாகி
உறுசுடர் மூலங் காட்டும்
ஒள்ளொளி நுண்மை கூட்டும்
அறுநிலைக் கலையி னாலே
முச்சுட ரியலுங் கண்டே
உறுகலைத் திறத்தி னுட்பம்
வானியல் ஒலியே யன்றோ 290

வானியல் ஒளியுங் கூட்டும்
விண்ணொளி வெளியுங் காட்டும்
தானியல் அகவின் னோக்கால்
தன்னுளே யறிந்து நோக்கின்
வானியல் காற்று மோர்ந்து
வான்நிலை யியலுங் கண்டு
வானியல் மூலத் திண்மை
வகுத்துணர் நிலையுங் கூட்டும் 291

எட்டுறுங் கலையி னாற்றல்
எண்ணிலை யியலாய் நோக்கி
நெட்டுறும் கோட்டி னாக்கம்
நாற்புறத் தியலா யுண்ணி
தெட்டுறும் மையப் புள்ளி
மூலமாய் இயன்றி ருக்க
விட்டுறும் விலைவுச் சுழல்
வியனிலை விளக்கு மன்றோ 292

அறுசுடர் ஒளியி னாற்றல்
ஐந்நிலத் தன்மை கூர்ந்து
அறுசுடர் வெளியின் தேற்றம்
அறுநிலத் தாக்கம் தேர்ந்து
உறுசுடர் இயல்வி ர்க்கே
உண்மையு மொண்மை யாகி
அறுசுடர் மூலத் தாலே
அண்டமும் மண்ணுள் தோன்றும் 293

சுடரொளி யாக்கங் கண்டே
தொன்மையாம் ஆத ரத்தும்
படரொளி யியலி னாலே
யெரிதழல் உண்மை நோக்கிச்
சுடரொளி மூல முற்றும்
செந்நிலை நெறியா லாகி
அடரொளிக் குவிழ்ப்பே கூட்டும்
அறுநிலை முகிழ்ப்பே யன்றோ 294

விண்ணிலை வியல்வெ ளிக்கே
விரிநிலைக் கலையின் தேற்றம்
எண்ணிலை மூலத் தாலே
இருபுறத் தியலுங் கூடும்
எண்ணிலைக் கலையா லாய்ந்தே
தனிநிலை மறைமொ ழிச்சார்
உண்ணிலை நிறைமொ ழிக்கே
உவப்புறுங் கலையே கூட்டும் 295

எழுநிலை அறுசு டர்க்கே
இன்னொளி மூல மாகி
வழுவிலா ஒமெ மூத்தால்
வலந்தரச் செய்யு மாற்றல்
பழுதிலா ஒளியி னாலே
பெருமறை மூலத் திண்மை
செழுமைசால் சிற்ற வைக்கே
தெரிநிலை யியலுங் கூட்டும் 296

சிற்றவை யியலா லாங்கண்
தெரிநிலை ஐயைந் தைந்தும்
உற்றவை ஒளிரக் கண்டே
உறுநிலை ஒமெ மூத்தாய்
உற்றுறும் ஆட லானின்
நெறிநிலை உவந்து ணர்ந்து
தெற்றுறு மியலுங் கூட்டும்
சீர்நெறி யாக்க மன்றோ 297

ஒன்றிரண் டியலே யாகி
ஈரிரன் டாக்கம் தேர்ந்தே
ஒன்றிர்ண் டியலி னாலே
மூவிரண் டுணர்ந்து நோக்கி
ஒன்றிரண் டியலி லுண்மை
நாலிரண் டியலாய்க் கண்டு
நன்றுறும் மூலம் நோக்கும்
நவையிலா நெறியே யன்றோ 298

மெய்ப்பொ ருளியலா லாங்கண்
உளவியற் றண்மை யுன்னி
மெய்யியற் கலைத்தி றத்தால்
ஆக்கமா ரியல றிந்தே
மெய்ப்பொருள் நிலையும் வையம்
விண்ணுறும் கலையின் நுட்பம்
மெய்க்கலை யுணர்வே யோங்கும்
சிற்றவைக் கலையின் தேற்றம் 299

சிற்றவை மூல நுட்பம்
தெரிவருங் கலையே யாகி
உற்றவை உள்ளு ணர்ந்தே
ஒப்பரும் தன்மை யோங்கி
உற்றுறும் உணர்வே மூலம்
ஒலியுறும் பேரொ ளிக்கே
தெற்றுறும் ஆத ரத்தும்
சீர்நிலை கலையுங் கூறும் 300

ஐந்நிலை யியலு மாய்ந்து
ஐங்குடித் தன்மை தேர்ந்து
செந்நிலைப் பொருளுந் தேர்ந்து
சீர்நெறிக் கலையா லாய்ந்து
அந்நிலை அம்ம றைக்கே
அருங்கலை யியலுங் கூட்டும்
முந்நிலை முக்க லைக்கே
முப்பொருள் நெறியும் சேர்க்கும் 301

திருமறைப் பொருளே யாகி
செழும்பொரு ளுண்மை நோக்கும்
ஒருமறை ஓமெ மூத்தே
உயிர்மறை உவப்பாய்க் கூட்டும்
கருமறை மூல மாகிக்
கலைநிலைத் தெளிவுங் கூட்டும்
வருமறைப் பொருளி னாக்கம்
வகுத்துறும் வடிவ குக்கும் 302

எண்ணிலைக் கலையா லாய்ந்தே
எண்முறை யியலா லாய்ந்தும்
எண்ணெறி வகுத்துக் காட்டும்
இயல்புறும் தன்மை கூர்ந்து
எண்ணெறி மூலம் ஒன்றே
வியல்விரி சுடர்க்க லைக்கே
ஒண்ணெறி காலங் காட்டும்
காலமா நெறிவ குக்கும் 303

காலமா நெறியி னாற்றல்
வையமும் விண்ணுங் கூட்டும்
காலமா நெறியு ணர்ந்து
கணக்கியல் மூலம் தேர்ந்து
மூலமா நெறிய னாலே
ஐவகை யியல றிந்து
கோலமாக் குறிப்புங் கூட்டும்
பெருமொழி யுணர லாமே 304

காலமே நெறிவ குத்து
காலமே படைக்கு மாற்றல்
காலமே குறியுங் கூட்டும்
காலமே உயிர்த்து டிப்பே
காலமே வண்மை கூட்டும்
உண்மையும் நெறியு மாக்கும்
காலமே திண்மை என்றே
காலத்தைக் கணித்துக் காண்பாய் 305

காலமாத் துடிப்பி னாற்றல்
உயிருணர் வொளியி னாற்றல்
காலமாத் துடிப்பின் தேற்றம்
அண்டமாக் குறியே கூட்டும்
காலமாத் துடிப்பின் வண்மை
காலமா முக்கே யாகி
காலமும் முகிழ்க்கும் வண்ணம்
முகிழ்நிலை கால முக்கே 306

ஐம்பெரு மாற்ற லாலே
ஐங்கலை நெறியி னோங்கி
செம்பொருள் மூலத் தன்மை
செழும்பொருள் வண்மை தேக்கம்
செம்மறைப் பொருளி னாக்கம்
செறிநிலைக் குறியா லாய்ந்தே
அம்மறை அந்நி லைக்கண்
அருங்கலை உண்மை சாற்றும் 307

கலைப்பொருள் மூல நுட்பம்
கலைப்பொருள் காலத் திட்பம்
நிலைப்பொருள் செறியா னோக்கி
நெறிகுறி யுண்மை யாய்ந்தே
தலைப்பொருள் ஓமெ மூத்தே
தனிக்கலை திரும றைச்சார்
நிலைமறை மூலம் என்றே
நெறிப்பொருள் கலையுங் காட்டும் 308

ஒளியியற் கலையுங் கூறும்
ஒருபொருள் மூலந் தேர்ந்தே
வெளியியற் கலையா னோக்கி
விண்ணொளி மூல நுட்பம்
களியியற் றன்மை யாலே
கலைநுகர் ஆற்ற லுற்று
ஒளிவகுத் தியலு மாற்றல்
ஓம்கலை நெறியே காட்டும் 309

செந்நெறி ஓம்பொருட்கே
சீர்மறை திருநெ றிக்கே
மெய்நெறி பெருநெ றிக்கே
சிற்றவை மூல மாகி
அந்நெறி நிலையே சுட்டிச்
சுட்டுறும் பொருளின் ஆர்ப்பால்
எந்நெறி யியலும் கூட்டும்
எண்பொருள் நுண்மை யன்றோ 310

ஊழியாம் நிலையைக் கண்டே
ஒருபெருங் கால வெள்ளம்
ஊழியாந் தன்மை யாலே
காலமாப் பொழுதி னுண்மை
ஊழியாம் நெறியின் கோலம்
உள்ளுறும் கால நுட்பம்
ஊழியை உணர்ந்து காண
விரைவியல் ஆய்வு காண்பீர் 311

காலமா நுட்ப மொன்றே
கருவினை புரிந்து காக்கும்
காலமா நுட்ப மொன்றே
பெருவினை யாக்கங் கூட்டும்
காலமாத் திட்ப மொன்றே
அருவினை யியலா யாக்கும்
காலத்தி னொட்ப மொன்றே
உறுவினைப் பயனே நல்கும் 312

ஐவிரல் தன்மை நோக்கிச்
செய்வினை மூலம் உன்னி
ஐம்பொருள் நெறியுங் கண்டே
ஐந்நெறித் திட்ப மாய்ந்தே
செம்பொரு ளுணர்வி னாலே
செழுமறை யாக்கம் தேர்ந்தே
அம்மறை யியலின் கூற்றால்
அருங்கலை உணர்த்து மன்றே 313

மூலமாப் பொருளி னாக்கம்
ஐம்முதற் கலையே யாகி
காலமாப் பொருளி னீட்டம்
இடைநொடி நிலைவ குத்து
சீலமும் முயன்ற வண்ணம்
தெரிநிலை யுண்மை கண்டே
கோலமும் குறிப்பி னாய்ந்து
நெறிப்பொருள் காண லாமே 314

எண்முறை யியலே யாகி
எண்ணெறிச் சில மாகி
விண்முறைக் கலைத்தி றத்தால்
வியன்வெளிக் கோலங் கண்டே
நுண்ணுணர் வுற்றுக் கண்டே
நுவலருந் தன்மை எண்ணி
எண்ணுணர் சிற்ற வைக்கே
இயல்கலை நெறியுங் கூட்டும் 315

மூலமாப் பொருள்சி றந்தே
முப்பொருள் முக்க லைக்கே
காலமு மியலா னோக்கின்
கலைநிலைத் தன்மை கூர்ந்தே
சீலமும் திருநெ றிக்கே
ஒருமறை மூலம் நன்றே
கோலமும் குறிப்பி னாயும்
குறிப்பொருள் நெறியே யன்றோ 316

விழுப்பொருள் நுண்மை யார்ந்தே
வீரமாக் கலைசி றந்து
செழும்புல லைந்துங் காத்து
சீர்நெறி யுள்ளும் நோக்கி
கெழுமிய அறுநி லத்தும்
மூலமே கிளர்ந் தெழுந்து
ஓமுத லாக்கங் கண்டே
சீர்நிலை யுணர்த்து மன்றே 317

அரும்பொரு ளாக்க நுட்பம்
அருமறை ஓமெ மூத்தால்
பெரும்பொரு ளியலாய் நின்றே
பெட்புறும் தன்மை நோக்கி
வரும்பொருள் மூலங் கண்டே
வளர்கலை நெறியு மாறும்
கருப்பொருள் மூலங் கண்டே
கனிநிலை யியலுங் கூறும் 318

பருப்பொரு ளியலா னோக்கி
பார்பொருள் கண்டு ணர்ந்தே
உருநிலை முற்றுந் தேர்ந்தே
ஒள்ளியற் றன்மை யாய்ந்து
கருநிலை மூல மாய்ந்தே
காற்றுநீர் அனலு மாய்ந்து
திருநிலை ஒளியா லாங்கன்
செய்முறை யறிதல் வேண்டும் 319

உற்றுண ரறிவி னாலே
ஓமெழுத் துருவி னாய்ந்து
உற்றுணர் திறத்தி னாலே
ஓமொலி வொளியும் நோக்கி
உற்றுணர் மெய்க்க லைக்கே
ஓமியல் தன்மை கூட்டும்
உற்றுணர் மெய்ப்பொ ருட்கே
நெறிமுறைச் சீர்மை யன்றோ 320

புலனெறி நாளும் நின்றே
புன்மையைத் தீர்க்கும் மாந்தர்
நலமுறும் அகவிண் ணோக்கி
அண்டமும் பிண்டமு மாய்ந்தே
வலமுறச் செய்யு மாற்றல்
வண்மையு மெய்தல் பெற்றே
புலமுறு மியலே யாகி
பொருந்துமா நெறியு மாய்மின் 321

மாநெறி யாற்ற லொன்றே
மாமறை வகுத்துக் காட்டும்
மாநெறி தேற்ற மொன்றே
தூமறை பகுத்துக் கூட்டும்
மாநெறி யேற்ற மொன்றே
பெருமறை தொகுத்த ளிக்கும்
மாநெறி எண்ணெண் ணாற்றல்
மறைமுதற் பொருளே தேற்றும் 322

கலைநெறிப் பேரி யக்கம்
கணிநெறிக் கால நுட்பம்
நிலைநெறிச் சீரி யக்கம்
துணியுறும் விரத் தன்மை
தலைநெறி ஒமெ மூத்தே
தனிநிலை யியலா யாக்கும்
நிலைநெறி புண்மை யன்றோ
பெருநெறி மூலங் கூட்டும் 323

ஒன்றுறு மொன்றே யாகி
ஒன்றினி லொன்றி ரண்டே
ஒன்றுறும் மூன்று மாற்றல்
ஒன்றிய ஒன்றின் தேற்றம்
நன்றுறும் ஐந்துங் கூட்டும்
நிலைநெறிப் பொருண்மை யுற்றே
அன்றுறும் காலத் தாழி
காலமா நுட்பங் கூறும் 324

எண்ணிலைக் கணக்கா லாய்ந்து
எழுநிலைத் திறத்தி னுன்னி
உண்ணிலை யொளியுங் கூறும்
ஒளிநெறி மூல மோர்ந்தே
தெண்ணிலை நெறியுங் கூட்டும்
சீர்நெறி யியலுங் கூடும்
எண்ணெறி மூல மன்றோ
நெறிமுறைப் பொருளு மாக்கும் 325

சிற்றவை யியல்நெ றிக்கே
திருநெறி ஒளிக்க திர்க்கால்
உற்றவை ஒளிக்கிற் றாகி
உறுமுறை ஒமெ ழுத்தாய்
தெற்றுறு முணர்வி னாலே
செழுங்கலை நுட்பம் தேர்ந்து
எற்றுறு மியல மைப்பே
எண்ணிலைக் கலையே செய்யும் 326

எண்ணிலைக் கலையு ணர்ந்து
எழுதரும் ஒலியி னாலே
ஒண்ணிலை ஒளியி னாற்றல்
ஒருபெருங் கலையின் தேற்றம்
எண்ணெறி முறைமைத் தாய
இயல்புறுங் குறித்தி னோர்ந்து
விண்ணெறி மூல நுட்பம்
வியனிலை யுணர்த்து மன்றோ 327

மூலமாக் கலைத்தி றத்தால்
முன்னிலை அறுநி லத்தும்
காலமாக் கணிப்பு றுத்திக்
கலைநிலை யைந்துங் கூர்ந்தே
சீலமாச் செந்நெ றிக்கே
திருநிலை உன்னி யுள்ளி
காலமா யியலி னாற்றல்
விரைவியல் கண்ணுற் றாய்வாய் 328

பெருநெறித் திறத்தி னாலே
ஒளிக்கலை மூலங் கண்டே
ஒருநெறித் திறத்தி நுற்றே
ஓமிய லாக்க மோர்ந்து
திருநெறிக் கலையின் சீர்த்தித்
திகழ்தரு முணர்வி னாலே
அருநெறிச் சிற்ற வைக்கே
மறைமுதற் பொருளுங் கூடும் 329

மறைமுதற் பொருளே யாகி
மாக்கலை நிலைசி றக்கும்
அறைதருங் கலையி னாற்றல்
அணிநிலை யியலுங் கூர்ந்தே
மறைப்பொருள் மூலங் கண்டே
சிற்றவை எண்ணி லைக்கே
அறைதரும் ஒலியி னாற்றல்
அளிகலை நுட்பங் கூட்டும் 330

எண்கலை மூல நுட்பம்
விண்கலை மூலத் திட்பம்
நுண்கலை எண்ணென் னோக்கி
நுவலருந் தன்மைத் தாகி
எண்முறைக் கலையா லாகி
எழிலுறும் ஒளிசேர் உண்மை
விண்ணிலை ஐயைந் தைந்தாய்
மேவுறும் அகவிண் ணாற்றல் 331

அகவெளி யாய்ந்து ணர்ந்து
அறுநிலைத் தன்மை தேர்ந்து
புகுமொளி யியல்பி னாலே
புனிதமா நெறியு ணர்ந்து
மிகுமொளித் திறத்தி னாலே
மேவுறு மாற்றல் கூறும்
தகுமொளி யியலி னாலே
சிற்றவை நுணுக்கங் காண்பாய் 332

சிற்றவை ஆட லாணின்
தெரிநிலைக் கலையே யாகி
உற்றதோ குண்மை யாங்கண்
உறுபொருள் கலைத்தி றத்தால்
தெற்றுறும் திருநெ றிக்கே
தெண்ணிலை வான்க லைக்கே
முற்றுறும் இயல்பின் உண்மை
முழுநிலை யாக்கங் கூடும் 333

கூடுமோர் ஐங்கு டிக்கே
குவிநிலை யுண்மை தேர்ந்தே
நாடுமோர் அறுநி லத்தே
நண்ணிலை மூலத் தாற்றல்
தேடுமோர் இருமுச் சாக்கம்
திருநிலை புகுவ நோக்கி
ஒடுமோர் தலைகி ழாக்கம்
உற்றுயிர் உண்மை கூட்டும் 334

ஐங்கலை நெறிமு றைக்கே
அறுநிலத் தன்மை நோக்கி
செங்கலை முறையுங் கண்டே
சீர்நெறித் திருவும் தேர்ந்து
பொங்குறும் ஒளியி னாற்றல்
புகுநிலைக் கலையுங் கூர்ந்து
அங்குறும் பைங்கு டிக்கே
ஐந்நிலை யியலு மாய்மின் 335

குடிநிலை கூர்ந்து நோக்கி
கூர்த்தமா மதித்தி றத்தால்
கடிநிலைக் கால நுட்பம்
கணக்குறும் முறையா லாய்ந்து
படிமிசை விண்ணொ ளிக்கே
பாங்குறு மியல்பிற் றாய
கடியியல் நோக்குற் றாயும்
கணக்கியல் எண்ணெண் ஆற்றல் 336

எண்ணுறு மெண்ணெண் ணோங்கும்
எண்ணின்மா காணி யாய்ந்தே
எண்முறை கால நுட்பம்
இயலுறு மளவை நோக்கி
எண்ணிய லறுபான் நான்கின்
நான்குறு மறுபான் நான்கும்
எண்ணிலை மூலத் தாற்றல்
ஈரிரண் டியலே யன்றோ 337

நாற்புறத் தியலே யாக்க
நடுநிலை மையப் புள்ளி
நாற்புறத் தியலும் வண்ணம்
வளவியல் கால மாக்கம்
தேற்றமாம் தென்றி சைக்கே
எண்டிசை யியலுங் கூட்டும்
ஆற்றலும் தென்றி சைக்கே
வலமிட மளித்தே யன்றோ 338

முக்கலை முந்நெ றிக்கே
மூலமா யியலு மாய்ந்து
மிக்குறும் வெளிவ ளிக்கே
ஒளிவளி யியலுங் கூர்ந்து
மிக்குள பெருங்க லைக்கே
மெய்ம்மறை யாக்கங் கூடும்
அக்கலை அந்நெ றிக்கே
ஆடலான் கலையும் சேரும் 339

ஆடலான் எட்டெட் டாகி
அருங்கலை நிலையுங் கூடும்
ஆடலான் இசைக்க லைக்கே
அருமறை ஓமெ ழுத்தே
ஆடலான் உருவத் தோற்றம்
ஓமெழுத் தியலே யாகி
ஆடலான் நடக்க லைக்கே
ஓமியல் ஆற்றல் கூட்டும் 340

ஓமியல் நெறியு மாய்ந்து
ஓங்குறும் ஒளித்தி றத்தால்
ஓமியல் மூலத் தாற்றல்
ஒளிக்கலை நிலையுங் கூர்ந்து
ஓமியல் நுட்ப மன்றோ
ஓமியல் திட்ப மாகும்
ஓமியல் கலைத்தி றத்தால்
ஒளிர்கலை நுட்ப மன்றோ 341

அலையசை யாற்ற லாலே
அம்முறு மியலுங் கூடும்
நிலையசை யாற்ற லாலே
நெறியுறுங் கலையுங் கூடும்
தலையசை யாற்ற லாலே
ஓமெழுத் தியலுங் கூடும்
கலையசை மூல மன்றோ
ஒளிக்கலை ஓமெ ழுத்தே 342

முருகுறும் சுட ரொளிக்கே
மும்மையும் மூல மாகி
முருகுறும் அறுசு டர்க்கே
முந்நெறி கால மாகி
முருகுறும் ஐங்க கலைக்கே
ஐந்நெறி செறிவுங் கூட்டும்
முருகொளி பேரொ ளிக்கே
மூவொளி யியலு மாய்வாய் 343

அண்டமும் பிண்ட மாய்ந்தே
அறுநிலத் தன்மை தேர்ந்து
மண்டுறு மியலி னாலே
எண்கலை நுட்பங் கூர்ந்து
எண்டிசைக் கலைத்தி றத்தும்
இயலுறும் நெறியு மாய்ந்து
பண்டுறும் மரபி னாலே
பார்நெறி யியலு மாய்வாய் 344

பார்நெறி யியலும் நோக்கி
　　விண்ணெறிக் கலையு மாய்ந்தே
சீர்நெறித் தன்மை யோர்ந்து
　　திருநெறி மரபும் நோக்கி
ஒர்நெறி யியலிற் றாய
　　உண்மையுங் கண்டு ணர்ந்து
தேர்நெறிக் காலத் திட்பம்
　　தேர்த்துகள் நுட்ப மாய்வாய் 345

தேர்த்துகள் கால நுட்பம்
　　பொழுதுறுந் தன்மை எண்ணி
தேர்க்கொடி காலத் திட்பம்
　　ஒன்றரை நிலையுங் கூர்ந்து
தேரியல் கலையா லாய்ந்து
　　தேர்நெறிச் சீரின் உண்மை
தேர்முறைக் கலைக்கா லத்துத்
　　திட்பமும் உணர்ந்து காண்பின் 346

உள்முறை நோக்க லாலே
　　அகவெளித் திறமு மாய்ந்து
உள்ளியல் உள்ளு ணர்வே
　　ஒருநிலைக் கலையு மோங்கும்
உள்ளூறு முணர்வுற் றாங்கண்
　　ஒருபொருள் மூலங் கண்டே
தெள்ளூறு மியல்சி றக்கத்
　　திருநெறி வுவந்து காண்பின் 347

திருநெறி யாற்ற லாலே
　　சீரொளி யுற்றுந் நோக்கி
ஒருநெறி ஒமெ மூத்தே
　　அருமறை ஒமெ மூத்தே
பெருநெறி மூலத் துண்மை
　　நுண்மையு மெண்ணி லைக்கே
வருநெறி யியலி னாய்ந்து
　　மறைப்பொருள் நுட்பங் காண்மின் 348

எண்ணுண ரியலி னாலே
எழுநிலை நுட்பங் கண்டே
விண்ணுண ரியல்பு மோங்கி
வெளியுணர் கலையும் நாடி
கண்ணுணர் நுட்பங் கண்டே
கலையுண ராக்கந் தேர்ந்தே
பண்ணுணர் திறத்தி னாலே
ஓமிசைத் திறமு மாய்விர் 349

ஓமிசைத் திறமுங் கூடும்
ஓமியல் நெறியு மாய்ந்தே
ஓமுறும் கலைத்தி றத்தால்
ஒளிநிலை யைந்து ணர்ந்தே
ஓமியல் நுட்பக் கூறே
பெருநிலைக் கலையுங் கூட்டும்
ஓமிசை நுட்ப மொன்றாய்
விண்ணொளி யசையுங் கூட்டும் 350

கூட்டுறு மிசையே யாகி
அசைநிலை ஒலியா யாங்கண்
பாட்டுறும் திறத்தி னாலே
பரவுறு மியலுங் கூட்டும்
எட்டேழுத் தியலும் ஓமின்
உருநிலை அகத்துள் நாட்டும்
ஆட்டுறும் கலைத்தி றத்தின்
அணிநிலைக் கலையுங் கூட்டும் 351

ஒருகலை உணர்வே ஓங்கி
உள்ளுண ராற்றல் பெற்று
வருகலை மூலத் தாலே
வளர்நெறி ஒவி யத்தும்
பெருகலைப் பெருநெ றிக்கே
பெட்புறும் வண்ண மோர்ந்து
ஒருநிலை யுளத்தி னாக்கம்
அகவெளி நிலையுற் றாய்தல் 352

தண்கலை மூல நுட்பம்
தனிநிலைக் கால நுட்பம்
எண்கலை இயல றிந்தே
எண்முறைக் கலையா னோக்கி
நுண்கலை அறுபான் நான்கின்
மூலமும் புள்ளி யாய்ந்தே
விண்கலை அகவின் ணாய்வின்
வியநிலை யாய்தல் நன்றே 353

தெரிநிலைக் கலைவி ளக்கிச்
சீர்மிகு மறிவான் நான்கின்
விரிநிலைக் கணக்கு மாய்ந்தே
ஐயைந்தி னியலுங் கண்டே
சரிநிலை அளவாய்க் கொண்டே
நாற்புறத் தியலும் நோக்கி
விரிகலை யியல்நி லைக்கே
மேவுறுந் தன்மை காண்பிர் 354

ஐந்தியல் நெறியே மூலம்
ஐந்தியற் குறியே கோலம்
ஐந்துறும் ஆற்ற லாலே
ஐந்நெறி மூலத் தாலே
முந்துறும் ஓம்ம றைக்கே
ஓம்ஒளி யியலா லாகி
வந்துறும் ஓம்ஒ லிக்கே
மறையொளி யோசை கூட்டும் 355

மறையொளி யோசை யாகி
ஓமெழுத் தியலே யாகி
மறைக்கலை யாக மத்தே
மாக்கலை நிலையுங் கூடும்
மறையியல் மறைமு லத்தால்
மறைக்கலை கோலத் தண்மை
மறைமுறை நிலையே யாகி
மெய்க்கலை பொருளு மாய்மின் 356

மாமறை யாக மத்தும்
　　மெய்நிலைப் பொருளு ணர்ந்தே
தூமறை நெறிக்க லைக்கூர்
　　செம்மறை யியலுந் தன்மை
ஓம்மறை யியலு மாற்றல்
　　ஒருநெறிக் கலையே கூர்ந்து
மாமறைத் தன்ம றைக்கே
　　மாக்கலை யியலுங் கூடும் 357

உயிர்க்குல நெறியுங் கூர்ந்து
　　உயிர்நெறி யியலு மாய்ந்து
உயிர்த்திற முற்றுங் கண்டே
　　செயிரறுந் திறத்தி னாலே
உயிர்க்கரு மூலத் தாய்ந்து
　　கருமூல நிலையுங் கூர்ந்து
உயிரொளி ஓம்நி லைக்கே
　　ஓம்கரு மூல மன்றோ 358

கருமூல நிலையை எண்ணி
　　காற்றியல் நெறியுங் கூர்ந்து
ஒருமூலத் திறத்தி னாலே
　　ஒளியொளி ராக்கந் தேர்ந்தே
அருமூலத் தியற்கை யாய்ந்தே
　　அம்மூலத் தன்மை யெண்ணி
பெருமூலத் தொளியின் ஆற்றல்
　　புகலவு மரிதே யன்றோ 359

முச்சியல் இலத் தொன்றே
　　ஆயிரத் தறுநூ றாகி
மூச்சியல் நெறியுங் காலம்
　　முந்நெறி முக்க லைக்கூர்
மூச்சியல் கணக்கா லாய்ந்தே
　　நெறிமுறை உயிர ரிந்தே
மூச்சுறும் ஆங்க லைக்கே
　　காலமும் நொடியுங் காண்பீர் 360

எண்ணுறும் மூலத் தாலே
இயல்வெளி ஒளியு மாய்ந்தே
விண்ணுறும் கலைமூ லத்தால்
மெய்ந்நிலை யியலுங் காலம்
கண்ணுறும் ஒளித்தி றத்தால்
கலைநிலை யாக்க மோர்ந்து
எண்ணொளி யியற்க ணக்காய்
விண்ணொளிக் கலையுங் கூறும் 361

ஒளியியற் றிறத்தி னாலே
ஓங்குறும் ஓமெ மூத்தே
ஒலியியற் றிறத்தி னாலே
பாங்குறும் கலையெ மூத்தாய்
வெளிக்கலை மூல மாகி
விண்ணிலைக் கால மாகி
ஒளிக்கலைச் சீலத் தாலே
ஒளிநெறி மூலங் காண்பீர் 362

உயிருணர் வுற்றுக் கண்டே
உயிர்நெறி ஓர்ந்தி லங்கும்
உயிர்குல முற்றும் வாழ
ஒருநெறி ஓம்தி றத்தால்
உயிரொளி மறைஓம் என்றே
ஒளிருறும் திறத்தி னாலே
செயிரறுங் கலையே யாகி
சீர்மறை செழிக்கு மன்றே 363

ஓம்ஒலி கேட்டு ணர்ந்தே
உயிரொளி ஒளியி னூடே
தாமரை யியலே யாகி
தனிநிலைக் கலையே கூடும்
ஓம்நெறிக் கலைத்தி றத்தின்
நெறிமுறை யாய்ந்து ணர்ந்தே
ஓம்குறி நெறியி னாலே
ஒளிமறை யாய்தல் கூடும் 364

மூலமா மறையே யாகி
முப்பொருள் நெறியுங் கூடி
சீலமாக் கலைத் தெரிக்கும்
தெண்ணிலை ஒளிக்க லைக்கே
காலமாத் திட்பங் கூட்டும்
நுட்பமு முணர்ந்துள் ளோங்கி
ஞாலமும் விண்ணு மாய்ந்தே
நன்மறைப் பொருளு மாய்வாய் 365

காலமு மிடமும் நோக்கிப்
பொருளூறும் தன்மை யாலே
சீலமா நெறிக்கே யுற்ற
சிற்றவை நாற்பு றத்து
கோலமும் குறிப்புங் கண்டே
குறித்துணர் கலைதெ ர்த்தே
ஏலுறக் கண்ட வண்ணம்
ஐந்நெறி மூலங் காண்பிர் 366

பாரியல் மூலத் தன்மை
விண்ணியல் கோலத் தோற்றம்
தேரியற் கலையின் காலம்
சீரியல் எண்ணின் தேற்றம்
நேரியல் ஒளித்தி றத்தின்
நிலையியல் எண்ணுற் றாய்ந்து
கூரியல் நுணுக்கத் தன்மை
கனிநிலை முயந்து காண்பிர் 367

உள்ளூறும் முயற்சி யாலே
உள்ளூறு மாற்றல் கூடி
உள்ளூறும் விண்ணி னாற்றல்
உயிரொளி முகிழ்ப்புந் தன்மை
தெள்ளூறும் செந்நெ றிக்கே
சீர்மறை ஐங்க லைக்கூர்
உள்ளூறும் ஒளியாற் கண்டே
உவப்புறும் மறையே யாய்விர் 368

மூலமே முதலா யாறு
முந்நெறி அறுநி லத்தும்
மூலமாய் பொருளே யோங்கும்
முக்கலைத் தன்மை யாய்ந்து
காலமாய் பொருளே யுண்ணி
காலமும் நுட்பங் கண்டே
காலமா யியலே யாக்கம்
கடிநிலை யுணர லாமே 369

எண்கலை நுட்பத் தாலே
இயல்நிலை நெறியா லாய்ந்து
நுண்கலை நுணுக்கங் கண்டே
சிற்றவை மூலந் தேர்ந்தே
விண்கலைக் கணக்கி லாய்ந்து
உயிர்நெறி மூலம் நோக்கி
எண்கலை யியலே கூறும்
சிற்றவை மாநெ றிக்கே 370

மாநெறி யாற்ற லோர்ந்தே
மாக்கலை மூல மாகி
தூநெறி கணக்கி லெண்ணெண்
திருநிலைக் கோலங் கண்டே
மாநெறி யாட லானின்
சிற்றவை நாற்பு றத்து
தூநெறி ஐயைந் தைந்தின்
பெருநிலைக் குறிப்பே யன்றோ 371

திருநெறித் திறத்தி னாலே
சீர்மிகும் எண்தி றத்தால்
ஒருநெறிக் கணக்கு மாய்ந்து
ஐவகை யியலும் தேர்ந்தே
பெருநெறிப் பிரண வத்தால்
எட்டின்மா நெறிபி றழ்ந்த
திருநெறிச் சிற்ற வைக்கே
ஒருநிலை யுணர்தல் காண்பிர் 372

உறுபியல் நெறிமு றைக்கே
உயிரியல் துணுக்கந் தேர்ந்து
அறுநிலத் தாத ரத்தும்
ஐவகை நிலையுங் கூர்ந்தே
உறுசுட ரியலைந் தாகி
உள்ளொளி மூலத் தாலே
பெறுசுடர் உயிரொ ளிக்கே
பெறுநிலை யியலே யன்றோ 373

கலைநிலை யாற்ற லாலே
கணிமுறை யியலுந் தேர்ந்து
நிலைநெறி மூலங் கண்டு
நேரியல் அறுபான் நான்கின்
தலைநெறி சிற்ற வைக்குத்
தனிநிலை ஐந்தும் ஆறும்
கலையுணர் வெளியி னாலே
கருத்துறு மாற்றல் கூடும் 374

கூடுமா நெறியி னாற்றல்
மாநெறித் திட்பத் தாலே
தேடுறும் எண்ணென் சிலம்
தெரிமுறை விளங்கத் தேர்ந்து
ஊடுறும் ஒலிஒ லிக்கே
ஒளிஒலி யியலா யாய்ந்து
ஆடுறும் ஆட லானின்
அருங்கலை முறையே கூறும் 375

ஆடலான் கலையே மூலம்
சிற்றவை நிலையே யாய்ந்து
ஆடலான் முற்சீர் காலம்
காலமா யியலு மாய்ந்து
ஆடலான் காலத் திட்பம்
காலமா நெறியி னாலே
நாடுறும் மூலத் திட்பம்
நண்ணுறும் ஐயைந் தைந்தே 376

காலமா நெறியி னாற்றல்
காலமும் சீர்கு றித்தே
மூலமா நெறியு யிர்த்தே
காலமு மியலுங் கூறே
சீலமாத் தன்மை ஓர்ந்தே
செறிநிலைக் கலைத்தி றத்தால்
ஞாலமும் விண்ணும் கூடும்
நவையிலா மாநெ றிக்கே 377

தவளைமா நெறியி னாற்றல்
தனிக்கலை யியலு மாகி
தனிக்கலை யியலு மாகி
திகழுறு மாற்ற லாகி
திகழுறு மாற்ற லொன்றே
திருநிறை மரபென் றாகி
நுவலரும் கலையி னாற்றல்
நுட்பமாத் தன்மை யோங்கும் 378

எட்டியல் நெறித்தி றத்தால்
எண்கலை மூல மைந்தாய்
விட்டுறு மாற்ற லாலே
வியனிலை யியலு மாய்ந்து
தெட்டுறும் கலைத்தி றத்தால்
சீர்நெறித் தன்மை யோர்ந்து
பெட்புறும் ஐந்தி நான்கே
மூன்றுறும் இரண்டே யன்றோ 379

ஒன்றுநான் கிரண்டு மூன்றே
ஐந்துறும் ஏழே யாகி
நன்றுறும் எட்டோ டேழே
நான்கிரண் டாறு கூடும்
ஒன்றுறும் மூன்று மைந்தும்
ஐந்துறும் ஏழொ டெட்டும்
ஒன்றுறும் ஒன்றே யாகி
ஒன்றியில் மூன்றே காண்பிர் 380

மூன்றுநான் கிரண்டோ டேழோ
டெட்டுறும் கலையே யாகி
ஒன்றிய லாக்கங் கூர்ந்து
எண்முறைக் கலைத்தி றத்தால்
தோன்றுமா நெறியி னாற்றல்
தூநெறிக் கலைசி றந்து
வான்வெளி யோசை யாற்றல்
வயங்குமா றியங்கு மன்றோ 381

ஓமுறும் ஒலியே நோக்கி
ஓமுறும் ஒலியே கேட்டு
ஓமியல் திறத்தி னாலே
ஓவியக் கலையு ணர்ந்து
ஓமுறும் உழைப்பி னாக்கம்
ஒண்ணிலை ஒலியொ லிக்கே
ஓம்நிலை கலையா லாங்கண்
விளிப்புறும் மூல மாய்வாய் 382

அறுசுட ரொலியே நோக்குற்
றாய்நிலை மூலத் தாலே
உறுசுடர் ஐங்கு டிக்கே
உற்றுறும் பிண்டத் தாற்றல்
பெறுசுடர் விண்ணி னோக்கி
அண்டமா யியலு மாய்ந்தே
அறுசுட ரொளியி னாலே
எண்ணிலை மூலங் காண்பிர் 383

எண்ணிலை மூலங் கண்டே
எழில்மறை ஒளியி னாற்றல்
தென்னிலை நிறைமொ ழிக்கே
சீர்மறை மொழியின் தேற்றம்
உண்ணிலை நுணுக்கே நோக்கம்
உயர்கலை அகவிண் ணோக்கே
விண்ணிலைக் கலையி னாக்கம்
வியன்விரி நிலையுங் காண்பிர் 384

காற்றுறும் முச்சு றிந்து
ஒளிநிலைக் கலைய றிந்து
நேற்றுறும் காலம் இன்றே
நாளையு மோர்ந்து ணர்ந்து
தேற்றமாய்க் கால நுட்பம்
விரிவியல் கருத்த றிந்து
ஆற்றலால் உள்ளு ணர்ந்தே
அருங்கலை உண்மை காண்பீர் 385

பிறவியே பெரும்பே றாகி
மனிதமா நெறியி னாற்றல்
அறமுறு முணர்வி னாலே
ஆண்மையும் செழித்தே ஓங்கி
திறமுறும் புலனெ றிக்கே
சீர்மையும் நெறிக்கூ ராய்ந்து
அறநிலை முழுது மோர்ந்து
அருளியற் கலையைக் காண்பீர் 386

வைகறைக் கால மொன்றே
வாழ்வியல் வகுத்துக் கூட்டும்
வைகறைக் கால மொன்றே
வளமதி பெருக்கக் கூட்டும்
வைகறைக் கால மொன்றே
நிறையரு ளுணர்தல் கூட்டும்
வைகறைக் கால மோர்ந்து
செயல்முறை யாய்ந்து காண்பீர் 387

வைகறை யியல றிந்து
உளத்தியல் நன்கு ணர்ந்து
வைகறை காலங் கண்டே
கதிரிய லாய்ந்து ணர்ந்து
வைகறைக் காலம் தேர்ந்து
உயிரியல் உள்ளு ணர்ந்தே
வைகறை நுட்ப மாய்ந்தே
விழித்தெழு முணர்வே சொல்வீர் 388

உறங்கலி னின்றெ ழுத்தே
உள்ளியே நாடி நாடி
அறத்துறும் செயலி னாக்கம்
அகத்துறு முணர்வோ லாய்ந்து
திறத்துறும் மூல காலம்
செயல்நிலைக் கால மூலம்
அறநிலை யியலி னாலே
அகத்துணர் வுற்றே யாய்மின் 389

எழுகதிர்க் கால மொன்றே
உயிரினம் விழிக்குங் காலம்
எழுகதிர்க் கால மொன்றே
வைகறை யியலா யாகி
எழுமுணர் வோங்கக் கூட்டும்
எண்ணிலைக் கலையுங் கூட்டும்
எழுநிலை இயல றிந்தே
உணரவுறு மாற்றல் கொள்வீர் 390

ஆற்றலால் நிலைய றிந்தே
அறுநிலத் தியலுங் கூர்ந்து
ஆற்றலால் கலைய றிந்தே
உணர்வொளி சிறக்கக் கண்டே
ஆற்றலால் தன்மை யாய்ந்தே
நெறிமுறை யியலக் கண்டே
தேற்றுறும் விண்ணொ ளிக்குச்
சீர்நிலை கலையு மாய்வீர் 391

ஓசையு மொலியு மாய்மின்
ஒலிநிலை யலையு மாய்மின்
ஓசையால் மூலங் கூர்ந்து
மூலமா மியல்தெ ரித்து
ஓசையு மியலு ணர்ந்து
ஒளிஒலி நுட்பம் தேர்ந்து
ஓசையாம் ஓமு ணர்ந்து
நிலைப்பயன் காண்பீர் நன்றே 392

ஓமுறுந் திறனா லன்றோ
ஒளிஒலி உண்மை கூட்டும்
ஓமுறுந் திறனுள் தேர்ச்சி
மெய்க்கலை யுணர்வே நல்கும்
ஓமுறும் உள்ளு ணர்வே
அண்டமா யியலி னாய்வாய்
ஓமுறும் தலைசி றக்க
நிலைநெறி யியலும் தேர்மின் 393

உள்ளுணர் வுற்றுத் தேர்ந்தே
ஒருகலை நிலையுங் கண்டே
தெள்ளுணர் அறுசு டர்க்கே
திருநிலை ஆத ரத்தும்
விள்ளுணர் அற்றுத் தேர்ந்தே
வியனிலை மூலங் கண்டு
தெள்ளுறும் கலைநி லைக்கே
சீர்கலை உற்றுக் காண்பீர் 394

காலமா நுட்பந் தேர்ந்தே
கலைநிலை யியலுங் கூர்ந்து
மூலமாத் திட்பத் தாலே
முறைநெறி ஐவ கைத்தாய்
சீலமைந் தைந்து மாகித்
தெரிநிலைச் சிற்ற வைக்கே
கோலமுங் குறிப்புங் கொண்டு
கொள்ளுணர் கொள்கை யாய்வீர் 395

இயற்றிறம் நோக்குற் றாய்ந்தே
கலைமதி யாற்ற லுற்று
வயங்குறும் அகவிண் ணோக்கால்
வளர்கலை நெறியுற் றாய்ந்து
இயங்குறும் தன்மை யாலே
இயக்குறும் தன்மை யாய்ந்து
வயங்குறும் சுடர்வி ளக்காய்
வளர்கலை நிலையுங் கூட்டும் 396

தெற்றுறும் முச்சு டர்க்கே
சீர்நிலை உயிர்ப்புத் தன்மை
உற்றுறும் அறுசு டர்க்கே
விழித்தெழும் உணர்வின் நோக்கி
உற்றுறும் ஐங்கு டிக்கே
உயிருறும் ஒளியுங் கூட்டும்
தெற்றுறும் தன்மை யோர்ந்து
சீர்நெறி விளங்கக் காண்பீர் 397

மெய்யுணர் வறித லொன்றே
மனிதமா நெறியி னாற்றல்
மெய்யுணர் கலைப டைத்தே
ஓம்மொழி யுற்று ணர்ந்தே
மெய்யுணர் திறத்தி னாலே
ஓம்கலை யாற்ற லுற்று
மெய்யுணர் மூலத் தாலே
ஓம்நெறி யுணர்ந்து காண்பீர் 398

ஓம்மொழி மூல மாகி
ஞாலமா ஒலியுங் கூட்டும்
ஓம்கலை கால மாகி
தெள்ளுண ரியல ளிக்கும்
ஓம்நெறித் திறத்தி னாலே
ஒருகலை நுட்பம் தேர்ந்தே
ஓம்உரு நிலையைக் கண்டே
ஆடலான் கலையை யாய்வீர் 399

ஆடலான் கலைத்தி றத்தை
ஆய்வினா லாய்ந்து ணர்ந்து
ஆடுறும் முறைமை கூர்ந்து
மெய்யியல் அறிவின் நோக்கால்
நாடுறும் கலைத்திட் பத்தின்
மெய்நுட்பத் தன்மை யாங்கண்
தேடுறும் அறிகுட ராக்கம்
செய்முறை நிலையுங் காண்பீர் 400

உள்ளூறும் எரித ழற்கே
ஓங்குறும் தன்மை யாய்ந்து
தெள்ளூறும் உணர்வி னாலே
தெளிமுறைக் கலைய றிந்து
விள்ளுனர் ஐம்மு தற்றே
அறுநிலத் தியலுங் கூர்ந்தே
உள்ளூறும் நிலையுங் கூட்டும்
உணர்கலை யாய்ந்து காண்பிர் 401

உணர்வுறு மாற்ற லொன்றே
உயிர்க்குலம் விழிக்கச் செய்யும்
உணர்வுறு மாற்ற லொன்றே
உயிர்க்குல நெறியுங் கூட்டும்
உணர்வுறு மாற்ற லொன்றே
உயிர்நெறி முறைவ குக்கும்
உணர்வுறு மாற்ற லாலே
உயிரொலி உண்மை காண்பிர் 402

அறிவுறும்ம முயற்சி யாலே
ஆண்மையும் அறிவும் ஓங்கி
குறியுறும் தன்மை கூர்ந்து
குறைபெற நோக்கிக் கூர்ந்து
நெறியுறும் நிலைத்தி றத்தால்
நீளவும் நினைந்து ணர்ந்து
அறிமுற வுணர்வி னாலே
அகவெளி யாய்மின் யாய்மின் 403

உழைப்புறு முணர்வி னாலே
உள்ளொலி மூலங் கண்டு
களைப்பிலா முயற்சி யாலே
கலைநிலை எண்ணென் னோக்கி
விழைவுறு மாற்ற லாலே
உள்ளூறும் தன்மை கூர்ந்து
உழைப்புற நோக்கிக் கண்டே
உள்ளமும் ஆய்மின் ஆய்மின் 404

உள்ளமே முல வித்தாய்
உள்ளமே உணர்வின் தோற்றம்
உள்ளமே எவைக்கு மாற்றல்
வழங்குறும் தன்மை யோங்கும்
உள்ளமே விண்ணும் மண்ணும்
உணர்த்துறு மாற்றல் நல்கும்
உள்ளமே சிலங் கூட்டும்
மெய்யுணர் வறிந்து 405

உளமுறுந் திறத்தை யாய்ந்தே
மனிதமா நெறியுங் கூர்ந்து
வளமதி யுணர்வே யாங்கி
வாழ்வியற் கலையே யாய்ந்து
தளர்விலா மதிபெற் றோங்கித்
தன்னிலை யுணர்த்தி நாளும்
வளமதி யுணர்வே வோங்க
வகுத்துறும் வாழ்வே காண்பீர் 406

பிறப்புறும் மனித யாக்கைப்
பெருநிலைப் பேறே யாகி
சிறப்பினா லுற்று ணர்ந்தே
தெளிமொழி ஒமெ முத்தை
சிறப்புறக் கண்டு தேர்ந்தே
மறைமொழி நுட்ப மாய்ந்து
அறப்பெருஞ் செயல்பு ரிந்து
காலத்தை வெல்லு விரே 407

காலத்தை வெல்லு மாற்றல்
கடும்உழைப் பியலா லன்றே
சிலத்தா லுணர்ந்து லுணர்ந்து
செய்முறை யியலும் நோக்கி
ஞாலமும் விண்ணு மோர்ந்து
நன்னெறித் திட்பங் கண்டே
சிலமா நெறியி னாலே
திருநெறி யுணர்வீர் நன்றே 408

விழிப்புணர் வொன்றி னாலே
வெற்றியும் நாளும் கூடும்
விழிப்புணர் வுற்ற எண்ணம்
பெருஞ்செயல் வெற்றி கூட்டும்
விழிப்புணர் நிலையே யோங்கி
உளத்தியற் கலையு மாய்ந்து
விழிப்புணர் நெறிமா றாமல்
அகவெளி நோக்கு விரே 409

அகவெளி நோக்கு ணர்ந்து
ஐம்புல நெறிச்செ லுத்தி
மிகுமொளி யுணர்க லைக்கண்
மேவுறுந் திறத்தி னாலே
புகுமொளி புனிதத் தன்மை
பேரொளி சுடரு மாய்ந்தே
தகுமொளி யாற்ற லாலே
தன்னிலை யாய்விர் நன்றே 410

உயிர்ப்புறு முணர்வே யாற்றல்
உயிர்க்குல நெறியே சீலம்
உயிர்நெறி மனிதத் தேற்றம்
உயிர்ப்பொரு ளுண்மை யோர்ந்து
உயிரியல் நுட்ப மாய்ந்தே
உயிர்க்கரு மூலந் தேர்ந்து
உயிருணர் வுற்றுக் கண்டே
ஒளிநிலைக் கலையைக் காண்பிர் 411

எண்ணியல் ஐந்து ணர்ந்தே
ஐந்நெறி மூலத் தாய்ந்து
விண்ணியற் கலைத்தி றத்தால்
பொருந்துறும் திட்பங் கூர்ந்து
எண்ணிலை எண்மொ ழிக்கே
விண்மொழி ஓசை யாய்ந்து
உண்ணிலை உணர்வின் நோக்கால்
ஒருநிலை உவப்பாய் காண்பிர் 412

உள்ளமே களமே யாகி
　　உணர்வுறும் போரி னாற்றல்
வெள்ளமா யிலங்கி நாளும்
　　மேவுறும் தன்மை நோக்கி
கள்ளமில் லாது நாளும்
　　பெருநெறித் திறத்தி னோங்கி
விள்ளவில் லாத தேற்றம்
　　பேருணர் வுற்றுக் காண்பீர் 413

பேருணர் வுற்று ணர்ந்தே
　　பெருநெறி முலம் நோக்கிச்
சீருணர் வோங்கி யாங்கண்
　　திருநிலை முன்னி யுன்னி
ஒருணர் வாற்ற லாலே
　　அண்டமும் பிண்ட மோர்ந்தே
நேருணர் கலையி னாலே
　　ஓம்மொழி மறையை யாய்மின் 414

ஓம்மொழி மறையி னாலே
　　மறையியல் தேற்ற மாகித்
தேமொழி யியலா யாய்ந்தே
　　சீர்மொழி யுண்மை யாலே
மாமொழி மறையின் நுட்பம்
　　மறைக்கலை யியலின் திட்பம்
ஓம்மொழி ஓசை யாகி
　　ஒளிநிலை நுட்பங் காட்டும் 415

நுட்பமா ஒலியி னாலே
　　நுவலருங் கலையு ணர்ந்தே
திட்பமா யியலி னாலே
　　செறிநிலைச் சீருந் தேர்ந்தே
ஒட்பமாக் கலையின் தேற்றம்
　　உயிர்க்கலை நெறிவ குக்கும்
பெட்புறும் ஒமொ லிக்கே
　　ஒலியிசை யசையுங் கூடும் 416

கூடுமா நெறியி னாலே
குறித்துறுங் கலையுங் கூடும்
கூடுமா நெறியி னாலே
சிற்றவை யியல்வ தாகி
தேடுமா நெறியின் நோக்கால்
சீர்நிலை நெறிவ குக்கும்
நாடுமா நெறிக்க லைக்கே
திருநெறி யியலு மன்றோ 417

ஒண்கலைக் கால மோர்ந்து
ஒளிநிலைத் தன்மை யோங்கி
எண்கலை ஐந்நி லைக்கே
இயல்மறை யொளியுங் கூடும்
நுண்கலை நுணுக்கங் கண்டே
நுவலரும் குறித்தள் மைத்தாய்
விண்கலை ஒளிக்க ளாய்ந்து
விழிப்புறு முணர்வே ஓர்மின் 418

எழுங்கதிர் காலங் கண்டே
எண்ணிலை ஐவ கைச்சார்
எழுமுணர் வுற்று நோக்கி
இயலுறும் ஐங்கு டிக்கே
எழுநிலை யாக்க நோக்குற்
றுணர்வுறுந் திறத்தி னாலே
எழுநாடி நிலையுற் றாய்ந்தே
எண்ணிலைக் கலையு மாய்மின் 419

கதிர்க்கலை நெறியா லாய்ந்தே
கதிரொளி எழுச்சி கண்டே
மதியொளித் திறமுற் றாங்கண்
வளமதி யியலுங் காலை
விதிமுறை மாற்றி ஊழை
வெல்லுறும் திறமே யோங்க
மதியொளி நோக்கிக் கண்டு
ஓம்மறை ஆய்மின் ஆய்மின் 420

ஓம்மறை யுரைத்த னாலே
    ஒருநிலை யுணர்வே கூடி
மாமறைப் பொருளுந் தேர்ந்தே
    மெய்யியல் உணர்ந்து ணர்ந்து
ஓமியல் திறத்தி னாக்கும்
    ஒருபொரு ளியலு மாய்ந்து
ஓம்மறை யியலுங் கூர்ந்து
    நெறிக்கலை நிலையு மாய்வாய் 421

எட்டியல் கலையெ ழுத்தே
    எண்ணுறைப் பொருளே தேர்ந்து
எட்டுறும் எட்டெட் டால்
    இயல்நிலைத் தன்மை யாய்ந்து
எட்டுறும் கால நுட்பம்
    விரைந்தியல் சூழலும் மாய்ந்து
திட்டுறும் ஐங்க லைக்கே
    சீர்நெறி ஆய்மின் ஆய்மின் 422

ஓங்கலை நிலைய றிந்த
    ஒருபொரு ளுண்மை தேர்ந்து
ஓமியல் திறத்தி னாலே
    ஓவியக் கலையு ணர்ந்து
ஓமுறும் பொருள்தி றத்தால்
    ஆடலான் கலையும் எண்ணி
ஓமெழுத் தியலே யாகி
    மெய்க்கலை விளக்கு மன்றே 423

முழுமுதல் மூல மாகி
    முப்பொருள் முக்க லைக்கே
தெழும்பொரு ளுயிர்ப்பு மாகி
    திருநெறிக் கலையே யாகி
எழுங்கதிர் ஒலியி னாற்றல்
    எரிபுனல் காற்றும் விண்ணின்
தெழுநிலை கலைத்தி றத்தால்
    ஐம்பொருள் நெறிய ளிக்கும் 424

உறுசுடர் நெறியே யாகி
　　உன்கலைத் திறமு மாய்ந்து
அறுசுடர் மூல மாக்கும்
　　ஐங்குடி நிலையுங் கூர்ந்து
உறுபொருள் மையப் புள்ளி
　　மூலமும் இரிந்தி லங்கி
உறுகலை யியலி னாலே
　　ஒளிவளி கலையுங் கூடும் 425

இயல்நெறி மூல மாகி
　　உயிர்க்கலை நிலையே யாகி
உயிர்ப்புறத் தன்மை தேர்ந்து
　　ஒளியிலாப் பொரு ளுணர்ந்து
செயிரறு திறத்தி னாலே
　　செம்மறை மூல மாய்ந்து
உயிர்க்கரு மூலங் கண்டு
　　கருமூலத் தியலை யாய்ந்து 426

ஒருமூலத் தன்மை யாலே
　　ஒன்றிரண் டைந்தே யாகி
உருமூலத் தியலி னாலே
　　எட்டுறு மாறே யைந்தாய்
பெருமூலத் தியலி னாலே
　　பேரொளி சுடர்ப்பி றங்கி
அருமூலத் தியலும் கண்டு
　　ஐந்நெறித் திறனைக் காண்பின் 427

ஓம்கலை மூல நுட்பம்
　　ஒருநிலைக் காலத் தாலே
ஓம்மறை பொருளின் நுட்பம்
　　இருநிலை ஐங்க லைக்கே
ஓம்பொரு ளுண்மை தேர்ந்து
　　அண்டமா உச்சிக் கண்டே
ஓம்நெறி முழுது மாய்ந்து
　　நெறிமுதற் பொருளு மாய்ந்து 428

நெறிமுதற் கலைய னைத்தும்
நீளவே நிறைந்து நோக்கி
குறிமுதற் பொருளி னுண்மை
குறித்துறுங் குறியி னாற்றல்
குறிப்புறுங் குறித்தி றத்தால்
இயல்நெறி முற்று மோர்ந்து
அறிகலை யியலி னாலே
அரும்பொரு ளாய்மின் நன்றே 429

நன்றுறும் காலத் திட்பம்
காலமா நெறியா லாய்ந்து
இன்றுறும் ஒளிவிண் காலம்
இமைநாடிப் பொழுத றிந்து
அன்றுறும் மரபி னாய்ந்தே
அருங்கலை காலங் கூட்டும்
தொன்றுதொட் டியலு மாற்றல்
தொன்னெறி மூல காலம் 430

மூலமு முழுது ணர்ந்து
முன்னிலைக் காலம் தேர்ந்தே
சிலமு மியன்ற வாகி
செந்நெறி பொருளும் சேர்ந்து
மூலமாக் கலையின் திட்பம்
முப்பொருள் முந்நெ றிக்கே
காலமு மறிந்து ணர்ந்து
கருத்துருங் கலையைக் காண்பின் 431

எண்மையி னியல றிந்தே
எண்ணுறு மாற்ற லாலே
நுண்மையின் மெண்மை நோக்கம்
நுவலருந் திறத்தின் ஏற்றம்
விண்மையும் ஒளியா லாய்ந்தே
வியனிலைக் கலைத்தி றத்தின்
எண்மையின் மூல நுட்பம்
இயற்கலை ஓமெ மூத்தே 432

ஓமெழுத் தியலின் நுட்பம்
ஒருபொருள் மூலத் தன்மை
ஓம்ஒளி ஒலியுங் கூர்ந்து
மெய்மையா மியல றிந்தே
ஓமுறு மோசை யாற்றல்
நிலைகலை நுட்பத் தாலே
ஓம்கலை முறைய றிந்து
மறைப்பொரு ளறிதல் நன்றே 433

காலமா நுட்பத் தாலே
களியியல் உண்மை யோர்ந்து
மூலமாத் திட்பங் கண்டே
முப்பொருள் முந்நெ றிக்கே
சிலமாக் கலையுங் கூறும்
தெள்ளுணர் வுற்றுக் கண்டே
ஞாலமும் விண்ணு மாயும்
நற்றிறம் காண்டல் நன்றே 434

ஐம்பொரு ளுண்மை யாய்ந்தே
ஐங்கலை நிலையுங் கூர்ந்தே
செம்பொருள் எண்மைத் திட்பம்
செழும்பொரு ளுண்மை நுட்பம்
செம்மையா நெறித்தி றத்துச்
சீர்நிலை கலையு மாய்ந்து
அம்முதற் பொருளுங் கூறும்
அறிநிலை யியலு மாய்வாய் 435

அண்டமா யியலி னாய்வால்
அறிவுறும் கலையுங் கூறும்
பிண்டமா யியலி னாய்வால்
பேரண்ட தன்மை கூட்டும்
எண்டல மியங்கு முண்மை
இயலுறுந் தன்மை யாலே
விண்டல மூலத் தாற்றல்
விளங்கும் பொருளே யன்றோ 436

உள்ளமே எவைக்கும் மூலம்
உள்ளுதல் தன்மை கூட்டும்
உள்ளமே நெறியுங் காட்டும்
ஒருபெரும் வைய மாகி
உள்ளமே வின்னுந் தோற்றும்
ஒளிவெளி நிறைந்ததாகி
உள்ளமே கலைதெ ரிக்கும்
ஒருபெரு மறிவன் அன்றோ 437

உள்ளமே விரத் தன்மை
ஒங்குறு மாற்றல் நல்கும்
உள்ளமே ஈரத் தன்மை
தேங்குறும் பண்ப ளிக்கும்
உள்ளமே கால மூலம்
உணர்ந்துறு மாற்றல் கூட்டும்
உள்ளமே இறைமு லத்தின்
இயவுள்மா நெறியின் கூற்றே 438

உள்ளமே ஒளியுங் காட்டி
விண்ணிலை யியக்கிக் காட்டும்
உள்ளமே அறுநி லத்தின்
நெறிமுறை யியலுந் தோற்றம்
உள்ளமே ஐங்கு டிக்கூர்
செந்நெறி ஆக்கங் கூட்டும்
உள்ளமே எண்ணெண் ணாற்றல்
நிலைபெறுந் தன்மை ஒங்கும் 439

உருவமா யியலுங் கூட்டி
ஒளிஒலி யாக்கிக் காட்டும்
திருவுருத் தன்மை தோற்றி
சீரொளி மேவக் கூட்டும்
அருவுருத் தன்மை தோற்றும்
ஐயொளி நிலைமுன் னாய்ந்தே
உருக்கலை ஒளியுங் காட்டும்
உள்ளமாத் தன்மை யாய்மின் 440

எண்ணமும் செயலும் கூட்டும்
இயல்வினை நெறியுங் கூட்டும்
திண்ணமும் எழுச்சி தோற்றும்
சீர்வினைத் தன்மை யாக்கும்
எண்கலை யியலி னாலே
எண்ணெண்மாத் திறனுங் கூடும்
எண்முறை யியற்ற லாலே
கலைத்தி னுண்மை யோங்கும் 441

பொறிபுலன் நிலையை யாய்ந்தே
புலனெறித் தன்மை கூர்ந்து
நெறியியல் முற்று ணர்ந்து
குறிநிலை மாறா வண்ணம்
அறிகலை யுணர்வி னாலே
அறிவுறும் முயற்சி யுற்றே
குறிநிலைக் கலைத்தி றத்தால்
கலைநிலை யுணர்தல் காண்மின் 442

உள்ளுளே உணர்ந்து ணர்ந்தே
ஒருபொருள் நிலையாய்க் கூர்ந்தே
விள்ளுணர் கலைத்தி றத்தால்
மேவுறும் மூல நோக்கின்
தெள்ளுறு மெண்மை தேர்ந்தே
விண்மையும் சீரி யற்றி
உள்ளுறு மாற்ற லாலே
பெரும்பயன் நிலையுங் கூடும் 443

கட்புல னாகாத் தன்மை
கருத்துறும் மூல வாக்கம்
விட்புல நெறியா வண்ணம்
வியநிலை யியலுங் கூடும்
எட்டுறு மியல றிந்தே
எண்மையின் நுண்மை யாய்ந்தே
தெட்டுறும் சீர்க லைக்கே
திருநெறி மூல மன்றோ 444

ஆடலான் நிலைய றிந்தே
அரும்பெருங் கலைய றிந்து
ஆடலா னிசைக்கூ ராக்கம்
நடத்தியல் வையத் திண்மை
ஆடலான் விண்ணின் நோக்கு
தென்றிசைக் காண்டல் நுட்பம்
ஆடலான் உருத்தோற் றத்தால்
ஓமுறும் கலையே கூட்டும் 445

ஓம்கலை நெறியி னாலே
பெரும்பொரு ளாற்றல் கூடும்
ஓம்கலை யியலி னாலே
நெறியுணர் தன்மை யோங்கும்
ஓம்நெறி மூலத் தன்மை
வையமா நெறியுங் கூட்டும்
ஓம்குறி காலத் தன்மை
விண்ணிண்மா நெறிய மைக்கும் 446

நெறிமுதற் பொருளு மாய்ந்தே
நிலைகலை முற்று ணர்ந்தே
அறிவியல் கலைத்தி றத்தும்
அருளியல் நெறித்தி றத்தும்
செறிமுதற் பொருள னைத்தும்
`சீர்நெறி யியலுங் கண்டே
அறிகலை யுண்மை நுண்மை
எண்ணிலைக் கலையே கூடும் 447

எண்கலை மாநெ றிக்கே
சிற்றவை யியலுங் கூட்டி
நுண்கலை நுணுக்கத் தன்மை
நுவலரு மாற்ற லாலே
விண்கலை யுணரு மாற்றல்
விரமாத் தன்மை யோங்கி
கண்கலை நுட்பத் தாலே
கலைநிலை ஏற்றங் காண்பாய் 448

புருவமா நடுச்சி றக்கும்
பொன்னொளி உள்ளூற் றோர்ந்தே
கருத்துற நோக்கி யாங்கண்
கலைநிலை முழுது ணர்ந்து
திருவுறும் திறத்தி னாலே
அறுநிலைத் தன்மை யாய்ந்து
உருவுறும் ஆட லானின்
ஒளிநிலை யியலுங் காண்பாய் 449

எண்முறை எண்க லைக்கே
எட்டியல் நுட்ப முலம்
விண்முறை நெறியு மாய்ந்தே
விரமாக் கலைத்தி றத்தால்
திண்முறை புலனின் ஆற்றல்
சீருரத் தெரிந்து ணர்ந்தே
எண்முறை யியலி னாங்கண்
இயலியல் அறியக் காண்பாய் 450

<u>வேறு</u>

விண்ணின் மாநெறி விர மாநெறி
வியனு ணர்க்கலை யாக்கமும்
எண்ணின் மாநெறி யியலின் மாநெறி
எழுத ருங்கலை தேக்கமும்
கண்ணு னாய்தரும் கலைத ரும்நெறி
கருத்து ணர்க்கலை யாற்றலும்
பண்ணு னோங்குசீர் பேரி சைக்கலை
ஒம்நெ றிக்கலை மாமறை 451

மாம றைக்கலை எண்பெ ருங்கலை
மாநெ றித்திறன் நோக்கமும்
மாம றைக்கலை திருநெ றித்திறன்
சீர்நெ றித்திற னாக்கமும்
மாம றைக்கலை யாக மத்திறன்
மாநெ றித்திறன் நுட்பமும்
ஓம்ம றைக்கலை ஓம்நெ றிக்கலை
ஓமு றுங்கலை நுட்பமே 452

நுட்ப மாக்கலை நுவலு மாக்கலை
நுவல ருங்கலை யின்பமும்
திட்ப மாக்கலை சீரி யற்கலை
தேட ருங்கலை சீர்மையும்
பெட்பு றுங்கலை பேச ருங்கலை
பெருத்த மாநெறி நேர்மையும்
ஒட்பு றுங்கலை ஒளியின் மாக்கலை
ஓம்கலை மறை யாக்கமே 453

உயிர்க்கு லத்திறன் உயிர்நெ றித்திறன்
உள்ளு ணர்மதி யூக்கமும்
செயிர றுங்கலை சீர்பெ றுங்கலை
தெள்ளு றும்நிலை நோக்கியே
உயிர்ப்பு றுந்திறன் உண்மை மாநெறி
ஒங்கு சீர்க்கலை உணர்ந்துசீர்
உயிர்நெ றித்திறன் ஓம்க லைத்திறன்
ஓம்ம றைக்கலை உண்ணுவீர் 454

ஓம்ம றைக்கலை ஓம்ம றைநிலை
ஓம்ம றையொலி உண்ணியே
ஓம்நெ றிக்கலை உணரு மாநிலை
உள்ள மேநிலை யுணர்வினால்
ஓம்இ யற்கலை ஓம்இ சைக்கலை
ஓம் ருத்திற முன்னியே
ஓமு றுந்திறன் நிலையு றுங்கலை
ஒளிக்க லையியல் நோக்குமே 455

உள்ளூறு முணர்வி னாலே
ஒருநிலை மூல மாய்ந்தே
விள்ளூறும் பொருளு ணர்ந்து
மறைமொழி யியலுந் தேர்ந்தே
உள்புலப் பகைத விர்த்தே
ஒருபெரும் நெறியி னோங்கி
உள்ளூறும் முறையி னாலே
அகவெளி நோக்குற் றாய்வின் 456

அகவெளி நோக்குற் றாங்கே
அறுநிலைத் துண்மை யாய்ந்தே
மிகுமொளிப் பேரொ ளிச்சீர்
சுடரொளி யியலுற் றோர்ந்தே
புகுமொளித் திண்மை யாற்றல்
வண்மையும் நுண்மைச் சீலம்
உருநிலை நிர்சீர் நாட்டம்
உற்றுறும் தன்மை காண்பீர் 457

இருவழி நோக்குற் றாய்ந்து
எண்ணிலைக் கலையின் மூலம்
பெருவிழித் திறமுன் னோக்கி
பெருங்கலை நுட்பங் காண்டல்
பெருநிலைக் கலையின் மூலம்
இயல்புறும் மூல மோர்ந்து
ஒருநிலை ஐங்கு டிக்கண்
அறுநிலைத் தியலு மாய்மின் 458

எரிதழல் இயலே கண்ணுற்
றெரியியல் மூல மாய்தல்
எரிநிலைச் சுடரொ ளிக்கே
யியலுறு மாற்றல் கூடும்
எரியொளி யியலி னாலே
வெளியொளி தேற்றம் தேர்ந்து
எரிதழல் அனலி னாற்றல்
எண்ணியல் இயம்ப லாமே 459

மூலமாத் தழலி னாலே
அணலெரி கூடு மாற்றல்
மூலமாத் தழலி னாலே
தணலெரி யியலும் தேற்றம்
மூலமாத் தழலி னாலே
அறுநிலைத் தாத ரத்தும்
காலமா நெறியும் மூச்சால்
கணக்குறுங் கலையே கூடும் 460

காலமா நெறி யக்கிக்
　　கணங்கண மியலு மாற்றல்
காலமா நெறித்திட் பத்தாய்
　　காலமா நுட்பங் கண்டே
மூலமும் பொருளு மாய்ந்தே
　　முன்னிய ஐங்கு டிக்கூர்
சீலமும் தெரிந்தி யற்றும்
　　செந்நெறி யியலுங் கூடும் 461

எண்கலை நிலைத்தி றத்தால்
　　இயலுறு முண்மை தேர்ந்தே
விண்கலை நிலைத்தி றத்தும்
　　ஆடலான் நெறியின் நோக்கி
தெண்கலை உளக்கூர் நுட்பம்
　　சீரறி வுற்று ணர்ந்தே
பன்னியல் முறைமை யாய்ந்தே
　　பெருங்கலை ஆய்தல் காண்மின் 462

ஐந்தியல் அணுக்கூ ராக்கம்
　　நெறிமுறை யற்று ணர்ந்தே
வந்துறும் மூல காலம்
　　வகையொலி யற்றுக்கூ ரறிந்து
முந்துறும் நொடிக்கா லத்தும்
　　இமைநிலை யறிந்து ணர்ந்தும்
தந்துறுங் காலத் திட்பம்
　　கருநிலை யியலே கூட்டும் 463

உள்ளொளி ஓம்தி றத்தின்
　　ஒருநிலை உருவு ணர்ந்து
உள்ளொளி ஓம்தி றத்தின்
　　ஒருவலி ஒளியுங் கேட்டு
தெள்ளொளி யிசையி னாலே
　　சீர்நெறி எண்ணெண் ணாற்றல்
விண்ணொளி உயிர்ப்புத் தன்மை
　　விளம்பலாம் தன்மை தாமோ 464

கடுவினை புரியு மாற்றல்
காலமா நெறித்திட் பத்தால்
அடுவினை புரிந்து ணர்ந்தே
ஐந்நிலை நெறியு மாய்ந்து
கடுவினை யாற்ற லாலே
மனிதமா உடலொ ளித்தான்
விடுவினை நெறியின் மூலம்
விளம்புறு மாற்ற லன்றோ 465

மனிதமா நெறியி னாலே
மாக்கலை நெறியு ணர்ந்து
மனிதமா யியலு மாய்ந்து
அண்டமாத் தன்மை யோர்ந்து
மனிதமாத் திறத்தி னாற்றல்
அண்டமும் படைத்தல் கூடும்
மனிதமா யியலி னாலே
அகவெளி சிறக்க ஆய்மின் 466

அகவெளி நன்கு ணர்ந்தார்
அண்டமும் படைத்துக் காண்பர்
அகவெளி ஒலியு ணர்ந்தோர்
மெய்ந்நிலை உறுதி காண்பர்
அகவெளி யியலி னாலே
மெய்த்திற வலிதல் கூடும்
அகவெளி மூல நுட்பம்
அறிவர்மா நெறியே யன்றோ 467

மாநெறிக் கலையின் நுட்பம்
மதியியற் கலையின் திட்பம்
தூநெறி யாற்ற லாலே
சுடரொளி யியலு மாற்றல்
மாநெறி நுணுக்கங் கண்டே
ஆறுபத் துற்ற நான்கே
மாநெறி மாமு லத்தின்
இயல்நிலை யுணர்ந்து மன்றே 468

எண்முதல் கலையின் நுட்பம்
எழுத்தியல் பொருளுந் திட்பம்
கண்முதல் ஐந்துங் காண்டல்
கலைநெறி யியக்கங் கூட்டும்
விண்முதல் ஐந்தின் நுட்பம்
வியநிலை மூலத் தாலே
ஒண்முதற் பொருளா லாய
ஓமெழுத் தொலியே யன்றோ 469

ஓமெழுத் தொலியி னாற்றல்
ஓமொலி யோசை நுட்பம்
ஓமுறுங் கலையின் மூலம்
ஒருபொரு ளியலு மாய்ந்தே
ஓம்பொருள் மூலத் தாலே
செம்மைமா நெறிசி றந்து
ஓம்கலை விண்ணொ ளிச்சார்
ஒருகலை யியலுங் கூடும் 470

எண்ணிலை உடலு றுப்பின்
எண்ணள வியலுங் கூடும்
எண்முறை பொறிமு தற்றே
ஐம்புலன் நிலையுஞ் சாரும்
எண்ணெறி யாக்க மன்றோ
எண்ணியல் நெறிவ குத்து
எண்ணெறி மூல மைந்தும்
இயக்கலும் இயக்க லன்றோ 471

அரும்பொரு ளைந்து ணர்ந்து
ஐம்பொருள் நெறித்தேக் கத்தால்
பெரும்பொருள் வண்மை எண்மை
பேசரும் கலைத்தி றத்தால்
கருப்பொருள் மூலத் தாலே
கலைநிலைத் திட்பம் எண்ணி
பருப்பொருள் மூலங் கூட்டும்
பெருநிலைத் தன்மை கூறும் 472

அகவெளி நோக்கு ணர்ந்து
ஐம்பொருள் நுட்பம் தேர்ந்தே
அகப்புறத் தியலு மாய்ந்து
எண்ணிலைக் கலையுங் கூர்ந்து
மிகுமொளித் திறத்தி னாலே
மெய்நிலை யியலா லாய்ந்து
தகுமொளி யியற்கூற் றாய்ந்தே
தன்னிலை மறையு ரைக்கும் 473

ஐந்தெழுத் துண்மை யாயின்
அணஉ எஒ என்றே
முந்துறும் முறையா லாய்ந்து
நாற்புறத் தோன்றுங் காலை
வந்துறும் மூல நுட்பம்
ஓமெழுத் தியலு மாய்ந்து
செந்தமிழ் ஐந்தெ ழுத்தால்
சிற்றவை யியலு மன்றே 474

சிற்றவை ஐந்தெ ழுத்தால்
சீர்நெறி யியலக் கூர்ந்தே
உற்றவை மூல காலம்
காலமூ லத்தை எண்ணி
தெற்றுறு மாட லானின்
உள்ளச்சே யொளியே யாகி
பெற்றுறும் ஆற்ற லன்றோ
பிரணவ மூல மன்றோ 475

ஓமெனு மொலியு ரைத்துப்
பேருணர் வோங்கி நாளும்
ஓமெனும் திறத்தி னாலே
பேரறி வியலு மோங்கும்
ஓமெனுங் கலைத்தி றத்தை
உணர்மதித் திறத்தி னாலே
தாமெனும் செருக்கு நீங்கி
தன்னிலை வண்மை யோங்கும் 476

ஊழ்வினை நீக்கு தற்கும்
உள்ளமா கிளர்ச்சி யோங்கி
வாழ்வினை யெய்து தற்கும்
வளமதி ஒளிகண் டோங்கி
சூழ்வினை தவிர்த்தி ருங்கண்
சுற்றிய துன்பம் நீங்க
ஏழ்நிலைக் கலைய ளிக்கும்
ஓம்ஒளி யுணர்தல் நன்றே 477

ஓம் ஒலி ஒலித்துக் கண்டே
உள்ளொளி பெற்றி லங்கி
ஓம்ஒலி கேட்டு ணர்ந்தே
தெள்ளொளி சீர்மை யெய்தி
ஓம்ஒலி ஓசை யுண்மை
இசைநிலைக் கலையு ணர்ந்தே
ஓம்உருத் தோற்றங் கண்டே
ஓம்ஒளி காண்டல் கூடும் 478

ஓம்ஒளி ஆட லானின்
அருளுருத் தோற்ற மாகி
ஓம்ஒலி ஆட லானின்
அசைநிலை யோசை யாகி
ஓம்ஒலி முருகின் ஆற்றல்
இசைநிலை ஒலியே யாகி
ஓம்கலை மூல மாகிப்
பெருமறை விளங்கு மன்றே 479

உள்ளுயிர்க் கலையே யோங்கி
ஒருபொருள் எண்மை கூட்டும்
தெள்ளுயிர் ஒளியா லோங்கிச்
சீர்நெறித் திருநெ றிக்கே
விள்ளுமோ ரறிவி னாலே
மெய்ப்பொரு ளுவந்து கண்டு
தெள்ளுமாத் தமிழ்ச்சி றக்கும்
ஓம்மறை யுணரு விரே 480

ஓம்மறை மூல நுட்பம்
உயிருணர் வளித்துக் காக்கும்
ஓம்மறை சீலத் திட்பம்
உள்ளுணர் நோக்கு றுத்தும்
ஓம்மறை கால நுட்பம்
உண்மையும் எண்மையு மாய்ந்தே
ஓம்மறை ஞால விண்ணாய்
மெய்மையும் உணர லாமே 481

ஓம்மறை யாக மத்தே
மெய்ம்மையா யுணர்ந்து கூர்ந்து
ஓம்மறை யியலின் கூற்றாய்
உறுப்பியல் ஆறுந் தேர்ந்து
ஓம்மறை காலக் கூற்றாய்
காலமா நுட்ப மோர்ந்து
ஓம்மறை சீல மன்றோ
ஒருபொரு ளுணர்ந்து மன்றோ 482

முருகொளி மூல மாகி
மும்முதற் பொருளு மாகி
முருகொளி கால மாகி
மெய்க்கலை நுட்ப மாகி
முருகொளி ஆட லானின்
மூலமு மாகி வோங்கும்
முருபொளிர் ஒளிவி ளங்கும்
ஓம்மறை யுணரு வீரே 483

ஓம்மறை படைத்த ளிக்கும்
பெருங்கலை யுண்மை தேர்ந்தே
ஓம்மறை உயிர்ப்பா லோங்கும்
பெரும்பொரு ளெண்மை யுண்ணி
ஓம்மறை காலங் கூட்டும்
வன்மையு மியலு ணர்ந்தே
ஓமுணர் உள்ளத் தாலே
உணர்ந்துறுந் தன்மை கூட்டும் 484

ஓம்கலை நெறியி னாலே
பற்பல நெறிகள் கூடும்
ஓம்மறை யியலி னாலே
பற்பல மறையுந் தோன்றும்
ஓம்ஒளி யியலி னாலே
பல்லுருந் தோற்றங் கூட்டும்
ஓம்ஒளி யிசையி னாலே
பல்கலை மொழியும் தோன்றும் 485

கலைமொழி யுண்மை கூட்டும்
கருப்பொருள் வண்மை நாட்டும்
நிலைமொழி எண்மை தேக்கும்
நெறிப்பொருள் தொன்மை கூட்டும்
தலைமொழி ஒளிஒ சைக்கே
தன்னிலை நெறியு மாய்ந்தே
அலையிசை ஒசை யாலே
அருமறை முல மாய்மின் 486

மறைமொழி யுணர்ந்தெந் நாளும்
மாத்தமி ழியலு மாய்ந்தே
நிறைமொழி ஒசை யாலே
நெறிக்கலைத் திறமுற் றோர்ந்தே
அறைமொழி ஒமெ முத்தின்
அணியுறும் எண்மை கூர்ந்தே
நிறைமொழிச் சிறப்பி னாற்றல்
நெறிமுறை காண்டல் கூடும் 487

உள்ளுளே ஒமெ முத்தை
ஒளியுணர் கண்டு ணர்ந்து
உள்ளுளே ஒமெ முத்தை
ஒலிபெறக் கேட்டு ணர்ந்து
உள்ளுறு மாற்ற லாலே
மெய்ப்பொரு ளியல றிந்தே
தெள்ளுறும் கலையின் கீர்த்தி
சீர்நிலை யறிய லாமே 488

கலைநெறி யொன்ப தாலே
கவினிலை நுட்ப மோர்ந்து
நிலைநெறி முலத் தாலே
ஓமியல் தன்மை எண்ணி
தலைநெறி யியக்கத் தாலே
தனிமொழி யாக்க முன்னி
மலைநெறி யியன்ற வண்ணம்
மறைநெறி வகுக்க லாமே 489

மறைநெறி வாழ்நெ றிக்கே
வளம்வகுத் தியலுங் கூறும்
மறைநெறி ஓமு தற்கே
மெய்ப்பொரு ளியலுங் கூறும்
மறைமொழி ஒமென் றுன்னி
ஓம்கலை யாற்ற லாலே
நிறைமொழி யியல றிந்து
நெறிமுறை காண்பிர் நன்றே 490

உயிர்க்குலம் வாழ்வ தற்கே
ஓமியல் ஓசைக் கூறே
உயிர்நெறி தழைப்ப தற்கே
மெய்யியல் நிலையுங் கூடும்
உயிர்முறை யுண்மை யோர்ந்து
எண்ணிலைக் கலைவ குத்து
உயிருறு மாற்ற லாலே
உயிர்முலம் காண்டல் நன்றே 491

நல்லுயிர் நிலைய றிந்து
தொல்லுயிர் முல மோர்ந்து
பல்லுயிர் செழிப்ப தற்கே
பகரரு முண்மை யாலே
தொல்நெறி மாறா வண்ணம்
சீர்நெறி நிலைவ குத்து
தொல்கருப் பொருளு ணர்ந்து
மெய்யியல் காண்டல் கூடும் 492

கருப்பொருள் நிலைய றிந்து
கருத்துறு மாற்ற லாலே
பருப்பொருள் கலைய றிந்து
பாங்குறும் வண்ணம் தேர்ந்து
அரும்பொருள் மூலத் தன்மை
ஐம்பொரு ளியலி னாலே
வரும்பொருள் காலத் தன்மை
வகுத்துறும் ஆற்ற லாய்மின் 493

எண்ணிலை யியற்க லைக்கே
எண்முறைக் கணக்கி னாலே
விண்ணிலை ஒளியின் கூற்றால்
வியனிலை மூலத் திட்பம்
தெண்ணிலைக் கலைக்கூ ராக்கம்
செழுமுறை யியலா லாங்கண்
உண்ணிலைத் தரிய யோர்ந்தே
ஒருநெறி யியலு மாய்மின் 494

காலமே உயிர்சி றக்கக்
கலையளி வண்மை கூட்டும்
காலமே முயற்சி நல்கும்
காலமு லத்தி னாற்றல்
மூலமா நெறியி னாலே
முந்நெறி யியலுந் தேர்ந்தே
ஞாலமும் விண்ணுங் கூட்டும்
ஓம்மறை நுணுக்கங் காண்பாய் 495

அண்டமு மண்ட கோளம்
அண்டபே ரண்டத் தாற்றல்
பிண்டமும் பிண்ட மூலம்
உயிர்ப்புறும் தன்மை யாற்றல்
எண்டலம் இயல்வி ளக்கும்
இன்கலை மூல நுட்பம்
மண்டலத் தியலும் கூறும்
ஓம்மறை யியலே யன்றோ 496

ஒளியினால் ஒலிய றிந்து
ஒளிஒலி யியலுந் தன்மை
ஒளிவெளி மூலத் திட்பம்
வெளிஒளி மூல நுட்பம்
ஒளியியற் கலைத்தி றத்தில்
ஒண்மையின் நன்மதித் தன்மை
வெளிவொளி வான்நி லைக்கே
விளக்கமும் விளம்பு மன்றே 497

கருத்துறக் கருது மாற்றல்
கருத்துணர் விரத் திண்மை
பெருமதி யொளியி னாலே
பேசரு மாற்றல் வண்மை
ஒருமதித் திறத்தி னாலே
ஒங்குபே ருணர்வுங் கூடும்
அருமதி யாற்றல் நல்கும்
அரும்பிர ணவமே யன்றோ 498

எண்ணுதற் கரிய வண்மை
இயம்புதற் கரிய ஆற்றல்
நண்ணுதற் கரிய லாகி
நெறிமுதற் பொருளு மாகி
விண்முதற் பெருந்தி றத்தின்
விளக்குமா மறையே யாகி
கண்முதற் பொருளுங் கூட்டும்
பெருமறை பிரண வச்சீர் 499

சீர்மறை பிரண வத்தால்
தெளிவுறு மாற்ற லோங்கி
நேர்மறை வைய மூலம்
நிகழ்நிலை அண்ட கோலம்
தேர்முறை கோள்கள் விண்மின்
செப்புதற் கரிய உண்மை
ஏர்முறை விளக்கங் கூட்டும்
எழில்பிரண வத்தி னாற்றல் 500

பகரரும் பொருட்க ளெல்லாம்
மறைபொருள் என்று ரைத்தே
புகலுதற் கரிய வண்ணம்
பெரும்பொருட் சொற்க ளாலே
அகத்துணர் வுற்ற வண்ணம்
பரம்பொருள் நலையென் றாகி
அகத்துணர் வுயிரு மாயும்
அருமறைப் பொருளே யன்றோ 501

பிறப்புயிர் தன்மை கூறும்
சிறப்புயிர் தன்மைச் சீரும்
பிறப்பிறப் பில்லாத தன்மைப்
பேருயிர் ஒளியின் சீரும்
அறமதி யாகிடு மாற்றல்
அருளொலிச் சுடரின் சீரும்
திறமதி யாற்ற லாலே
செப்புசீர் பிரண வத்தே 502

பிரணவ முணர்ந்து போற்றும்
பெருமதித் திறத்தி னாலே
பிரணவ வொளியுங் காண்பர்
பிரணவ ஒலியுங் கேட்பர்
அருளுறுந் தன்மை யோங்கும்
அறிவிலாத் தன்மை பெற்று
முரணுறா வாழ்வி லோங்கி
முன்னிய யாவுஞ் செய்வாய் 503

உயிரெலாம் படைக்கு மாற்றல்
உளர்வுறும் கலையு மோங்கும்
செயிரெலாம் நீக்கு மாற்றல்
திருநெறிக் கலையுங் கூடும்
உயிர்க்குலம் படைக்கு மாற்றல்
ஓம்மறை நெறிவ குக்கும்
உயிர்நெறித் தன்மை கூட்டும்
பிரணவ நெறியே யன்றோ 504

செந்தமிழ் மூலத் தாற்றல்
ஓம்மறை யியலே யாகி
செந்தமிழ் இசைத்தி றத்தும்
ஓம்மறை மூல மாகி
செந்தமிழ்க் கலைத்தி றத்தும்
செழுங்கலைச் சீர்மை யோங்கும்
வந்ததொல் பிரண வத்தின்
வானிசை ஒளியே யன்றோ 505

வானியல் ஓசை யாகி
வகுத்துறு மொளியே யாகி
தானியல் ஒலிம ருங்கின்
தன்னிலை எழுத்து மாகி
வான்நெறி முதலா லைந்தும்
வகுத்துறும் மாம றைச்சீர்
வானியல் ஒலிறு மென்றே
வகுத்துறும் நெறியே யாய்வின் 506

சிற்றவை நாற்பு றத்தே
ஐநிலை முறையா லாய்ந்து
உற்றமாக் கலைத்தி றத்தும்
ஐந்தெழுத் தியலே ஓங்கி
தெற்றுணர் கலையா லாங்கண்
சீர்நெறி மூலத் தாலே
உற்றுணர் அகவெ ளிக்கே
ஒருநெறி காண்பின் உய்மின் 507

காலையும் உச்சி மாலை
காலமாப் பொழு துணர்ந்து
நூலுணர் திறத்தி னாலே
நுட்பமா யியலு ணர்ந்து
ஞாலமும் விண்ணும் ஆய்ந்து
நன்னிலை நெறிவ ளர்த்து
கோலமாக் குறிப்பி னாங்கே
குறிமுறை யாய்விர் நன்றே 508

ஒன்றுணர் திறத்தி னாலே
　　ஒருநெறி மூலங் கண்டே
நன்றுணர் அறுபான் நான்கின்
　　நவையிலாச் சிற்ற லைச்சீர்
தென்திசை முதலா யாங்கண்
　　என்றிசைத் தன்மை யாய்ந்து
அன்றுறும் நிலைக லைக்கே
　　அறுநிலைச் சுடரும் ஆய்மின் 509

அறுசுட ரொளியாய் நோக்கி
　　ஐங்கலை நெறியு மாய்ந்து
உறுசுடர் இயற்றெ ழுந்தே
　　ஒங்குவீர் ஆக்கம் தேர்ந்து
உறுநிலை மூலத் தாலே
　　ஒன்றிரண் டாக்கங் கூட்டும்
பெருநிலை மறைமொ ழிக்கே
　　பேசரும் நிலையே கூட்டும் 510

கூட்டுறும் மனித யாக்கங்
　　குறிப்புணர் திறத்தி னாலே
நாட்டுறும் குறிக்கோ ளொன்றே
　　குறிநிலை மூலந் தேர்ந்து
நோட்டுறும் முறையா லாங்கண்
　　நன்றுறும் காலங் கூர்ந்து
ஈட்டுறும் காலச் சீர்மை
　　எண்ணிலை இயக்கு மன்றே 511

எண்ணிலை இயலு மாங்கண்
　　செந்நெறி மூலத் தாலே
உண்ணிலை முறைக்க லைக்கே
　　ஒருநெறிப் பொருளு மாய்ந்து
தெண்ணிலை காலத் தாலே
　　சீர்நெறிக் கலையுங் கூட்டும்
எண்ணிலை மூல மோங்கும்
　　மூலமாக் கலையு மாய்மின் 512

வேறு

மூல மாக்கனல் எரிநி லைக்கலை
முன்னி யாவு முணர்ந்தபின்
கால மாநெறி கணக்கு மாநெறி
கணக்கியல் கலை யாய்ந்துசீர்
ஞால முங்கலை விண்ணு மாயியல்
நன்று சீர்முறை யாக்கமும்
கோல முங்குறி குறிகு றிந்தபின்
குறிநி லைக்கலை காலமே 513

எழுங்க திர்க்கலை எழுமு னாக்கமும்
எழுநி லைக்கலை யுணர்ந்துசீர்
எழுமின் நாடொறும் வைகறைத் திறன்
எழுமின் வைகறைக் காலமே
பழுதி லாநிலை வைகறைத் திறன்
பாங்கு றும்நெறிக் காலமே
செழுமை சாலுயிர் உணர்வி னாற்றலும்
செழிக்கும் வைகறைக் காலமே 514

கால மேகலை கால மேநிலை
கால வைகறைப் போலுணர்
சீல மாநெறி இலங்க திர்க்கலை
செம்மை மாவொளி கண்டுசீர்
மூல மாநெறி முந்நெறி றிக்கலை
முன்னி முன்னி யாய்வதும்
கோல மாநெறி கதிரெ ழுந்திறன்
குறுக்குமம் வைகறைக் காலமே 515

உயிரெ ழுத்திறன் உணர்வு றுந்திறன்
விழிப்பு றுங்கலைக் காலமாய்
செயிரெ றுங்கலை மூல மாயியல்
சீர்மை மாநெறிநோக்கியே
உயிர்ப்பு றுந்திறன் உணர்வு றும்நிலை
ஒங்கு மாயியல் வைகறை
உயிர்ப்பு றும்பொழு தியல்பெ றும்முறை
ஒங்கும் வைகறைக் காலமே 516

உணர்வுடன் உயிர் உள்ளமும் உடல்
ஒளிசிறக்கு நல்வே ளையாய்
உணர்வாகண் விழித் தெழுந்த மாக்கலை
ஓங்குசீர் நிலை வைகறை
உணர்வு றும்திறன் எழுங்க திர்த்திறன்
ஓமொ ளித்திறன் நாட்டுமே
உணர்வு றும்முறை கால மாநெறி
ஓங்கு மாயியல் வைகறை 517

வைக றைநெறி வைக றைக்குறி
கால மாயியல் வைகறை
வைக றைப்பொழு தியல் நெறிக்கலை
கால மாயிறை கண்டனன்
வைக றைப்பொழு தியலு ணர்ந்தநெறி
ஞால மாயுயிர் விழித்தெழும்
வைக றைத்திறன் எண்வின் மாநெறி
விளக்கு மோரியற்காலமே 518

அண்ட மாயியல் பிண்ட மாக்கலை
அறிவு றுங்கலை உணர்வினால்
கொண்ட மாநெறி கூறு மாயியல்
குறைவ லாதியல் நோக்குறும்
விண்ட தூநெறிக் காலமாய் பொழு
தியலு ணர்நெறி யாற்றலால்
மண்ட லம்புகழ் காலை மாப்பொழு
தியலு ணர்நெறி யாக்கமே 519

<u>வேறு</u>

காலமாக் கடவுள் கூற்றாய்
பொழுதியல் மெய்மைக் கூடும்
மூலமும் நொக்கு தற்கும்
முப்பொருள் உணர்த்து தற்கும்
சீலமும் இயலு மாங்கண்
செந்நெறி உயிர்ப்பின் தன்மை
ஞாலமே போற்றுங் காலை
வைகறை எழுமின் ஆர்த்தே 520

ஆர்த்தெழும் காலைக் காலம்
அறிவுணர் மூலங் காட்டும்
சீர்த்தெழும் வைக றைச்சீர்
மூலமாக் கனலும் மூளும்
ஆர்த்தெழும் விண்வி ழிப்பும்
பொழுதுணர் உண்மை கூட்டும்
ஆர்த்தெழும் மண்வி ழிப்பும்
சிறுபொழு தியலே கூட்டும் 521

உயிர்க்குலம் முழுமை யாகி
உணர்வினால் கண்வி ழித்து
உயிர்ப்புறும் உணர்வி னாலே
செழுமதிக் கலையே யெய்தி
உயிர்நெறி மூல முற்றே
காலமாக் கலையு மாய்ந்தே
உயிர்க்குறி நெறியு மாய்ந்து
உணர்நெறி ஆய்மின் ஆய்மின் 522

ஆர்த்தெழும் உணர்வி னாலே
அகவெளி நோக்கு ணர்ந்து
சீர்த்தெழும் மதியி னாலே
திருநெறிக் கலையும் நோக்கி
கூர்த்தமா உணர்வு சொண்டே
குறிநெறி யியல றிந்து
ஆர்த்தெழும் காலைப் பொழுதே
அறிவுணர் காலங் காண்பீர் 523

செழுங்கதிர் வரவு நோக்கும்
சீர்மதித் திறத்தி னாலே
எழுங்கதிர் ஒளிக்கிற் றாலும்
எண்மதி யொளிசி றக்கும்
விழுங்கதிர் காலம் வையம்
மெய்ம்மை யுணரும் காலம்
செழுங்கதிர் காலங் காட்டும்
செம்மையை யுணர்வீர் ஆய்மின் 524

காலமே உயிர்க்கட் கெல்லாம்
மெய்நிலை யுணர்வுங் கூட்டும்
காலமே உயிர்ப்பின் சீர்த்திக்
கனிநிலை யியக்கிக் கூட்டும்
காலமே எவைக்கும் மேலாய்
மெய்ப்பொரு ளுணர்வ ளிக்கும்
காலத்தைக் கணிப்ப தற்கே
எழுமுயிர்க் கலையு மாய்வீர் 525

செந்நெறி மனித ரோங்கச்
சீர்நெறிப் பிரண வத்தால்
மெய்ந்நெறி புனித மாகி
செழும்பொருள் உணர்த்திக் கூட்டும்
அந்நெறி யாக்கத் தாலே
அம்முதற் பொருளுங் கூட்டும்
எந்நெறி ஓம்நெ றிக்கே
எழுமொலி நெறியென் றாய்வீர் 526

ஒளிநெறி மூல மாகி
ஒலிநெறி கால மாகி
வெளிநெறி கோல மாகி
விண்ணெறிச் சீல மாகி
களிநெறி ஞால மாகி
காட்டுறும் உண்மைத் தேர்ந்து
அளிநெறி யியலி னாலே
ஆர்த்துறும் உண்மை யாய்மின் 527

உயிர்த்துடித் தெழுப்பி னார்ந்தே
உணர்வினால் வாழும் வாழ்க்கை
உயிர்த்துடிப் புணர்வும் நோக்கி
மெய்ப்பொருள் நிலையுங் கூட்டும்
உயிர்ப்புறும் மூல மாய்ந்தே
மெய்ப்பொருள் ஓர்ந்தெந் நாளும்
உயிர்க்கலைச் சீர்மை யுன்னி
விழித்தெழும் உண்மை யாய்வீர் 528

காலமும் நொடிநொ டிக்கே
    கணிப்புறு மியலென் றோர்ந்து
மூலமும் இம்மிக் காலம்
    மெய்மைசி ராக்க மென்றே
சிலமா நெறித்தி றத்தால்
    சிற்றவை யியலுந் நோக்கி
கோலமா நெறியி னாலே
    ஒம்மறை யாய்மின் ஒர்மின் 529

எண்மைசால் ஒளியி னாலே
    எழுநிலை முலத் தன்மை
ஒண்மையு மொருத்தி றத்தும்
    ஒருங்குணர் உண்மை யாலே
திண்மையும் தென்னெ றிச்சார்
    சீர்மையு முணர்வுற் றோங்கி
நுண்மையால் நூல ருஞ்சீர்
    நுட்பமு முணர்வீர் ஆய்மின் 530

ஒம்கலை யுணர்வின் மிக்கு
    மெய்க்கலை நிலைத் தெரிந்தே
ஒம்நிலைக் குறியி னாலே
    அரும்பொரு ளுணர்வி னாக்கம்
ஒம்மறைப் பொருளின் நுட்பம்
    எண்மையுங் களித்துக் காண்டல்
ஒம்மறைத் திட்ப மன்றோ
    உயிர்க்கெலாம் உறுதி காட்டும் 531

செழும்பொருள் இயலி னோர்ந்து
    சீர்மறை காலங் காண்டல்
எழும்பொருள் கதிரி னாலே
    ஒளிநிலைக் கலையுந் தேர்ந்தே
எழுநிலை எண்மை யாக்கம்
    ஐந்தியல் நிலைக்க திர்க்கூர்
எழுங்கலை யுயிர்த்து டிப்பே
    மெய்நிலை உணர்மின் ஒர்மின் 532

மினதராய்ப் பிறந்த தாலே
மாநெறி உணர்வி னோங்கிப்
புனிதராய் வாழ்வ தற்கும்
அண்டமாக் கலைப்ப யின்று
புனிதமா உயிர்ப்ப டைத்துப்
பொற்புறும் ஆற்றல் காட்டும்
மனிதமாப் பிறவி யாற்றல்
அறிந்தவர் யாரே உள்ளார் 533

மனிதமாப் பிறவி யொன்றே
மெய்மையு முணர்வும் நல்கும்
மனிதமாப் பிறவி யொன்றே
நுகர்ச்சியு மின்பங் கூட்டும்
மனிதமாப் பிறவி யொன்றே
நிறமொழிப் பொழுதுங் கூட்டும்
மனிதமாப் பிறவி யொன்றே
மெய்யரு ளுணர்வுற் றோங்கும் 534

எண்ணறி வுற்ற யாக்கை
மனிதமாப் பிறவி யென்றே
விண்ணறி வுயர்ந்த கல்வி
மெய்ப்பொரு ளோங்கக் கூட்டும்
நுண்ணறி வோங்கு மாற்றல்
நுணுக்கமாத் தன்மை கூட்டும்
எண்ணறி வியலி னாலே
சிற்றவை பொருளுங் காட்டும் 535

மனிதமா உள்ள மொன்றே
மாக்கலை முழுமை காண்டல்
மனிதமா உள்ள மொன்றே
மெய்க்கலைப் பொருளை வோர்தல்
மனிதமா உள்ள மொன்றே
தன்னுளே ஞாலங் காண்டல்
மனிதமா உள்ள மொன்றே
அண்டத்தில் பிண்டம் ஆய்தல் 536

மனிதமாக் கலைத்தி றத்தால்
　　மெய்யிரை யுண்மை யாயல்
மனிதமாக் கலைத்தி றத்தால்
　　செழும்பொரு ளுண்மைத் தேர்ந்தே
புனிதமா யியலுங் காண்டல்
　　பெருங்கலைச் சீர்மை நல்கும்
மனிதமாத் திறமை நோக்கி
　　ஓம்மறை யுணர்வின் ஆய்மின் 537

ஓம்மறை யுணர்வி னாக்கம்
　　உயிர்க்குலம் செழிப்ப தற்கே
ஓம்கலை நெறியி யக்கம்
　　மனிதமா நெறிசி றக்கும்
ஓம்நெறி யியலி னாற்றல்
　　வையமா விண்ணு மோங்கும்
ஓம்நெறி யாற்ற லாலே
　　அறிவியற் கலையே ஓங்கும் 538

அயன்நெறி படைப்பை யோர்ந்து
　　அருங்கலை மூலத் தாலே
அயன்குறி நெறிகு றிக்கும்
　　ஆற்றலுந் திறமு மார்ந்தே
அயனியல் நினைப் னாக்கம்
　　செழும்பொருள் வண்மை யாலே
மயனெறித் திறத்தி னாலே
　　மாந்தரைப் படைக்க லாமே 539

மயன்நெறி ஆற்ற லன்றோ
　　பல்லுயிர் படைத்துக் கூட்டும்
மயன்நெறித் திறத்தி னாலே
　　மறைமொழி உயிர்ப்பே நல்கும்
மயன்நெறி யியலி னாலே
　　செந்தமிழ் உயிர ளிக்கும்
மயன்நெறிக் கூற்றி னாலே
　　மாக்கலை யுணர்வி னாய்மின் 540

மயநெறி மூல மாய்தல்
ஓம்கலை யுணர்வுற் றோங்கி
இயவுளே ஆற்றல் காண்டல்
எண்ணிலை எண்ணங் காண்டல்
உயவுறுந் தன்மை வோங்கல்
உணர்நிலைக் கலையி னாய்தல்
செயலெலாம் வென்றி நோக்க
மயனெறி உள்ளுள் ஆய்விர் 541

உள்ளுளே ஓமு ணர்ந்து
ஓமெழுத் தியலு மாய்ந்து
தெள்ளறி வாற்ற லாலே
ஆடலான் திருவே யாய்ந்து
விள்ளறி உணர்வி னாலே
சிற்றவை நுணுக்கங் காண்டல்
விள்ளுதற் கரிய வாற்றல்
மேவுறும் பிரண வத்தே 542

பிரணவ மருள ளிக்கும்
பிரணவத் தெருளே கூட்டும்
தரைநெறி விண்ணெ றிக்கும்
தனிநிலை ஆற்றல் கூட்டும்
நிரைநிலை மூலங் காட்டும்
நெறிக்கலை யியலா லோங்கும்
பிரணவத் தாற்ற லாய்ந்தே
பெருநெறி காண்பின் ஓர்மின் 543

நாளெலாந் நன்மை நல்கும்
பொழுதெலா மின்பம் புலரும்
கோளெலாம் விண்மை நல்கிக்
குறையெலாம் நீக்கிக் காட்டும்
தூளுரை யாற்ற லாலே
தூயமா நெறியு ணர்ந்து
வாள்நெறிக் கூர்மை யாகி
வகுத்துறும் நெறியே மூலம் 544

மதியினால் விதியை வென்றே
    மாக்கலை வகுக்கு மாற்றல்
மதிவொளி ஆற்ற லாலே
    ஊழினை வெல்ல லாற்றல்
மதிவலி பிறங்குங் காலை
    விதிவலி யழித லுண்மை
மதிவொளி பெறுவ தற்கே
    ஓம்மறை யோது விரே 545

ஓம்மறை ஓதுங் காலை
    ஊள்ளமு முணர்வு மோங்கும்
ஓம்மறை யுணருங் காலை
    உயிர்த்துடிப் புணர்வுற் றோங்கும்
ஓம்மறை செவியுற் றாலே
    அண்டமா யியலே யாய்விர்
ஓம்மொளி கண்ணுற் றாலே
    ஆடலான் ஆடல் காண்பிர் 546

ஆடலான் நெறிவ ளர்க்கும்
    ஓம்கலை முறையு ணர்ந்து
ஆடலான் கலையு ணர்த்தும்
    ஓம்மறை முலங் காண்டல்
ஆடலான் இசையைக் கூட்டும்
    ஓம்மொலி வோசை காண்டல்
ஆடலான் அறுபான் நான்கின்
    சிற்றவை யியலே யன்றோ 547

உள்ளுறுங் கனலை யாய்விர்
    உள்ளுறும் புனலை யாய்விர்
உள்ளுறும் அகவின் ணாய்ந்தே
    ஒளிக்கலை நோக்குற் றாய்விர்
உள்ளுறும் கதிர்ம தித்த
    உன்னியே எழுவிர் ஆய்விர்
உள்ளுறும் விண்மண் ணாய்ந்து
    புறத்துறும் ஞாலம் காண்பிர் 548

அரியமாப் பிறவி யாகி
மனிதமாப் பிறவி ஒன்றே
உரியமாக் கலைய ளித்தே
ஒமுறும் உணர்வ ளிக்கும்
விரிவுறு மாற்றல் வீரம்
ஆண்மையு மினித ளிக்கும்
தெரிநிலை வினையி னாற்றல்
சீர்மையுங் கூட்டு மன்றோ 549

வானியல் ஒலியே யாகி
விண்ணொலி ஒசை யாகித்
தானியல் குறியே யாகி
தன்னிலை ஒமெ மூத்தாய்
வானுறும் மெய்ம்மை காட்டும்
விண்மொழிக் கலைச்சி ராக்கும்
வான்கலை என்று ணர்ந்து
ஒம்யல் நாடு வீரே 550

ஒம்மறை பொருளு ணர்ந்து
நாட்பொழு தாய்ந்து ணர்ந்து
ஒம்மறைப் பொருளு ணர்ந்து
இரவுறுங் கால மாய்வீர்
ஒம்நெறி முலத் தன்மை
விண்குறித் தியலுங் கூடும்
ஒம்கலை கால நுட்பம்
ஒதுவீர் உணரு வீரே 551

ஆடலான் கலைநெ றிச்சீர்
ஒமுருத் திறத்தா லாய்ந்தே
ஆடலான் நிலைநெ றிச்சீர்
ஒம்கலை யியலா லுண்ணி
ஆடலான் இசைநெ றிச்சீர்
ஒம்மறைத் திறத்தால் நோக்கி
ஆடலான் ஆட வெல்லாம்
ஒம்மொளி நெறிவ குக்கும் 552

நெறிமுறை யுண்மை யாலே
நிலைநெறிக் கலையுங் கூடும்
குறிமுறை வண்மை யாலே
உட்கலை ஆற்றல் மேவும்
அறிகலை யியலி னாலே
அருங்கலைத் திண்மை நாடும்
அறிநிலை ஒம்க லைச்சீர்
மறைப்பொரு னாய்மின் இன்றே 553

இன்றுறும் பொழுதே காலம்
இன்றுறும் ஆற்றல் சீலம்
இன்றுணர் வுற்ற நன்றே
இயற்றிற வண்மை யெய்தி
நன்றுறும் செயல்வு ரிந்து
நாடுவிர் மெய்ம்மை யாற்றல்
தென்றமிழ் ஆட லானின்
சீர்மறை ஒமெ மூத்தே 554

ஒரெழுத் துணர்வே யாகி
ஒருமறை மூல மாகி
ஒரெழுத் தியலி னாலே
ஆகமத் தியலு மாகி
ஒரெழுத் தியலி னாலே
இசைக்கலை நுணுக்க மாகி
ஒரெழுத் துண்மை யாக்கம்
ஒம்மறைப் பொருளே காண்பீர் 555

ஒளிமதி யாற்ற லோங்கி
உயிர்நெறிக் கலையு மேவும்
வெளிமதி வுணர்வுற் றோங்கி
விண்ணெறிக் கலையுங் கூடும்
தெளிமதி எண்க லைச்சீர்
எண்ணிலைச் சீர்மை நாடும்
அளிமதி யாற்ற னாலே
ஒம்மறை நாடு விரே 556

ஓம்மறை மூல மாகி
　　உயிர்ப்புறும் விழிப்பே நல்கும்
ஓம்மறை காலங் காட்டி
　　காலமாப் பொழுது மோங்கி
ஓம்மறைக் கலைவி ளக்கி
　　எண்பொருள் நுண்மை யாய்ந்தே
ஓம்மறை யாற்ற லாலே
　　உறுபொருள் நிலையை யாய்விர் 557

சீர்நெறிச் சிறப்பி னாலே
　　திருநெறி ஆட லானின்
ஓர்நெறி ஓமெ ழுத்தே
　　ஓரெழுத் தியலே யாகி
நேர்நெறி எண்ணெண் ணாற்றல்
　　நிலையுறும் மறையே யாகி
ஏர்நெறிக் கலையு ணர்த்தும்
　　மறைப்பொருள் உணர்வி றின்றே 558

காலமாக் கடவுள் ஈந்த
　　கருணையால் ஓமெ ழுத்தை
மூலமும் ஒளியு மோர்ந்தே
　　மெய்ம்மறைச் சீலத் தாலே
ஞாலமே யியன்று காட்டும்
　　எண்ணிலைக் கணக்கு மாய்ந்து
கோலமுங் குறிப்பும் நல்கும்
　　ஆடலான் இயலு மாய்விர் 559

தென்திசை மூல நுட்பம்
　　எண்டிசை காலத் திட்பம்
ஒன்றுறும் மூலப் புள்ளி
　　மையமும் நாற்பு றத்தும்
அன்றுறும் காலத் தெண்மை
　　அருமறை யியலா லாய்ந்து
ஒன்றுறும் ஓமெ ழுத்தின்
　　உயர்கலை நுட்ப மாய்மின் 560

கருத்துறக் கண்டு ணர்ந்து
கலைபல ஓதித் தேர்ந்து
விருப்புறும் ஓமெ ழுத்தின்
மெய்ம்மையாம் நுணுக்க மாய்ந்து
திருவுறும் ஒளியைக் கூர்ந்தே
செந்நெறிக் காலம் உன்னி
ஒருநிலை மறையா லாய்ந்தே
உள்ளுவீர் உணர்வீர் இன்றே 561

மாமறைப் பொருளின் நுட்பம்
மாக்கலை யியலின் திட்பம்
மாமறை மொழிக்க லைச்சீர்
நிறைமொழி யோசை யாகி
மாமறை எண்மைக் கூற்றின்
கலைநிலை நன்கு ணர்ந்தே
மாமறை நுண்மை ஒர்ந்து
ஒரெழுத் துண்மை யாய்வீர் 562

ஒரெழுத் துண்மை நாடி
ஒரெழுத் தியல றிந்து
சீரெழுத் தியலின் திட்பம்
செறிவுறக் கண்டு ணர்ந்து
நேரெழுத் தசையின் ஆற்றல்
நிலைபெரு மாற்ற லாலே
ஏரெழுத் துண்மை யோர்ந்தே
எண்ணிலை முலங் காண்பீர் 563

ஒன்றுறும் பொருளே யாகி
ஒன்றினி விரண்டே யாகி
நன்றுறும் முன்றி லொன்றே
ஒருநிலைக் கலையே யாகி
அன்றுறும் ஆட லானின்
அருங்கலை முலங் காண்டல்
ஒன்றுறும் மறையின் கூறே
ஓமெழுத் தியலின் மேற்றே 564

கலைநிலை யியலி னாலே
　　உள்ளொளிக் கலைதெ ர்ந்து
நிலைநெறித் திருமு லத்தால்
　　நேர்நெறி யாக்கங் கூர்ந்து
தலைநெறிப் பிரண வத்தை
　　தனித்திடு வொலிவோ சைக்கூர்
கலைநெறி கண்டு ணர்ந்து
　　ஓம்மறை நுட்ப மாய்மின் 565

மூலமா மறையி தென்றே
　　முந்துறும் ஒமெ மூத்தாய்
காலமும் உணர்த்திக் காட்டும்
　　கணக்கியல் விரிவுங் கூறும்
சீலமும் ஐஞ்சி லத்தால்
　　தெற்றெனத் தெரித லாலே
கோலமுங் குறிப்பின் ஆயும்
　　கூர்மதித் திறத்தா லாய்மின் 566

எண்ணெண்மா நிலையின் சீர்த்தி
　　நாற்புறத் தியலும் வண்ணம்
திண்ணமாய் ஐயைந் தின்சீர்
　　காலமா விரைவுங் காட்டும்
நண்ணுறும் ஆட லானின்
　　வலமிடத் தன்மைக் கூரின்
எண்ணுறும் ஆய்வே காற்றும்
　　இயல்நிலை மூலத் தாலே 567

மூலமே மையப் புள்ளி
　　முற்றுறும் நாற்பு றத்தின்
சீலமே செந்நெ றிச்சீர்
　　திருநிலை ஆட லானின்
கோலமே குறிப்பு ணர்த்தும்
　　விண்முக நோக்கு மாற்றல்
ஞாலமே தெற்கின் நாட்டம்
　　நன்முறை யுணர்ந்து காண்பீர் 568

முந்நெறி நுணுக்கந் தேர்ந்து
ஐந்நெறி அணுக்கம் கூட்டி
செந்நெறிச் சீர்க லைக்கே
திருநெறி ஆட லானின்
மெய்ந்நெறிப் பொருளு ணர்த்தும்
மிகுநிலை உண்மை காண்டல்
ஐந்நெறி ஒச்சும் ஆற்றல்
ஒம்மறைச் சில மன்றோ 569

எண்ணெழுத் தியலா னோக்கி
எண்முறைக் கணக்கி னாய்ந்து
விண்கலை மூலத் தாலே
கலைநெறி நுட்ப மாய்ந்து
நுண்கலை நுணுக்கங் காண்டல்
நுவலருந் தன்மை யாலே
ஒண்கலை காலத் தாலே
உயிரொளி முற்றும் நாடல் 570

உயிரொளி யுணர்வின் வோங்கி
உடலொளி மேவக் காண்டல்
உயிர்ப்புறும் கலைநி லைக்கே
ஒளிநெறிக் காலந் தேர்ந்து
மயர்விலா மதியி னாலே
மாக்கலை நுட்ப மாய்ந்து
உயிர்க்கலை ஒமெ மூத்தின்
மறைநிலை உண்மை காண்பிர் 571

ஒளிருதற் றிறத்தி னாலே
ஒங்குறும் சென்னெ றிக்கே
வெளிக்கலை யியலின் வண்ணம்
மெய்ப்பொரு ளுணர்ந்து கண்டு
ஒளிவெளித் திறத்தி னாலே
ஒங்குமோ ராற்றல் கூடும்
வெளியியற் றிறத்தி னாக்கம்
மெய்க்கலை நுண்மை கூடும் 572

திருநிலை எண்ணெ றிக்கே
ஒருநிலைக் கலையா லாங்கண்
பெருநிலை ஆக்க முற்று
ஒருமறை நுட்ப மாய்ந்து
கருநிலை மூலங் கண்டே
கணிநிலை நுணுக்க மாக்கம்
அருநெறி யாற்ற லாலே
ஓம்மறை நெறிவின் ஆய்மின் 573

செந்நெறி நுணுக்கத் தாலே
சீர்நெறித் திட்பம் எண்ணி
செந்நெறி ஐயைந் தைந்தும்
நாற்புறத் தியலின் ஆற்றல்
அந்நெறி அறுபான் நான்கின்
அங்குறும் ஐந்தெ மூத்தும்
முந்நெறி முக்க லைச்சீர்
ஓம்நெறி விளக்கு மன்றோ 574

பொழுதுணர் அறிவுற் றோங்கிப்
பெருங்கலை யியற்ற றெரிந்து
பழுதிலாப் பெருநெ றிக்கே
சிற்றவை மூலந் தேர்ந்து
செழும்பொருள் மூலத் திண்மை
சீர்பொருள் கால நுண்மை
எழுங்கதிர் ஒளியே கூடும்
எண்மையுங் காண்டல் ஆற்றல் 575

காலமா யியல்தெ ரித்துக்
கணக்கியல் முறையா னோக்கி
சீலமா நெறிவ குத்துத்
தெரிநிலை ஆட லானின்
கோலமா உருத்தோற் றத்தும்
வடிவமும் படிம மாக்கம்
மூலமாம் ஓமெ மூத்தின்
உருநிலை முன்னிக் காண்பீர் 576

தென்றிசை முல காலம்
எண்டிசைக் கால முலம்
நன்றுறும் அறுபான் நான்கின்
நவையில்சிற் றவையேநோக்கி
இன்றுறும் காலத் தேற்றம்
தோற்றமு மாற்றம் ஆய்ந்தே
அன்றுறும் முல மாய்தல்
ஒம்நெறி வழக்கே யன்றோ 577

மாக்கலை நெறிமு தற்றால்
வந்துறும் பொருளு ணர்ந்தே
தேக்குறும் அகவிண் ணோக்கின்
சீர்நெறி கலைத்தி றத்தால்
ஆக்குறும் ஒளிக்க லைச்சீர்
அருந்திறம் உன்னி ஓர்ந்து
தாக்குறும் நிலைய றிந்து
தனிநிலை நாடல் நன்றே 578

ஒம்கலை உணர்வ ளிக்கும்
ஒம்நெறி எழுச்சி யூட்டும்
ஒதடமுகு வொளிய ளிக்கும்
ஒம்மொலி வோசை நல்கும்
ஒம்மறை கேட்டு ணர்ந்தே
உயிர்த்தெழும் உயிர்க ளெல்லாம்
ஒம்மியல் ஆக்க மாய்ந்தே
ஒளிநிலை ஆய்மி னின்றே 579

எண்ணுதற் கரிய தாகி
எழுதுதற் கரிய லாகி
பண்ணுதற் றெரிவ தாகி
பாங்குறு மாற்றல் பெற்றே
நண்ணுதற் கினிய தாகி
நயப்புறும் ஒமெ முத்தின்
விண்கலை மறையின் சீர்மை
உணர்ந்தெழுந் தாங்கண் இன்றே 580

காலமாப் பொருள றிந்தே
　　காலமா நுட்பந் தேர்ந்தே
காலத்தைக் கணித்து ணர்ந்து
　　காலமா யியல்தெ ரிந்து
சீலமா நோக்கின் வண்ணம்
　　தெரிவுறக் கண்டு ணர்ந்தே
கோலமும் குறிப்பு மாய்மின்
　　குறிப்புறக் கண்டு தேர்மின் 581

ஊழினை வெல்லு தற்கே
　　உழைப்புறு மாண்மை யெய்தி
ஏழ்நிலைக் கடல்க கடந்து
　　எண்ணிலைக் காலம் எண்ணி
ஆழ்நிலை உணர்வி னாலே
　　அறுவகைத் தன்மை கூர்ந்து
ஊழினை முறிய டிக்கும்
　　ஒருநிலை உணர்வுற் றாய்வீர் 582

உணர்வுறும் ஆற்ற லொன்றே
　　வீரமாத் தன்மை நல்கும்
உணர்வுறும் கலைத்தி றத்தால்
　　ஒம்மறை மூல மாய்ந்தே
உணர்வுறும் எழுச்சி பெற்ற
　　உயிர்ப்புறுந் துடிப்பு மோங்கி
உணர்கலை மூலத் தாலே
　　ஆகம மறையுங் காண்மின் 583

மறைக்கலை யாக மத்து
　　மாப்பொருள் அறித லொன்றே
மறைமொழி யுண்மை யோர்ந்தே
　　மெய்க்கலை நுணுக்க முற்று
மறையியல் ஐயா றைந்தும்
　　எண்ணிலை முறையா லோர்ந்து
மறைநிலை ஆக்க முற்றே
　　நாடுவீர் உண்மை யாற்றல் 584

தன்னுளே விண்மின் ணாய்ந்து
தனியொளி யாற்ற லுற்று
தன்னிலை யாக்கைத் தன்மை
தன்னுயிர் மூலத் திண்மை
மண்ணிலை ஒளியின் ஆற்றல்
உணர்வுறும் நுட்ப மெய்ம்மை
உன்னுறும் வண்மை யாலே
உணர்நிலைக் கலையா லாய்மின் 585

எழுதருங் கலைத்தி றத்தால்
எழுங்கலை உணர்வி னோங்கி
செழுங்கலை யாக மத்தும்
மறைத்திறத் தியலு மாய்ந்து
எழுநிலை யியலா லாய்ந்தே
எண்ணிலைக் கலையு மோங்கி
செழுநிலை மறைத்தி றத்தால்
சீர்நெறி யுற்றுக் காண்பிர் 586

எட்டிய வெண்ணெண் ணோக்கே
இயற்கலை மூல மாய்ந்து
எட்டுறும் முறையே மூலம்
ஐந்தியற் கலையே சீலம்
எட்டுறும் நெறிக்க லைக்கூர்
நெறித்திறன் முற்று மோர்ந்து
எட்டுமா யியல்நெ றிக்கே
பிரணவச் சீருற் றாய்வீர் 587

ஓம்நெறி மெய்க்க லைச்சீர்
எண்ணிலை உவந்துள் ளாய்ந்து
ஓம்குறி மூலத் தன்மை
மெய்யியல் ஆக்க மோர்ந்து
ஓம்மறை மூல மாகி
சிற்றவை கணக்கின் தேற்றம்
ஓம்மியல் தன்மைக் கூர்ந்து
பெரும்பொருள் மூலங் காண்டல் 588

செழும்பொருள் எண்மை யோங்கி
சீர்நிலை நுணுக்க முற்றே
எழும்பொருள் விண்மை யோங்கி
ஆகம நுட்ப மாய்ந்து
விழுப்பொருள் சிற்ற வைக்கே
மேவுறும் நிறைமொ ழிச்சார்
தெழுமிய மறைமொ ழிக்கும்
கிளர்நிலை உண்மை காண்பீர் 589

எண்முறை கணக்கி னாய்ந்தே
எழுதரும் மூலந் தேர்ந்தே
விண்முறை உண்மை வண்மை
வியனிலைக் கலையால் நோக்கி
கண்முறை ஒளியால் நோக்கி
கருதரும் உயிர்ப்பும் நாடி
எண்ணியற் கலைநி லைக்கே
கலைநிலைக் கூர்மின் ஆய்மின் 590

எண்ணெறி மூலத் தாலே
எழுநிலைக் கலையி னாக்கம்
விண்ணெறி மூலச் சிற்பம்
வியநிலை கலையு மாய்ந்து
தண்ணெறி யாற்ற லாலே
கருத்துறும் உண்மை யோர்ந்து
தண்ணெறி நிலையின் நோக்கி
மெய்ப்பொருள் காண்பின் ஓர்மின் 591

மாக்கலை யியலி னாலே
மாமறைப் பொருளு ணர்ந்து
ஆக்குறும் ஐந்தி றத்தும்
ஐந்தியற் கலையால் நோக்கி
நோக்குறும் விழியா லாங்கண்
நுவலரும் தமிழே கண்டு
நோக்குறும் விரிசு டர்க்கே
உருவமா நடுவுங் காண்பின் 592

மனிதமா நெறியி னாலே
மாக்கலை நிலையு ணர்ந்து
புனிதமா நெறியி னாலே
பெருங்கலை யுண்மை வோர்ந்து
கனிதரும் மாற்றத் தாலே
கணக்கியல் வழக்கு மாய்ந்து
புனிதமா சிற்ற வைக்கே
எண்ணுறும் கலையே யாயும் 593

எட்டியல் மூலத் தன்மை
எண்கலை காலத் தண்மை
எட்டுறும் ஐந்தோ டொன்றாய்
ஐந்துறும் மூன்றி னாலே
எட்டியல் மாநெ றிக்கே
நிலைகலைத் தன்மைக் கூர்ந்து
விட்டுறும் ஒளிகூ ராக்கம்
விண்ணிலை கலையு மாய்மின் 594

காலமா குறிப்பு ணர்ந்து
கருதரும் கலைக ளாய்ந்து
மூலமா துடிப்பி னாலே
மூவனல் ஒளி திரண்டு
ஞாலமும் விண்ணும் நோக்கி
நன்னிலை யறிந்து கொண்டு
கோலமும் குறிப்பு மாங்கண்
குறிப்புறுங் கலையே யாய்மின் 595

கலைக்க லத்தியின் ஆக்கம்
ஒளிபெறுந் தன்மை சேர்ந்து
நிலைக்க லைநெறி யுணர்ந்து
குறிமுதற் பொருளுங் கண்டு
கலைக்க லைத்தன்மை யாய்ந்து
கண்ணிண் மாநெறியி னாலே
தலைக்க லைச்சான்றின் முண்மை
நாட்டமு மாய்விர் நன்றே 596

அண்டமாப் பொருளு ணர்ந்து
அருங்கலை நுட்பத் தாலே
வான்கலை மொழியின் ஓசை
வளர்நிலை மதியொ ளிச்சீர்
இயன்றுறும் பொருளி னாற்றல்
ஓம்நெறிக் கலைச்சி ராக்கம்
ஆன்றவிற் றடங்கற் சீராய்
அகவெளி காண்பின் ஆய்மின் 597

அகவெளி நோக்குற் றாய்ந்து
அருங்கலை நுட்பந் தேர்ந்து
மிகுமொளி எண்ணெண் ணாற்றல்
மெய்ப்பொரு ளுவந்து கண்டு
தகுமொளி திறத்தி னாலே
தகுமறை யாக மத்து
புகுமொளி கலையின் நுட்பம்
பேரறி வுற்று காண்மின் 598

ஓரறி மிட்புத் தன்மை
உயிர்க்கலை நாட்டந் தேர்ந்து
சீரறி வுற்றுத் தேர்ந்து
செழும்பொருள் இயலி னாலே
நேரறி வுணர்க லைக்கே
நிலையறித் தன்மைக் கூர்ந்து
கூறறி வுற்றுக் கண்டே
மூலமா நெறியே யாய்மின் 599

மூலமா நெறியி னாலே
முயன்றுறும் உண்மை கண்டே
காலமா நெறித்து டிப்பும்
கணக்கியல் வண்மை யுண்மை
சிலமாக் குறிய றிந்து
திருநிலை வண்மைத் தேர்ந்து
கோலமாக் குறிப்பு ணர்ந்து
குடிலையு மாய்மின் நன்றே 600

ஓமெனு மொளியி னாலே
　　பெரும்பொரு ளுணர்ந்து மேவி
ஓமெனுங் கலையி னாலே
　　அரும்பொருள் வண்மை யோங்கி
ஓமெனு மிசைத்தி றத்தால்
　　இசைநிலை யுணர்ந்து யாங்கண்
ஓமொளி ஒளியி னாலே
　　மெய்ம்மறை விளங்கு மன்றே　　601

காலமா நுட்ப மாய்ந்து
　　கடுகினை புரிந்தி யற்றி
மூலமா நுட்பத் தாலே
　　ஒளிமதித் திறமும் நாடி
சீலமா நெறித்தி றத்தின்
　　செம்மைசேர் ஒளிய றிந்து
ஞாலமும் விண்ணும் நாடி
　　நவையில்மெய்ப் பொருளை யாய்மின்　　602

மெய்ப்பொரு ளொளிக்க லைச்சீர்
　　மெய்யியல் உவந்து நாளும்
மெய்யுணர் ஓங்கு மாற்றல்
　　வளர்கலை மதியா லாங்கண்
உய்யுமா றுணர்வி னாலே
　　ஒளியுணர் வுற்றுக் கண்டே
ஐந்நெறி யாக்கங் கூறும்
　　மெய்க்கலை பொருளை சேர்மின்　　603

ஒருநெறி மூலத் தாலே
　　உள்ளுணர் கிளர்ந்தே யோங்கி
திருநெறி அகவிண் ணோக்கி
　　சிற்றவை யியற்றி றத்தால்
பெருநெறி மூலத் திட்பம்
　　பாரியல் விண்ணுந் தேர்ந்தே
அருநிலை ஆக மத்தும்
　　மறைநிலை கலையு மாய்மின்　　604

நிலைமறை ஆக மத்து
நெறிமுதற் பொருளுங் கண்டு
கலைநிலை நெடுங்க னக்கால்
தவளைமா நெறியு மாய்ந்து
நிலையியல் ஆற்ற லோங்கி
நேரியற் றண்மைக் கூர்ந்து
தலைமுதற் பொருளி னாலே
தகும்பிரண வத்தை யாய்வாய் 605

பிரணவ நெறிச்சீ ராக்கம்
பெருங்கலை யியலி னாக்கம்
பிரணவ குறிச்சி ரோச்சி
பேரியல் ஒளியு ணர்ந்து
அரனுறம் அறுநி லத்தே
ஐங்குடி தன்மை மூலம்
முரனுறா வகையி லாய்ந்தே
முன்னெறி சுடரு மாய்மின் 606

முச்சுடர் முக்க லைக்கே
மூவொளி கண்டு ணர்ந்து
நச்சுறும் திறத்தி னாலே
நற்கலை யாக்கந் தேர்ந்து
அச்சமும் விழிப்பின் நோக்கி
எட்டியல் நெறியுங் கூர்ந்து
முச்சுடர் மூவொ ளிக்கே
அறுசுடர் இயலு மாய்மின் 607

அறுசுடர் ஐங்கு டிக்கே
மெய்நிலை மூல மாகி
உறுசுடர் ஒன்மை யோச்சும்
மூவொளி இருக லைக்கும்
பெறுசுடர் புகுவ நாப்பன்
உருநிலை ஒளியே யாகி
உறுநிலைத் தன்மை கூறும்
உண்மையு மாய்மின் ஓர்மின் 608

எழுவகை நாடி யாய்ந்து
எழுநிலைக் கலையு மாய்ந்து
பழுதிலா வறுநி லத்தும்
ஐங்குடி மூல நுட்பம்
செழுமைசால் பைங்கு டிக்கே
திருவுறும் மூலத் திட்பம்
விழுமிய கலைச்சீ ராக்கம்
மேவுமோ ரியலே யன்றோ 609

எண்ணிலை மூலத் தாங்கண்
ணியன்றுறும் உண்மை யாய்ந்து
விண்ணிலைக் கலைத்தி றத்தால்
விளங்குறும் சிற்ற வைச்சீர்
கண்ணிலை ஒளிஈ றாகிக்
கலைநிலை முழுது மாய்ந்தே
எண்ணுறும் எண்ணெண் ணாற்றல்
இலங்குறும் பிரண வத்தே 610

பிரணவத் திலங்கு மாற்றல்
பெருநிலைக் கலையொ ளிச்சீர்
அரணுறும் அறுசு டர்ச்சீர்
ஐங்குடி மூல நுட்பம்
மரணுறா வகையில் நோக்கி
முச்சுடர் கனலை யாய்ந்து
பிரணவ மாம றைச்சீர்
பெருநிலை புகலு விரே 611

தெள்ளிய கலைசால் நுட்பம்
மாமறை யாக மத்தும்
ஒள்ளிய கலைச்சி லுண்மை
ஒளிர்ந்துறும் ஆக்கம் நோக்கி
உண்ணிய உணர்வி னாலே
ஓங்குறும் அகவின் னோக்கும்
தெள்ளிய கலைச்சீர் திட்பம்
மாமறை ஓமெ முத்தே 612

ஓம்கலை யியலா நோக்கி
ஓம்நெறித் திட்பத் தாலே
ஓம்குறி யாற்ற லோங்க
உருநிலை உன்னி கண்டே
ஓம்மியல் நுண்மை யாய்ந்து
ஓம்திறத் தன்மை யோங்கி
ஓம்மறை யுயிர்ப்புற் றோங்கி
ஓதுவிர் உண்மை யாய்ந்தே 613

ஓதலும் ஓம்ஒ லிக்கே
உணர்தலும் ஓம்இ சைக்கே
ஓதலும் மறைவின் நுட்பம்
மெய்ப்பொருள் திட்பங் கூட்டும்
ஆதலும் உணர்வுங் கூட்டும்
அறிவுறும் ஆண்மை சேர்க்கும்
ஓதல்மா நெறிமு கத்துள்
எண்ணுறும் கலைநி லைக்கே 614

அளவியல் அறுபான் நான்கின்
சிற்றவை மூலந் தேர்ந்து
உளவியல் கால நுட்பம்
ஓதரும் ஞாலத் திட்பம்
அளவுறும் கணக்கி னாய்ந்து
நெறிமுறை யியலும் வண்ணம்
உளவினால் அளவ றிந்து
உயிர்ப்புறும் தன்மை யாய்விர் 615

பிறப்புறும் மனித யாக்கைப்
பேருறும் ஐந்துறுங் கூடி
சிறப்புறும் ஒளிக்க லைச்சீர்
நெறிகிடும் உள்ளுந் தேக்கி
அறுமுதற் பொருளி னாய
ஐந்நெறி யாக்கங் கூர்ந்து
திறனிலைக் கலைத்தி றத்தே
செப்புவிர் ஆக மத்தே 616

ஆகம முறையி னோங்கி
மாமறை யியலே யாகி
ஆகமத் துன்னின் ஒங்கும்
அரும்பெருங் கலைச்சி ராகி
ஆகம யியலே யாகி
மெய்ந்நிலைக் கலையின் நுட்பம்
ஆகமம் அறிந்து ணர்ந்தால்
சீர்மறை நெறியே யன்றோ 617

மூலமா நெறியின் ஒங்கி
முச்சுடர் முக்க லைக்கும்
காலமா இயல்வ குத்துக்
காலமும் கணித்துக் கண்டே
காலமு லத்தி னாய்ந்து
மூலகா லத்தை நோக்கி
மூலமா முதலு மாயும்
முந்நெறி ஆய்மின் காண்மின் 618

காலமும் கால நுட்பம்
கடுவினை உழைப்பு மாக்கம்
காலமா யியலி னோர்ந்து
மெய்க்கலை யுணர்வுற் றோர்ந்து
மூலமாப் பொரு ளியக்கம்
முன்னிய தன்மை யோர்ந்து
காலமுந் நெறியும் நோக்கி
ஐய்யியல் ஆய்மின் ஒர்மின் 619

விழித்தெழுங் கால மொன்றே
விண்ணுறும் சீல மாகி
விழிப்புணர் ஒன்றி னாலே
மெய்க்கலை யியலு மாய்ந்து
செழும்பொரு ளெண்மை நுண்மை
சீர்ப்பொரு ளியலுந் தேர்ந்தே
எழுங்கலை மூலத் தாலே
எண்ணுறு முண்மை யாய்மின் 620

எண்ணுணர் கலைத்தி றத்தால்
எழுநிலை மூலந் தேர்ந்து
விண்ணுணர் நெறிக்க லைக்கும்
வியனிலை யியலுங் கூர்ந்து
பண்ணுணர் ஒலியின் மூலம்
ஏழிசை நுட்பங் கூராய்
கண்ணுணர் ஒளியுங் கூடும்
கலைநிலை ஆட லானே 621

ஆடலான் கலைநி லைச்சீர்
அறிநிலை இயலுங் கூர்ந்து
ஆடலான் எண்ணி லைக்கூர்
ஒன்றுறுந் தன்மை யோர்ந்து
ஆடலான் அசைவி னாலே
அறிவியல் நுணுக்கந் தேர்ந்து
ஆடலான் மெய்க்க லைக்கே
நெறிமுறை உண்மை யாய்மின் 622

செழும்பொரு ளுண்மை யாலே
சீர்ப்பொருள் கலைச்சீர் நுட்பம்
எழும்பொருள் வண்மை நுண்மை
எழுநிலை மூலத் தன்மை
விழுப்பொருள் நுணுக்கங் காண்பின்
குதலையின் நுட்ப மாய்மின்
எழுங்கதிர்க் காலை யன்றோ
எழுமுணர் வளிக்குங் காலம் 623

காலமா நுணுக்கத் தாலே
கடிதியல் பொழுதி னாக்கம்
மூலமா நுணுக்கத் தாலே
முப்பொரு ளுண்மை யாய்ந்தே
சீலமா நெறிக்கூர் திட்பம்
செய்முறை உள்ளுள் ளோர்ந்தே
கோலமு மியலுங் கூர்ந்தே
குறிப்புறுங் குறிப்பே யாய்மின் 624

அருளியற் றிறத்தி னாலே
அகவொலி நுட்பந் தேர்ந்து
தெருளியற் றிறத்தின் வண்மை
மூலமாத் தன்மைத் தேர்ந்து
மருளற முளத்தின் வண்மை
மாக்கலை யியலு மாய்ந்து
இருளிரி யுணர்வி னோங்கி
எண்ணிலை நெறியு மாய்மின் 625

ஓங்குறு முணர்வி னாலே
ஒளிக்கதிர் உயிர்ப்பி றிந்தே
ஆங்குறும் நுணுக்கச் சீலம்
மெய்ம்மையு மறிந்து ணர்ந்து
பாங்குறும் அறுநி லத்தின்
ஐங்குடித் திட்பத் தாலே
ஓங்குறும் மூல நுட்பம்
ஒருபொரு ளுணர்ந்து மன்றோ 626

எண்ணிலைக் கலையின் மூலம்
எழுத்தியல் மூலச் சீலம்
எண்ணுறும் உணர்வின் சீர்த்தி
இயல்நிலைக் கலைத்தி றத்தே
விண்ணுறும் பேரொ ளிக்கே
வியனிலை நுட்பத் தாலே
எண்ணுணர் மூல நுட்பம்
இயலறக் காண்மின் நன்றே 627

பொறிபுலன் நுணுக்கத் தாலே
பொற்புறுந் திட்பம் நோக்கி
நெறிமுதற் பொருளுங் கூர்ந்தே
நிலைமதி யுணர்வு மோங்கி
குறியியல் காலத் தன்மை
குறிப்புறு முண்மை நுண்மை
அறிக்கலை யியலி னாலே
அகமுதல் பொருளுங் காண்பின் 628

அகத்தினை யியலுங் கூர்ந்து
அருளியல் நுட்பந் தேர்ந்தே
அகத்தொளி யாற்ற லாலே
தெருளியல் மதிசி றந்து
மிகுமொளித் திறத்தி னாலே
மெய்யொளி எண்மை சேர்ந்து
அகழ்ப்புறத் தியலி னாலே
ஐந்தினை யறிவீர் ஆய்மின் 629

புலத்தியல் நுட்ப மொன்றே
பொறிபுலன் நுணுக்க மாய்ந்து
புலத்தியல் ஆக்கங் கூர்ந்து
பெருங்கலை யியலும் நோக்கி
பாலத்தொளி ஆற்ற லாலே
ஐம்பொறி நிலையுங் கூர்ந்து
புலநெறி தன்மை நோக்கி
இயலியல் எண்ணெண் றாய்வீர் 630

ஒளிக்கதி ராற்ற லாலே
வெளிவொளித் தன்மை யாய்ந்தே
ஒளிமுறை யியலின் கூற்றே
ஒங்குறுந் தன்மை நோக்கம்
வெளிமுறை விண்ணொ ளிக்கே
மேவுறும் கலைச்சி ராக்கம்
ஒளிமுறை கலைக்க திர்க்கும்
ஒங்குறு மியலு மாய்மின் 631

ஓம்மறைப் பொருளின் நுண்மை
ஓம்மறைப் பொருளின் எண்மை
ஓம்கலை ஓசை யுண்மை
ஓமியல் நெறியி னாற்றல்
ஓமுறு மொலிவொ லிச்சீர்
ஓங்குறும் மறைக்க லைக்கும்
ஓமுறும் ஆக மத்தும்
மெய்ப்பொரு ளறிந்து காண்மின் 632

எண்கலை மூலச் சீர்க்கும்
எண்ணிலை மூலத் தாய்ந்தே
எண்ணியல் திறத்தி னாற்றல்
எண்ணுறும் கலைநி லைக்கும்
எண்கதிர் விளங்கத் தோற்றி
அறுசுடர் நிலையுங் கூடும்
எண்முறை யியலி னாலே
ஐந்தியல் ஆற்ற லாய்விர் 633

அறுபிரண வத்தி னாலே
அருளொலி மேவக் கண்டே
நெறிபிரண வத்தி னாலே
நிலையியல் ஆய்ந்து நோக்கி
குறிபிரண வத்தி னாலே
கூர்மதி யொளிசி றந்து
அறிகலை மூலத் தன்மை
ஐந்தியல் நிலையு மாய்மின் 634

பிரணவ மூலத் துண்மை
பேரறி வுற்று ணர்ந்தே
முரணுறா வகைசி றந்து
முச்சுடர் முந்நெ றிக்கும்
அரணுறம் ஐந்தெ ழுத்தும்
அஇஉ எஒ வாகி
திரண்டுறும் நாற்பு றத்தின்
திருநிலை மூலங் காண்மின் 635

காண்டறும் மூல மாக்கம்
அறுநிலத் தெங்கு டிக்கும்
காண்டறும் அகவெ ளித்திறன்
புறநிலை முற்றுங் கண்டே
காண்டறும் எண்டி சைக்கூர்
தென்றிசை ஆட லானின்
காண்டறும் மெய்க்க லைக்கும்
மெய்நிலை ஆய்மின் இன்றே 636

இன்றுறும் பொழுத றிந்து
காலமா நுட்பங் கண்டே
நன்றுறும் மூல மாங்கண்
நற்பொழு தியலு மாக்கம்
அந்துறும் மாக்க லைக்கே
பிரணவ நிலையுங் கூறும்
தொன்றுறும் ஒளிநெ றிக்கே
தூநறுங் கலையே யன்றோ 637

குணுத்தெழுங் கலையி னாலே
குறிமுதற் பொருளும் நோக்கி
அறிநிலைப் பிரண வத்தின்
மெய்ப்பொரு ளுணர்ந்து ணர்ந்து
குறிமுதற் றிறத்தி னுண்மை
கூர்மதி ஒளியி னாற்றல்
நெறிமுதற் பிரண வத்தை
நிலைபெறும் உண்மை யன்றோ 638

ஒருமுதற் பிரண வத்தின்
மெய்க்கலை விண்ண ளக்கும்
வருமுதற் பிரண வத்தின்
மெய்நிலை ஞாலங் கூட்டும்
அரும்பொருள் நுண்மைத் தேரின்
ஐம்பொருள் இலங்கிக் கூட்டும்
அருங்கலை யாக மத்தும்
இயல்பொருள் தேர்ந்தி லங்கும் 639

இலங்குறும் மறைமொ ழிக்கும்
நிறைமொழி ஒசை யாற்றல்
இலங்குறும் ஒளிச்சி ரோசை
ஒலியசை யிசைமு தற்றாய்
கலங்குறா உளத்து ளோங்கிக்
கருத்துறும் கருத்தி னாலே
இலங்குறும் அகவிண் ணாற்றல்
ஒளிமுதற் றண்மை யாய்மின் 540

மாமுத லியன்ற வண்ணம்
மாக்கலை நுனுக்கத் தாலே
தேமுத லியற்றுஞ் சீர்சால்
மறைப்பொருள் மூலத் தாக்கம்
ஓமுத லியலி னாலே
ஒருபொருள் வண்ணங் கூறும்
ஓமுதல் ஓசை யாற்றல்
மெய்ம்மொழிப் பொருளே யன்றோ 641

எண்கலை நுணுக்கச் சால்பின்
எண்ணிலை யியலும் பாங்கூர்
நுண்கலை மூலத் திண்மை
நுண்மையும் எண்தி றச்சார்
எண்கலை எண்ணெண் ணாற்றல்
நாற்புறத் தியலுங் கூட்டும்
எண்முறை யியலே யன்றோ
எண்ணிலை நெறியு ணர்த்தும் 642

மூலமாத் திறத்தி னாலே
முப்பொருள் முந்நெ றிச்சீர்
சீலமா யியலு ணர்ந்தே
தெருநிலைக் கலைத்தி றத்தால்
காலமா இயல்கூர் ஆக்கம்
கடிநிலைப் பொழுது ணர்ந்து
மூலமும் விளங்கக் கண்டே
மூலகா லத்தைத் தேர்மின் 643

காலமு லத்தைப் காண்டல்
கலைத்திறன் கணக்கி னாய்ந்தே
காலமா யியற்றி றத்தும்
கணிமுறை துலங்க நோக்கி
காலமும் இடமும் எண்ணிப்
பொருளுறுந் திறத்தின் வண்ணம்
மூலமா மெய்ந்நெ றிக்கும்
கலையிய லுண்மை யன்றே 644

எண்ணுறும் எண்ணெண் ணோங்கல்
ஒங்குறும் பொருள்தி றத்தே
எண்ணுறும் மூலத் தாங்கண்
வியனிலை எண்மை யாலே
மண்ணியல் நெறியுங் கூறும்
மாக்கலை ஒளிச்சி லத்து
தெண்ணிலைப் பிரண வத்துத்
திருநிலை நெறியே கூறும் 645

உயிரொளி மூல மொன்றே
உணர்வுறும் ஆற்ற லோங்கும்
உயிரொளி நுட்பத் தாலே
பேரொளி யியல றிந்து
செயிரறும் மூலத் திட்பம்
நுட்பமு முணர்ந்தே வண்ணம்
உயிர்ப்புறுங் கலைத்தி றத்தை
உள்ளுணர்ந் தோமெ முத்தே 646

இளங்கதி ரொளித்தி றத்தின்
எழுநிலை மூலங் கண்டே
வளமுறு மொளிம திச்சீர்
வகையுறத் தெரிந்து ணர்ந்து
தெளிமதி யுணர்வி னாலே
சீர்நெறி யாற்ற லோர்ந்து
ஒளிமதி யியலுங் கண்டே
உணர்த்தெழு முண்மை காண்மின் 647

<u>வேறு</u>

ஒங்கு றுங்கலை ஒங்கு றும்நெறி
பிரண வத்தெழி லாற்றலாய்
பாங்கு றும்நெறி கதிரொ ளித்திறன்
பிரண வத்துறு மாற்றலால்
தேங்கு றும்கலை சீர்நெ றித்திறன்
ஓம்ம றைக்கலை யாற்றலாய்
ஆங்கு றுந்திறன் மறைமு தற்பொருள்
அண்ட பிண்டமும் நாடுவிர் 648

நாடு விர்க்கலை நாடு விர்மறை
நாடு விர்நெறி யாகமம்
நாடு விரெழில் நாடு விரொளி
நாட்ட மாமுறும் நல்வழி
தேடு விருயிர் பொலித்தி றத்துநிலை
செம்மை மாமதி யாக்கமும்
கூடு விர்கலை குடிலை மாநெறி
கூரொ ளித்திறன் ஒங்கலே 649

உணர்வி னாற்றலும் உழைப்பி னாற்றலும்
ஒங்கு றும்திற னாக்கமும்
உணர்வி னாலெழும் மெய்க்க லைக்பொருள்
மெய்யியல் செழுங்க லைநிலை
உணர்வி னாக்கமும் உழைப்பின் மாயியல்
நெறிய றிந்தசீர் ஆக்கமும்
உணர்நி லைத்திறன் ஒங்கு மாநெறி
எண்க லைத்திறன் உண்மையே 650

எண்ணு றுந்திறன் எண்க லைத்திறன்
எண்ணு மாத்திறன் இயலதாய்
விண்ணு றுங்கலை விண்ணின் பேரொளி
வியனி லைக்கலை நோக்கமும்
எண்ணி லைக்கலை எண்ணெண் மாத்தறன்
சிற்ற வைநிலை யோங்கவே
எண்ணி யற்கலை நெறிமு றைத்திறன்
உற்ற மாநெறி ஆக்கமே 65 1

கலையின் மாநெறி கணக்கி யல்நெறி
கருது மாயியல் உணர்ந்துசீர்
நிலையின் தூநெறி நெறியு ணர்ந்தநிலை
நீள மாக்கலை நினைந்துறும்
தலையின் மாயியல் நிலைக்க லைத்திறன்
பிரண வத்தொளி யாற்றலால்
கலையி லங்குநெறி காரி லங்குகுறி
எண்க லைத்திறன் உண்ணுவிர் 652

மாயி யற்கலை விண்ணி லங்குநெறி
அண்ட கோளமு மாய்ந்துசீர்
தேயி யற்கலை நிரி லங்குகுறி
பிண்ட கோளமும் உணர்ந்துசீர்
மாவி யல்நெறி மண்ணி லங்குகுறி
மாக்க லைத்திறன் நோக்கியே
ஒவி யத்திறன் ஒம்யற்றிறன்
சித்தி ரக்குறி நாட்டமே 653

நாட்ட மேகலை நாட்ட மேகுறி
நாட்ட முற்றுறும் இருவிழி
நாட்ட மாயியல் விண்ணின் மாக்கலை
அகவெ ளித்திறன் ஆய்ந்துசீர்
நாட்ட முற்றுறும் இமைவி ழிக்கலை
நண்ணு முச்சுடர் ஆற்றலாய்
தேட்ட மாயியல் சீர்சி றக்குநெறி
ஒமி யல்மறை யாக்கமே 654

ஒமு றுங்கலை ஒமு றுந்திறன்
ஒம்ம றைக்கலை யுண்ணியே
ஒமொ ளிர்ந்தவொலி ஒம்மொ லிக்குமொலி
ஒளிவொ லித்திறன் உன்னியே
ஒமு றும்நெறி குறியி யற்கலை
ஒளிவெ ளித்திற னாய்ந்துணர்
ஒமு றும்திறன் பிரண வத்தியல்
மாநெ றிக்கலை மூலமே 655

மாநெ றக்கலை முந்நெ றிச்சுடர்
மெய்யி யல்கலை மூலமாய்
தூநெ றித்திறன் தூம ணித்திறள்
திருநெ றித்திறன் ஒங்குசீர்
மாநெ றித்திறன் மறைமொ ழிக்கலை
யாக மத்துண ரோங்கவே
தூநெ றித்திறன் ஆட லான்கலை
திரும றைக்கலை ஆற்றலே 656

அண்ட பிண்டமும் விண்டு ணர்ந்தகலை
எண்டி சைக்கலை தென்றிசை
மண்டுறு றும்நெறி மாவி யற்கலை
நல்லி யற்திறன் ஓங்குசீர்
எண்ணி லைக்கலை நெறிமு றைத்திறன்
எழுநி லைக்கலை தேங்குறும்
விண்ணி யங்குநெறி ஓமொ லித்தயிசை
வீர மாநெறி யோங்குமே 657

கால மாக்கலை எண்ணி யங்குநெறி
கன்ம லர்க்கலை தெரிந்துசீர்
மூல மாநெறி முச்சு டர்க்கலை
மூவி யற்கலை யாக்கமும்
சீல மாயியல் செந்நெ றித்திறன்
முந்து றுங்கலை நோக்கமும்
கால மாநெறி எண்ணு றுந்திறன்
கணித மாநெறி நாடுவீர் 658

எண்ணி யற்றிறன் எண்மு றைக்கலை
யியல்நி லைத்திறன் ஓமெனா
விண்ணி யற்றிறன் விண்க லைத்திறன்
வியனி லைக்கலை ஓமெனா
எண்ணி யங்குநெறி உணர்வு றுந்திறன்
ஓங்கு மாயியல் நோக்குறும்
எண்ணு மாயியல் உணர்வு றுங்கலை
தெளிவு றும்நெறித் தேக்கமே 659

மனித ராயுறும் பிறவி மாயியல்
மாக்க லைத்திறன் உணர்வுறும்
மனித மாக்கலை எண்ணி யற்குறி
ஆக மத்துறும் மூலமும்
மனித மாநெறி மாவி யற்றிறன்
மெய்க்க லைத்திற னோக்கியே
மனித ராயுறும் உணர்வு றுங்கலை
ஓம்ம றைக்கலை கூறுமே 660

ஓம்ம றைக்கலை ஓம்ம றையொளி
ஓம்நி லைத்திற லுண்ணியே
ஓம்ம றையியல் ஓம்ம றைப்பொருள்
ஒருபொ ருள்நிலை நாடியே
ஓம்நி லைத்திறன் ஓம்வொ ளிக்கலை
ஓமு றுங்கலை நோக்கமும்
ஓம்கு றித்தயியல் ஒருநி லைக்கலை
ஆக மத்தியல் மூலமே 661

ஆக மத்தியல் அறிவ றிந்தநெறி
உணர்வு றுந்திறன் மூலமாய்
ஆக மாகமம் மாம றைத்திறன்
ஆட லான்கலை எண்ணிலை
ஆக மாயுறும் மெய்ந்நி லைக்கலை
ஆக மைந்துறும் ஆக்கமும்
ஆக மாகமும் ஆக்கை யுங்கலை
ஆக்க மாநெறி மாமறை 662

மாம றைக்கலை மெய்ப்பொ ருள்நிலை
மண்ணு மாக்கலை யாக்கமும்
மாம ணித்திரள் மெய்நி லைமறை
மெய்யி யற்கலை நோக்கமும்
தூம ணிக்கலை தூநெ றித்திறன்
திருநி லைக்கலை உணர்வுறும்
ஓம்ம றைக்கலை பெருவெ ளித்திறன்
ஒளிநி லைக்கலை யூக்கமே 663

எண்டி சைக்கலை தென்றி சைநெறி
எண்மொ ழிக்கலை யியலென
எண்ணி யற்கலை நெறிமு றைத்திறன்
எண்ணு றுங்கலை யாக்கமாய்
எண்ணு றுந்திறன் இயல்நி லைக்கலை
எட்டு மாத்திறன் நிலையென
எண்ணு மாக்கலை எண்ணு றுந்தின்
ஓமெ னுநெறி மூலமே 664

ஒமெ னும்நெறி பெருபே ளித்திறி
சிற்ற வைக்கலை ஒளியென
ஒமெ னுங்குறி யியல்நி லைத்திறன்
சிற்ற வைநிலை மூலமாய்
ஒமெ னும்வொளி உருவ மாநிலை
ஒலிநி லைக்கலை ஒசையாய்
ஒமெ னும்மியல் நெறிமு றைக்கலை
ஒம்ம றைக்கலை யாகமம் 665

ஆக மக்கலை ஆக மத்துநெறி
ஆக மத்தியல் மறையென
ஆக மக்கலை மூல மாநெறி
மூல மாயியல் நோக்கியே
ஆக மத்துறும் ஒளிநி லைத்திறன்
ஒம்ம றையியல் ஒலித்திறன்
ஆக மக்கலை மெய்ப்பொ ருள்நிலை
மறைநி லைக்கலை ஒம்மொழி 66

ஒம்மொ ழிக்கலை ஒம்வொ லியிசை
ஒம் ஒளி உருவென
ஒம்மொ ழிமறை ஒலியி சையிசை
ஒளிவொலி நிலைக லையென
ஒம்மொ ழிமுதற் மறைமொ ழிநிலை
நிறைமொ ழிக்கலை ஆற்றலாய்
ஒமி யற்றிறன் பிரண வத்துநெறி
ஆக்க மாநெறி பிரணவம் 667

ஒமெ னுந்திற லொளிமி குத்தநிலை
ஒருக லைத்திற னுணர்வினால்
ஒமெ னுந்திற லணிக லைத்திறன்
அருளி யற்கலை முறையினால்
ஒமெ னும்மியல் ஒளிமி கும்நெறி
உறுநி லைக்கலை நெறியினால்
ஒமெ னும்மொலி ஒளியி யற்கலை
ஒண்ணி லைக்கலை ஆற்றலே 668

எண்ணின் மாக்கலை எண்ணின் மாநெறி
எண்ணு றுங்கலை நிலையுறும்
விண்ணின் ஒளிநிலை வெளிநி லைக்கலை
வீறு மாநெறி நுட்பமும்
கண்ணின் ஒளிநிலை கலைநி லைக்கலை
கருத்து றும்கலை யாற்றலும்
பண்ணின் ஓசையும் ஒளிநி லைக்கலை
பார்பு கழ்மறை ஓமதே 669

ஓம தேகலை ஓம தேயியல்
ஓம்நி லைக்கலை யுணர்வுறும்
ஓமெ னும்மொலி ஒளியி யல்லசை
ஓமெ னும்திறன் நாட்டமாய்
ஓமெ னும்மறை ஒளிக்க லைமுறை
ஒருநி லைக்கலை உணர்வினால்
ஓமெ னும்அலை அசைய லைவொலி
ஒண்ணி யற்கலை மூலமே 670

எட்டு மாநெறி யியலு றுங்கலை
எண்க லைத்திறன் ஆக்கமாய்
எட்டு மெட்டுமாய் ஏழோ டெட்டுமாய்
எங்கு றும்நிலை கலையென
விட்டு றுங்கலை வாழ்க லைத்திறன்
வீர மாக்கலை யுணர்வினால்
எட்டு றும்நெறி பிரண வத்து நெறி
எண்க லைத்திறன் துன்னவே 671

அறுசு டர்த்திறன் ஐங்கு டிக்கலை
முச்சு டர்நெறி மூலமாய்
அறுநி லைக்கலை தெரிக்கு முண்மையால்
ஓம்வொ ளித்திறன் நோக்கியே
உறுக லைச்சுடர் ஒளிச்சி றக்குநெறி
ஓம்க லைநெறி முறைமையால்
அறுநி லைத்துணர் ஐந்நெ றித்திறன்
ஓமி யல்கலை யாக்கமே 672

உடலொ ளித்திறன் உயிரொ ளித்திறன்
உணர்வொ ளித்திறன் உன்னியே
அடலொ ளித்திறன் படரொ ளிக்கலை
சுடரொ லித்திறன் ஆக்கமாய்
இடமு றுங்கலை ஒளிதெ ரிக்கலை
உணர்வு றுங்கலை ஒமெனா
நடமு றும்கலை ஆட லான்கலை
ஓம்நெ றிக்கலை மாமறை 673

வைன றைப்பொழு துணர்த்து மாக்கலை
வான மாநெறி மாமறை
வைக றைப்பொழு துணர்த்து மாநெறி
ஓம்ம றைக்கலை தூமறை
வைக றைப்பொழு துணர்த்து மாயியல்
ஓம்வொ ளிக்கலை போரொளி
வைக றைப்பொழு துணர்த்து மாயிசை
ஓம்வொ லிக்கலை தொல்லிசை 674

காலை நற்பொழு துணர்த்து மாக்கலை
கதிரெ ழும்பொழு துன்னியே
காலை செங்கதிர் ஒளிய றிக்கலை
உள்ளொ ளித்திறன் வளருமே
காலை கதிரொளி மதியொ ளிக்குநல்
கவினு றும்மதி கூட்டுமே
காலலை மாப்பொழு துணரு மாக்கலை
ஓம்நெ றிக்கலை ஓசையே 675

உச்சி மாப்பொழு துணர்வு றுங்கலை
உழைப்பு றுங்கலை ஆக்கமாய்
உச்சி நற்பொழு துணர்த்து மாநெறி
உணர்வு றுங்கலை நோக்கமாய்
உச்சி மாயியல் பொழுத றிந்துநல்
ஓங்கு றும்கலை யுணர்வென
உச்சி செங்கதிர் ஒளிசி றக்குநெறி
ஓம்நெ றிக்கலை யுண்மையே 676

மாலை நற்பொழு தியல்நெ றிக்கலை
நூறு ணர்கலை பொழுதென
மாலை மாப்பொழு தியல றிக்கலை
மெய்யு ணர்கலை வேளையாய்
மாலை நூலறி பொழுதி யல்நெறி
மதியொ ளிக்கலை யுணர்நெறி
மாலை காலமும் கதிரொ ளிக்கலை
கருத்து ணர்நெறி ஓம்மறை 677

ஓம்ம றைநெறி மறையி யற்கலை
உற்று ணர்திறன் வலியென
ஓம்வொ ளிக்கலை நிறைமொ ழித்திறன்
மறைமொ ழிக்கலை ஆக்கமாய்
ஓம்கு றிக்கலை ஓம்மி யற்கலை
ஓமு றுந்திறன் மூலமாய்
ஓம்உ ருக்குறி காண்டல் தூநெறி
மறைநெ றிக்கலை மூலமே 678

மூல மேகலை மூல மாநெறி
முற்று ணர்திறன் முழுநெறி
கால மேகலை கால மாநெறி
கருத்து ணர்கலை மறைநெறி
கால நுட்பமும் மூல நுட்பமும்
கண்டு ணர்கலை மறைநெறி
கால காலமும் மூல காலமும்
கணக்கி யல்நெறி ஓம்மறை 679

உடலு றுங்கலை வாயி லொன்பதும்
உணர்வு றும்நெறிக் கூடதாய்
திடமு றும்நெறி சீரு ணர்நெறி
சீரொ ளிக்கலை ஆற்றலால்
அடரொ ளித்திறன் சுடரொ ளிக்கலை
ஐந்நெ றிக்கலை நாடியே
படரொ ளித்திறன் பாரொ ளித்திறன்
ஓம்க லைநெறி ஆற்றலே 680

ஐம்பெ ருங்குடில் அறுநி லத்துறும்
அரிய உண்மை உணர்ந்துசீர்
செம்பொ ருட்கலை செழும்பொ ருள்நெறி
செம்மை மாநெறித் தேற்றமும்
ஐம்பொ ருள்நெறி விண்ணு ணர்குறி
ஆய மாக்கலை யேற்றமும்
செம்பொ ருட்டிறன் செழுமை மாநெறி
பிரண வக்கலை மாமறை 681

பிறழ்ந வக்கலை எட்டி னின்றுணர்
பிறழ்ந்த தாலுறும் ஆற்றலாய்
உறழ்ந வக்கலை ஆட லானியல்
வளைவி யல்நெறி யுற்றுணர்
உறழ்ந வக்கலை நவிலு மாநெறி
நவிலு மாக்கலை நவமென
பிறழ்ந வக்கலை பிரண வக்கலை
பெரும றைக்கலை முலமே 682

ஒலிவொ லித்திறன் ஓசை மாமொழி
ஓங்கு றும்மறை ஓம்மறை
ஒலியி யற்றிறன் ஓசை மாநெறி
பாங்கு றும்கலை ஓம்கலை
ஒலிநெ றிக்கலை அலைய சைக்கலை
ஒலிய லைத்திறன் உள்ளமே
ஒலிம றைத்திறன் ஒமு றும்பொருள்
பிரண வத்தியல் மாமறை 683

அறிதல் பிரணவம் ஆற்றல் பிரணவம்
உணர்தல் பிரணவம் ஓமெனா
குறித்தல் பிரணவம் கூர்தல் பிரணவம்
கற்றல் பிரணவம் கலையெனா
நெறித ருங்கலை நிலைவு றுங்கலை
நீளி யல்தரும் ஓம்நெறி
குறித ருங்கலை ஒளியி னாலுறும்
கூர்ம திக்கலை ஓம்மறை 684

வான மாத்துளி வகையு ணர்ந்துறும்
விண்ணொ ளிக்கலை யாற்றலால்
வான மாயியல் நெறித ருங்கலை
ஒம்வொ ளிக்கலை மூலமே
வான மூலமும் வைய மூலமும்
வளரு மூலமும் ஒமெனா
வான மாநெறி சிற்ற வைத்திறன்
வகுத்து றுங்கலைச் சாற்றுமே 685

அண்ட மாக்கலை அண்ட மோங்குறும்
அறிவி யற்கலை யாக்கமும்
அண்ட மாநெறி மூல மாக்கனல்
நெறியி யற்றிறன் நோக்கமும்
எண்டி சைக்கலை தென்றி சைநெறி
தென்ற மிழ்நெறி ஒமெனா
வண்ட மிழ்க்கலை மறைநெ றித்திறன்
ஒம்நெ றித்தமிழ் மூலமே 686

தமிழ்நெ றிக்கலை ஒமே னும்மொளி
தண்ட மிழ்ழிசை ஒம்வொலி
தமிழ்நெ றித்திறன் ஒம்ம றைக்கலை
மாம றைக்கலை நெறியின்சீர்
தமிழ்ம றைக்கலை ஒளிநெ றிக்கலை
தூநெ றித்திறன் மாநெறி
தமிழ்நெ றித்திறன் சிற்ற வைக்கலை
ஒம்க லையியல் கூடுமே 687

மூல மாத்தமிழ் ஒமெ மூத்தியல்
முற்று மாநெறிச் சிற்றவை
கால மாநெறி கணித்த மிழ்க்கலை
கணக்கி யல்நெறி மேலதாய்
சில மாநெறி நெடுங்க ணக்கியல்
குறுங்க ணக்கியல் செப்புறும்
மூல மாமொழி ஒம்ம றையியல்
முழுது ணர்கலை சாற்றுமே 688

ஐந்தொ ழிற்றிறன் ஐங்க லைத்திறன்
ஐந்நெ றித்திறன் ஆக்குறும்
ஐந்து மைந்துமாய் சிற்ற வைக்கலை
ஆக்கு றுங்கலை நோக்குறும்
ஐந்து ணர்நெறி முல மாத்திறன்
அறுநி லத்தியல் உண்மையும்
உந்து றும்உழைப் பியல்நெ றித்திறன்
ஒம்க லைத்திறன் ஆக்கமே 689

தண்பு னல்நெறி தீக்க னற்குறி
தகுவ ளித்திறன் ஆற்றலும்
வண்மை வானமும் உண்மை வையமும்
வகுத்து றுங்கலை தேற்றமும்
எண்மை மாநெறி இயலு மாக்கலை
எண்க ணித்தநிலை ஏற்றமும்
நுண்மை யாலுறும் பெருங்க லைத்திறன்
நவிலுறும் ஒம்நெறி யாற்றலே 690

நவிலு தல்நவம் நாட ருங்கலை
நண்ணு தற்குறும் வானமும்
புவிநி லைக்கலை வான மாநெறி
பெருநெ றித்திறன் இயலதாய்
நவிலல் நாடலும் நண்ணு றுங்கலை
நினைப்பு றுங்குறி யுணர்வினால்
நவிலு மாமறை ஒம்த ருங்கலை
பிரண வத்துமறை முலமே 691

கண்ணொ ளிக்கலை கருத்து ணர்ந்தநெறி
கலைத ருங்கலை முலமாய்
விண்ணொ ளிக்கலை வகுத்து ணர்ந்தநெறி
வியனி லைக்கலை காலமாய்
எண்ணி யற்கலை முல மாமறை
எட்டோ டெட்டுமாச் சிற்றவை
எண்ணு மாநெறி மறைநெ றித்திறன்
ஒளிநெ றித்திறன் ஆற்றலே 692

புருவ மாநடுவின் ஓங்கு பேரொளி
இருவி ழிச்சுடர் நாட்டமாய்
அருவ மாநிலை உருவ மாநெறி
அருவு ருத்திறன் தேட்டமாய்
ஒருமை மாநெறி தென்றி சைநெறி
விண்மு கத்துகுறி கூடலான்
புருவ மாநடுவி லாட லான்கலை
சிற்ற வைக்கலை கூடுமே 693

சிற்ற வைக்கலை ஓமு ணர்த்துநெறி
சீரி யற்கலை தெற்றென
உற்று மாக்கலை ஓமு ணர்த்துகலை
ஒருமொ ழித்திறன் எண்ணெனா
தெற்ற னத்தெரி சீர்மை மாயியல்
உணக்கி யல்நெறி கூறென
உற்று றுங்கலை ஓமு றுங்கலை
ஒளிரு மாமறை ஓம்மறை 694

ஒளிமு தற்கலை மொழிமு தலொலி
தமிழ்த லாயுறும் மெல்லொலி
தாவு ணர்வுறும் அமிழ்த லாயுறும்
தனிநி லைக்கலைச் சீரொலி
கால மாயியல் கண்டு ணர்ந்தகலை
ஐந்தொ ழில்நிலை உமிழொலி
சீல மாநிலை தமிழொ லித்திறன்
செப்பு மாக்கலை ஓம்மறை 696

தால சைத்துறும் தனிநி லைவொலி
தமிழ்த லாயுறும் மெல்லொலி
தாவு ணர்வுறும் அமிழ்த லாயுறும்
தனிநி லைக்கலைச் சீரொலி
கால மாயியல் கண்டு ணர்ந்தகலை
ஐந்தொ ழில்நிலை உமிழொலி
சீல மாநிலை தமிழொ லித்திறன்
செப்பு மாக்கலை ஓம்மறை 696

அமிழொ லித்திறன் ஆற்ற லாயுறும்
　　அறுநி லைக்கலை இமிழொலி
குமிழொ லித்திறன் கூர்த்த மாமதி
　　கொண்டு நோக்குறும் தேற்றமாய்
உமிழொ லித்திறன் உள்ளி ருந்துவரும்
　　உவகை யாநிலை ஓர்ந்துமே
தமிழொ லிக்கலை தண்ண ளித்திறன்
　　தனித்த மாநெறி யாற்றலே　　697

எண்ணி யற்கலை எழுநி லைத்திறன்
　　எண்ணு றுங்கலை மூலமாய்
விண்ணி யற்கலை நிறைமொ ழித்திறன்
　　மறைமொ ழிக்கலை ஓசையாய்
மண்ணி யற்கலை மாக்க லைத்திறன்
　　மெய்க்க லைமொழி ஆக்கமாய்
எண்ணின் மாக்கலை சிற்ற வைக்கலை
　　இயங்கு மாநெறிப் பிரணவம்　　698

பிரண வக்கலை பேர ருட்கலை
　　பெருந்தி றன்விலி நோக்கியே
அருளு றுங்கலை உயிர்க்க லைமொழி
　　உயிரி யல்மொழி பிரணவம்
திரண்டு றும்வகை வானி யல்வொலி
　　தேமொ ழிக்கலை பிரணவம்
முரணு றாவகை முந்நெ றிச்சுடர்
　　மூன்று மாநிலை பிரணவம்　　699

உயிர்க்க லைநெறி ஓங்கு மாறியல்
　　உயிர்க் கரு தோன்றுமே
உயிர்நெ றிக்கலை மாறி லாவகை
　　உண்மை யாயியல் வளருமே
செயிர றும்நெறி சீர்பெ ருங்கலை
　　செந்நெ றிக்கலை காலமாய்
உயிர்ப்பு றுந்திறன் எண்மை யாக்கலை
　　பிரண வக்கலை ஆற்றலே　　700

எண்மை யாலுறும் இயங்கு மாநெறி
எண்ணி யற்கலை நோக்குறும்
எண்ணு றுந்திறன் உணர்வி னாலுறும்
எட்டு மாநெறி யாற்றலால்
விண்ணு றுங்கலை சிற்ற வைத்திறன்
விளங்கு றுங்கலை ஆய்ந்துசீர்
நன்று றுங்கலை மெய்ம்ம றைத்திறன்
நாலி யற்கலை யாற்றலே 701

ஒசை யாலுறும் உண்மை யாயியல்
ஓங்கு ணர்நெறி ஒளிக்கலை
ஓசை மாமொழி மறைமொ ழிக்கலை
நிறைமொ ழித்திறன் நோக்குறும்
ஓசை யெண்ணிலை நெறியு ணர்த்துமுறை
ஓமெ னுந்திறன் உணர்த்துவிர்
ஓசை யெண்ணிலை கலைத்தி றன்நெறி
ஓமெ னுங்கலை யாற்றலே 702

ஓமெ னும்மொழி ஒரெ ழுத்தியல்
ஒரும றைத்திறன் ஆக்கமே
ஓமெ னுங்கலை மாநெ றிக்கலை
மெய்ப்பொ ருள்நெறி வுணர்த்துமே
ஓமெ னுங்கலை அறம்த ரும்மொழி
மறத்தை மாய்க்குமோர் மறைமொழி
ஓமெ னுமியல் ஒண்ணி லைக்கலை
மெய்யி யல்நிலை யாக்குமே 703

உள்ளொ ளிக்கலை உணர்வு றுந்திறன்
ஓங்கு மாநெறிப் பிரணவம்
தெள்ளொ ளிக்கலை சீர்நெ றித்திறன்
திருநெ றிக்கலை மறைமொழி
உள்ளு றுந்திறன் சிற்ற வைநெறி
முறையு றுந்திறன் நோக்குமே
விள்ளொ ளிக்கலை விறு மாத்திறன்
மெய்க்க லைநெறி பிரணவம் 704

ஓமெ னும்மொலி மூல மாமொழி
　　மூல மாமறை யாற்றலாய்
ஓமெ னும்மொளி மெய்யி யற்கலை
　　உருநி லைக்கலை மூலமாய்
ஓமெ னும்கலை இயற்றி றன்நிலை
　　ஒருமொ ழித்திறன் காலமாய்
ஓமெ னும்மறை ஒளிர்ம றைத்திறன்
　　உயிர்ப்ப டைக்குமா மெய்க்கலை 705

கால மாநெறி கணித்து றுங்கலை
　　கணக்கி யற்கலை மூலமும்
மூல மாயியல் ஆட லான்நெறி
　　முகிழ்த்து றுங்கலை கோலமும்
சீல மாக்குறும் தென்னி லைக்கலை
　　தெரிநி லைக்கலை எண்மையும்
கோல முங்கலை குறிப்பி னென்மையும்
　　கூறு மாநெறிப் பிரணவம் 706

பிரண வக்கலை மாம றைநெறி
　　பேசு மாத்திறன் ஆகமம்
பிரண வத்திறன் இயல்நி லைக்கலை
　　பெட்பு றுந்திறன் நாடியே
அரணு றும்மறை மெய்ம்ம றைப்பொருள்
　　அண்ட மும்முயிர் ஆக்குசீர்
பிரண வக்கலை ஓம்க லைநெறி
　　ஓம்ம றைநெறி யுன்னுவீர் 707

உன்னு வீர்கலை ஓம்க லைநெறி
　　உயிர்ப்பு றும்நெறிப் பிரணவம்
பன்னு வீர்மறை மூல மாமறை
　　ஒவி யற்கலை யாக்கமே
தென்றி சைக்கலை தென்றி சைமொழி
　　சீர்நெ றிக்கலை பிரணவம்
மன்னு மாக்கலை பிரண வத்தியல்
　　மாம றைநெறி நுட்பமே 708

ஓசை யாலுயர் ஒலிக்க லைமறை
உயிர்ப்பு றுந்திறன் ஓங்குவீர்
மாச றுக்குநிலை மதிய றிக்குநெறி
உயிர்ப்ப ளிக்குநெறி மாமறை
ஓசை மாநெறி மூல மாயுணர்
ஓம்க லைத்தெரி யாக்கமும்
ஓசை யாலுறும் மெய்க்க லைநெறி
யியல்தெ ரிக்கலை பிரணவம் 709

எண்ணி லைக்கலை மூல மாநெறி
சிற்ற வைக்கலை கணக்கியல்
விண்ணி யங்குகலை ஒளிவி ளங்குநெறி
வெளிவி ளங்குறும் ஒளியினால்
கண்ணி லங்குமொழி காரி லங்குகுறி
கலையி லங்குமிய விசையினால்
எண்ணி லங்குமொளி இயலி லங்குதிறன்
பிரண வத்திற னாக்கமே 710

உணர்வி னாலுறும் மாம றைக்கலை
உயிர்ப்பு றும்மொளி ஓம்நெறி
உணர்வி னாக்கமும் உழைப்பும் ஊக்கமும்
மெய்த்தி ருவளி மாமறை
உணர்நி லைக்கலை ஒளிநெ றிக்கலை
எண்க லைநிலை யாக்கமாய்
உணர்சி றந்தகலை ஓங்கு மாநெறி
சிற்ற வைக்கலைப் பிரணவம் 711

ஊக்க மாக்கலை உணர்வு றுந்திறன்
ஒளியி யற்றிறன் நல்குமே
ஆக்க மாநெறி அருளி யல்நெறி
ஆக மக்கலை அளிக்குமே
தேக்கு மாறியல் சீர்மை மாநெறி
தென்றி சைக்கலை மல்குமே
நோக்க மாயொளி விண்ணொ ளிக்கலை
ஓம்ஒ லிக்கலை யாற்றலே 712

மாச றத்துநல் மதிய றிந்துசீர்
மாக்க லைத்திறன் வழங்குமே
ஓசை யும்மொழி கலைநி லைத்திறன்
ஒளிமொ ழிக்கலை உணர்த்துமே
ஓசை மாக்கலை மாநெ றித்திறன்
உணர்நி லைக்கலை கூட்டுமே
ஓசை சீர்நெறி மாவி யற்கலை
ஓம்நெ றிக்கலை பிரணவம் 713

பிரண வக்கலை பெரிய மாமறை
பேச ரும்மறை திருமொழி
பிரண வத்தியல் விளம்பொ னாக்கலை
பெட்பு றுங்கலை ஒருமொழி
பிரண வத்துறும் அரிய நற்கலை
உரிய உண்மை உணர்த்துமே
பிரண வத்துறும் எண்ணின் மாநெறி
ஆட லான்நெறிச் சிற்றவை 714

சிற்ற வைக்கலை விண்ணி லைநெறி
தேட ரும்நெறி மூலமே
உற்ற மாயியல் மாக்க லைநெறி
ஒளிரு மாநெறி யாற்றலால்
உற்று றும்நெறி உணர்வு றுங்கலை
ஓம்க லைநெறி யாக்கமாய்
தெற்று றுங்கலை சீர்நெ றித்திறன்
தேர்நெ றிக்கலைப் பிரணவம் 715

தேர்நெ றிக்கலை கால மாயியல்
தேர்த்து கள்பொழு தாக்கமும்
தேர்நெ றிக்கலை மூல மாயியல்
திருநெ றிக்கலை நோக்கமும்
நேர்நெ றிக்கலை நிலைநெ றித்திறன்
நெடிது ணர்மதி யாற்றலால்
சீர்நி லைக்கலை ஒருநெ றித்திறன்
கடிது ணர்த்துநல் பிரணவம் 716

பிரண வக்கலை விண்ணு மண்ணுமாய்
பெட்பு றுந்திறன் உணர்த்துமே
பிரண வத்தியல் அண்ட பிண்டமும்
ஒளிவெ ளிக்கலை சாற்றுமே
பிரண வத்துறம் அணுவ ணுத்திறன்
பெருநி லைக்கலை கூட்டுமே
பிரண வத்திசை ஒலிய லைத்திறன்
அணுயி யற்றிறன் நாட்டுமே 717

எண்ணு ணர்த்துகலை விண்ணு ணர்த்துமொழி
இசையு ணர்த்துகலைச் சிற்றவை
பண்ணு ணர்த்துநெறி பாரு ணர்த்துமியல்
நேரு ணர்த்துநிலைச் சிற்றவை
கண்ணு ணர்த்துமொழி கலையு ணர்த்துமொலி
காரு ணர்த்துநிலைச் சிற்றவை
தண்ட மிழ்க்கலை ஓம்ம றைத்திறன்
தனிநி லைக்கலை பிரணவம் 718

வான மாயியல் விசும்பி நுட்பமும்
விண்ணின் திட்பமும் வழங்குமே
வான மாநெறி வெளிவொ ளித்திறன்
விண்ணொ ளித்திறன் கூட்டுமே
வான மாக்கலை ஒளிவெ ளித்திறன்
மூல மாக்கலை நாட்டுமே
வான மாமறை ஒலியி னாலுறும்
பிரண வத்தியல் நுண்மறை 719

கால முங்கலை கண்க்கி யல்நெறி
கருது மாக்கலை மூலமும்
மூல முங்கலை நாற்பு றத்தியல்
மூன்று மாநெறி சீலமும்
கோல மாநெறி குறிப்பு றுங்கலை
குறித்து றுங்கலை ஆக்கமும்
சீல மாநெறி சீர்சி றக்குநெறி
தேர்க்க லைநெறி கூட்டுமே 720

காட்டு மேகலை காட்டு மேநெறி
கணக்கி யல்நெறி கூட்டுமே
எட்டி யல்நெறி எண்ணி யற்கலை
எழுத்தி யற்கலை சேர்க்குமே
முட்ட நற்கலை மூல மாவனல்
முன்னு றுங்கலை நாட்டுமே
ஈட்ட ரும்பொருள் உண்மை மாநெறி
எண்ணி லைதரும் பிரணவம் 721

வெம்மை மாற்றுறும் தன்மை யுந்திரு
மெய்நி லைக்கலை கூட்டுமே
செம்மை மாநெறி சீர்மை யுண்மையும்
திருநெ றிக்கலை கூட்டுமே
மும்மை யுங்குறி கால மாக்கலை
மொழியு றும்நிலை சேர்க்குமே
செம்மை யாயியல் சீர்நெ றிக்கலை
திருநெ றிக்கலைப் பிரணவம் 722

பிரண வக்கலை நுட்ப மாக்கலை
உயிர்ப்பு றுங்கலை யாகமம்
பிரண வக்கலை ஐம்பெ ருங்கலை
ஐந்நெ றிக்கலை யாற்றலாய்
பிரண வத்தியல் நெறிப டைத்தமுறை
பெருங்க ணக்கியல் தன்மையாய்
பிரண வத்துறும் எண்க லைத்திறன்
நுண்க லைத்திறன் நாடுவீர் 723

நாடு வீர்கலை அகவெ ளித்திறன்
நன்னு வீர்மறை பிரணவம்
தேடு வீரியல் திருநெ றிக்கலை
செப்பு வீர்மறை யாகமம்
பாடு வீர்கலை ஒமெ மூத்தியல்
மூல மாயியல் பன்னுவீர்
நாடு றுங்கலை நண்ணு றுங்கலை
ஒம்ம றைக்கலை மூலமே 724

வேறு

அறிபிரண வத்தி னாலே
கலையெலா மறிந்து ணர்ந்து
குறிபிரண வத்தி னாலே
கூர்த்தமா நெறியு மெய்தி
செறிபிரண வத்தி னாலே
அணுவணு ஒளியு மோர்ந்து
அறிகலை யியலு மாய்வீர்
அகவெளி ஒளியு மாய்வீர் 725

ஒளிவெளித் திட்ப மொன்றே
ஓம்கலை நுட்பங் காட்டும்
ஒளியியற் கலைத்தி றத்தால்
ஒலிமறை யியலு மாய்ந்து
வெளிக்கலை மூல நுட்பம்
வளிவொளி யியல றிந்து
ஒளியறிக் கலையி னாலே
ஓம்கலை நாடு விரே 726

ஓம்கலை உணர்வே ளித்தே
உயிர்ப்புறும் மெய்ம்மை நல்கும்
ஓம்கலை வண்மை ஈயும்
உள்ளமா சறுத்து நாளும்
தாமுறும் எண்ணம் திண்ணம்
வண்மையும் சாற்றி நின்று
ஓம்வொளிக் காட்டி யாண்டும்
மறைக்கலை யுணர்த்து மன்றே 727

மெய்யியல் பொருளு மாய்ந்து
மெய்க்கலை நுட்பத் தாலே
மெய்யுறு முண்மை யாலே
மூலமாக் கலைய றிந்து
மெய்யுறும் ஐங்கு டிக்குட்
அறுநிலத் தன்மை நோக்கி
மெய்நிலைக் கலையை யாய
ஓம்நெறி நாடு விரே 728

நாட்டமும் ஓமெ மூத்தே
நண்ணுதல் ஓம்நெ றிக்கே
நாட்டுறும் மூல மொன்றே
பிரணவ நெறியே யாகி
தேட்டுறு மாட லானின்
சீர்க்கலை யியலு ணர்ந்து
ஏட்டியற் கலையை நாடி
பிரணவம் எண்ணு வீரே 729

எண்ணுவீர் பிரண வத்தை
யியற்கலை முழுது மாய்ந்தே
நண்ணுவீர் சிற்ற வைக்கே
நாடுவீர் மூலப் புள்ளி
எண்கணக் கியலை யாய்ந்து
விண்ணொளி மூலங் கண்டே
விண்ணொளி நுட்பத் தாலே
பிரணவம் நாடு வீரே 730

உண்மையாம் பிரண வத்தை
உண்மையாய் உளத்தால் நாடி
வண்மையாய் உணர்ந்து ணர்ந்து
வகையொளி வகையால் நோக்கி
எண்மையாம் மூல நுட்பம்
யியலுமா ஒளியுங் கேட்டு
நுண்மையா யாயுங் காலை
நுவலரும் மறையுங் காண்பீர் 731

கலைமுதற் பொருளே யாகி
கனிமுதற் பொருளே கூட்டும்
நிலைமுதற் பொருளே யாகி
மாநெறித் திறமு மாக்கும்
தலைமுதற் றண்மை யாலே
தனிநிலை அறமும் நல்கும்
கலையியல் மறையே கூறும்
கணிப்பியல் ஓமெ மூத்தே 732

ஓமெழுத் துண்மை காண்டல்
ஒளிக்கலை நெறியி னாய்தல்
ஓமெழுத் தொளியைக் காண்டல்
ஒளிநிலைத் தன்மை நாடல்
ஓமெழுத் தொலியைக் கேட்டல்
மெய்ம்மையாம் பொருளை யாய்தல்
ஓமெழுத் துண்மை யன்றோ
தென்மொழி மூல நுட்பம் 733

தென்றிசைக் கலையின் திட்பம்
தென்மொழி மூல நுட்பம்
நன்றுறும் உயிர்க்கு லத்து
நல்லொளி நுண்மை யாகி
தோன்றுறும் வானின் ஓசை
மெல்லொலி யியலே யாகி
அன்றுறு மாற்ற லன்றோ
அறிபிரண வத்தி னாற்றல் 734

அறிபிரண வத்தைக் கண்டே
ஐம்புலன் வென்று நோக்கி
குறிபிரண வத்தைக் கண்டு
கூர்த்தமா ஒளிய றிந்து
நெறிபிரண வத்தி னாலே
நிலையுயிர் படைப்ப தற்கு
அறிகலை நுட்ப மாய்வீர்
பிரணவம் நாடு வீரே 735

எண்ணிலாப் பொருளை ஈயும்
ஓமெழுத் தியலை யாய்ந்து
எண்ணியற் கலையு மாய்ந்து
எண்ணியல் நெறித்தி றத்தால்
எண்ணுறும் ஆற்ற லாலே
சிற்றவை மூலந் தேர்ந்து
விண்ணுறும் ஒளியும் நாடி
அகவெளி நுட்ப மாய்வீர் 736

ஐம்பொறி புலனு மாய்ந்து
அகவெளி நுட்பந் தேர்ந்தே
செம்மைமா நெறியு ணர்ந்தே
திருநெறி மூல மோர்ந்து
அம்முதற் பொருளே ஓமென்
றுணர்ந்துறு மாற்ற லோர்ந்து
செம்மைசால் பிரண வத்தின்
சீர்நெறி நாடு வீரே 737

அண்டமூ லத்தை யாய்ந்தே
அறிவியல் முழுதும் நாடி
பிண்டமூ லத்தை யாய்ந்தே
பேரரு ளியலும் நாடி
விண்டதோர் உண்மை கண்டே
விண்ணொளிக் கலையும் நாடி
எண்ணியல் மூலத் தாலே
ஓம்நெறி நாடு வீரே 738

ஓம்நெறி நாளும் நாடி
உடலுளைப் புணர்வும் உற்றே
ஓம்குறி நாளும் கண்டே
உள்ளூறும் ஆற்ற லுற்றே
ஓம்மியற் கலையை யாய்ந்தே
ஒருபிரண வத்தை நாடி
ஓம்மியல் நெறித்தி றத்தால்
பிரணவம் நாடு வீரே 739

மனிதமாப் பிறவி யொன்றே
மாக்கலை நுட்ப மாயும்
மனிதமாப் பிறவி யொன்றே
ஒளிவொலி நுட்பந் தேர்ந்து
புனிதமா நெறியு மாயும்
பேரொளி யுண்மை யாயும்
புனிதமாம் ஓமெ மூத்தைப்
பொற்புறக் கண்டு கேட்கும் 740

ஓம்மறை மூல மென்றே
    ஒருபொரு ளுணர்வே பெற்று
ஓம்கலை கால மென்றே
    பெரும்பொருட் சீலம் பெற்று
ஓம்நிலை யியலு ணர்ந்தே
    ஒளிவெளி ஒளியு மாய்ந்தே
ஓம்கலை நுட்பத் தாலே
    ஒலியியற் றன்மை காண்பின் 741

நுட்பமா மதியி னாலே
    நுவலரும் பிரண வத்தை
திட்பமாய்க் கண்டு ணர்ந்து
    சீரொலி செவியிற் கேட்டும்
பெட்புறும் மதியி னாலே
    பெருங்கலைத் தன்மைத் தேர்ந்து
எட்டியற் கலைய றிந்து
    சிற்றவை நாடு வீரே 742

சிற்றவை மூலத் தன்மை
    திருநிலை காலத் தன்மை
உற்றவை ஓமெ ழுத்தாய்
    ஒருபிரண வத்தி னாற்றல்
கற்றமா யியல றிந்து
    கருதுறும் உணர்வி னாலே
தெற்றென உணர்வி னோங்கும்
    ஓமெழுத் தியலே யன்றோ 743

மூலமே எவைக்கும் மூலம்
    மூலகா லத்தி னாக்கம்
மூலகா லத்தின் ஆற்றல்
    காலமூ லத்தின் தேற்றம்
சீலமா நெறித்தி றத்தும்
    செம்மையுஞ் சிற்ற வைச்சீர்
காலமாக் குறிகு றித்தும்
    காலமா மூக்கின் தேற்றம் 744

தேற்றமும் உண்மை வண்மை
செழும்பொருள் ஐந்நெ றிக்கும்
ஏற்றமும் நுண்மை எண்மை
இயல்நி லைக்கலை யறிந்து
ஆற்றலும் ஐந்தின் மூலம்
ஐயைந்தின் யியல றிந்து
தேற்றுறும் கால முச்சீர்
நெறியறிந் துரைக்க லாமே 745

நீர்நெருப் பியலின் உண்மை
நெறியினா லுணர்ந்து ணர்ந்து
சீர்நெறி விண்ணொ ளிச்சீர்
திருமிகும் பாரி டத்தும்
ஏர்நெறி ஒலிக்க லைச்சீர்
ஒம்மிய லாய்ந்து நாளும்
தேர்நெறிக் கலைச்சி ராக்கம்
செறிமுறைக் காண லாமே 746

முறைக்கலை மூல மன்றோ
முச்சுடர் முந்நெ றிக்கும்
அறைக்கலை யியலி னாலே
ஐங்கலை யாக்கங் கூட்டும்
மறைமொழி யியலும் வண்ணம்
மாநெறிச் சீர்மை நோக்கி
நிறைமொழி யுண்மை யாலே
நெறிநிலை நவில லாமே 747

வண்மொழி மூலத் திண்மை
வகைவளர் கால நுண்மை
எண்மொழி கோல நுண்மை
எண்மையி னியல்நெ றிச்சீர்
எண்ணியல் மூலத் தாலே
மூலமா யியலு மாங்கண்
எண்ணொளி சீலங் காட்டும்
பிரணவ நெறியே யாய்மின் 748

பிரணவ நெறித்தி றத்தால்
    பெருங்கலை உணர்வே பெற்று
அரனுறு மண்ட மாழி
    செங்கதி ரியல றிந்து
முரனுறா வகையும் நோக்கி
    ஐம்பொருள் தன்மை சூர்ந்து
பிரணவ மூல நுட்பம்
    பெருங்கலைக் காலத் திட்பம் 749

காற்றுறு மொளியி னாற்றல்
    காற்றுறு மணுக்கள் தேற்றம்
காற்றுறும் பரப்பின் தன்மை
    வெளியியற் வன்மை கூட்டும்
காற்றுறும் உயிர்த்தொ கைக்கும்
    கண்ணுறும் மெய்யி னாக்கம்
காற்றுறும் முச்சுங் கூட்டும்
    வெளிவளித் தன்மை யாய்விர் 750

எரிநிலைத் தழலி னுண்மை
    கனலனல் ஒளியா யாகி
எரிகலைத் திட்ப நுட்பம்
    பருப்பொருள் மூல மாற்றல்
எரியியற் கனலெ ரிக்கும்
    மூலமாக் கனலை யாய்ந்து
விரிநிலை பாரின் மென்மை
    விண்ணுறும் வண்மை யாய்வின் 751

நீரின லணுக்க ளாய்தல்
    நீருயிர் தன்மை நோக்கல்
நீரியல் வண்மை காண்டல்
    நீரியல் தேற்ற மெண்ணல்
நீரியல் மூலத் தாலே
    நிலையொலி நிலத்துங் காண்டல்
நீரியல் ஆக்க மன்றோ
    மண்ணுறும் விண்க லைக்கே 752

மண்ணியல் கலைத்தி றத்தும்
விண்ணியல் நெறித்தி றத்தும்
எண்ணியல் நெறியா லாய்ந்தே
இயல்நிலைக் கலையுங் கூர்ந்து
எண்முறை யாக்கக் கூர்மை
எண்ணெறித் திறத்தி னோர்தல்
விண்கலை யாக்கத் தாலே
வியனிலைச் செம்மை கூட்டும் 753

செம்மையே பிரண வத்தின்
செறிநிலை ஒளியாற் கண்டே
செம்மைசால் மூலத் தன்மை
அறுநிலைத் தன்மை யாய்ந்து
செம்மையாம் ஐங்கு டிக்கும்
சீர்குடி அகவின் னோக்கி
செம்மைகூ ரியலி னாக்கம்
செறிமுறை யுண்மைத் தேர்மின் 754

நாட்பொழு துழைப்பி னாலே
நண்ணிலை வுகுவ நாட்டம்
நாட்பொழு தியல றிந்தே
இரவுறுங் காலங் கண்டே
வாட்கலை கூர்மை நோக்கி
வண்மையால் ஒளிம திக்கூர்
ஏட்டியல் பிரண வத்தின்
எண்ணிலை யாய்விர் நன்றோ 755

மாக்கலை மூல நுண்மை
மெய்யிய லறிந்து ணர்ந்து
மாக்கலை காலத் திண்மை
முக்கலை முச்சு டர்க்கும்
மாநெறி யாற்ற லன்றோ
எண்ணிலைக் கலையுங் கூட்டும்
மாக்குறி சிலந் தேர்ந்தே
ஓமுதற் கலையுங் காண்பிர் 756

கலைபிரண வத்தி னாலே
நெறிகலைப் படைப்புக் கூட்டும்
நிலைபிரண வத்தி னாலே
அருவுறுத் தன்மை சேர்க்கும்
தலைபிரண வத்தி னாலே
தன்னிலை யுணர்த்திக் காட்டும்
கலைநெறி யாற்ற லாலே
கலைநிலை நெறியுங் காண்பின் 757

எண்டிசை நிலைய றிந்து
எண்ணிலைக் கலையுந் தேர்ந்து
எண்டிசை மூலந் தேர்ந்து
தென்றிசைக் கலைய றிந்து
விண்ணுறு மொளித்தி றத்தால்
ஆடலான் நெறியுங் கூர்ந்தே
எண்முறை ஓமெ ழுத்தின்
நெறிமுறை யாய்மின் ஓர்மின் 758

விண்ணிலை அகவிண் ணோக்கால்
வியனிலை வெளிய கத்தும்
எண்ணிலை கலையின் மூலம்
எழுநிலை நாடி நாடி
கண்ணிலை யொளியி னாலே
கலையொளி நுட்பங் கண்டே
தெண்ணிலை யியற்கு றிப்பே
சீர்நெறி யாய்தல் காண்பின் 759

திருநெறிக் கலையின் வண்மை
சிற்றவை உண்மை யோர்ந்து
ஒருநெறித் திறத்தி னாலே
ஓமெழுத் துண்மை யாய்ந்து
பெருநெறி மூல நுட்பம்
பேரியல் காலத் திட்பம்
வருநெறி யுண்மை யாக்கம்
வளர்மறை ஓமெ ழுத்தே 760

ஓமெழுத் துற்ற வண்மை
ஒளியுறும் உண்மை யாகி
ஓமெழுத் துற்ற நுண்மை
வெளியுறும் திண்மை யாகி
ஓமெழுத் துற்ற சீர்மை
ஆடலான் கலையே யாகி
ஓமெழுத் தியலி னாக்கம்
சிற்றவை யியலே கூட்டும் 761

சிற்றவை மூலச் சிற்பம்
திருவெளி பெருவெ ளிக்கும்
சிற்றவை ஓமெ ழுத்தின்
திருநிலைக் கலையுங் கூட்டும்
உற்றவை ஓமெ ழுத்தே
மொழிமுதற் பொருளே யாகி
உற்றவை ஓமெ ழுத்தே
மறைமுதற் பொருளுங் கூட்டும் 762

உயிர்ப்பொருள் நாடி நாடி
உண்மையாம் ஒளிசி றக்கும்
உயிர்ப்பொருள் மூலங் கண்டே
எண்மையாங் கலைசி றக்கும்
உயிர்க்கரு மூல மாய்ந்து
பிண்டமா யியல்சி றக்கும்
உயிர்க்கலை காலத் தாலே
அண்டமா நெறியுங் கூட்டும் 763

அண்டமும் பிண்ட மாய்ந்து
அறுபொருள் நுட்பங் கண்டே
அண்டமு மண்ட மாயல்
பிண்டமுள் ளண்ட மாயல்
அண்டபே ரண்ட மாய்தல்
நெறிமுறைப் பிரண வத்தே
எண்டிசை மூல நுட்பம்
தென்றிசைத் தமிழே யன்றோ 764

தென்றிசைப் பிரண வத்தே
சீர்நெறி கலைசி றக்கும்
தென்றிசைச் செந்த மிழ்ச்சீர்
ஓம்கலை நெறிசி றக்கும்
நன்றுறும் பிரண வத்தின்
நெறியொளி நிலைக்க லைக்கும்
தென்றுறும் மூலத் தாலே
சிற்றவை நெறியுங் காண்பீர் 765

கற்றவை யுணர்தல் கேட்டல்
கலைநெறி மூலத் தாலே
உற்றறி உற்றுக் காண்டல்
உறுநெறிப் பயனு மெய்தல்
சிற்றவை மூல மன்றோ
திருநெறிக் கலையு மோர்தல்
உற்றுணர் தன்மை யாய்ந்து
மெய்ப்பொருள் காண்ட லன்றோ 766

எண்ணிலை எண்ணெ றிக்கும்
எண்முறை நெறியா லுண்ணி
எண்கலை யியலா லுற்றே
நெறிமுறை யுற்றுக் காண்டல்
விண்ணிலை பேரொ ளிக்கும்
வியனிலை ஆக்க முற்றே
நண்ணி லுடலொ ளிக்கும்
உயிரொளித் திட்ப மாய்தல் 767

கருநிலை மூலத் தாலே
கலைநிலை யியல்தெ ரிந்து
உருநிலை காலத் தாலே
உணர்நிலை கலையு மோர்ந்து
அருநிலை யுண்மை யாய்ந்து
ஆடலான் கலைநெ றிக்கும்
உருநிலை யியலின் கூற்றால்
ஓம்மறை யுரைக்கு மன்றோ 768

ஓம்மறை மூல நுட்பம்
ஒருபொரு ளியலா லாய்ந்து
ஓம்மறை காலத் திட்பம்
தென்றிசைக் கூற்றால் நோக்கி
ஓம்மியல் மூல காலம்
காலமூ லத்தி னாய்ந்து
ஓம்பொரு ளுண்மை நோக்கி
மெய்ப்பொருள் நிலையுங் காண்பின் 769

மெய்ப்பொருள் சிற்ற வைச்சீர்
மெய்நிலை யியலு மாய்ந்தே
மெய்யியற் கலையி னாக்கம்
உருபொரு ளுணர்ந்து காண்டல்
மெய்நிலைக் கலைசி றக்கும்
பருப்பொரு ளாய்ந்து ணர்ந்து
மெய்யுணர் சிலந் தேர்ந்து
விழுப்பொருள் காண்பின் ஆய்மின் 770

உற்றறி உணர்வி னாக்கம்
உறுசுடர் ஒலித்தி றத்தால்
உற்றறி மூலங் காண்டல்
மூலமாம் அறுநி லத்தும்
உற்றறி ஐங்கு டிக்கும்
பைங்குடி பெருங்கு டிக்கும்
உற்றறி ஓமெ மூத்தே
மூலமா யியங்கு மன்றோ 771

ஓமெழுத் தியலி னாலே
உறுபொரு ளுண்மைத் தேர்ந்தே
ஓமெழுத் தொலியி னாங்கண்
இசையொலி மூல மாய்ந்தே
ஓமெழுத் தாற்ற லாலே
மெய்க்கலை யியல றிந்து
ஓமெழுத் துண்மை யாலே
ஆடலான் நெறியைக் காண்பின் 772

எட்டியல் நெறியி னாலே
    ஐந்தியல் மூல முற்றே
எட்டுறும் நிலைதெ ரிந்தே
    மூலமாக் கலையுங் கூறும்
எட்டினால் எட்ட றிந்து
    சிற்றவை மூலங் காண்டல்
எட்டுறும் எட்டெட் டெட்டே
    எண்முறை ஒமெ ழுத்தே 773

ஒமெழுத் தியலி னாற்றல்
    ஒருபொருள் வழங்கு மாற்றல்
ஒமெழுத் துண்மை கூறும்
    மெய்ம்மறை யறிந்து ணர்ந்து
ஒம்கலை மூலத் தாலே
    இயற்பொருள் தன்மை காண்டல்
ஒம்நெறி குறியு ணர்த்தும்
    மறைமொழி நிலையு மாய்விர் 774

கலைமுதற் பொருட்டி றத்தும்
    கணக்கியல் மூலத் தாறும்
நிலைமுதற் கலைத்தி றத்தும்
    நெறியியல் ஆக்கங் கூர்ந்தும்
கலையியல் அறுபான் நான்கின்
    சிற்றவை யுணர்ந்து மாற்றல்
நிலையியல் நீள்க லைக்கே
    ஒம்மொழி மூல மன்றோ 775

ஒம்மொழி மூலத் தாலே
    தென்றிசை மொழிவ ளர்த்து
ஒம்மொழி மூலத் தாலே
    தென்மொழி மறைவ ளர்த்து
ஒம்மொழி மூல நுட்பம்
    தென்மொழி ஆக மத்தே
ஒம்மொழி காலங் காண்டல்
    ஒருபொருள் நிலையுங் கூறும் 776

அரும்பொருள் மூலங் கூறும்
ஓம்மறை யியல்தெ ரிந்தே
பெரும்பொருள் மூலங் கூறும்
ஆகமக் கலைதெ ரித்தும்
கருப்பொருள் மூலங் கூறும்
சிற்றவைச் சிற்பந் தேர்ந்தும்
வரும்பொருள் வகுக்கும் மூலம்
கட்டடம் ஒளி யத்தே 777

ஓவியத் துண்மை யோர்ந்து
ஒணிபொரு வியல றிந்தும்
காவியத் தன்மை கூர்ந்து
கனிப்பொருள் மூலங் கண்டும்
மேவிய சிற்பத் தாலே
சிற்றவை யியலின் தன்மை
மேவுறும் ஓமெ மூத்தால்
விளங்குறும் தன்மை காண்பீர் 778

எண்கலைப் பிரண வத்தின்
எண்ணுறும் ஆடல் கூறும்
நுண்கலைப் பிரண வத்தின்
நுவலருந் தன்மை தேர்ந்து
விண்கலைப் பிரண வத்தின்
வியனிலை ஆக்க மாய்ந்தே
எண்ணிலை மூலத் தன்மை
நெறிமுறை யுணர்ந்து காண்பீர் 779

காலமா யியல்தெ ரிந்தே
காலமு லத்தி னாய்ந்து
காலமா நுட்பந் தேர்ந்தே
காலமா விரைவு மாய்ந்தே
காலமா யியலின் நுட்பம்
கணக்கியல் நெறியுங் கூர்ந்து
மூலமா நுட்ப மன்றோ
முறைநெறிப் புள்ளி மையம் 780

மையமாம் புள்ளி யாயும்
வகைகணக் கியலி னாலே
வையமும் விண்ணு மாயும்
மெய்க்கலை யுணர்வே கூட்டும்
செய்யமாக் கலைதெ ரித்துச்
சீருறும் உண்மை கண்டே
எய்துறு மியல்பிற் றாய
பிரணவ மறையே யன்றோ 781

பிரணவ மறையின் மூலம்
பெரும்பொருட் கால மூலம்
பிரணவப் பொருளின் மூலம்
விண்ணுறு மொளியின் காலம்
பிரணவ இயல்சி றக்கும்
சிற்றவை நுண்மைத் தேர்ந்தே
பிரணவத் தாற்ற லாலே
எட்டுறு மொன்ப தாய்விர் 782

மாநெறி ஆற்ற லாலே
சிற்றலை நுண்மைத் தேர்ந்து
மாநெறி தேற்றத் தாலே
பிரணவக் கலையு மாய்ந்து
மாநெறி நுண்மை யாலே
பிரணவ அணுக்கள் கண்டு
தூநெறி சிறக்கத் தோன்றும்
திருநிலைச் சிற்பங் காண்பிர் 783

சிற்றவை நுட்ப மன்றோ
சிற்பமாப் பொருளே யாகி
உற்றவை கலைத்தி றத்தும்
ஒருபொருள் எண்ணொண் கூறாய்
உற்றறி திறத்தி னாலே
நாற்புறத் தியலு மாய்ந்து
உற்றுணர் மூலப் புள்ளி
உள்ளொளி கலையு ணர்த்தும் 784

கலையுணர் மூலத் தாலே
கணக்கியல் மூலங் காண்டல்
நிலையுணர் நெறியி னாலே
சிற்றவைப் பொரு மாய்தல்
கலைநெறி யியல்சி றக்கக்
களிநிலை தொன்மைத் தேர்ந்தே
நிலைநெறி ஆட லானின்
நெறிமுறி ஓமெ ழுத்தே 785

ஓமெழுத் தொளியி னாற்றல்
அண்டமா ஒலியி னாற்றல்
ஓமெழுத் தொலியி னாற்றல்
பிண்டமாக் கலையுங் கூறும்
ஓமெழுத் தியலி னாற்றல்
மாமறை விதிவ குக்கும்
ஓமெழுத் துணர்நெ றிக்கே
ஆகமம் வகுத்துக் கூறும் 786

வளர்வது மறைக்கூ றாகி
வகுப்பது மாக மத்தே
வளர்வதும் சிற்ற வைக்கே
பகுப்பதும் மெய்க்கூ றுண்மை
வளர்நிலை மூலத் துண்மை
கருமூலக் கலையே யாகி
வளர்கலை யியலால் காண்டல்
பெருமூலத் துண்மை கூட்டும் 787

மறைப்பொரு ளுண்மை நுண்மை
வகைவளர் கலையே யாகி
நிறைப்பொருள் வண்மை சாற்றும்
வாழ்நெறி வகுத்துக் காட்டும்
முறைநிலை யாக மத்தும்
வளர்கலைத் தன்மை நுட்பம்
மறைக்கலை யியல்மு லத்தின்
ஓம்பொருள் நுண்மை யன்றோ 788

ஓம்பொருள் நுண்மை காண்டல்
உயிர்ப்பொருள் எண்மை யாகி
ஓம்கலை நிறைமொ ழிக்கே
உயிர்க்கலை நிறைவின் தேற்றம்
ஓம்மியல் மறையொ லிக்கும்
ஒண்மையாய்த் தெளிவுற் றாய்ந்து
ஓம்நெறி மூலத் தாலே
ஆகமக் கலையு மாய்மின் 789

எண்ணிலை விண்ணுங் காண்டல்
எண்ணிலை உடலுங் காண்டல்
எண்ணிலைக் கணக்கு மாய்தல்
எண்ணெண்மா நெறியுற் றோர்ந்து
எண்ணிலை மூலங் காண்டல்
பருப்பொருள் தன்மை யோர்ந்தல்
எண்கலை நுட்பத் தாலே
பெருமறை உண்மை யாய்மின் 790

கருப்பொருள் ஓமெ மூத்தே
மொழிமுதற் கலையே யாகி
பருப்பொருள் ஓம்க லைக்கும்
பாரியல் நிலைவ குக்கும்
அரும்பொருள் ஓம்நெ றிக்கே
ஆகமம் விரித்துக் கூறும்
தரும்பொருள் ஓமெ மூத்தே
தமிழியல் தன்மை யன்றோ 791

தென்றிசை மூல மாகி
தென்றமிழ் முதன்மை யாகி
தென்கலை யியலி னாலே
சீர்நெறி சிறக்கக் கண்டே
தென்மொழி நிலைசி றக்கும்
பிரணவத் தியலி னாக்கம்
தென்னிலை மாநெ றிக்கே
சிற்றவைச் சிற்ப மன்றோ 792

ஒருபொருள் சிற்ற வைக்கே
உணர்பொருள் மூலங் காட்டும்
அரும்பொரு ளாற்றல் நல்கும்
சிற்றவை யியலுந் தேர்ந்து
பெரும்பொருள் பிரண வத்தால்
பெருநிலைக் கலையு ணர்ந்து
கருப்பொருள் விண்ணொ ளிக்கும்
கலைமுதல் ஒமெ ழுத்தே 793

ஒமெழுத் துண்மை காண்டல்
ஊழினை வெல்லக் கூட்டும்
ஒமெழுத் தியலி னாற்றல்
உயிரியல் ஆயக் கூட்டும்
ஒமெழுத் துண்மை நுண்மை
அண்டமா நெறியுங் காட்டும்
ஒமெழுத் தியலி னாற்றல்
மொழிநிலைக் கலையு ணர்த்தும் 794

தென்றமிழ் மொழியி னாற்றல்
சிற்றவைச் சிற்பத் தாற்றல்
தென்றமிழ்க் கலையின் வண்மை
ஒம்மொழி நுண்மை எண்மை
தென்றமி ழிசையின் எண்மை
ஆடலான் கலையி னாற்றல்
தென்றமி ழியல்தெ ரித்து
பன்மொழி நுட்ப மாய்மின் 795

பன்மொழி நுட்பங் காட்டும்
ஒமெழுத் தியலின் வண்மை
பன்மொழி நுட்பங் காட்டும்
சிற்றவைக் காலத் திண்மை
தென்மொழி மூல மாகி
தென்றிசைக் கால மாகி
தெண்ணிலை விண்மு கத்தால்
வானியல் பிரண வத்தே 796

வானியல் பிரண வத்தே
வகைவளர் கலையுங் கூட்டும்
வானியல் நெறிக்கு நுண்மை
தென்மொழி தமிழே யாகி
வான்வொலி ஒமெ மூத்தே
தென்கலை மூலத் தென்றல்
வான்மறைத் தமிழே யாகி
ஓம்மறை வளரு மன்றே 797

நாற்புறத் தியல்கூற் றாக்கம்
நல்வடி வுற்றுத் தோன்றும்
நாற்புற நடுவண் தோன்றும்
புள்ளிமா யியலின் மையம்
நாற்புற வடிவே யன்றோ
மெய்யிறை வடிவே கூறும்
நாற்புறத் தியலி னுண்மை
வண்மையும் நுண்மை யன்றே 798

ஒருவெளித் திறத்தி னுண்மை
உற்றுணர் வண்ணங் கண்டே
பெருவெளித் திறத்தின் கூற்றாய்
கணக்கியல் நெறியா லாய்ந்து
கருவெளி கண்டு ணர்ந்தே
பிண்டமா யியலுங் காட்டும்
திருநெறி மூலங் காட்டும்
ஓம்ஒளி மறையே யன்றோ 799

ஓம்மொலி மறையா லாய்ந்தே
ஓம்மொளி வெளிக்க லைக்கும்
ஓம்மொலி யிசைவுங் காட்டும்
திருநிலை யாற்றல் மூலம்
ஓம்நெறித் திறத்தி னாய
மெய்ப்பொருள் பயனு ணர்த்தும்
ஓம்குறி யாற்ற லாலே
இயல்மொழிப் பொருளு மாய்மின் 800

உறுபயன் விரித்துக் கூட்டும்
உண்மைமா நெறியுங் காட்டும்
உறுகலை விரித்து ரைத்து
மறைப்பொருள் வண்மை சேர்க்கும்
உறுசுடர் ஒளியி னாலே
ஊழினை வெல்லல் கூட்டும்
உறுநெறி ஒமெ மூத்தே
எண்ணுணர்ந் தாய்மின் ஒர்மின் 801

பற்பல கலைபெற் றாலும்
பன்மறை படைத்து ணர்ந்து
பொற்புறு மாற்ற லாலே
செழும்பொரு ளறிந்த போதும்
உற்றுணர் ஒமெ மூத்தே
மூலமா மறையே யாகி
தெற்றெனக் கலையு ணர்த்தும்
திருநிலை யுண்மை காண்மின் 802

எக்கலை எம்மொ ழிக்கும்
எம்மறை யாக மத்தும்
மிக்குறும் பொருளே யாகி
ஒம்மொழி சிறக்கக் கூட்டும்
அக்கலை ஒமெ மூத்தே
அம்முதற் மறையே யாகி
அக்கலை சிறக்கு மாற்றல்
அருந்தமிழ் மொழியே யன்றோ 803

ஒம்நெறி காலங் காட்டும்
ஒம்குறி யியலு ணர்த்தும்
ஒம்கலை பயனே நல்கும்
ஒம்மறை ஊழை வெல்லும்
ஒம்திறன் உழைப்பு ணர்த்தும்
ஒம்நிலை ஊக்கம் நல்கும்
ஒம்மொளி உணர்வ ளிக்கும்
ஒம்மொலி மொழியே யன்றோ 804

கண்டுணர் அறிவி னாலே
ஓம்மொளி கலையைக் காண்மின்
விண்டுணர் அறிவி னாலே
ஓம்மொலி யியலை யாய்மின்
பண்டுணர் மொழியி னாலே
பைந்தமிழ் நெறியை யாய்மின்
எண்டிசை மூலத் தாலே
சிற்றவை மூலங் காண்பின் 805

ஒருநெறி யாற்ற லாலே
ஓம்மொழிப் பொருளு ணர்ந்து
திருநெறி தேற்றத் தாலே
ஓம்கலை நுட்பங் கண்டே
பெருநெறி உண்மை யாலே
ஓம்மறை திட்பந் தேர்ந்து
அருநெறி யாற்ற லாலே
ஆகமத் துண்மை யாய்மின் 806

மூலமா யொளிசி றக்கும்
முக்கனல் நெறிதெ ரிக்கும்
சீலமாக் குறிசி றக்கும்
தென்றிசை யியல்தெ ரிக்கும்
காலமாக் கடவுள் காட்டும்
விரைவியல் சுழற்சி யாலே
சீலமாத் திட்ப நுட்பம்
சிற்றவை மறையை யாய்மின் 807

சிற்றவை மறையே மூலம்
சீரியல் ஒமெ மூத்தே
உற்றதும் ஒரெ மூத்தே
உணர்வதும் ஒரெ மூத்தே
கற்பதும் ஒரெ மூத்தே
கலைமறை முதலெ யாகி
விற்பலம் காண்ப தற்கும்
மெய்ம்மறை ஒமெ மூத்தே 808

ஓமெழுத் தொளிசி றந்தே
உள்ளொளி மேவக் கண்டும்
ஓமெழுத் துண்மை யார்ந்தும்
சிற்றசைச் சிற்ப மாய்ந்தும்
ஓமுறும் பொருள்தி றத்தால்
ஓம்மியல் ஆய்ந்து ணர்ந்து
ஓமுறும் முதலெ ழுத்தே
ஒண்டமிழ் மறையைக் காண்பின் 809

தமிழ்மறை ஓமெ ழுத்தே
தென்றமிழ்க் கலையே யாகி
தமிழொலி ஓமெ ழுத்தே
தனிமுதற் பொருளே யாகி
தமிழிசை ஒலிஓம் என்றே
வானியற் கலைசி றக்கும்
தமிழொலி நிறைமொ ழிக்கே
ஓம்மொளி மூல மன்றோ 810

விண்டமிழ் ஓமெ ழுத்தாய்
விளங்குறு மாற்ற லாலே
எண்டமிழ்ச் சிற்ப மாகும்
இலங்குசிற் றவையே யாகி
தண்டமிழ் இயலுங் காட்டும்
தனிநிலை இசைந டத்தும்
அண்டமாத் தமிழி னாலே
ஆடலான் தன்மை யாய்விர் 811

அண்ட மாயியல் பிண்ட மாயியல்
அருங்க லைத்திற னாக்கமும்
அண்ட மூலமும் பிண்ட மூலமும்
அருளி யற்கலை நோக்கமும்
எண்டி சைத்திறன் தென்றி சைநிலை
இலங்கு மாடலான் நோக்குறும்
எண்ணி யற்கலை எண்மு றைத்திறன்
ஓமி யற்கலை மூலமே 812

ஓம்த குங்கலை ஓம்வொ ளிக்கலை
ஓமி யற்கலை யொளியினால்
ஓம்கு றிக்கலை ஒளியி னாலுறும்
ஒருபெ ருங்கலை திருவினால்
ஓம்ம றைக்கலை யாற்ற லாலுறும்
மெய்நி லைக்கலை திருவுறும்
ஓம்பொ ருட்கலை ஓம்மி யற்றிறன்
மெய்ப்பொ ருள்நிலை நுண்ணவே 813

பன்னு மாநெறி பார்சி றந்தகலை
படரொ ளிக்கலை விண்ணொளி
மன்னு மாக்கலை மெய்யு ணர்த்துமறை
வான்வொ ளிக்கலை யோசையாய்
தென்ற மிழ்க்கலை ஓம்மி சைக்கலை
ஓம்ம றைக்கலை தேற்றமாய்
அன்று ணர்ந்தமறை தென்ற மிழ்மறை
ஒமெ மூத்திய லாக்கமே 814

மாம றைக்கலை யாக மத்தொளிர்
மன்னு மெய்க்கலை பிரணவம்
தூம றைப்பொருள் அறிவி யற்கலை
துலங்கு மாக்கலை பிரணவம்
ஓம்ம றைக்கலை பொளிரு மாநெறிச்
சிற்ற வைக்கலை பிரணவம்
ஓம்மெ மூத்தியல் தென்ற மிழ்மொழி
உரைக்கு மாக்கலை பிரணவம் 815

பிரண வக்கலை அண்ட பிண்டமும்
பெட்புறச் செய்யும் நெறிக்கலை
பிரண வக்கலை அறுநி லத்திறன்
அகவெ ளிக்கலை யாற்றலாய்
பிரண வக்கலை விண்ணொ ளிக்கலை
மேவு மெய்க்கலை உண்மையால்
பிரண வத்தியல் சிற்ற வைத்திறன்
ஆட லான்கலை எண்மையே 816

எண்மை யேகலை எண்மை யேநிலை
எண்மை யேமொழி எண்ணியல்
நுண்மை ஓம்மியல் ஓம்த ருங்கலை
நுணுக்க மாநெறி யாற்றலாய்
விண்மை மாநெறி இயலி யற்கலை
வீர மாக்கலை தேற்றமாய்
பண்டு ணர்ந்தநெறி பார்பு கழ்க்கலை
தெருளி யற்கலை பிரணவம் 817

கனலி னாற்றலும் ஒளியி னாற்றலும்
ஒளிவெ ளித்திற னாற்றலும்
புனலி னாற்றலும் புனலி நுட்பமும்
புணர்பொ ருந்துபார் நிலநெறி
கனலெ றித்திறன் தழலெ றித்திறன்
எரியி னாற்றலும் நுட்பமும்
புனலின் நுண்மையும் வண்மை யுங்கலை
எண்மையும் முறை நாடுவீர் 818

அண்ட முகருறும் ஆற்ற லாலுறும்
சிற்ப மாக்கலை யாற்றலும்
பிண்ட முள்ளுணர் பெருங்க லைத்திறன்
பெட்பு றுந்திறன் நோக்கமே
பண்டு றுங்கலை மறையும் ஆகமம்
பார்புகழ் நிலைக்க லையென
விண்டு ணர்மறை ஒமெ மூத்தியல்
மெய்க்க லைநிலை ஓங்குமே 819

ஓங்கு றுங்கலை தேங்கு றும்மறை
ஒளிர்ம றைப்பிரண வத்தினால்
ஆங்கு றும்நெறி ஈங்கு றும்மறை
ஊங்கு றும்கலை ஓமென
தேங்கு றும்பொருள் மெய்யு ணர்ப்பொருள்
திருநி லைக்கலை யாக்கமாய்
ஓங்கு மாநெறிச் சிற்ற வைக்கலை
ஓம்பொ ருட்கலை யாற்றலே 820

உயிரொளித் திறத்தி னோங்கி
உணர்வொளி அறத்தி னோங்கி
உயிரொலி ஆற்ற லாலே
மேவுறுங் கலைத்தி றத்தும்
உயிர்க்கலை நுட்பத் தாலே
உயிரியல் திட்பம் தேர்ந்து
உயிர்நெறி யோங்கு விக்கும்
ஓம்பிரண வத்தை யாய்மின் 821

பிரணவ நெறியே மூலம்
பிரணவக் கலையே காலம்
பிரணவத் திட்பத் தாலே
பேரியல் மூலங் கூட்டும்
பிரணவ நுட்பத் தாலே
சீரியல் தன்மை சேர்க்கும்
பிரணவ மறையே கூறும்
பெரும்பொரு ளுண்மை காண்மின் 822

ஒருமறை மூல மாகித்
திருமறை யாக்கஞ் சேர்க்கும்
அருமறைக் கலையு ணர்த்தும்
தெருளியல் பொருளு ணர்த்தும்
திருநிலைப் பெருவெ ளிக்கும்
வெளிவொளி யியலுங் கூட்டும்
ஒருநிலை மூலத் தாலே
ஓம்பிரண வத்தை யாய்மின் 823

ஓம்பிரண வத்தை யாய்ந்தே
உயிருடல் தூய்மை யாய்மின்
ஓம்பிரண வத்தின் மூலம்
உயிர்க்கலை நெறியுங் காண்மின்
ஓம்பிரண வத்தி னாலே
ஒலியிசை ஒளியுந் தேர்மின்
ஓம்பிரண வமே மூலம்
மொழிமுதற் பொருளே யன்றோ 824

மொழிமுதற் பொருளே யாகி
மொழிக்கலை மூல மாகி
மொழியியல் ஒலியே யாகி
மொழித்திற னாக்க மாகி
மொழிநிலை காக்கு மாக்கம்
ஓமுதற் பொருளே யாகி
மொழிக்கலை பிரண வத்தை
முன்னுவீர் நாளு மாய்வீர் 825

உற்றறி யுணர்வி னாலே
உணர்கலைப் பிரண வத்தை
கற்றறி அறிவி னாலே
காண்டலு மியலா தென்றே
உற்றறி உணர்வி னாற்றல்
ஒளியியல் மூலங் கண்டே
உற்றறி பிரண வத்தை
உன்னுவீர் உன்னு வீரே 826

மெய்க்கலை பிரண வத்தை
மெய்யுண ரெய்தி நாளும்
மெய்ம்மொழித் திமிழி னாற்றல்
மேவுறு மாற்ற லாலே
மெய்க்கலை யியலா லாய்ந்தே
நெறிநிலைப் பொருளு ணர்ந்து
மெய்தரும் ஓம்ம றைக்கே
முதற்பொரு ளாய்மின் ஓர்மின் 827

உணர்வினா லறிந்து கண்டே
ஓங்குறும் பிரண வத்தை
உணர்மொழி ஒசை யாற்றல்
மெய்யியர் கலையி னாலே
உணர்வொளி யாற்றல் கூட்டும்
உடலொளி மூலங் கூட்டும்
உணர்கலை மறையி னாலே
ஓங்குறு மாற்ற லோங்கும் 828

ஒங்குறும் மாறெ றிக்குள்
ஒம்பொரு ளுணர்ந்து ணர்ந்து
தேங்குறும் தூநெ றிக்கும்
திருநிலைப் பெருவெ ளிக்கும்
ஆங்குறும் எண்ணெண் ணாற்றல்
சிற்றவை மூலங் கண்டே
ஈங்குறும் மூலத் தன்மை
காலமா நெறியே கூட்டும் 829

காலமாப் பொருளி னாற்றல்
மெய்ந்நிலைக் கலையே யாகி
கோலமுங் குறிப்புங் காட்டும்
குறிநிலைப் பொருளுங் கூட்டும்
சீலமாச் செந்நெ றிக்குச்
சிற்றவை யியலுங் கண்டே
ஞாலமும் விண்ணுங் காட்டும்
நன்னெறி நயந்து காண்பீர் 830

உள்ளுளே யுணர்ந்து ணர்ந்தே
ஒருபெரு முன்மைத் தேர்ந்து
தெள்ளறி வுற்றுக் கண்டே
செழும்பொருள் நுட்பத் தாலே
விள்ளுறு மாற்றல் கூர்ந்து
மெய்ம்மைசால் பொருளு ணர்ந்து
ஒள்ளிய வொளிநி லைக்கே
ஒங்குறு மாற்றல் கூட்டும் 831

ஒம்நெறிக் கலைத்தி றத்தால்
எண்ணிலை யியலுங் கூடும்
ஒம்நெறி நிலைத்தி றத்தால்
சிற்றவை மூலங் கூட்டும்
ஒம்மொலி யசைத்தி றத்தால்
ஒலியியற் கலையும் நோக்கி
ஒம்கலை யுணர்வி னாலே
ஒருநெறி யியலு மாய்வாய் 832

உள்ளமே நெறியுங் கூட்டும்
உள்ளுவ வெல்லாங் காட்டும்
உள்ளமே உணர்வி னாக்கம்
உள்ளமே எவைக்கும் மூலம்
உள்ளமே கலைய ளித்து
நெறிபெரு மாற்ற லியும்
உள்ளமே ஓம்தி றத்தை
ஒருங்குறு வுணர்த்திக் காட்டும் 833

உள்ளமே வையம் காட்டும்
உள்ளமா விண்மண் ணாய்ந்து
உள்ளத்தி லுள்ள மோர்ந்து
உன்னுமோர்த் திறனும் பெற்று
விள்ளலில் லாத ஆற்றல்
வியனிலை யுணர்வி னாலே
தெள்ளறி வுற்றுக் காணும்
ஓம்உரு சிறந்து தோன்றும் 834

ஓம்மொளி வுருவே காண்டல்
ஒருநெறித் திறன ளிக்கும்
ஓம்மொலி செவியி லுற்றே
பெரும்பொருள் நிலையைக் காண்டல்
ஓம்நெறி யியலி னாலே
கலைநிலை யாற்றல் கூடும்
ஓம்மியல் முற்று மாய்ந்து
மெய்யொலி காண்டல் நன்றே 835

புன்மைசால் நினைவி னாலே
பொருந்துவ நீங்கு மன்றே
நன்மைசால் உணர்வி னாலே
நலந்தரு முணர்வே ஓங்கும்
தென்றிசைக் கலைச்சி றப்பால்
சீர்தரும் ஒமெ மூத்தை
தென்றமிழ் மறையாய் நோக்கித்
திருநெறி ஆய்மின் ஓர்மின் 836

ஐம்புலன் ஒருமை யோங்கி
அகவெளி ஒளியுற் றோங்கி
செம்மைசால் செந்நெ றிச்சீர்
சிற்றவை மூலங் கண்டே
மெய்ம்மையா மண்ட பிண்டம்
மெய்யறி வுற்றுத் தேர்ந்தே
மெய்யியல் கலையை யாய்மின்
நெறிமுறை நோக்கு விரே 837

கலைநெறித் தின்மை யாங்கண்
கருத்துறு மாற்ற லாலே
நிலைநெறி வன்மை யோங்கி
நெறிமுதற் பொருளு ணர்ந்தே
நிலைநெறி சிற்ற வைச்சீர்
நெறியறு பத்து நான்கே
நிலையுண ரோங்குந் தன்மை
ஐந்நெறி யாற்ற லன்றோ 838

எண்முறை யியலா லாய்ந்து
நெறிதருங் குறிப்பி னோக்கி
விண்முறை ஒளிச்சீ ராக்கம்
வியனிலை ஓமெ மூத்தாய்
கண்ணொளி யியலக் கண்டே
கலையியல் முற்று மோர்ந்து
எண்ணொளிச் சிறப்பி னாலே
நெறிமுறை யுணர்ந்து காண்பின் 839

சிற்றவைக் கணக்கி னோக்கிச்
சீர்பெருந் தன்மை யாய்ந்தே
உற்றமா நெறித்தி றத்தால்
ஓங்குறும் மூலத் தாலே
உற்றறி உணர்வே ஓங்கும்
மெய்க்கலைத் திறத்தி லுண்ணி
சொற்றறும் ஓமெ மூத்தே
ஓம்மறை எண்மை காண்பின் 840.

எண்மையும் நுண்மை நோக்கி
        எழுநெறி யுணர்வி னாலே
விண்மையும் பொருண்மை மூலம்
        வியனெறி யாற்றல் கூர்ந்து
எண்ணியற் கலைத்தி றத்தால்
        நெறிமுறை யியலி னாற்றல்
எண்முறை எண்ணெ றிக்கே
        ஓமெழுத் துண்மை கூறும் 841

ஓமெழுத் தொளிர்க லைக்கும்
        ஒருபொருள் நிலையே யாகி
ஓமெழுத் துணர்வி னாலே
        மெய்க்கலை யியலே நல்கும்
ஓமுறுந் தன்மை கூர்ந்து
        அறிபொருள் நுட்பம் மல்கும்
ஓம்மறை மூலத் தாலே
        செந்நெறி காண்மின் ஆய்மின் 842

காலமா நுட்ப மொன்றே
        கடும்முழைப் புணர்வே நல்கும்
மூலமாத் திட்பத் தாலே
        முறையியல் கண்டு ணர்ந்தே
சீலமாச் செந்நெ றிக்குச்
        சிற்றவை தெரிந்து நோக்கிக்
காலமா இயல்தெ ரிக்கும்
        கலைநிலை யுணர்வின் ஓர்மின் 843

ஓம்மறைப் பொருளு ணர்ந்தே
        பெரும்பொரு ளியல்சிறக்கும்
ஓம்கலைப் பொருளி னாலே
        ஐந்திய லாக்கம் நல்கும்
ஓம்நெறித் திறத்தி னாலே
        மறைமொழிக் கலையுற் றோர்ந்து
ஓம்குநித் திறமு ணர்ந்தே
        மெய்க்கலை நுட்பங் காண்மின் 844

எண்பொரு ளியலே யாகி
எண்ணெண்மா நெறியு மாகி
நுண்பொருள் நுண்க லைக்கே
நுண்ணியற் கலையே யாகி
விண்பொரு ளாக்கங் கூர்ந்தே
வியனெறித் தன்மை கூர்ந்தே
கண்ணிலை நுட்பங் கண்டே
கவினிலை யியலு மாய்விர் 845

ஒருமறை ஒமெ மூத்தே
ஒளிர்மறை ஒமெ மூத்தே
பெருமறை ஒமெ மூத்தே
புனிதமா மறையே யாகி
கருமறை ஒமெ மூத்தாய்
கலையுணர் மூல மாகி
அருமறை ஒமெ மூத்தாய்
அம்முதல் உணர்த்தி நிற்கும் 846

அம்முதற் பொருள றிந்தே
ஐங்கலை யியலுந் தேர்ந்து
செம்மைமா நெறியு ணர்ந்து
சீர்நிலைக் கருத்து மாங்கண்
மும்மையு முணர்த்த வல்ல
மூலமாப் பொருளே யாகி
செம்மறை ஒமெ மூத்தே
சீர்நெறி யாக்கங் காண்மின் 847

எட்டியல் மூலத் தாலே
நாற்புறத் தியல்நெ றிக்கும்
எட்டுறும் எட்டெட் டெட்டே
கலையுறு மாக்கங் காண்டல்
விட்டுறு மிசையின் சீர்த்தி
விண்ணிண்மா நெறியு ணர்ந்து
தெட்டுறும் சீர்நெ றிக்கே
திருநிலைக் கலையு மாய்விர் 848

அருளியல் அறுவான் நான்கின்
சிற்றவை ஆட லானின்
தெருளியற் கலையுங் கூடும்
சீர்நிலை முலங் கண்டே
பொருளியல் ஒமெ மூத்தே
புகலுறும் ஒலியோ சைக்கே
தெருளியற் கலையுங் கூறும்
சீர்பிரண வத்தை யாய்மின் 849

அறிபிரண வத்தி னாலே
அகவெளி யுற்றுக் கண்டு
குறிபிரண வத்தி னாலே
கூர்மதி ஒளிசி றந்து
நெறிபிரண வத்தி னாலே
நிலையறிக் கலையு மோங்கி
அறிகலைப் பிரண வத்தால்
ஐந்நெறி யியலு மன்றே 850

செம்மறை முலத் தன்மை
சீர்நெறிக் காலச் சீர்மை
செம்மறை ஒமெ மூத்தின்
சீரொளி ஒலிய சைக்கும்
செம்மறை செந்நெ றிக்குச்
சிற்றவை அறுபான் நான்குள்
அம்மறை ஒமெ மூத்தே
முதலுறும் கலையே யன்றோ 851

தலைக்கலை மறையே யாகி
தனிப்பொருள் ஒரெ மூத்தே
நிலைக்கலை யுண்மை நாட்டம்
நெறிப்பொரு ளாற்றல் கூர்ந்தே
கலையிய லாக்கங் கூறும்
களிப்பியல் கணக்கி னாய்ந்து
தலையியல் தமிழ்ம றைச்சீர்
ஒரெழுத் தியலே யன்றோ 852

செம்மைசால் தமிழ்ம றைச்சீர்
　　செந்தமிழ் ஓம்வொ லிக்கே
அம்மறை மூல மாகி
　　அருங்கலை கால மாகி
அம்முத லியலி னாலே
　　அளிகலை யியற்றி றத்தும்
ஐம்பொருள் ஐங்க லைக்கே
　　சீர்முதல் தன்மை கூறும் 853

ஒருநிலைக் கலையி னாலே
　　ஓங்குறும் ஒலித்தி றத்தும்
கருநிலைக் கலைமு லத்துக்
　　கணக்கிய லியலி றத்தும்
பெருநிலை யாற்ற லாலே
　　பெட்புறும் நெறிபி றங்கக்
கருநிலைக் கணக்கி னாய்ந்து
　　அணுக்கலைத் திறமு மாய்மின் 854

பிரணவம் முதலே யாகி
　　பிரணவக் கலைசி றந்து
பிரணவ நெறியி னாலே
　　ஆக்கமா நெறியி னோக்கி
பிரணவ யியலின் வண்ணம்
　　ஐந்திய லைந்நெ றிக்கும்
பிரணவ கால மூலம்
　　மூலகா லத்தி னாக்கம் 855

விண்டுணர் கலைத்தி றத்தும்
　　விள்ளலில் லாத ஆற்றல்
கண்டுணர் மொழிக்கூ ராக்கம்
　　ஓமெழுத் தொலியே யாகி
பண்டுணர் மறையி தென்ன
　　தமிழ்க்கலை ஓமெ ழுத்தே
அண்டா நெறிவி ளக்கும்
　　அருந்தமிழ் மறையே யன்றோ 856

ஐந்நெறி யாற்ற லாலே
    அருங்கலை மூலந் தேர்ந்தே
செந்நெறி யயற்சி றக்கும்
    நெறிமுறை நிலையி நோக்கி
முந்நெறி முச்சு டர்க்கும்
    முக்கலை முப்பொ ருட்டும்
அந்நெறிப் பிரண வத்தின்
    ஆக்கமா யியலு மன்றே 857

திருநிலைக் கலைசி றந்து
    செழும்பொரு ளியலே ஒங்கும்
ஒருநிலைக் கலையின் ஓர்ந்து
    மெய்யியல் நெறிசி றக்கும்
அருநிலை விரத் தாலே
    ஐம்புல னிலைய றிந்து
ஒருநிலைக் கருத்தி னாற்றல்
    பெருநிலைக் கலைசி றக்கும் 858

பிரணவ வொளியே நோக்கி
    பிரணவ ஒலியைக் கேட்டும்
பிரணவத் தியலை யாய்ந்து
    பிரணவ நெறியுற் றோர்ந்தும்
பிரணவ மூலத் தாலே
    பெருங்கலை யுணர்வுற் றோங்கி
பிரணவ கலைநெ றிக்கும்
    இயல்நிலை யாக்கங் காண்மின் 859

மறைமுதற் பொருளே யாகி
    மாக்கலை செழித்துக் கண்டே
மறைக்கலை யியலி னாற்றல்
    செழும்பொருள் வன்மை யாய்ந்தே
மறைநிலை யாக மத்தும்
    நுண்பொருள் காண்டல் நுட்பம்
மறையியல் தன்மை நோக்கி
    நோக்குறும் நோக்க மாய்மின் 860

நோக்குறும் நோக்க மொன்றே
　　இருவிழி நோக்கி னாலே
ஆக்குறு மாக்க மாய்ந்தே
　　அருமறை ஒமெ ழுத்தால்
நோக்குறும் ஒளிசி றந்து
　　செவியுறு மொலியு ணர்த்தும்
நோக்குமா நெறியி னாற்றல்
　　ஆடலான் கலையே யன்றோ 861

ஆடலான் கலைத்தி றத்தால்
　　அணிநிலை யியற்சி றத்து
ஆடலான் நிலைத் திறத்தால்
　　மெய்ப்பொருள் தன்மை கூர்ந்து
ஆடலான் அறுபான் நான்கின்
　　இயல்நிலை யாற்ற லாலே
ஆடலான் ஒளிசி றக்கும்
　　ஒமெழுத் தியலை யாய்விர் 862

ஒமெழுத் தண்ட முச்சி
　　பிண்டமும் கலந்து காட்டும்
ஒமெழுத் துருச்சி றக்கக்
　　கலையின்மா நெறியே யோங்கி
ஒம்கலை யுணர்வி னாலே
　　எண்கலைச் செந்நெ றிக்கும்
ஒம்குறி மூலத் தாலே
　　ஒருபொரு ளியலே யாய்விர் 863

வேறு

கால மாநெறி யாற்ற லாலுறும்
　　கலைநி லைக்கலை ஒமெனா
மூல மாநெறி யியலு மாயியல்
　　மொழிய றிந்துண ராக்கமும்
சில மாநெறிச் செந்நெ றிக்கலை
　　செப்பு மாறிய லாக்கமும்
கோல முங்கலை குறிப்பு ஊர்கலை
　　ஒம்தலை லைமறை மூலமே 864

எண்ணு ணர்த்துகலை எண்ணின் மாநெறி
இலங்கு மாநெறி யாற்றலாய்
விண்ணொ ளிக்கலை ஓம்ஒ ளிக்கலை
ஒளியி யற்றிற னாற்றலாய்
கண்ணொ ளிக்கலை கலையி யல்நெறி
ஓம்மி யற்கலை மூலமாய்
பண்ணொ லிக்கலை பாரி சைத்திறன்
மெய்ம்மொ ழிக்கலைப் பிரணவம் 865

பிரண வக்கலை மூல மாமறை
விண்ணொ ளிக்கலை யாற்றலாய்
பிரண வத்திநெறி யியல்சி றந்தகலை
பேச ருங்கலை ஆகமம்
பிரண வத்தியல் நெறிசி றக்குமொளி
கலையி யற்றிறன் உண்மையால்
பிரண வத்துறும் எண்ணி லைக்கலை
பேரொ ளித்திற னாற்றலே 866

வேறு

நிலைபிரண வத்தி னாலே
நன்னெறிக் கலையு மாய்ந்து
கலைபிரண வத்தி னாலே
கலையியல் நுட்பங் கூர்ந்து
கலைபிரண வத்தி னாக்கம்
எண்மையும் விண்மை கூட்டும்
கலையியல் ஆக்கத் தாலே
கருத்துறும் மாநெறி க்கே 867

மாநெறி ஆற்ற லொன்றே
மெய்யியல் கலைவ குக்கும்
மாநெறி சிற்ற வைக்கே
எண்ணியல் உண்மை காண்டல்
தூநெறிக் கலையி னாக்கம்
திருநெறி வண்மை யாலே
மாநெறி எண்மைக் கூர்மை
வகுத்தியல் வண்ணம் ஆய்மின் 868

எண்ணுரு முணர்வி னாக்கம்
எழுச்சியும் நினைவி னாக்கம்
எண்ணமு மாற்றல் நல்கும்
எழுச்சியும் நிலையே கூட்டும்
எண்ணெண்மா நெறிசி றக்கும்
ஆற்றலால் கலையு ணர்ந்தே
திண்ணமும் இயற்கூ ராக்கம்
செறிமுறை உணர்மின் ஓர்மின் 869

உணர்கலை யியலே யாகி
உணர்வுறு மாக்க மாய்ந்து
உணர்நெறி மூலங் கண்டே
உணரிய னுயிர்ப்புங் கண்டு
உணர்கலை ஓமெ மூத்தே
ஒளியியல் ஓமெ மூத்தே
உண்ர்மறை யாக மத்தின்
மெய்யியல் ஓமெ மூத்தே 870

ஒமெழுத் துண்மை நாடி
ஒருபொருள் நுட்பங் கண்டே
ஒமெழுத் துயிர்ப்பி னாக்கம்
மெய்யியற் கலைசி றந்து
ஒமெழுத் தொளிசி றக்கும்
மெய்ம்மறை மூலத் தாலே
ஒமெழுத் துயிர்ப்புங் காண்டல்
ஒளியொளி யாக மத்தே 871

ஆகமத் தன்மை யாய்ந்து
அறிநிலைப் பிரண வத்தும்
ஆகமத் துள்ளொ ளிர்ந்தே
மெய்க்கலை யியலுங் காண்டல்
ஆகம நிலையி னாலே
நெறியுணர் மறக்கூ ராக்கம்
ஆகம யியலு மாய்விர்
ஓம்மறைத் திறனுங் காண்பின் 872

எண்ணியற் கலைத்தி றத்தே
எழுநிலை ஒமெ ழுத்தின்
விண்முதற் பொழுதுங் கண்டே
மெய்யிய லுணர்ந்து நோக்கி
கண்கலை யியலி னாலே
கலைநிலை யாக்க மோர்ந்து
ஒண்ணலைப் பிரண வத்தே
ஒளிபெருந் திறமு மாய்மின் 873

எண்முதற் பொருளி னாலே
இலங்கூ ராக மத்தும்
விண்முதற் றிறமுங் கூறும்
வியனிலை ஒம்ம றைக்கும்
கண்முத லியல்வ குக்கும்
கலையியல் ஆக்கங் கூட்டும்
எண்ணியற் சீர்வ குக்கும்
நெறிமுறை உணர்மின் ஒர்மின் 874

கலையொளி ஒமெ ழுத்தாய்
கவினுறக் கண்டு ணர்ந்தே
நிலையொளி நாற்பு றத்தின்
ஐந்தியல் நெறியுள் ளோர்ந்தே
தலையொலி மூலத் திண்மை
மூலமா நுண்மை எண்மை
கலையொளி யாக்கத் தாலே
மறைமுதற் பொருளு மாய்மின் 875

பொருளிய லுண்மை மூலம்
ஒளிப்பொருள் விண்மை தேக்கி
தெருளியல் மறமு தற்றாய்
ஒம்பொருள் நுண்மை நோக்கி
அருளியல் ஆட லானின்
அருங்கலை நுட்பத் தாலே
தெருளுறும் ஐய்யைந் தைந்தின்
சீர்நிலை நுட்பங் காண்மின் 876

நுட்பமே சிற்ற வைச்சீர்
நுணுக்கமும் காலத் தாற்றல்
திட்பமும் எண்மு றைக்கும்
எண்ணியல் நிலைக்க லைச்சீர்
ஒட்பமு மாட லானின்
ஒளிநிலை அகவிண் ணோக்கி
பெட்புறும் சிற்ப மாற்றல்
சிற்றவை மூலத் தன்மை 877

சிற்பமே சிற்ற வைச்சீர்
சிற்றவை ஒளிக லைச்சீர்
பொற்புறும் அறுபான் நான்கின்
மெய்நிலை யுணர்ந்து நோக்கி
பற்பல கலைமொ ழிச்சீர்
நிலைமொழி மெய்ம்மை தேக்கி
விற்பன மாட லானின்
மெய்ந்நிலை யுணர்ந்து காண்மின் 878

எண்கலை எண்ணின் நுட்பம்
எண்முறை விண்ணெ றிச்சீர்
நுண்கலை நுணுக்கங் காட்டும்
நுண்பொருள் மூல நுட்பம்
விண்கலை யாக்க மொன்றே
வெளிநிலைக் கலையுங் கூட்டும்
முன்னியல் ஆக்க மன்றோ
ஓமெழுத் தியல்நெ றிக்கே 879

நுண்கலை நுண்ண ணுக்கள்
நுண்கணு நுண்க ணுக்கள்
விண்கலை முதற்றி னாய
மெய்ப்பொரு ளியலாய்க் கூடி
எண்கலை அறுபான் நான்கின்
இயற்றிறத் தியலாய் மேனி
நுண்கலை நுணுக்க மாகி
ஓம்பொரு ளணுக்கந் தேக்கும் 880

தேக்குமா றியல்க லைக்குச்
சீர்நெறிச் சிற்ற வைக்கே
நோக்குமா றியலின் நோக்கம்
புருவமா நடுவின் நோக்கி
ஆக்குமா றியலின் அண்டம்
அறுநிலத் தடிமு லத்தால்
விக்குறும் மெய்யொ ளிக்கே
வியனிலை யறிந்து காண்மின் 881

எண்ணின்மா நெறிக்கோ லத்தா
லியல்நிலைக் களிக்கூ ராக்கம்
விண்ணின்மாப் பேரொ ளிக்கே
பெருஞ்சுட ரறுசு டர்க்கும்
அண்ணுறும் முருகொ ளிக்கும்
உயிர்ப்புறும் ஒளிமா விண்ணே
எண்ணுறும் கருமு லத்தால்
இயனிலை உணர்மின் ஓர்மின் 882

காலைமாப் பொழுது ணர்ந்து
கதிர்வருங் காலைத் தேர்ந்து
காலைமாக் கதிரின் தோற்றம்
அகவெளிக் கதிரின் ஏற்றம்
காலைமா யியல றிந்து
நுணுக்கமாத் தன்மைக் கூர்ந்து
காலைமாப் பொழுதின் காலம்
உள்ளுறும் உணர்வா லாய்மின் 883

எண்முறை மெய்ம்மைச் சீலம்
ஐந்திய லாக்குங் காலம்
எண்நிலை யியக்குங் கோலம்
எண்ணிய லுண்மைக் கூர்ந்து
எண்ணெறி யுற்றுத் தேர்ந்தே
ஒருநிலைத் தன்மை யாக்கி
விண்ணெறிக் கருமு லத்தால்
வியனிலை மெய்ம்மை யாய்மின் 884

மெய்ம்மையும் அகவெ ளிக்கு
மிகுபொரு ளுண்மைத் தேக்கி
செய்முறை யாக்க லாலே
சீர்நெறித் திறத்தி னுண்மை
செம்மறை யியலின் கூற்றே
பிரணவத் துண்மைத் தேக்கம்
செம்மறை மூல மென்றே
ஓமெழுத் துண்மை யாய்மின் 885

ஓமெழுத் துண்மை யன்றோ
ஒருபொரு ளுணர்த்திக் காட்டும்
ஓமெழுத் தியலே யன்றோ
பெருமறை யாக்கங் கூட்டும்
ஓமெழுத் தொளிச்சி ராக்கம்
அருமறைக் கலையுங் காட்டும்
ஓமெழுத் துருவ மன்றோ
ஆடலான் வடிவங் காட்டும் 886

ஆடலான் கலைச்சீர் நுண்மை
அறுபான்நான் கியலி னுண்மை
ஆடலான் நெறிச்சீர் வண்மை
ஓமெழுத் தியலி னுண்மை
ஆடலான் திருவ மைப்பே
ஐய்யைந் தியலி னாற்றல்
ஆடலான் உருவ மைப்பே
அண்டமும் ஞாலமும் காட்டும் 887

தென்றிசை விண்மா நோக்கே
காலமா முக்கின் கூர்மை
தென்றிசை எண்மாச் சீரே
காலமா உயிர்த்து டிப்பே
தென்றிசை ஐந்தி யற்கூர்
காலமா யியற்து டிப்பே
தென்றிசை ஆடல் கூற்றே
வினைவுறுங் காலத் திண்மை 888

நொடிநொடிக் கால நுட்பம்
நொடிப்பொழு தியலி னுண்மை
நொடிமுதல் இம்மி காண்டல்
காலமாக் கடவு னாடல்
நொடிக்கலை எண்ணி யற்சீர்
நெறிநிலைத் தன்மை கூறும்
கடியியற் காலக் கூறே
ஆடலான் துடிச்சி ராக்கம் 889

ஓம்முதற் பொருளி னாலே
ஒருபொரு ளியலுங் கூர்ந்து
ஓம்முதற் கலையி னாலே
மெய்ம்மறை யாக்க நுண்மை
ஓம்முதற் றண்மை எண்மை
நுண்மையும் விண்மை மெய்ம்மை
ஓம்முதற் றிறத்தி னாலே
மெய்ம்மறை யாக்கங் காண்பீர் 890

எண்ணிலை எண்ணு னுக்கம்
எண்கலை விண்நு னுக்கம்
எண்முறை ஓம்நு னுக்கம்
எழுத்தியல் மொழிநு னுக்கம்
எண்ணுறும் எட்டெட் டோர்ந்து
எண்கலை யியலா லாய்ந்து
எண்திறத் தாற்ற லாலே
ஐந்நெறி மூலங் காண்பின் 891

மூலமா மறையு ணர்த்தும்
முந்நெறிக் கலையுந் தேர்ந்து
சீலமாத் திறத்தி னாலே
செய்ந்நெறி நுட்பத் தன்மை
கோலமாக் குறிப்பி னுண்மை
குறியியல் நெறிகூர்ந் தாக்கம்
ஞாலமா விண்ணு மாய்தல்
நவையுறும் ஓம்நெ றிக்கே 892

சிற்றவைச் சீர்நெ றிக்கே
திருநிலை மூலத் துண்மை
உற்றமா யியலின் தேற்றம்
ஒருபொரு ளுண்மை வண்மை
தெற்றுறும் நுண்பொ ருட்டும்
சீர்மிகும் நாற்பு றத்துச்சீர்
ஏற்றுறும் நடுவண் புள்ளி
இயலுமா றியலு மாற்றல் 893

கலைபொருள் விழுமங் கண்டே
கலையியற் றறது மாங்கண்
நிலைப்பொருள் செழுமை நோக்கி
நெறிப்பொருள் நுண்மை காண்டல்
தனிப்பொருள் ஒம்ம றைக்கே
திருநிலை மறையின் மூலம்
தலையியல் ஆக்க மன்றோ
சீரியல் நிலைவ குக்கும் 894

பற்பல உயிரெண் தோற்றம்
மாற்றமும் ஏற்ற மாய்ந்தும்
கற்பன கண்டுங் கேட்டும்
உற்றறி உணர்வா லாய்ந்தும்
முற்றுறு முணர்வின் மிக்க
மனிதமாப் பிறவி யொன்றே
தெற்றெனத் தெரிந்து கண்டு
சீரியல் மறையை யாய்மின் 895

சீரியல் மறையின் சீர்மை
செழுமையும் ஒம்க லைக்கே
நேரியல் மூலத் தன்மை
நிலைமறை நுட்பங் கூர்மை
தேரியல் கலைக்கூ றாலே
காலமா யியலுந் தேர்ந்து
ஏரியல் கலைச்சி றப்பின்
எண்மையும் ஆய்மின் ஒர்மின் 896

ஒளிநெறி கலைக்கூற் றாலே
ஒங்குறும் நெறிசி றக்கும்
வெளிநெறி விண்க லைச்சீர்
வியனிலை மூலங் கண்டே
கணிநெறிக் கணக்கி யற்சீர்
கலையின்மா நெறிச்சீர் உண்மை
அளிநெறி ஆற்ற லாலே
ஐந்தியல் தண்மை யாய்மின் 897

மூலமா மறையே யாகி
முப்பொருள் முச்சு டர்க்கும்
சீலமாக் கலைத்தி றத்து
செந்நெறிக் காலங் காட்டும்
கோலமுங் குறிப்பு மாய்ந்தே
கூர்மதித் திட்பத் தாலே
ஞாலமும் விண்ணும் நோக்கி
ஓம்மறை யாய்தல் நன்றே 898

மறைமுதற் பொருளே யாகி
மறைக்கலை யாற்ற லாகி
மறையியல் செந்நெ றிக்கும்
ஐந்நெறிக் கணக்கி னாய்ந்து
மறைப்பொருள் செழுமை கண்டே
ஆகமத் தண்மை யோர்ந்து
மறைநிலை ஒமெ மூத்தால்
மாநெறி ஆய்மின் ஒர்மின் 899

வீரமே பொருளு ணர்த்தும்
வீரமே கலையும் நல்கும்
வீரமே மெய்ம்மை காட்டும்
வீரமே உழைப்பி யற்றும்
வீரமே வண்மை நல்கும்
வீரமே வண்மை கூட்டும்
வீரமே எவைக்கும் மேலாம்
மெய்யறி வுற்று வாழ்வீர் 900

ஐம்புல நெறியே வீரம்
அகவெளி காண்டல் வீரம்
செம்மறை யாய்தல் வீரம்
செழுங்கலை யுணர்தல் வீரம்
தன்மையே யுணர்ந்து ணர்ந்து
தனிநெறி யாய்தல் வீரம்
செம்மையின் இயல்பு ணர்ந்து
சீர்க்கலை யுணர்தல் வீரம் 901

வீரமா நெறியி னாலே
விளம்புலும் மறைச்சி ராக்கம்
வீரமா நெறித்தி றத்தால்
எண்ணிலைக் கலையு ணர்ந்தே
வீரமாத் திறத்தின் மூலம்
எண்திறத் துண்மை நோக்கி
வீரமா யியற்றி றத்தின்
நெறிகலை யாக்கங் காண்மின் 902

புலநெறி யுண்மை காண்டல்
புலத்தியல் நெறியின் றோர்தல்
புலமுறுந் திண்மை யாலே
பெருநெறி யுண்மை காண்டல்
புலத்தியல் செந்நெ றிக்கே
பெருவெளி நுட்பங் காண்டல்
புலமுறு மாற்ற லன்றே
மெய்ப்பொருள் விளக்கிக் காட்டும் 903

எண்பொரு ளாக்க மன்றோ
விண்பொருள் நிலையே கூட்டும்
எண்ணுறுங் கலைத்தி றத்தால்
நெறிப்பொருள் முற்று மாய்தல்
விண்கலை விண்ணெ றிக்கும்
உட்கலை அகவின் னோக்கி
நுண்கலை பகுப்பொ ருட்டும்
ஓம்நெறி விளங்கக் காண்மின் 904

ஓம்நெறி விளக்கந் தேர்ந்தே
ஒருபொருள் செழுங்கூ ராக்கம்
ஓம்குறி யியலி னாய்ந்தே
நெறிப்பொருள் மறைப்பொ ருட்டும்
ஓம்மியல் தன்மை யாலே
பெருபொரு ளெண்மைத் தேர்ந்து
ஓம்திறத் துண்மை யாலே
அரும்பொருள் ஓர்மின் ஆய்மின் 905

கலைப்பொருள் நுகர்தல் உண்மை
கருப்பொரு ளறிதல் வண்மை
நிலைப்பொருள் காண்டல் வண்மை
நெறிப்பொருள் சேர்தல் எண்மை
தலைப்பொருள் ஓம்ம றைக்கே
தனிக்கலை யியலு மாய்ந்தே
நிலைமறை செழும றைக்கே
நெறிப்பொருள் ஓர்மின் நன்றே 906

எண்முறை எண்ணெ றிக்கும்
இயலுணர் கலைநெ றிக்கும்
விண்முறை வியனெ றிக்கும்
வெளிவளர் ஒளிநெ றிக்கும்
கண்முதற் கலைநெ றிக்கும்
கலையியற் றெருள்நெ றிக்கும்
பண்முத லொலியா யோங்கும்
ஓம்மறை மூல மன்றோ 907

ஓம்மறை மூல மாகி
ஒருபொரு ளியலே யாகி
ஓம்முதற் றிறக்கூர் வண்மை
மெய்நிலை விரிக்கக் கண்டே
ஓம்பொருள் நுட்பத் தாலே
செய்முறை செய்நி லைக்கும்
ஓம்மொளி அகவிண் நோக்கி
அறுநிலைக் முடியு மாய்மின் 908

ஐங்குடிப் பெருங்கு டிக்கும்
குடிமுதற் பொருளின் நுட்பம்
செங்குடி மூலத் தாற்றல்
கருங்குடி யியலி னாற்றல்
பைங்குடி யொண்மை யோர்ந்து
வெண்குடிச் செழுமை காண்டல்
ஐங்கலை நெறியி னாலே
ஓம்நெறித் திறத்தை யாய்மின் 909

ஓம்கலை மூலத் தாலே
ஒருபொரு ளுண்மை நுட்பம்
ஓம்நிலை நெறிமு தற்றே
வையமாக் கலையுங் கூட்டும்
ஓம்திரு வொளிகூட் டாற்றல்
ஒளிவொளி நுட்ப மாய்தல்
ஓம்மறை யியலொ ளிக்கே
பெருமறை திட்பங் கூறும் 910

நுட்பமும் மதியி னாலே
மதியொளி நுவல லாற்றல்
திட்பமும் ஒளிக்கூர வண்மை
செழுமைசால் எண்மை காண்டல்
ஒட்பமா மதிசி றந்தே
அறுநிலத் தியலு மாய்மின்
நுட்பமும் மூலங் காண்டல்
மூலமாக் கனலே யன்றோ 911

மூலமாக் கலைசி றக்கும்
பேரொளி அறுசு டர்க்கும்
காலமாக் கணக்கி யற்கே
காற்றறு மாற்ற லாய்ந்து
சீலமாச் செந்நெ றிக்கும்
சிற்றவை மூலத் தாலே
காலமா யியலை யாய்ந்து
கருநிலை மூலங் காண்மின் 912

செழும்பொரு ளெண்மைத் தேற்றம்
சீர்ப்பொருள் நுண்மை யேற்றம்
எழுங்கதி ரொளிதேற் றத்தால்
எண்முறை எண்ணெ றிக்கும்
எழுநிலைச் செம்மு லத்தின்
இயங்குசீர் வண்மை காண்டல்
விழுப்பொருள் ஓம்ம றைக்கே
வியனிலைத் தண்மை கூறும் 913

பல்திறப் பொருளின் நுட்பம்
பல்கலை மூலத் திட்பம்
பல்லிய லொளியிய னாற்றல்
ஒளியுறும் பாங்கு ணர்ந்தே
தொல்லியல் மரபு ணர்த்தும்
ஓம்நெறி மறையி னாற்றல்
தொல்நெறிச் சீர்மை யாய்மின்
விழித்தெழு மாற்றல் ஓர்மின் 914

விழித்தெழு மாற்ற லன்றோ
உயிர்த்துடிப் புற்ற காலம்
விழித்தெழு முணர்வே யன்றோ
மெய்ம்மையை யுணர்த்துங் கூறாய்
விழிநிலைக் காலங் கூட்டும்
ஓம்பொரு ளாட லானின்
செழுமைசால் ஆட் லாய்தல்
செம்மறைப் பொருளே யன்றோ 915

செம்மறை ஓம்நெ றிச்சீர்
பெருங்கலை யாற்றல் கூட்டும்
அம்முதற் பொருள றிந்தே
அகவெளி ஒளியி னாய்ந்து
தம்மையே யுணர்ந்து மாற்றல்
மெய்ப்பொரு ளுணருந் தன்மை
செம்மறை ஓம்க லைச்சீர்
ஆடலான் நெறியே யன்றோ 916

ஆடலான் கலைநெ றிச்சீர்
அறிவிய லருட்க லைக்கும்
நாடலான் முதற்றே யாகி
நவிலுறும் நற்க லைச்சீர்
ஆடுறும் ஐய்யைந் தைந்தின்
அருநெறி நுட்ப மாய்ந்து
தேடுறும் பெருவெ ளிச்சீர்
செந்நெறி மறையா யாய்மின் 917

செந்நெறி மூலங் காண்டல்
திருமறைப் பொருளு ணர்த்தும்
செந்நெறி யியற்சி ராக்கம்
திருநிலைப் பொருண்மை சுட்டும்
முந்நெறி முச்சு டர்க்கும்
முருகொளி யியலும் நாடி
அந்நெறி யாய்த லாலே
அறுசுடர் ஒளியுங் காண்பீர் 918

முருகொளி மூலச் செம்மை
முருகியல் வண்மை யுண்மை
முருகொளிர் அறுசு டர்க்கும்
பேரொளிச் சீலம் காண்டல்
முருகுறும் மூல நுட்பம்
முருகியல் கண்டு ணர்ந்து
முருகுறும் சீரொ ளிக்கே
ஓம்நெறி யியலக் காண்பீர் 919

திருநெறி முருகொ ளிச்சீர்
சீர்நெறி பெருவொ ளிக்கும்
ஒருநெறிப் பெருவெ ளிக்கும்
ஒண்மையு மெண்மை யாய்ந்து
அருநெறி யியல றிந்து
அந்நிலைச் சுட்டுந் தேர்ந்து
பெருநெறிப் பிரண வத்தின்
மாமறை தேர்மின் கூர்மின் 920

மூலமாக் கலைய றிந்தே
முதற்நிலைக் கலைய றிந்து
மூலமாம் அகவிண் ணோக்கின்
மெய்யொளி நிலையு ணர்ந்தே
காலமாக் கலைத்தி றத்தின்
கணக்கியல் நுண்மை யோர்ந்து
கோலமாத் தன்மை கூறும்
குறிப்புறும் ஒமெ மூத்தே 921

ஓம்கலை மறையின் உண்மை
ஓம்பொரு ளியலின் வண்மை
ஓம்நிலை உருவத் தாற்றல்
ஒளிநிலைக் கலையே யாகி
ஓம்மியல் திறத்தி னாலே
ஒளிப்பொரு ளுண்மை நோக்கி
ஓமுறுங் கலையொ ளிச்சீர்
பெருமறை மூல மாய்மின் 922

நாற்புறத் தியலி னாற்றல்
நடுவுறும் மூலப் புள்ளி
ஆற்றலால் விரைவின் காலம்
சுழல்நிலை யுண்மைத் தேர்ந்து
தேற்றமும் சீர்மை நோக்கி
சிறொளி நுட்பங் கண்டே
ஏற்றமு மியற்சி ராக்கம்
பிரணவ நெறியே யன்றோ 923

உற்றமா நெறியு ணர்ந்தே
ஓங்குறும் பொருண்மை கூட்டி
கற்றமா கலைதெ ரிந்து
கருதரும் அகவிண் ணோக்கி
தெற்றுறும் ஒளிநெ றிச்சீர்
திருநிலைக் கலையுங் காண்மின்
பெற்றுறும் மதிவொ ளிச்சீர்
பெருநெறி யியலே யன்றோ 924

மாநெறி யாற்ற லொன்றே
மெய்க்கலை யுணர்வ ளிக்கும்
மாநெறி யாற்ற லாலே
செய்வகைத் திறமு மோர்ந்து
மாநெறி விண்ணின் னாற்றல்
எண்முறைக் கலைச்சி ரோங்கும்
தூநெறித் தெண்மொ ழிக்கே
ஓம்கலை நுட்ப மாய்மின் 925

தென்மறை தென்க லைச்சீர்
தென்றிசை விண்கு றித்தே
நன்மறை ஒமென் றுன்னி
நற்றமிழ் பெரும றைச்சீர்
தென்னிலை முலங் கண்டே
எண்டிசைச் சுழல றிந்து
நன்னிலை தென்மா வென்றே
நவிலலும் பிரண வச்சீர் 926

பிரணவ மறைச்சி ரோங்கி
பெருநிலைக் கலையி னோர்ந்தே
பிரணவத் தன்மை நோக்கி
ஓம்வொளிக் கலையு மாய்ந்தே
முரணுரு வகையுற் றோங்கும்
முச்சுடர் முந்நெ றிக்கும்
திரண்டுறு மொளிய ணுக்கள்
சீர்பிரண வத்தே யன்றோ 927

ஒளிநிலை யணுக்க ளாக்கம்
ஒலிநிலைக் கணுக்க ளோங்கும்
வெளிநிலைக் கலைத்தி றத்து
மெய்நிலை யியல்செ றிக்கும்
களிநிலைக் கணக்கி னோங்கும்
அறுபான்நான் கியலி னாக்கம்
ஒளிநெறி முந்நெ றிக்கே
ஓங்குறும் பிரண வச்சீர் 928

செந்நெறி மூலத் தண்மை
சீர்கலை நெறியி நோக்கி
முந்நெறி அறுசு டர்க்கும்
முருகொளி மூலத் தாற்றல்
ஐந்நெறி யாக்கத் துண்மை
பெருநிலை காலத் தாய்ந்தே
அந்நெறி அம்மு தற்றே
பிரணவ நெறியுங் காண்பீர் 929

கலைமுதற் றிறத்தி னாலே
கவினுறும் வண்மை நோக்கி
நிலைமுதற் பொருளின் உண்மை
நெறிமுதற் பொருளின் உண்மை
தலைமுதற் றிறத்தின் கூர்மை
தனியியற் றிறம்வ குத்து
நிலைகலை நெறியி னாலே
இயல்முறை வகுத்துக் காண்மின் 930

மறைமுதற் றிறத்தி னுண்மை
ஓமெழுத் தியலின் வண்மை
மறைபொருள் மூலங் காண்டல்
நிறைப்பொரு ளியலின் கூற்றே
மறையிய லாக்க முற்றே
மெய்நிலைப் பொருளுங் கூர்ந்தே
மறைநெறி ஓம்பொ ருட்கே
மாநெறி ஆற்றல் கூட்டும் 931

மாநெறிக் காலத் திட்பம்
மறையியல் கால நுட்பம்
தூநெறி காலத் தாற்றல்
திருநெறி யியலின் வண்மை
மாநெறி அறுபான் நான்கின்
இரண்டுறு மொன்றின் கிற்றே
தூநெறி இனம்வ குத்து
மொழியியல் நிலையே கூறும் 932

எண்ணெறிக் கலையின் நுட்பம்
நெறிமுதற் பொருளின் திட்பம்
விண்ணெறிக் கலைக்கூற் றுண்மை
தூநெறி யாற்ற லோர்ந்து
மண்ணியற் கலையு மாய்ந்தே
மெய்யியற் பொழுதும் உண்ணி
எண்ணெறிக் கலையின் நோக்கம்
இயல்நிலைக் கூற்றின் ஆய்மின் 933

ஒருநெறித் திறத்தி னாலே
மெய்ம்மையாங் கலைசி றந்து
திருநெறிக் கலைச்சீர் வண்ணம்
சீர்முதற் றிறத்தி னோங்கி
பெருநெறிப் பெருவெ ளிக்கும்
இயற்கலை ஆக்கங் கூர்ந்தே
கருநெறி மூலத் துண்மை
கலைநிலை யியலா லாய்மின் 934

செங்கதிர் ஒளியின் நோக்குற்
றிகழ்மதி யொளியுங் கண்டே
பொங்குமா விண்ணொ ளிச்சீர்
புறமுறும் அகமும் நோக்கி
அங்குறும் கலையொ ளிக்கும்
இங்குறும் உள்ளொ ளிக்கும்
தங்குறும் மறைநெ றிச்சீர்
தமிழ்ஒலி ஒளிரும் அன்றோ 935

ஒளிஒளித் திறத்தி னோங்கி
மெய்நிலக் கலைதி கழ்ந்து
வெளியொலித் திறத்தி னாலே
ஓம்ஒலி நிறைமொ ழிச்சீர்
ஒலிக்கலை யியலி னாலே
ஓம்ஒலி உருக்கொண் டோங்கி
வெளிக்கலை வான்நி லைக்கே
ஆடலான் கலையுங் கூட்டும் 936

எண்ணிலைக் கலையி னோங்கி
விண்ணெறி ஆற்றல் கூடும்
எண்முறைத் திறத்தி னுற்றே
ஐந்தியல் உண்மை ஆய்ந்து
எண்கலை நுணுக்கந் தேர்ந்தே
விண்கலை கணுக்கம் கூட்டும்
எண்ணியல் முறைசெ றிந்தே
ஓம்நெறி ஐந்துங் கூடும் 937

மூல முங்கலை கால மும்ஒளி
முன்னு றுங்கலை பிரணவம்
கால மும்நெறி கோல முங்குறி
கலைநெறித் திறன் பிரணவம்
சீல மாநெறி திருநெ றிக்கலை
தேர்க்க லைநெறிப் பிரணவம்
ஞால மும்இயல் விண்ணு மாஇயல்
நன்னு றும்ஒளிப் பிரணவம் 938

விண்ணி லங்குமொளி வெளியிலங் குமொளி
வியனி லங்குகலை யாற்றலாய்
எண்ணி லங்குமொழி இயலிலங்கு திறன்
எட்டி லங்குமறை ஓமென
பண்ணி லங்குமிசை இசையி லங்குமொலி
பாரிலங்கு குறி யாக்கமாய்
கண்ணி லங்குமொளி கலையி லங்குமுணர்
வோமெ னும்மொழி யாற்றலே 939

ஓமி லங்குகுறி ஓம்ஒ லிக்குமிசை
ஓமி சைக்குமிசை பண்ணெனா
ஆமி லங்குமியல் அருளி யற்கலை
அகத்தி யற்கலை யாக்கமாய்
ஓமி யற்றிறன் நெறிபொ ருந்துநிலை
ஓண்க லைத்திறன் மூலமாய்
ஓம்ஒ ளித்திறன் ஒலியி சைக்கலை
மாம றையொலி ஓம்ஒளி 940

உள்ளமா நெறியே ஓங்கி
உணர்வொளி நெறிதி றந்து
விள்ளலில் லாத லாற்றல்
வியனிலைக் கலையின் தேற்றம்
உள்ளூறும் மூலத் தாற்றல்
அறுநிலத் தைங்கு டிக்கே
தெள்ளூறும் எண்க லைச்சீர்
திருவுறும் நுட்பம் அன்றோ 941

எண்முதற் பொருளி லங்கும்
எண்ணமாம் உணர்வு மாகி
விண்முதற் பொருளி லங்கும்
அகவெளி ஒளியு மாகி
கண்முதற் பொருளி லங்கும்
கருதரும் நுட்ப மாகி
பண்முதற் றில்ங்கி நிற்கும்
ஓசையும் பொருளே யன்றோ 942

ஓம்ஒலித் திறத்தை யோர்ந்து
ஒருபொருள் உன்னி உன்னி
தாமியல் நெறியி லின்று
மதிவலி பிறங்கக் கண்டு
ஓம்ஒலித் திறத்தி னாலே
ஊழினை வெல்லும் ஆற்றல்
மாமறை வழங்கும் உண்மை
வையமும் விளங்கு மன்றோ 943

மூலமாத் துடிப்பி னாலே
மெய்யுணர் பெற்று நாளும்
காலமாத் துடிப்பி னாலே
நொடிநொடி உழைப்பி யற்றி
மூலமாச் சுடர்நெ றிக்கும்
முக்கனல் முந்நெ றிக்கும்
கோலமுங் குறிப்புங் காட்டும்
குறிநிலை உன்னு விரே 944

உணர்வினால் அண்டம் ஆய்ந்து
　　உணர்வினால் பிண்டம் நோக்கி
உணர்வினால் அகவிண் னோக்கி
　　அகவெளி ஒலியுங் கண்டு
உணர்வினால் புலன்க ளைந்தும்
　　அருநெறி சேர்த்து ணர்ந்து
உணர்வினால் ஒளிபெற் றுய்யும்
　　ஓமெழுத் துணர்வை யாய்வீர் 945

ஓமெழுத் துணர்வி னாலே
　　மெய்ப்பயன் விரைந்து சேரும்
ஓமெழுத் துணர்வின் னாலே
　　உள்ளமும் தூய்மை யோங்கி
தாமுறும் ஆற்ற லோங்கத்
　　தனிநெறி வகுத்துக் கூட்டும்
ஓம்கலை நெறியு ணர்ந்தோர்
　　உயிரியல் முறையு மாய்வாய் 946

உயிரியல் முறைய றிந்து
　　உணர்வினா லுணர்ந்து நாளும்
செயிரறு மூலத்தி னாலே
　　திருநெறிக் கலையும் நோக்கி
உயிர்ப்புறும் உணர்வே பெற்று
　　மெய்யொளி ஆற்ற லோங்கி
உயிர்க்கலை நெறிசி றக்கும்
　　ஓமெழுத் துணர்வை யாய்வீர் 947

துடிப்புறு முணர்வி னாலே
　　தூயமாக் கலைசி றக்கும்
துடிப்புறும் உள்ளத் தாலே
　　மாநெறிக் கலையே ஓங்கும்
துடிப்புறும் உழைப்பி னாலே
　　அகஒளி ஒளிர்ந்து கூடும்
துடிப்புறும் மெய்ம்மை யாலே
　　ஓமெழுத் தியலை ஆய்வீர் 948

உழைப்புறு முணர்வி னாலே
ஓமெழுத் தியலை நாடி
கழைப்பிலா ஊக்கத் தாலே
கலையியல் நெறிதி கழ்ந்து
இழைஇழை நுண்மை நோக்கி
இம்மியும் நொடியும் கூர்ந்து
உழைப்பினால் காலங் காண்போர்
ஓம்ஒளி காண்டல் கூடும் 949

ஐம்புலன் நெறிமா றாமல்
அகவெளி ஒளியு நோக்கி
செம்மைமா நெறிசி றக்கச்
சீரொளி உயிர்ப்பி னாலே
தம்மையும் உணர்ந்த லாலே
தனிநெறி ஓம்ம றைக்கே
செம்மறை வழிவ குக்கும்
திருநிலை கூடு மன்றே 950

நொடிநொடிக் காலம் எண்ணி
நுண்மையாம் வண்மை யாலே
நொடியுறும் பொழுதின் வண்மை
பேரூழி என்று ணர்ந்து
கடிநிலைக் கணக்கி னாலே
காலமாத் திரையு ணர்ந்து
குடிநிலை ஐந்துங் காண்டல்
ஓம்நெறி மூல மன்றோ 951

ஓம்நெறி மூலத் தாலே
ஒருபொருள் உணர்வே ஓங்கும்
ஓம்குறி யியலி னாலே
பெரும்பொருட் கலையே தேங்கும்
ஓம்பொருள் உண்மை யோர்ந்து
ஒருமறை யியலாய்க் கூர்ந்து
ஓம்மறை யாற்ற லாலே
ஞாலமா நெறியும் ஆய்வீர் 952

ஞாலமும் விண்ணுந் நோக்கி
நற்றமிழ்க் கலைத்தி றத்தால்
கோலமும் குறிப்பும் ஆய்ந்து
மெய்யியல் கண்டு தேர்ந்து
சீலமாச் செந்நெ றிக்குத்
திருநெறி மூலத் துண்மை
ஞாலமா மறையென் றாகி
ஓம்மறைத் திகழு மன்றே 953

எண்முறைக் கலைத்தி றத்தால்
இயலொளிச் சுடரின் ஆக்கம்
விண்முறை மூலத் திட்பம்
காலமா நுட்பம் நோக்கி
எண்ணியற் கலையா லாய்ந்து
நெறிமுறை உண்மை தேக்கி
எண்ணெண்மா நெறியின் கூற்றால்
ஓம்நெறி யறிவின் ஆய்மின் 954

மூன்றுறும் மாற்ற லாலே
முந்நெறி முச்சு டர்க்கும்
ஒன்றுறும் அறுநி லத்தும்
ஐங்குடித் திறத்துங் கூர்ந்து
மூன்றிரண் டுறுதி லத்தும்
மெய்யொளி யியலி லங்கி
மூன்றியல் நெறிகு றிக்கும்
முருகொளி முயன்று காண்பீர் 955

முருகொளி ஆற்ற லாலே
ஓம்கலை யொளிஒ ளிர்ந்தே
முருகொளிச் சீலத் தாலே
மெய்க்கலை நிலைவி ரிந்து
முருகொளி இயலி னாலே
அகவெளி ஒளிஒ ளிர்ந்து
முருகொளித் தேர்ந்த தாலே
மெய்ம்மறை விளங்கு மன்றே 956

எண்கலை யியல்நெ றிக்கும்
எண்முறை விரித்து ணர்ந்து
நுண்கலை நுணுக்கத் தாலே
நுவல்நெறி யாக்கச் செம்மை
விண்கலை யுணர்வே கூட்டும்
வியனிலை யறிந்து ணர்ந்து
எண்கலை எண்ணெண் னாற்றல்
ஒம்நெறி நாடு வீரே 957

நாடுவீர் ஒம்நெ றிச்சீர்
நண்ணுவீர் ஒம்ம றைச்சீர்
தேடுவீர் ஒம்க லைச்சீர்
திருநெறி ஆட லானின்
ஆடுறும் இயலின் நுட்பம்
நடத்தியல் மெய்க்க லைச்சீர்
நாடுறும் நுட்பம் தேர்ந்து
நண்ணுவீர் மூல காலம் 958

மூலகா லத்தை நாடி
முயன்றுறும் தேற்ற முற்று
காலமூ லத்தின் உண்மை
கணக்கிய லறிந்து ணர்ந்து
ஞாலமும் விண்ணும் நோக்கி
மெய்ப்பொரு ளுணர்ந்து கண்டே
சீலமாச் செந்நெ றிக்கும்
திருநிலை ஒமெ ழுத்தே 959

ஒமெழுத் தியலி லுற்றே
ஒருபொரு ளுண்மை கூர்ந்து
ஒமெழுத் துணர்வி னாலே
மெய்யியற் கலைய றிந்து
ஒமெழுத் தொளிரொ ளிக்கும்
ஒமெழுத் தொளியொ ளிக்கும்
ஒமெழுத் தியலை நாடி
ஒம்மறை ஆய்மின் தேர்மின் 960

எட்டியற் கலைத்தி றத்தால்
மெய்யியற் றன்மை யோர்ந்து
எட்டுறுந் திறத்தி னாலே
எண்ணியற் கலைநெ றிச்சீர்
எட்டுமா நெறியின் உண்மை
அறுபத்து நான்கின் உண்மை
எட்டுறுந் திறத்தி லுற்றே
ஓம்நெறி மறையும் ஆய்வீர் 961

முந்நெறி முச்சு டர்க்கும்
முருகொளி மூல மாக்
அந்நெறி அம்மு தற்றே
மெய்ப்பொருள் கலையே கூட்டும்
செந்நெறி யியலி னாலே
சீர்நெறிக் கலைத்தி கழ்ந்து
ஐந்நெறி எண்ணெண் கூற்றே
சிற்றவை யியலி லங்கும் 962

மாக்கலை மூலத் தோங்கும்
மெய்நெறிப் பொருளின் நுண்மை
மாநெறி ஆற்ற லாலே
ஆடலான் கலையின் நுண்மை
மாயியல் தேற்ற மொன்றே
செம்மறை யியல்கு றிக்கும்
மாத்திறன் கணிப்பி னாலே
ஓம்மறை ஆய்மின் ஓர்மின் 963

கலைகலை யாற்ற லாலே
கணிப்பியற் கலைசி றக்கும்
நிலைமறை ஒமெ ழுத்தே
நெறிமுதற் பொருளுங் கூட்டும்
தலைமறைத் தமிழொ ளிக்கே
விண்மொழி ஓசை கூட்டும்
நிலைநெறி ஆற்ற லன்றோ
மறையியல் வகுத்துக் கூட்டும் 964

ஒண்ணிலைக் கலைத்தேர் காலம்
ஒலியியல் தன்மை நோக்கி
எண்ணிலை நெறிமு தற்றே
இயலியல் உண்மை கூர்ந்து
விண்ணிலைக் கலைநெ றிச்சீர்
வெளிஒளி மூலத் தன்மை
எண்ணியல் திருநெ றிச்சீர்
ஓம்நெறி யாய்மின் நன்றே 965

காலமா நுட்பம் ஒன்றே
ஊழினை வென்று காட்டும்
மூலமாத் திட்பத் தாலே
முக்கலை முன்னி யாய்ந்து
மூலமும் ஐந்நெ றிக்கே
எண்கலைத் திட்பத் தாலே
மூலமுங் கால மூலம்
மூலகா லத்தின் ஆக்கம் 966

கண்ணியல் ஒளியி லங்கும்
கலையியல் நெறியுற் றாங்கே
விண்ணியல் வெளிபி றங்கு
மொளிநிலை ஓங்குற் றாய்ந்தே
மண்ணியல் கலையி யற்கும்
மாக்கலை நுட்பந் தேர்ந்து
கண்ணியல் ஒளியே மூலம்
மூலமாம் ஓம்ஒ ளிக்கே 967

ஓம்ஒளி ஒளிக்க லைக்கும்
உயிர்க்கலைக் கணக்கி லாய்ந்து
ஓம்ஒளி ஒலியுற் றாங்கே
அசைநிலைப் பிரண வத்தால்
ஓம்நெறி குறியுற் றாங்கே
வெளிக்கலை தன்மை யாய்ந்து
ஓம்குறி மூலத் தன்மை
ஓம்மறை யியலே யன்றோ 968

அருளியற் கலைத்தி றத்தால்
அம்முதற் பொருளு மாய்ந்து
தெருளியற் திறத்தின் மூலம்
செந்நெறிப் பிரண வத்தின்
பொருளியல் புரிந்த வண்ணம்
புலநெறித் தன்மை யாய்ந்து
மருளியல் இரிக்கும் வண்ணம்
அகவெளி நோக்குற் றாய்மின் 969

ஆயுமாக் கலைக்கற் றாங்கு
அறிவியல் நுணுக்கத் தாலே
ஓயுத லின்றிச் செய்யும்
உழைப்பியல் நுணுக்கங் கூர்ந்து
வீயுத லில்லா வாழ்வின்
நெறியியற் கண்டு ணர்ந்து
ஆயுதக் கலையி னாற்றல்
ஒளிநெறிக் கலையின் கூற்றே 970

எண்கலை விண்ணின் நுட்பம்
விண்ணின்மா நெறியு ணர்ந்து
விண்கலை அகவெ ளிச்சீர்
வெளிஒளிக் கலைத்தி றத்தால்
நுண்கலை நுணுக்க மாங்கே
நுவல்கலை ஆக்கங் கூர்ந்து
கதிர்க்கலைச் சீரி யற்கே
செறிமுறை யியலும் ஆய்வீர் 971

ஒவ்விய கலைச்சீ ராக்கம்
ஓம்நெறி நுணுக்கங் கண்டே
தெள்ளியற் கலைவ குத்துக்
சீரியல் அணுக்கம் ஆய்ந்து
விள்ளலில் லாத ஆற்றல்
வெளிஒளி வியன்க லைச்சீர்
உள்ளலும் உள்ளி யுண்ணி
ஒருநிலை கற்றல் ஆய்தல் 972

கற்றலும் கேட்டு ணர்ந்தே
கலைநிலை நுட்பங் கண்டே
நிற்றலும் ஐம்பு லச்சீர்
நிலையியல் மாற்ற மாய்ந்து
தெற்றுணர் கலைச்சீ ராக்கம்
சீரியல் அறுபான் நான்கின்
சிற்றவை மூல மென்றே
செறிமுறை இயலல் காண்பீர் 973

ஒளியொளிக் கலைச்சீர் எண்ணென்
ஒங்குறும் பிரண வத்தின்
வெளியொளி மூல நுட்பம்
விரைவியல் சுழற்சி நோக்கி
தெளிவுறும் ஐயைந் தைந்தின்
சீர்நெறி நுட்பம் காண்டல்
ஒளிக்கலைப் பிரண வத்தின்
ஒமுறும் மறையே யன்றோ 974

மறைநிலைப் பொருள்வி ளங்கி
மறைக்கலை நுட்ப மாய்ந்து
மறைக்கலை யியலா லாங்கன்
மாக்கலை ஒளிஒ ளிக்கும்
மறையியல் செம்ம றைச்சீர்
மெய்ம்மறை யாக்கங் கண்டே
மறைமுதற் ஒமென் றோர்ந்து
மதியொளி யாய்மின் ஒர்மின் 975

காலமும் இடமும் ஆய்ந்தே
கணக்கியல் மூலம் தேர்ந்து
மூலமும் திறமும் நோக்கி
நாற்புறத் தியலும் எண்ணி
சிலமா நெறித்தி றத்தால்
ஞாலமும் விண்ணுங் கண்டே
கோலமாக் குறிப்பின் மறைஒம்
கலைநிலை ஆய்தல் நன்றே 976

எண்பொருள் இடத்தி னாலே
மெய்க்கலை யுணர்வுற் றோங்கி
நுண்பொருள் நுணுக்கத் தன்மை
நுவலரும் தன்மை யாலே
விண்பொருள் விளக்கங் காண்டட..
மெய்ம்மைசீர் ஆக்கத் தாலே
கண்ணினுள் ஒளியே காண்டல்
கலைமறை ஓம்நெ றிச்சீர் 977

ஓம்நெறித் திறத்தி னாலே
ஞாலமும் விண்ணும் நோக்கி
ஓம்குறித் திறத்தி னாலே
சிற்றவை நுட்பங் கண்டே
ஓம்இயல் ஆக்கத் துண்மை
நெறிமுறை கலைச்சீர் ஆய்தல்
ஓம்எழுத் தொளிநி லைச்சீர்
மறைகலை யியலும் கூர்மை 978

உழைப்புறும் உணர்வே ஓங்கி
உள்ளத்து துள்ளும் உள்ளல்
உழைப்புறும் மூலத் தாலே
ஓங்குறும் நடுவி ழிச்சீர்
உழைப்புறும் எண்மை யாலே
கலைநிலை முற்றும் ஓர்ந்து
உழைப்புறும் திண்மை எண்மை
ஒளிமறை ஓம்நெ றிக்கே 979

அகம்புறம் இயலே ஒன்றாய்
அகப்புறத் துண்மைச் சொல்
அகவெளி ஒளியின் நோக்கிப்
புறத்துறும் விண்சீர் ஆய்ந்தே
அகத்துறை ஆற்ற லுண்மை
நிலைக்கலை யியலின் மெய்ச்சீர்
அகத்துணர் வுற்ற மூலம்
ஓம்நெறிக் கலைச்சீர் எண்மை 980

எண்கலைச் சிரி யற்கே
நிலைத்திறத் தன்மை யார்ந்து
நுண்கலை யாக்க முண்மை
நெறிமுறை யியலி னாலே
விண்கலை வெளிஒ ளிச்சீர்
வியனிலைத் திறத்தி னுண்மை
எண்கலை யியற்றி றத்தால்
எண்மையும் நுண்மை காண்பின் 981

ஒருகலை நுட்ப மன்றோ
ஓரியல் ஒளித்தி றத்தால்
பெருகலைத் திட்பங் காட்டும்
பேரியல் நுணுக்கங் கண்டே
வருங்கலை யியலி னாலே
வகைமுதற் றிறத்தி னாங்கே
அருங்கலை யியற்சி ராக்கம்
ஐந்நெறிக் கலையி னுண்மை 982

எண்ணிலைச் செந்நெ றிக்கும்
எண்முதற் பொருள்நெ றிக்கும்
விண்ணிலை வியனெ றிக்கும்
வெளிஒளி கலையிற் கூடும்
எண்முதற் றிறத்தி னாங்கண்
இயல்நிலை நெறிக்கூர் ஆக்கம்
விண்கலை மூலத் தாலே
வெளிஒளிக் கலையுங் கூடும் 983

கலைநெறி முதற்றி றத்தால்
கணக்கிய லாய்மு றைச்சீர்
நிலைநெறி எண்ணி யற்சீர்
எண்முறை ஒமெ மூத்தால்
கலையியற் றிறமே யோங்கும்
அறுபத்து நான்கின் ஆற்றல்
தலையியல் ஐம்மு னாற்றல்
தனிநிலை ஓம்க லைச்சீர் 984

எண்ணுறும் அறுபான் நான்கின்
இயல்நிலை கலைநெ றிச்சீர்
விண்ணுறும் வொளிக்க லைக்கு
ஓம்கலை மூலத் தாலே
தெண்ணுறும் ஆக்க மூலம்
தெரிநிலை இயலுங் கூடும்
ஒண்ணிலை வியன்க லைக்கே
ஓம்மறை யாக்கம் ஆய்வீர் 985

ஆயுமா றியலும் ஆய்ந்து
ஆயமா மறைச்சீ ராக்கம்
ஏறுமா றியல்பொ ருந்தும்
ஆகமம் எண்ணில் எண்ணெண்
ஓயுத லின்றி றறும்
உழைப்புறும் உள்ளொ ளிச்சீர்
வியுத லில்லா வாழ்க்கை
வெளிஒளிர் கலையே கூறும் 986

கூறுகூ றியலின் வண்மை
கூறுமா றாக்கத் துண்மை
வேறுவே றியலின் ஒண்மை
வெளிஒளிர் கலையி னாலே
தாறுமா றாகித் தன்மை
தனிநிலைக் கலையி னாலே
அறுபத் தியலும் நான்கும்
சிற்றவை மூலம் எண்ணே 987

எண்ணெண்மா கலைத்தி றத்தும்
எழுநிலைக் கலைக்கூ றுண்மை
எண்ணரு மூலத் தாலே
எண்கலை நிலையில் வண்மை
பண்டுறும் மொழிச்சீ ராக்கம்
பார்நிலை விண்ணு மாய்ந்து
எண்முறை நெறிச்சீ ரைந்தே
ஐயைந்தின் சுழற்சி யாற்றல் 988

அறுகலை நிலைத்தி றத்தும்
ஆக்கமும் முறையே கூர்ந்து
அறுகலை அறுநி லத்தும்
ஐங்குடிப் பைங்கு டிக்கும்
அறுமுறை புருவத் தோற்றும்
நடுவுறும் நடுவி ழிக்கே
உறுமுறை யியலி னாலே
உற்றுறும் கலைச்சீர் உண்மை 989

மூலமாக் கனல்தெ ரிக்கும்
முந்நெறி முச்சு டர்க்கும்
மூலமா ஒளிசி றந்து
நெறிமுதற் பொருளுங் கூறும்
காலமா இயலின் நுட்பங்
கடிநொடி நிலைக்கூர் ஆய்ந்தே
சீல்மாச் செந்நெ றிச்சீர்
தேர்க்கலை கணக்குங் காண்மின் 990

தேர்க்கலை கணக்கின் ஆய்ந்து
தேர்த்துகள் பொழுதின் நுட்பம்
ஏர்க்கலை யியல்நெ றிச்சீர்
எண்ணெறித் தன்மை யாலே
தேர்க்கலை மூலத் தாற்றல்
செந்நெறி விண்ணெ றிச்சீர்
ஏர்க்கலை யோர்க்க லைக்கும்
அறுபத்து நான்கே மூலம் 991

சிற்றவை மூல மோர்ந்து
சீரியல் நெறித்தி றத்தால்
உற்றமாக் கலையி னாக்கம்
ஒலிஒலி யியலின் கூற்றாய்
தெற்றுறும் மூலத் தன்மை
தேரியற் நெறிக்க லைச்சீர்
எற்றுறும் தன்மை உண்மை
இயலுறும் வண்மை யாய்மின் 992

ஒன்றுறும் ஒன்றி னாலே
ஒன்றுறும் இரண்டும் நோக்கி
நன்றுறும் மூன்றில் தன்மை
நயமுறக் கண்டு ணர்ந்து
அன்றுறும் சிற்ற வைச்சீர்
அறுபத்து நான்கின் ஆற்றல்
தொன்றுறும் மரபி யற்சீர்
தூயமாக் கலைச்சி றுண்மை 993

எட்டுறும் அறுபான் நான்கின்
இயல்நிலைக் கலையின் உண்மை
எட்டுறும் மாக்க லைச்சீர்
நெறிமுறைப் பண்பி னோர்ந்து
எட்டினில் எட்டெட் டெட்டே
இயல்முறை ஒங்கல் கூர்ந்து
எட்டுறும் அறுபான் நான்கின்
சிற்றவை முலங் காண்பின் 994

ஒம்கலை ஒம்நெ றிச்சீர்
ஒளியொளி ஒங்கு றுஞ்சீர்
ஒம்இயல் தன்னெ றிச்சீர்
நெறிமுதற் பொருளி னாலே
ஒம்மறை யாக மத்தின்
ஒளிர்கலை மூலத் துண்மை
ஒம்கலைத் திறத்தி னாலே
மெய்க்கலை எண்மை காண்பின் 995

எண்கலை விண்ணெ றிச்சீர்
இயற்கலை ஒம்மு தற்சீர்
எண்மொழி செந்த மிழ்க்கே
மொழிமுதற் ஒமெ மூத்தின்
விண்மொழி ஒளிஓம் யென்றே
ஒளிமுதற் ஒமெ மூத்தாய்
கண்கலை ஒளியுற் றோங்கும்
கலைநிலை ஆய்மின் ஒர்மின் 996

மூலமா மறையே யாகி
முழுமுத லொளிகூர்த் தோங்கும்
மூலமாச் செந்நெ றிக்கும்
இயலியல் கலைத்தி றத்தும்
மூலமும் அறுநி லத்தும்
ஐங்குடி முச்சு டர்க்கும்
காலமும் பொருள்க டந்த
காலமா யியலும் ஆய்மின் 997

காலமாக் கணக்கின் உண்மை
கணக்கியல் நெறிச்சீர் உண்மை
காலமும் நொடிநொ டிக்கே
கருதரும் கலையு மாய்ந்து
சீலமும் ஓமி யற்று
செந்நெறி மறையொ ளிக்கும்
மூலமா இயலி னாக்கம்
முழுமுதற் கலையு மாய்மின் 998

பேரொளி யாற்ற லாலே
பெருவளிப் பெருநி லைச்சீர்
நேரொளி நிலைக்க லைக்கும்
நெறிமுதற் பொருள்தி றத்தும்
ஏரொளி விண்க லைக்கும்
எண்ணியற் கலையே யாகி
சீரொளிச் சிற்ற வைச்சீர்
ஓம்கலை மூலங் காண்பின் 999

மூலமாப் பொருளி னாலே
மும்மையும் முக்க லைக்கும்
மூலமா யியலி னாலே
முப்பொருள் செம்பொ ருட்கும்
காலமாக் கலைசி றந்து
களிப்பொருள் செழும்பொ ருட்கும்
ஞாலமும் விண்ணும் ஆய்ந்து
நற்கலைக் காலங் காண்பின் 1000

பிற்சேர்க்கை

மூலத்தூண்

नभूमिं नजलंचैव नतेजो नच वायवः ।
नच ब्रह्मा नविष्णुश्च नचरुद्रश्च तारकाः ।
सर्व शून्य निरालम्बो स्वयंभूः विश्वकर्मणः ।।

- மூலஸ்தம்பம் என்ற நூலில்

விண்வெளித் தோன்றா முன்னர் மண்கரு வமையா முன்னர்
விண்ணிலை அமையா முன்னர் பண்ணியல் தோன்றா முன்னர்
எண்ணியல் இலங்கா முன்னர் ஏழிசை தோன்றா முன்னர்
திண்ணிய ஓசை யாலே ஓம்ஒலி ஒலித்த தன்றே

மூலத்தூண் – மூலஸ்தம்பம்

ஓம்ஒலி விண்ணில் கேட்கும் ஓம்ஒளி உருவ மாகி
ஓம்ஒலி ஒளிசி றக்க ஒளியினுள் ஒளியே யாகி
ஓமெனும் உருவத்தோற் றத்தால் ஆடலான் உருவ மாகி
ஓமெனும் அம்ப லத்தில் ஒளிர்நடக் காட்சி என்னே

மூலத்தூண் – மூலஸ்தம்பம்

திர்ய கூர்த்வமா: சாயீரச்மயஸ் தஸ்ய ஸந்ததா
ஸந்தா பயதிஸ்வம் தேஹமாபாத தலமஸ்தக:
தஸ்ய மத்யே வஹ்னிசிகா அணீயோர்த்வா வ்யவஸ்திக:
அந்தப் பிராணனின் கிரணங்கள் குறுக்கிலும் மேலும் கீழும் பரவி எங்கும் வியாபித்திருக்கின்றன. உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை சொந்த உடலை இது சூடுள்ளதாகச் செய்கிறது. இதன் நடுவில் மெல்லியதான அக்கினிச் சுடர் மேல்நோக்கி அமைந்திருக்கிறது.

– நாராயண ஸூக்தம்

தஸ்யா: சிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்தித:
ஸப்ரஹ் மஸசிவஸஹரி: ஸேந்த்ர: ஸோக்ஷர: பரம: ஸ்வராட்
அந்தச் சுடரின் நடுவில் இறைவன் வீற்றிருக்கிறார். அவரே பிரம்மா, அவரே சிவன், அவரே விஷ்ணு, அவரே இந்திரன். அவர் அழிவற்றவர், சுய ஒளியுடன் பிரகாசிப்பவர், தனக்குமேல் யாரும் இல்லாதவர்.

– நாராயண ஸூக்தம்

ஓம் ஒளி / ஓம் ஒலி


விண்வெளித் தோன்றா முன்னர் மண்கரு வமையா முன்னர்
விண்ணிலை அமையா முன்னர் பண்ணியல் தோன்றா முன்னர்
எண்ணியல் இலங்கா முன்னர் ஏழிசைத் தோன்றா முன்னர்
திண்ணிய ஒசை யாலே ஓம் ஒளி ஒலித்த தன்றே

ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ளொளி ஞானம் தோன்றும்,
ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளியொளிர் உருவே தோன்றும்,
ஒளியொளிர் உருவந்தானே ஆடலன் ஆடலன்றோ

ஒளிமுதற் கண்ட விண்ணொலி ஒசை
வெளிமொழி ஒமென விளம்பற் பாற்றே

- மயவிஞ்ஞானம்

TEMPLE AS A HUMAN FORM



Vertical arrangement of spatial terms in the Temple structure

9 units of Time-Space at Gross level

“उपपीठं चरणाकारं अधिष्टानं जानुमण्डलं, पादवर्गं कराकारं प्रस्तरं बाहुमूलकम्, तत्कण्ठं गलमित्युक्तं शिखरं मुखमेवच, उष्णीषान्तं शिखाचैव महानासीच नासिका, नेत्राणां क्षुद्रनास्यौच विश्वरूपमिति स्मृतम् ॥”

Upapētam caranākāram adhistānam jānumandalam, pādavargam karākāram prastaram bāhu mōlakam, tatkantam galamityuktam shikharam mukhamevaca, ushnīshāntam shikhācaiva mahānāsīca nāsikā, netrānām kshudranāsyau ca vishwarūpamiti smrutam ॥


விண்வெளித் தோன்றா முன்னர் மண்கரு வமையா முன்னர்
விண்ணிலை அமையா முன்னர் புண்ணியல் தோன்றா முன்னர்
எண்ணியல் இலங்கா முன்னர் ஏழிசை தோன்றா முன்னர்
திண்ணிய ஓசை யாலே ஓம்ஒலி ஒலித்த தன்றே

– மூலஸ்தம்பம்


ஓம்ஒலி விண்ணில் கேட்கும் ஓம்ஒளி உருவ மாகி
ஓம்ஒலி ஒளிசி றக்க ஒளியினுள் ஒளியே யாகி
ஓமெனும் உருவத்தோற் றத்தால் ஆடலான் உருவ மாகி
ஓமெனும் அம்ப லத்தில் ஒளிர்நடக் காட்சி என்னே

– மூலஸ்தம்பம்


HEAD QUARTERS OF VASTU VEDIC RESEARCH FOUNDTION



FRONT ELEVATION



FIRST FLOOR PLAN



GROUND FLOOR PLAN